T. S. Vijayaragavan.



நீ யார்?

1

நகரின் மையமான பகுதியில், உயரமான கட்டடத்தில் மூன்றாவது மாடியில் - நீலாவுக்குப் போரடித்தது. 'மகேஷ் அண்ட் நடேஷ் பிரைவேட் டிடெக்டிவ்ஸ்' என்கிற அந்தக் கம்பெனி கசந்தது.

கையிலிருந்த நாவலை மடித்து, டிராயருக்குள் போட்டாள். விரலை வாயருகில் சொடுக்கி கொட்டாவி விட்டாள். கைகளை அழகாக மேலே உயர்த்தி யாரோ ஒரு ஓவியனுக்கு செக்ஸி போஸ் கொடுப்பது போல் சோம்பல் நெரித்தாள். சாணுக்கும் குறைவான ஜாக்கெட்டில் சிறைப்பட்டிருந்த சின்னப் பந்துகள் சிரமப்பட்டன.

ஹாலைச் சுற்றிக் கண்களை ஓட்டினாள். வெறித்துக் கிடந்தது. ஜன்னல்களில் பச்சை நிறக் கர்டன்கள் செல்லமாக அசைந்தன. மகேஷ் - நடேஷ் இரண்டு ஆசாமிகளுக்கும் பச்சையில் அசாத்திய மோகம். ஸோபா, டேபிள் கிளாத், டெலிபோன், பென்சில், பேப்பர் வெய்ட் எல்லாமே பச்சை மயம்.

ஒரு ஓரமாக பீரோக்கள் ஏராளமான 'பைல்'களை ஏந்தி நின்றன. 'ஸ்காட்லாந்து யார்ட்' கொடுத்த நற்சாட்சிப் பத்திரம் ஒன்று மேலண்டைச்சுவரில் தங்க நிறபிரேமில் மின்னியது.

வாசலுக்கு நேர் எதிர் சுவரில் ஒரு ராட்சத நண்டு – கைகளைப் பரப்பிக் கொண்டு, பொன் வண்ணத்தில் மின்னிற்று. மகேஷ்-நடேஷ் கம்பெனியின் சின்னம்!

அதனடியில் ஒரு ஸோபா-கம்-பெட்டும் இரண்டு சிறு நாற்காலிகளும் கிடந்தன. ஸோபாவில் டிப்-டாப்பாக உடுத்திய ஒரு பேர்வழி, புதுக் கருக்கு அழியாமல். ஆனந்தமாகச் சயனித்து, ஒரு புத்தகத்தை வேகமாகப் படித்துக் கொண்டிருந்தான்.

அந்தச் சோபாவின் ஒரு கைமீது கிடந்த அவனுடைய இரண்டு பூட்ஸ் கால்களும் குறுக்காக ஆரோகணித்து, தலையாட்டிப் பொம்மை போல ஆடிக் கொண்டிருந்தன.

நீலா மாதிரியே சிவப்பாக இருந்தான். துப்புக்களைக் கொத்தத் துடிக்கும் நீண்ட மூக்கு. வெரி ஸ்மார்ட் ஃபெல்லோவாக இருந்தான்.

நீலா அவனை விசேஷமாகப் பார்த்துப் பெருமூச்செறிந்தாள். டைப்ரைட்டர் மீது சாய்ந்து கொண்டு ஏதோ ஒரு சினிமாவின் சோகக் கட்டத்துக் கதாநாயகி மாதிரி பெருமூச்செறிந்தாள்.

இந்த ஆபீஸில் சேர்ந்த புதிதில் தான் அவனை உயிரை விட்டுக் கொண்டு காதலித்து, நடந்தது எல்லாவற்றையும்நினைத்துக்கொண்டாள். அவனுக்காகவே அம்மாவை ஸ்பெஷல் டிபன் கட்டிக் கொடுக்கச் சொல்லிக் கொண்டுவந்து, ஒரே மேஜையில் அவனுடன் சேர்ந்துகொண்ட இனிய நாட்கள் அவை.

அந்த நாட்களில்–

அவளுடைய கண்கள், உதடுகள், மார்பகங்கள் எல்லாமே அவன்மீது ஒவ்வொரு நிமிஷமும் காதலை வாரி வீசின. வாய் ஒன்றுதான் அந்தச் சொல்லைத் துணிவின்றி அடங்கிக் கிடந்தது.

ஒரு நாள் உணவுவேளையில் அவன் படு குஷியாக இருந்தான். தயிர் வடை கொண்டு வந்திருந்தாள். ''நீலா! டெல் மீ. நீ யாரைக் கல்யாணம் செய்து கொள்ளப் போறே'' – கேட்டான்.

புல்லரித்தாள். 'நீங்க யாரைப் பண்ணிக்கச் சொல்றீங்களோ, அவங்களைப் பண்ணிக்கறேன்' என்றாள்.

'என்னைப் பண்ணிக்கொள்' என்பானா என்று எதிர்பார்த்தாள். ஏமாற்றம்; பெரிய கோழி முட்டை ஏமாற்றம். ''நீ நம்ப நடேஷைப் பண்ணிக் கொண்டு விடேன், நீலா –' என்றான். அதிர்ந்து, இடிந்தாள். கிரேட்டஸ்ட் ஷாக் ஆன் தி எர்த்! சந்தேகமே இல்லை. முழுசாக இரண்டு நிமிஷமாயிற்று சுதாரிக்க.

''நீங்க யாரைப் பண்ணிக்கப் போறீங்க– பாஸ்?'' என்றாள்.

''நானா?'' அலட்சியமாகக் கேட்டான். ''எனக்குத்தான் ஒரு ஓல்ட் டெவில் காத்துக் கொண்டிருக்கிறதே–'' சிரித்தான். ''என்னோடை காலேஜ்ல படிச்சா – மஞ்சுன்னு பேரு –மாலையை வைச்சுக்கிட்டு இரண்டு வருஷமாக 'தபஸ்' பண்ணிக்கிட்டிருக்கா – கைகூட வலிச்சிருக்கும்!'' மறுபடியும் சிரித்தான்.

நீலா அன்றிலிருந்து இண்டர்வெல்லுக்குப் பிறகு வருகிற கதாநாயகி ஆனாள். திடீர்

திடீரென்று பெருமூச்சு விடுவாள். 'குபுக்' கென்று கண்களில் அழுகையை வரவழைத்துக்கொண்டு அதில் ஆனந்தம் காண்பாள்.

அதன் பின் அவர்கள் அந்த விஷயம் பற்றிப் பேசவே இல்லை.

''என்ன டிபன்?''

''சர்க்கரைப் பொங்கல் – கீரை வடை.''

''ஹைய்ய – பாதியைத் தள்ளு இந்தப் பக்கம்.''

''நேத்து ரீகல்லே சோமனதுடி பார்த்தேன். பஸ்ட் கிளாஸ் பிக்சர். நீ இன்னிக்கே பாரு....

''உடம்பு என்னவோ மாதிரி இருக்கியே. லீவு வேணா எடுத்துக்கிட்டு அம்மாவையும் அழைச்சுக்கிட்டு ஏதாவது ஹில்ஸ்டேஷன் போய் இருந்துட்டு வாயேன் – ஆபீஸ் செலவிலே.''

''வேண்டாம், பாஸ்–''

–இதோடு சரி. ஒரு நாள் கூட உடம்பைத் தாண்டி அவள் மனசை அறிய அவன் முயன்றது கிடையாது.

நீலா எழுந்து நின்றாள். ஸோபாவில் பூட்ஸ் கால்கள் ஜோராகத் தலையாட்டிக் கொண்டிருந்தன. எவ்வளவு அழகான, உரோமம் அடர்ந்த, ஹெர்குலிஸ் கைகள், விரல்கள், அந்தக் கைகளைப் பிடித்து, நெஞ்சோடு, மார்பின் மீது வைத்து அழுத்திக்கொள்ள வேண்டும் என்று, அந்த ஆபீசுக்கு வந்த நாள் முதலாகவே ஆசைப்பட்டாள். ஆனால் அது நிறைவேறவே இல்லை. வெறும் கனவாகவே போய்விட்டது. எத்தனையோ நிறைவேறாத கனவுகள். அதில் இதுவும் ஒன்று.

நீலா நிமிஷ நேரம் ஒரு குளோஸப்புக்காக நின்று சினிமாப் பெருமூச்சு விட்டாள்.

ட்ரிங்.... ட்ரிங்.... ட்ரிங்....

ஹாலின் மேல் கோடியில் பாஸின் கண்ணாடி 'காபின்' உள்ளிருந்து டெலிபோன் கூப்பிட்டது. கதவு திறந்திருந்தது.

கனவுகளை உதறிவிட்டு நிஜத்துக்கு வந்து நகர்ந்தாள்.

''நீலா–'' மகேஷின் குரல் தடுத்து நிறுத்தியது.

''எஸ் பாஸ்'' – நின்று திரும்பிப் பார்த்தாள்.

அவன் எழுந்து உட்கார்ந்து கொண்டு ''அந்தத் தடியனாகத்தான் இருப்பான் – தடி ஓல்ட் டெவில்–இந்தக் கட்டிடத்து ராஸ்கல்''

''கவலைப்படாதீங்க. அவனா இருக்காது 'இன்னும் ஒரு வாரத்துக்கு வாடகை பா கின்னு கேட்டுக்கிட்டு வந்து நிக்காதீங்க பெரிய பாஸ் ஊர்லேர்ந்து வந்தப்புற தான் கிடைக்கும்'னு நேத்தே சொல்லிட்டேன்.''

''நேத்தும் டெலிபோன் பண்ணினா?''

''இல்லே. நேர்லே வந்திருந்தாரு.''

''எப்ப?''

''நீங்க வெளியே போயிருந்தப்ப.''

''படவா, ராஸ்கல் நான்தான் ஆபீஸ் எல்லாம் வந்து நிக்க கூடாதுன்னு சொல் யிருக்கேனே – என் பிரமாத பாக்கின் வந்து நின்னாலும். மன்த்ஸ் – ஒன்லி



மன்த்ஸ் — அவ்வளவுதானே? ஒரு பக்கா கேஸ் வந்துட்டா எண்ணூற்றிச் சொச்சத்தைத் தலையைச் சுற்றி வீசி எறிஞ்சுட மாட்டோமா—''

இதற்குப் பதில் சொல்ல ஒன்றுமில்லாததால், கைகளை முன்னுல் கோத்துக்கொண்டு ஒரு மரியாதைப் புன்னகையைச் சிந்திவிட்டு லேசாகப் பெருமூச்சு விட்டாள் நீலா. அடிக்கடி பெருமூச்சு விடவேண்டும் — கதாநாயகிகள் எல்லாம் அப்படித்தான் விடுவாங்க.

''ஆல் ரைட். கோ அண்ட் ஸீ.''

நீலா கதாநாயகி மாதிரியே மெதுவாகப் போய், பூவை எடுக்கிற மாதிரி ரிஸீவரை எடுத்து 'ஹலோ' சொன்னுள். சினிமா கதாநாயகி மாதிரியே மார்பை விம்ம விட்டுக்கொண்டு மேலே விட்டத்தைப் பார்த்தாள்.

ஆனுல் அடுத்த கணம் அவள் நடிப்புக் கலேந்தது. ''ஒன் மினிட் ப்ளீஸ்—'' என்று அவசரமாகச் சொல்லிவிட்டு, ரிஸீவரின் வாயைக் கையால் மூடிக் கொண்டு எதிரே பார்த்து, ''பாஸ்! யுவர் ஸ்வீட் ஹார்ட் ஸ்பீக்கிங் — ப்ரம் நர்ஸிங் ஹோம்'' என்ருள்.

''ஐ ஸீ—'' என்று எழுந்தோடி வந்தான் மகேஷ். ரிஸீவரை வாங்கியபோது நீலாவின் உடம்பு பக்கத்தில் மணமாய் மணத்தது. எப்போது அவள் அருகில் வந்தாலும் 'ஹம்' என்று அந்த மணத்தை அவன் இழுப்பது வழக்கம். இப்போதும் 'ஹம்' என்று ஒரு இழுப்பு இழுத்துக் கொண்டே. (பாவி என்னமாய் மணக்கிருள்) ''ஹலோ டார்லிங்!'' என்ருன். நாற்காலியில் சாய்ந்து கால்களைத் தூக்கி மேஜை மீது போட்டுக் கொண்டான்.

''ஹனி! எவ்வளவு நேரமாய் நான் கூப்பிட்டுக் கொண்டிருக்கிறேன்'' என்று ரிஸீவரில் ஒரு தேன் குரல் சிணுங்கியது.

''ரொம்ப நேரமாகவா? ட்ரூலி....?'' அவ்வளவு தூரத்திலிருந்து பேசுகிருயே... உன் குரல் எத்தனை கட்டடங்கள், ஹோட்டல்கள், கிராஸிங்குகளைத் தாண்டி வரவேண்டும்... டயமாகாதா?''

ரிஸீவரின் எதிர்ப்புறம் ஒரு 'களுக்'கும் அறைக்குள் இன்னொரு 'களுக்'கும் கேட்டன. இரண்டாவது களுக்கின் அம்மா, நீலா. எதிரே கட்டாவ் வாயிலில் நின்ருள். நிமிர்ந்து பார்த்தான். 'நீ போகலாம்' என்று அதற்கு அர்த்தம்.

அவள் அழகாகத் திரும்பி, நடந்து, கதவை மெதுவாகச் சாத்திக் கொண்டு போனுள். அந்த அழகை இம்மி விடாமல் ரசித்துக் கொண்டே போனில் சொன்னுன்: ''சொல்லு மஞ்சு! எப்படி இருக்கிருய்? ஆல்ரைட்?... பயல் என்ன பண்ணிக் கொண்டிருக்கிருன்— ரொம்பப் படுத்துகிருனு, உன்னை?''

'களுக்'கென்று மீண்டும் சிரித்தாள் மஞ்சு. ''அப்பா படுத்துவதை விடவா?'' என்று கேட்டாள்.

''நான் உன்னை ரொம்பப்படுத்துகிறேனு?''

''இல்லை. பூவாகத்தான் தாங்குகிறீர்கள்! தோப்புக்கரணம் போடுகிறீர்கள்.''

''அறுவை அடிக்காதே!''

''நீங்கள் படுத்தாமலா இந்தப் பயல் வந்தான்?''

''ஓ, அதைச்சொல்றியா?'' மகேஷ் சிரித்தான்.

''அவனை என்னிடம் தள்ளுவதற்கு என்ன பாடு படுத்தினீர்கள்! குரங்கு கை பூமாலையாக நான் தவித்தது எனக்கல்லவா தெரியும்?''

''என்னைக் குரங்கு என்கிருயா — யூ ராஸ்கல்!''

''நான் சொல்வேனு... கிளி மாதிரி ஒரு பிள்ளையைக் கொடுத்திருக்கிறீர்களே-குரங்கு கிளியைத் தருமா எங்கேயாவது?''

''நீயே ஒரு கிளிதானே! கிளிக்குக் கிளி பிறந்திருக்கிறது. தட்ஸ் ஆல்.'' சிரித்தான் மகேஷ். அவன் கண்கள் 'இங்கேயும் ஒரு கிளி இருந்ததே, அது எங்கே?' என்று தேடின. அந்தக் கிளி—

அப்போது விசிட்டர்கள் ஹாலில், முன்பு அவன் படுத்திருந்த அதே சோபாவில் எதிரில் சோக பாவத்துடன் நின்றிருந்தது. மங்கிய ஒளியிலும் அவள் பெருமூச்சு விடும்போது சின்ன மார்பகங்கள் ஏறி இறங்குவது தெரிந்தது.

''க்கும்—'' போனில் மஞ்சு நிஷ்டூரமாய் முனகினுள்.

''ஆல் ரைட். கம் டு தி பாயிண்ட்.'' போனுக்குத் திரும்பினுன்.

''ஹனி—'' மஞ்சு குழைந்தாள். ''நான் ஒரு யோசனை சொல்லட்டுமா—கேட்கிறீங்களா?''

''சொல்லு டார்லிங்!'' — அவன் கண்கள் நீலா மீது ஊர்ந்தது. ஓ, எவ்வளவு அழகாக இருக்கிருள் இவள்!

''ஒரு மாசம் ஆபீசுக்கு லீவு போடுங்களேன். பையனை எடுத்துக் கொண்டு, எங்கே யாவது கொலை, கொள்ளை, கிட்நாப்பிங் எந்தச்சனியனுமே இல்லாத இடமாகப் பார்த்துப் போய் 'ஹாய்யாக' இருந்துட்டு வருவோமே — என்ன சொல்றீங்க?''

''என்ன இது மஞ்சு — திடீர்னு.''

''ஆமாங்க. இன்னி விடிகாலையிலே ஒரு சொப்பனம் வந்ததுங்க. — ரொம்பப் பயமுறுத்திடுச்சுங்க.''

''என்ன சொப்பனம்?''

''கறுப்பா, குள்ளமா, பெரிய மீசையுடன் ஒரு ஆள் லுங்கி கட்டிக் கொண்டு உங்களைத் தேடி வர்ருன். ஒரு கத்தை நோட்டுக்களை எடுத்துப் போட்டு உங்களை அவனோட வரச் சொல்ருன்.''



''இப்ப ஒரு ஐநூறு கிடைச்சாப் போறும், டார்லிங்... எவ்வளவு மோசக்காரப் பயலாக இருந்தாலும் அவனுடன் நான் உலகத்தின் எந்த மூலைக்கும் போகத் தயார். ..அவ்வளவு நெருக்கடி மேடம்'' — சிரித்தான்.

''தமாஷ் இல்லே ஹனி... அப்புறம்தான் வரது பயங்கரம், ஹனி....''

''சொல்லு.''

''அவனோட நீங்க போறீங்க... கார்லே... வழியிலே—''

''கார் பஞ்சராகி விட்டதா? மெக்கானிக்கைக் கூப்பிடணுமா? இல்லே, என்னை கீழே இறங்கித் தள்ளச் சொல்றனு?''

''விளையாடாதீங்க. நான் ரொம்ப சீரியஸான சமாசாரம் சொல்லிக் கொண்டிருக்கிறேன். வழியில் ஓரிடத்தில் ஒரே இருட்டாக இருக்கிறது. திடீரென்று நாலைந்து முரட்டு ஆளுங்க வந்து உங்களைக் கட்டித் தூக்கிக் கொண்டு போய் ஒரு பெரிய மரத்தோடு சேர்த்து வைச்சுக் கட்டறாங்க. அந்த மீசைக்காரன் சுள்ளிகளைக் கொண்டு வந்து உங்களைச் சுத்திப் போட்டு ஒரு தீப்பந்தத்தாலே....ஓ, மை காட்... ஹௌ கான் ஐ டெல் இட்...'' குரலில் நடுங்கினாள்.

''வெரி இன்டரஸ்டிங் ஸ்டோரி, மஞ்சு... எந்த நர்ஸ் படித்துக் காட்டினாள் இதை—''

''ஸ்டோரியா?'' — அதிர்ந்தாள். ''அந்த ஆளு கையிலே ஒரு பெரிய தங்க மோதிரம் கூடப் போட்டுக்கிட்டிருந்தாங்க. அதிலே 'கே'ங்கற எழுத்துக்கூட இருந்துச்சே...''

''இஸட் வரைக்கும் வேண்டுமானாலும் போட்டுக் கொள்ளட்டும்.... நீ அதைக் கவனித்திருக்கக் கூடாது. யூ ஆர் எ கிரேட் டிடெடிக்டிவ்ஸ் ஒய்ப்... நீ அவன் கார் நம்பரைக் கவனித்திருக்க வேண்டும். அது தான் இந்தக் கேஸில் உபயோகப்படக் கூடிய ஒரு நுட்பம்... யூ மிஸ்ட் இட்—''

''ஐய்யய்ய...'' போனிலேயே அழகு காட்டினாள் மஞ்சு. ''நான் 'மிஸ்' பண்ணினது இருக்கட்டும். நீங்கள் என்அம்மா ஊரிலிருந்து வருகிற டிரெயினை மிஸ் பண்ணி விடாதீர்கள்! பாவம், பேரனைப் பார்க்க ஆசையாக வருகிறாள். ஸ்டேஷனில் திண்டாட விட்டு விடாதீர்கள். உங்களுக்குப் பிடித்த குஞ்சாலாடு பண்ணிக் கொண்டு வரும்படி எழுதி இருக்கிறேனுக்கும்... எத்தனை மணிக்கு டிரெயின் என்பதாவது ஞாபகமிருக்கிறதா?''

''எப்போது என்று சொன்னாய்? இரண்டு முப்பதுக்கா... இரண்டு நாற்பதுக்கா?''

''இரண்டு நாற்பதுக்குப் போனால் பிளாட்பாரத்தைச் சுத்தமாக அலம்பி விட்டிருப்பாங்க. எனக்குத் தெரியும். எங்க அம்மா வருகிற வண்டி என்றால் உங்களுக்கு ஞாபகமே இருக்காது... இரண்டு பத்துக்கு... மறக்காமல் போங்கள்.''

''மறக்காமல் போகிறேன்.''

''அப்புறம், ஒரு மஸ்கிட்டோ அம்பர்லா சொன்னேன்... சின்னதாக... ரோஸ் கலரில்!''

''லாலா கடை பகோடா பொட்டலம் கூடத்தான் சொன்னாய்... முந்திரி நிறையப் போட்டது....''

''அது நன்றாக ஞாபகம் இருக்கும். தின்கிற சமாசாரம் ஆச்சே!'' சிரித்தாள்.

''நீ ரொம்ப அழகாய்ச் சிரிக்கிறே மஞ்சு.''

''போதும் தாஜா... சித்தே இருங்கள். குழந்தை முழித்துக் கொண்டு விட்டான். போர்த்திவிட்டு வருகிறேன்.''

''மெதுவா வா. கால் மீ எகெய்ன். நான் வெய்ட் பண்றேன்.''

ரிஸீவரை வைத்துவிட்டுச் சௌகரியமாக நாற்காலியில் சாய்ந்து கொண்டான். ஒரு கண்ட்ரோல் அறையிலிருந்து தெரிகிற தொழிற் கூடம் மாதிரி ஹால் தெரிந்தது. ஒரு பார் ஹோட்டலில் லவுஞ்ச் மாதிரி அரை இருட்டில் கிடந்தது. சன்னமான ஒளியின் நடுவே ஒரு கனவுக் கன்னி மாதிரி நின்றாள் நீலா.

''ஓ! வாட், எ லவ்லி ஃபிகர்!'' திடீரென்று நினைத்தான். அவளுக்கு ஒரு இன்கிரீமெண்ட் கொடுக்க வேண்டும். ரொம்ப நாளாக அவளைக் கவனிக்கவே இல்லை.

தன் காதலன் இன்னமும் அந்த சோபாவிலேயே படுத்துக்கொண்டிருப்பதாகநினைத்து அங்கேயே நின்றிருந்தாள் நீலா. அவன் என்னமோ 'ஜோக்' அடிக்கிறான். அவள் அதை ரசித்து 'களுக்'கென்று சிரிக்கிறபோது, சட்டென்று யாரோ கூப்பிட்டது மாதிரி இருந்தது. திரும்பினாள்.

''டொக், டொக்'' என்று வெளிப்புறக் கதவில் விரல்கள் சப்தித்தன.

வேகமாக நகர்ந்து ''எஸ்'' என்று கதவைத் திறந்தாள்.

அங்கே—

கறுப்பாய், குள்ளமாய், மீசை வைத்துக் கொண்டு, இடுப்பில் லுங்கி கட்டிக்கொண்டு ஒரு ஆள் நின்று கொண்டிருந்தார்.

(தொடரும்

''நீ அடிக்கடி சினிமா போவதை உன் மனைவி கண்டிப்பதில்லையா?''


''கண்டிக்கிறாளே! இப்படி நீங்களும் சினிமாவுக்குப் போய் ஏன் பணத்தைப் பாழடிக்கிறீர்கள்? நான் ஒருத்தி போவது போதாதா? என்று கேட்கிறாளே!'' **—ராமுசாமி**



''ஆமா, கமல், உங்களுக்கு ஞாபகம் இருக்கா? 'அழுகையை முழுங்கு, அழுகையை முழுங்கு'ன்னு உங்கம்மா சொல்வாங்களே''என்று மாமி கூறியவுடன் கமல் கண்கள் கலங்கி விட்டன. அவர் தமது இறந்த தாயாரை நினைத்திருக்க வேண்டும். சில விநாடிகளுக்குள்ளாகவே அழுகையை முழுங்கிச் சமாளித்துக் கொண்டார்.

''ஒரு வேடிக்கை தெரியுமா? இப்பக்கூட நான் என்னை அறியாமல் அதே வார்த்தைகளைப் பிறரிடம் சமயம் நேரும்போது சொல்கிறேன்''என்றார் கமல். பிறகு வீட்டைச் சுற்றிப் பார்த்தபடியே ''இங்குதான் என் தாயார் என்னைக் கீழே உட்கார வைத்துக் கையில் சாதம் போட்டுச் சாப்பிடச் சொல்வார். நான் அடம் பிடிப்பேன். தாயார் விடமாட்டார். நான்அழுதாலும் சமாதானப் படுத்தி ஆயிரம் சொல்லி என்னைச் சாப்பிட வைத்துவிடுவார்'' என்றார்.

குளியல் அறைக்குள் சென்று பார்த்தார் கமல். ''இங்கே என் அம்மா எத்தனை நாள் எனக்கு எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டிவிட்டிருக்கிறாள்!''





- ''எத்தனை நாள் எனக்கு இங்கே என் அம்மா எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டி யிருக்கிறார்!''
- குரூப் ஃபோட்டோ: ஏழு வயதுச் சிறுமியைக் கமல் வற்புறுத்தி அழைத்து வந்து தம் அருகில் நிற்க வைத்துக்கொண்டார்...

அவர்கள் வீட்டு ஏழு வயதுப் பெண் குழந்தை கமலின் ரசிகையாம். ஆனால் கமலின் அருகே வரவே பயப்பட்டாள். கமலே சென்று நல்ல வார்த்தை சொல்லி அழைத்து வந்தார். சற்று பயம் தெளிந்தது. ஆனால் பேசவே யில்லை. கமலுடன் வாசற் பக்கம் வந்தேன். ''சலன், அன்று இங்குதான் நாங்கள் மூவரும் ஓடிப் பிடித்து விளையாடுவோம். ஒரு கார் இருக்கும். அந்தக் காரின் டாப் மீது நான் ஏறிக்கொண்டுவிடுவேன். இருவரும் என்னைப் பிடிக்கப் படாத பாடு படுவார்கள்! எவ்வளவு ஆனந்தமான நாட்கள்!'' அவரை அறியாமல் பெருமூச்சு.

''எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து படம் எடுத்துக்கொள்வோம்'' என்று வீட்டிலுள்ளவர்கள் விரும்பிக் கேட்க, 'சரி' என்றார் கமல். ஆனால் அந்த ஏழு வயதுப் பெண் குரூப்பில் நிற்க மறுத்து விட்டாள். கமல் அவளை வற்புறுத்தி அழைத்து வந்து தம் அருகில் நிற்க வைத்துக் கொண்டார்.

காரில் திரும்பி வரும்போது, ''அந்த ஏழு வயதுப் பெண்ணின் இருதயத் துடிப்பு எப்படி இருந்தது தெரியுமா!'' என்றார். ''எதிர்பாராத விதமாய் என்னைச் சந்தித்ததால் அப்படி ஒரு பரபரப்பு; அதன் விளைவே அந்த இதயத் துடிப்பு! எல்லோருக்கும் இருக்கக் கூடியதுதானே! சிறுமிக்கு இருக்காதா என்ன?''

பேட்டி: ''சலன்''
படங்கள்: ஏ.வி. பாஸ்கர்



2

"குட்மார்னிங், மேடம்!" என்றான் வந்தவன்.

"வெரி குட்மார்னிங்!"

"ஐயாம் கமல்நாத்... பிஸினஸ்மேன்... விஷ் டு மீட் மிஸ்டர் மகேஷ்"

"கம் இன்!" – பின்னுக்கு நகர்ந்தாள்.

அவரை உள்ளே அனுமதித்து 'க்ளக்' என்று கதவு மூடிக் கொண்டது. "திஸ் வே... பாலோ மீ..." வழி காட்டிக் கொண்டு முன்னே நடந்தாள்.

மகேஷ் இப்போது ஒரு சிகரெட்டைப் பற்றவைத்து, தீக்குச்சியை அணைத்துக்கூடைக்குள் போட்டுவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தான்.

முகத்தைப் பார்த்துத் திடுக்கிட்டான். அவசரமாக மேஜை மீது போட்டிருந்த கால்களை உருவி, எழுந்து நின்று புருவங்களை நெரித்தான்.

ஓ, மஞ்சு சொன்ன மாதிரி ஆள், கறுப்பாய், குள்ளமாய், மீசை வைத்துக்கொண்டு, லுங்கி கட்டிக் கொண்டு... ஓ...!

தேனாய் அறிமுகப்படுத்தினாள் நீலா. "மீட் மிஸ்டர் கமல்நாத்... பிஸினஸ்மேன்..."

"ஹலோ!" – கையை நீட்டினான் மகேஷ்

கமல்நாத் பதிலுக்குக் கை கொடுக்கவில்லை. மேஜைக்கு மறுபுறம் நாற்காலியில் சாவகாசமாக உட்கார்ந்து கொண்டு இரு கைகளையும் கூப்பி, "வணக்கங்க" என்றார்.

மீண்டும் திடுக்கிட்டான். கூப்பிய கைகள் ஒன்றில், மின்னிய மோதிரத்தில் மஞ்சு சொன்ன மாதிரியே 'கே' என்ற நீல எழுத்து.

"வணக்கம்."

கமல் தொண்டையைக் கனைத்துக் கொண்டார். டெலிபோன் சமயம் பார்த்துக் கூப்பிட்டது. "ஜஸ்ட் எ மினிட்" – மன்னிப்புக் கேட்டுக்கொண்டு ரிஸீவரை எடுத்தான்.

"மகேஷ் அண்ட் நடேஷ் கம்பெனி?" என்றது ஒரு புதுக் குரல். பெண் குரல்.

"எஸ்–"



''மிஸ்டர் மகேஷ் இருக்காரா? ரொம்ப அவசரம்.''

''மகேஷ்தான் பேசறேன்.''

''தாங்க்ஸ் டு காட்... மிஸ்டர் மகேஷ்... ஏன் எதுக்குன்னு கேக்காதீங்க, உங்களை எச்சரிக்க விரும்பறேன்.''

''என்ன சொல்றீங்க?''

''இப்போ உங்க எதிரிலே ஒரு மீசைக்காரன் வந்து உட்கார்ந்திருக்கானு?''

''ஆமாம்.''

''அவனை நம்பாதீங்க.''

''அப்படியா?''

''ஆமா. அவன் ஒரு கொலைகாரன்... ஒரு கொலைத் திட்டத்தோடுதான் இப்ப உங்களிடம் வந்திருக்கிறுன்...''

''ஐ ஸீ...''

''அவன் தன் மனைவியை இன்று இரவு கொலை செய்துவிடப் போகிறுன்.''

''அப்படியா?''

''மிஸ்டர், என்ன கேலியா கேக்கறீங்க... நான் விளையாடவில்லை. உன்னை எச்சரிக்கவே விரும்புகிறேன். பெரிய ஆபத்தில் மாட்டிக் கொள்ளப் போகிருய்... கொலைக் குற்றம் உன் தலையிலே விழுந்துவிடப்போகிறது.''

''மே ஐ நோ யுவர் நேம் அண்ட் ப்ளீஸ்?'' அட்ரஸ்.

''நாட் நெஸஸரி'' என்ருள் கடுமையாக. ''உன் நலன் கருதும் ஒரு ஆள். — அது போதும்.''

''தாங்க்ஸ்.''

''அவன் சொல்கிற விஷயத்துக்கு நீ ஒப்புக் கொண்டால் உன்னைவிடப் பெரிய மடையன் இருக்க மாட்டான். எச்சரித்துவிட்டேன். இனி உன் பாடு.'' 'டக்' கென்று எதிர் முனையில் ரிசீவரை வைத்தாள்.

நீயார்?

சந்திரநாத்

வியர்த்தது. துடைத்துக் கொண்டான். கமல்நாத்தைப் பார்த்தான். அவர் சாவகாசமாக மேஜையின் மீது கிடந்த பத்திரிகையில் ஆழ்ந்திருந்தார்.

''சொல்லுங்க ஸார்–''

கமல்நாத் எழுந்து சென்று அந்த அறையின் கண்ணாடிக் கதவை இழுத்துச் சாத்திவிட்டு வந்து உட்கார்ந்தார்.

''ரொம்ப ஸீக்ரெட்டான விஷயங்க. நம்ப ரெண்டு பேர் தவிர வேறு யாருக்கும் தெரியப்படாதுங்க.''

''தெரியாது.''

''நான் மதுரைக்குப் போறேன். இரண்டு நாள்ல திரும்பிடுவேன். ஆனா நான் போயிட்டு வரப்போறது ஒரு சிங்கத்தோட குகைக்குள்ள போயிட்டு வர்ற மாதிரி. நான் பத்திரமாப் போயிட்டுப் பத்திரமாத் திரும்பிடணும். அந்தப் பத்திரத்துக்கு நீங்க கேக்கற பீஸ் குடுத்திடறேன்.''

''நீங்க என்ன பிஸினஸ் பண்ணிக்கிட்டிருக்கீங்க?''

''என்னங்க... நம்பளைத் தெரியாதுங்களா? நம்ப பேரு 'பிலிம் லைன்லே' நல்லா தெரிஞ்ச பேரு ஆச்சுங்களே.''

''ஓ. சினிமா ப்ரொட்யூஸ்ரா?''

''இன்னும் அவ்வளவுக்கு ஆகலீங்க.'' சிரித்தார் கமல். ''இப்போ சில படங்களை வாங்கி டிஸ்ட்ரிபியூட் பண்ணிக்கிட்டு இருக்கேனுங்க.''

''எங்கே இருக்கிறது உங்க ஆபீசு?''

''ஆர். ஏ. புரத்திலேங்க. ஆபீசு, வீடு எல்லாம் ஒண்ணுதாங்க...தனி பங்களாங்க... ரொம்ப 'காமா' இருக்குங்க... ஆளை வெட்டிப் போட்டாக்கூட கேக்க நாதி இருக்காதுங்க.'' சிரித்தார் கமல்.


திடுக்கிட்டான். 'ஆளை வெட்டிப் போட்டாக்கூட!'

''எனக்கு சத்தம், கூச்சல் எல்லாம் அலர்ஜிங்க... அதனாலதான் அந்த மாதிரி இடத்தைப் பிடிச்சேனுங்க.... நீங்கதான் இன்னி ராத்திரி நம்ப வூட்டுக்கு வரப் போறீங்களே—நீங்களே பார்த்துக்குங்களேன்—''

மகேஷ் மீண்டும் திடுக்கிட்டான். 'கறுப்பாக, குள்ளமாக, ஒருத்தன் வருவான். உங்களைக் கூட்டிக்கிட்டுப் போவான்.' — மஞ்சுவின் வார்த்தைகள் மெய்யாகின்றனவா?

''சரி, நான் என்ன செய்யணும்கிறீங்க?... நீங்க மதுரைக்குப் போயிருக்கிறபோது நான் உங்க வீட்டிலே இருக்கணுமா?''

சென்ற வருடம் உலகக் குழந்தைகள் ஆண்டு. இந்த ஆண்டு உடல் ஊனமுற்றவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. 'ஆமாம்! இளைஞர்களுக்குச் சிறப்பளிக்கும் ஆண்டே கிடையாதா?' என்ற இளைஞர்களுடைய முணுமுணுப்புக்குப் பதில்அளிக்கும் வகையில் ஐக்கிய நாடுகள் சபை 1985-ம் வருடத்தை உலக இளைஞர்கள் ஆண்டாக அறிவித்திருக்கிறது. -தி. இரவிசங்கர்



''இல்லிங்க... மதுரைக்கு நாம ரெண்டு பேருமேதான் போகப் போகிறோம். அது முன்னாலே ஒரு காரியம் இருக்கு... ஒரு பெ தொகை பாங்க்லேர்ந்து டிரா பண்ண கொண்டாந்து வீட்டில வைக்கப் போறே நமக்கு நாளைக் காலையிலதான் வண்டி. இரா திரி முழுக்க நீங்க என் கூட இருக்கணும்''

''அவ்வளவுதானே?''

''காலேல ஒரு சின்னப் போக்குக் காட் ணுங்க. நாலு நாலரைக்குக் கிளம்பிப் போ தாப் போக்குக் காட்டிப்புட்டு, வீட்டுக் போயிருங்க. பொறவு டிரஸ் மாத்திக்கிட் நேரே ஸ்டேஷனுக்கு வந்துடுங்க.''

''சரி.''

''நான் தனியா வந்து ஸ்டேஷன்ல பார் துக்குவேன். எதிரெதிர் சீட்டு ரிசர்வ் பண்ண சொல்லிடறேன்.''

''நீங்க பண்ணினா உங்க எதிரிகளுக்கு தெரிஞ்சுடாதா?''

''தனித் தனி ஆளு விட்டுப் பண்ண சொல்றேன்... சரியுங்களா... பேசாம வந் எதிர் சீட்லே குந்திக்கினு கடலைக்கா கொரிச்சுக்கினு... யாரோ மாதிரி இருந் மதுரையில இறங்கிடுங்க—''

''ரயில்லே ஏதாவது ஆகும்னு எதிர்பார் கிறீங்களா?''

''மதுரை வரை ஒண்ணும் பயமில்லீங்க.''

''நீங்க யாருக்காவது பயப்படறீங்களா?''

''பிஸினஸ்லே எனக்குப் போட்டி ஆளுங் சிலபேரு இருக்கிறாங்க... விரோதியா நின் கிறாங்க... அவங்க ஏதாவது செஞ் போட்டா?''

''மதுரையில் என்ன வேலையா போறீங்க?''

''அதை மட்டும் தயவு செஞ்சு கே காதீங்க. நான் போறது வர்றது எல்லா என் சொந்த விஷயம். அதை யார் கிட்டய நான் சொல்ல முடியாது.''

''மதுரையில் உங்களுக்கு ஏதாவது ஆபத் ஏற்படும் என்று நினைக்கிறீங்களா?''

''எப்படிங்க சொல்ல முடியும்? அநேகம ஒண்ணும்ஏற்படாதுன்னுதான் நினைக்கிறே பெரும்பாலும் எல்லாம் சுமுகமாகவே மு யும். நாம அங்கே ஒரு ஹோட்டல்லேதா தங்கப் போறோம். அதுவும் நாளை இர மட்டும்தான்.''

மகேஷ், சப்ஜெக்டை விட்டு விட்டு, தி ரென்று ஒரு கேள்வி கேட்டான். ''இங் உங்க வீட்டில உங்களைத் தவிர இன்னு யார் யார் இருக்காங்க?''

கமல் திடுக்கிட்ட மாதிரி பார்த்தா ''எதுக்குக் கேட்கறீங்க?''

''சும்மா, தெரிஞ்சுக்கத்தான்.''

''ஒரு செக்ரட்டரி, ஒரு 'குக்' இரண் பேருதான். 'குக்'கூட இரண்டு நா ஊர்ல இல்லே. யாருக்கோ உடம்பு சரிய லேன்னு போயிருக்கான்.''

''உங்களுக்கு எத்தனை குழந்தைங்க?''

''குழந்தையா? எனக்கு இன்னும் க யாணமே ஆகலேங்க'' என்று சிரித்தார் கம நாத். மகேஷ் அவநம்பிக்கையுடன் அவனை பார்த்தான். 'பொய் சொல்கிறாயா? இ னிக்கு ராத்திரி உம் பொஞ்சாதியை

குளோஸ் பண்ணப் போகிறதா டெலி போன்லே அந்தப் பெண் சொன்னுளே—'

கமல் சொன்னுர், ''ஒரு காலத்துலே—அதோ நிக்குதே, உங்க செகரட்டரிப் பொண்ணு.. அது மாதிரி பொண்ணு ஒருத்தி மேலே உசிரையே வைச்சிருந்தேன். ஆண்டவன் அவளை எனக்குத் தர மறுத்துவிட்டார். மூணு நாள் ஜுரத்துலே அவ போயிட்டா... அப்புறம் பொம்பளை ஆசையே விட்டுப் போயிடுச்சு...'' அவர் குரல் கரகரத்தது.

''அது கிடக்குங்க... விட்டுத் தள்ளுங்க'' என்ருர். ''எனக்கு டைம் இல்லே. போயி ரிசர்வ் பண்ணச் சொல்லணும்... என்ன வர்ரீங்களா, என் கூட?''

பணத்தேவையை நினைத்துக் கொண்டான். ''வர்றேன்'' என்ருன். 'முட்டாளே, ஒப்புக் கொண்டு விட்டாயா?' என்று அதட்டுவது போல டெலிபோன் உடனே கூப்பிட்டது. அதே பெண். ''மகேஷ்,—அந்த ஆள் போயிட்டானு?''

''இல்லே—''

''இப்பவும் அங்கேதான் இருக்கானு?''

''ஆமாம்.''

''பெயர் என்னன்னு சொன்னுன்? கமல் நாத்ன்னுதானே?''

''ஆமாம்.''

''அதுவே ஒரு பொய். அது அவன் பெயரே இல்லே. அவன் ஒரு 'ஸ்மக்ளர்'. பம்பாயில் சுதர்ஸன் என்ற பெயரோட சுத்தினவன்!''

''ஐ ஸீ—''

''அவன் இன்றிரவு உங்களை அவன் வீட்டுக்குக் கூப்பிட்டிருக்கானு?''

''ஆமாம்.''

''போகாதே. இன்னி ராத்திரிதான் அங்கே ஒரு கொலை நடக்கப் போறது. அங்கம் அங்கமாக ஒரு பெண்ணை வெட்டி, டிரங்கிலே போட்டு, கூவத்துலே போட்டுவிட்டு, உன்னுேட ரயில் ஏறப் போருன். போலீஸ் விசாரணைன்னு வரும்போது உன்னுடன் அவன் மதுரையிலே இருந்ததா சாட்சி சொல்ல வேண்டி வரும்.''

''நீ யார்?'' — அதட்டினுன்.

''நானு?'' — சிரித்தாள். ''உண்மை விளம்பி — போருதா?'' டக்கென்று ரிஸீவரை வைத்து விட்டாள்.

மகேஷ் தீர்மானமான முகத்துடன் திரும்பினுன். ''கமல் ஸார், ஐ அக்ரீ டு எஸ்கார்ட் யூ—'' என்ருன்.

''ரொம்ப சந்தோஷமுங்க.'' — கமல்நாத் கைப் பையைத் திறந்து ஐந்து நூறு ரூபாய் நோட்டுக்களை எடுத்துக் கொடுத்தார். ''அட்வான்ஸா வச்சுக்கிடுங்க. போய்ட்டு வந்ததும் பாக்கியைத் தந்துடறேனுங்க.''

''தாங்க்ஸ்'' — நோட்டுக்களை உள் பாக்கெட்டில் பத்திரப்படுத்திக் கொண்டான்.

''ஒரு முக்கியமான விஷயமுங்க. ஒரு ஆள் நேத்துலேர்ந்து என்னைப் பின்தொடர்ந்துக்கிட்டிருக்கிற மாதிரி ஒரு பிரமைங்க. அதனுலே நீங்க எங்க வீட்டுக்கு வேறே ஏதாவது வேஷத்துல வாங்க.''

''அப்படியே செஞ்சுட்டாப் போச்சு.''

''ஒரு தியேட்டர் ஓனர், இல்லாட்டா ப்ரொட்யூஸர் மாதிரி வாங்களேன். தாடி



மானேஜர்: ஆபீஸ் நேரத்தில் கதைகள் எழுதிய அனுப்புகிறீராமே?

கிளார்க்: கிடையவே கிடையாது! ஜோக்குகள் எழுதி அனுப்பவே எனக்கு நேரம் போதலே. கதைகள் எழுத எப்படி நேரம் கிடைக்கும்? -ஏ. கே. சங்கர்

வச்சுக்கிட்டு வந்தால் தெரியாது.''

''மதுரையிலே நான் என்ன பண்ணணும்?''

''ஒண்ணும் பண்ண வேண்டாங்க. சும்மா ஹோட்டல் பாண்டியன்லே நல்லா டிபன் சாப்பிட்டுட்டு, மீனுட்சியம்மன் கோயில்லாம் சுத்திட்டு வாங்க... பாக்கி எல்லாம் நான் பார்த்துக்கிறேன்.''

''எங்கே தங்கறேம்?''

''ஹோட்டல் நிர்மலா தானுங்க. ஸ்டேஷன் எதிர்த்தாப்பலே இருக்குது. ரூம் கூடப் போட்டிருப்பாங்க, ரெடியா...''— எழுந்தார். ''கரெக்டா அஞ்சு மணிக்கு வந்துடுங்க''—

''ஓ எஸ்'' என்ருன் மகேஷ்.

ஹாலைக் கடக்கும்போது நீலாவைத் தேடினுர். அதே ஜன்னலடியில், நின்று வெளியே கீழே பார்த்துக் கொண்டிருந்தாள்.

கமல்நாத் நின்று, ''உங்க செகரடரியா?'' என்ருர்.

''எஸ்.''

''ரொம்ப அழகாக இருக்காங்களே. ஆனு அழகாக இருக்கிற வங்களுக்குத்தான் ஆபத்தும் அதிகம். போன வருசம் பாருங்க... நம்ப பிரண்ட் ஒருத்தர் — அவர் பிலிம் டிஸ்ட்ரிபியூட்டர்தான். ஒரு அழகான செக்ரட்டரி வச்சிருந்தாரு. பிஸினஸ் விஷயமா வந்த ஒரு பையன், நம்ப பிரெண்ட் வெளியே போயிருந்தப்ப — அவ வாயிலே துணியை அடைச்சு அவளை 'ரேப்' பண்ணி...''

''கடவுளே—''


''அதோட போச்சா? அவ கழுத்தையும் நெரிச்சுப் போட்டுட்டுப் போயிட்டான். அப்படி இருக்குது, உலகம்... நீ ஜாக்கிரதையா இரும்மா.''

நீலா நடுங்கினுள்.

மகேஷ் சிரித்தான். ''எங்க நீலா நல்ல ப்ரேவ் கேர்ள். அவகிட்ட ஒரு பயல் வாலாட்ட முடியாது'' என்ருன்.

''இல்லிங்க. இம்மாம் பெரிய ஆபீசுலே தனியா இருக்காங்களேன்னு சொன்னேன்'' என்ற கமல் ''வரேம்மா'' என்று இறங்கிச் சென்ருர்.

(தொடரும்)



○ போப் ஆண்டவருடன்...

முதலில் காயங்களிலிருந்
ரத்தம் பெருகுவதைநிறுத்
யாக வேண்டும். வயிற்றி
நாலரை பைண்ட் ரத்த
தேங்கிக் கிடப்பதை
பார்த்து டாக்டர்க
அதிர்ச்சியுற்றனர். இ
உடலின் மொத்த ரத்த
தில் 40 சதம்! இதனை
பஞ்சாலும் உறிஞ்சியாலு
நீக்கினர். ரத்த நாளத்தி
மாற்று ரத்தம் ஏற்றினர்
ஆறு பைண்ட் ரத்த
ஆபரேஷனின்போது செலு
நப்பட்டது.

நல்லவேளை, வயிற்றி
இடப் பாகத்தில் புகுந்

போப்பாண்டவருக்

பச்சை நிறகவுன்கள் அணிந்த சர்ஜன்கள் ஐந்தரை மணி நேரம் பாடுபட்டார்கள், அவரைக் காப்பாற்ற. அவர்கள் நெற்றியில் துளிர்த்த வியர்வையை அடிக்கடி நர்ஸ்கள் ஒற்றி எடுக்க வேண்டியிருந்தது. — அப்படி ஒரு கவலை. எனினும் அமைதியாகச் செயலாற்றினார்கள். போப் ஜான் பாலின் உயிரைப் பறிக்கும் முயற்சி தோல்வியுற்றது; ஆனால் அவர் வயிற்றில் பட்ட காயங்கள் மிகவும் ஆபத்தானவைதான்.

ஆம்புலன்ஸில் போப் வந்து சேர்ந்தபோது ஆஸ்பத்திரியின் எமர்ஜென்ஸி அறையில் டியூட்டியில்இருந்தவர்,இதய சஸ்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் ஃபிராங்கோ ஸிட்டெரியோ. ஏகப்பட்ட இரத்தம் இழந்து கொண்டிருந்தார் புனித போப். ''உடனடியாக அவரைஆபரேஷன் தியேட்டருக்குக் கொண்டு சென்றோம்'' என்கிறார் ஸிட்டெரியோ. நல்ல வேளையாக ஆப்பரேஷன் தியேட்டர் சித்தமாய் இருந்தது. அங்கு ஓர் இருபது வயது வாலிபருக்குச் சிறுநீரக மாற்று ஆபரேஷன் நடத்த எல்லாம் தயாராக இருந்தது. அந்த ஆபரேஷனுக்கு அவசரமில்லை. கொஞ்சம் ஒத்திப்போடுவதால் நோயாளிக்கு ஆபத்தில்லை.

போப்பாண்டவருக்கு இறுதிப் பிரார்த்தனைச் சடங்கு நடந்தது — ஒருவேளை மரணம் சம்பவிக்கலாம் என்பதால். அடுத்த ஓரிரு விநாடிகளில் டாக்டர் குழுவின் தலைவர் ஃபிரான்ஸெஸ்கோ க்ருஸிட்டி புனித போப்பின் வயிற்றைக் கத்தியால் கீறினார். நெஞ்சின் அடிவாரத்திலிருந்து வயிற்றின் அடிப்பாகம் வரை பெரிய கீறல்! — 18 அங்குல நீளம்.

தோட்டா முதுகின் கீழ்ப்பாகம் வழி
வெளியேறிய போதிலும் உடலின் பி
தான சுத்த ரத்த நாளமான அயோர்ட்
டாவைப் பாதிக்கவில்லை. பிரதான அசுத்
ரத்த நாளமான வின காவாவையும் தாக்
வில்லை. மேலும் முதுகெலும்பு, கல்லீரல்
கணையம், பான்கிரியாஸ், இவை மீதும் பட
வில்லை. இது கிறிஸ்தவ உலகின் பேரதிர்
டம்.

இருந்தாலும் சர்ஜன்களின் பணி சிக்
லானது. வயிற்றினுள்ளே மலம் சித
யிருந்தது. அது பெருங்குடலைத் தோட்ட
துளைத்திருப்பதைச் சுட்டியது. 20 முதல்
25 அடிவரை நீளமுள்ள சிறு குடலையு
பெருங்குடலையும் சர்ஜன்கள் ஆராய்ந்தனர்
இதற்கிடையில் வயிற்றுப் பாகம் முழுது
ஆன்டிபயாடிக் கலந்த உப்பு நீரால் கழுவ
பட்டது. கிருமிகளையும் கழிவுப் பொரு
களையும் நீக்க இந்த ஏற்பாடு.

பெருங் குடலில் ஒரு பெரிய துளையு
சிறு குடலில் பல காயங்களும் இருப்பதை
சர்ஜன்கள் கண்டனர். சில சிறு துளைகளை
தைத்தனர். சிறு குடலின் ஓரிடம் ரொம்ப
வும் பாழாகிவிட்டிருந்தது. அந்த இடத்தை
வெட்டி எடுத்து எறிந்துவிட்டு, வெட்ட
பட்ட இருமுனைகளையும் ஒன்று சேர்த்து
தைத்தனர்.

பெருங்குடலிலும் மிகவும் நாசமாகியிருந்
ஒரு பகுதியை வெட்டி எடுத்து எறிந்
விட்டு வெட்டப்பட்ட இரு முனைகளையு
இணைத்துத் தைத்தனர். இந்த ரணம் ஆ
வதற்கு ஆறு வாரம் ஆகும். பெருங்குட
ரணம் சுலபத்தில் ஆறாது. அதுவரை அந்த
பக்கம் மலம் செல்லாதிருப்பது நல்லது
எனவே அந்த இடத்துக்கு மேல் மட்டத்தி



லக்ஷ்மி
100% பாலியெஸ்டர்
புடவைகள்
லக்ஷ்மி மில்ஸ்,
கோயம்புத்தூர்
HTM-LMC-2384

சந்திரநாத்



3

"நீலா நானும், கொஞ்சம் ரமண நர்ஸிங் ஹோம் வரை போயிட்டுவந்துடறேன், மஞ்சுவைப் பார்த்துட்டு — அப்புறம் டைம் கிடைக்காது.''

மகேஷ் கிளம்பினான். நீலா சினிமாவில் காதலனை யுத்த களத்துக்கு அனுப்புகிற கதாநாயகி மாதிரி தலையை அசைத்தாள்.

''நடேஷ் என்னிக்கு வரதா தந்தி குடுத்திருக்கான்?''

''இன்னிக்குத்தான்.''

''சரி. கோட்டை எடு.''

எடுத்துப் பின்புறம் நின்று மாட்டிவிட்டாள். முன்புறம் இழுத்துச் சரி செய்து கொண்டு கதவை நோக்கி நடந்தபோது—

கீழே கமலநாத்தின் கார் கிளம்பிச் சென்ற ஓசை கேட்டது. நீலா ஏதோ நினைவு வந்தவள் போல், 'ஒரு நிமிஷம் இருங்க, பாஸ்'' என்று அவசரமாக ஜன்னலடிக்கு ஓடி வெளியே பார்த்தாள்.

அடுத்த நிமிஷம், ''பாஸ்... பாஸ், இங்கே சட்னு வாங்க.'' கூப்பிட்டாள். மகேஷ் விரைந்து சென்று அவளருகில் நின்று தெருவை எட்டிப் பார்த்தான்.

''அதோ அங்கே பாருங்க பாஸ்'' — நீலா சுட்டிக் காட்டிய திசையில் எதிர் பிளாட்பாரத்தில் ஒரு 'பொது' டெலிபோன் பூத் இருந்தது. அதிலிருந்து தலையில் பெரிய முட்டாக்குப் போட்டுக் கொண்டிருந்த ஒரு பெண் வெளியே வந்து, கிழக்கு நோக்கி நடந்து, ஒரு டாக்ஸியின் கதவைத் திறந்து ஏறிக்கொண்டாள். முதுகு ஸ்பஷ்டமாகத் தெரிந்தது.

''யார் அது?''

''ரொம்ப நேரமா டெலிபூத் கிட்டயே நின்னுகிட்டு இங்கேயே பார்த்துக்கிட்டிருந்தா. 'என்ன இங்கே பார்க்கறுளே'ன்னு தோணிச்சு.''

''கமல்நாத்தோட நான் பேச ஆரம்பிச்ச போதும் இவ இங்கே இருந்தாளா?''

''அப்பப் பார்க்கலே. ஆனால் பேசிக்கிட்டிருந்தபோது ஒருவாட்டி டெலிபோன் அடிச்சுதே, அப்பப் பார்த்தேன். 'பூத்'லே நின்னு யார்கிட்டயோ போன்லே பேசிக்கிட்டிருந்தா.''

மகேஷுக்குப் புரிந்து விட்டது. இவள் தான் அப்போது தன்னிடம் பேசியவள். இவள்தான் திருமதி உண்மை விளம்பி.

''இதோ வந்துட்டேன், நீலா'' - அவள் முகத்தைப் பார்க்க நினைத்து, கீழே போக இரண்டடி அவசரமாக எடுத்து வைத்தான்.

''பிரயோசனமில்லே பாஸ். அதோ அவ டாக்ஸி கிளம்பிடுச்சி'' என்ற நீலாவின் குரல் பின்னுக்கு இழுத்தது. திரும்பி வந்தான்.

''நீ இவள் முகத்தைப் பார்த்தாயா நீலா, எப்படி இருந்தாள்?''

''முகத்தைச் சரியாகப் பார்க்க முடியவில்லே. பெரிய முக்காட்டுடன் கறுப்புக் கண்ணாடியும் போட்டிருந்தாள். பெரும்பாலும் சுவர் பக்கமாகவே பார்த்துக்கிட்டிருந்தா.''

''சரி, ஜாக்கிரதையாக இருந்துகொள். ஏதோ ஒன்று நடக்கப் போகிறது. இந்தக் கமலும் ஏதோ திட்டம் போடுகிறான். இந்தப் பெண்ணும் ஏதோ திட்டம் போடுகிறாள். கமல் மதுரைக்கு வரும்போது அங்கே அவர் கூட யாரும் இருக்கக் கூடாது என்று யாரோ விரும்புகிறார்கள். அப்படி விரும்புகிறவர்களின் கையாளாக இந்தப் பெண் இருக்கலாம். அவர் யார், எதற்காக மதுரைக்குக் கமல் தனியாக வரவேண்டும் என்று நினைக்கிறார், அங்கே அவரை என்னசெய்யப் போகிறார்கள்—என்பதெல்லாம் தெரிய வேண்டும்''

நீலா சிலை மாதிரி கேட்டுக் கொண்டு நின்றாள். அதுதான் அவள் சுபாவம். துப்பறியும் ஆர்வம் அவளுக்குத் துளியும் கிடையாது. மகேஷ் எப்பொழுதாவது விஷயங்களை அவளை வைத்துக் கொண்டு அலசும் போது பேசாமல் கேட்டுக் கொண்டிருப்பது தான் அவள் வழக்கம்.

''இதில் இன்னொரு விஷயமும் இருக்கிறது. இன்று இரவு கமல்நாத் வீட்டில நான் தங்கப் போகிறேன். அப்போது அங்கும் ஏதேனும் நடக்கக் கூடும். அது என்ன — இந்தக் கேள்விக்கும் விடை தெரிய வேண்டும்.''

மகேஷ் ஒரு சிகரெட்டை எடுத்துத் தட்டி உதட்டில் வைத்துக் கொண்டான். நீலா 'லைட்'டரைக் 'கிளிக்' செய்து பற்ற வைத்தாள்.

ஒரு உறி உறிஞ்சிவிட்டு ''தாங்க்ஸ் நீலா. யூ ஆர் ஸோ ஹெல்ப்ஃபுல்'' என்றான், அவள் தோளில் தட்டிக் கொடுத்தான். ''இந்த ஆள் கமல்நாத் பற்றி என்ன நினைக்கிறே?'' என்றான்.

''ஒண்ணும் நினைக்கலை.''

''தப்புத் தண்டா பண்ற ஆள் மாதிரியா தோணுது?''

''தோணலை.''

''இவன் கூட நான் போவதைப் பற்றி என்ன நினைக்கிறாய்?''

''ஒண்ணும் நினைக்கலை.''

மகேஷ் அவளை இரக்கமாகப் பார்த்தான். ''நீ நினைக்கிறதையே விட்டு ரொம்ப நாளாயிடுச்சு போலிருக்கு நீலா. இட் இஸ் டூ பாட். நீ கலகலப்பாகவே இப்போதெல்லாம் இல்லை''.

''நீங்க ஜாக்கிரதையா இருக்கணும், பாஸ்.''

''என்னைப் பற்றிக் கவலைப் படாதே. நான் எத்தனையோ கொம்பேறி மூக்கன்களை எல்லாம் பார்த்தாகி விட்டது. சிங்கப்பூர் கண்ணனைவிட ஒரு மோசமான 'ரோக்' உண்டா?... எத்தனை கொலை செய்த ஆசாமி? அவனையே வளைச்சுப் பிடிச்சு உள்ளே தள்ளிடலே... ஸ்காட்லாந்து யார்ட்லே டிரைன் ஆன ஆளம்மா நான்.''

நீலாவுக்குப் பெருமையாக இருந்தது. புன்னகை செய்தாள்.

மகேஷ் உறுதியான குரலில் சொல்லிக் கொண்டான். ''இந்தக் கேஸை எடுத்துக் கொள்வதாக முடிவு செய்து விட்டேன். இந்தக் கமல்நாத் கூடப் போகப் போகிறேன். என்ன நடக்கிறது என்றுதான் பார்ப்போமே—''

மகேஷ் கதவைத் திறந்தான். வெளியேறி நின்று திரும்பி, ''நான் மஞ்சுவைப் பார்த்துட்டு, அப்படியே ஸ்டேஷனுக்குப் போயிட்டு நாலு நாலரைக்கெல்லாம் வந்துடுவேன்... அதற்குள் அந்த உண்மை விளம்பி போன் செய்தால்...'' என்று இழுத்தான்.

''என்ன சொல்ல வேண்டும்?''



''நான் கமலுடன் மதுரைக்குப் போகலே என்று சொல்லிவிடு.''

''எஸ் பாஸ்'' என்றாள் நீலா.

மகேஷ் போனதும் உள்ளே வந்தாள். ஹால் வெறுமையாக, பயப்படும்படியாகச் சிரித்தது. சோபாவில் மகேஷ் படுத்திருந்த இடத்தில் போய்க் கவிழ்ந்து படுத்தாள். 'பாஸ்-' என்று உதடு துடிக்க முத்தினாள். அழுதாள்.

சரியாக இருபது நிமிடம் கழித்து ஒரு டெலிபோன் 'கால்' அவளை இந்த உலகத்துக்கு இழுத்து வந்தது. நடேஷ் டேபிள் போனில் யாரோ அழைத்தார்கள்.

''ஹலோ - மகேஷ் அண்ட் நடேஷ் கம்பெனி?''

கரகரத்த ஒரு குரல் பேசியது. ஆண் குரல். புதுக் குரல். ''மகேஷ் சார் இருக்கிறாரா... ரொம்ப அவசரம்.''

''ஆஸ்பிடலுக்குப் போயிருக்கார். நீங்கள் யார்?''

''நானா?'' குரல் ஒரு கணம் தயங்கியது. ''நான் அவன் ஓல்ட் கலிக் — கூடப் படிச்சவன். டெல்லியிலேருந்து வந்திருக்கிறேன். எப்ப வருவான்?''

''நாலு மணிக்கு... நீங்க ஸ்டே பண்ணியிருக்கிற அட்ரஸ் சொன்னால் வந்ததும்—''

''அவசியமில்லே. அந்த பிளடியை நானே வந்து நாலரைக்குப் பார்க்கிறேன்'' வைத்து விட்டான்.

நீலா—முகம் சிவந்தாள். உறுமினாள். 'ராஸ்கல்! பிளடியா பிளடி... நீ என்ன 'கலிக்'காக இருந்தால் என்னடா.. என் டார்லிங்டா, அவர். அவரையா பிளடின்னே—

மனசுக்குக் கஷ்டமாக இருந்தது. மேஜை டிராயரைக் கோபமாகத் திறந்தாள். சின்ன டிபன் பாக்ஸ் விழித்துப் பார்த்தது. எடுத்து மேஜை மேல் வைத்தாள். வாட்டர் பாட்டிலைக் கொண்டு வந்து சாவகாசமாகத் திறந்து கண்ணாடி டம்ளரில் ஊற்றினாள். ஒரு வாய் 'ஸிப்' பண்ணிவிட்டு டிபன் பாக்ஸைத் திறந்தாள்.

மேலாக இரண்டு போளிகளும் வடையும் இருந்தன. கீழே எலுமிச்சம் பழச் சாதம் மலர்த்தது — மஞ்சளாக.

'இன்னிக்கு உனக்கு பர்த்டேடீ' என்று காலையில் அம்மா—சொன்னது நினைவு வந்தது. 'இனிமே எனக்கு எத்தனை பர்த்டே வந்தா என்ன? என் மகேஷை முழுக்க வேறு ஒருத்திகிட்ட நான் இழந்துட்டேனே—' கண்ணீர் வழிந்தது.

சாப்பிடப் பிடிக்கவில்லை. டிபன் பாக்ஸைத் திரும்ப மூடினாள். ஒரு மெமோ ஷீட்டை எடுத்து அதில், ''என் அன்புக்குரியவருக்கு—என் பர்த்டே ஸ்வீட்'' என்று எழுதினாள்.

'கடைசி ஸ்வீட்ஸ்' என்று எழுதி வைத்துவிட்டுத் தூக்க மாத்திரைகளைப் போட்டுக் கொண்டுவிடலாமா என்று நினைத்தாள். 'சீ! நான் பிராக்டிகல் கேர்ள் — என் மகேஷ் கூடவே 'டே-டைம்' முழுக்க இருக்கேனே அது போதும்' என்று தீர்மானித்தாள்.

டிபன் பாக்ஸையும் லெட்டரையும் எடுத்துக்கொண்டு போய் மகேஷின் டேபிள் மீது வைத்தாள். திரும்பி வந்ததும் பார்ப்பார்—சர்ப்ரைஸா இருக்கட்டும்' என்று நினைத்தபடி வெளியே வந்து இன்னொரு வாய் தண்ணீர் குடித்தாள்.

நீயா?

முன்கதைச் சுருக்கம்

நகரின் உயரமான கட்டிடத்தின்மூன்றாவது மாடி! மகேஷ் அண்ட் நடேஷ் பிரைவேட் டிடெக்டிவ்ஸ் கம்பெனியின் ஹால். சோபா கம்பெட்டில், டிப்டாபாகப் படுத்து ஏதோ நாவலைப் புரட்டிக் கொண்டிருக்கிறான் டிடெக்டிவ் மகேஷ்.

அவனைக் காதலித்து அவன் தன்னுடன் படித்த மஞ்சுவை மணந்து கொண்டதால் ஏமாற்றமடைந்த டைப்பிஸ்ட் நீலா அவனைப் பார்த்துப் பெருமூச் செறிந்து கொண்டிருக்கிறாள்.

டெலிபோன் ஒலிக்கிறது. ஆஸ்பத்திரியில் அழகான பிள்ளையைப் பக்கத்தில் படுக்க வைத்துக் கொண்டு, மஞ்சு டெலிபோனில் மகேஷைக் கூப்பிட்டுத் தனக்கு வந்த ஒரு விபரீத சொப்பனத்தைக் கூறுகிறாள். கருப்பாக குள்ளமாக, பெரிய மீசையுடன் ஒரு ஆள் வந்து மகேஷை அழைத்துப் போவதாகவும், அவனைக் கட்டி வைத்து எரிப்பதாகவும் கூறுகிறாள். அதே சமயம், கதவைத் திறந்து கொண்டு அதே மாதிரி ஆள் ஒருவர் வந்து தன் பெயர் கமல்நாத் என்றும், தன்னுடன் பாதுகாப்பாக மதுரைக்கு வர வேண்டும் என்றும் கோருகிறார்.

அப்போது இன்னொரு பெண் குரல், டெலிபோனில் வந்திருப்பவன் அன்றிரவு தன் மனைவியைக் கொலை செய்யப் போகிறவன் என்றும், அவனுடன் போக வேண்டாம் என்றும் எச்சரிக்கிறது. அதையும் மீறி மகேஷ் போவதற்கு முடிவு செய்கிறான்.

போகும்போது கமல்நாத் நீலாவின் அழகுக்கு ஆபத்து நேரிடலாம் என்றதும் மகேஷ் அவள் ஒரு தைரியசாலி என்று எடுத்துரைக்கிறான். மேலே கதையைத் தொடருங்கள்.

வெளியே ஜன்னலுக்கு அப்பால் பம்பாய் போகிற விமானம் ஊர்ந்து கொண்டிருந்தது. மெதுவாகக் கோடு கிழிப்பதை முழுமையாகப் பார்த்துக் கொண்டு நின்றாள். விமானம் மறைந்தது. டெலிபோன் ஒலித்தது. இது மகேஷ் டெலிபோன். — ஓடிப்போய் எடுத்தாள்.

''நீலா வெரி அர்ஜண்ட்; மகேஷ் ஸ்பீக்கிங். கம் ஹியர் அட் ஒன்ஸ்'' என்றது குரல் தணிவாக. பரபரப்பாக. கரகரப்பாக. யாருக்கோ தெரியக் கூடாது என்று ரகசியமாகப் பேசுவது போலிருந்தது.

''பாஸ் — எங்கே இருந்து பேசறீங்க?''


''20, நாச்சிமுத்து தெரு, கே. கே. நகர். டோன்ட் ஆஸ்க் கொஸ்சின்ஸ். கம் இமீடியட்லி. ஆபீஸைப் பூட்டிவிட்டு, ஒரு ஆட்டோ பிடிச்சுக்கிட்டு உடனே வந்துடு—'' டக்கென்று போனை வைத்து விட்டான்.

நீலா பிரமித்தாள். உடம்பெல்லாம் பதறியது. நாச்சிமுத்து தெரு எங்கே இருக்கிறது? பாஸ் அங்கே ஏன் போனார்? ஏதாவது

பு ரொபஸர் பொன்னுத்துரை ஜன்னல் வழியே வெளியே பார்த்தார். தூரத்தே விண்ணளாவிக் கம்பீரமாய் நின்று கொண்டிருந்தது அம்போலோ 555! இன்னும் இரண்டே மணி நேரத்தில் அவரும் அவரது சகாக்களான டீக்கடை முனுசாமி, லாண்டிரி தங்கவேலு, கல்லூரி மாணவன் காமேஷ் சகிதம் மணிக்கு 30,000 மைல் வேகத்தில் அம்புலியை நோக்கி ராக்கெட்டில் போய்க் கொண்டிருப்பார். என்ன இதெல்லாம், புரபஸராவது, டீக்கடை, லாண்டிரிக்காரரோடு சந்திரனுக்குப் போவதாவது என்று மண்டையை உடைத்துக் கொள்ளாதீர்கள்... வருகிறேன்.

அமெரிக்கர்கள் அப்போலோவில் சந்திரனுக்குப் போனார்கள் அல்லவா? அப்போது ஒரு தகராறு ஏற்பட்டது எல்லோருக்கும் மறந்திருக்காது என்று நினைக்கிறேன்.

சந்திரனில் தங்கள் ஆராய்ச்சியை முடித்துக்கொண்டு மேலே கிளம்பியபோது தாய்க் கலத்தோடு சரியாக இணைய முடியாமல், சேய்க் கலம் அதன் பின்னாலேயே லோ... லோ என்று அலைந்தது அல்லவா... எனவே நம்மவர்கள் பெயரும் புதிதாக இருக்கட்டுமே என்று அம்போலோ என்று பெயர் சூட்டினார்கள். அதோடு திருப்தி அடையக் கூடாதோ?



இந்த அமெரிக்கர்கள் சந்திரனின் இருண்ட பகுதியில் என்ன இருக்கிறது என்பதை உலகுக்குச் சொல்லாமலே இருட்டடிக்கிறார்களே அங்கே போய் உண்மையைக் கண்டுகொண்டு வந்தால் என்ன என்று நமது நாட்டு அறிவுக் கருவூலங்கள் எண்ணின.

அவ்வளவுதான்! இந்த அகண்டபரதகண்டத்தில் விஞ்ஞானிகள் தங்கள் இரு கைகளாலும் தங்கள் மூளைகளை இரவு பகலாய்ப் பிசைந்து கொண்டார்கள். அவர்கள் கைகளுக்குள் அடங்காத பெரிய மூளையை உடைய விஞ்ஞானிகளின் மூளைகளை அவர்களின் அஸிஸ்டெண்டுகள் கூடச் சென்று பிசைந்தார்கள்.



ஹாஸ்ய பாவம்

மிகைபட நகைப்பதும், பிறர் நகைக்கச் செய்வதும், புருவங்கள் நெரிய விலாவைப் பிடித்துக் கொள்வதும். — சிலப்பதிகாரம்: அடியார்க்கு நல்லார் உரை

நம் நாட்டில் கண்டு பிடிக்க முடியாத ஒரு விஞ்ஞான ரகசியம் உண்டா என்ன? புதிதாய் மேற்கே என்னத்தைக் கண்டு பிடித்து விட்டார்கள்? எல்லாம் 'நம்ப' தஞ்சாவூர் சரஸ்வதி மகாலிலிருந்து அவர்கள் திருடிக் கொண்டு போனது தானே? உடனே பிடித்தது அனர்த்தம் தஞ்சாவூர் சரஸ்வதி மகாலுக்கு!

நாட்டின் பல பாகங்களிலிருந்தும் விஞ்ஞான நிபுணர்கள் சரஸ்வதி மகாலை முற்றுகையிட்டார்கள். பழைய ஓலைச் சுவடிகளை எல்லோரும் பார்ட் பார்ட்டாய்க் கழற்றினார்கள். சுருங்கச் சொன்னால் ராஜ ராஜ சோழன் சிலைத் திறப்பு விழாவுக்கு எவ்வளவு ஆர்ப்பாட்டம் நடந்ததோ, அதற்கு மேல் ஒரு அரைப் பங்கு நடத்தி, ஊரையே ஒரு கலக்குக் கலக்கி விட்டார்கள். என்ன ஆச்சரியம்! பாற்கடலைக் கடைந்தபோது அமிர்தம் வெளிப்பட்டது போல், விஞ்ஞானிகள் சரஸ்வதி மகால் லைப்ரரியைக் கடைந்து அலசியபோது அம்போலோ வெளிப்பட்டது. அதாவது அதை உருவாக்கும் முறையைக் கண்டு பிடித்து விட்டார்கள்.

இரண்டே மாதம்! இப்பொழுது நம் ராக்கெட் தளமான தும்பாவுக்குப் பக்கத்





தில் சும்மா கிடந்த 'ஜிம்பக ஜிம்பா' என்ற பகுதியில் அம்போலோ ஜம்மென்று விண்ணை நோக்கித் தன் டீகால் மூக்கோடு நின்றது. அதைச் சுற்றிப் பதினெட்டு யோசனை தூரத்துக்குக் கருட வியூகத்தில் காவல் துறை வீரர்கள் இரவு பகலாய், கண்களில் விளக்கெண்ணெய் கிடைக்காத காரணத்தால் ரேடியோ ஆயிலேயோ, டிரான்ஸிஸ்டர் ஆயிலேயோ விட்டுக் கொண்டு காவல் காத்தார்கள்!

அம்போலோவைக் கண்டு பிடித்தாலும் பிடித்தார்கள். நாட்டில் ஏக அமளி, புரட்சி, கூச்சல், கொந்தளிப்பு, குழப்பம். எலெக்ஷன் நடந்தால் என்ன ஒரு 'அமைதி' நிலவுமோ அப்படி இருந்தது இந்தப் பரத கண்டம். விஷயம் என்ன என்கிறீர்களா?

சந்திரனுக்குச் செல்ல மக்களிடையே போட்டா போட்டி.

இமயம் முதல் குமரி வரை நாடு கொந்தளித்த கொந்தளிப்பில் பிரதமரின் மனம் வெந்து, நொந்தது, கைகளைப் பிசைந்தார். நெற்றியைச் சுருக்கிக் கொண்டார். ஓயாத சிந்தனையில் ஈடுபட்டார். வேறு எதற்கு? நாட்டில் அமைதியை நிலைநாட்ட என்ன வழி என்று கண்டு பிடிக்கத்தான்!

இங்கேதான் நமது தென்னக எம். பி. ஒருவருக்கு அதி அற்புதமான யோசனை ஒன்று தோன்றியது. ராவோடு ராவாக டில்லிக்குப் பறந்து பிரதமரைச் சந்தித்துத் தான் சொல்லப் போகும் யோசனையால் நாட்டில் நிலவும் அமளியை ஒரு க்ஷணத்தில் அடக்கி விடலாம் என்றும், தனக்கு இன்ன போர்ட்ஃபோலியோவைக் கொடுத்து மந்திரியாக்கினுல் அதைத் தெரிவிப்பதாகவும் கூறினுர்.

பாவம், பிரதமர் என்ன செய்வார்? மறுநாளே மத்திய அமைச்சரவையில் ஒரு சிறு மாற்றம்! தென்னக எம். பி. மத்திய மந்திரி



யானுர்! விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொண்டதும் பிரதம மந்திரி உட்பட அவர் தமது யோசனையைக் கூறப் போகிறுர் என்று ஆவலுடன் காத்திருந்தார்கள். ஆனுல் விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொண்ட நிகழ்ச்சிக்குப் பிறகு அவரைத் திடீரென்று காண வில்லை!

டில்லியே திடுக்கிட்டது. நாட்டில் அமைதி நிறுவப்படுவதை விரும்பாத பிற் போக்குச் சக்திகள், நக்ஸலைட்டுகள், குடமுருட்டிக் குண்டர்கள் யாரோ அந்தப் புதிய மந்திரியைக் கடத்திச் சென்று விட்டார்கள் என்ற வதந்தி குடிசைத் தீயாய்ப் பரவியது.

இந்த நேரத்தில் சென்னை செல்லும் விமானத்தில் அவரைக் கண்டதாகச்



செய்திகள் வந்தன. மாலை 6 மணி சுமாருக்கு அந்தக் காணுமற் போன மந்திரியே தம் நண்பர்கள் புடைசூழப் பிரதம மந்திரியைக் காண மலர்மாலைகளுடன் வந்திருந்தார்! மந்திரியானவுடன் சென்னையில் அவரது தலைவரின் சமாதிக்குப் பறந்து சென்று மலர் வளையம் சாத்தி அன்னுருடைய ஆசியுடன் பிரதமரைக் காண வந்துள்ளார்! எப்படி?

பார்லிமெண்ட் ஹவுஸே ஆவலாய் நிற்க, ஒரே வார்த்தையில் தமது யோசனையை வெளியிட்டார் புதிய மந்திரி.

புதிய மந்திரி அந்த அற்புத யோசனையை உரைத்ததும் அந்த மண்டபமே இடிந்து விழுந்து விடும்போல் கரகோஷ ஒலி கிளம்பிற்று. விண்ணை முட்டிற்று. அவரைத் தூக்கித் தோள் மேல் வைத்துக் கொண்டார்கள்.

அப்படி அதியற்புதமாய் அவர் சொன்ன யோசனைதான் என்ன? எல்லாம் நமக்குத் தெரிந்ததுதான்.

''லாட்டரி!''

''ஆமாம்! லாட்டரிதான். அம்போலோ 555 லாட்டரி! நான்கு முதற் பரிசுகள்! நான்கு பேர்களுக்குப் பரலோக யாத்திரை (தயவு செய்து வேறு மாதிரி யாரும் எண்ண வேண்டாம். சந்திரன் நமக்குப் பிற லோகம்தானே... பிற என்ற சொல் தமிழ் இலக்கணப்படி மருவியோ, உருவியோ பர என்ருகி விட்டது!) சந்திரனுக்குச் சென்று

திரும்பியதும் (?) தலைக்கு நான்கு லட்ச ரூபாயும் இம்பாலா காரும்!

எப்படி ஐடியா?

சந்திரனுக்குச் செல்ல லாட்டரி மூலம் ஆட்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குப் பயிற்சி அளித்து மேலே அனுப்பத் தீர்மானித்ததும், மத்திய சர்க்காரில் லாட்டரி அடிக்க என்று... ஒரு தனி இலாகா ஏற்படுத்தப்பட்டது. லாட்டரி டிக்கெட்டுகள் நிறம், அதன் எண்ணிக்கை, விற்பனை, கமிஷன், விளம்பரம் ஆகியவற்றைக் 'கவனிக்க' அன்றே 53 கமிட்டிகளும் 96 உப கமிட்டிகளும் நியமிக்கப்பட்டன.

லாட்டரி டிக்கெட்டுகள் வெளியான இரண்டே வாரங்களில் 100 கோடி டிக்கெட்டுகள் காலி!

ஒரு சுபயோக சுப தினத்தில் ராஷ்டிரபதி பவனில் குலுக்கல் விழா நடந்தது.

நான்கு பெயர்களுக்கு அதிர்ஷ்டம் அடித்தது. அவர்கள் யார் யார் தெரியுமா? மண்ணடியில் டீக்கடை வைத்திருந்த முனுசாமி, குஜராத்தில் லாண்டரி வைத்திருந்த தங்கவேலு, டில்லியில் புரொபஸரா யிருந்த பொன்னு துரை, அவரிடமே படித்துக் கொண்டிருந்த காமேஷ்!

ஆறு மாத காலம் அவர்களுக்குப்பயிற்சி அளிக்கப்பட்டு இன்று மேலே போக இருக்கிறார்கள். இந்தக் கட்டத்தில்தான் புரொபஸர் ஜன்னலுக்கு வெளியே அம்போலோவைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

லாண்டரி தங்கவேலுவும், வெளியே பார்த்துக் கொண்டிருந்தார். வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. எங்கே பயணம் தடைப்பட்டு விடுமோ என்று அவருக்குப் பயம். லாண்டிரியை விட்டு வந்த பிறகும் இன்னும் அவரை மழை பயம் விட்ட பாடில்லை!

டீக்கடை முனுசாமி — பாவம் பூமியின் ஆகர்ஷண சக்திக்குச் சவால் விட்டு மேலும் கீழுமாய் சைடு வாக்கில் டீ ஆற்றி ரொம்ப நாளாயிற்று!

சரியான குளிகையில் அம்போலோ 555 சீறிக்கொண்டு ககன வெளியில் பாய்ந்தது. அகண்ட இந்தப் பரத கண்டமெங்கும் குதூகலம்... கோலாகலம்...

மேலே காமேஷையும் லாண்டரிக்காரரையும் தாய்க் கலத்தில் சுற்ற விட்டு விட்டு புரொபஸரும் டீக்கடையாரும் சந்திரனின் பின்புறம் தங்கள் நட்டுவாக்கிளி வண்டியில் (அப்போலோவின் பூச்சி வண்டி போன்றது) போய் இறங்கினார்கள்.


சந்திரனின் பின் பகுதி மிக மிக அழகாய் இருந்தது. சீரான காற்று எங்கிருந்தோ வீசி ஏர் கண்டிஷன் செய்த இடம் போல் ஒரு பிரமையைத் தோற்றுவித்தது.

"வருக! வருக! உங்கள் வரவு நல்வரவு ஆகுக!" என்ற தமிழ்க் குரல் கேட்டு இருவரும் திடுக்கிட்டார்கள்.

திரும்பிப் பார்த்தால் சர்க்கஸ் குள்ளன் போல் ஒருவன் அவர்களைப் பார்த்துப் புன்னகைத்தபடி நின்று கொண்டு இருந்தான். தன் கையால் அவர்களைப் பயப்பட வேண்டாம் என்று கூறியவன் அவர்களைத் தன்னைப் பின்பற்றுமாறு கூறினான். இருவரும் கனவில் நடப்பது போல் அவனைப் பின்பற்றினார்கள்.

பிறகுதான் அவர்களுக்குப் பல விஷயங்கள் புரிந்தன. அவர்களை அழைத்துச் சென்ற குள்ளன் அண்டங்களில் இருக்கும் பல நாடுகளின் மொழி அறிந்தவனாம். அவர்களின் அம்போலோ பூமியிலிருந்து புறப்பட்டது முதல் சந்திரனின் பின் பகுதியில் வந்து இறங்கியது வரை எல்லாவற்றையுமே 'மூனவிஷனில்' பார்த்து விட்டார்களாம். இப்போது மூனலியா நாட்டுப் பிரசிடெண்டும் (அதுதான் அவர்கள் நாட்டுப் பெயராம்) பார்லிமெண்டும் பூமியிலிருந்து வந்துள்ள விருந்தினர்களைச் சந்திக்கப் பார்லிமெண்ட் ஹவுஸில் காத்திருக்கிறார்களாம்.

பிரும்மாண்டமான கட்டிடத்தின் வாயிலில் அந்தக் குள்ளன் போய் நின்றதும் அதன் கதவுகள் டக்கென்று திறந்துகொண்டன. அதனுள் நுழைந்த புரொபஸருக்கும் டீக்கடையாருக்கும் முதலில் ஒன்றுமே புரிய



நீங்கள் செஸ் ஆடத்தெரிந்தவரா? அப்படியானால் இந்தப் புதிரை விடுவிக்கப் பாருங்கள், உங்களிடம் எட்டு ராணிகள் தரப்பட்டுள்ளன. அவற்றை ஒன்றையொன்று வெட்ட இயலாதபடி வைக்கவேண்டும். -கே. பத்மநாபன்

[விடை அடுத்த பக்கம்]



"உங்கள் வீட்டுச் சமையல் அறையில் ஜன்னல் கண்ணாடி உடைந்திருக்கிறதே?"

"அது என் கணவரால் வந்த வினை. நான் நேற்று ஒரு கரண்டியை வீசிய போது அவர் 'ட்க்'கென்று குனிந்து கொண்டுவிட்டார்!" - ஏ. வி. தேவன்

வில்லை. அவர்கள் உள்ளே நுழைந்ததும் அந்த மண்டபமே இடிந்து விழுந்து விடும்போல் கரகோஷம். மூனுலியா பிரசிடெண்ட் ஏறத் தாழ நம் ஏர் இண்டியா மகாராஜாவைப் போல் இருந்தார். எழுந்து அவர் பூமியிலிருந்து வந்த விருந்தினர்களை வரவேற்று ஐந்து நிமிஷம் ஏதோ பேசினார். பின்பு குள்ளன் புரொபஸரைப் பார்த்து அவரைப் பேசுமாறு கூறினான். புரொபஸருக்குக் கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை. முதல் நாள் மூன்று மணி நேரம் நோட்ஸ் எடுத்து வைத்துக் கொள்ளாமல் அவரால் அரை மணி நேரம் கூடப் பேச முடியாது. இப்போது திடுதிப்பென்று பேசச்சொன்னால்? கைகளைப் பிசைந்தார் புரொபஸர். டீக்கடையாருக்குப் பொறுக்கவில்லை. ''என்னங்க, நீங்க... ஒரு நாட்டுப் பிரசிடெண்ட் இன்னொரு நாட்டுக்குப் போனா இன்னா பேசுவாரு உங்களுக்குத் தெரியாதா சர்த்தான்... தந்தியே படிக்கிறதில்லை போல இருக்கு...'' என்றபடி திடீரென்று மைக்கின் முன்னால் போய் நின்று பேச ஆரம்பித்து விட்டார். தனக்குத் திடீரென்று இப்படி ஒரு 'சிங்கிள்' சான்ஸ் கிடைத்தது பற்றி டீக்கடையாருக்குப் படு குஷி!

புரொபஸரையும் டீக்கடையாரையும் மூனுலியா நாட்டவர்கள் கட்டாயப்படுத்தி அவர்கள் விருந்தினராய் ஒரு மாதத்துக்கு மேல் அங்கேயே தங்க வைத்து விட்டார்கள்.


மேலே தாய்க் கலத்தில் சுற்றிக் கொண்டிருந்த காமேஷும் லாண்டரி தங்கவேலும் துடித்தார்கள். கீழே போனவர்கள் என்ன ஆனார்கள், ஏதானார்கள் என்பது பற்றி ஒரு விவரமும் தெரியவில்லை. சுற்றிச் சுற்றிப் பார்த்துவிட்டு புரொபஸருக்கும் டீக்கடைக்கும் இரு டம்ளர் ஜலமும் எள்ளும் வார்த்து விட்டு அவர்கள் பூமியைப் பார்க்கத் தங்கள் கலத்தில் வருத்தத்தோடு திரும்பிப் போய் விட்டார்கள்.

'மூனுலியா' நாட்டு விஞ்ஞானிகளைக் கண்டு புரொபஸர் வியந்தார். 'லிடிகுடிப்பிடியோடாமி' எனர்ஜி (நமது அட்டாமிக் எனர்ஜிக்கு முப்பாட்டன்களுக்கும் முப்பது பாட்டன்கள் போன்றது) என்பதன் உதவியால் அவர்கள் எதை எதையெல்லாமோ சாதித்து வைத்திருந்தனர்.

நாம் ஓர் அறையை ஏர் கண்டிஷன் செய்திருப்பது போல் அவர்கள் தங்கள் நாட்டையே ஏர் கண்டிஷன் செய்து வைத்திருந்தார்கள். ஒரு குழாய் மாத்திரையை (கார்ப்ஸூல்) போட்டுக் கொண்டால் இரண்டு ஆண்டுகளுக்குப் பசிக்காது! இப்படிப் பலப்பல அதிசயங்கள்.

கடைசியில் புரொபஸரையும் டீக்கடைக்காரரையும் பிரியாவிடை கொடுத்துத் தங்கள் நாட்டு விண்வெளிக் கப்பலான மூனுலோவில் அனுப்பினார்கள். தங்கள் நாட்டு விண்வெளிவீரர்கள் இருவரையும் துணைக்குப் பூமிக்கு அனுப்பி வைத்தார்கள்.

மூனுலோவின் வேகம் படு பயங்கரமாக இருந்தது. கிளம்பிய 20 மணி நேரத்துக்குள் பூமிக்கு வந்து சேர்ந்து விட்டார்கள். இப்போது இரவு மணி மூன்று இருக்கலாம்.



புரபஸர் என்ன வற்புறுத்தியும் மூனுலியா நாட்டு விண்வெளி வீரர்கள் பூமிக்கு இறங்கி வர மறுத்து விட்டார்கள். புரபஸரையும் டீக்கடையாரையும்பத்திரமாய்ச் சென்னைக்கு அருகே பாராசூட்டில் இறக்கிவிட்டுப் போய் விட்டார்கள்.

பாராசூட் மெல்லமெல்ல இறங்கிக்கொண்டிருந்தது. காற்று வேகமாக அடிக்கவே டீக்கடையார் ஒரு புறமும், புரபஸர் வேறு புறமுமாய்ப் பிரிய, புரபஸர் பாராசூட்டில் ஒரு பெரிய தோட்டத்தின் மத்தியிலிருந்த ஓர் அகன்ற கிணற்றின் மேலே நேரே வந்து இறங்கினார். என்ன கையைக் காலை உதறியும் நேராய்க் கிணற்றுக்குள் இறங்கி விட்டது பாராசூட். கிணற்றில் அப்படி ஒன்றும் தண்ணீர் இல்லை. முழங்கால் அளவுக்குத்தான் இருந்தது. எப்படியோ தட்டுத் தடுமாறிச் சரிவு படிகளில் ஏறி மேலே வந்தார் புரபஸர். உடனே—

காதைப் பிளக்கும் போலீஸ் விசில். திமுதிமுவென்று போலீஸ் பட்டாளம் ஒன்று ஓடிவந்து கிணற்றைச் சூழ்ந்து கொண்டு மேலே ஏறிவரும் புரபஸரைப் பிடித்துக் கொண்டது. அவருக்கு ஒன்றும் புரியவில்லை. தான் டில்லியில் ஒரு புரொபஸர், அம்போலோ 555ல் சந்திரனுக்குப் போய்விட்டுத் திரும்பி வருவதாய்ச் சொன்னதை அவர்களில் எவரும் காதில் போட்டுக் கொள்ளவேயில்லை!


''அ! படா ஷோக்கா ரீல் வுடுறியே வாத்யாரே... வா... டேசன்ல வந்து நம்ப இனிசிபேட்டர் அய்யா கையுல வந்து உன் பீலாவையெல்லாம் உடு. சந்திரனுக்குப் போயிட்டு வராராமே....'' என்று அவரை வலுக் கட்டாயமாய் போலீஸ் ஜீப்பில் ஏற்றி உட்கார வைத்து ஸ்டேஷனுக்குச் சென்று விட்டனர்!

பாவம் புரொபஸர்! தமிழ் நாட்டில் கொடிய தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டு நிலைமை கட்டுக்கடங்காமல் போய் அரசாங்கம் சடாரென்று தமிழ் நாட்டிலிருந்த அத்தனை (வீட்டுக்) கிணறுகளையும் அரசாங்க உடைமையாக்கி. அக்கிணற்றிலிருந்துஇரவில் திருட்டுத்தனமாய்த் தண்ணீர் எடுப்பவர் களைக் கைது செய்யக் கிணற்றுக்குப் பத்து பேராய் போலீஸ் காவல் போட்டிருக்கிறது என்று அவருக்கு எப்படித் தெரியும்?

Kalki Shopping Page

சாலிடேர்
டெலிவிஷன்

Solidaire



இப்போழுது
இறக்குமதி செய்யப்பட்ட
உலகப் புகழ்பெற்ற

பிலிப்ஸ் படத்திரையுடன்
கிடைக்கிறது.

சாலிடேர் ஸூப்பர் டீலர்

வழங்கும் கூடுதல் போனஸ்:-
அடக்க விலைக்கே, சாலிடேர்
FM டியூனர் கிடைக்கும்.

தொலைதூரத்தில் வசிப்பவர்களுக்கென
விசேஷ ஹை-கெய்ன் டெலிவிஷன் செட்டுகள்
ஹை-கெய்ன் அன்டெனாவுடன்
விசேஷ விலையில் கிடைக்கும். (குறிப்பிட்ட
அளவே இவை உள்ளன.)

ஏஜென்ஸீஸ் & ஏஜென்ஸீஸ்
(ஏர் கண்டிஷண்ட்)
18, தெற்கு உஸ்மான் ரோடு, தி.நகர்,
சென்னை-17. போன்: 440004-440725

ஆண்டாண்டு கால உத்திரவாதம் உடையது! அணிவதற்கு தங்கத்தின் தரம் உடையது!

22 காரட் ரூபா மேக்னட் கோல்டு கவரிங் நகைகள் ஒன்றே!



கதம்ப மாளிகை
36, பாண்டி பஜார், தி நகர் - சென்னை - 600017

கேட்லாக் வேண்டுவோர் 75 பைசா தபால்தலையுடன்
விலாசத்தை தெளிவாக எழுதவும்
தபாலில் வரும் ஆர்டர்களுக்கு V.P. மூலம் அனுப்பபடும்.

பரதநாட்டியம் செட் கிடைக்கும்



கமான் பஜ கோவிந்தம்.. பஜ கோவிந்தம்..
கமான் பஜ கோவிந்தம்!
கமான் பஜ கோவிந்தம்
சினிமா ஸ்டாரோட குதிரை!.. போட்டோ என்றதும் போஸ் கொடுத்து நின்னுடுச்சே!
எந்தக் குதிரை மேலே ஆடலாம்?
கஸ்மாலம்!.. தண்ணியிலே ஆடறத்துக்கே சரியா இருக்கு!
மாப்பிள்ளை ஜாக்கி ஆச்சே! அதான் இப்படி வம்பாப் போச்சு!
• என்னப்பாது? குர்தே மேலேயே ஒக்காந்துகினு ஓட்றே?
• இது ரேஸ்லே ஓடின குதிரைங்க.. குர்தே மேலே ஒக்காந்து ஓட்டினா தான் போவும்!

நீ யார்?



சந்திரநாத்

4

சரியாக 1.50க்கு 'மகேஷ் அண்ட் நடேஷ்' ஆபீஸ் முன்னுல் ஒரு டாக்ஸி வந்து நின்றது.

அதிலிருந்து நெட்டையாக, வழுக்கையாக, கோல்ட் பிரேம் கண்ணுடியுடன் ஒரு ஆசாமி இறங்கிக்கொண்டான்.

இறங்கின இடத்துக்கு நேராக, கல்லாவில் உட்கார்ந்திருந்த 'நாரீபவன்' ஹோட்டல் முதலாளி, ''வாங்கோ, நடேஷ் சார் — எப்ப வந்தாப்பலே'' என்று வரவேற்றுர்.

''இதோ இப்பத்தான் வந்துகிட்டே இருக்கேன்'' என்றுன் நடேஷ்.

''தஞ்சாவூர்போயிருந்தீங்க போலிருக்கு.''

''அட, நல்லா துப்பறிஞ்சு வைச்சிருக்கீங்களே!'' — சிரித்தான்.

''மேலே இரண்டு பக்கா டிடெக்டிவ்களை வைச்சுக்கிட்டிருக்கேனே — காத்தாவதுமேலே அடிக்காதா?'' — சிரித்தார் முதலாளி.

''எங்க காத்து உங்களுக்கு அடிச்சிருக்கும். ஆனு உங்க கடை காப்பி மணம் மேலேவரை ஒரு நாள்கூட அடிக்க மாட்டேங்குதே!''

ஹோட்டலார் சிரித்தார். நடேஷ் மேலே ஏறிச் சென்று காலிங் பெல்லை அழுத்தினுன். பதில் இல்லை. ஆகவே பாக்கெட்டிலிருந்து சாவியை எடுத்துக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே போனுன்.

'என்ன இன்னிக்கு யாருமே ஆபீஸ் வரவில்லையா?' — திகைத்தான். சோபாவில் மகேஷின் விரித்த நாவல் கிடந்தது. ஓ மகேஷ் வந்திருக்கிறுன்! வேறே யார் இங்கே அகதா கிறிஸ்டியைப் படிப்பாங்க!

திரும்பினுன். நீலாவின் மேஜைகாலியாகக் கிடந்தது. அவள் 'ஸிப்' பண்ணிவிட்டு போன கண்ணுடி டம்ளரில் தண்ணீர் இருந்தது. ஓ—நீலாவும் வந்திருக்கிறுள்!

மகேஷின் அறைக்குள் போய் அவன் நாற்காலியில் உட்கார்ந்தான். நீலா அங்கே வைத்திருந்த டிபன் பாக்ஸ் கண்ணில் பட்டது. 'அட, நீலாவோட டிபன்பாக்ஸ்!'

திறந்தான். போளியும் வடையும் சிரித்தன. 'அட, போளி, வடை! லக்கி — வெரி லக்கி — டிபன் பாக்ஸை நகர்த்துகையில் அடியிலிருந்த சின்னத் துண்டுக் கடிதம் கண்ணில் பட்டது. எடுத்துப் பார்த்தான்.

'ஓ! பெர்த் டே ஸ்வீட்ஸ் — எத்தனை ஆசையாகக் கொண்டு வந்து வைத்திருக்கிறுள்! இந்த ஸ்டுபிட், மகேஷ் — ஜோராக அவளைக் கிட்ட வைத்துக் கொண்டு ரசித்துத் தின்னுமல் எங்கே போய்விட்டான்—

மேஜை மீது கால்களைத் தூக்கிப்போட்டுக் கொண்டான். ஒரு போளியை எடுத்து விண்டு வாயில் போட்டுக் கொண்டான்.

அதே சமயம்—

அந்தக் கட்டடத்துக்குச் சற்றுத் தூரத்தில் சிவப்பு நிற சர்க்கார் பஸ் ஒன்று வந்து சத்தமின்றி நின்றது.

கையிலிருந்த டிக்கெட்டைக் கசக்கி விட்டெறிந்துவிட்டுக் குஷியாக ஒரு ட்யூனை 'ஹம்' பண்ணிக் கொண்டு பஸ்ஸிலிருந்து இறங்கினுன் மகேஷ்.

வெயில் தாளமுடியவில்லை. ஏதாவது ஜில்லென்று குடிக்க வேண்டும் போலிருந்தது. பக்கத்திலேயே ஒரு 'ஸாஃப்ட் பார்' இருந்தது.

உள்ளே நுழைந்து கோட் பையில் கையை விட்டு, கிடைத்த ரூபாய் நோட்டைக் கவுண்டரில் வீசி டோக்கன் கேட்டபோது—

''என்ன ஸார் வெத்துக் காகிதத்தைப் போடறீங்க'' என்றுன் ஆள்.

திடுக்கிட்டுப் பார்த்தான். ஒரு சின்னக் கடிதம் அது. அதை 'டக்'கென்று எடுத்துக் கொண்டு, இன்னொரு பாக்கெட்டிலிருந்து ரூபாயைக் கொடுத்தான். டோக்கனுடன் உள்ளே போனுன்.

என்ன கடிதாசு? எப்படி வந்தது? — அலட்சியமாகப் பிரித்தான். அடுத்த கணம் திடுக்கிட்டான். அதில் ஒரு அழகான பெண் கையெழுத்தில்—

''அன்பே! நான் உன்னைக் காதலிக்கிறேன். உன்னை நினைந்து உருகிக் கொண்டே இருக்கிறேன். என் குரல் உன் காதில் விழவில்லையா? என் காதல் கீதம் உனக்குக் கேட்கவில்லையா? நான் சிறுகச் சிறுக மடிந்துபோக வேண்டியது தானு—''

யார் எழுதினது? எப்படி என் கோட்டில் வந்தது? எழுத்து எங்கோ பார்த்த மாதிரி கண்ணுமூச்சி ஆடிற்று. யார் நீ?—

நிச்சயமாக மஞ்சு இல்லை. யார் என்னைக் காதலிக்கிறுர்கள் இவ்வளவு 'ஆழமாய்?

அடுத்த வரிகளுக்குப் போனான்.

''என் மரணத்தில் நீ உண்மையைக் காண்பாய். என் உடல் மீது இரு சொட்டுக் கண்ணீர் விட்டாயானால்கூட போதும். என் கல்லறையில் இரண்டு பூக்களையாவது கட்டாயம் வை. நான் உன் அருகிலேயே எப்போதும் இருக்கிறேன். என்னைத் தெரிந்து கொள்ளாதது ஏன்?''

கடிதத்தை மடித்துப் பையில் போட்டுக் கொண்டான். வெயிட்டர் கொண்டு வந்து வைத்த டிரிங்கை உறிஞ்சினான். 'நான் உன் அருகிலேயே இருக்கிறேன்' என்ற வரிகள் காதடியில் திரும்பத் திரும்பப் புலம்பின.— ஏய், யார் நீ?

சட்டென்று ஏதோ நினைவு வந்து டம்ளரை கீழே வைத்துவிட்டு, கடிதத்தை அவசரமாகத் தேடி எடுத்துப் பார்த்தான்.

'நான் உன் அருகிலேயே இருக்கிறேன்' என்ற வரிகளில் அந்த 'ந'வுக்கு முன்னால் ஒரு O வட்டம் இருந்தது. காலண்டரில் பௌர்ணமிக்கு அடையாளமாகப் போடுவார்களே, அந்த மாதிரி வட்டம்.... பௌர்ணமி வட்டம்... ஓ, பௌர்ணமி அன்று நிலா வட்ட வடிவமாக...ஓ, நீலாவா இதை எழுதினது?...

இதுநாள்வரை புரியாத ஒன்று புரிந்தது போலிருந்தது. நீலா விட்ட பெருமூச்சுக்கள்.. சோக முகங்கள்... புருவ உருகல்கள்...



நீலாவை உடனே பார்க்க வேண்டும் போலிருந்தது. 'ஹாய் நீலு' என்று கூவி அவள் இடையைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் எனத் துடித்தான்.

படிகளில் வேகமாக ஏறிப் போனான். 'ஹாய்' என்று கூவிக்கொண்டே கதவைத் திறந்து உள்ளே பிரவேசித்தபோது—

திடுக்கிட்டான். நீலா இல்லை. நடேஷ்தான் சாவகாசமாக உட்கார்ந்து கொண்டு போளியைப் பிட்டு வாயில் போட்டுக் கொண்டிருந்தான்.

''ஹலோ, மகேஷ்!'' கூவினான் நடேஷ்.

''நீயா?'' — திகைத்தான்.

''வா, அப்பா, வா — இன்னும் பத்து நிமிஷம் கழித்து வந்திருந்தாயோ உனக்கு வைத்திருந்த பர்த்டே ஸ்வீட்ஸ் அத்தனையும் என் வயிற்றுக்குள் போயிருக்கும். நல்ல வேளை பாதி மிச்சம் இருக்கிறது.''

''எப்ப வந்தே நடேஷ் — நீலா இல்லையா?''

''நான் வந்து டென் மினிட்ஸ் ஆகிறது! நான் வரும்போது இங்கே யாரும் இல்லை. என்னிடமிருந்த சாவியால் திறந்து கொண்டு உள்ளே வந்தேன் .. என்ன முழிக்கிறே... நான் ஒண்ணும் எல்லாத்தையும் தின்னுடலை. இந்தா—''

''பரவாயில்லே நடேஷ். நான் இப்பத்தான் சென்ட்ரலில் லஞ்ச் பண்ணிவிட்டு, மாமியாரை டாக்சி ஏற்றி அனுப்பிவிட்டு வரேன். பசியே இல்லே.....''

''ரொம்ப நன்றாக இருக்கிறது... முழுக்க நானே தின்றுவிட்டால் நீலா வந்து என்னைக் கொன்று போட்டுவிடுவாள். 'அன்புள்ளவருக்கு' வைத்துவிட்டுப் போயிருக்கிறாளாக்கும் (சிரித்தான்) எத்தனை ஆசையாகக் கொண்டு வந்தாளோ?...''

மகேஷ் சிலிர்த்தான். ஓ, நீல்! அதுதான் 'எப்ப வருவீங்க'ன்னு கேட்டியா? இரண்டு பேரும் சேர்ந்து தின்னலாம்னு ஆசைப்பட்டாயா?

ஒரு விள்ளல் எடுத்து வாயில் போட்டுக் கொண்டான். 'டிபனை உன் மேஜை மீது வைத்துவிட்டுப் போனவள் எங்கே போயிருக்கிறாள் என்று ஒரு வரி எழுதி வைக்க வேண்டாம்? — ஃபூலிஷ் கேர்ள்'' என்றான் நடேஷ்.

''எங்கே போனாலும் எழுதி வைக்காமல் போக மாட்டாளே!'' — மகேஷ்.

''ஒருவேளை பக்கத்தில்தான் எங்கேயாவது போயிருப்பாள் — வந்துவிடுவாள்'' என்றான் நடேஷ்.

''நீ போன காரியம் என்ன ஆச்சு?''— மகேஷ் கேட்டான்.

''நாமம்; பட்டை நாமம். அப்பா இப்போ பைசா பெயராது என்று சொல்லிவிட்டார். பில்டிங் ஓனர் ரொம்ப நெருக்குகிறானே?''

மகேஷ் ஒரு கத்தை நோட்டுக்களை எடுத்துப் போட, நடேஷ் அதை 'ஹய்யா' என்று



வாடகை வீடு

தூங்கும் முன் ஒருத்தருக்கொருத்தர் கதை சொல்லிக்கிறது குழந்தைகளின் வழக்கம். இதில் கௌரியும் (சத்யகலா) ரங்கனும் (விஜயன்) கதை சொல்கிறார்கள். ஆனால் தூங்குவது முதலில் நாம்தான்!

குலம்வழி வந்த விபசாரத் தொழிலில் இருந்து தன்னை மீட்டு, தானே மணந்து, இழித்துப் பேசியவனைக் கொன்று ஜெயிலுக்குப் போன தன் மகாபுருஷனைப் (சுமன்) பற்றிச்சொல்லப் பதிலுக்கு ரங்கனும் சினிமா-மோகம்பிடித்து ஓடிப்போய்ச் சீரழிந்த தன் மனைவி (ரீனா)யின் கதையைச் சொல்கிறான். இணையிழந்த இருவரும் சவுகரியமாய் அண்ணா — தங்கை என்று பாசம் கொள்கிறார்கள். சகோதரஉறவுமுறை, சினிமாவில்சாதாரணமாய் வருவதைப் பொறுத்துக்கொண்டாலும், 'பிறந்ததே உனக்காகத்தான்' என்பதுபோல அவர்கள் தியாகம்செய்யபோட்டியிடுகையில்எங்கோ கீறிவிட்டதுபோல் எரிச்சல்வருகிறது.

இதே துரை டைரக்ஷனில் இதே விஜயன் — சத்யகலா இருவரும் இதே குடிசையில் அழுதது, ஆவேசித்தது என்ற எல்லாவகை ரசங்களையும் 'தனிமரத்'திலேயே பார்த்துச் சகித்தாகிவிட்டது. மறுபடியுமா?

மனோகரின் சிறப்பான ஒளிப் பதிவு படத்துக்குப் பயன்படவில்லை. நான்கு பாடல்களும் நான்கு ரகம். கேட்க முடிகிறது.

பழைய சி.டி. ராஜகாந்தம்தான அசத்துகிறார். 'சின்ன வீட்டு' விவகாரங்களைப் பச்சையாய்ப் பேசுகிறார், கேட்க முடியவில்லை. வசனம் (கதையும்தான்) எழுதிய தூயவன்'பத்தினி' களில் வகைவேறு பிரிக்கிறார்.

விபச்சாரியின் கதை என்பதால் 'சின்ன வீடு' என்பதற்குப் பதிலாக 'வாடகை வீடு' என்று கொஞ்சம் அழகாகப் பெயர் வைத்திருக்கிறார்கள் என்று ஊகிப்பவர்களை நெற்றிப் பொட்டில் அடிக்கிறது, கடைசியில் ''ஆத்மாவுக்கு உடல் என்பது வெறும் வாடகை வீடுதான்'' என்று விழும் கார்ட்.பார்த்தாலே தெரியுது,ரீல்னு, அப்புறம் அதுக்கு லேபிள் வேறயா?

க்ளைமேக்ஸ் நியதிகளின்படி யாராவது சாக வேண்டும் என்பதற்காக முடிவில் ரங்கன் சாகிறான். எதுக்கு? சும்மாதான். —'சிந்து-ஜீவா'

காட்ச் பிடித்துக் கொண்டு ''ஏது இது?'' என்றான்.

''காலேல ஒரு கேஸ் வந்தது. ஒரு பிலிம் ஆசாமி. யாருக்கோ மதுரையில் பெரிய தொகை கொடுக்கக் கொண்டு போகிறார். வழியில் யாராவது அபேஸ் பண்ணிவிடக் கூடாதே என்று பயப்படுகிறார். மப்டியில் கூட வரச் சொல்கிறார்.''

''ப்பூ! இவ்வளவுதானே? போய்விட்டு வந்துவிடு.''

''இதில இன்னொரு பார்ட்டியும் இருக்கிறது. ஒரு பெண்பிள்ளை டெலிபோனில் கூப்பிட்டு, கூடப் போகாதே என்கிறாள். அவன் தன் மனைவியைக் கொலை செய்துவிட்டு உன்னோடு ரயிலில் இருந்ததாக 'ப்ரூவ்' பண்ணப் போகிறான்' என்கிறாள்.''

''கவலைப்படாதே. அவளை நான் பார்த்துக் கொள்கிறேன்.'' என்றான் நடேஷ். பணத்தை எடுத்து மேஜை டிராயரில் வைத்துப் பூட்டினான்.

'ட்ரிங்....ட்ரிங்....'

''அவளாகத்தான் இருக்கும்.'' கூவினான் நடேஷ். மகேஷ் போனை எடுத்தான்.

''மிஸ்டர் மகேஷ்?''

''எஸ், மகேஷ் ஹியர்.''

''மிஸ்டர், உன் செகரட்டரி பொண்ணு இனி திரும்பி—வரமாட்டா. அவளைத் தேட வேண்டாம்'' என்றது குரல். ஆண் குரல்தான்.

மகேஷ் திடுக்கிட்டான். ''என்ன சொல்றே''—பதறினான்.

''புரியலே? தமிழ்லதானே சொன்னேன். லட்டு மாதிரி ஒரு குட்டியை செகரட்டரியா வச்சுக்கிட்டிருந்தியே — அவ இனிமே உன் ஆபீசுக்குத் திரும்பி வரமாட்டாள், என்கிறேன் — புரியலே?''

''ஏன் வரமாட்டாள்?'' — ஆத்திரத்துடன் கேட்டான் மகேஷ்.

''நாளை மத்தியானம் இங்கே இருந்து ஒரு மூடின 'டிரக்' புறப்படுகிறது. அதிலே அவளைக் கொண்டு போகப் போறாங்க.''

''எதுக்கு, எங்கே?''

''எதுக்கா? ஒரு கன்னிப் பொண்ணை எதுக்காகக் கொண்டு போவாங்க? — பலி கொடுக்கத்தான்—'' குரல்காரன் ஹாஹ்ஹா' என்று சிரித்தான். ''புரிகிறதா மிஸ்டர். வடக்கே ரொம்ப தூரத்திலே ஒரு ஊரிலே ஒரு கோயில் கோபுரம் இடிஞ்சு இடிஞ்சு விழுகுதாம். கன்னி பலி கொடுத்தா நின்னுடும்னு சோசியர் சொல்றாராம். உன் செகரட்டரியை அதுக்காகப் பிடிச்சிருக்காங்க.''

''நீலா'' என்று கத்தினான் மகேஷ். பிறகு, ''மாட்டேன். அவளை அவர்கள் கொண்டு செல்ல விடமாட்டேன்... நிச்சயமாக மாட்டேன்'' என்றான்.

''உன்னாலே ஒரு துரும்பைக் கூட அசைக்க முடியாது பிரதர்... உன் பேரழகி இப்போது மயக்க மாத்திரை தின்று ஜோராக ஒரு பெட்டிக்குள்ளே தூங்கிக் கொண்டிருக்கா. அவள் இருக்கும் இடத்தைச் சுற்றி அரை மைல் விஸ்தீரணத்துக்கு ஈ காக்கை கிடையாது. காலைவரை தூங்குவாள். காலையில் ஒரு டிரக் வரும். வந்து அவளைத் தூக்கிப் போட்டுக் கொண்டு போய்விடும்.''

''நீ யார்? உனக்கு இது எப்படித் தெரியும்?''

''அது உனக்கு அவசியமில்லை.''

''எங்கே இருந்து பேசுகிறாய்?''

''நான் என்ன முட்டாளா — அதைச் சொல்ல?—'' சிரித்தான். அந்த ஆள். ''நீதான் பெரிய ஷெர்லாக் ஹோம்ஸ் ஆச்சே கண்டு பிடியேன்— பார்க்கலாம்!''


உங்கள் கேசம் அடர்த்தியின்றி
சக்தியின்றி இருக்கிறதா? உங்கள்
கேசத்தைப் பக்குவப்படுத்தி அழகையும்
ஆரோக்கியத்தையும் அளிக்கிறது...
செழுமையான புரதப்போஷாக்கு நிறைந்த
ஹேலோ எக் ஷாம்பூ
ஊட்டம் குறைந்த நிலையில் உங்கள் கேசம் அடர்த்தியின்றியும், சக்தியின்றியும், ஆரோக்கியமின்றியும் காணப்படுகிறது.
பட்டுப்போன்ற, பொன் நிறமுள்ள வழவழப்பான ஹேலோ எக் ஷாம்பூ செழுமையான புரத ஊட்டம் நிறைந்த உத்தியின் மூலம் உங்கள் கேசத்தை சீராகப் படியவைத்து அதற்குத் தேவையான எல்லா ஊட்டங்களையும் அளிக்கிறது. உங்கள் கேசம் அழகாக ஆரோக்கியமாக, அடர்த்தியாகத் திகழ்கிறது.
ஹேலோ எக் ஷாம்பூவின் செழுமையான நுரைவளம் உங்கள் கேசத்தில் புகுந்து அதை பொலிவுடனும் தூய்மையான பளபளப்புடனும் திகழச் செய்கிறது.
ஹேலோ எக் ஷாம்பூ...
அழகிய அடர்த்தியான ஆரோக்கியமான கேசத்திற்கு
Halo
SHAMPOO

''நிச்சயம் கண்டு பிடிக்கத்தான் போகிறேன். யூ ராஸ்கல்!''

''ஒரு 'க்ளு' கொடுக்கட்டுமா பையா—'' ஆள் கேட்டான், எகத்தாளமாக. ''அவளைக் கூட்டிக்கிட்டுப் போயிருக்கிறவ நீலப் புடவை கட்டியிருக்கிறு. முகத்திலே அம்மைத் தழும்பு இருக்கும் வடநாட்டு முகம். மராட்டி பேசுவாள்.''

''எப்படி அழைத்துப் போனுள்?''

''ரொம்ப சுலபமாக.'' சிரித்தான். ''நீ எங்கே இருந்தோ பேசின மாதிரி நான்தான் பேசினேன். அவளை உடனே புறப்பட்டு ஒரு குறிப்பிட்ட இடத்துக்கு வரச் சொன்னேன். அங்கே அந்த மராட்டிக்காரியிடம் ஒப்படைத்து விட்டுச் சுளையாக இரண்டாயிரம் வாங்கிக்கொண்டு வந்து விட்டேன்.''

''நான் நாலாயிரம் ரூபாய் தருகிறேன். அவள் இருக்குமிடத்தைச் சொல்லு.''

''ஐயையோ! நான் மாட்டேன். எனக்கு இரண்டாயிரமே போதும். அப்புறம் அவளைக் கொண்டுவரச் சொன்ன காளி மாதா கோபித்துக்கொள்வாள்.''

''மிஸ்டர்!'' — கத்தினுன் மகேஷ்.

''சீக்கிரமாகச் சொல். எனக்கு நேரமாகிறது.''

''இவ்வளவு செய்த நீ எதற்காக என்னிடமே அதைச் சொல்கிருய்?''

''அந்தப் பெண்ணை நான் ஆசைப் பட்டேன் மிஸ்டர். உன் பப்ளிமாஸ் மூஞ்சிதான் ஜோராக இருக்கிறதென்று அவள் சொல்லி விட்டாள். உன் அழகான 'லவ்'விக்கு எப்படிப்பட்ட தண்டனை கிடைக்கப் போகிறது உனக்குத் தெரிய வேண்டாமா... அதற்காகத்தான்... இன்றைக்கு நாலாம் நாள் வெள்ளிக் கிழமை, காலை நாலு மணிக்கு அவளை அந்தக் கிராமக் கோயிலில் வெட்டிப் பலிகொடுத்து விடுவார்கள்.''

'டக்'கென்று வைத்து விட்டுப் போய் விட்டான்.

மகேஷ் இடிந்து போய் உட்கார்ந்துவிட்டான். அவன் கண்களிலிருந்து நீர் ஆறுகப் பெருகியது. ''நீலா... நீலா...'' என்று அரற்றினுன். (தொடரும்.



அருள்வாக்கு

தருமங்களில் பாகுபாடு

சமுதாய வாழ்வுக்குப் பல காரியங்கள் நடந்தாக வேண்டியிருக்கிறது. புத்தியினுல் செய்கிற காரியங்கள், சரீரத்தால் செய்கிற காரியங்கள் இவற்றில் பல பல தினுசுகள். இத்தனையும் ஜன சமூகம் சுபிட்சமாக இருப்பதற்கு அவசியமாக இருக்கின்றன. இதில் ஒரு தொழில் உயர்வு, ஒரு தொழில் தாழ்வு என்று நினைத்தால் அது சுத்த தப்பு.

நம் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் அரிசி வேண்டும், உப்பு வேண்டும், துணி வேண்டும், புத்தகம் வேண்டும், இன்னும் எத்தனையோ வேண்டும். — அதற்காக நாம் ஒவ்வொருவரும் தானியங்கள் பயிரிட்டுக் கொண்டும் உப்புக் காய்ச்சிக் கொண்டும், துணி நெய்து கொண்டும் இருக்க முடியுமா? உழுகிறவன் தனக்காக மட்டுமில்லாமல் எல்லாருக்காகவும் விளைவிக்கிறுன். துணி நெய்கிறவன் எல்லாருக்காகவும் நெய்கிறுன். இப்படியே சமுதாயம் முழுவதற்குமாகச் சிலர் வியாபாரம் செய்கிறுர்கள், சிலர் யுத்தம் செய்கிறுர்கள். இப்படியே உலகம் முழுவதற்கும் ஆத்ம க்ஷேமம் ஏற்படச் சிலர் தியானமும் பூஜையும் யாகமும் செய்து கொண்டு, லோகோபகாரமான சாஸ்திரங்களை ரக்ஷித்து வரவேண்டும். இப்படி பரஸ்பர பிரயோஜனத்துடன் ஜனங்கள் பல தொழில்களைப் பங்கீடு செய்து கொண்டு சௌஜன்யமாக வாழ நம் தர்ம சாஸ்திரங்கள் அழகாக வழி வகுத்திருக்கின்றன.

எந்தத் தொழிலானுலும் சரி, அதைப் பரமேசுவரன் விதித்த ஆக்ஞையாக 'லோக க்ஷேமார்த்தம் செய்கிறேன்' என்று உணர்ந்து செய்தால் அதுவே ஒருத்தனுக்கு ஆத்ம க்ஷேமார்த்தமாகவும் ஆகிறது.

ஒவ்வொரு காரியத்தில் ஈடுபட்டுள்ள ஜீவனும் கடைத்தேறுவதற்கு அநுகூலமாக வெவ்வேறு அநுஷ்டானங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. உடல் வருந்த உழைக்கிறவனை உபவாசம் இரு என்றுல் அவனுல் முடியுமா? புத்தியினுல் காரியங்களைச் செய்கிறவர்களுக்கு சரீர போஷணம் அவ்வளவு அவசியமில்லை. அவர்கள் சரீராபிமானம் நீங்கவே அதிக அநுஷ்டானங்கள் வைத்திருக்கிறது. காரியங்களைப் பொறுத்தே அநுஷ்டானங்கள் இருக்கின்றன என்று புரிந்து கொண்டால் சண்டைக்கு இடமே இல்லை.

—ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்

அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்

திருத்தணிகை



ஆடி பரணி — 25-7-81

ஆடி கிருத்திகை — 26-7-81

தெப்பம்

26—7—1981 முதல் 28—7—1981 வரை

வை. சுப்பையன்,
உதவி ஆணையர் / நிருவாக அதிகாரி

பி. ஜோதி,
அறங்காவலர் குழுத்தலைவர்

அறங்காவலர்கள்

1. எம். முனுசாமி, 2. எஸ். சண்முகம், 3. சி. இராசகோபால், 4. கே. கிருஷ்ணன்



நீயார்?

சந்திரநாத்

5

“மகேஷ்! வாட் ஹாப்பண்ட் டு யூ?’’— நடேஷ் அருகில் வந்து தோளைப் பிடித்து உலுக்க, பிரக்ஞை பெற்று—

‘‘நம்ப நீலா பெரிய ஆபத்திலே மாட்டிக் கிட்டிருக்கா நடேஷ்’’ என்று ஆரம்பித்து எல்லாவற்றையும் விவரமாகச் சொன்னான் மகேஷ்.

‘‘இவ்வளவுதானே —ப்பூ’’ என்று ஊதினான் நடேஷ். ‘‘இதற்கா பயந்துவிட்டாய்? கவலைப்படாதே நீலாவுக்கு ஒன்றும் நேராது’’ என்றான்.

‘‘எவ்வளவு ‘கூலாக’ச் சொல்கிறாய் நடேஷ்! நாளை இந்நேரம் அவள் மெட்ராஸ் எல்லையைக் கடந்து மூடு வண்டியில் போய்க் கொண்டிருப்பாள் நடேஷ்’’ — ஆத்திரத்துடன் கூறினான் மகேஷ்.

‘‘நான் என் நண்பரான ஐ. ஜி.யைப் பார்த்து, மெட்ராஸிலேருந்து இரண்டு நாட்களுக்கு எல்லா ரூட்லேயும் செக்கிங் போடச் சொல்லிவிட மாட்டேனா?’’ என்றான் நடேஷ்.

‘‘அவர்கள் அவளை இங்கேயே கொன்றுவிட்டால்?’’

‘‘மாட்டார்கள். எந்த ஆசாமியும் அனாவசியமாகத் தன் கையைக் கறையாக்கிக் கொள்ளவே மாட்டான்’’ — நடேஷ் எழுந்து சென்று ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு உலாவ ஆரம்பித்தான்.

‘‘இதோ பார் மகேஷ்! நாம் துப்பறிபவர்கள். உணர்ச்சி வசப்பட்டு எதையும் பார்க்கக் கூடாது. எதையும் அலசி ஆராய்ந்து பார்க்க வேண்டும். இப்போது பார். ஒரு பெண்ணைக் கடத்திக் கொண்டு போய் விற்கிறவர்கள், அந்தக் காரியம் முடியும் முன், அவளுடைய உறவினர்களுக்கோ நண்பர்களுக்கோ, போலீசுக்கோ தெரிவிப்பார்களா? தெரிவித்தால் அவர்களுடைய காரியம் கெட்டுவிடாதா?’’

‘‘இவன்தான் காரணத்தைச் சொன்னானே?’’

‘‘நிச்சயமாக அது நிஜமான காரணமாக இருக்க முடியாது. அவன் அவளை உண்மையில் காதலித்தவனாக இருந்து, அவளையும் உன்னையும் பழி வாங்க நினைத்தால் எப்பொழுது அவளைப் பற்றி உன்னிடம் சொல்வான் தெரியுமா? அவளைக் காளி மாதாவுக்குப் பலி கொடுத்து விட்டதாகச் செய்தி வந்த பிறகுதான் சொல்வான். அதற்கு முன் சொல்லவே மாட்டான்.’’

மகேஷ் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான்.

‘‘இந்த ஆள் முட்டாளாக இருக்க மாட்டான். அதுவும் நிச்சயம். இவன் நீலாவைக்



கடத்திப் போய் யாருக்காவது விற்றிருக்கலாம். இரண்டாயிரம் வாங்கி யிருக்கலாம். ஆனால் ஒன்று தெரிகிறது. நீலாவை வாங்கினவர்களையும் இவனுக்குப் பிடிக்கவில்லை. அவர்களையும் வஞ்சம் தீர்த்துக் கொள்ள விரும்புகிறான். அதற்கும் காரணம் இருக்கும். அவர்கள் இவனை ஏமாற்றி யிருக்கலாம். மூவாயிரம் தருவதாகச் சொல்லி இரண்டாயிரம்தான் தந்திருக்கலாம்.''

''நான் நாலாயிரம் தருவதாகச் சொன்னேனே?''

''அதை அவன் நம்பவில்லை. உன்னை நெருங்குவது அபாயம் என்று பயந்திருக்கலாம். நாலாயிரம் தருவதாகக் கூறி அவனை வரவழைத்து நீ அவனைப் போலீசில் பிடித்துக் கொடுத்து விட்டால்? — ஆகவே கிடைத்த இரண்டாயிரமே போதும் என்று நினைத்திருக்கலாம். அதே சமயம் உன்னைக் கொண்டு நீலாவை வாங்கினவர்களைத் தண்டிக்கவும் விரும்பி யிருக்கலாம்.''

மகேஷ் — ''நீலாவை வாங்கிய பெண்ணின் அடையாளங்களை யெல்லாம் சொன்னானே!''

''உன்னைத் திசை திருப்புவதற்காக இருந்தால் அவை பொய்யாக இருக்கலாம். தண்டிக்கும் நோக்கம் உடையதாக இருந்தால் உண்மையாக இருக்கும். ஆனால் தண்டிக்கும் நோக்கம் உடையவனாக இருந்தால் அந்த மராட்டிக்காரியின் இருப்பிடத்தையும் சொல்லி யிருக்க வேண்டுமே'' என்றான் நடேஷ்.

''அது இவன் இருப்பிடமாகவே இருந்திருந்தால்...''

''அதுவும் நிச்சயமாக இருக்காது. இந்த மாதிரி ஆசாமிகள் எங்கேயாவது குச்சுக்களில்தான் குடியிருப்பார்கள். இவர்கள்



வெறும் புரோக்கர்கள். இவர்களுக்கு வீடு வாசல், குடும்பம் எல்லாம் இருக்கும். ஆனால், தொழில் அட்ரஸ் இருக்காது. பார்ட்டியை எங்கேயாவது ஒரு வீட்டை வாடகைக்குப் பிடித்து அங்கேதான் தங்க வைப்பார்கள். பார்ட்டி தங்குகிற வீடு அநேகமாக ஊருக்கு வெளியேதான் இருக்கும். சரக்கைச் சுலபமாகக் கொண்டு வர, கொண்டு போக வசதியாக இருக்கும். ஆகவே நீலாவை அவர்கள் வைத்திருக்கும் இடம் ஊருக்கு வெளியேதான் இருக்க வேண்டும்.''

''இப்போது நாம் என்ன செய்வது?''

''நீ சொல்லு. என்ன செய்யலாம்?''

''நாம் உடனே நீலாவைத் தேடத் தொடங்க வேண்டியதுதான்.''

''இவ்வளவு பெரிய ஸிட்டியில் எத்தனையோ காலனிகள் பரவிக் கிடக்கின்றனவே. இதை முழுக்கத் தேடி முடிக்க முப்பது நாள் ஆகிவிடாதா?''

''எத்தனை நாள் ஆனாலும் தேட வேண்டியதுதான்.''

''அப்படியானால் உன் மதுரைப் பயணம்?''

''கான்சல் பண்ணிவிட வேண்டியதுதான். நீலாவை ஆபத்தில் விட்டு விட்டு நான்எப்படி நடேஷ் வெளியூர் போகிறது?''

''பைத்தியக்காரா! இவ்வளவுதானா உன் புத்திசாலித்தனம்?'' — நடேஷ் சிரித்தான். ''ரொம்ப சுலபமாக எதிரியின் வலையில் விழுந்து விட்டாயே!''

''என்ன நடேஷ் சொல்றே?''

''நீலாவைக் கடத்திக் கொண்டு போய் மறைத்திருப்பது கூட, நீ அவளைத் தேடிக் கொண்டு சென்னையிலேயே இருந்து விட வேண்டும். — மதுரைக்குப் போகாமலிருந்து விடுவாய் என்று எதிர்பார்த்துச் செய்ததாக ஏன் இருக்கக் கூடாது?''

மகேஷ் திடுக்கிட்டான்.

''ஓ— அப்படியா?''

''இதோ பார் — நீலாவுக்கு எதிரிகள் யாருமே கிடையாது. தனக்கு ஒரு அத்தை மகன் இருப்பதாக அவள் சொன்னதே கிடையாது. அப்படி ஒருவன் இருந்திருந்து, அவனைக் காதலித்திருந்தால் இத்தனை மாசங்களில் ஒரு தடவையாவது அவளிடம் ஆபீசுக்குப் போன் செய்து அவளிடம் பேசியிருப்பான். அப்படி ஒரு 'கால்' கூட வந்தது இல்லை. போன் செய்யாமல், வெளியில் தொந்தரவு கொடுத்து வந்திருந்தாலும், அதன் எதிரொலி கட்டாயம் நீலாவிடம் தென்பட்டிருக்கும். மேலும் நிஜமான அத்தை மகன், என்னதான் கோபம் இருந்தாலும் தன் ,உறவினளையே நரபலி கொடுக்குமளவுக்குப் போக மாட்டான்.''

''பின்னே இந்த ஆள் யார்?''.

''எனக்குத் தெரியாது. யாராக இருந்தாலும் நமக்கு ஒன்றுதான். அத்தைமகன், மாமன் மகள், காதல் ஏமாற்றம், பழிக்குப் பழி என்பதெல்லாம் வெறும் கதை. நம்மைத் திசை திருப்பி விடச் செய்யும் முயற்சி. இந்த உப கதை, கமல் என்கிற பெருங் கதையின் கிளைக் கதையாகக் கூட இருக்கலாம். ஏன், கமல்நாத்துடன் நீ மதுரைக்குப் போகக் கூடாது என்று விரும்புகிறவரின் நடவடிக்கையாகவும் இருக்கலாம். என் ஊகம் சரியானால் நீலா பற்றி நீ துளிக் கூடக் கவலைப்பட வேண்டாம். அவளை மதுரை ரயில் கிளம்பும்வரை வைத்திருந்து பார்த்துவிட்டு விட்டு விடுவார்கள். முனை முறியாமல் அவள் திரும்பிவிடுவாள்.''

''நடேஷ்... என்ன இருந்தாலும் நீ சீனியர்!''

''புகழாதே அப்பா.''

''உனக்கு மூளை ஜாஸ்திதான்.''

''பிரயோஜனம் இல்லை அப்பா. உலகம் ஒப்புக்கொள்ளவில்லை, அப்பா — 'நடேஷ் பி. ஏ.' என்கிறதப்பா...'' — சிரித்தான். பிறகு, ''நீயும் கெட்டிக்காரன்தான். கொஞ்சம் அவசரக் குடுக்கை. அதோடு நீலா மீது உள்ள ஆசையும் சேர்ந்து கொண்டு 'கண்ணை' மறைத்து விட்டது. அவ்வளவுதான்'' என்றான்.

''எனக்கொன்றும் நீலாமீது ஆசையில்லை'' என்றான் மகேஷ்.

''பையா மறைக்காதே! ஐயாவின் துப்பறியும் கண்களுக்கு எதுவுமே தப்பிவிட முடியாது.... இந்தப் போளி சொல்கிறதே கதை கதையாய்...''

மகேஷ் நீலாவை இப்போது முழுமையாக உணர்ந்தான்.

''சும்மா வேஷம் போடாதே. கல்யாணம் ஆகிவிட்ட கிரகஸ்தன் என்கிற போலிப் போர்வையிலே அழகான கிளியைக்கோட்டை விட்டு விடாதே. என்ஜாய் மைபாய். ஆனைப் பட்ட முருகனே 'டபிள்ஸ்' வைத்துக் கொண்டிருக்கிறானே'' — சிரித்தான்.

மகேஷ் உருகி, ''இத்தனை நாளும் நான் நீலாவின் மனசைத் தெரிந்து கொள்ளாத முட்டாளாக இருந்து விட்டேன், நடேஷ்'' என்றான்.

''அதற்காக இப்போது அவளைத் தேடிக் கொண்டு பட்டணத்திலேயே ''டேரா''ப் போட்டு விடாதே. ஐந்நூறு ரூபாயையும் திருப்பிக் கொடுக்க வேண்டி யிருக்கும். நான் பார்த்துக்கொள்கிறேன், அவளை. நாளை மறுநாள் நீ இங்கே மதுரையிலிருந்து வரும்போது இன்னொரு செட் போளியுடன் உன்னை வரவேற்கும்படி செய்கிறேன், போதுமா?''

''அப்ப — நான் கிளம்புகிறேன்'' — எழுந்தான் மகேஷ்.

''கவலை இல்லாமல் போய் வா. கமல் வீட்டுக்கு மாறு வேஷத்தில் போ. நீ சென்னையில் இருப்பதாகவே அவர்கள் எண்ணிக் கொண்டிருக்கட்டும்.யாராவது உனக்கு இங்கு

ஆபீஸ் காலண்டர் முதல் தேதி காட்ட லஞ்ச் டயத்தில்

அவன் : ''உன் டிபன் பாக்ஸின் மேல் தட்டில் சி. ஹோ. ஊ. சு. ச. ப. நே. வீ. வ. சேனு ஒரு துண்டுச் சீட்டு இருக்கே என்னடா அர்த்தம் அதுக்கு?''

இவன் : ''சினிமா ஹோட்டல்னு ஊரைச்சுற்றுமல் சம்பளப் பணத்துடன் நேரே வீடு வந்து சேரவும்னு என் மனைவி சுருக்கமா எழுதி அனுப்பிச்சிருக்கா!'' — உ. ராஜாஜி

போன் செய்தால் உன்னைப் போலவே பேசி நான் சமாளிக்கிறேன். — ஓ.கே?''

''ஓ.கே.'' கோட்டைக் கழற்றி ஆணியில் மாட்டிவிட்டுப் பின் பக்கத்து டிரஸிங் அறைக்குப் போனுன். அடுத்த எட்டாவது நிமிஷம் அந்த அறையிலிருந்து ஒரு 'ஸேட்' வேஷத்தில் வெளிப்பட்டான்.

''நடேஷ்ஜீ! அச்சீ ஹை?'' என்ருன்.

''பகுத் அச்சா ஹை'' என்ற நடேஷ், ''தும் நாம் கியாஜி?'' என்ருன்.

''ஹேமந்த் லால் — ஃபேமஸ் ஃபிலிம் டிஸ்ட்ரிபியூட்டர்.''

''அச்சா....அச்சா...ப்ரொடியூஸர்களிடம் எப்போதும் ஒரு கைத்துப்பாக்கியும் இருக்க வேண்டும்.... உன் துப்பாக்கி—''

''எடுத்துக் கொண்டு விட்டேன் நடேஷ்.''

''கமல்நாத் வீட்டிலேயே கூட அவருடைய எதிரிகள் இருக்கலாம். அங்கே இருக்கிற நேரத்தைக் கெட்டிக்காரத்தனமாகப் பயன்படுத்திக்கொள். கமல்நாத்துக்கு நெருக்கமாக இருக்கிற ஒவ்வொருவர் பற்றியும் தகவல் சேகரி. அநேகமாக செக்ரட்டரி, மானேஜர், அல்லது பார்ட்னர் நிச்சயமாக இருப்பார். அவர்களை 'வர்ட்ச்' பண்ணினுலே போதும், நிறையத் தகவல்கள் கிடைத்து விடும்.''

''விசாரிக்கிறேன்.''

''முக்கியமாக கமல்நாத், அல்லது அவருடன் நெருங்கிப் பழகுகிற ஆளுக்கு இந்த நகரத்தில் வேறு எங்கெல்லாம் வீடுகள் இருக்கின்றன என்று தெரிந்துகொள். நீலா அந்த வீடுகளில் ஒன்றில் இருக்கலாம். குறிப்பாக ஏதாவது தகவல் கிடைத்தால் உடனே எனக்கு போன் பண்ணு. நான் உடனே போய் 'ஸர்ச்' பண்ணுகிறேன்.''

''கமல்நாத்துக்கு ஒரு மனைவி இருக்கிருளா என்றும் நான் பார்க்க வேண்டும்.''

''பேஷாகப் பார். அழகாக, சொத்தைப் பல்காரியாக இல்லாமல் இருந்தால், அவளுக்கு ஒரு முத்தம் கூடக் கொடுத்துவிட்டு வா; எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனுல் அதற்கு அவசியமே இல்லை. அப்படி ஒருத்தி இருக்க மாட்டாள். நீ வேணுமானுல் பாரேன்'' என்ருன் நடேஷ்.

''அவளைக் கமல்நாத் இன்றிரவு கொலை செய்யப் போவதாக போனில் உண்மை விளம்பி சொன்னுளே!''

''போய்ப் பார். கமல் வீட்டில் அவருக்கு அப்படி ஒரு மனைவி இருந்தால் அதன் பின் அது பற்றிப் பேசுவோம்'' என்ருன் நடேஷ்.

''பை-பை'' — மகேஷ் கீழே இறங்கிச் சென்ருன். (தொடரும்)

மயில்



ரியலிஸப் போர்வைக்குள் பதுங்க முயலும் பாந்தமில்லாக் கதை. ரோடு போடும் தொழிலாளர்களின் வாழ்க்கைப் பின்னணியில் கதை சொல்லப்படுகிறது. சோரம் போன அம்மாவுக்குத் திருமணம் செய்து வைக்கப் பாடுபடும் புதுமைப் பெண், கதாநாயகி மயில். அம்மாவின் குழந்தையைத் தன் குழந்தை என்று பகன்று பழி ஏற்று, (ஆமாம், இது தேவைதானு?) கடைசியில் ஏதோ செய்யப் போவதாகப் பயமுறுத்துகிருள். திட்டம் தீட்டுகிருள். கடைசியில் எல்லாம் பொல பொல.

ஒவ்வொரு கூலிப் பெண்ணையும் தடவி, தடவி சாலைத் தொழிலாளர்களின் வாழ்க்கையைக் கொச்சைப் படுத்தும் மேஸ்திரிதேங்காய் ஓவர். ரோடு என்ஜின் டிரைவரும் எப்போதும் தண்ணீரில் இருப்பவருமான சத்தாரிடம் சத்துள்ளது.

கேமராவுக்கு	ரூ.	0—30
நடிப்புக்கு	ரூ.	0—15
இசைக்கு	ரூ.	0—10
டைரக்ஷனுக்கு	ரூ.	0—25
ஆக மொத்தம்	ரூ.	0—80
கொடுப்பது	ரூ.	2—90
கிடைப்பது	ரூ.	0—80
தண்டம்	ரூ.	2—10

ரூபா மதிப்பை உயர்த்திக்கொள்ள அரும் பாடு பட்டிருக்கிருர். பாஷையும்மேக்கப்பும் அடிக்கடி மாறிவிடுகிறதே Why? பால்கார வேடம் ராஜேஷுக்குக் கன கச்சிதப் பொருத்தம்.

படத்தில் அயராமல் உழைப்பது ரங்காவின் கேமராதான். 'பசி' மயக்கத்தில் டைரக்டர் துரை ரோடு போட்டிருக்கிருர். தார் காயாமல் இழுக்கிறது.

- நளினி சாஸ்திரி

கல்லில் மலர்ந்த காவியம்: 2

தாடிக் கொம்பு

திண்டுக்கல்லுக்கு மிக அருகில் உள்ள இடம் தாடிக்கொம்பு. அங்குள்ள பெருமாள் கோயிலில் உள்ள உன்னதமான சிற்பக் களஞ்சியம், ஒரு காலத்தில் உன்னத நிலையில் இருந்ததை நினைவூட்டுகிறது. சிற்ப சாஸ்திர விற்பன்னர்களே வியக்கும் வண்ணம் மேன்மையுடன் தத்ரூபமாகக் காணப்படுகின்றது. அங்குள்ள ரதி மன்மதன் சிற்பங்கள் அற்புதமான படைப்புக்கள்.


ரதி தேவி:

இவள் மன்மதனின் தேவி. ரதி என்ற சொல்லுக்கு ஆசையை உண்டாக்குபவள் என்பது பொருள். மன்மதனை ஊக்குவிப்பவள் இவளே! இவள் வாகனம் அன்னம்; இவள் இடக்கையில் உள்ளது கரும்பு வில். அவ் வில்லின்நாண் மலர்களால் ஆனது. பாணப் பிரயோகம் செய்த நிலையில் வலக்கரம் விளங்குகிறது. அது என்ன பாணம் என்பது பார்ப்பவர்களின் கற்பனைக்கு உரியது என்று சிற்பி கருதினான் போலும்! அதோடு அஸ்திரம் எங்கே பட்டது என்று தேடுகின்றன ரதியின் கண்கள்!




விளம்பர 'விட்' (மேலும் சில!)

✡ கமல், ஜெயந்தி ✡











நீயா?

சந்திரநாத்

''மகேஷ் இருக்கிறாரா?''

''எஸ். மகேஷ்தான் பேசறேன். என்ன விஷயம்?''

''ஜஸ்ட் எ மினிட்... யாரோ வர்றாங்க... டெலிபோனிலேயே இருங்க'' — எதிர் முனை மௌனத்தில் ஆழ்ந்தது. யாரோ 'டக்டக்' கென்று பூட்ஸால் நடக்கும் ஓசை கேட்டது. ஒரு நாய் குரைத்தது.

வினாடிகளை வினாடிகள் கடித்தன. திடீரென்று மீண்டும் போனில் தோன்றி ''ஹலோ'' என்றாள்.

''எஸ், மேடம், சொல்லுங்கள்.''



6

மகேஷ் போன பத்தாவது நிமிஷம், அவனுடைய அறையில் டெலிபோன் கூப்பிட்டது. நடேஷ் ரிசீவரை எடுத்து ''ஹலோ'' என்றான்.

''யார் பேசுகிறது?'' என்று ஒரு பெண் குரல் கேட்டது.

''யார் வேண்டும் உங்களுக்கு?''

''மிஸ்டர், நான் பெரிய ஆபத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறேன். நீங்கள்தான் என்னைக் காப்பாற்ற வேண்டும்.''

''நீங்கள் யார்? என்ன ஆபத்து உங்களுக்கு?''

''நான் ஒரு பெரிய பிலிம் டிஸ்டிரிப்யூட்டரின் மனைவி. நேரில்தான் எல்லாமே சொல்ல முடியும். வரட்டுமா?''

''பேஷாக வாருங்கள். உங்களைப் போன்றவர்களுக்கு உதவி பண்ணத்தானே நாங்கள் காத்துக் கொண்டிருக்கிறோம்.''

''ஸ்டேட் பாங்க் ரோடில்தானே இருக்கிறது உங்கள் ஆபீஸ்?''

''ஆமாம். 388 நம்பர். கீழே ஒரு காப்பி ஹோட்டல் இருக்கும். மேலே 'மகேஷ் அண்ட் நடேஷ்' போர்டு இருக்கும். கான்சர் — அஸ்டாராலஜி மாகஸின்கள்ளே, ராசிபலன் பகுதியிலே பார்த்திருக்கீங்களா — கான்ஸர் — நண்டு— அதுதான் எங்கள் எம்ப்ளம். போர்டுலே அதைப் பார்க்கலாம்.''

''தாங்க்ஸ். இதோ அரை மணியில் வருகிறேன். எல்லாம் நேரில் சொல்றேன். பத்து நிமிஷத்திலே நான் திரும்பிவிட வேண்டும். பர்தாவில் வருவேன்.''

''கோஷாவா, முஸ்லிமா — பெயர்?''



''முஸ்லிம் இல்லே. அடையாளம் காட்ட விரும்பவில்லை. என்பெயர் நிரஞ்சனி.''

''வெல்கம் மிஸ் நிரஞ்சனி.''

போனை வைத்துவிட்டு எழுந்து கோட் பாக்கெட்டுக்குள் கையை விட்டுக் கொண்டு ஜன்னலடியில் போய் நின்றான். இது யார் புது ஆசாமி? இது புது கேஸா? அல்லது பழைய கேஸின் தொடர்ச்சியா? டிஸ்ட்ரிபியூட்டர் மனைவி என்றாளே கமலின் மனைவி யாக இருக்குமோ? அல்லது கமலின் சம்சாரம் என்று சொல்லிக் கொண்டு எவளாவது வருகிறாளோ — ஏன் வருகிறாள்?

மீண்டும் போன் கூப்பிட்டது. போய் எடுத்தான்.

''ஹலோ மகேஷ்'' பதற்றமான குரலில் அந்தப் பெண் அதிர்ந்தாள்.

''எஸ்'' — புரிந்து கொண்டான்.

''நான் வரமுடியலே, மகேஷ்! நான் வசமாகச் சிக்கிக் கொண்டு விட்டேன் சார். வெளியே இரண்டு முரடர்கள் காவல் நிக்கறாங்க. சார் — ஓ, நான் தொலைஞ்சேன்....'' அவள் விக்கி விக்கி அழ ஆரம்பித்துவிட்டாள்.

''மாடம், விஷயத்தை முதலில் சொல்லுங்கள்.''

''என்னை அவர்கள் கொன்றுவிடப் போகிறார்கள் — பெரிய பெட்டி, கத்திகள் எல்லாம் கொண்டு வந்து வைத்திருக்கிறார்கள். என்னைத் துண்டுத் துண்டாக வெட்டிப் பெட்டியில் பாக் பண்ணி, ரயிலில் போட்டுவிடப் போகிறார்கள்.''

''யாரு?''

''என் ஹஸ்பெண்டின் ஆட்கள்.''

''ஏன்?''

''என்னை அவருக்குப் பிடிக்கவில்லை —புது சிநேகம் வந்திருக்கு — ஒரு படா

லங்கிணி கைக்குள் போய்விட்டார். என்னை விஷமாக வெறுக்கிறார். நான் இருப்பது இடைஞ்சலாக இருக்குது அவங்களுக்கு—''

''உங்களை எதற்காக அவர் கொல்ல நினைக்க வேண்டும்? சுலபமாக டைவர்ஸ் செய்து விட்டுவிடலாமே?''

''அப்படிச் செய்தால் அவருக்கு ஒரு லட்சம் ரூபாய் வராதே'' என்றாள் நிரஞ்சனி. ''எங்கள் இருவர் பெயரிலும் என் அம்மா எனக்குக் கொடுத்த பணம் ஒரு லட்சம் ரூபாய் பாங்கில் இருக்கிறது. இருவரில் யார் இறந்தாலும் முழுத் தொகையும் மற்றவருக்குக் கிடைத்துவிடும்.. மகேஷ்ஜி! உடனே நீங்கள் இங்கே வரவேண்டும்.''

''எங்கே?''

''பாலாஜிநகர்... நம்பர்—'' படீரென்று சத்தம் கேட்டது. ''ஐயோ— நான்...நான்'' என்று குரல் தடுமாறி, அடுத்த கணம் ரிசீவர் பொத்தென்று விழுந்த ஓசையும், அதைத் தொடர்ந்து யாரோ தடதடவென்று ஓடுவதும் கேட்டது.

ஓ, யாரோ நிரஞ்சனியை அதற்குள் தாக்கி வீழ்த்தி விட்டார்கள். நடேஷ் அவசரமாக அலமாரியில் தேடி, டவுன் மாப்பை எடுத்து மேஜை மீது விரித்து பார்வையை விரட்டினான். — பதினாறு இடங்களில் பாலாஜி நகர்கள் இருந்தன.

எக்ஸ்சேஞ்சைக் கூப்பிட்டு இப்போது தன்னோடு பேசிய நம்பரைக் கேட்டான். 'பப்ளிக் பூத்' என்று பதில் வந்தது.

திகைத்தான். ஒரு வீட்டுக்குள்ளிருந்தல்லவா நிரஞ்சனி பேசினாள். வாசலில் முரடர்கள் இருப்பதாகக்கூடச் சொன்னாளே. பப்ளிக் பூத்தில் அவளை அடித்து வீழ்த்த முடியுமா? அவள் சொன்னது பொய்யா? என்ன மர்மம் இது?

ஆனால் ஒன்று தெரிந்தது. அவள் பேசியது எந்த பாலாஜிநகர் பூத் என்பதைக் கண்டு கொள்ள முடிந்தது. திருவான்மியூர் பாலாஜி நகர்!

ஒரு ஆட்டோவைப் பிடித்துக்கொண்டு திருவான்மியூருக்கு விரைந்தான். திருவான்மியூரில் இரண்டே இரண்டு பப்ளிக் பூத்கள் தான் இருந்தன.

குளக்கரையிலிருந்த பஸ் ஸ்டாண்ட் பல்லவன் டிப்போவில் ஒரு ஆபீஸர் இருந்தார்



அருள்வாக்கு

ஆலயமும் தெய்வீகக் கலைகளும்

இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் இந்தியாவுக்கு வந்த மெகஸ்தனிஸ் அப்போது நம் ஜனங்கள் எவ்வளவு உத்தமர்களாக வாழ்ந்தார்கள் என்பதைக் கூறியிருக்கிறான். ''இந்திய மக்களுக்குப் பொய்யே சொல்லத் தெரியாது; தெருவில் கிடக்கிற செல்வத்தைக்கூட எடுத்துச் செல்ல மாட்டார்கள்'' என்றெல்லாம் மெகஸ்தனிஸ் சொல்லியிருக்கிறான். அந்தக் காலத்து ஜனங்களின் மனசு மாதிரியே இப்போதும் இருக்கக் கூடாதா என்று ஆசையாக இருக்கிறது.

அன்றைக்கு அவர்கள் அவ்வளவு உயர்வாக இருந்ததற்குக் காரணம் என்ன? இன்று நாம் இவ்வளவு தாழ்ந்து போய்விட்டதற்குக் காரணம் என்ன? அந்த அந்தக் காலத்தின் சூழ்நிலையே அந்த அந்த மனப்பான்மைக்கும் காரணமாக இருக்கிறது. பழங்காலத்தில் பொதுஜனங்கள் எல்லாரும் கோவிலுக்குப் போனார்கள். அங்கே அவர்களுக்கு நல்வழி கூறுவதற்காக மகாபாரதம் முதலிய சத்கதைகள் நடைபெற்றன. இதற்காகவே ராஜாங்கத்தில் மானியம் தரப்பட்டு வந்தது. நாடகம், கூத்து எல்லாம் கூடத் தெய்வ சம்பந்தமாகவே இருந்தன. தங்கள் தொழிலைச் செய்வது, ஆலய தரிசனம், சத் கதை சிரவணம் இவற்றுக்கே மக்களின் பொழுது சரியாக இருந்தது. இதனால் யோக்கியர்களாகவே இருந்தார்கள். இப்போது ஜனங்களைக் கவர்ந்திழுப்பதற்கு என்ன என்னவோ ஆபத்துகள் எல்லாம் வந்துவிட்டன. தர்மத்துக்கு விரோதமான படக் காட்சிகள், கதைப் புத்தகங்கள் எல்லாம் அதிகமாகி விட்டன. ஜனங்கள் இதற்கிடையில் தத்தளித்துக் கொண்டிருக்கும்போது பலவிதமான அரசியல் கட்சிகள் வேறு அவர்கள் புத்தியைக் கலக்கிக்கொண்டிருக்கின்றன. எங்கேயும் சஞ்சலம், அதிருப்தி யோக்கியதைக் குறைவு இவை அதிகரித்து விட்டன.

—ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்



அவருக்கு எதிரேதான் டெலிபோன் பூத். ஆகவே அவர் கவனித்திருக்கக் கூடும்.

கேட்டான். 'கடந்த ஒரு மணி நேரத்தில் அதில் யாருமே பேசவில்லை' என்று தீர்மான மாக, 'சும்மாச் சும்மா கேட்காதேய்யா' என்று அதட்டுகிற குரலில் சொன்னர். பூத்தைப் போய்ப் பார்த்தான். அது ரிப்பேராகிக் கிடந்தது.

இன்னொரு பூத்தில் நடேஷ் போனபோது யாரோ பேசிக் கொண்டிருந்தார்கள். வய தான ஆசாமி. அவரை விசாரித்தான். ''நான் யாரையும் பார்க்கலையே!''

எதிரே ஒரு இளநீர்க் கடை இருந்தது. கடைக்காரன் சாக்கை விரித்துப் போட்டுக் கொண்டு படுத்திருந்தான். கறுப்புக் கம்பளி போர்த்தியிருந்தான்.

இரண்டு நாட்களாக ஜுரமாம். நேற்றெல்லாம் வரவில்லையாம். நம்பியிருக்கிற நாலு ஜீவன்களுக்காக இன்று வந்தானும்.

''காலைலேர்ந்தே யார் யாரோ வந்துகினு, போய்க்கினு இருந்தாங்க சாமி — நான் கண்டுக்கல்லே, சாமி'' என்முன்.

நடேஷுக்கு ஏமாற்றமாக இருந்தது. பக்கத்தில் உள்ள வீடுகளில் விசாரித்தான். நிரஞ்சனி, கமல்னு யாரும் கிடையாது என்முர்கள்.

காலி வீடு ஏதாவது இருக்கிறதா— ஆராய்ந்தான். 4வது தெருவில் ஒரு வீடு இருப்பது தெரிந்தது. அங்கே போனுன். திண்ணையில் ஒரு சாக்கை மறைப்புக் கட்டிக் கொண்டு ஒரு குடியானவப் பெண் சோறுக்கிக்கொண்டிருந்தாள்.

''இந்த வூடு பின்னலே எல்லாம் பாளடைஞ்சு கிடக்குதுங்க. எனக்குத் தெரிஞ்சு ஆறு வருஷமா யாருமே குடியில்லீங்க'' என்முள்.

ஆனல் ஒரு தகவலை அவள் எதிர்பாராமல் சொன்னுள். சற்று முன்பு ஒரு டாக்ஸி வந்து அந்த வீட்டின் முன் நின்றதாம். அதில் ஒரு பெண்ணும் ஒரு புஸ்தி மீசைக்காரனும் இருந்தார்களாம். பெண் கறுப்புக் கண்ணுடி போட்டுக்கிட்டு இருந்தாளாம்.

டிரைவர் கீழே இறங்கி 'பானெட்டைத் திறந்து ஏதோ ரிப்பேர் செய்துவிட்டு வண்டியைக் கிளப்பினுனும்.

''அந்தப் பொம்பளே எப்படி இருந்தா?'' நடேஷ் கேட்டான்.

''நல்லா அழகா இருந்தாங்க... வெள்ளேச் சேலே கட்டிக்கிட்டிருந்தா; வெள்ளை ஜாக்கெட் போட்டுக்கிட்டிருந்தா...''

''முஸ்லிம் பொம்பளேயா?''

''இல்லிங்க... நம் 'தமிழாளுங்கதாங்க.''

''தலேயிலே முக்காடு இருந்துச்சா?''

''புடவைத் தலேப்பைத் தலேயிலே போட்டுக்கிட்டிருந்தாங்க. ஆனு முசுலீமு இல்லிங்க. நல்லா மூஞ்சியே சொல்லிச்சே—''

''அம்மைத் தழும்பு இருந்துச்சா?''

''அய்ய.... பேசப்படாது — சுத்தமா இருந்துச்சுங்க.''

''அந்த வண்டி நம்பர் பார்த்தியா?''

''இல்லிங்க. நமக்கு எழுதப் படிக்கத் தெரியாதுங்க''' நாணினுள்.

''அந்தக் கார் எப்படிப் போயிற்று?''

''அதா'' — அந்தப் பக்கம்'' — அடையாறு ரோட்டைக் காட்டினுள். ஆட்டோவை அடையாறுக்கு விரட்டினுன்.

டாக்ஸி ஸ்டாண்டில் ஒரு டிரைவர் சொன்னுன்: ''ஆமாங்க — ஒரு வெள்ளேப் புடவைக்காரியும் மீசைக்காரனும் வந்தாங்க. இங்கேதான் பஸ் ஏறிப் போனுங்க.''

''எந்த டாக்ஸியில் வந்தாங்க?''

''டாக்ஸியில் வரலேங்க. நடந்துதான் வந்தாங்க. ஒருவேளே தூரத்திலேயே நிறுத்தி இறங்கிக்கிட்டு வந்தாங்களோ என்னமோ?''

''எந்த பஸ்ஸில் ஏறிஞர்கள்?''

''பைவ்-ஸி!''

''ஓ, பைவ்-ஸி — கே. கே. நகர் போகிற வண்டி. திருப்பு கே. கே. நகருக்கு'' என்று ஆட்டோவுக்கு உத்தரவிட்டான் நடேஷ்.

'நிரஞ்சனி! என்னேயா ஏமாற்றப் பார்க்கிமுய்? உன் பாச்சா நம்ப கிட்டப் பலிக்காது மேடம்! உன்னே இன்னும் அரை மணி நேரத்திலே கண்டு பிடித்து என் முன் நிறுத்திக் கொள்ளாவிட்டால் நான் நடேஷ் இல்லே!'


காந்தி மண்டபமும், மான்கள் சரணுலயமும், கிண்டியும், தொழிற்பேட்டையும் ஈகாட்டுத்தாங்கலும் சிட்டாய்ப் பின்னல் பறந்து மறைந்தன.

போட் தொழிற்சாலையைத் தாவிக் கடந்து தாம்போதியில் இறங்கி, ஜாபர்கான் பேட்டையில் ஏறி வட்டத் தொட்டியில் திரும்பினுர்கள்.

பஸ் டெர்மினஸில் கணக்குத் தீர்த்து இறங்கிக் கொண்டான். கர்ச்சிப்பைத் தலையில் கட்டிக் கொண்டான். கூலிங் கிளாஸைத் தரித்தான்.

ஒவ்வொரு தெருவாகத் தேடத் தொடங்கினுன்.

(தொடரும்)



முன் கதைச் சுருக்கம்

பிலிம் டிஸ்டிரிபியூடர் கமல்நாத் ஒரு ரகசிய வேலையாக நிறையப் பணத்துடன் மதுரைக்குப் புறப்படுகிருர். தனக்குப் பாதுகாப்பாக வரமுடியுமா என்று கேட்க மகேஷ் என்கிற துப்பறிபவனிடம் வருகிருர். அவர் ஒரு துஷ்டர் என்றும், அன்றிரவு தன் மனைவியை வெட்டிக் கொலை செய்துவிடப் போகிருர் என்றும், அவருடன் போக வேண்டாம் என்றும் டெலிபோனில் ஒரு மர்மப் பெண் குரல் மகேஷை எச்சரிக்கிறது.

அதையும் மீறி மகேஷ் ஒப்புக்கொள்கிருன். மாறு வேடத்தில் தன் வீட்டுக்கு அன்றிரவு வரும்படி கூறிவிட்டுப் போகிருர் கமல்நாத்.

மாமியாரை வரவேற்க சென்ட்ரலுக்குப் போகிருன் மகேஷ். அவன் போன சற்றைக்கெல்லாம் அவனுடைய குரல் டெலிபோனில் அவனுடைய காரியதரிசி நீலாவை அழைத்து, தான் ஆபத்தில் சிக்கியிருப்பதாகக் கூறி உடனே வரும்படி கூறுகிறது. மகேஷைத் தேடிக் கிளம்பி அலைந்த அவளை ஒரு வீட்டில் சிலர் மயக்க மருந்து கொடுத்து அடைத்துப் போட்டு விடுகிருர்கள்.

மகேஷ் திரும்பி வந்ததும் ஒரு ஆண் குரல் டெலிபோனில் அவனைக் கூப்பிட்டு, நீலாவைத் தாங்கள் சிறைப்பிடித்து ஒரு நரபலி கூட்டத்துக்கு விற்றுவிட்டதாகவும், மறுநாள் முடிய வண்டியில் அவளை வடநாட்டுக்குக் கொண்டு போகிருர்கள் என்வும் கூறிச் சிரிக்கிறது.

மகேஷ் துடிக்கிருன். அவன் சகா நடேஷ் அவனைத் தேற்றி நீலா விஷயத்தைத் தான் கவனித்துக் கொள்வதாகக் கூறி, அவனை 'சேட்ஜி' வேஷத்தில் கமல்நாத் வீட்டுக்கு அனுப்புகிருன்.

மேலே தொடர்ந்து படியுங்கள்.

7

''வாங்கோ-வாங்கோ'' என்று குதூகலமாக வரவேற்ருர் கமல்நாத். ''நமஸ்தேஜி'' கைகூப்பிவிட்டு உள்ளே நுழைந்தான் ஹேமந்லால்.! தூய மஸ்லின் ஜிப்பாவும் கட்ஷூவும், தும்பைப் பூப்போன்ற தலைவிக்கும்—

''நமஸ்தே. உட்காருங்கோ'' ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுவிட்டு உள்ளே திரும்பி, ''நிம்மி-நிம்மி!'' — குரல் கொடுத்தார்.

''எஸ் பாஸ்!'' — வந்தவள் ஒரு அழகி. பூமாதிரி இருந்தாள். கையில் சின்னக் குறிப்பு நோட்டும், பென்சிலுல் வைத்திருந்தாள். முப்பது வயது இருக்கும்.

''இவங்க பெரிய டிஸ்டிரிபியூட்டர்ஸ் — ஹேமந்த்லால்.''

''நமஸ்தே பாபு'' — அழகாகக் கைகூப்பிஞள். முகத்தில் கவலையின் ரேகைகள் தெரிந்தன.

''இது நம்பள் செக்ரட்டரி — நிர்மலான்னு பேரு. ரொம்ப கிளவர் பொண்ணு.'' லால்ஜி அவளை ஏறிட்டுப் பார்த்தார். அவள் அவருடைய விக்கையே ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

''நம்ப படம் இரண்டு மூன்று ஏரியா கேட்க வந்திருக்காரு. அந்த—பிலிம் பாம்ப்லட்ஸ் எல்லாம் இருந்ததே கொண்டாந்து குடு.''

''எஸ் பாஸ்!'' — நகர்ந்தாள்.

''நிம்மு!'' — கதவடியில் நின்று திரும்பிப் பார்த்தாள். ''அப்படியே இரண்டு 'கப்' ஓவல் கலந்து கொண்டாந்துடு'' என்ருர். தலையை அசைத்துவிட்டுப் போனுள்.

கமலின் அறை பெரிய ஹால் மாதிரியே இருந்தது. சுவரில் அழகான அராபியப் பெண்கள் தொப்புள் தெரியச் சிரித்து மயக்கிஞர்கள். ஆள் உயரப் படங்கள்.

கமல் தணிந்த குரலில் சொன்ஞர்: ''மகேஷ் ஸார், டிக்கட் ரிசர்வ் ஆகிவிட்டது. அப்புறம் கொடுக்க வசதிப்படுமோ என்னமோ — இப்பொழுதே வாங்கிக்கொண்டு விடுங்கள்.'' — சிறு கவர் கை மாறியது. அடுத்த கணம் 'பாம்ப்லெட்டு'களுடன் நிம்மி உள்ளே வந்தாள்.

''நிம்மி லால்ஜிக்கு நல்லாத் தமிழ் பேச வரும். இரண்டு தலைமுறை இங்கே இருந்துட்டாங்களே!'' — என்ருர் கமல்.

''அப்படியா?'' அழகாகச் சிரித்தாள்.

''நீ எப்போ வந்தே நிம்மி?சென்ட்ரலுக்கு யாரையோ சென்ட்-ஆப் பண்ணப் போகனும்னியே போகலே?''

''போயிட்டு இப்பத்தான் வந்தேன் பாஸ். எங்க அம்மா 'ஷிர்டி' போருங்க., நாலைஞ்சு பேரோட. நல்ல துணையா கிடைச்சுது. போயிட்டு வான்னு அனுப்பினேன்'' என்ருள் நிர்மலா.

''ஷிர்டி — ஓ! தி கிரேட் பாபா'ஸ் ப்ளேஸ்'' என்ருன் மகேஷ்.

''ஆமாம். எங்க அம்மா ஷிர்டி பாபாவோட பரம பக்தை. ராவும் பகலும் அவரோட பெயரைச் சொல்லிக்கிட்டே இருப்பாங்க.''

''நம்ப ஒய்ப்கூட பாபா பக்தைதான்'' என்ருன் மகேஷ்.

ஒரு ஆள் பிளேட்டில் கொஞ்சம் பிஸ்கட்டும் ஓவலும் கொண்டு வந்தான். நிம்மி அதை வாங்கி லால் பக்கம் நீட்டி ''எடுத்துக்குங்க.'' என்ருள்.

''தாங்கஸ்'' — எடுத்துக் கொண்டான் மகேஷ். ''எனக்குக்கூட ஷிர்டி பாபாவோட லைஃபை பேஸா வைச்சு ஒரு நல்ல கதையா படம் பிடிச்சு ஜனங்களுக்குக் காட்டணும்னு ஆசை.''

''ரொம்ப நல்ல ஐடியா லால்ஜி. பஸ்ட் கிளாஸா ஓடும்.'' என்றார் கமல்.

''நிம்மு டைரிலே நோட் பண்ணி வச்சுக்கோ. நான் மதுரையிலிருந்து வந்ததும் இது பற்றி லால்ஜி கிட்டப் பேசணும்.''

''உங்க வீடு ரொம்ப நல்லா இருக்குது.'' என்றார் லால்.

''வூடு நல்லா இருந்து என்னங்க பிரயோசனம்? நாங்க மூணே பேர்தானே இதிலே இருக்கோம்.'' என்றார் கமல்நாத்.

''யார் யாரு?''

''நானு, நிம்மு, ஒரு 'குக்'. அவ்வளவுதான். உங்களைப் போல டிஸ்ட்ரிபியூட்டருங்க அடிக்கடி வருவாங்க; தங்குவாங்க. அவங்களுக்குச் சௌகரியமா இருக்கணும்கிறதுக்காகத்தான் இம்மாம் பெரிய வூட்டைப் பிடிச்சுப் போட்டிருக்கேன்.''

''நிம்முவும் இங்கேதானே இருக்காங்க?''

''இல்லே. அவங்க வீடு சௌகார்பேட்டையிலே இருக்கு. தினமும் பஸ்லே வரா—போறா'' என்றார் கமல்நாத்.

''உங்க ஃபாதர் என்ன பண்றாரு நிம்மி?''

''எங்க ஃபாதர் இருந்தா நான் ஏன் ஸார் வேலைக்கெல்லாம் வரப் போறேன்? அவர் போயி எட்டு வருஷமாச்சு... இப்ப எனக்கு ஃபாதர், மதர், காட் எல்லாமே எங்க பாஸ்தான்.'' — கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

''உனக்குக் கல்யாணம் ஆவலியா?''

''பொண்ணுன்னு பிறந்தா யாரையாவது கட்டிக்கிட்டுத்தான் ஆவணுமா சார்?'' என்று திருப்பிக் கேட்டாள்.

''நான் எவ்வளவோ சொல்லிப் பார்த்துட்டேன். அல்லா செலவையும் ஏத்துக்கிறேன்னு கூடச் சொல்லியாச்சு'' என்றார் கமல்நாத்.

''ஏம்மா கமல் ஸார்தான் எவ்வளவு செலவானாலும் தரேன்கிறாரே — ஏன் பண்ணிக்க மாட்டேன் என்கிறே?''

நிம்மி பெருமூச்சு விட்டாள். ''என்னமோ எனக்குப் பிடிக்கலே. அந்தப் பேச்சு எதுக்கு இப்ப, விடுங்க'' — டம்ளர்களை எடுத்துக்கொண்டு உள்ளே போனாள். அந்தப் பெருமூச்சை மகேஷ் மனசில் குறித்துக்கொண்டான். யாரோ ஆள் இருக்கிறான்.

இருவரும் எழுந்து ஜன்னல் ஓரமாகப் போனார்கள். ''இந்தப் பொண்ணு உங்ககிட்ட எத்தனை நாளா இருக்கிறாள்?'' — மகேஷ் கேட்டான்.

''இப்பத்தான் — ஒரு வருஷமாக!''

''இவளுடைய டியூட்டி ஹவர்ஸ் என்ன?''

''காலை ஏழு மணிக்கு வந்து பதினொன்றுக்குப் போவாள். பிறகு நாலரைக்கு வந்து ஏழுவரை இருப்பாள்.''

''இவளுக்குக் காதலன் யாராவது உண்டா''

''எனக்குத் தெரிந்து யாரும் கிடையாது.''

''என்னென்ன பாஷை தெரியும்?''

''இங்கிலீஷ் — தமிழ் — ஹிந்தி.''

''மராத்தி?''

''தெரிந்திருக்கலாம். எனக்குத் தெரியாது. சொந்த ஊர் புனப் பக்கம் என்று சொன்னதாகத்தான் ஞாபகம்.''

''இவள் மீது உங்களுக்கு ஏதாவது சந்தேகம் உண்டா?''

''கிடையாது.''



''இவளைத் திருமணம் செய்து கொள்வதாக உங்களுக்கு உத்தேசம் உண்டா?''

''என்னங்க இப்படிக் கேட்கறீங்க?''—சிரித்தார்.

''என் சொந்தக்காரன் என்று இந்த இரண்டு நாட்களில் யாரையாவது இவள் அழைத்துவந்தது உண்டா?''

''கிடையாது.''

''இன்றைக்குப் பெரிய தொகை ஏதாவது டிரா பண்ணியிருக்கீங்களா?''

''ஆமாம்.''

''அது இவளுக்குத் தெரியுமா?''

''தெரியாது.''

''பாஸ்....'' — வேகமாக வந்தாள் நிம்மி. ''உங்க பிரெண்டுக்கு டெலிபோன் வந்திருக்கு.''

''எனக்கா?'' — வியப்புடன் கேட்டான் மகேஷ்.

''ஆமாம். ஹேமந்த்லால் இருக்காரான்னுதான் கேட்டாங்க.''

நினைவில் நிற்கும் காட்சி

ரத்தக் கண்ணீர்

உலகத்தை உதாசினப்படுத்துகிறான்,
குடும்பங்களைக் குலைக்கிறான்,
நண்பர்களை நடுச்சந்தியில் நடமாட விட்டு
விடுகிறான்,
எண்ணியதை எப்படியாகிலும் எடுத்து
முடிக்கிறான்,
மேல்நாட்டு மோகத்தில் முழுகுகிறான்,
தொட்டுத் தாலி கட்டிய மனைவியை
எட்டி உதைத்துவிட்டு வேசியிடம்
நாட்டமடைகிறான்,
ஏசுகிறான் — ஏமாற்றுகிறான்
வாழ்க்கையில் அவன் ஆடாத ஆட்டமில்லை
அடிக்காத கூத்துமில்லை
கடைசியில்—
எல்லாவற்றுக்கும் சேர்த்து அவன்
அனுபவிக்கிறான்.
குஷ்ட நோயால் பாதிக்கப்படுகிறான்
மக்கள் அவன்மேல் கல்லெறிகிறார்கள்—
காரி உமிழ்கிறார்கள் — ஏசுகிறார்கள்
எல்லாவற்றுக்கும் அவன் பதில்:
''ரத்தக் கண்ணீர்!''

—நடேஸ் கே. மூர்த்தி



நிம்மி வழிகாட்ட, மகேஷ் போன் இருந்த அறைக்குப் போனான். நிம்மி போனைக் காட்டிவிட்டு அறை வாசலில் நின்றாள்.

''எஸ். ஹேமந்த்லால் ஹியர்.''

''மிஸ்டர், உங்க பேரு, டிரஸ் எல்லாத்தையும் பார்த்துட்டு அங்கே எல்லாருமே ஏமாந்திருப்பாங்கன்னு நினைக்கிறேன்'' என்றது கரட்டுக் குரல்.

''என்ன சொல்றீங்க?''

''மிஸ்டர், நீங்க ஹேமந்த்லாலாக இருக்கலாம். ஆனால் நான் ஏமாந்தலால் இல்லே.''

''அப்படியா?''

''என்னைத் தெரியலே... நான்தான் ஐ.ஜி—சிவகுமார்.''

''ஓ— குட் ஈவினிங் ஸார்.''

''குட் ஈவினிங்'' — சிரித்தார்.

''என்ன திடீர்னு?''

''சற்று முன்புதான் நடேஷ் போன் பண்ணினார். மெட்ராஸைச் சுத்தி எல்லா ரோடையும் பிளாக் பண்ணச் சொன்னார். செண்டரி போட்டுட்டேன்.... ஈ காக்கை தப்பிப் போக முடியாது. டிரெயின், ரோட், ப்ளேன் எல்லாமே ப்ளாக்.''

''தாங்க்ஸ்.''

''ரொம்ப முக்கியமான காரியமா 'லால்' வேஷத்திலே நீ கமல்நாத் வீட்டுக்குப் போயிருப்பதாகச் சொன்னார்.''

''ஒண்ணும் பெரிசாக இல்லே.''

''ஏதாவது ஹெல்ப் வேணுமா? மப்டியிலே இரண்டு பேரை அனுப்பித் தூரத்திலேயே கண்காணிக்கச் சொல்லட்டுமா?''

''எதுக்கு அனாவசியமா?''

''அட இருக்கட்டுமய்யா — சிறு துரும்பும் பல் குத்த உதவும்.''

''சரி—''

மகேஷ் திரும்பி வரும்போது அவள் முகத்தில் சிந்தனைகள் விழுந்தன. சந்தேகாஸ்பதமாகப் பார்த்தாள். ''வாங்க, வீட்டைச் சுற்றி காட்டறேன். பாஸ் பாத் ரூம்லே இருக்கார். அவரு வர்றதுக்குள்ளே பார்த்துடலாம்.''

நிம்மி முன்னே நடந்தாள். வீடு பெரியதுதான். ஏராளமான அறைகள், தகர டப்பாக்கள், சுவரொட்டிகள்,பானர் ஓவியங்கள். வலப் பக்கமாக இரண்டு மூன்று அழகான அறைகள். ''அதெல்லாம் கெஸ்ட் ரூம்ஸ் — ஏரியா வாங்க வர்ரவங்க தங்க.'' போம் மெத்தைகள், வாஷ் பேஸின்கள், அட்டாச்டு பாத் ரூம்கள், டிரஸ்ஸிங் டேபிள்கள், ஸன்மைக்கா டேபிள்கள்—

ஒரு டேபிளின் அறையைத் திறந்து பார்த்தான். சில சின்ன பாக்கெட்கள், சில கிரீம் ட்யூப்கள் கிடந்தன. நிம்மியைப் பார்த்தான். முகம் சிவந்தாள்.

ஹாலின் மேலக் கோடியில் ஒரு அறை அழுது வழிந்தது. ''கிச்சன்'' — உள்ளே முற்றத்தில் உடைந்த முட்டைக் கூடுகள் கிடந்தன. கவிச்சு நாற்றம் வீசிற்று. காஸ் அடுப்பில் தண்ணீர் கொதித்துக் கொண்டிருந்தது.

ஒரு அலமாரியில்—

திடுக்கிட்டான். பட்டையாக இரண்டு கத்திகள். பாதி தெரிகிற மாதிரி துணியில் சுற்றி வைக்கப்பட்டிருந்தன. எதற்கு இது

இங்கே வந்திருக்கிறது? யாரைக் கண்ட துண்டம் போட?

''இது ஸ்டோர் ரூம்.'' — ஒரு கதவைத் திறந்தாள். பூண்டு வாசனை 'குப்'பென்று மூஞ்சியில் அடித்தது. டின்களும், தூக்கு களும், கூடைகளும், வரிசையாக உட் கார்ந்திருந்தன. சல்லடைக் கண்ணுக ஒரு 'வடக்கத்திப் புடவை எதிரே தொங்கிற்று— சரிகை பார்டருடன்.

மகேஷ் சட்டென்று தலையை இழுத்துக் கொண்டு, ''உள்ளே கமல்ஜியின் மனைவி யாராவது இருக்காங்களா என்ன?'' என்றான்.

நிம்மி புன்னகை புரிந்தாள். பதில் சொல்ல வில்லை. 'அழுத்தக்காரி பதில் சொல்கிறாளா பார்' திரும்பினான் மகேஷ். 'சல்லா' எப்படி வந்தது? இன்னொரு பெண் யாரோ கட்டாயம் இங்கே இருக்க வேண்டும்? அவள் யார்? கமலின் மனைவியா?

ஒரு அறைக்குள்ளிருந்து அற்புதமான 'டில்பகார்' சென்ட் மணம் பரப்பிற்று. கூடவே ஒரு டிரான்ஸிஸ்டரின் மெல்லிய ஒலிபரப்பு வந்தது. கதவு சாத்தியிருந்தது. ஓ, உள்ளே யார் இருக்கிறார்கள்? அவள்தானா?

அந்த அறையை நிம்மி திறந்து காட்டுவாள் என்று எதிர்பார்த்து ஏமாந்தான். ''மாடிக் குப் போகலாமா? — வியூ பிரமாதமாக இருக்கும்'' என்று நகர்ந்துவிட்டாள்.

அந்த அறையையும் திறந்து காட்டு என்று அவன் எப்படிக் கேட்க முடியும்?

எல்லா அறைகளையும், ஏன், சமைய லறையையும்கூடத் திறந்து காட்டினவள் ஏன் அந்த ஒரு அறையை மட்டும் காட்டவில்லை?

கமல்ஜியே காட்டச் சொல்லவில்லையோ? அந்தக் கடைசி மூலை அறையில் தன் மனை வியை ஒளித்து வைத்துவிட்டு, 'இந்தக் கட் டிடத்திலேயே என் மனைவி இல்லை' என்று மகேஷ் கண்ணில் மண்ணைத் தூவிவிட விரும்பினாரோ?

எங்கேயோ வெட்டப்பட்டுக் கிடந்து விசாரணை என்று வரும்போது கொலை நடந்த தாகச் சொல்லப்படும் அன்று முழுவதும் மகேஷ் பாபு என் கூடவே இருந்தார் என் வீடு முழுக்கச் சுற்றிப் பார்த்தார், என் மனைவி அங்கிருந்தால் அவர் கண்களில் படாதிருப் பாளா? என்று வாதாடச் சௌகரியமாகத் தான் எனக்கு இப்போது வீட்டைச் சுற்றிக் காட்டச் சொல்லி யிருக்கிறாரா?

இந்த நிம்மி யார்? அவருடைய காதலி யாகக்கூட இருக்கலாம். தனக்கும் கமலுக்கு மிடையே இருப்பதாகக் கமலின் மனைவியை நினைத்து எரிச்சலடைந்திருக்கலாம். இரு வருமாகச் சேர்ந்து அவளை ஒழித்துக்கட்ட விரும்பி யிருக்கலாம். இவள் உதவியுடன் கமலின் மனைவிக்கு மயக்க மருந்து கொடுத்து அந்த அறையில் கட்டிப் போட்டிருக்கலாம்.

ஏன் கூடாது?

பின்னே ஏன் அந்த அறையை அவள் திறந்து காட்டவில்லை?

நிம்மி வேறு யாரையும் மணந்துகொள்ள விரும்பவில்லைஎன்று பெருமூச்சு விட்டதையும் 'எனக்கு எல்லாமே எங்க பாஸ்தான்' என்று சொன்னதையும் கணக்கில் எடுத்துக்கொண்



நினைவில் நிற்கும் காட்சி

படிக்காத மேதை

ரங்கன்!

சிறு வயதிலேயே அனாதையாகிவிட்ட அவனை ஒருபெருஞ் செல்வந்தர் எடுத்து வளர்த்து வந்தார். அவர் குடும்பத்துக்கு ரங்கனும் நாய் போல நன்றியுடனும், வேலைக்காரனாகவும், வெள்ளை உள் ளம் படைத்த நல்லவனாகவும் இருந்து குடும்பத்தில் ஒருவனாக வாழ்ந்தான்.

நாளடைவில் செல்வந்தர் ரங்கனுக்கு ஒரு திரு மணத்தைச் செய்து வைத்து, அவன் எதிர்கால நன்மையைக் கருதி வீட்டை விட்டு வெளியேற்றி விடுகிறார்.

இதற்கிடையில் பணம் பெருகி வந்த காலத்தில் மதித்து வந்த பெற்ற பிள்ளைகள், பணம் சுருங்கிய காலத்தில் மிதிக்க முற்பட்டனர்.

வீட்டை விட்டு வெளியேறிய ரங்கன் ஒரு நல்ல நிலைக்கு வந்த பின் தன்னை வளர்த்து ஆளாக்கிய மாமா, அத்தையைப் பார்க்க வருகிறான். மாமா வுக்குப் பிடித்தமான 'ஒயிட் ஸ்டார்' சிகரெட் டப்பாக்கள் இரண்டைக் கொடுக்கிறான் ஆசையுடன்.

''சம்பாதித்த பணத்தைப் பெண்டாட்டி கையில் கொடுக்காமல், இப்படி சிகரெட் வாங்கிக்கிட்டு யார் வரச் சொன்னது?'' என்று கடிந்து கொள்கிறார் செல்வந்தர். ரங்கனும் பொய்க் கோபத்துடன் வீட்டை விட்டு வெளியேறுகிறான்.

அவன் சென்ற பிறகு தான் பெற்ற பிள்ளைகள் மதிக்காதபோது வீட்டை விட்டு வெளியேறிய ரங்கன் தன்னை நன்றியுடன் பார்க்க வந்ததை நினைத்து, 'இங்கிவனை யான் பெறவே என்ன தவம் செய்து விட்டேன்?' என்று எண்ணி நெஞ்சு வெடித்து இறக்கிறார்.

'படிக்காத மேதை' என்ற படத்தில் வரும் இந்தக் காட்சியே என் மனத்தில் நிற்கும் காட்சி.

இக்காட்சியில் நடிகர் திலகம் சிவாஜி கணேசனும் மறைந்த திரு எஸ். வி. ரங்கா ராவும் நன்றாக நடித்திருந்தாலும், அக்காட்சி அமைப்புக்கு பாரதி யாரின் பாடலை இணைத்து மேலும் மெருகு ஊட்டிய மறைந்த இயக்குனர் ஏ. பீம்சிங் இங்கே நினைவுகூரத் தக்கவர்.

ஜி. சண்முகம்

டால் — ஓ, இந்த இரண்டு பேருக்குமிடையே ஏதோ ஒன்று இருக்கும் போலிருக்கிறதே—

இதெல்லாம் சரியானால் இன்றிரவு இங்கே ஒரு கொலை நடக்கப் போகிறது, நிச்சயம் தானா? அதை எப்படித் தடுப்பது?

மாடியில் பெரிய ஹாலில் நிறைய நாற்காலிகளுக்கிடையே ஒரு புரொஜக்டரும், ஸ்க்ரீனும் இருந்தன. வலப்பக்கம் நாலு அறைகள் காணப்பட்டன. ''இது எங்க பாஸோட பிரைவேட் ரூம் — இது அவரோட பூஜை ரூம்'' ஒவ்வொன்றாகத் திறந்து காட்டினாள்.

பிரைவேட் அறையில் அழகான கட்டில். வெல்வெட் தலையணைகளும் போர்வைகளும் இருந்தன. ஒரு ஸ்டாண்டில் நைட் கவுன் தொங்கிற்று. 'சட்'டென்று சுவரில் ஒரு படத்தைப் பார்த்து வியந்தான். கமல்நாத் ஒரு அழகான பெண்மணியின் அருகில் நின்றார். ஹஸ்பெண்ட் — ஒய்ஃப் மாதிரி நின்றனர்.

''இவங்கதான் கமல் ஸாரின் ஒய்ஃபா?''

அமுக்கிப் பதில் சொல்லாமல் சிரித்தாள். படத்தை நன்றாகப் பார்த்தான். மிஸஸ் கமல் பேரழகியாகத்தான் இருந்தாள். தீர்க்கமான முகம், பரிதாபமாக நோக்கிய கண்கள். 'என்னை எப்படிக் காப்பாற்றப் போகிறே மகேஷ்' என்று கெஞ்சின.

''என்ன, அவங்களைப் பார்த்துக்கிட்டு நின்னுட்டீங்க?'' — சிரித்தாள்.

''நல்லா அழகா இருக்காங்களே — இப்ப எங்கே இருக்காங்க?''

''எனக்குத் தெரியாது.'' வெளியே திரும்பி நடந்தாள்.

மகேஷ் குழப்பத்துடன் வெளியே வந்தான். மாடியில் பெரிய முற்றத்தில் இருந்து வீதியும் இந்தப் பங்களாவின் கார் ஷெட்டும் தெரிந்தன.

கார் ஷெட்டில்—

ஒரு பெஞ்ச் மீது ஒரு பெரிய பெட்டி. முழுசாக ஒரு ஆளைவெட்டி உள்ளே அடைத்து விடலாம். அதன் மீது பெட்டியைக் கட்டக் கயிறுகள்!

அதற்கப்பால் தெருவின் எதிர்ப்புறம், ஒற்றையாக நின்ற ஒரு பெட்டிக் கடை வாசலில் இரண்டு பேர் நின்றார்கள். 'ஓ! ஐ. ஜி. ஆளை அனுப்பி விட்டார். அவசரத்துக்குக் கூப்பிட்டுக் கொள்ளலாம்.'

கீழே வந்தார்கள். கமல்நாத் உடை மாற்றிக் கொண்டு ரெடியாக இருந்தார். ''அவசரமாகப் போக வேண்டாமே லால்ஜி. காலம்பறவரைகூட இருங்களேன். ஒரு சின்ன பிரெஞ்சுப் படம் வந்திருக்குது. போட்டுக் காட்டறேன்'' என்றார்.

'இது என்ன தந்திரம்?' என்று ஆராய்ந்தான். மேலே படம் காட்டிக் கொண்டே கீழே அவளைக் 'குளோஸ்' பண்ணிப் பெட்டியிலடைத்து—

''சினிமா வேண்டாம். சீட்டு ஆடுவோமே! நிம்மி வில் யு கிவ் கம்பெனி டு அஸ்?'' என்று கேட்டான் மகேஷ்.

அவள் பாஸ் முகத்தைப் பார்த்தாள். ''கமான் நிம்மி — லால்ஜிக்கு சீட்டுன்னா உயிரு'' என்றார் கமல்.

நிம்மி ஏதோ அரை விநாடி யோசித்தாள். பிறகு சீட்டுக் கட்டை எடுத்து வந்து போட்டாள். மகேஷ் சீட்டை அடுக்கிக் கொண்டே அந்த 'அவள்' இருக்கிற இடத்தைப் பார்த்தான். நேர் எதிராகத்தான் இருந்தது. இப்போது டிரான்ஸிஸ்டர் பாடவில்லை. ஆனால் அந்த செண்ட் மணம் மட்டும் வந்தது.


கொலையாளி உள்ளே போவதானால் மகேஷின் கண்ணில் படாமல் போக முடியாது. கண்காணிக்க அத்தனை வசதியான இடத்தில் இருந்தான்.

'பயலே — எப்படி அவளை நீ கொல்கிறாய் என்று பார்க்கிறேன்.' (தொடரும்)

நினைவில் நிற்கும் காட்சி

பாபு


அதோ, அந்த விதவைத் தாயை நெருங்கிக் கொடுமை புரிய எண்ணிய கீழ்குணம் கொண்ட இரு கேடர்களைத் துரத்தியடிக்கிறான் பாருங்கள் — அவன்தான் நன்றிக்கோர் எடுத்துக்காட்டாய்த் திகழும் ரிக்ஷாக்கார



'பாபு'. அவ்விரு கயவர்களையும் விரட்டிய பின் அவ்விதவைத் தாயின் குழந்தையை நோக்கி, ''இனிமே உங்க வீட்டுக்குக் காவலா ஒரு நாயைப் போட்டுடறேம்மா'' என்று கூறிவிட்டு, தனது பெட்டி, படுக்கை முதலியவற்றைச் சுமந்து கொண்டு அவ்வோலைக் குடிசையை அடைந்தவுடன், குழந்தை அவனருகில் வந்து, ''மாமா! மாமா! இது என்ன?.... இது என்ன?'' என்று கேட்க, பாபு, ''இதுதான் நாயோட பெட்டி! இதுதான் நாயோட படுக்கை!'' என்று கூற, அக்குழந்தை ''நாய்க்குப் போடற சங்கிலி?'' எனக் குறுக்கிட்டவுடன், அக்குழந்தைகளின் மலர்க் கரங்களை மாலையாக்கித் தன் கழுத்தில் போட்டுக் கொண்டு, ''இதுதான் நாய்க்குப் போடற சங்கிலி! நான்தான் அந்த நாயி....!'' என்று 'பாபு' கூறும் காட்சி எப்படிப்பட்ட கல் நெஞ்சனையும் கண் கலங்க வைக்கும் காட்சியாயிற்றே! அக்கட்டத்தில் 'பாபு'வாக நடிக்கும் நடிகர் திலகத்தின் முகத்தில் தோன்றும் உணர்ச்சிகள் ஒன்றா இரண்டா?

—எஸ். பாலகிருஷ்ணன்

நீயார்?



சந்திரநாத்

8

''அய்ய — போரடிக்குது'' என்றாள் நிம்மி.

மகேஷ் நிமிர்ந்து கடிகாரத்தைப் பார்த்தான். ஒன்பதரை! கமலைப் பார்த்தான். குஷியாக ஆடிக் கொண்டிருந்தார்.

எதிரே பார்த்தான். அந்த அறை அப்படியே இருந்தது.

''எனக்கு டைம் ஆயிடுச்சு பாஸ்.''

''ஓ!''—நிமிர்ந்தார். ''மணி ஒன்பதரை!'' என்றார். ''இனிமேல் உனக்கு பஸ் கிடைக்குமா? பேசாம இங்கயே தங்கி விடேன்.''

''இல்லே பாஸ்.''

''வூட்லேதான் அம்மாகூட இல்லியே. போய் என்ன பண்ணப் போறே. ஆட்டம் போரடிச்சா நிறுத்திப்புடுவோம். போ, போய் எல்லாருக்கும் டிபன் பாலு கொண்டா'' என்றார் கமல்.

எழுந்து போய்க் கொண்டு வந்தாள். லாலை உற்றுப் பார்த்தாள். சாப்பிட்டார்கள். ஏப்பம் விட்டார்கள். பழங்களின் தோலைக் குவித்தார்கள்.

மீண்டும் ஒரு மணி நேரம் ஆடினார்கள். மகேஷ் சலித்தான். 'எதிர்' அறைப் பக்கம் கொலைகாரன் அண்டவே இல்லை.'

''நான் போய்ப் படுத்துக் கொள்ளட்டுமா பாஸ்.''

''சரி, செய்.''

வலப் பக்க அறைகள் ஒன்றுள் போய்க் கதவைச் சாத்திக் கொண்டாள். சாவித் துவாரம் வழியாக அவள் பார்ப்பதாகப் பிரமை தட்டிற்று.

கொல்லையில் ஒரு நாய் குரைத்தது, அடங்கியது.

''அங்கே என்ன பார்க்கிறீங்க?'' என்றார் கமல்நாத்.

''சமையலறையிலே என்னமோ சத்தம் கேட்டது மாதிரி இல்லே?''

''பூனை ஏதாவது வந்திருக்கும். — சீட்டைக் கவனிச்சுப் போடுங்க.''

அப்புறம் அந்தச் சத்தமும் இல்லை. சீட்டைக் கவனித்தான். செட்டுகள் சேர மறுத்தன. சண்டித்தனம் செய்தன. நேரத்தைத் தின்றன.

திடீரென்று சீட்டுக்களை மேஜை மீது பரத்திவிட்டு எழுந்து, நிம்மியின் அறை வாசலுக்குப் போனான். சாவித் துவாரம் வழியாக உள்ளே பார்த்தான்.

உள்ளே மங்கிய ஒளியில் நிம்மி கட்டிலில் தூங்கிக் கொண்டிருந்தாள். மார்பு நிதானமாக ஏறி இறங்கிக் கொண்டிருந்தது. திரும்பி வந்தான். ''என்ன?'' என்றார் கமல்நாத்.

''தூங்கிக்கிட்டிருக்கா'' என்றான்.

''அவ மேலே சந்தேகப்படறீங்களா?''

''ஒரு துப்பறிடவன். எல்லார் மேலேயும் தான் சந்தேகப்படணுங்க.''

''அது ஒரு பாவமும் அறியாத பொண்ணுங்க.''

''காலைல நமக்கு எத்தனை மணிக்கு வண்டி?''

''ஏழரைக்கு — ஸம்மர் ஸ்பெஷல்''

''நான் நாலரைக்கு இதை விட்டுக் கிளம்பிடலாம்ல்லே?''

''ஓ!''

''சரி, இப்பத் தூங்குவோம். நான் இங்கேயே படுத்துக்கிறேன்.''

''இங்கியா? பஸ்ட் கிளாஸ் ரூம்ல்லாம் மேலே இருக்குங்க.''

''வாண்டாம். இங்கேதான் நல்லா காத்து வருது. நீங்க மாடியிலே தூங்குங்க. யாராவது ஏறி வந்தாக்கூட நான் இங்கேயே மடக்கிடறேன்.... பணம் பத்திரமா இருக்கு இல்லே?''

''அதுவும் சரி'' என்றார் கமல்நாத். மாடி ஏறிப் போனார்.

மகேஷ் எழுந்து, லெட்ரீனுக்குப் போகிறாப் போலப் பின் பக்கம் போனான். வழியில் சமையலறையை எட்டிப்பார்த்தான். விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அலமாரியில் கத்தி அப்படியே இருந்தன.

வெளியே வந்தான். சில்லென்று காற்று வீசிற்று. சுற்று முற்றும் ஆள் அரவமே இல்லை. திரும்பி வந்தான். காரிடார் வெளிச்சம் 'அந்த' அறை முன் பாலாக விழுந்து கிடந்தது. போய்த் திறக்கலாமா என்று யோசித்தான்.

பின்னாலிருந்து யாரோ மறைவாகப் பார்த்துக் கொண்டிருப்பதாக உணர்ந்தான். திரும்பிப் போய் சோபாவில் படுத்துக்கொண்டான்.

தூங்காமல் விழித்திருந்தான். அறையையே கண்காணித்து வந்தான். நேரம்...ஓ...டி...க் கொண்டிருந்தது.

எச். எம். டி. நாலுக்கு வந்து, ''பையா— இங்கே ஒன்றுமே நடக்கப் போவதில்லை. சும்மா உன்னைப் போக்குக் காட்டியிருக்கிறார்கள்.'' என்றது.

எழுந்தான். சமையலறையில் கத்திகள் அப்படியே இருந்தன. கார் ஷெட்டில் கட்டப்படாத பெட்டி இருந்தது. டீக்கடை பலகையில் மப்டி ஆசாமிகள் தூங்கி வழிந்தார்கள். பாத்ரூம் போனான். திரும்பி வந்த போது கமல்நாத் எழுந்து வந்து கொண்டிருந்தார். ''நமஸ்தே லால்ஜி''

''நமஸ்தே!''

''கிளம்பிட்டீங்களா?''

''ஆமாம்.''

''சரி, போயிட்டு வாங்க. ரெண்டு நாள்ல வந்துடுவேன். பார்ப்போம்.'' — கண்ணைச் சிமிட்டினார்.

''நிம்மி—''

''என்னங்க பாஸ்?'' — கண்களைக் கசக்கிக் கொண்டு எழுந்து வந்தாள். ''ரொம்பப்பய மாயிடுச்சு — ராத்திரி. என்னென்னமோ கத்தல்கள். ஆளுங்க தடதடன்னு ஓடற-மாதிரி ஓசைகள் — தூங்கவே இல்லை.''

''லால்ஜி போறாராம். டாக்சியிலே. நீ வேணுக் கூடப் போய் உங்க வூட்லே இறங்கிக் கிறியா?''

''இதா ஒரு நிமிஷத்திலே மூஞ்சியை அலம்பிக் கொண்டு வந்து விடுகிறேன்.''— ஓடினாள். ''நானும் குளிக்கப் போகிறே னுங்க'' கமல்நாத் நகர்ந்தார்.

தனித்திருந்தான். பளிச்சென்று ஓடிப் போய் அந்த மணக்கும் அறைக் கதவைத் தள்ளினான். திறக்க முடியவில்லை. ஏழு லீவரில் உள்ளே பூட்டிக் கொண்டிருந்தது.



திரும்பினான். டெலிபோன் அடித்தது. எடுத்தான்.

பெண் குரல் ஒன்று சொல்லிற்று. ''லால்ஜி நீயா பேசறது?''

''ஆமாம்.''

''கொலைகாரன் உஷாராயிட்டான் லால்ஜி நீ மாறு வேடத்திலே கூடவே இருந்துட்ட தாலே பிளானை மாத்திட்டான். நீ அவன் கூட மதுரை போனதும் இங்கே—'என்னைத்' தீர்த்துடப் போறாங்க.''

''நீ யார்?''

''கமலின் மனைவி.''

''எங்கிருந்து பேசறே?''

''இதே கட்டிடத்திலேர்ந்துதான். நீ அவன் கூட மதுரை போகாதே மகேஷ். இன்னி முழுக்க இங்கேயே தங்கிடறதா சொல்லிடு, மகேஷ். உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கிறேன். மகேஷ். என்னை 'சேவ்' பண்ணு மகேஷ்!''

''உன்னைக் கடவுள் காப்பாற்றுவார்.''

''ஐயோ... நீ போகத்தான் போறியா?''

'டக்'கென்று வைத்து விட்டு வெளியே வந்தான். இரண்டு நிமிஷத்தில் நிம்மி 'பளிச்' சென்று வந்தாள்.

பெட்டிக் கடை ஆள் பீடி குடித்துக் கொண்டிருந்தான். ''யாரு அவன் கடை ஆளா?'' என்றான்.

''தெரியலை'' என்றாள் நிம்மி.

''சோமாரிப் பயல். காசு கொடுத்தால் போயி ஒரு டாக்ஸி பிடிச்சிட்டு வரமாட் டான்? நீ இங்கேயே இரு.''

போனான். பீடி எழுந்து நின்றான். ரகசிய மாக, ''மப்டியா?'' என்றான்

''ஆமாங்க.''

''காலைவரை ரொம்ப உஷாராக இருங்க. சந்தேகமா எவனாவது தென்பட்டா அரஸ்ட் பண்ணிவிடுங்க.''

கிசுகிசுத்தான். ஆள் டாக்சி கொண்டு வரப் போனான்.

நிம்மியைச் சௌகார்பேட்டை முனையில் இறக்கி விட்டு விட்டு ஆபீசுக்கு வந்தான். டாக்சி ஏதாவது பின்தொடருகிறதா என்று பார்த்துக் கொண்டான்.

டிரஸ் மாற்றிக் கொண்டான். நீலா உட்கார்ந்து, அழகான வளைவுகளால் பெரு மூச்சு விட்டுக்கொண்டிருப்பது போலிருந்தது.

வெளியே வந்து ஐயர் கடையில் காப்பி சாப்பிட்டு விட்டு டாக்சியில் ஏறி எழும்பூருக்கு விரைந்தான்.



மஞ்சு காத்துக் கொண்டிருந்தாள் — மகேஷுக்காக.

அவள் கட்டிலில் சம்மணமிட்டு உட்கார்ந்திருந்தாள். அவள் மடியில் ஒரு 'நியூ-கம்மர்' கால்களையும் கைகளையும் உற்சாகமாக உதைத்துக்கொண்டு கிடந்தான்.

மஞ்சு அவனைப் பார்த்துப் பெருமிதமாகச் சிரித்துக் கொண்டாள். 'அட கண்ணு! உங்க அப்பா பெரிய டிடெக்டிவாக்கும்' என்றாள்.

உடனே மகேஷை மானசீகமாக அருகில் உணர்ந்தாள். உருவமாக அருகில் நின்று, ''என்ன பையன் கிட்ட என்னமோ பேசிக்கிட்டிருக்கே'' என்றான்.

''ஒண்ணுமில்லிங்க'' நாணினாள்.

'மேடம்' என்ற குரல் கனவைக் கலைத்தது. திரும்பினாள். நர்ஸ். ''உங்களுக்கு டெலிபோன்!'' என்றாள்,

'எனக்கா?' — இறங்கிக் காலில் செருப்பை நுழைத்துக் கொண்டாள். நர்ஸ்கள்அறையை நோக்கிப் போனாள். அறை காலியாக இருந்தது.

''ஹலோ! மிஸஸ் மகேஷ் ஸ்பீக்கிங்.''

''மேடம்!'' குரல் கரகரப்பாக இருந்தது. ''உங்களைப் பார்த்தா ரொம்பப் பாவமா இருக்கு'' — பெண் குரல்.

''ஆச்சரியமாக இருக்கிறதே! என்னைப் பார்த்தா ஏன் பாவமாக இருக்க வேண்டும்? நான் நல்லாத்தானே இருக்கேன். — ஆமாம் நீ யார்?''


''இப்ப நல்லாத்தான் இருக்கே. ஆனா டே ஆஃப்டர் டுமாரோ?''

''என்ன ஆகப் போவுது?''

''நாளை மறுநாள் உன் கழுத்திலே தாலி இருக்காது மேடம்!''

''யூ ஃபூல்'' — கத்தினாள் மஞ்சு. ''என்ன உளர்றே?''

''உளறலே. உண்மையைச் சொன்னேன்.''



''நீ என்ன பெரிய திரிகால ஞானியா?''

''புவர் கேர்ள்'' — சிரித்தது குரல். ''அதை நாளைத் தெரிந்து கொள்வாய். இப்ப, உன் வெல் விஷர் சொல்றேன். கேட்டு. அதன்படி நடந்தால் உனக்கு நன்மை.''

''என்ன சொல்கிறாய் நீ?''

''உன் கணவன் பெரிய ஆபத்தில் சிக்கிக் கொள்ளப் போகிறான். அவனைத் தடுத்து நிறுத்திக் காப்பாற்றிக்கொள் என்கிறேன்.''

''யார் நீ?''

''உன்னைப் போய் ஒரு பெண். ஒரு சகோதரி.''

''முட்டாள் சகோதரியே! உன் எண்ணம் என்ன? பணம் பிடுங்கப் பார்க்கிறாயா, என்னிடம்?''

''சீ, நீயும் உன் பணமும்'' — சீறினாள் அவள். ''உன்மீது இரக்கப்பட்டு ஒரு இரகசியத்தைச் சொல்ல வந்தேன் பார் என் தலையில்.''

''கோபித்துக் கொள்ளாதே. விஷயத்தைச் சொல்லு.'' — தணிந்தாள் மஞ்சு.

''மஞ்சு! கவனமாகக் கேட்டுக்கொள். உன் பெயர் எனக்கு எப்படித் தெரிந்தது, நான் யார், எங்கிருந்து பேசுகிறேன் என்றெல்லாம் அலட்டிக் கொள்ளாதே. அகஸ்மாத்தாகத் தெரிந்த ரகசியம் சொல்கிறேன். சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரிந்தால் என் தலையைச் சீவிவிடுவார்கள்.''

''சரி, சொல்லு.''

''நாளை இரவு மதுரையில் ஒரு பெரிய கட்டிடம் வெடி குண்டால் தூள் தூளாகப் போகிறது.''

''ஐயோ?''

''அதனுள் 250 அறைகளில் வசிக்கிறவர்கள் அத்தனைபேரும்நசுங்கிப் புழுவாகச் சாகப் போகிறார்கள்.''

''கடவுளே!''

''அதில் ஒருஅறையில் மெட்ராசில் இருந்து வரப்போகிற இரண்டு முக்கியமான புள்ளிகள் தங்கவிருக்கின்றனர்.''

''யார் அவர்கள்?''

''ஒருவர் பெரிய பிலிம் டிஸ்ட்ரிபியூட்டர்; இன்னொருவர்...''

''இன்னொருவர்?'' — துடித்தாள் மஞ்சு.

''உன் ஹஸ்பெண்ட்.''

''ஓ— காட்!''

''அழாதே மஞ்சு'' என்றது குரல்.

''நீ சொன்னதெல்லாம் உண்மைதானா? உனக்கு எப்படித் தெரியும்?''

''நான்தான் அந்த விபத்திலே சாகப் போகிற கமலின் மனைவி.''

''அடிப் பாவி!''

''யார் பாவி? அவன்தான் பாவி. என்னைத் தினமும் சித்ரவதை செய்து கொண்டிருக்கிறவன் யார்? நிம்மி என்று ஒரு புது பிசாசு ஆட்டுகிறது அவனை. அதன் மூஞ்சியும் முகரையும் -- என்னை ஒழித்துக் கட்டிவிட்டு அவளை அழைத்து வைத்துக்கொள்ள நினைக்கிறான். என்னை ஒழித்துவிடத் திட்டம் போட்டான். நான் தப்பிவிட்டேன். இப்போ மதுரைக்குஅழைக்கிறது விதி. போய்ச் செத்து ஒழியட்டும். யாருக்கு என்ன?''

''மிஸஸ் கமல்! ஏன் அழுகிறீர்கள்?''

''அவனுக்காக அழவில்லை மஞ்சும்மா. அவனோட குற்றமற்ற உன் 'ஹப்பி'யும் சாகப் போகிறாரே என்றுதான்!''

''என்ன சொல்றே?''

''கமல் உன் கணவரைத் தனக்குப் பாது காப்பாகக் கூட்டிப் போக இருக்கிறார். அனுப்பாதே. பிடிவாதமாக நிறுத்திக் கொண்டு விடு.''

''அனுப்பவில்லை.''

''கடவுள் உனக்கு எல்லா நன்மைகளையும் செய்யட்டும்... சரி, இன்னொரு விஷயம்... நான் சரியான சமயத்துல இந்த உதவி பண்ணினதுக்கு நீயும் ஒரு உதவி பண்ண ணும்.''

''என்ன?''

''இந்த விஷயத்தை உன் கணவரிடம் சொல்லிவிடக் கூடாது. என் ஹப்பிக்கு ஊரெல்லாம் காதுகள்; கண்கள்.''

''ஓ, ஷ்யூர் நிச்சயமாகச் சொல்ல மாட் டேன். மதுரைக்குப் போவதாக என் கணவர் என்னிடம் சொல்லவே இல்லையே.''

''இனிமேல் சொல்வார். டிக்கெட் ரிசர்வ் ஆகிவிட்டது. நாளைக்காலையில்போகிறார்கள்.''

''மதுரையில் எந்த ஹோட்டலில் அது நடக்கப் போகிறது தெரியுமா?''

''ஹோட்டல் அண்டார்டிக்கில்.''

''ஓ, பசுமலையில் இருக்கிறது.''

''ஆமாம்.''

''இன்னொரு விஷயம். உன் கணவர், கமல் நாத்துடன் போவதை உன்னால் தடுக்க முடி யாவிட்டால் குறைந்தபட்சம் இருவரும் ஓர் அறையில் தங்காமலாவது பார்த்துக்கொள்.''

''ஓ எஸ்.''

''தாங்க்ஸ்.'' — அந்தப்புறம் ரிசீவரை வைத்தார்கள். மஞ்சு அறைக்குத் திரும்பி வந்தாள்.

அம்மா வந்திருந்தாள். சின்னப் பயலை மடியில் போட்டுக் கொண்டு மகிழ்ந்துகொண் டிருந்தாள். 'சீ, சிரிக்காதேடா கழுதை' என்று செல்லமாகக் கன்னத்தில் தட்டினாள்.

''அப்படியே அப்பாவை உரித்து வைச் சிருக்கு. மூக்கைப் பாருடி.'' என்றாள் அம்மா. நிமிர்ந்து சிலையாக உட்கார்ந்திருக் கிற பெண்ணைப் பார்த்தாள்.

என்னடி யோசனை?'' என்றாள். ''மூஞ்சி திடீர்னு வாடிப் போச்சு.''

''ஒண்ணுமில்லையே அம்மா'' என்றாள்.

நாலு தடவை எழுந்து போய் ஆபீசைக் கூப்பிட்டாள். மணி ஓயாமல் அடித்துக் கொண்டே இருந்தது. நாலு தடவையும் எடுக்கவே இல்லை.

எங்கே போய்விட்டார்கள் எல்லோரும்? நீலாகூடவா இல்லை?

இரவு வேகமாக நகர்ந்து கொண்டிருந்தது. மகேஷ் வருவான் என்று எதிர்பார்த்தாள். காலையில்தானே ரயில்? அதற்குள் சொல் லிக்கொண்டு போக வராமலா இருப்பார்? சொல்லிக் கொண்டு போக அவகாசம் இல்லை என்று சொல்லாமலேயே போன சந்தர்ப் பங்கள் நினைவில் வந்தன. வயிற்றைக் கலக்கியது.

தெய்வங்களைத் துணைக்கு அழைக்க ஆரம் பித்தாள். (தொடரும்)

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி 1981

பிரசுரத்துக்கு ஏற்கப்பட்ட கதைகள்

1. பிரம்மோபதேசம் — விமலா ரமணி
2. இங்கு மனக்கதவுகளுக்குப் பூட்டு இல்லை — கார்த்திகைபாலன் (அறிமுகம்)
3. தபஸ் — வாதூலன்
4. கர்மா — பொன்னித்துறைவன்
5. மணமுள்ள காகிதப்பூக்கள் — எஸ். சங்கரநாராயணன்
6. மறுபடி ஜனனம் — வினோதானந்த்
7. பிழைக்கத் தெரியாதவன் — கலைமணி (அறிமுகம்)
8. வானத்தைத் தொடாத வாணங்கள் — பிரபா நடராஜன்
9. அணைகள் உடைகின்றன — ராமாபுரம் சந்துரு
10. பரிணமிக்கும் புதுயுகதர்மங்கள் — ஜானகி மணாளன்
11. கூண்டுக்குள்ளே சில சட்டங்கள் — கிருஷ்ணகுரு
12. கார்பன் காப்பிகள் — ஜெரா
13. குடிசையில் ஒரு கோபுரம் — அன்னம்
14. கங்கை நதியில் ஒருபிள்ளை — ராம்பிரசாத்
15. புதிய வாசல்கள் — முத்துதங்க ஐயப்பன்
16. அவராகப் பேசவில்லை — பாமு
17. ஒருதாயின் சாபம் — பானுமதி ராஜகோபாலன்
18. ஒரு தொட்டில் அகழியாகிறது — பாமா கோபாலன்
19. இரவு ஒருமணி, மீனம்பாக்கம் — வஸந்த்



இதோ ஒரு கிராமம்

செங்கல்பட்டு மாவட்டத்தில் சில ஆண்டுகளுக்கு முன்னால் ஆர்ப்பாட்டமாகப் பேசப்பட்ட கிராமம் சோமங்கலம்.

இதையும் நடுவீரப்பட்டு, சிறுகளத்தூர், எருமையூர், அமரம்பேடு என்று இன்னும் ஒன்பது சுற்றுப்புறக் கிராமங்களையும் சேர்த்து இருபது அம்சத் திட்டத்தில் அக்கறை காட்டினார்கள். அது எப்படி முன்னேறியிருக்கிறது என்று பார்த்துவிட்டு வரலாம் என்று ஒரு சபலம். புறப்பட்டோம்.

குன்றத்தூர் வழியாக நந்தம்பாக்கம் வரும்போதே வங்கியின் அறிவிப்புப் பலகை கண்ணில் படுகிறது: இந்தியன் ஓவர்சீஸ் பாங்க்கின் பொறுப்பில் ஏற்றுக் கொண்ட கிராமம்.

இரண்டு புறமும் முந்திரிக் காடுகள். அப்புறம் இடதுபுறம் கொஞ்சம் யூகலிப்ட்ஸ் மரங்கள்.

இன்னும் கொஞ்சம் தள்ளி இடிந்தும் இடிக்கப்படும் மொட்டையாய் நிற்கும் ஒரு கட்டிடம். பதினைந்து ஆண்டுகள் முன்பு ஒரு தனியார் கல்லூரி தொடங்கி அந்த ஆண்டே மூடி விட்டார்களாம். பஸ் போக்குவரத்து இல்லை. பிள்ளைகள் வரமுடியவில்லை என்று ஒரு காரணம் சொன்னார்கள். இப்போது பஸ் வசதியும், சாலை வசதியும் சீராய் அமைந்துள்ளன.



மல்லிகை அரும்பு பறிக்கிறார் நாகம்மாள்

இன்னும் சற்று முன்னேறினால் 'இதோ இருக்கிறேன்' என்று சொல்கிற மாதிரி தெரிகிற கிராமம்தான் சோமங்கலம். ஊரை ஒட்டின மாதிரி ஒரு 'நினைவுச் சின்னம்'. பாரதப் பிரதமர் அப்போது ஹெலிகாப்டரில் வந்து இறங்கிய தளமும், அப்போது அவர் பேச அமைக்கப்பட்ட மேடையும் அப்படியே விட்டு வைக்கப்பட்டிருக்கின்றன.

நடுவீரப்பட்டுக்காரர் ஒருவர் அகப்படுகிறார். பேச்சுக் கொடுக்கிறோம்.

''மானாவாரிப் பூமிங்க. தண்ணி இல்லேன்னா வெவசாயம் இல்லே. அரிசியை நாங்களே வெல கொடுத்து வாங்கறமுங்க.''

''என்னங்க ஆச்சு? ஒங்க கிராமத்தை ஓகோன்னு ஆக்குடுவோம்னு பேசிக்கிட்டாங்களே...''

அவர் தம் பெயர் கோவிந்தன் என்று சொல்கிறார். மிகவும் வெளிப்படையாக எல்லாவற்றையும் ஒளிக்காமல் மறைக்காமல் சொல்கிறார்.

திருமுடிவாக்கம், பூவிருந்தவல்லி, காஞ்சீபுரம் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கிணறு ஆழப்படுத்த, மாடு வாங்க, உரம் வாங்க, குழாய் போட என்று இவருக்கு நிறையவே கடன் வழங்கியிருக்கிறார்கள்.

''போர்வெல்லு மேலே மூடி போட்டு அப்படியே பாழாப் போட்டுட்டாங்க...''



வாயைப் பிளந்து கொண்டு பரிதாபமாகக் கிணறு





நீயா?

சந்திரநாத்

9

மறுநாள் காலையில்தான் மகேஷ் கிடைத்தான். ''டார்லிங் நான் மகேஷ் பேசுகிறேன்.''

குரலைக் கேட்டதுமே அழுது விட்டாள். ''என் ஞாபகமாவது இருக்கிறதா? போங்க. நான் ஒண்ணும் உங்க கூட இனிப் பேசப் போறதில்லை.'' என்றாள்.

''ஏன்? நான் வாங்கிட்டு வந்த பகோடா நல்லா இல்லையா?''

''நீங்கதான் நல்லா இல்லே.''

''கரெக்ட். இன்னிக்கு ஷேவிங் பண்ணிக்கலை. ஸோ நல்லா இல்லை. எனக்கே தெரியுது. என்னம்மா பண்றது? டைம் இல்லே. ரொம்ப 'ஹர்ரி புர்ரி'லே இருக்கேன். நாளை மறுநாள் பார். மழ மழ மூஞ்சியுடன் வந்து நிற்கிறேன்.''

''சிரிக்காதீங்க. நானு ராத்திரி பூரா கவலைப்பட்டுத் தூங்கக்கூடச் செய்யாம தவிச்சுக்கிட்டு இருக்கேன்.''

''ஏய், என்ன இது!''

''ஆமாங்க, நாளைக்கு மறுநாள் நீங்க இந்த லோகத்துலேயே இருப்பீங்களான்னு நான் நடுங்கிக்கிட்டு இருக்கேனுங்க.''

''என்ன பேத்தல் இது?''

''நீங்க இப்ப மதுரைக்குப் புறப்பட்டுக்கிட்டு இருக்கீங்க இல்லே? ஸ்டேஷன்லே இருந்தோ இல்லாட்டி வேற எங்கியோர்ந்தோ போன் பண்றீங்க, இல்லே?''

''கரெக்ட். ஸ்டேஷன்லேர்ந்துதான் பேசறேன்.''

''என் ஜோசியம் கரெக்டா — நம்பறீங்களா என் வார்த்தையை? அப்ப — நான் சொல்கிறஅடுத்தஜோசியத்தையும்கேளுங்க''

''நீ எப்ப எந்த அருள்வாக்கு அம்முக்குட்டிகிட்ட ஜோசியம் படிச்சே — எனக்குத் தெரியாமே?''

''ஜோக் வேண்டாம். மதுரையிலே நீங்க தங்கப்போற ஹோட்டல் அண்டார்டிக், நாளை ராத்திரி பாம் வெடிச்சுச் சிதறி அழியப் போறது—''

''என்ன?'' — திடுக்கிட்டான்.

''நீங்களும் கமல்நாத்தும் 'ஹோகயா ஆகிவிடப் போறீங்க.''

''அப்புறம்?''

''நான் ஆயுசு முழுக்கக் கதறப் போகிறேன்.''

''அவசியமே இல்லை. நான் அண்டார்டிக்கில் தங்காமல் வேறு எங்காவது தங்கிக் கொள்கிறேன்.''

''அப்போ மதுரைக்குப் போறதுன்னே தீர்மானிச்சுட்டீங்களா?''

''நீ இப்பல்லாம் நிறையத் தூங்கறே மஞ்சு — நிறையக் கனவுகள் காண்றே—''

''கனவுலே கரெக்டா அண்டார்டிக் வருமா? மதுரை போறது தெரியுமா? நான் சொல்றதைக் கேளுங்க ப்ளீஸ்.''

''மஞ்சு, இதுக்கெல்லாம் என்ன அர்த்தம்?''

''கேட்க மாட்டீங்களா என் பேச்சை? எனக்கு வயித்தைப் பிசையறது. ஹனி; என்னமோ பெரிய விபரீதம் நடக்கப் போகுது டார்லிங்!''

''ராத்திரி உங்க அம்மா உனக்குத் 'திரிசடை' ஸ்டோரி சொன்னாங்களா?''

''என்ன திரிசடை?''

''அதான் ராமாயணத்துலே வருதே — அசோகவனத்துலே, ஜானகி கிட்ட வந்து லங்காபுரி பஸ்மமாகி விழப் போறதா சொப்பனம் கண்டதா சொல்றாளே—''

''எங்கம்மா ஓல்ட் டைப் இல்லே. — ரஜனி பத்தித்தான் பேசுவா.''

''ரைட் — வேறென்ன விஷயம்?''

''நான் சொல்றதைக் கேட்க மாட்டீங்களா?''

''இது பிஸினஸ் மாட்டர் மஞ்சு — டு யூ அண்டர்ஸ்டாண்ட். ஒரு துப்பறிபவன் என்றால் அவன் போகிற இடத்தில் எல்லாம் ஒரு ஆபத்து இருக்கத்தான் செய்யும்.— யார் பயமுறுத்தினாங்க, உன்னை, இப்படி?''

''யாரா இருந்தா என்ன? உங்களுக்கு என்மேலே உண்மையான அன்பு இருந்தா நீங்க மதுரை போக வேண்டாம்.''

''அசடே, என்ன இது! பிஸினஸ்லே எல்லாம் 'அன்பை'க் கொண்டாந்து நுழைத்துக்கொண்டு... மதுரையிலே ஒண்ணும் ஆயிடாது. ஒரு ஆளுக்காக ஒரு பெரிய ஹோட்டலை முழுக்கத் தகர்த்துட முடியாது.''

''ஏன் முடியாது?''

''பெரிய வெடிகுண்டாக் கொண்டாந்து பிளேன்லேர்ந்து போடணும். முடியுமா?

ஒரு ரூம்லே வெச்சா சேதம் அதோட நின்னுடும். நாலஞ்சு அறை சேதமாகலாம். நான் போன உடனே 'ப்ரிகாஷனு' அறை முழுக்கச் சோதனை போட்டுடுவேன்.''

''அப்பப் போறதுன்னே முடிவு செஞ் சுட்டீங்களா?''

''மேடம், கல்லிடைக்குறிச்சி நடுத்தெரு நாகசாமி ஜோசியரைக் கேட்டிருக்கிறயா, நீ?''

''இப்ப எதுக்கு அவரு?''

''இருபத்தெட்டு வருஷத்துக்கு முந்தியே அவர் பட்டை எழுத்தாணியாலே எழுதிக் குடுத்துட்டார். நானும் என் சம்சாரமும் என் எண்பது வயசிலே காசி, ரிஷிகேஷ் எல்லாம் போவோம்னு — எனக்குத் தீர்க் காயுசு.''

''மகராஜனு இருங்கோ.''

''போய்ட்டு வான்னு சொல்லு.''

''போகாம முடியாதா?''

''எப்படி முடியும்?, மஞ்சு?''

''அப்ப ஒரு வாக்குக் குடுத்துட்டுப் போங்க.''

''ஐயையோ, கைகேயியம்மா என்ன கேட்கப் போறிங்க, தெரியலையே.''

''நீங்க / கமல்நாத் தங்கற அறையிலே தங்கக் கூடாது. தனி அறை எடுத்துக் குங்க.''

''அவ்வளவுதானே — சரி.''

''பிராமிஸா?''

''பிராமிஸா'' — பேசாதிருந்தாள். ''மதுரையிலேருந்து உனக்கு என்ன வாங்கிட்டு வரணும்? நாகப்பட்டினம் ஒரிஜினல் நெய் மிட்டாய்க் கடை ஸ்வீட்டா — சுமங்கலி ஜாங்கிரியா?''

''உங்க உடம்பை, உசிரை, பத்திரமாக் கொண்டாந்துஒப்படையுங்க. அதுபோதும்.''

''ஷ்யூர், ஷ்யூர்.''

ரயில் கடகடவென்று ஓடிக் கொண்டிருந்தது. பெரிய சாம்பல் நிற ஷெர்வானி



யில், கழுத்திலிருந்து முழங்கால் வரையில் ஒரே பித்தான்களாகத் தொங்க விட்டுக்கொண்டு உட்கார்ந்து, சின்ன நாவலில் மூழ்கியிருந்தார் கமல்நாத்.

ஒரு கொடுவாள் மீசைக்காரன் (பட்டிக்காட்டான் அல்ல, பாண்ட், ஸ்லாக் வீரபத்திரன்தான்) எதிர் வரிசையில், மகேஷ் அருகில் உட்கார்ந்து, ஒரு ஆரஞ்சுப் பழத்தை உரித்துக் கொண்டிருந்தான்.

திடீரென்று நிமிர்ந்து ''எந்த ஊர் போச்சுங்க?'' என்று கேட்டார் கமல்நாத்.

''செங்கல்பட்டுங்க'' என்றான் மகேஷ்.

''ஐயா எதுவரை போறீங்களோ?''

''மதுரை வரை. நீங்க?''

''நானும் மதுரை வரையிலதாங்க. — யாவார விஷயமாப் போறேன்.''

''என்ன பிஸினெஸ்?''

''பொகையிலேங்க. சுருட்டுக் கம்பெனி நடக்குதுங்க. லண்டன், ஒட்டாவா எல்லாம் போவுதுங்க.''

கொடுவாள் ஒரு பீடியைச் செல்லமாக உருவிப் பற்றவைத்தான். 'புஸ்' என்று புகை விட்டான்.

கமல் அவன் தோளைத் தொட்டு, 'சக பயணிகள் அனுமதியின்றிப் புகைக்கக்கூடாது' என்ற அலட்சியப்படுத்தப்பட்ட எச்சரிக்கையைக் காட்டினார். மீசை முணு முணுத்துக்கொண்டே எழுந்து தூரப் போனான்.

கமல் சிரித்தார். தணிந்த குரலில், ''சாயங்காலம் வரையில் நம்மாலே சுருட்டைப் பத்திப் பேச முடியுமுங்க'' என்றார்.

''நல்லா வேஷம் போடறீங்க'' என்றான் மகேஷ்.

கொடுவாள் பீடியை எறிந்து விட்டுத் திரும்பி, மூஞ்சியை 'உம்' என்று வைத்துக் கொண்டு வந்தான். கமல்நாத் சுகமாக ஜன்னலோரம் சாய்ந்து கொண்டு ஒரு ச. தேவி புத்தகத்தில் தெரிந்த கிராக்கியின் துடைகளில் விரலால் ஊர்ந்து கொண்டிருந்தார்.

மதுரை இருளில் முழுக ஆரம்பித்திருந்தது. இட்லிகள் தெருவோரம் மலரத்

''நம்ம கல்யாணம் நடந்த வருடம் ஞாபகமிருக்கிறதா?''
''ஏன் இல்லாமல், 'விரோதி' வருடமாயிற்றே!''
— ஏ. வி. தேவன்



தொடங்கி யிருந்தன. மல்லிகை அரும்பாக மணத்தது.

ஸ்டேஷன் பிளாட்பாரத்திலேயே பிரிந்து கமல் முன்னால் போக அவரைக் கண் காணித்துக் கொண்டு பின்தொடர்ந்து, ஹோட்டல் நிர்மலாவில் நுழைந்து 'கல்லா' முன் நின்றார்கள்.

ரூம் இருந்தது. சாவியைக் கொடுத்தான். தூக்கி வாரிப் போட்டது. — பதின்மூன்றும் நம்பர் ரூம்.

கமல்நாத்தின் முகத்தில் கலக்கம் தெரிந்தது. ''பேர் சொல்லுங்க.''

''கமல்நாத், மெட்ராஸ்'' என்றார். ''டபிள் காட் ரூம்தானே?''

''இல்லேங்க. சிங்கிள் ரூம்தான். 'டபிள்' எல்லாம் ஏற்கனவே 'புக்' ஆயிடுச்சு'' என்றான் கிளார்க்.

''எனக்கு டபுள் ரூம் வேணுமே.''

''சாரிங்க. வேணும்னா 12ம் நம்பர் காலியா இருக்கு. சேர்த்து எடுத்துக்குங்க.'' என்றான். வாங்கிக் கொண்டார்கள். ''அதுவும் உங்க பேரிலேயே போடணுங்களா?'' கேட்டான். ''அப்படியே போட்டுக்க'' என்றார்.

மேலே போனார்கள். தனித் தனி ஆள் மாதிரி போனார்கள். சம்பந்தமற்றவர்கள் போலக் கூட்டத்தில் கலந்து போனார்கள்.

முதல் தளத்திலேயே முப்பது அறைகள் வரிசையாக இருந்தன. பதின்மூன்றைத் திறந்து விட்டான் பையன். மகேஷ் 12க்குள் போனான்.

குளித்தான். டிரஸ் மாற்றிக்கொண்டான். அறையைப் பூட்டிக் கொண்டு வெளியே வந்தான். கமல்நாத் அறை—வாசலில் நின்றிருந்தார். முகம் ஏகக் கவலையைக் காட்டிற்று. ஒரு பேப்பரைப் படிப்பது போல் பிடித்துக் கொண்டிருந்தார்.

மகேஷ் கிட்டப் போனதும் ஒரு ஷீட்டை நழுவ விட்டார். எடுத்துக் கொடுத்தபோது தணிந்த குரலில் சொன்னார்: ''ஸார்—எங்கியும் போயிடாதீங்க. இந்த வராந்தா கோடியிலேயே பெஞ்சிலே உட்கார்ந்து ஏதாவது படிக்கிற மாதிரி இருங்க. யாராவது என் அறைக்கு வந்தா ஒரு கண் வச்சுக்கிடுங்க.'' என்றார்.

வராந்தா கோடியில் ஒரு பெஞ்சியில் சில பத்திரிகைகள் கிடந்தன. பெரும்பாலான அறைகள் மூடியிருந்தன. வெளியே நட்சத்திரங்கள் தெரிந்தன. மீனாட்சி அம்மன் கோபுரத்தில் விளக்காகச் சிரித்தாள்.

கமல்நாத் உள்ளே போய்க் கதவைச் சாத்திக் கொண்டார்.

பத்திரிகைகள் பழசாயின. படித்ததையே படிக்க அலுத்தது. பல முகங்கள் — மூக்குத்தி முகங்களும்கூடத்தான் — தாண்டிச் சென்றன. மணத்து நகர்ந்தன.

வராந்தாக் கடிகாரம் ஒன்பதைக் காட்டிற்று.

கமலைச் சந்திக்க யாரும் வரவில்லை.

ஒன்பதரை நெருங்கியது. கமலே வெளியே வந்தார். வராந்தா படு 'எம்டி'யாக இருந்தது. கையை அசைத்து வரச் சொன்னார். போனான். ''சரி, உங்க ரூமுக்குப் போய்ப் படுங்க. அவங்க நாளைக்குத்தான்

வருவாங்க போலிருக்கு. சாப்பாடு ரூமுக்கு வரும்.'' என்றார்.

—யாரை எதிர்பார்க்கிறார் இவர்?

''ரூமை ஒரு வாட்டி நல்லாப் பார்த்துடறேனுங்க.''

''பார்க்க என்ன இருக்கு — சரி வாங்க.''

பார்த்தான். சந்தேகமாக ஏதும் தென்படவில்லை. அக்கம் பக்கம் எல்லாம் பார்த்தான். திரும்பி வந்தான். சாப்பாடு வந்திருந்தது. குருமா நாற்றமாய் நாறியது.

சாப்பிட்டுப் படுத்தான். தூக்கம் கண்ணைச் சுழற்றியது. நிலாவின் சின்ன இடையை அருகில் இழுத்து முகம் பதித்துக் கொண்டு ஆனந்தமாகத் தூங்கினான்.

விழிப்பு வந்தபோது—

சுத்தமான, சுகமான பிராண வாயுவுக்குப் பதிலாக வேறு ஏதோ ஒன்று மூக்கை அறுத்தது. அறையில் படலம் படலமாகப் புகை புகுந்து கொண்டிருந்தது ஜன்னல் வழியாக.

ஓ—என்னமோ ஆகிவிட்டது! வெடி குண்டு வெடித்து விட்டதா? ஹோட்டல் ஹோகயாவா? — பரபரப்புடன் கட்டிலை விட்டுக் கீழே குதித்தான்.

அறைக்கு வெளியே ஏராளமான மனிதர்கள் அங்கும் இங்கும் ஓடினார்கள். கத்தினார்கள்; கதவுகளை அறைந்தார்கள்.

அவசரமாகக் கதவுப் பக்கம் நகர்ந்து திறந்து கொண்டு வெளியே வந்தான். திடுக்கிட்டான்.

ஹோட்டல் முழுக்க 13ம் நம்பர் அறை முன் கூடி நின்று கதவை இடித்துத் தகர்க்கப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தது. கதவில் சில ஓட்டைகள் காணப்பட்டன. அதன் வழியாகப் புகை பீறிக்கொண்டு வந்தது.

'ஓ! கமல்நாத்ஜி!' — கத்திக் கொண்டே ஓடி எல்லோரையும்விலக்கிக் கொண்டுசென்று கதவைத் தன் சக்தியை எல்லாம் திரட்டி நெட்டித் தள்ள —

அது படீரென்று திறக்க—

உள்ளே கண்ணைப் பறிக்கும் செந்நிற ஒளி கமல்நாத்தின் கட்டிலின் மீது நர்த்தனமாடிக் கொண்டிருப்பதைக் கண்டு திகைக்கையில்—

மனித உடம்பு பொசுங்கும் நாற்றம் வயிற்றைப் புரட்டியது.

மகேஷ்—

மயங்கித் தள்ளாடிச் சாய்ந்தான்.

(தொடரும்)

அவளும் தாயானாள்!

□ ஆரம்பத்தில் நாயகி பாவாடையை வரிந்து கட்டிக் கொண்டு கம்புச் சண்டை போடும்போதே வசமாய் வந்து மாட்டிக் கொண்டோம் என்று தெரிகிறது. ஒரு நடிகப் பட்டாளமே அறிமுகமாகிறது. சமீபத்தில் நாயக நாயகிகளுக்கு அழகு தேவையில்லை நடிப்புப் போதும் என்று தமிழில் நிரூபித்து வந்தார்கள். இந்தப் படத்தில் நடிப்புக்கூட அவசியமில்லை என்று காட்டி விட்டார்கள்.

கதை என்ன என்று அறிய எவ்வளவு பிரயத்தனப் பட்டும் முடியவில்லை. புரிந்து கொண்டு விடாமல் இருக்க வசனமும் துணை நிற்கிறது. ஒரு கிராமம். ரவுடிக் கூட்டம். கையில் கம்பும் மனத்தில் தெம்பும் உள்ள நாயகி. கயவர் கூட்டம் நாயகியை அடையத் திட்டம் போட — மற்றவர்கள் என்னென்னவோ பேசிக் கொள்கிறார்கள். இதில் சஸ்பென்ஸ் வேறு.

பேங்க் பணம் — அவனுக்குப் பாதி இவனுக்குப் பாதி என்று திட்டம் போட்டுத் தேவையில்லாமல் கொலையும் நடந்து .... கேமரா வேறு அனுவசியத்துக்குச் சுற்றுகிறது. பாதி பேச்சு கேட்கவே யில்லை. அந்தவரை தப்பினோம்.

2மணிநேர சுகமான தூக்கத்துக்கு	ரூ.	3—00
கொடுப்பது	ரூ.	2—30
லாபம்	ரூ.	0—70

பணம் மட்டுமிருந்தால் தயாரிப்பாளராகலாம், முகத்தில் 5 மில்லி மீட்டர் பவுடரை அப்பிக்கொண்டால் நடிகனாகலாம், கட் சொன்னால் டைரக்டராகலாம், கத்தரி இருந்தால் எடிட்டராகலாம் — இப்படியாக எல்லாத் துறைகளிலும் பரி'சோதனை' பண்ணித் தமிழ் சினிமாவுக்குத் தங்களாலான தொண்டு புரிந்திருக்கிறார்கள். இவர்களை 'பாய்காட்' பண்ணுவதே நாம் செய்யும் தொண்டு.

—நளினி சாஸ்திரி







''மெதுவாகப்பேசு! நாம் பார்க்கப்போவது 'A' படம். குழந்தைகளும் படம் பார்க்க வருவோம்னு பிடிவாதம் பிடிக்கும்.''

''அவர்கள் பார்த்துவிட்டு வந்து கதையைச் சொன்னபிறகுதானே எனக்குப் படம் பார்க்க வேண்டும் என்ற ஆசையே வந்தது!''



சந்திரநாத்

நீயா?



10

"மிஸ்டர், உங்கள் பெயர்?" — ஒரு போலீஸ் குரலின் அதட்டலைக் கேட்டு, மகேஷ் இந்த உலகத்துக்குத் திரும்பி வந்தான்.

எதிரே காக்கிச் சட்டைகளும்பெல்டுகளும்தெரிந்தன.

"மகேஷ்" என்றான்.

"ஏதோ சாமியார், சந்நியாசி மாதிரி இருக்கிறதே — ரிஷிகேஷா — கிஞ்சின்ஜங்காவா?"

"மன்னிக்கவும். நான் குடும்பஸ்தன்" என்றான் உஷ்ணமாக.

"தொழில்?"

"பிஸினஸ்."

"எங்கே?"

"மெட்ராஸில்."

"என்ன பிஸினஸ்?"

"பிரைவேட் - ஐ."

"ஓ!" என்றார் இன்ஸ்பெக்டர். பிரைவேட் 'ஐ'களை அவருக்குப் பிடிக்காது. பிரைவேட் ஐக்களுக்கு இன்ஸிகளைப் பிடிக்காது. முகத்தைச் சுளித்தார்.

"ஹோட்டல் நிர்மலாவில் என்ன பண்ணிக் கொண்டிருந்தீர்கள்?"

"என் கிளையண்ட் ஒருவரைப் பாதுகாத்துக் கொண்டிருந்தேன்."

"கிளையண்டின் பெயர்?"

"கமல்நாத்."

இன்ஸ்பெக்டர் வாருவதற்குச் சரியான வாய்ப்புக் கிடைத்ததில் உற்சாகமடைந்தார், சிரித்தார். "நீ பாதுகாத்த லட்சணம்தெரியுதா? உன் ஆசாமி குளோஸ். அவரைக் கத்தியால் குத்திப் படுக்கையிலேயே எரிய விட்டிருக்காங்க. நீ சுகமாக அடுத்த அறையிலே தூங்கியிருக்கிறே!"

"ஓ, மை காட்!" — தலை சுற்றியது மகேஷுக்கு.

"அவருக்கு என்ன தொழில்?"

"பிலிம் டிஸ்ட்ரிபியூட்டர்."

"விரோதிகள் உண்டா?"

"தெரியாது."

"ஏன் இந்த மதுரைக்கு வந்தார்?"

"என்னிடம் சொல்லவில்லை."

"பின்ன ஏன் ஐயா உன்னைக் கூட்டிக்கிட்டு வந்தார்?"

"துணைக்கு."

இன்ஸ்பெக்டர் அவநம்பிக்கையுடன் பார்த்தார். "நீயேதான் கொலை செய்திருப்பாயோ?" என்று பார்வை கேட்டது.

"317, இந்த ஆளைப் பிடிச்சு இரண்டு நாளைக்கு உள்ளே போடு' என்று சொல்ல நினைத்து, ஏதோ நினைவு வந்து நிறுத்திக் கொண்டு, "உன்னை எப்படி 'ஐடென்டிஃபை' பண்றது?" என்று தணிந்தார்.

மகேஷ் உள் சட்டைப் பையிலிருந்து அத்தாட்சிப் பத்திரத்தை எடுத்துக் காட்டினான்.

"அடுத்து என்ன செய்யப் போறே?"

"கொலைகாரனைக் கண்டு பிடிக்கணும்."

"கண்டு பிடிச்சுடுவாயா? முடியுமா?" — எகத்தாளமாகக் கேட்டார்.

"உங்களாலே முடிஞ்சா நீங்களும் கண்டு பிடிக்கலாம்." — அந்த 'முடிஞ்சா'லே இன்னொரு எகத்தாளத்தைத் தோய்த்துத் திருப்பி எறிந்தான். எந்தக் கொலைக் கேஸில் எந்தக் குற்றவாளியை நீங்க கண்டு பிடிச்சிருக்கீங்க? என்ற குத்தல் அதில் தொனித்தது.

"அதென்னய்யா — முடிஞ்சா? — கண்டு பிடிக்கத்தான் போறோம்."

"செய்யுங்க. — நான் போகலாமா?"

"மதராசுக்கா?"

"மதராஸுக்குக் குற்றவாளியோடுதான் போவேன். மிஸ்டர் இன்ஸ்பெக்டர், இப்ப என் விசாரணையை ஆரம்பிக்கப் போறேன்."

"நாங்களும் உங்களை மேலே விசாரிக்க வேண்டியிருக்கும். இன்னும் இரண்டு நாள் மதுரையை விட்டு நீங்க போகக் கூடாது."

"ஹோட்டல் நிர்மலாவிலேயே இருப்பேன். ஆல்வேஸ் வெல்கம்." எழுந்து வெளியில் வேடம் களைந்து வந்தான். வராந்தாவில் புகை இன்னமும் இருந்தது. அறையில் தீயை அணைத்து விட்டார்கள். உடம்பின் எஞ்சிய சின்னங்களை எடுத்துப் போய்விட்டிருந்தார்கள்.

'சீ! என்ன லட்சணமாக நான் பாதுகாப்பு வேலை செஞ்சிருக்கிறேன்?' — வெறுத்தான். 'என் கிளையண்டை நான் அறியாமலேயே கொன்று — பிறகு நான் எதற்காக ம்—?' விக்கித்தான். எதிரி ஜெயித்து விட்டான். சந்தேகமே இல்லை.

கோயிலோரமாக நடந்தான். கமலே நினைவில் மிதந்தார். 'மகேஷ், என்னைக் கைவிட்டுட்டியே' — கதறினார்.

"விடமாட்டேன். உன்னைக் கொன்ற மிருகத்தைக் கண்டு பிடித்தே தீருவேன்."—உறுமிக்கொண்டான்.

எதிரே ஒரு 'கூல்' பார் இருந்தது. உள்ளே நுழைந்து ஒரு பானத்தைத் தருவித்துக் கொண்டு உறிஞ்சியபடியே நெடு நேரம் நின்றிருந்தான்.

கேள்விகள் வளையங்களாகச் சுழன்றன.

(அ) இந்தக் கமல்நாத் யார்? ஒரிஜினல் பிஸினஸ் ஆள்தானா?எந்த ஊர்? பூர்வோத்ரம் என்ன?

விசாரித்தானா ?விசாரிக்கவில்லை. எவ்வளவு பெரிய தவறு!

அடுத்ததாக, ''வெறும் பாடிகார்ட்'' வேலைதானே என்று அலட்சியமாக இருந்தான். அதுவும் பெரிய பிசகில்லையா?

ஆனால் கமல்நாத் ஆபத்தை எதிர்பார்த்திருக்கிறார். அது வரும்போது உதவுவதற்காகத்தான் தன்னை அமர்த்திக்கொண்டார். இரவில் எல்லோரும் தூங்கிய பின் கூட ஆபத்து வரலாம் என்று அவன் ஏன் எதிர்பார்க்கவில்லை?

'கமல்ஜி! நீங்களாவது உங்கள் பய எதிர்பார்ப்புகள் பற்றி என்னை எச்சரித்திருக்கலாமே ஏன் செய்யவில்லை?'

பானம் வற்றிவிட்டதும் கீழே வைத்துவிட்டு வாசலுக்கு வந்து நின்றான். பார்க்கில் கடலை விற்றார்கள். ஒரு பெண் — பயமற்ற பார்வையுடன் பேரங்களை எதிர்பார்த்து நின்றாள்.

படுக்கையில் எரியும் கமலை சூன்யத்தில் பார்த்துக் கொண்டு மகேஷ் நின்றான். கேள்விகள் மீண்டும் எழுந்தன.

(ஆ) கொலையாளி எப்போது வந்தான்? யார் அவனுக்குக் கதவைத் திறந்து விட்டார்கள்? கமலா?

(இ) ஏன் அவன் படுக்கையில் தீவைத்தான்? கத்திக் குத்து ஒன்றே போதாதா? தீயை வேறு வைத்து ஏன் எல்லார் கவனத்தையும் கவர்ந்தான்?

தீ வைக்காமல் இருப்பதுதான் விடியும் வரை அந்தக் கொலையைப் பற்றி உலகம் அறியாதிருக்க உதவும் என்பதும் தீவைத்தால் உடனே அக்கம் பக்கத்தார்விழித்துக் கொண்டு ஓடிவந்துவிடுவார்கள் என்பதும் அவனுக்குத்தெரியாதா?



(ஈ) கொலையை மறைத்தும், கமல்நாத் தீ விபத்தில் இறந்தார் என்று 'எஸ்டாபிளிஷ் பண்ண எண்ணினானா?

(உ) அப்படியானால் கத்தியை அப்படியே மார்பில் விட்டுச் சென்றிருக்க மாட்டானே?

நாகப்பட்டினம் அல்வாக் கடையில் அல்வா தட்டைத் துடைத்துக் கொண்டிருந்தார்கள். கடந்து அப்பால் போய், ஒரு பெட்டிக் கடையில் ஒரு சிகரெட் வாங்கிப் பற்றவைத்துக் கொண்டான்.

வீதியெங்கும் பிரசித்தி பெற்ற மதுரை மல்லிகைகள், கடை கடையாய், தட்டுத் தட்டாய், குப்பலாய் மணத்தன. ஆனால் அவனுக்குக் கமல்நாத் தீயில் எரிந்து நாறுவது போலிருந்தது. வெறுப்பாக இருந்தது. பார்க்கவே பிடிக்கவில்லை, மதுரையை.

ஒருவேளை இது எல்லாமே முன்கூட்டியே திட்டமிட்டதாக இருக்குமோ? மூளையில் ஒரு புதிய ஒலி கேட்டது. ''கமல்நாத்தே ஏற்பாடு செய்ததாக இருக்குமோ''

தீயிலிருந்து கிடைத்த உடல்அடையாளம் தெரியாதவாறு கருகிக் கிடந்ததைக் கவனத்தில் எடுத்துக் கொண்டு பார்த்தால்—

இறந்தது கமல்நாத்தாக இல்லாமலும் இருக்கலாமே! ஓ,இறந்தவர்கமல்நாத் இல்லை. ஆனால் தான் இறந்துவிட்டதாக எல்லோருக்கும் தெரியப்படுத்த கமல் விரும்பியிருக்கிறார். இறந்தது கமல்தான் என்று சாட்சி சொல்லத் தான் அவனை அழைத்து வந்திருக்கிறார்.

—ஓ, கமல்தான் கொலைகாரன். அவர் தான் வேறு யாரையோ தருவித்துக் கொலை செய்து, தீயிட்டுப் பொசுக்கிவிட்டு, எங்கோ மறைந்து விட்டார் — ஏன் கூடாது?

மளமளவென்று நடந்து ஒரு மெடிகல் ஸ்டோரில் நுழைந்து, பெர்மிஷன் பெற்றுச் சென்னையைப் போனில் அழைத்தான்.

''நடேஷ் ஹியர்'' என்றது குரல்.

''நான் மகேஷ் பேசறேன்.''

''ஓ-மை டியர்! யங் பாய் ஹௌ ஆர் யூ?''

''வெல் நடேஷ்'' என்ருன்.

''குட் நியூஸ் மை டியர் — நீலா வந்து விட்டாள்'' என்ருன் நடேஷ்.

''வந்துவிட்டாளா? எப்போ, எப்படி?''

''நீ போன இரண்டாவது மணி நேரமே முனே முறியாமல் வந்து சேர்ந்து விட்டாள். ஒரு காயம்இல்லே. நான்தான்சொன்னேனே!''

''கடவுள் காப்பாற்றினுர்.''

''நான்தான் சொன்னேனே — உன்னே மெட்ராசிலேயே மடக்கிப் போடத்தான்நீலா வைக் கடத்தி உனக்குப் பயம் காட்டியிருக் கிருர்கள். வடக்கத்திப் பொம்பளே, நரபலி எல்லாம் வெறும் கதை... டூப்.... அதையும் மீறிக் கிளம்பி விட்டாய் என்று தெரிந்ததும் அவளே ரிலீஸ் செய்து விட்டார்கள்.''

''கமல் வீட்டில் கொலே நடக்கப் போவ தாக வந்த கால்?''

''தட் ஆல்ஸோ ஏ டூப். — கமலிடம் நீ நம்பிக்கை இழந்து அவன் கூட வர முடியாது என்று நீ மறுத்து விட வேண்டும் என்று விரும் பினுர்கள்.''

''கொலே ஒன்றும் நடந்துவிட வில்லேயே?''

''ஒரு கோழிக்குஞ்சு கூடச் சாகவில்லே.''

''ஆச்சரியம்தான்.''

''மனேவி என்று ஒருத்தி இருந்தால் அல் லவா கொலே செய்ய?''

''ரியலி?''

''கமல் கட்டைப் பிரம்மச்சாரி. நான் விசாரித்து விட்டேன்.''

''ஓ!''

''கமல் மதுரைக்குத் தனியாக வரவேண் டும் என்று யாரோ விரும்பினுர்கள். கமலும் யாரையோ தனியாகச் சந்திக்க அஞ்சினுர்.''

''அவர் அஞ்சியதில் அர்த்தம் இருக்கிறது நடேஷ்.''

''பையா — என்ன சொல்கிருய்?''

''அந்தக் கமல்நாத் இங்கே இறந்து கிடக் கிருர் நடேஷ்.''

''வாட் — வாட்?'' — அதிர்ந்தான் நடேஷ். ''கொலேயா?''

''கொலே என்றுதான் தோன்றுகிறது. கொன்று படுக்கையில் கொளுத்தியுமிருக் கிருர்கள். பாடி சுத்தமாகக் கருகிவிட்டது.— நான்கொஞ்சம் அயர்ந்துஇருந்துவிட்டேன்.''

''இடியட்!'' இரைந்தான் நடேஷ்.

''கோபிக்காதே நடேஷ். நடந்ததை முழுக் கக் கேள்.''—விவரமாகச் சொன்னுன். கேட்டு விட்டு, ''இப்போ எதற்குக் கூப்பிட்டாய்?'' என்ருன் நடேஷ்.

''எனக்குக் கமல் பற்றிச் சில தகவல்கள் தெரிய வேண்டும்.''

''நீ கேட்பாய் என்று தெரியும். நேற்றே நிறைய விசாரித்து விட்டேன்.''

''கமலின் பூர்வோத்ரம் என்ன?''

''சொல்கிறேன். கமல் என்கிற இந்த ஆளேப் பற்றி இந்தப்பட்டணத்துக்கு மூன்று ஆண்டுகளாகத்தான் தெரியும். ஆள் பிரம் மச்சாரி. பெண் தொடர்பு இருப்பதாகத் துப்பு இல்லே. சமையற்காரன் இவனேத் தங்கம் என்கிருன். ஆனுல் ஆசாமிக்கு இப்போ பணக் கஷ்டம் என்கிருர்கள். இரண்டு படம் டிஸ்டிரிபியூட் எடுத்துப் படு மோசமாக ஓடியிருக்கிறது.''

''மூன்று வருஷத்துக்கு முன் எங்கிருந் தான்?''

''தெரியாது.''

''அவனுக்கு எதிரிகள் யாராவது...?''

''மெட்ராசில் நிச்சயம் இல்லே.''

மௌனம். ''எனி மோர் கொஸ்சென்ஸ்?''

''நோ...தாங்க்ஸ் — நாளே பேசுகிறேன்.''

''இரு அப்பா — இன்னெரு முக்கியமான செய்தி இருக்கிறது.''

''என்ன?''

''நீயும் கமல்நாத்தும் இங்கிருந்து எத் தனும் தேதி கிளம்பினீங்க?''

''ஜூன் 2ம் தேதி. அதாவது நேற்றுக் காலே.''

''அதே ஜூன் 2ந் தேதி காலே ஆறு மணிக்கு உன் ரயில் புறப்படுவதற்குப் பதி னேந்து நிமிஷத்துக்கு முன்னுல்எழும்பூர் ஸ்டே ஷனிலிருந்து ஒரு பெண் ஒரு அபூர்வ தந்தி கொடுத்திருக்கிருள் — மதுரைக்கு.''

''ஓ!'' — நிமிர்ந்து கூர்ந்து கேட்டான் மகேஷ்.

''தந்தியில் என்ன இருந்தது தெரியுமா? ''அக்பருக்கு டபிள் ஜே'' என்கிற ஒரே வார்த்தை—''

''வாட்... வாட்?''

''தந்தி குமாஸ்தாவுக்கே ஆச்சரியமாக இருந்ததாம். ஆனுல் தந்தியையும் பணத்தை யும் கொண்டு வந்தவன் ஒரு சின்னப் பையன். ரயிலடி பொறுக்கி... 'யாருடா இதைக் குடுத்தாங்க' என்று குமாஸ்தா கேட்டாராம். பையன், 'அதா, அந்த அம்மா'ன்னு காட்டி ஞனம். பழக் கடைகள் அருகில் ஒரு பெண் ணின் முதுகுதான் தெரிந்ததாம்.''

''தந்தியில் கொடுத்தவர் கையெழுத்து இருக்குமே?''

''இருந்தது — 'நூர்' என்று. விலாசம் ஏதோ கொடுத்திருந்தாள். அங்கே போய் விசாரித்ததில் அப்படி யாரும் இல்லே. அது ஒரு சிகரெட் ஸ்டால்.''

''ரொம்பஆச்சரியமாக இருக்கிறதுஇல்லே''

''ஆமாம். மதுரை தள்ளாகுளம் போஸ்ட் மாஸ்டரைப் போய்ப் பார். நிஷார் அகமது கேராஃப் போஸ்ட் மாஸ்டர் என்று யாராவது வந்து தந்தியை வாங்கிக் கொண்டு போயிருப் பார்கள். எக்ஸ்பிரஸ் தந்தி.''

''இதோ இப்போதே போறேன்.'' வேக மாகக் கிளம்பினுன் மகேஷ். (தொடரும்)

''கணக்கு என்ருல் காததூரம் ஓடுவானே நம்ம பிள்ளேயாண் டான் இப்போ எப்படி சார்?''

''எவ்வளவோ தேவலே! பள்ளிக்கூட கேட்வரைதான் ஓடு கிருன்...!''

-பெ. கலாசாமி



படக்கதை



சே, ஏன்தான் பேலன்ஸை எழுதினேனே?
நல்ல பையனாய் நாலாயிரத்துக்கு பேரர் செக் போட்டுட்டே இரு இரு. ஏதோ லெட்டர் எழுதி வச்சிருக்கியே... அதில் போட்ட கையெழுத்து இதோடு பொருந்துதா பாக்கறேன்... ....பொருத்தமாய் இருக்கு. இனிமேல் இதே மாதிரியே கவுன்டர் ஃபாயில்லே இருப்பை எழுதிவை ராஜா!
ஓவர் டைமுக்காக ஆபீஸ் வந்ததே தப்போ? இப்ப தனியாய்...
இரு இரு. பக்கத்து தெருல இருக்கிற பாங்குக்குப் போயி பணம் பண்ணிக்கிட்டு வந்துடறேன். நீ யாருக்கும் போன் கூடப் பண்ண முடியாது. லைனைக் கட் பண்ணிட்டேன்.
அரை மணியில் போலீஸ் வர...
நீங்க வந்து காப்பாத்துவீங்கன்னு எனக்கு அப்பவே தெரியும் சார்! அந்த ரவுடி பாங்கில் அரஸ்ட் ஆயிடுவான் என்பதும் தெரியும்
ஹ ஹா! நான் கடிதங்களில் போடும் கையெழுத்தும், பாங்க் சமாசாரங்களுக்குப் போடும் சிக்கலான கையெழுத்தும் ஒன்றுக்கொன்று சம்பந்தமே இல்லாதவை!
இளிட்! வரேன்!
ரவுடி ஜெயிலுக்குப் போயிட்டான்! இதையும் ரமேஷ் கடிதத்தில் எழுத வேண்டும்....
கதை: ஜி.வேதா
படம்: ஜயந்தி

மர்மத் தொடர்கதை

சந்திரநாத்

11

காலையில்தான் மகேஷ் தல்லாகுளம் போனான்.

தல்லாகுளம் போஸ்ட் மாஸ்டர் 'கணக்குகள்'டாலி' ஆகாமல் நாலு குமாஸ்தாக்கள் புடைசூழ லெட்ஜரில் ஆழ்ந்திருந்தார்.

பட்டுவாடா ஆகாத தந்திகள் ஒரு மூலை மேஜை மீது கும்பலாகக் கிடந்தன. ஒரு ஒன்றரைக் கண் குமாஸ்தா வெற்றிலை பாக்குப்போட்டுக் கொண்டு அரை இருட்டில் உட்கார்ந்திருந்தார். அவர் மேஜைக்கு மேலே பல்ப் 'செத்து'விட்டிருந்தது.


''பேர் என்ன ஸார்?'' என்றார் குமாஸ்தா.

''சுரேஷ் குமார்.''

''சுரேஷ் குமார்னு ஒண்ணும் வந்ததா ஞாபகம் இல்லையே — அதோ கிடக்கு — பார்த்துக்குங்கோ'' என்றார்.

எட்டுத் தந்திகள் போஸ்ட் மாஸ்டருடன் சொந்தம் கொண்டாடிக் கொண்டு கிடந்தன. சுரேஷ் குமார் இல்லை: நிஷார் அகமது கிடந்தது — ஓபனாக.

''ஒரு தந்தி ஒட்டாமே கிடக்கு சார்'' என்றான். பிரித்துப் பார்த்தான். நூர் அடித்திருந்தாள். 'அக்பருக்கு டபிள் ஜே' போட்டு மகிழ்ச்சி தெரிவித்திருந்தாள்.




''அட, கொண்டாங்க இப்படி! நேத்தே வந்தது அது. பார்த்துட்டுப் போட்டுட்டுப் போயிட்டான் போலிருக்கு.''

''என்ன சார், கண்டண்ட்ஸ் விசித்திரமா இருக்கு! 'அக்பருக்கு ஜே'ன்னா என்ன அர்த்தம்? வேடிக்கையாக இல்லை?'' மகேஷ் கேட்டான்.

''வேடிக்கை இல்லே சார் — இது ஒரு ''கோட் டெலிகிராம்'' அந்தப் பயலையே கேட்டேன். அவனோடே பட்டணத்துலே ஒரு பெண் படிச்சுதாம். இரண்டு பேரும் 'லவ்' பண்றாங்களாம். ''நீ ஊருக்குப் போ. நான் எங்க வாப்பா கிட்டே நைஸா சொல்லிச் சம்மதம் வாங்கி உனக்கு டெலிகிராம் குடுக்கிறேன்'னாளாம். சம்மதம் கிடைச்சுடுத்துங்கறதைத்தான் இப்படித் தெரிவித்திருக்கிறாள்.''

''டபிள் ஜேன்னா?''

''அப்பா — அம்மா ரெண்டு பேரும் சம்மதிச்சுட்டான்னு அர்த்தமாம். அப்படித் தான் சொன்னான். இதுக்காக எத்தனை



நீயா?

வாட்டி அலேஞ்சான். சந்தோஷத்துலே போட்டுட்டுப் போய்ட்டான் போலிருக்கு-பைத்தியக்காரன்.''

''இந்தக் காலத்துப் பசங்களே விசித்திர மானவங்க.''

''அதுலேயும் இது ரொம்ப...''

''எங்கிருக்காளும்?''

''நான் கேட்கலே — அது என் ''டேட்டி'' இல்லே.''

போஸ்ட் மாஸ்டர் கூப்பிட்டார். ''நயி ஞர் ஸார், சித்த வந்துட்டுப் போங்க'' போய்விட்டார். வெளியே வந்தான். தந்தி மூளே முழுக்கப் பிராண்டிச் சிரித்தது. உப யோகமில்லாத ஒன்றைத் தூக்கிக்கொண்டு வந்தது போலிருந்தது.

சிம்மக்கல் பஸ் ஏறிஞன். 'கமல்நாத் என்ன கண்கட்டு வித்தை காட்டறீங்க?' உறுமிஞன். கோபப்பட்டான். செத்தது யார்? கமல்நாத் நீங்களா இல்லே வேறு யாராவதா?

கேள்விகள் ஒன்றன் பின் ஒன்ருக மூளேக் கத் தொடங்கின. கமல் ஏன் மதுரைக்கு வந்தார்? அவர் வருவது யாருக்காவது முன் கூட்டியே தெரியுமா? யாரையாவது ரகசிய மாகச் சந்திக்க வந்தாரா?

இரண்டு பேர் தங்கும் அறையை அவர் கேட்டதிஞல் அவர் யாரையும் ரகசியமாகச் சந்திக்க ஏற்பாடு இருந்திருக்காது. ரகசிய மாகச் சந்திக்க எண்ணி யிருந்தால் மகேஷ் போன்ற ஒரு துப்பறிபவனே தம்மைக் கண் காணிக்க அமர்த்திக் கொண்டிருப்பாரா?— நிச்சயமாக மாட்டார்.

ஸோ — அவருடைய விஜயம் அவரா லேயே திட்டமிடப்பட்டதுதான்.

என்ன திட்டம் அது? — தெரியவில்லே. குழப்பம்... குழப்பம்....

கமல் ஏதாவது கஷ்டத்தில் மாட்டிக் கொண்டிருந்திருக்கலாம். யாருக்கோ பயந் திருக்கலாம். சந்திக்க வரும்படி அவரைக் கட்டாயப்படுத்தி யிருக்கலாம். வராவிட் டால் கொன்று விடுவேன் என்று மிரட்டி யிருக்கலாம்.

அவன் மகேஷைக் கவனித்து, சந்தேகப் பட்டு, அவன் தூங்கப் போன பின் வர— இவர் ஆத்திரப்பட்டு அவனேத் தாக்கிக் குத் திக் கொன்றுவிட்டு, தானே இறந்துவிட்ட தாக எல்லாரும்நினேக்கட்டும் என்று நினேத்து' கொல்லப்பட்டவனுக்குத் தீயிட்டு, அடை யாளம் தெரியாத சவமாக்கிவிட்டு—

தலேமறைவாகி விட்டிருப்பாரோ?

ஒரேயடியாகக் குழம்பிஞன். சம்பந்த மில்லாமல் யோசித்தான். 'அக்பருக்கு ஜே'— நூர்' எந்த அக்பருக்கு ஜே — ஏன் அல்லா வுக்கு ஜே போடவில்லே? — கடவுளுக்கல்லவா நன்றி சொல்ல வேண்டும்? நிஷார்அகமது இது என்ன வேலே — கமலுக்குத் தனி வீடு இருந் திருக்குமோ? அங்கே நூரும் அவள் அம்மா வும் இருக்கிருர்களோ? நூர், அகமது இதெல் லாம் கூட நிஜப் பெயர்களாக இராதோ? —கமல்நாத், நூர் உன் மகளா? அவள் நிஜப் பெயர் என்ன? — இந்த நிஷாரைச் சந்திக்கத்தான் வந்தாயா? யார் இந்த நிஷார்?

—நூர் இவனேப் பண்ணிக்கொள்வது உனக் குப் பிடிக்கவில்லேயா? சம்மதிக்கிற மாதிரி தலேயாட்டிவிட்டு, பையனே இங்கே சந்திக்க வந்து, பணத்தைக் கொடுத்து விரட்ட வந்தாயா?

-முடியாமல், பயலேயே கொன்றுகொளுத்தி விட்டாயா?

கேள்விகள் ஜகா வாங்கின. ஹோட்டல் நிர்மலா வந்து விட்டது. ஒன்றுமே நட வாதது போல நின்று கொண்டிருந்தது. லாபியில் நியூஸ் ஸ்டாண்டில் ஒரு பத்திரி கையை வாங்கிக்கொண்டு உள்ளே போய்—

ஒரு நாற்காலியைத் தேடிப் பிடித்து உட்கார்ந்தான். சில நிமிஷங்களில் பக்கத்தில் நிழல் தட்டிற்று. ''நீங்கதானே மிஸ்டர் மகேஷ்?''

நிமிர்ந்தான். இனிமேல் சொல்லிக்கொள்வதில் தப்பில்லே. பாண்ட் கோஷ்டியில் டிரம் வாசிக்கிறவன் மாதிரி ஒரு ஆள் நின்று கொண்டிருந்தான்.

''உங்களுக்காகத்தான் அப்போ பிடிச்சுக் காத்துக்கிட்டு இருக்கேனுங்க.''

''எதற்காக?''

''எங்க பாஸ் உங்களைப் பார்க்க விரும்பறுங்க.''

''நான் யாரையும் பார்க்கவிரும்பவில்லே!''

''விஷயம் இன்னுன்னு தெரிஞ்சாஉடனே வந்துடுவீங்க.'' சிரித்தான். ''கமல்நாத் விஷயம்.''

சுறுசுறுப்பானுன். ''யார் உங்க பாஸ்—எங்கே இருக்கார்?''

''வாங்க என் கூட; சொல்றேன்.''

பத்திரிகையைப் போட்டு விட்டுப் பின்னுல் போனுன். பின் பக்கமாக இருந்த ஒரு கதவைத் திறந்து கொண்டு இருவரும் போனுர்கள்.

வீதியில் ஒரு கறுப்புக் கார் நின்று கொண்டிருந்தது. பின் சீட்டில் அரை மோட்டாவாக ஒரு ஆள் உட்கார்ந்திருந்தார். லேசாக ஆனுல், கடுமை குறையாமல் சிரித்தார். முன் கதவை டிரைவர் திறந்து விட்டான். மகேஷ் ஏறிக்கொண்டதும் வண்டி நகர்ந்து தெருக்களைக் கடந்து, நாற்சந்திகளைத் தாண்டியது.

சட்டென்று இரு பக்கமும் வீடுகள் குறைந்து கொண்டே வருவதைக் கவனித்தான். ஓ, ஊருக்கு வெளியில் அழைத்துப் போகிருர்கள். எதற்கு?

இனியும் பேசாமல் இருப்பது தவறு என்று முடிவுக்கு வந்து, அவர்களை முந்திக்கொள்ள நினைத்து, கையை மெதுவாகக் கால் சட்டைப் பைக்குள் விடும்போது,

கார் சட்டென்று நின்றது. ''மகேஷ் அதற்கு அவசியமே இல்லே'' என்முன் அரை மோட்டா. ''நாம் பேச வந்தது வேறு விஷயம்.''

''சொல்லுங்கள்'' என்முன் கடுமையாக.

மோட்டா தயங்கினுர். ''மகேஷ், நான் உன்னிடம் 'பிரண்ட்லி'யாகவே பேசவிரும்புகிறேன்.... உனக்கு எந்தத் தீங்கும் செய்ய நான் நினைக்கவில்லே. உன்னிடம் 'ரிக்வெஸ்ட்' செய்துகொள்ளவே வந்தேன்.''

''புரியவில்லே'' என்முன் மகேஷ்.

''கமல்நாத் உன்னிடம் என்னென்ன ரகசியங்களை வெளியிட்டிருக்கிருரோ எனக்குத் தெரியாது. — அவசியமும் இல்லே. ஆனுல் என்ன சொல்லியிருந்தாலும் அதை எல்லாம் நீ அடியோடு மறந்துடணும்... உனக்குக் கொடுப்பதற்காக இதோ இந்தப் பையில் ஆயிரம் ரூபாய் கொண்டு வந்திருக்கிறேன்.''

''ஓ—'' என்முன்.

''இதை வாங்கிக்கொண்டு, கமல்நாத் என்கிற பெயரையே மறந்துவிட்டு இந்த ஊரை விட்டே போய், எங்கேயாவது சௌகரியமாக இருந்துக்க.''

''போலீஸ் என்னை இரண்டு நாள் இருக்கச் சொல்லியிருக்குது.''

''தெரியும். ஆனுல் இரண்டு நாள் கழித்து உன்னைப் போக விட்டுவிடுவாங்க. அதுவரை நீ எதையும் வெளியிடாமல் இருந்தால் போதும்.''

மகேஷ் எடுத்த துப்பாக்கியை ஜேபியில் போட்டுக் கொண்டான். ஆயிரம் ரூபாயை எதற்காக இழக்க வேண்டும்? ''சரி, இரு தரப்புக்கும் நஷ்டமில்லாமல் பிஸினஸ் பேசுவோம்'' என்முன்.

மோட்டா ஒரு சிகரெட்டை நீட்டினுர். எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டார். ''ஆரம்பிப்போமா? — கமல்நாத் தேடி வந்தது உங்களைத்தான் என்று நினைக்கிறேன்!'' என்முன்.

மோட்டா உடனே பதில் சொல்லாமல் அவனை வெறித்தார். பிறகு ''கரெக்ட்—என்னைப் பார்க்கத்தான் வந்தார். என் பெயர் கங்குலி. அந்தத் தெருவில் ஒரு 'கூல் பார்' வைத்திருக்கிறேன்'' என்முர்.

''ஏன் அவரைக் கொன்றீர்கள்?''

''அவர் என்னிடம் ஒரு பணவிவகாரம் பற்றிப் பேசத்தான் வந்தார். யாரோ முந்திக்கொண்டு அவரைக் கொன்றுவிட்டார்கள்'' என்முர்.

அவர் முகம் கபடமற்று இருந்தது. உண்மையே பேசுகிருர் என்று தெரிகிறது. கொலேகாரர் போலத் தெரியவில்லே.

''எதைப் பற்றிப் பேச அவர் வந்தார்?''

''நாங்க ரெண்டு பேரும் ரொம்ப வருஷத்துக்கு முன்பு ஒரு தொழிலில் பார்ட்னர்களாய்ச் சேர்ந்தோம். நல்ல லாபம் வந்தபோது என் பங்கையும்எடுத்துக்கொண்டு தலைமறைவாகி விட்டார். சமீபத்திலேதான் அவர் சென்னையில் இருப்பதைக் கண்டு பிடித்தேன். என் பணத்தைக் கொடுத்து விடும்படி நெருக்கினேன். அவர் பயந்து போய்விட்டார்.''

''பணம் கொடுக்கத்தான் வந்தாரா?''

''இருக்கலாம். ஜூன் 3ம் தேதி தருவதாகச் சொன்னுர்.''

''கலர் படம் எடுத்தோமே அதன் சாயம் வெளுத்துப் போச்சு!''

''அடடா! எப்படி?''

''அதே கலர் படத்தை டி. வி. க்காரங்க கறுப்பு வெளுப்பாகக் காட்டிட்டாங்க!''




பாதுகாப்பு, சிக்கனம், இரண்டிற்கும்—
ஸ்டேன்ஸ் டயர் ரீடிரெட்
சாலைப்பிடிப்பு, நீடித்த உழைப்பு, தோற்றம், கணிசமான சிக்கனம் எல்லாம் சேர்ந்து அமைய—ஸ்டேன்ஸ் டயர் ரீடிரெட்.
ஸ்டேன்ஸ்டயர்
அண்டு ரப்பர் பிராடக்ட்ஸ் லிமிடெட்
திருச்சி ரோடு, கோயம்புத்தூர் 641018.
தொழிற்சாலைகள் :
கோயமுத்தூர் ● கோட்டயம் ● விஜயவாடா ● திருச்சி ● கள்ளிக்கோட்டை ● மங்களூர் ● வேலூர் ● ஹைதராபாத் ● சேலம் ● எர்ணாகுளம் ● தூத்துக்குடி ● திருச்சூர் ● மதுரை ● பெங்களூர் ● பெல்லாரி மற்றும் காகினடா.
MAC/ST/002/TAM

புனர்ஜன்மம்

அவ்வளவுதான்... குழந்தை இறந்துவிட்டது என்று எல்லோராலும் தீர்மானிக்கப்பட்ட போதிலும் பெற்றோர் விடாப் பிடியாகத் தேடச் செய்ததால் பாதாளச் சாக்கடையிலிருந்து மீட்கப்பட்டது. அண்மையில் இது நடந்தது புது தில்லியில்.

தாத்தாவுடன் பூங்காவில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தை ஷானு,மேன்ஹோல் திறந்திருந்ததால் 15 அடி ஆழமுள்ள பாதாளச் சாக்கடையில் விழுந்து விட்டான். தாத்தாவின் கூக்குரலைக் கேட்டு அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் உதவிக்கு வந்தார்கள். ஆனால் அப்பொழுது இருட்டிவிட்டதால் யாருக்கும் சாக்கடையில் இறங்கும் தைரியம் வரவில்லை. காரணம், சாக்கடை மெயின் லைனுடன் சேர்ந்து யமுனையில் கலக்கிறது. நெருப்பணைக்கும் படையும் காவல் துறையும் உடனே வரவழைக்கப்பட்டு அவர்கள் உதவியுடன் தேடினார்கள். கண்டது தோல்விதான்.

விடிந்ததும் மீண்டும் தேடத் தொடங்கினார்கள். செங்கோட்டைக்கு அருகே செல்லும் இந்தச் சாக்கடையைச் சோதனை செய்ய வேண்டும் என்று யோசனை கூறப்பட்டு அங்கு சென்று பார்த்தபோது டார்ச் விளக்கின் ஒளியில் ஒரு குழந்தைஉட்கார்ந்திருந்தது தெரிந்தது. குழந்தையை வெளியே கொண்டு வந்தார்கள். அந்தச் சமயத்தில் அங்கு 4 அங்குலம் தண்ணீரே இருந்தது. 17 மணி நேரம் சாக்கடையின் உள்ளே இருந்த குழந்தை கை கால் கொஞ்சம் ஊதியிருந்தது தவிர வேறு ஒரு ஆபத்தும் இல்லை!

இந்துஸ்தான் டைம்ஸ்
தகவல்: கலாமூர்த்தி



"பணத்தைச் செக்காக அனுப்பியிருக்கலாமே?"

"அது அப்படி அனுப்ப முடியாத பணமாக இருந்தால்?"

"எவ்வளவு கொடுக்க வேண்டும்?"

"ஒரு லட்சம்."

"இப்போது கமல்நாத் இறந்துவிட்டதால் உங்களுக்கு ஒரு லட்சம் நஷ்டம்தானே? பின் ஏன் அவரைப் பற்றிப் போலீசுக்கு எதுவும் தெரியக்கூடாது என்கிறீர்கள்?"

"ஓபனாகச் சொல்கிறேன் மிஸ்டர் —என் பெயர் இந்த விவகாரத்தில் எந்த இடத்திலும் தலை காட்டுவதை நான் விரும்பவில்லை. அவ்வளவுதான்."

—முகம் தெளிவாக இருந்தது. கொன்றது நானில்லை என்றது. அப்படியானால் கொன்றது யார்?கமலே தன்னைத் தானே கொன்று கொண்டு விட்டாரா? ஏன்? இந்த ஆளுக்குப் பயந்தா?

"மிஸ்டர், இறந்து போனது கமலாக இல்லாமலும் இருக்கலாம் அல்லவா?"

"என்ன சொல்றீங்க?" — தூக்கி வாரிப் போட்டுக் கொண்டு கேட்டார் கங்குலி.

"யோசியுங்கள். இறந்தவர் உடல் முழுதும் அடையாளம் தெரியாமல் கருகியிருக்கிறது. அப்படி அடையாளம் தெரியாமல் போக வேண்டும் என்பதற்காகத்தான் கொன்ற பிறகு தீவைத்திருக்கிறார்கள். அப்படி ஏன் செய்ய வேண்டும்? கொன்று கொளுத்த வேண்டிய அவசியமில்லையே?"

"நீ சொல்வதில் அர்த்தம் இருக்கிறது."

"அப்புறம் பாருங்கள். கமல்நாத் உங்களுக்கு ஒரு பெரிய தொகை தரவேண்டியிருக்கிறது. கமல்நாத் என்ற ஒருவர் இறந்துவிட்டார் என்று நீங்கள் நம்பும்படி செய்து விட்டால், நீங்கள் அவரைத் தேடுவதையும் நெருக்குவதையும் விட்டு விடுவீர்கள் அல்லவா? ... யாரோ ஒரு ஆளை நடுநிசியில் நான்கூட அறியாமல் தருவித்து, அவனைக் கொன்று அவன் அடையாளம் தெரியாமல் இருப்பதற்காக அவனுக்குத் தீயுமிட்டு—"

"எஞ்சாமி—" என்று கூவினார் கங்குலி. "அப்படியானால் கமல்நாத் இப்போது எங்கே இருக்கிறார்?"

"யாருக்குத் தெரியும்? வேறு ஏதாவது ஒரு ஜன நெருக்கமுள்ள நகரத்துக்குச்சென்று யாரும் அறியாமல் வாழநினைத்திருக்கலாம்."

"இதை நான் நினைத்துக்கூடப் பார்க்கவில்லையே" என்றார் கங்குலி.

"இப்பொழுது சொல்லுங்கள் மிஸ்டர், இந்தக் கேஸை இப்படியே நான் விட்டு விட்டு ஊருக்குப் போய்விடவா? உண்மையைக் கண்டுபிடித்து, உங்களுக்குச் சொல்லவா? கமல் இருப்பது தெரிந்தால்தானே லாபம்?"

"கரெக்ட். கமலைக் கண்டுபிடி. விடாதே. இந்த ஆயிரம் உனக்கு அட்வான்ஸ்; கண்டுபிடித்ததும் இன்னொரு ஆயிரம்" என்றார் ஆர்வமுடன் கங்குலி.

கார் நகரத்தை நோக்கித் திரும்பியது.

பையில் ஆயிரம் சுளையாக இருப்பது மிகவும் மகிழ்ச்சி அளித்தது. செத்தும் கொடுக்கிறாரே கமல்நாத்! (தொடரும்)

சந்திரநாத்



நீயா?

12

ஹோட்டல் நிர்மலாவின் கௌண்டரில் ஒரு புது முகம் — இளசு என்றால் படு இளசு — தெரிந்தது. நின்று கவனித்தேன். நிமிர்ந்து சிரித்தாள்.

''மிஸ்... தப்பாக எடுத்துக் கொள்ளக் கூடாது. பரவசமாகச் சொல்கிறேன்... நீங்கள் மிகவும் அழகாக இருக்கிறீர்கள்...''

நாணிச் சிவந்தாள். ''தாங்க்ஸ்'' என்றாள்.

''நான் மகேஷ். 12ம் நம்பரில் இருக்கிறேன்.''

''அப்படியா? ஏதாவது உ த வி வேண்டுமா?''

''ஆமாம்... மதுரை ரொம்பப் பெரிசாக இருக்கிறது. ரொம்பப் பயமுறுத்துகிறது.''

''புதுசா?''

''ரொம்ப ரொம்ப புத்சு'' — சிரித்தான்.

''மெட்ராஸா?''

''அசல் காயலாங்கடை.''

அதற்கும் சிரித்தாள். ''நான் படித்தது மெட்ராசில்தான்.'' என்றாள்.

''அப்போ 'புத்சு' இல்லே.'' — சிரித்தான். ''மெட்ராஸ்லே எங்கே இருந்தீங்க?''

''மயிலாப்பூர்லே, மாமா வீட்டிலே.''

''ஸ்மார்ட்டா, யங்கா இருக்கீங்க... நல்ல ப்யூச்சர் இருக்கு. அந்த நெற்றியே சொல்லுது.''

''ஜோஸியம் தெரியுமா? — அருள்வாக்கு வகையா?''

''நேத்துக் காணுமே?''

''நேத்து எனக்கு ஆஃப்''என்றாள்.''ரேகை பார்ப்பீங்களா?''

''உனக்குப் பார்த்துச் சொல்லட்டுமா?''

''இப்ப வேண்டாம். மானேஜர் வர்ற டைம்!'' என்றாள். ''என்னமோ ஹெல்ப் கேட்டீங்களே—''

''மதுரையிலே ஒரு கடை எங்கிருக்குன்னு தெரியலே.''

''எது?''

''டபிள் கோல்ட் ஸாஃப்ட் பார்.''

''அதா? இதோ அடுத்த தெருவிலேதான் இருக்கு.''

''கங்குலின்னு ஒரு ஆள் இருக்கானா?''

''அவர் ஆள் இல்லே. அவர்தான் அதுக்கு முதலாளி... கை ரேகை பார்க்க வரச் சொன்னாரா?''

''இல்லே. பத்து டன் லெமன் பவுடர் வாங்கிக்கிறேன்னு சொல்லியிருக்காரு...ஆள் எப்படி?.... பணம் வந்துடுமா?''

''வந்துடும். ரொம்பக் கரெக்ட் ஆளுங்க. அவரு ஆளுன்னு உயரம்மா கறுப்பா ஒருத்தன் இருக்கானே— அவன் இங்க வரப் பல்லாம் அவரைப் பத்தி ரொம்பப் பெருமையாச் சொல்வான்.''

''அவன் பேரு என்ன?''

''ராமு.''

''கங்குலி இந்த ஊர் பேர் மாதிரி இல்லியே...''

''இந்த ஊரில்லே... இரண்டு வருஷமாத்தான் இங்கே இருக்காரு. எந்த ஊர்க்காரர்னு தெரியலே... தமிழாளுதான். பேரு தான் வேடிக்கையா இருக்கு.''

''வசதியா இருக்காரா?''

''இப்ப நல்லா இருக்காரு. ஆனா இரண்டு வருஷத்துக்கு முந்தி தோள்ளே துண்டோட வந்தார்னு எங்க ஃபாதர் சொல்வாரு.''

யாரோ ஏதோ கேட்க கௌண்டருக்கு வரவே—

மகேஷ், ''அப்புறம் வந்து உன் கையைப் பார்த்து, உனக்கு 'எப்படிப்பட்ட கில்லாடி வருவான்னு' பார்த்துச் சொல்றேன்''என்று கூறி நகர்ந்தான்.

மீனாட்சியம்மன் கோயில் மதிலோரம் பிச்சிப் பூமாதிரி இட்லி விற்றார்கள்; பஜ்ஜிகள் பளபளத்தன. பரோட்டாக்களைக் கோபமாக அறைந்தார்கள்.

நாகப்பட்டணம் கடையில் நூறு கிராம் அல்வா வாங்கிக்கொண்டு மெதுவாக நடந்தான். கேள்விகள் நெஞ்சில் கிளர்ந்தன.

ஹோட்டலுக்குத் திரும்பும்போது கவுண்டரில் ஒரு கூட்டமாக இருந்தது. ஓ, 'வைகை வந்துவிட்டது போலிருக்கிறது. அத்தனை கூட்டத்துக்கும் பதில் சொல்லிக் கொண்டு, இரண்டு பேர் முதுகுக்கு மேல் நிமிர்ந்து அவனைப் பார்த்துச் சிரித்துத் தலையசைத்தாள் இளசு. ''யாரோ தேடிக்கிட்டு வந்தாங்களே உங்களை'' என்றாள்.

''யாரு?''

''யாரோ ஒரு பொம்பளை.''

''பொம்பளையா?''

''நல்லா அழகா இருந்தாங்க... மெட்ராஸ்னுங்க.''

''மெட்ராஸா?'' — 'நீலாவாக இருக்குமோ?'

''போயிப் பாருங்க — மேலேதான் இருக்காங்க.''

உற்சாகத்துடன் படிகளில் தாவிப் போனான். நீலாவாக இருந்தால், ஹா! இன்றிரவு சொர்க்கம்தான்.

தாழ்வாரம் ஏக நீளமாக இருந்தது. அவன் அறைக்கு நேர் எதிரில் கைப்பிடிச் சுவர் ஓரமாக ஒரு பெண்ணின் முதுகு தெரிந்தது.

''ஹலோ'' என்றான். திரும்பினாள். படு ஏமாற்றம். நீலா இல்லை நிம்மி — நிர்மலா.

''நீங்கள்தானே மிஸ்டர் மகேஷ்?''— தெரியாத மாதிரி கேட்டாள். நிம்மதியாகப் பெருமூச்சு விட்டான். 'உங்களை வேறே வேஷத்திலே பார்த்திருக்கிறேன்' என்று கேட்கவில்லை.

''கரெக்ட்! ஐ ஆம் மகேஷ்.''

''ஐ ஆம் நிர்மலா — கமல்நாத்ஸ் பி.ஏ.''

''ஓ—'' என்று வியப்புத் தெரிவித்தான். ''மெட்ராஸிலேயிருந்து வர்றீங்களா?''

''ஆமாம்.''

''போலீஸ் இன்பார்ம் பண்ணிச்சா?''

''ஆமாம்.''

''நான் மிகவும் வருந்துகிறேன், மிஸ் நிர்மலா. அவர் இப்படி எதிர்பாராதவிதமாக—''

''ஓ, எப்படி இந்தப் பயங்கரம் நடந்துச்சு, மகேஷ்? என் யஜமானுக்கா இந்தக் கதி?'' — அழுதாள். கேவினாள். ''அவர் மாதிரி ஒரு பாஸ்...''

''வாங்க — உள்ளாறப் போயி பேசலாம்.''

ரூம் கதவைத்திறந்தான். பின்னால் வந்தாள்.. சுற்று முற்றும் பார்த்துவிட்டு உட்கார்ந்தாள். அடுத்த அறைப் பக்கம் பார்த்தாள். ''அதிலேதான் அவர் தங்கினாரா?''

''ஆமா — இப்போ போலீசு மூடி சீல் வைச்சுட்டாங்க — என்ன சாப்பிடறீங்க?— போனை எடுத்து 'ஸர்வீஸை' அழைத்து இரண்டு பானங்களுக்கு ஆர்டர் கொடுத்தான்.

''என்ன, என்னைப் போய், 'நீங்க, நீங்க'ன்னுட்டு?'' — கோபித்தாள்.

''சரி, 'நீ'-ங்கறேன். நீ எனக்கு உதவி பண்ணுவியா?''

''என்ன உதவி?''

''நீ உனக்குத் தெரிஞ்சதை யெல்லாம் சொன்னால் போதும்.''

''என்ன சொல்லணும்?''

''கங்குலி என்ற பெயரைத் தெரியுமா?''

''கங்குலியா?'' — நெற்றிப் பொட்டைச் சுருக்கி யோசித்தாள்.

''ஓ—ஆமாம். கமல் ஸார் நிறையச் சொல்லியிருக்காரு'' என்றாள்.

''கமல் உங்கிட்ட எப்படிப் பேசுவார்?''

''சோஷியலாகவும் இருப்பாரு; பாஸ் மாதிரியும் இருப்பாரு. சோஷியலா இருக்கும்போது நிறையப் பழைய கதை எல்லாம் சொல்வாரு.''

''அதிலே கங்குலி என்ற பெயர் வந்திருக்குதா?''

''வந்திருக்கு.''

''கமல்கூட எப்பவோ கங்குலிங்கிற ஆள் பிஸினஸ் பார்ட்னரா இருந்தாராம் — பம்பாயிலே.''

''எப்போது?''

''ஏழெட்டு வருஷத்துக்கு முந்தி.''

''என்ன பிஸினெஸ் செஞ்சாங்க?''

''பெரிசா ஒண்ணுமில்லே. 'சாம்ப்ளிங்.''

''சூதாட்டமா?''

''லைக் தட்..''

''நல்லா சம்பாதிச்சாங்களா?''

''பம்பாய் முழுக்க கிளையண்ட்ஸ் இருந்துச்சாம், லட்சக் கணக்கிலே பணம் புரண்டுதாம்.''

''போலீஸ் ரிப்போர்ட்லே அவங்க பேரு அப்ப கட்டாயம் இருக்கணுமே.''

''இருக்காது. வேறே பேர்லே நடமாடினாங்களாம், போலீசுக்குத் தெரியாமலே நிறையச் சம்பாதிச்சாங்களாம், அப்புறம் ஒரு நாள்



போலீஸ் நெருக்கமா வலே விரிச்சுட்டதும், மூலேக்கொருத்தராதப்பிஓடிட்டாங்களாம்.''

''நாச்சுரல்.''

''இதிலே ஒரு பாயிண்ட் இருக்கிறது. அதை அப்புறமாத்தான் தெரிஞ்சுக்கிட்டேன். ஒரு நாள் 'ஓவரா' தண்ணி போட்டிருந்தப்ப அதைச் சொல்லிட்டாரு.''

''என்ன சொன்னரு?''

'' 'நிம்மு, நான் அப்ப வெறுமனே ஓடி வரலே. அந்த பிளடி கூஸ், கங்குலி ராஸ்கலுக்குப் பெரிய 'குல்லா'வைப் போட்டுட்டுத்தான் ஓடி வந்தேன். ஒரு லட்ச ரூபாய் கொண்டாந்துட்டேன்' என்ருர்.''

''என்ன பெயரிலே பம்பாயில இருந்தாங்களாம்?''

''தெரியாது. எங்கிட்டச் சொல்லலே.''

''நீஎப்போதுஅவருக்கு பி.ஏ.வா வந்தே?''


''இப்பத்தான். ஒண்ணு ஒண்ணரை வருசம்தான் இருக்கும்.''

''கமலுக்குப் பொஞ்சாதி, புள்ளே கிடையாதா?''

''அவரு கல்யாணமே செஞ்சுக்கலேன்னு நினைக்கிறேன். ஒருவேளை, கல்யாணமாகி, இப்பத் தொடர்பு விட்டுப் போய், எங்கேயாவது அவ இருக்கக்கூடச் செய்யலாம். நிச்சயமாச் சொல்ல முடியாது.''

''அவர் உன்னை எப்படி நடத்தினர்?... எப்போதாவது ரொம்ப அன்புடன் நடத்தினது உண்டா?''

''இதுவரை பலவகைப்பட்ட சர்பத் வகைகளைப் பற்றியும் சர்பத் தயாரிக்கும் முறை பற்றியும் விளக்கியவர், திரு. சர்பத் குமார். . . . ஸாரி! திரு சம்பத் குமார்!''



''ரொம்ப அன்புன்னு!'' — கேள்வியில் சிரித்தாள். ''நீங்க சொல்ற அர்த்தத்துலே நிச்சயமாக இல்லே... அவரு எங்கிட்ட எப்பவும் ரொம்ப கண்யமாகத்தான் நடந்து வந்திருக்கிருர். எனக்கு அவர் கிட்ட எந்த மனத்தாங்கலும் இல்லே...''

''அவர் எதற்காக மதுரைக்கு வந்தார்?''

''உங்க கிட்டச் சொல்லலேயா?''

''நீ சொல்லு.''

''மிஸ்டர் கங்குலியைச் சந்திக்க.''

மகேஷ் வியப்புடன் அவளைப் பார்த்தான். ''ஆமாம். இந்தக் கங்குலியின் அழைப்பின் பேரில்தான் கமல் மதுரை வந்தார். கமலுக்கு கங்குலி இங்கே இருப்பது தெரியும்.''

''இது உனக்கு எப்படித் தெரியும்?''

''ஒரு வாரத்துக்கு முன்னல் அவர் மிக்க கவலேயாக இருந்தார். என்ன பாஸ்'ன்னு கேட்டேன். 'நிம்மி எனக்கு ஒரு பெரிய ஆபத்து வந்திருக்கு'ன்னர். ரொம்ப வற்புறுத்திக் கேட்டப்புறம் விஷயத்தைச் சொன்னர். 'நான் இங்கே இருப்பது அவனுக்கு இத்தனை நாள் தெரியாமல் இருந்தது. இப்ப எப்படியோ கண்டு பிடிச்சுட்டான். நாளைக்கு அவன் கிட்ட இருந்து ஒரு ஆள் வரப்போருன்'னர்.''

''வந்தானு?''

''வந்தான்.''

''அவனை நீ பார்த்தியா?''

''பார்த்தேன்.''

''எப்படி இருந்தான்?''

யோசித்தாள். ''கறுப்பாக — ஸ்லிம்மாக— தப்பட்டை மூஞ்சி — நீட்டமாய் மயிர்— கம்பி ஃபிரேமில் கறுப்புக் கண்ணுடி.''

கங்குலியைப் பார்க்க அழைத்துப் போன ராமுவின் முகம் கண் முன் வந்து நின்றது. நிர்மலாவின் வர்ணனை வார்த்தைக்கு வார்த்தைப் பொருந்திற்று. அவனு வந்தான்? நிம்மு திசை திருப்புகிருளோ?

''எப்போது வந்தான்?''

''ஒரு பிற்பகல் வந்தான்.''

''எங்கிருந்து வருகிருய்என்றுகேட்டாயா''

''கேட்டேன். மதுரையிலிருந்து வருவதாகச் சொன்னன்.''

''கமலேப் பார்த்தானு?''

''அவர் அப்போது நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் கிடந்தார். 'அவன் வந்திருக்கிருன்—அனுப்பட்டுமா?' என்று கேட்டேன். அனுப்பச் சொன்னர். அனுப்பினேன், கதவைச் சாத்திட்டுப் பேசினங்க.''

''உன் காதில் ஏதாவது வார்த்தை விழுந்ததா?''

''நான்தான் சாவி ஓட்டையிலே காதைத் தீட்டி வெச்சுக் கேட்டுக்கிட்டிருந்தேனே.''

''ஒட்டுக் கேட்கிற பழக்கமெல்லாம் கூட உனக்கு உண்டா?''

''அதில்லேங்க. அவரு என் பாஸுங்க. ஏதாவது பண்ணிப்பிட்டான்னு? ஏற்கனவே அவரு அவனுக்குப் பயந்து கொண்டிருந்தாரு....''

''ஏதாவது ஆகியிருந்தால் என்ன செய்வாய்?''

''போலீசைக் கூப்பிட்டிருப்பேன்.''

மகேஷ் சிரித்தான். "நிஜமாகவே கூப் பிட்டிருப்பாயா?" என்ருன்.

"நிச்சயமாக் கூப்பிட்டிருப்பேங்க" என் ருள்.

"ஏதாவது நடந்துச்சா?"

"சாமி புண்ணியத்திலே இல்லே. ஆனு அந்த ஆள் ரொம்பக் கோபமா பேசினுன். நீ வேற பேர் வெச்சுக்கிட்டு, பெரிய டவுண்லே மறைஞ்சுக்கிட்டா தெரியா துன்னு நெனேச்சியா? எங்க ஐயா எப்பவோ கண்டு பிடிச்சுட்டாரு — மரியாதையா பணத்தைக் கொடுத்திட்டா வம்புலே மாட் டிக்கிட மாட்டேன்னுன்."

"இஸிட்?" என்று வியப்புடன் கேட்டான் மகேஷ். "ஒரு வேலைக்காரப் பயல் ,தன் முதலாளியைப் போன்ற இன்னொரு பெரிய முதலாளியிடம் இப்படிப் பேசுவானு?"

"ஏன் கூடாது? தாய் எட்டடி பாஞ்சா, குட்டி பதினுறு அடி பாயாதா?"

"கமல் பேசாமல் கேட்டுக்கிட்டா இருந் தார்?"

"அவரு கோபப்படவே இல்லே. என்னேக் கூப்பிட்டு அவனுக்குக் காப்பி குடுக்கச் சொன்னுர். என் எதிரிலேயே எப்படி இருக் காரு உங்க முதலாளி — என்ன பண்ருரு'ன்னு கேட்டார். 'மதுரையிலே 'பார்' நடத்தரு ருன்னுன். காப்பி கொண்டு வரும்போது ஒரு வார்த்தை காதுல விழுந்துச்சு."

"என்ன வார்த்தை?"

" 'வீண் தகராறு வேணும்னுரு எங்க ஐயா — என்னடா, கறுப்புப் பணம்தானே நாம அபேஸ் பண்ணிக்கிட்டு வந்தது — கோர்ட்டுக்கா போக முடியும்னு நினேக்க வாண்டாம்னுர்.' என்று சொல்லிக்கிட்டிருந் தான்."

"இவரு என்ன சொன்னுரு?"

" 'சரி, அடுத்த வாரம் நானே மதுரைக்கு வந்து உங்கயஜமானரைப் பார்க்கிறேன்'னுர். அவன் கிட்ட ஐம்பது ரூபா செலவுக்குக் கொடுக்கச் சொன்னுர்."

"அப்புறம்?"

"வாங்கிக்கிட்டுப் போயிட்டான்."

ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்றவைத்துக் கொண்டான் மகேஷ். இந்த நிம்மியை எவ்வளவு தூரம் நம்பலாம் என்று யோசித் தான்.

"அப்படியானுல் கங்குலிக்குப் பணம் கொடுக்கத்தான் கமல் வந்தாரா?"

"அவர் மதுரைக்குப் புறப்பட்டதுதான் தெரியும். பணம் கொண்டு—வந்தாரா என்று தெரியாது." என்ருள் நிம்மி.

பஸ்ஸர் ஒலித்தது. 'ரூம் ஸர்வீஸ்' என்ற குரல் கேட்டது. 'எஸ்' என்றவாறு போய் மகேஷ் கதவைத் திறந்தபோது—

ஒரு ரிவால்வருடன் ஒரு கை நீண்டு வந்து—

"நிம்மி சட்னு கீழே படுத்துக்கொண்டு விடு" என்று கூவிய மகேஷ், தரையில் சாஷ்டாங்கமாக விழ—

'ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்' என்று அதற்குள் துப்பாக்கி சீற—

ஒரு குண்டு உறுமிக்கொண்டு நிம்மி இருந்த திசையில் பாய்ந்தது **(தொடரும்)**

கடுகு பதில்கள்

✖ கொ. துரைசாமி, சித்தோடு.

கே: ஆபீஸிலிருந்து வீடுதிரும்பும்போதுமனைவிக்குப் பூ வாங்கிப்போவது உண்டா?

ப: உண்டு. ஆரம்ப காலத்தில் மல்லிகைப்பூ. இப்போது வாழைப்பூ!

✖ அபராஜிதன், மதுரை-1.

கே: என் மானசீகக் குரு குரும்பூர் குப்புசாமி பற்றி ஒரு வரி?

ப: பல வரிகள் தருகிறேன். புனைபெயரில் ஒளிந்து கொண்டிருக்கும் இந்த 'சாமி'க்கு நிறைய ரசிகர்கள் உண்டு. காரணம் அவர் சராசரி வாசகர்களுக்காக எழுதுகிறார். எளிமையான நடை. வார்த்தை ஜாலம் செய்து தனது கெட்டிக்காரத்தனத்தைச் சிலர் செய்கிறார்களே அது இவரிடம் கிடையாது. சரளமாகக் கதையைக் கொண்டு செல்வார்.

✖ எஸ். குணசேகரன், சென்னை-17.


கே: புகழும் பணமும் ஒருவனை உயர்த்தி விடுகிறதா? தாழ்த்தி விடுகிறதா?

ப: புகழ் பெற்றதாலும், பணம் சேர்ந்து விட்டதாலும் சிலர் எண்ணத்தாலும், செயலாலும் தாழ்ந்து போகிறார்கள்; சிலர் உயர்ந்து போகிறார்கள். எப்படிப் போனாலும் பணமும் புகழும் இருப்பவர்களை மற்றவர்கள் உயர்வாகத்தான் மதிப்பார்கள். இந்தச் சமயத்தில் கோல்ட்ஸ்மித்தின் புகழ் பெற்ற ஒரு வரியைத் தருகிறேன். "Where wealth accumulates men decay"

✖ எஸ். வி. ராஜசேகர், சென்னை-5

கே: மலரும் மங்கையும் எந்த விதத்தில் ஒரே ஜாதி?

ப: மணமுண்டு என்பதால்!



✖ ராதா நாராயணன், கல்கத்தா-29.


கே: மாயா நாகரீகம் என்கிறார்களே அதுபற்றி விளக்குங்களேன்.

ப: உங்கள் கேள்வியைப் பார்த்த பிறகு சில புத்தகங்களைப் படித்தேன். எனக்குப் புரிந்த அளவு சொல்கிறேன். மத்திய அமெரிக்காவில் செழித்து வளர்ந்த நாகரிகம் இது. கி. மு. 2000 ஆண்டுகளுக்கு முன்பே இது துவங்கியிருந்ததாம். இதன் உச்ச கட்டம் கி.பி. 750 வாக்கில்தான். அந்தச் சமயம் சாதாரண வண்டிச் சக்கரம் கூடக் கண்டுபிடிக்கப்படவில்லை. மாயர்கள்தான் எழுதும் வித்தையைக் கண்டு பிடித்தார்கள். கணிதத்தை உருவாக்கினார்கள். ஒரு வருஷத்துக்கு 365 தினம் என்பதை சூரியனின் போக்கை வைத்து நிர்ணயித்தார்கள். கட்டடக் கலையிலும் பல முன்னேற்றத்தை ஏற்படுத்தினார்கள். இப்படிப்பட்ட வளர்ச்சி ஏனோ அழிந்து போனது. பின்னால் கி.பி. 1500வாக்கில் கொஞ்சம் துளிர்த்தது. அதுவும் 200 ஆண்டுகளுக்குள் அழிந்து விட்டது.

✖ எம். மாதேஸ்வரன், சங்ககிரி-

கே: கிண்டி சென்ற அனுபவம் உண்டா?

ப: ஒரே ஒரு தடவை போயிருக்கிறேன்.— அந்த உலகத்தையும் பார்த்துவிட்டு வர. பணம் எதுவும் கட்டவில்லை. அங்கு பணம் கட்டுபவர்களையும் அவர்களுடைய பேச்சுக்களையும் கவனிப்பதே ஒரு பெரிய அனுபவம். மாலை வீடு திரும்பியபோது மனத்தில் நின்ற ஒரே எண்ணம், 'இப்படி அழிந்து போகிறார்களே, சாதாரண நடுத்தர மக்கள் என்பதுதான்.



✖ கை. இராமமதி, கும்பகோணம்.

கே: திறமை இல்லாவிட்டாலும் அதிர்ஷ்டம் ஒன்று இருந்துவிட்டால் முன்னேறி விடமுடியுமா?

ப: ஓரளவுதான் முடியும். ஏணியை உங்களிடம் கொடுத்து விட்டால் போதுமா? மேலே ஏறத் தெரிந்திருக்க வேண்டாமா? உலகில் பெரும்பாலான திறமைசாலிகளுக்கு வாய்ப்பு எனும் அதிர்ஷ்டம் கிடைப்பதில்லை. கிட்டியவர்கள் சுலபமாக உச்சிக்குச் சென்று விடுகிறார்கள். ஆக திறமை இருக்கிறதோ இல்லையோ அதிர்ஷ்டம் முக்கியம்.

பரிசு பெறுபவர் :

கை. இராமமதி,
36, ஆசாரியார் தெரு,
கும்பகோணம் - 612001.

அன்பளிப்பு

சில்பி யின் தெய்வச் சித்திரங்கள் 6



புனிதத் திருத்தலங்களில் அருள்பாலிக்கும் தெய்வத் திரு உருவங்கள்.* காஞ்சிப் பெரியவர் ஆசிபெற்ற 'சில்பி' வரைந்துள்ள ஓவியங்கள். பல வண்ணங்களில் ஆர்ட் காகிதத்தில் அச்சிடப்பட்டவை. பூஜை அறையில் நாள்தோறும் போற்றி வணங்குவதற்கு உகந்தவை.

புதிய டெபாஸிட் செய்பவர்களுக்கும் அறிமுகம் செய்பவர்களுக்கும் ஸ்ரீராம் வழங்கும் அன்பளிப்பு.

நீங்கள் டெபாஸிட் செய்யும் ஒவ்வொரு ரூ. 5000க்கும், இந்த அன்பளிப்பு உண்டு. (அறிமுகம் செய்வோர், ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் ஃபைனான்ஸ் கம்பெனி லிட்., ஸ்ரீராம் சிட்ஸ், ஸ்ரீராம் ஃபைனான்ஸ், ஸ்ரீராம் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் ஏதேனும் ஒன்றில் அங்கத்தினராக இருக்கவேண்டும்.) நீங்கள் விரும்பினால், உங்களுக்கு உரிய அன்பளிப்பை இந்தியாவில் எந்த விலாசத்திற்கும், எங்கள் செலவில் பதிவு தபாலில் அனுப்பி வைக்கிறோம். (வெளிநாடுகளுக்கு விமான தபால் கட்டணம் தனி.)

1. கவர்ச்சி மிகு வட்டி:

டெபாஸிட் காலம் \ வட்டி விகிதம்	மாதாமாதம் வட்டி பெற	6 மாதங்களுக்கு ஒரு முறை வட்டி பெற	மறு முதலீட்டுத் திட்டத்தில் மொத்தமாக வட்டி பெற
1 ஆண்டு	**14.0%**	**15.0%**	**15.5%**
2 ஆண்டுகள்	**14.5%**	**16.0%**	**17.5%**
3 ஆண்டுகள்	**15.0%**	**17.0%**	**20.0%**

2. மறு முதலீட்டுத் திட்டம்

இத்திட்டத்தில் (Re-investment plan) உங்களது ரூ. 3,125, மூன்றே ஆண்டுகளில் ரூ. 5,000 ஆக வளர்கிறது. இதில் டெபாஸிட் செய்வோர்க்கும் இவ்வன்பளிப்பு உண்டு. உங்களை அறிமுகம் செய்பவரும் இந்த அன்பளிப்புப் பெறலாம்.

3. நம்பிக்கை—நாணயம்—அநுபவம்—உங்கள் டெபாஸிட்டிற்கு உத்திரவாதம்

ஸ்ரீராம் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் நிறுவனம் பதிவு செய்யப் பெற்ற பார்ட்னர்ஷிப் (Registered Partnership) நிறுவனம். இந்த நிறுவனம் மோட்டார் வாகனங்களைத் தவணை முறையில் வாங்குபவர்களுக்குக் கடன் உதவி செய்கிறது. இத்துறையில் பதினைந்து வருட அனுபவமும் திறமையும் மிக்கவர்களால் நிர்வகிக்கப்படுகிறது.

ADWAVE/SI/1724

* 1. ஸ்ரீ குருவாயூரப்பன். 2. ஸ்ரீ முருகன், திருப்பரங்குன்றம். 3. ஸ்ரீ பங்காரு காமாட்சி, தஞ்சாவூர். 4. ஸ்ரீராமர், பத்ராசலம். 5. ஸ்ரீ கோமதி அம்மன், சங்கரன்கோவில். 6. ஸ்ரீ அபிராமி அம்மன், திருக்கடையூர். (அளவு: 23 செ.மீ x 19 செ.மீ.)

SHRIRAM INVESTMENTS

YOUR FINANCIAL FRIEND-IN-NEED

ஸ்ரீராம் இன்வெஸ்ட்மெண்ட்ஸ்

தலைமை அலுவலகம்: 123, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை 600 001. போன்: 28545/37890/21425.

கிளை அலுவலகம்: 54, வடக்கு உஸ்மான் சாலை, தி. நகர், சென்னை 600 017. போன்: 441074 (செவ்வாய் விடுமுறை)

பெங்களூர் கிளை: செல்லர் ஃபிளோர், பிரவுனம்மா டவர், 70/1, மிஷன் ரோடு, பெங்களூர் 560 027. போன்: 27006.



நீயா

சந்திரநாத்

13

மகேஷ் அவசரமாக நாலுகால் பிராணியாக எழுந்து, அவசரமாக பாண்ட் பாக்கெட்டிலிருந்து ரிவால்வரை உருவி, அவசரமாகக் குழந்தை போல் தவழ்ந்து அறைக்கு வெளியே வந்தான்... நிமிர்ந்தான்.

அந்த நீண்ட தாழ்வாரத்தின் பாதி தூரத்தில் கறுப்பாக,, ஸ்லிம்மாக ஒரு ஆள் ஓடிக் கொண்டிருப்பது தெரிந்தது. 'சட்' டென்று ஓட்டத்தை நிறுத்தி திரும்பி, இன்னொரு தடவை சுட்டான்—

தப்பிப் போகிற குற்றவாளி, சிறிது தூரம் ஓடினதும், பிடிக்க வருபவர்களைத் தடுத்து நிறுத்தச் சுடுவது வழக்கம்தானே. இதை எதிர்பார்த்து, தரையோடு படுத்து அந்தத் தாக்குதலை முறியடித்து, பின் எழுந்த போது—

கறுப்பு ஸ்லிம் தாழ்வாரத்தின் மறு கோடியில் படிக்கட்டுக்களில் இறங்கி, விநாடிகளில் பூமியில் மறைய ஆரம்பிக்க—

மகேஷ் சுட்டான். அரை விநாடியில் மாடிப் படிகளில் அந்த ஆள் தோளைப் பிடித்துக்கொண்டு சுழல்வதும், அடுத்த விநாடிகளில் கீழே சரிந்து பக்கவாட்டில் சாய்வதும் தெரிந்தது.

மகேஷ் ஓடி படிகளின் மேலே வந்து எட்டிப் பார்த்தபோது கடைசிப் படியில் கறுப்பன் எழுந்து துப்பாக்கியை எடுத்து, உயர்த்தி, மேல் படியில் நிற்கிறவனைப் பார்த்துச் சுட முயல்வது தெரிந்தது.

மகேஷ் ஒரு டைவ் அடித்து அவன் மீது விழுந்து, துப்பாக்கி முயற்சியைத் தோல்வி காணச் செய்தான். கறுப்பன் கீரைத் தண்டாய்த் துவண்டு, ''ஐயோ, செத்தேன்'' என்று உரக்கவே கூறி வாய் கோண—

மகேஷ் தொட்டு, பனியனோடு பிடித்துத் தூக்கி, ''இல்லே— இன்னும் உயிரோடுதான் இருக்கிறாய்'' என்று முகத்தைப் பார்க்க—

அது ராமு—

கங்குலியின் ஆள்!

தோள்பட்டையில் காயம் ஆழமாக இல்லை. சிராய்த்து ரத்தத்தை உமிழ்ந்திருந்தது. அதிர்ச்சி அடியில் காலை விரித்து விகாரமாகக் கிடந்தான்.

'பையா, ஏன் கொல்ல வந்தாய் என்னை? யார் அனுப்பினார்கள் உன்னை? கங்குலியா?'

கதவைச் சாத்தி வெளிப்புறம் தாளிட்டு விட்டு, லாபிக்குப் போய், அந்த அழகிக்குப் பொய்ச் சிரிப்புச் சிரித்து மரியாதை செலுத்தி விட்டு, போலீசைக் கூப்பிட்டான்.

பத்து நிமிஷத்துக்குள் வந்தார்கள். ''என்னய்யா, குற்றவாளியைக் கண்டுபிடித்துவிட்டீரா?'' என்று வந்தார் அதிகாரி.

''இல்லை ஸார், என்னைச் சுட வந்த ஒரு ஆளைத்தான் பிடித்து வைத்திருக்கிறேன்'' என்று காட்டினான். மாடிப் படி ஸைட் அறைக்குள் போனபோது அவன் எழுந்து உட்கார முயல்வது தெரிந்தது. பிடித்துப் போனார்கள்.

அறைக்கு வந்தபோது நிம்மி காத்திருந்தாள்.

''என்ன ஆச்சு?'' என்றாள் பீதியுடன்.

''போலீஸ் பிடிச்சுக்கிட்டுப் போயிடுச்சு.''

முகத்தில் கலவரத்தைப் படர விட்டாள். ''உனக்கு ஒண்ணும் இல்லையே.''

''இல்லே. நான்தான் உங்க குரல் கேட்டதும் கீழே படுத்துக் கொண்டு விட்டேனே.''

''இருங்க, ஒரு நிமிஷம்'' என்று ரூம் போனை எடுத்துக் கங்குலியின் 'பாரை'க் கூப்பிட்டான். கங்குலியே எடுத்தார். ''ஹலோ'' என்றார்.

''நான் மகேஷ் பேசுகிறேன்.''

''ஓ, மகேஷ் — நீயா?''

''நிச்சயமாக என் ஆவியில்லை. என் ஜாதகம் ரொம்பக் கெட்டி, மிஸ்டர் கங்குலி. தீ, துப்பாக்கிக் குண்டு எதுவுமே என்னை எண்பத்தைந்து வயது வரை தீண்டாது.''

''என்னப்பா சொல்றே?''

''உங்க ஆள் சற்று முன் என் அறைக்கு வந்தான். என்னைச் சுட்டான். இரண்டு ரவை வேஸ்ட்.''

''என்ன?'' — அதிர்ந்தார் கங்குலி.

''நீங்கள் கவலைப்பட்டுக்கிட்டு இருப்பீங்களேன்னுதான் கூப்பிட்டுச் சொன்னேன். அவனைப் பத்தி மேலே நியூஸ் வேணுமென்றால் நீங்க 'கிங்ஸ்' ஆஸ்பத்திரிக்கு போன் பண்ணணும்.''

''என்ன சொல்கிறாய் மகேஷ். எனக்கு ஒண்ணும் புரியலையே.''

''எனக்குக் கூடத்தான் ஏதும் புரிய மாட்டேன் என்கிறது.... ஆனால் ஒண்ணு... மிஸ்டர் கங்குலி... இந்த மாதிரி அரை வேக்காட்டுப் பயல்களை யெல்லாம் இனிமே நீங்க நம்பிப் பிரயோஜனமில்லே— அடுத்த தடவை நீங்களே வருவதுதான் நல்லது—''

''நீ நினைப்பது தப்பு மகேஷ்... எனக்கு இதிலே சம்பந்தமே இல்லை... நிஜமாகவே:''

'டக்'கென்று ரிசீவரை வைத்துவிட்டுத் திரும்பி வந்தான்.

''என்ன உடம்பு இன்னும் பதறுது..''

''இப்படி ஒண்ணு நடந்தா பயமா இருக்காதா?'' என்றாள் நிம்மி.

''இதெல்லாம் சகஜம். லைஃப் முழுக்க நாங்க திருடன்களோடவும் கொலைகாரன்களோடவும்துப்பாக்கியோடவும்தான் பழகிக்கிட்டிருக்கோம்.''

''எனக்கு சத்தமா யாராவது பேசினாக்கூட நடுங்கிடும்.''

''அப்ப கமல்நாத்செத்துட்டாருன்னு கேட்டதும் நடுங்கிப் போயிருப்பீங்க.''

''மயக்கமே வந்துடுச்சுங்க'' என்றாள் நிர்மலா.

''அவரு மதுரைக்குப் பெரிய தொகை ஏதாவது எடுத்துக்கிட்டு வந்தாரான்னு தெரியாதுன்னிங்களே?''

''ஆமா!'' — யோசித்து நீட்டினாள்.

''சரி, நேற்று முந்தாநாள் பெரிய தொகை ஏதாவது அவர் மெட்ராஸ்லே பாங்க்லே 'ட்ரா' பண்ணுரா — அதாவது தெரியுமா?''

யோசித்தாள். ''ஆமாங்க'' என்றாள்.

''எவ்வளவு?''

''கரெக்டாத் தெரியாது. பெரிய நோட்டுக்களா அஞ்சாறு கட்டு மேஜை மேலே வைச்சுக்கிட்டிருந்தாரு.''

''நீ பார்த்தாயா?''

''பா....ர்....த்....தே....ன்...'' — தடுமாறினாள்.

''அஞ்சாறு கட்டுன்னு நூறு நூருக் கட்டினதா?''

''ஆமா.''

''அப்ப பெரிய கட்டாக இருக்குமே.''

''அப்படித்தான் இருந்துச்சு.''

''நிர்மலா—உங்க ஸ்டேட்மெண்ட் உதைக்குதே. நூறு ரூபாய் நோட்டுக்களாக ஒரு கட்டு இருந்தால் அதுவே பத்தாயிரம் ஆகிவிடுமே — நீங்க அஞ்சாறு கட்டுக்களைப் பார்த்ததாச் சொல்றீங்களே?''

''நான் சரியாகப் பார்க்கலே'' என்றாள் நிர்மலா.

கொட்டாவி விட்டாள். ''தூக்கம் வருதா?''

''ஆமா.''

''எங்கே தங்கப் போறே?''

''நான் இன்னிக்கு மெட்ராஸ் திரும்பிடறதா இருந்தேன்.''

''இனிமே ரயில் இல்லே. பஸ் சரிப்படாது. நான் போய் ஹோட்டல் மானேஜரைப் பார்த்து ரூம் ஏதாவது இருக்கிறதா என்று தெரிஞ்சுக்கிட்டு வர்றேன்.''

போனான். டெலிபோனிலேயே கேட்டிருக்கலாம். நிம்மி பற்றிச் சிந்திக்க விரும்பினான். படிகளில் சிந்தித்தான். இவள் எதற்காகப் பதறி அடித்துக் கொண்டு வந்தாள்? 'தொகை பற்றி இவள் சொல்வதிலே எத்தனை சதம் உண்மை? இவள் நோக்கம் என்ன?

கீழே அந்த 'இளபகம்' இல்லே. மானேஜர் இல்லே. ஒரு கரடித் தலையன் உட்கார்ந்து நிர்தாட்சண்யமாக 'அறை இல்லே' என்றான்.

திரும்பினான். ''மிஸ்டர்'' என்ற குரல் கேட்டது.

திரும்பினான். ''மகேஷ், நான்தான் மோகன்.''

மப்டியில் சிரித்தான். ''கொஞ்சம் வருகிறாயா, என்னோடு?''

''எங்கே?''

''போலீஸ் ஸ்டேஷனுக்கு — இன்ஸ்பெக்டர் கோபால் காத்துக் கொண்டிருக்கிறார்.''

மகேஷ் எரிந்து விழுந்தான். ''போலீஸ்காரர்கள் தூங்கவே மாட்டார்களா?''

''நாங்கள் தூங்கிவிட்டால் உன்போன்ற சந்தேகாஸ்பதப் பறவைகள் சுலபமாகத் தப்பித்துவிடுமே அப்பா!'' — சிரித்தான் மோகன்.

''உம்'' என்று உறுமிவிட்டு, அங்கிருந்தே மேலே 'அறையை'க் கூப்பிட்டு ''நிம்மி, நான் ஒரு காரியமா வெளியே போறேன். வரவரை என் ரூம்லேயே இருக்கியா?'' என்றான்.

''சீக்கிரம் வந்துவிடு மகேஷ். எனக்குப் பயமாக இருக்கிறது.''

மோகனுடன் போனான். தெருவில் நடமாட்டம் குறையத் தொடங்கி விட்டது. நகரம் அசாதாரண மௌனத்தைப் போர்த்திக்கொள்ள ஆரம்பித்து விட்டது.



பிரகாசமான மேஜை விளக்கினடியில் இன்ஸ்பெக்டர் கோபாலன், கழுகுக் கண் களுடன் உட்கார்ந்து இவனைப் பார்த்தார். ''எஸ். சிட்டௌன்'' என்றார். மகேஷ் உட்கார்ந்தான்.

நேரடியாக விஷயத்துக்கு வந்தார். ''சரி, சொல்லு. பார் கடை ஆள் ராமு உன்னை ஏன் சுட்டான்.?''

''எனக்கெப்படித் தெரியும்?''

''மழுப்பாதே பிரதர்... உன் மெட்ராஸ் வேலை யெல்லாம் நம்ப கிட்டே நடக்காது. நான் எப்படியும் உண்மையைக் கண்டுபிடித்து விடுவேன்.''

''இப்படித்தான் எல்லா இன்ஸ்பெக்டர் களும் எல்லாக் கேஸ்களிலும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.''— மகேஷ் சிரித்தான்.

''ஐ யாம் டிபரண்ட்....''

''நான் போகலாமா?'' எழுந்தான்.

''இரு. கொஞ்சம்'' என்றார். ''கமல் கொலை விஷயத்தில் என்ன கண்டு பிடித் திருக்கிறாய்?'' என்றார்.

''ஒன்றுமில்லை.''

''மறைக்காதே மகேஷ் — நான் கண்டு பிடித்து விடுவேன்.''

''கண்டு பிடியுங்களேன் சார்—'' சிரித் தான்.

''ஒரே ஒரு கேள்விக்குப் பதில் சொல்— கண்டு பிடித்து விடுகிறேன்.''

''கேளுங்கள்.''

''கமல்நாத்தின் 'கான்குபைன்' உன் அறையில் என்னசெய்து கொண்டிருக்கிறாள்?''

அதிர்ந்தான். ''கான்குபைனா'' என்றான். ''அந்தரங்கக் காரியதரிசி என்றாளே!''

''அந்தரங்கக் காரியங்களைக் கவனிக்கிற வளாக இருக்கலாமே'' அவரும் சிரித்தார். ''கான்குபைனுக்கு நாகரிகப் பெயர் அது தானே?''

''அவளைச் சந்தேகிக்கிறீர்களா?''

''நாங்கள் எல்லோரையுமே சந்தேகிக்க வேண்டுமப்பா'' என்றார்.

''என்ன சொன்னாள் நிம்மி?'' யோசித் தான். இவர் உதவியும் நமக்குத் தேவைப் படலாம்.

எல்லாவற்றையும் சொன்னான். கேட்டுக் கொண்டார், கவனமாக.

''ஸோ — இந்தக் கங்குலி மீது குற்றம் சாட்டுகிறாளா?'' என்றார்.

''குற்றம் சாட்டுகிற மாதிரி சொல்ல வில்லை.''

''பொம்பளை ஐயா — டைரக்டா சொல்லு வாளா? 'கோடி' காட்டுவாள். நாம் போய் லபக்கென்று பிடித்துக் கொள்ள வேண்டும்.''

''பிடித்துவிடப் போகிறீர்களா?''

''நோ எவிடென்ஸ் — பணம் ஒரு இலட் சத்தைப் பிடுங்கிக் கொண்டு கொன்று போட்டுவிட்டுப் போயிருந்தால், போய்ப் பிடித்து விடுவேன். நௌ... இட்டீஸ் இம் பாஸிபிள்... கங்குலி கிட்ட கமல்நாத் பணம் இல்லை.''

''பின்னே எங்கே போயிற்று அது? நிச்சய மாக ஒரு லட்சம் கொண்டு வந்திருக்கிறார், கமல். அது என்ன ஆயிற்று?''

''எங்களுக்குத் தெரியும். அது எங்களிடம் வந்து விட்டது.''

''ஓ! என்ன சொல்கிறீர்கள் கோபாலன்?''

''எரிந்த பிணத்தை நாங்க கைப்பற்றி னோம். அதனோட இடுப்பு பெல்ட்லே, சீக் ரெட் அறையிலே கற்றை கற்றையாக எரிந்து கிடந்தது. நிச்சயமாக இண்டியன் கரன்சிதான். நோ டவுட். எடுத்து ரசாயனப் பரிசோதனைக்கு அனுப்பி வைச்சிருக்கோம்.''

''ஐ ஸீ'' என்றான். ''எரிந்தது அவர் பணமாக இருந்தால், இறந்திருப்பதும் அவர் தான்.''

''இறந்தது கமல்நாத்தாக இல்லாமலும் இருக்கலாமே என்று நானும் கொஞ்சம் சந் தேகப்பட்டேன் மகேஷ். ஆனால் தலை மறைவாகப் போக விரும்புகிற ஒரு ஆள் தன் பணத்தை ஒரு பெரிய தொகையையும் ஏன் வீணாக எரிக்க வேண்டும்? கங்குலிக்குத் தான் இறந்துவிட்டதாகக் காட்ட விரும் பினால் பணத்தையும் எரித்து வீணாக்க வேண் டியதில்லையே'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''ஸோ, இறந்தது கமல்நாத்தான்.''

''ஆமாம்.''

''அப்படியானால் கொன்றவன் யார்? கங் குலியா?''

''அங்கேயும் உதைக்கிறது மகேஷ். அன் றிரவு கமலைப் பார்க்க வந்த ஆள் கங்குலி யாக இருந்தால் — அவன்தான் அவரைக் கொன்றான் என்றால் — தீயிடுவதற்கு முன் பணம் முழுவதையும் எடுத்துக் கொண் டல்லவா தீயிட்டிருப்பான்?''

''ஓ'' என்றான் மகேஷ்.

கோபாலன் எழுந்தார், ''பணத்தைக் கொடுப்பதற்குத்தான் கமல் வந்திருக்கிறார். மறுநாள் நிச்சயமாகக் கொடுத்திருப்பார். எளிதில் விவகாரம் முடிந்திருக்கும். இப் படி நிலைமை இருக்கையில், இரவே வந்து கங்குலி ஏன் கையைக் கறையாக்கிக்கொள்ள வேண்டும்?''

யோசிக்க வேண்டிய விஷயம்தான்.

''டீ சாப்பிடுகிறாயா?''

''நோ, தாங்க்ஸ்'' என்றான்.

''இரண்டு விஷயம் நிச்சயம். மனசில் குறித்துக்கொள். இறந்தவர் கமல்நாத்தே தான். கொன்றவனும் கங்குலி இல்லை. இந்த இரண்டும் துல்லியமாகத் துலங்கிப் போன விஷயங்கள்.''

''பின்னே கொலையாளி யார்?''

''அந்த 13ம் நம்பர் அறைக் கட்டில்தான் சொல்ல வேண்டும்!'' (தொடரும்)

''என்னதான் முன்ஜாக்கிரதைக்காரரானாலும் அவர் இப்படி இருக்க வேணும்... பாரேன்...''

''குற்றாலத்துக்கு வந்து அருவியிலே குளிக்கறதுக்கு ஹெல்மெட் போட்டுக்கறார்!''

-முத்துதங்க ஐயப்பன்

...கி மாமி தனிக் குடித்தனம் போகிறாள்!

ரமாமணி சுந்தர்

ஜானகி மாமிக்குத் திடீரென்று தனிக் குடித்தனம் போக வேண்டும் என்ற ஆசை முளைத்து விட்டது. இப்பொழுதுதான் தேனிலவு முடிந்து வந்திருக்கும் பிள்ளைக்கும், மருமகளுக்கும் இப்படிப்பட்ட ஆசை ஏற்பட்டிருந்தால் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஆனால் தனிக் குடித்தன ஆசை ஏற்பட்டது என்னவோ அறுபதாம் கல்யாணத்தைத் தாண்டிய ஜானகி மாமிக்குத்தான்.

காரணம் வேறு ஒன்றுமில்லை. வேலைக்குப் போகும் மருமகளான சாந்தா தினமும் காலை ஒன்பது மணிக்கெல்லாம் தினுசு தினுசாகப் புடவையும், அதற்குப் பொருத்தமாக ரவிக்கையும் அணிந்து, தோளில் டம்பப் பையை மாட்டிக் கொண்டு ஆபீசுக்குப் புறப்பட்டுப் போகும்பொழுது தான் மட்டும் புடவையை எடுத்துச் செருகிக்கொண்டு, வியர்க்க விறுவிறுக்கச் சமையல் அறையே கதி என்று இருக்க வேண்டிய நிலையை எண்ணி அழுகை அழுகையாக வந்தது ஜானகி மாமிக்கு. மாலையிலும் ஆபீசில் வேலை அதிகம், களைப்பாக இருக்கிறது என்று சொல்லிச் சமையல் அறைப் பக்கமே தலை வைத்துக் கூடப் படுக்காமல் மருமகள் தப்பித்துக் கொள்வதைக் கண்டு ஆத்திரமடைந்த ஜானகி மாமி, கணவர் அப்புசாமியிடம் தனிக் குடித்தனம் போக வேண்டும் என்று தலையணை மந்திரம் ஓத ஆரம்பித்தாள்.

அவரோ ''நீதானே வேலை பார்க்கும் பெண் வேண்டும் என்று ஊரெல்லாம் சல்லடை போட்டுத் தேடிப் பெண் எடுத்தாய். இப்பொழுது முனகினால் முடியுமா? உனக்கு கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை'' என்று ஒரே போடாகப் போட்டு விட்டார். ஜானகி மாமிக்கு வாயைத் திறக்க முடியவில்லை. ஆதி நாளிலிருந்தே ஜானகி மாமியின் தனிக் குடித்தன ஆசைக்கு முட்டுக்கட்டை போட்டவர் ஆயிற்றே? ஜானகி மாமிக்குத் தன்னுடைய தலைவிதியை நொந்து கொள்வதைத் தவிர தற்போதைக்கு வேறு வழி ஒன்றும் புலப்படவில்லை.

ஆனால் அவளுடைய பொறுமை எல்லை மீறிவிட்டது. ஒரு வருஷத்துக்கெல்லாம் குழந்தையும் கையுமாகப் பிறந்தகத்திலிருந்து வந்திறங்கிய மருமகள் நான்கு நாட்கள் கழித்துப் பழையபடியே தினுசு தினுசாக



உடுத்திக் கொண்டு, மாமியாருக்கும், குழந்தைக்குமாகச் சேர்த்து ''டாடா'' காண்பித்துவிட்டு ஆபீசுக்குப்போக ஆரம்பித்ததும், தான் இத்தனை நாட்கள் சமையல்காரியாக இருந்தது போதாதென்று இனிமேல் ஆயாவாகவும் இருக்க வேண்டிய நிலைமை வந்து

விட்டதை எண்ணித் துக்கம் தாளவில்லை ஜானகி மாமிக்கு. அப்புசாமியிடம் மறுபடியும் தலையணை மந்திரம் ஓத ஆரம்பித்தாள்.

அப்புசாமியும் அற்புதமான ஆலோசனை ஒன்றைக் கூறினார்.

''அடியே, தனிக் குடித்தனம் போனால் இத்தனை வயதுக்கு மேல் கிழங்களுக்கு என்ன தனிக் குடித்தன ஆசை என்று ஊரே நம்மைப் பார்த்துச் சிரிக்கும். அதனால் பூனாவில் இருக்கும் இரண்டாவது பிள்ளை ரகுவிடம் போயிருக்கலாம். நல்ல வேளை அவன் மனைவி வேலைக்கெல்லாம் ஒன்றும் போகவில்லை.''

தில்லிக் குளிரும், வெய்யிலும் தங்களுக்குச் சரிப்பட்டு வரவில்லை என்று ஏதோ சாக்குப் போக்கெல்லாம் சொல்லி ஒரு வழியாக பூனாவுக்கு மூட்டை முடிச்சுடன் போய்ச் சேர்ந்தார்கள் ஜானகி—அப்புசாமி தம்பதி. பிள்ளை, மருமகள், பேரன் பேத்தி எல்லோரும் ஸ்டேஷனுக்கு வந்து வரவேற்று ஏகப்பட்ட மரியாதையெல்லாம் செய்து வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போனார்கள். மருமகள் கமலா தடபுடலாகப் பாயசம், வடை என்று விருந்தே வைத்து இவர்களைத் திக்குமுக்காடச்செய்துவிட்டாள். ஜானகி மாமிக்கு ஆனந்தம் பிடிகொள்ளவில்லை. மாமியார், மாமனாரை இவ்வளவு தூரம் உபசரிக்கும் மருமகளும் உண்டோ என்று மூக்கில் விரல் வைத்தாள். பேரன் பேத்திகளுடன் கொஞ்சிக் குலாவுவதில் மெய் மறந்து போனாள் ஜானகி மாமி.

உண்ட களைப்பு நீங்கச் சிறிது நேரம் ஓய்வு எடுத்துக்கொண்ட பிறகு, குடும்பம் முழுவதும் ஹாலில் கூடியது. மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தான் ரகு.

''நாங்களே உங்களுக்குக் கடிதம் எழுத வேண்டும் என்று நினைத்துக்கொண்டிருந்தோம். நல்லவேளை நீங்களாகவே புறப்பட்டு வந்து விட்டீர்கள். விலைவாசி ஏறிக்கொண்டு போவதைப் பார்த்தால் என் சம்பளத்தில் குடித்தனம் நடத்த முடியும் என்று தோன்றவில்லை. அதனால் கமலாவும் அடுத்த மாதத்திலிருந்து வேலைக்குப் போகப் போகிறாள். நீங்கள்தான் வந்து விட்டீர்களே, குழந்தைகளைக் கவனித்துக் கொள்வதற்கு. கமலா கவலையே இல்லாது இனிமேல் வேலைக்குப் போகலாம்.''

ஜானகி மாமிக்குத் தலையைச் சுற்றியது. சிறிது நேரம் முன்னால் வாஞ்சையுடன் பார்த்த அதே பேரன், பேத்திகளை வானரப் படையைச் சேர்ந்தவர்களைப் பார்ப்பது போல் முறைத்தாள். அப்புசாமியோ மனைவியைப் பார்க்கத் துணிவின்றித் தலையைக் குனிந்து கொண்டார். இன்று இரவு மனைவி தன்னை உலுக்கி எடுத்துவிடப் போகிறாளே என்று அவருக்கு வயிற்றில் புளியைக் கரைத்தது.

இந்த வில்லங்கத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற்கான புதிய உத்தி ஒன்றை மனைவிக்குச் சொல்லிக் கொடுத்தார் அப்புசாமி.

''அடியே, போக வர நாட்டுப் பெண்ணை ஏதாவது தொண தொணவென்று சொல்லிக்கொண்டே இரு. உன்னுடைய நச்சரிப்பு தாங்காது அவளே நம்மை இங்கிருந்து அனுப்பிவிடுவாள்.''

மருமகளைத் தொண தொணவென்று கழுத்தறுப்பது மாமியாருக்குச் சொல்லிக்கொடுக்க வேண்டுமா? ஜானகி மாமி மறுநாளே தன்னுடைய உத்தியைக் கையாள ஆரம்பித்தாள். நாட்டுப் பெண்ணை நின்றால் குற்றம், உட்கார்ந்தால் குற்றம் என்று சொல்லி வலுச் சண்டைக்கு இழுத்தாள்.

மாமியாருக்கு இவ்வளவு சாமர்த்தியம் இருந்தால், மருமகளுக்கு அதில் பாதியாவது இருக்காதா? மருமகளுக்கு என்னபைத்தியமா பிடித்திருக்கிறது, இவ்வளவு உபயோகமாக இருக்கும் மாமியாருடன் சண்டை போடுவதற்கு? பூமாதேவியையே தோற்கடித்தாற் போன்று பொறுமையின் அவதாரமாக இருந்தாள் கமலா. எப்பொழுதாவது கோபம் வந்தால்கூட, ஒண்ணாந் தேதியன்று கிடைக்கும் சம்பளம், அதன் மூலமாக வாங்கும் தினுசு தினுசான புடவை, நகைகள் இவற்றை நினைத்துக் கொண்டு, கோபத்தை அடக்கிக்கொண்டு விடுவாள்.

இப்படியாக ஒரு வருடம் ஓடியது. நாட்களாக ஆக ஜானகி மாமி கமலாவின் பொறுமையை மிகவும் சோதிக்க ஆரம்பித்துவிட்டாள். ஏதோ குழந்தைகளைக் கவனித்துக்கொள்கிறாளே என்பதற்காகப் பேச்சுரிமையை இழந்து, கேவலம் மாமியாருடன் சண்டை கூடப் போட முடியாமல் வாழும் வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையா என்று கமலாவுக்கு வெறுப்பு ஏற்பட்டு விட்டது. மேலும் மாமியாரிடம் காண்பிக்க முடியாமல் சிரமப்பட்டு அடக்கி வைக்கும் கோபக் கனலையெல்லாம் கமலா ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி என்று இருக்கும் கணவன் ரகுவின் மீது கக்கினாள். அதனால் ரகுவுக்கும் எப்படியாவது இந்தப் பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று தோன்றிவிட்டது.

அடுத்த முறை ஜானகி மாமி, ''எனக்கென்ன தலையெழுத்தா? இந்த வயதான காலத்தில் குழந்தை, குட்டிகளைக் கட்டி மேய்த்துக் கொண்டு வீட்டில் அடைந்து

கணவன்: 'ஆபீஸிலிருந்து வந்ததும் எனக்குத் திருஷ்டி சுற்ற ஆரம்பிச்சிட்டியே... என்ன விஷயம்?

கொண்டை போட்ட மனைவி: ''உங்க கை வண்ணத்தால் மலர்ந்த என் கொண்டையை ஆபீஸில் பாராட்டாதவங்களே இல்லே... அதற்காகத்தான்!''

- உ. ராஜாஜி





குடந்தை ஜூபிடர் தியேட்டர் வாசலில் உள்ள அறிவிப்பு.

தங்களிடம் உள்ள பிளேடுகளின் கூர்மையை எங்கள் தியேட்டர் சீட்டுக்களைக் கிழித்துத்தான் பரிசோதனை செய்ய நினைத்தால் எங்களுக்கு எவ்வித ஆட்சேபமும் இல்லை. சிலசமயம் தாங்களே அதே சீட்டில் அமர நேரிடும்போது தங்களுக்கு ஏற்படும் அசௌகரியத்திற்காக இப்போதே வருத்தப்படுகிறோம்!

-தகவல்: இரா. அசோகன்

கிடக்க, ஏதோ நம் ஊரில் போய், கோயில் குளம் என்று இருந்தால் போகிறஇடத்துக்குப் புண்ணியம் தேடலாம்'' என்று அலுத்துக் கொண்ட உடன், ரகு ஓடியே போய் ஜானகி—அப்புசாமி தம்பதிக்கு ஊருக்குப் போக டிக்கெட் வாங்கிவிட்டான்.

ஜானகி மாமிக்குத் தாங்கள் போட்ட திட்டம் இவ்வளவு எளிதில் வெற்றியைத் தேடிக் கொடுத்ததில் ஒரே ஆனந்தம். இம்முறை நேராகத் தன்னுடைய சொந்த ஊராகிய மதுரைக்குத் தனிக் குடித்தனம் போவதாக முடிவெடுத்த தம்பதியர், சென்னையில் இருக்கும் தங்கள் மூத்த பிள்ளை சங்கருக்கு மதுரைக்குப் போவதற்கான ஏற்பாடெல்லாம் செய்யச் சொல்லி முன்கூட்டியே எழுதி விட்டார்கள்.

சென்னையில் இவர்கள் போய் இறங்கிய உடன் கூச்சல் போட ஆரம்பித்தானே பார்க்க வேண்டும் சீமந்த புத்திரனை சங்கர்.

''தடித் தடியாக மூன்று பிள்ளைகள் இருக்கும்போது நீங்கள் தனியாகக் குடியிருந்தால் ஊரில் உள்ளவர்கள் எங்களைச் சும்மா விட்டு வைப்பார்களா? பெற்ற அம்மா அப்பாவை வைத்துக் காப்பாற்றக் கூட லாயக்கில்லாதவர்கள் என்ற பட்டத்தை எங்களுக்கு நீங்கள் வாங்கிக் கொடுக்க என்ன சதித் திட்டம் போடுகிறீர்களா?'' என்ற சங்கர் போட்ட இரைச்சலில் நடுங்கிப் போன தம்பதிக்குப் பிள்ளையை எதிர்த்துக் கொள்ளத் துணிவில்லை.

என்ன இருந்தாலும் மூத்த பிள்ளை. நாளைக்குத் தங்களுக்குத் தலையைக் காலை வலித்தால் அவன்தானே கவனித்துக் கொள்ள வேண்டும். மேலும் நாற்பது வயதைத் தாண்டிய சங்கரின் மனைவிக்கு இனிமேல் வேலையெல்லாம் ஒன்றும் கிடைக்காது. அப்படியே கிடைத்தாலும் அவர்களின் பெண்கள் இருவரும் கைக்குழந்தைகள் அல்லவே என்ற தைரியத்தில் இந்த ஏற்பாட்டுக்குச் சம்மதித்தார்கள்.

இவர்கள் வந்திறங்கிய அன்றே சங்கர் ஆபீஸ் டின்னருக்கு மனைவியை அழைத்துக் கொண்டு புறப்பட்டான். ''ரொம்ப நாட்களுக்குப் பிறகு இன்னிக்குத்தான் உங்கள் நாட்டுப் பெண் என்னுடன் வெளியில் வருகிறாள். இந்திரா நகரில் வீடு வாங்கினாலும் வாங்கினோம், பெண்களைத் தனியாக விட்டு விட்டு ஓரிடத்துக்குப் போக முடியவில்லை'' என்று சொல்லிக் கொண்டே சர்வ அலங்காரத்துடன் வந்த மனைவியை அழைத்துக் கொண்டு டின்னருக்குப் போன சங்கரைப் பார்த்துக் கோபத்துடன் பல்லைக் (பொய்ப் பல்லைக்) கடித்தாள் ஜானகி மாமி.

அப்புசாமி அவர்களோ ''தினமுமா போகப் போகிறார்கள்? என்றைக்காவது ஒரு நாளைக்குத்தானே ஆபீஸ் டின்னர் வரப் போகிறது?'' என்று மனைவியைச் சமாதானம் செய்யும் சாக்கில் தம்மைத் தாமே சமாதானம் செய்து கொண்டார்.

ஆனால் நடந்தது என்னவோ வேறு விதமாகத்தான். தினமும், சங்கர், மனைவியை அழைத்துக் கொண்டு தன் பெற்றோரைப் பெண்களுக்குத் துணையாக வீட்டில் வைத்து விட்டு, கச்சேரி, பீச், நாடகம், சினிமா என்று மாற்றி மாற்றிப் போக ஆரம்பித்தான். அப்படிச் சென்னையில் வேறு ஒரு நிகழ்ச்சியும் நடக்காவிட்டாலும் பெரிய உத்தியோகத்தில் இருக்கும் சங்கருக்கு வாரத்தில் ஒரு நாளாவது ஆபீஸ் பார்ட்டி நிச்சயமாக உண்டு.

ஜானகி — அப்புசாமி தம்பதியருக்குப் போறும் போறும் என்று ஆகிவிட்டது. வயதான பெற்றோர்களை ''எனக்கு வேண்டாம் பூசணிக்காய்''என்று பிள்ளைகள் ஒதுக்கிவைக்கும் காலம் மாறிப்போய், இன்றையத் தலைமுறைப் பிள்ளைகள் அதே பெற்றோரைத் தங்கள் சுயநலத்துக்காகத் தாஜா செய்து தங்களுடன் வைத்துக் கொள்ளும் கொடுமையை இனியும் பொறுத்துக்கொள்ளக் கூடாது என்ற உறுதியான தீர்மானத்துக்கு வந்தார்கள் ஜானகி—அப்புசாமி தம்பதியர்.

இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்காக மாபெரும் சதித் திட்டம் ஒன்றைத் தீட்டினார்கள். அதன்படியே ஒரு ஞாயிற்றுக் கிழமையன்று குடும்பம் முழுவதும் ஹாலில் உட்கார்ந்து கொண்டு சுவாரஸ்யமாக டி.வி.யில் சினிமா பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது, தங்கள் உடைமைகளை எடுத்துக் கொண்டு ரகசியமாக ஒருவரிடமும் சொல்லாமல், கொள்ளாமல் பின்புறமாக வீட்டை விட்டுப் புறப்பட்டு விட்டார்கள், ஜானகி மாமியும் அப்புசாமி மாமாவும்.

பெற்றோர்களுக்குத் தெரியாமல் திருட்டுத்தனமாகக் கல்யாணம் செய்து கொள்வதற்காக வீட்டை விட்டு ஓடிப்போகும் டீன் ஏஜ் காதலர்கள் போன்று உற்சாகமாக ஜானகி அப்புசாமி தம்பதி இளமை வேகத்துடன் ஓடிப்போய் மதுரைக்குப் போகும் ரயிலில் இடம் பிடித்தார்கள்!



சந்திரநாத்

நீயா?

14

இன்ஸ்பெக்டரை விட்டு, ஆட்டோவில் ஏறி, திரும்புகையில் ஒரு தெருவில் கல்லா வில் கங்குலி தெரிந்தார்.

'நிறுத்தப்பா' என்று சொல்லி இறங்கிக் கொண்டு, ''ஹலோ'' சொன்ஞன்.

''வாங்க சார்'' என்ருர் மகிழ்ச்சியாக. ''என்ன சாப்பிடுறீங்க?''

பாரில் கூட்டமே இல்லே. பாதி நாற்காலி காலியாகக் கிடந்தன. இருந்தும் உதவிக்கு ஆளில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந் தார்.

''பிரெட் ஜாம் தரட்டுமா?''

''குடுங்க.''

வாங்கிக் கொண்டு கல்லா அருகில் நாற் காலியில் உட்கார்ந்து கொண்டான். அவரை நன்ருகப் பார்த்தான். அப்பாவியாகத் தெரிந் தார்.

கீழ்க் கோடியில் ஒரு பயல் சம்சாவோ ஏதோ கேட்டான். கொடுத்து விட்டு வந்து எதிரே உட்கார்ந்தார்.

''என்ன சார், ஏதாவது கண்டு பிடிச் சீங்களா?'' என்ருர்.

''எங்கே ஸார் கண்டு பிடிக்கிறது? எங்கே கண்டுபிடிச்சுடுவேனேன்னு பயந்துதானே என்னேயே குளோஸ் பண்ணப் பார்த்தீங்க!''

''சாமி, சாமி — சத்தியமா நான் அதுக்கு ஜவாப்தாரியில்லே'' என்ருர்.

''உங்க ஆள் ராமு பின்னே ஏன் என்னேச் சுட்டான்?''

''எனக்குத் தெரியாது, ஐயா — சத்தியமா தெரியாது.''

''தெரியாது?'' கண்களே உறுத்துப் பார்த் தான்.

''இந்த பன் பட்டர் ஜாம் ஆணேயாகத் தெரியாது.''

சிரித்துவிட்டான். ''இதுதான் எனக்கு இப்ப சோறு போட்டுக்கிட்டு இருக்கு சார்— அதனலே இதுதான் என் தெய்வம். அத ஞலேதான் அது மேலே — என் பொழைப்பு மேலே ஆணேயாச் சொன்னேன்.''

''அவனே நீங்க போயிப் பார்க்கலேயா?''

''இல்லே.''

''ஏன்?''

''நான் ஏன் அவனேப் போய்ப் பார்க்கணும்? என் ஆளா? நான் ஏவி விட்டவஞ? அவனேக் காப்பாத்த எனக்கு என்ன கடமை?''

''அவனே ஜாமீன்லே கொண்டாறப் போவீங்களா?''

''நான் எதுக்குப் போகணும்?''

''மிஸ்டர் கங்குலி — எல்லாத்துக்கும் நான் யாரு, நான் எதுக்குப் போவணும்னு இந்தத் தினுசுலேயே பேசிக்கிட்டிருந்தா பிரயோ சனம் இல்லே — — இன்ஸ்பெக்டர் கோபா லன் எல்லாத்தையும் குடைஞ்சு கொண் டாந்துடுவாரு.''

''கொண்டாரட்டுமே எனக்கென்னபயம்?''

''உங்க பூர்வோத்ரம் எல்லாம் வந்துடும் மிஸ்டர் கங்குலி.''

''வரட்டுமே.''

''மறுபடியும் இதே மாதிரி பேசறீங்களே சட்'' — எழுந்து கொண்டான். ''சரி, ஒரே ஒரு கேள்விக்குப் பதில் சொல்லுங்க. மெட் ராஸிலே மாறு பெயர்லே கமல்நாத் இருக் கார்ங்கிறதை நீங்க எப்படிக் கண்டு பிடிச் சீங்க?''

திடுக்கிட்டார். மேஜை மீது போட்டிருந்த கைகள் நடுங்கின. முகம் வெளுத்தார். சமா ளித்துக் கொண்டு சொன்ஞர்: ''ஓ, அதைக் கேக்கறீங்களா? நம்ப ராமு கிட்டே எப்பவோ ஒரு வாட்டி கமல் பற்றிய அடையாளங்கள், எனக்கும் அவருக்கும் இடையே உள்ள பணப் பிரச்னே எல்லாவற்றையும் சொல்லி யிருந் தேன். இரண்டு வாரத்துக்கு முந்தி யாரோ சொந்தக்காரங்க செத்துட்டாங்கன்னும் பட்டணத்துக்குப் போஞன். திரும்பி வந்ததும் 'ஸார், நீங்க சொன்ன கமல் ஆளு மெட் ராஸ்லேதான் இருக்காரு'ன்ஞன். நான் கேள்வி மேல் கேள்வி கேட்டு அவன் சொல்ற ஆசாமி, நான் தேடிக்கிட்டிருக்கிற கமல் தான்னு தெரிஞ்சுக்கிட்டேன்.''

''அட்ரஸ் கொடுத்தாஞ?''

''டெலிபோன் நம்பரே கூடக் குடுத் தான்.''

''டிரங்கால் போட்டீங்களா?''

''போட்டேன்.''

''என்ன கேட்டீங்க?''

''என் பணத்தைக் குடுத்துடும்படி கேட் டேன்.''

''மிரட்டினீங்களா?''


''இருக்கலாம்... லேசா மிரட்டாட்டா யாரு ஸார் இந்தக் காலத்துலே பெரிய தொகையைக் கொடுக்கச் சம்மதிப்பாங்க?''

''சம்மதித்தாரா?''

''சம்மதிக்க வைத்தேன்.''

''பணம் அனுப்புவதாகச் சொன்ஞரா?''

''இல்லே; நேரில் வருவதாகச் சொன்ஞர்.''



''ஹோட்டல் நிர்மலாவிலே தங்கப் போற தாச் சொன்னாரா?''

''இல்லை. நேரே என் 'பாரு'க்கே வருவார் என்றே நினைத்தேன்.''

''இந்தச்சம்பாஷணை நடந்தபோது உங்கள் அருகில் யார் இருந்தார்கள்?''

''யாரும் இல்லை.''

''கமல்நாத் எப்போது வரப்போகிறார் என் பதை யாரிடமாவது சொன்னீர்களா?''

''சொல்லவில்லை.''

''உங்களுக்கு பெண் பி.ஏ. உண்டா?''

''நம்ப தொழிலுக்கு அதெல்லாம் எதுக் குங்க?''

''நீங்கள் கமல்நாத்தை...'' என்று மகேஷ் ஏதோ கேட்க ஆரம்பித்தபோது கதவு புய லாகத் திறக்க இன்ஸ்பெக்டர் கோபாலன் உள்ளே இன்னொரு புயலாக வந்து, ''ஓ, மகேஷ் '' என்று கூவித் திகைத்தார்.

''என்ன மிஸ்டர் இன்ஸ்பெக்டர்?''

''சொல்கிறேன்'' என்று திரும்பி கங்கு லியை ஆழமாகப் பார்த்தார். ''வேய்— கங்குலி — ராமு இங்கே வந்தானா?'' என்றார்.

''ஆசுபத்திரியிலே இருக்கிற ஆளு எப் படிங்க வர முடியும்?''

''அட சட், கேட்டதுக்குப் பதில் சொல் லுய்யா. எங்கய்யா அவனை ஒளிச்சு வச் சிருக்கே'' அதட்டினார். பின்னாலேயே வந்த இரு போலீஸ்காரர்கள் நாலாபுறமும் விரைந் தார்கள்.

''அவன் இங்கே வரலீங்க.''

''இன்ஸ்பெக்டர், ராமு—''

''ஆசுபத்திரியிலேருந்து சற்று முன் தப் பிச்சுக்கிட்டு ஓடிட்டான் மகேஷ்.''

''ஓ'' என்று கூவினான் மகேஷ்.

போலீசார் திரும்பி வந்தார்கள். ''உள்ளே எல்லாம் பார்த்துட்டோம். இல்லை சார்!'' என்றார்கள்.

மகேஷின் மூளை கிடுகிடுவென்று வேலை செய்தது. ''இன்ஸ்பெக்டர், ஒரு விநாடியைக் கூட நாம வேஸ்ட் பண்ணக் கூடாது. ஆசுபத்திரியிலேருந்து அவன் நேரே என் ரூமுக்குத்தான் போயிருப்பான். கடவுளே, அங்கே நிர்மலா தனியா இருப்பாளே— வாங்க ஸார்'' என்று வெளியே ஓடினான்.

மூன்று நிமிஷத்துக்குள் ஹோட்டல் நிர் மலாவுக்கு வந்து நுழையும்போது மழை தூரத் தொடங்கியது. ஆகாசத்தில் இடி உருண்டது.

படிகளில் விரைந்து, தாழ்வாரத்தில் ஓடி அறைக் கதவைத் தொட்டபோது தானாகவே திறந்து கொண்டது. உள்ளே—

திடுக்கிட்டார்கள். நிம்மி கை கால்களை விரித்துக் கொண்டு பிணமாகக் கிடந்தாள். அவள் கழுத்தில் ஒரு கைக்குட்டை இறுக்கப் பட்டிருந்தது.

''— காரியம் மிஞ்சி விட்டது கோபா லன்!'' — மகேஷ் கத்தினான்.

இன்ஸ்பெக்டர் கீழே மண்டியிட்டு அவளைத் தொட்டுப் பார்த்தார். சூடு இருந்தது. ''இறந்து கொஞ்ச நேரம்தான் ஆகிறது'' என்றார்.

நிமிர்ந்தார்; ''மகேஷ், இப்போதான் உயிர் போயிருக்கிறது. ஸோ, கொலையாளி

இங்கேதான் பக்கத்தில் எங்கோ இருக்கிறான். உஷாராஞர்கள். விஷயங்கள் புரியத் தொடங்கிவிட்டது போலிருந்தது. பகலில் நிம்மியுடன் பேசிக் கொண்டிருந்தபோது, சுட்டது கூட அவனைக் கொல்ல அல்ல; அவளைத்தான் தீர்த்துக்கட்ட வந்திருக்கிறான்!

ஏன் அவன் நிம்மியைத் தீர்த்துக்கட்ட முயன்றான்?

கமல்நாத் பற்றி நிம்மி ஏதாவது சொல்லி விடுமுன் அவளைத் தீர்த்துக் கட்ட நினைத்தானா? நிம்மிக்குப் பயந்தானா? அவனைப் பற்றி நிம்மிக்குத் தெரிந்திருந்ததா? நிம்மியைக் கொல்லத்தான் மீண்டும் வந்தானா?

இன்ஸ்பெக்டர், கங்குலி, மகேஷ் மூவரும் எழுந்து நாலாபுறமும் அவனைத் தேடி ஓடினார்கள். ஜன்னல் பின் பக்கமாக இருந்தது. திறந்திருந்தது.

மகேஷ்சந்தேகப்பட்டு ஓடிஎட்டிப்பார்த்த போது ஜன்னலிலிருந்து கீழே சரிந்து சென்ற கூரையின் முடிவில் ஏறத் தொடங்கிய இன்னொரு கூரையில் ஒரு ஆள், கறுப்பாக, மங்கலாகத் தொத்திச் செல்வது தெரிந்தது.

மகேஷை ஜன்னலில் பார்த்துவிட்டு அங்கிருந்தே சுட்டான் அவன். சட்டென்று நகர்ந்து குண்டுக்கு வழிவிட்ட மகேஷ், ''இன்ஸ்பெக்டர், கீழே முற்றத்துக்கு உங்கள் ஆட்களுடன் போய்த் தயாராக இருங்கள்'' என்று கூவிக் கொண்டே சரிவில் இறங்கினான்.

''முட்டாளே! என்ன காரியம் செய்கிறாய்! அவனிடம் துப்பாக்கி இருக்கிறது'' என்றார் கங்குலி.

''தெரியும். ஆனால் அதில் இனிமேல் குண்டு இருக்காது.'' — மகேஷ் சரிவில் சரசரவென்று இறங்கினான். மழை வலுக்க ஆரம்பித்து விட்டது.

ஆகாசத்தின் மங்கிய வெளிச்சத்தில், எதிரி காயம்பட்ட இடது தோளைப் பிடித்துக் கொண்டு கூரை விளிம்பில் நின்று, முன்னேறி வரும் மகேஷைத் தடுக்க வழி தெரியாமல் தவிப்பதை உணர்ந்து,

மேலும் முன்னேறுகையில், தற்காலிகத் தடுப்பாக, காலித் துப்பாக்கியை அவனை நோக்கி வீச—

அதை லாகவமாக காட்ச் பிடித்துத் தூக்கி எறிந்துவிட்டு, 'எதிரி' மீது பாய்ந்து, இருவருமாய்க் கட்டிப் புரண்டு, தடதடவென்று கூரையில் உருண்டோடி

'தொபீர்' என்று ஹோட்டல் முற்றத்தில் விழுந்தார்கள். கூரை தாழ்வாக இருந்ததால் பிழைத்தார்கள்.

மகேஷ் விருட்டென்று எழுந்து 'எதிரி'யை இனி உயிரோடு பிடிக்க முயலுவதில் அர்த்தமில்லை என்று நிதானித்து, தன் துப்பாக்கியை எடுத்துச் சுடப் பார்க்க,

'எதிரி' அவன் மீது ஒரு 'டைவ்' அடித்து மார்பில் ஏறி அழுத்திக் கொண்டு அவன் ரிவால்வரைப் பறித்துக் கொண்டு மண்டைக்கு நேராகக் குறி பார்க்க—

கோபாலன் தக்க சமயத்தில் எதிரியைச் சுட—

மகேஷை ஒரு உதறு உதறிவிட்டு எதிரி கீழே ஒரு பயங்கரக் கூச்சலிட்டவாறு சாய்ந்தான். எல்லாம் விநாடிகளில் நடந்து விட்டன!

வந்து பார்த்தார்கள். ரத்தம் ஆறாகப் பெருகியிருந்தது. அவன் — 'ராமு' — உடல் விசுக் விசுக்கென்று இரண்டு தடவை வெட்டி இழுத்தது. அப்புறம் குளிர்ந்து போனான்.

''மகேஷ்!'' — ஓடிவந்து தூக்கினார் இன்ஸ்பெக்டர். முழங்காலில் அடிபட்டிருந்தது. காயத்தில் எரிந்தது. கூட்டம் கூடிவிட்டது.

''டாக்டரைக் கூப்பிடட்டுமா?''

''வேண்டாம். முதலில் கூட்டத்தை விரட்டுங்கள்.''



அருள்வாக்கு

நம் மதம் தழைக்க

ஒருவன் சண்டை போட்டு மதம் மாற்றுகிறேன் என்றால் எதிர்த்துப் படை திரட்டிச் சண்டை போட என்னால் ஆகாது. அல்லது கோடி கோடியாய்ச் செலவழித்து ஆஸ்பத்திரி ஸ்கூல் வைத்து ஒருத்தன் மதமாற்றம் செய்கிறான் என்றால் அதைப் போல் கோடிக் கணக்கில் செலவழிக்க எனக்கு ஐவேஜியில்லை. இது இரண்டும் இருப்பதாகவே வைத்துக் கொண்டாலும் கூட இதனால் செய்யும் மாறுதல் உண்மையானதும் (genuine) இல்லை. அது நிலைத்து நிற்காது. ஏனென்றால் நம்மை விடவும் பலிஷ்டர்களாகவோ நம்மை விடவும் ரொம்பப் பண வசதி உள்ளவர்களாகவோ இன்னொரு கூட்டம் வந்தால் அது நாம் பலத்தாலும் பணத்தாலும் செய்ததையெல்லாம் அழித்துவிட்டுத் தானே ஜயித்துவிடும். ஆனபடியால் இந்த வெளி சக்திகளை நம்பிக் கொண்டிராமல் நம் ஆத்ம சக்தியை நம்பி உள்ளுக்குள்ளேயே நம்மை உயர்த்திக்கொள்வதே நாம் செய்ய வேண்டியது. அப்போது எந்தப் பிரசாரமும் சண்டையும் வசியமும் இல்லாமலே நம் மதம் தழைத்து வாழும்.

—ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்

விரட்டினுர்கள். ''இன்ஸ்பெக்டர், என்னை மெதுவாகத் தூக்கி என் அறைக்குக் கொண்டு போங்கள் — அவசரம்; உடனே போக வேண்டும்.''

கொண்டு போனுர்கள்.

ஒரு போலீஸ்காரர் நிம்மியின் உடம்புக்குக் காவலாக அறை வாசலில் நின்ருர். மகேஷ் உள்ளே போய், இங்குமங்கும் தேடினுன்.

கட்டிலின் அடியில் அவன் தேடிய பொருள் கிடந்தது.

ஓடிப்போய் எடுத்தான். நிம்மியின் சிவப்பு நிற வானிடி பாக்.

அவசரமாகத் திறந்து எதையோ தேடினுன்.

முகப் 'பூச்சு உபகரணங்கள், ஒரு லிப்ஸ்டிக் ட்யூப், கொஞ்சம் சில்லறைகள், சின்னதாக ஒரு சீப்பு, கண்ணுடி — கடைசியில் நாலாக மடித்த ஒரு காகிதம் — ஒரு ரசீது— மகேஷின் கண்கள் பளபளத்தன.

''நிம்மி! நீயா, நீயா!''—

உள்ளே வந்தார் கோபாலன். ''கங்கிராஜுலேஷன்ஸ் மிஸ்டர், மகேஷ். கடைசியிலே கமல்நாத்தைக் கொன்றவனைப் பிடிச்சுட்டீங்க.''

''ஐய்யோ! கை வலிக்குது. விடுங்க.''— விடுவித்துக் கொண்ட மகேஷ், ''ஸாரி, இன்ஸ்பெக்டர்! கமல்நாத்தைக் கொன்றவனை என்னுலே பிடிக்க முடியலே; நிம்மியைக் கொன்றவனைத்தான் பிடிக்க முடிஞ்சுது... கமலேக் கொன்றவன் தப்பிவிட்டான்'' என்ருன்.

''கடவுளே—இன்னும் கதை முடியலேயா?'' என்ருர் இன்ஸ்பெக்டர்.

''முடிஞ்சுடும்; சீக்கிரம் — ஒன் மோர் சாப்டர் பாலன்ஸ். இரண்டு விஷயம் கிளியரா யிட்டா கதை முழுக்கவும் சொல்லிடுவேன்— யூ ஹாவ் டு வெயிட் டில் டுமாரோ — இப்ப என்னைக் கொஞ்சம் தனியா இருக்க விடறீங்களா?'' என்ருன்.

''ரைட் — காலேயில பார்ப்போம்'' — போனுர் கோபாலன்.

டாய்லெட்டுக்குப் போய் மூஞ்சியை அலம்பிக் கொண்டான். சூடாக ஒரு கப் ஓவல் தருவித்துக் குடித்தான்.

கீழே யோசனையுடன் மெதுவாக இறங்கினுன். லவுஞ்ச் காலியாக இருந்தது. ஆபரேட்டர் கூப்பிட்டு, ''ஸார், நீங்கதானே மகேஷ் — உங்களே மெட்ராஸிலிருந்து கூப்பிடருங்க'' என்ருன்.

எடுத்து ''ஹலோ'' என்ருன்.

''நடேஷ் பேசறேம்பா. அந்த 'அக்பருக்கு ஜே'யைக் கண்டு பிடிச்சுட்டியா?'' என்ருன் நடேஷ்.

''இன்னும் இல்லே.''

''நான் கண்டு பிடிச்சுட்டேன் — அதே மாதிரி ஒரு தந்தியை எழுதி எடுத்துக்கிட்டு, ஒரு தந்தி சேவகன் மாதிரி போயி—''

''யார் கிட்டே—''

''அதாம்பா — தந்தி குடுத்த அந்தப் பொம்பளே கிட்ட—''

''எந்தப் பொம்பளே?''

''கமலா.''

(தொடரும்)



வாழ்வா? சாவா?

மருத்துவத் துறையில் விஞ்ஞான ரீதியாக இன்று ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களே பெரிய பிரச்னையையும் தோற்றுவித்துள்ளன அமெரிக்காவில்: இறக்கும் நிலேயில் உள்ள ஒருவரின் உயிரைப் பிரிய விடாமல் உபகரணங்கள் உதவியோடு நீடிக்கச் செய்ய வேண்டுமா?

'நோயாளிகளின் உயிர் காப்பது எங்கள் கடமை' என்கின்றனர் சில டாக்டர்கள். 'உயிர் காத்து என்ன பயன்? அந்த நோயாளியை நிம்மதியாகச் சாகவிடாமல் ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாதவனுக நாட்கணக்கில் மாதக் கணக்கில் படுத்த படுக்கையாக வைத்திருப்பதில் என்ன லாபம்? சித்திர வதைதானே' என்கின்றனர் வேறு சிலர்.

இரண்டு பவுண்டு எடையில் பிறந்த குழந்தையின் உயிரைக் காக்க இன்று டாக்டர்களால் முடியும். ஆனுல் குழந்தை ஆரோக்கியமாக வளரும் என்ற உத்தரவாதமில்லே. அவ்வாறிருக்கக் குழந்தையைக் காப்பது அவசியம்தானு? கிழங்கள் காலனுடன் போராடியபடியே மாதக் கணக்கில் உயிர்ப் பிணமாக ''வாழ்வது'' எதற்காக?

இந்தப் பிரச்னேக்குப் பதில் காண இன்று பல அமெரிக்கர்கள் தங்கள் கருத்தை வெளிப்படுத்தி சாஸனம் எழுதுகிருர்கள்: 'நோய், விபத்து அல்லது வயது காரணமாய்த் தாங்கள் நினைவிழந்து போய் மரணம் நெருங்கினுல் அனுவசியமாக உயிரைச் செயற்கை முறையில் நீடிக்கச் செய்ய வேண்டாம்; சாக அனுமதிக்கலாம்' என்று எழுதிக் கையெழுத்துப் போட்டு, சாட்சிக் கையெழுத்துடன் பத்திரத்தை ரிஜிஸ்தர் செய்து நெருங்கிய பந்துக்களிடம் கொடுத்து வைக்கிருர்கள்!

— நியூஸ் வீக்

படம்: சிறுநீரகங்கள் பழுதான நங்கைக்கு டயலே ஸிஸ் சிகிச்சை

கல்லில் மலர்ந்த காவியம்: 4

ஸ்ரீரங்கம்

வைணவத் தலங்களிலே முதன்மை யானது. கோயில் என்ருல் அது திருவரங்கமே! ஏழு பிரகாரங்கள் கொண்ட பெருங்கோயில். எண்ணற்ற சிற்பங்களால் சிறந்து மிளிர்வது. பத்து ஆழ்வார்களால் பாடிப் பரவப் பெற்றது. எம்பெருமானுர் என்னும் இராமானுஜ ரின் ஆன்மார்த்த ஸ்தலம். பச்சை மா மலை போல் மேனியும், பவளச் செவ்வாயும், கமல மலர்க் கண்ணுமாகப் பள்ளி கொண்ட பெருமாள் அருள் சுரக்கும் திவ்ய தேசம். சோழ, பாண்டிய, பல்லவ, ஹொய்சாள,நாயக்க மன்னர் களால் திருப்பணி செய்யப் பெற்றுச் செழித்த புனிதப் பதி. அவர்களால் படைக்கப்பெற்ற சிற்பச் செல்வங்கள் மகோன்னதமான கலைக் கருவூலங்க ளாகும். மண்டபங்களில் காணப்பெறும் தூண்களின் சித்திர விசித்திரங்கள் கண் கொள்ளாக் காட்சியாகும்.

குதிக்கும் குதிரைகளின் கொட்டத்தை அடக்கும் வீரர்களின் கொற்றத்தையும், திலகமிட்டுக்கொள்ளும் சீமாட்டியின் செவ்வியையும், சீறியாழ் மீட்டும் நங்கையின் சிறு முறுவலையும் நோக்குங்கள்!

திலகவதியின் இடையில் உள்ள அணிகலையும் நோக்குங்கள். மேகலையும், இடைசெறியும், சதங்கை மணிக் கோவையும் எவ்வளவு கலைநயத்துடன் அழகாக நம் உள்ளத்தைக் கவர்கின்றன?



என்று அடம் பிடிக்கும்
டா ரிக்ஷாவில் கூண்டை

சால்கிற அளவுக்குப் பெரி
டும் செய்தால் போதும்.
டி, செருப்பு எல்லாம்
க்கொள்ளச் சொல்லலாம்.
சப்ஷன் ஆனதும்
இருந்து அந்தக் காதுவரை
க்கப்பட்டு விட்டுவிடுவார்.
போட்டோகிராபரை
சொல்லுங்கள்.
கூட்டியே சொல்லிவிடவும்)
ால் போதும்.
ார்ந்த பிறகு, அடுத்தடுத்து
ன்பதில்லை.
ளி விட்டு, மோர் தான்!
இதோ வருகிறது...'
தாலே போதும்.
லைட் மியூசிக் என்று எதுவும்
சேர்ந்த பெண்மணிகளையே
றைகளை ஒவ்வொன்றாக
ற்றுப் போகும்!
டிச்செலவை மிச்சம் பண்ண
ாயால் காற்றை ஊதி,
றுகக் கட்டிவிடவும்.
என்றே வேலைக்காரிகளைச்
ம்பிள் சோப்பு போதும்)

தைப் பார்த்து, பெண்ணைப்
யோசனைகள் வழங்கியவர்:
கேசி. படங்கள்: நடனம்









யோசனைகள்!

நீயா?



சந்திரநாத்

15

ஜில்லென்று குளிர் பானத்துக்கு ஆர்டர் கொடுத்துவிட்டு, மகேஷுக்காக அவன் அறையில் காத்திருந்தார் இன்ஸ்பெக்டர் கோபாலன்.

கங்குலி வியர்வையைத் துடைத்துக் கொண்டு, கைக் கடிகாரத்தைத் திரும்பத் திரும்பப் பார்த்தார்.

மேஜை மீது ஒரு சிறு துண்டுக் கடிதம், ''வெயிட் ஃபார் மீ – எட்டு மணிக்கு வந்து விடுகிறேன்'' என்று திரும்பத் திரும்பச் சொல்லிற்று.

''எட்டாகப் போவுதே'' என்றார் கங்குலி.

''இன்னும் இரண்டு நிமிஷம் இருக்கு'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''என்னை எதுக்கு வரச் சொன்னீங்க? நான் எட்டு மணிக்கு பார் தொறக்கப் போகணும் சார்.''

''அந்தக் கஷ்டமெல்லாம் இனிமே உங்களுக்கு இருக்காது, வேறே யாராவது வந்து தெனமும் தொறப்பாங்க.''

''ஸார்....'' – எழுந்தார் பதறிக் கொண்டு.

''அட, சும்மா உட்காருய்யா... நீதான்யா ராமுவை ஏவி, கமல், நிம்மி இரண்டு பேரையும் குளோஸ் பண்ணச் சொல்லியிருக்கே.''

''சாமி, சாமி... இது அநியாயம்.''

''முன்னலேயே பிடிச்சுப் போட்டிருப்பேன்யா... மகேஷ் வரப்போ, ''பாருய்யா உனக்கு முன்னடி 'கல்பிரிட்'டை நான் பிடிச்சுட்டேன்னு சொல்ல நினைச்சேன்ய்யா–''

கங்குலி முகம் வெளுத்தது.

''போலீஸ்னு கையாலாகாத பயலுகன்னு நினைச்சுருக்கான்யாஅவன்... உன்னைத் தேடிக்கிட்டுத்தான் போயிருக்கான்... நான் அவனுக்கு முன்னல் உன்னை என்கிட்டே தருவிச்சுட்டேன்...''

இன்ஸ்பெக்டர் எழுந்து மீசையை முறுக்கி விட்டுக் கொண்டார்.

களைத்துச் சோர்ந்து உள்ளே நுழைந்து, ''ஹலோ'' சொல்லி, நாற்காலியில் விழுந்தான் மகேஷ்.

''வாய்யா டிடெக்டிவ்'' என்று உற்சாகமாக வரவேற்றார் இன்ஸ்பெக்டர். ''நீ விட்ட கொலைகாரனை நான் புடிச்சுட்டேன்– இதோ பாரு'' – கங்குலியைக் காட்டி 'வி' என்று விரலைத் தூக்கிப் புன்னகைத்தார்.

''என்ன மிஸ்டர் கங்குலி! ஜெயிலுக்குப் போறீங்களா?'' என்று மகேஷ் கேட்டுக் கொண்டே, ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்றவைத்துக் கொண்டான்.

''சாமி, சாமி... நான் ஒரு பாவமும் அறியேன்'' என்று பதறினர் கங்குலி.

''ஆல்ரைட் மகேஷ். எனக்கு டைம் இல்லே. உன்கிட்ட ஒரு வார்த்தை சொல்லிட்டுக் குற்றவாளியைப் பிடிச்சுட்டுப் போகத்தான் காத்திருந்தேன். நான் வரட்டுமா? 307, இந்த ஆளை அரெஸ்ட் செய்.''

''நில்லுங்க கோபாலன்' 'என்றான் மகேஷ். ''ஒரு சின்ன – பட் சுவாரஸ்யமான கதை சொல்றேன், கேட்டுட்டுப் போங்க.''

''அட போய்யா – கதை யெல்லாம் கேட்க எனக்கு நேரமில்லே.''

''கோர்ட்லே கேட்பாங்களே – கங்குலியோட வக்கீல் அம்பு அம்பா விடுவாரே– 'ஏன் ஸார், கமல்நாத் சாகும்போது 'படுக்கையில மல்லாக்கா இல்லே கிடந்திருக்காரு–விரோதமான ஒரு ஆளு உள்ளே வந்திருந்தா பெரிய சண்டையா ஆகி, ஆள் குத்தப்பட்டுத் தரையிலே கிடந்திருக்கணும். குத்திட்டுத் தூக்கிப் போட்டான்ன கூட தரையிலேயும் அப்ப ரத்தம் இருக்கணுமே!ன்னெல்லாம் கேட்பாரே! தவிர, அத்தனை மோட்டா கமலை இந்தச் சோனி கங்குலி தூக்கிப் படுக்கையில போட்டிருக்கவே முடியாது, மிஸ்டர் இன்ஸ்பெக்டர்!''

''என்னப்பா சட்புட்டுன்னு கேஸை முடிச்சுடலாம்னு பார்த்தா....''

''கேஸ் எப்பவோ முடிஞ்சு போச்சு இன்ஸ்பெக்டர் – கமல்நாத்தைக் கொன்ன குற்றவாளியை நான் எப்பவோ பிடிச்சு போலீஸ்ல குடுத்திட்டேன். – இனிமே எல்லாத்தையும் கோர்வைப்படுத்திப் பார்க்க வேண்டியதுதான் பாக்கி.''

''கமலைக் கொன்னவனைப் போலீஸ்லே புடிச்சுக் குடுத்திட்டியா? என்னய்யா சொல்றே – யார் அது? எங்கே, எந்த ஸ்டேஷன்லே இருக்கான், அவன், இப்போ?''

''எர்ஸ்கின் ஆஸ்பத்திரிலே, சவக் கிடங்கிலே,''

''மகேஷ் — யூ மீன், ராமு?''

''நோ மிஸ்டர் இன்ஸ்பெக்டர். கமலேக் கொன்றது நெய்தர் ராமு — நார் கங்குலி— பட் புவர் கேர்ள் நிம்மி.''

''மகேஷ்!'' — துள்ளிக் குதித்தார் கோபாலன்.

''எஸ், இன்ஸ்பெக்டர். கமலேக் கொன்றது அவருக்குத் தீயும் வைச்சது நிம்மிதான். இந்த விஷயம் முழுவதற்கும் ஆரம்பத்திலிருந்து கடைசி வரை அவள்தான் காரணம். கமலுக்கு அவள் வெறும் காரியதரிசி மட்டுமில்லே — 'கீப்' ஆல்ஸோ — அவங்களுக்குள்ளே வேறே தொடர்பு நிச்சயமா இருந்திருக்கு. அவள்தான் எங்களை மெட்ராஸ்லேருந்து நாங்க வந்த அதே வண்டியிலே தொடர்ந்து வந்திருக்கிருள். அவளையின்றி வேறே யார் அந்த நடு நிசியிலே வந்திருந்தாலும் கமல்நாத் என்னைக் கூப்பிடாமல் கதவைத் திறக்கவே மாட்டார். — ரெண்டு அறைக்கும் போன் இருக்கு. ஜன்னல் வழியாப் பார்த்து நிம்மின்னு தெரிஞ்சதும் உள்ளே கூப்பிட்டுக்கிட்டுக் கதவைச் சாத்திக் கொண்டிருக்கிருர். வந்தது நிம்மிதான்ங்கறதுக்கு எவிடென்ஸ் இருக்கு.''

சிகரெட் சாம்பலே ட்ரேயில் தட்டிவிட்டு, ஒரு பஃப் இழுத்துக் கொண்டு, மேலே சொன்னுன் மகேஷ்.

''கமல் படுக்கையிலே மல்லாந்து செத்துக் கிடந்திருந்தார். அப்படிக் கிடக்க வேண்டுமானுல், அப்படிப்பட்ட நிலேயில் யாராவது அவரை வைத்துக் கொண்டிருந்து குடிக்க வைத்து, அப்போது எதிர்பாராத விதமாகக் கத்தியை அவர் மார்பில் செலுத்தியிருக்க வேண்டும். படுக்கையில் ஒரு மனுஷன் தன் காதலியுடன் தவிர வேறு யாருடன் அந்த நிலேயில் இருந்திருக்க முடியும்?... இரண்டாவது, ராமுவோ, கங்குலியோ வந்திருந்தால் உள்ளே ஒரு சண்டையே நடந்து, சாமான்கள்எல்லாம் இறைந்திருக்கும். இந்தக் கேஸில் எல்லாம் வைத்தது வைத்தது போல் இருக்கின்றன. தவிர, படுக்கையில் சுகமாகச் சாய்ந்த நிலேயில் கமல் கத்திக்கு மார்பைக் காட்டியிருக்கவும் மாட்டார். குறைந்த பட்சம் சத்தமாவது போட்டிருப்பார். ஆகவே அவருக்கு ஏற்கனவே ரொம்ப அந்தரங்கமாகப் பழகி, இன்பமூட்டிய ஒரு பெண்தான் இப்போதும் வந்து(வந்ததற்கு ஏதோபொய்க் காரணம் சொல்லி ஏற்க வைத்து) படுக்கைக்கு இட்டுச் சென்று இன்பமூட்டுகிருற் போல் நடித்து, அவர் அந்த மயக்கத்தில் இருந்த போது குளோஸ் செய்திருக்கிருள் — அது நிம்மியைத் தவிர வேறு யாருமில்லே.''

''அவள் ஏன் அவரைக் கொல்ல வேண்டும்?''

''நியாயமான கேள்வி. எல்லாம் பணத்துக்காகத்தான். கமல் இடுப்பில் கட்டியிருந்த லட்ச ரூபாய் நோட்டுக்களை அபகரிக்கத்தான்.''

''பணத்துக்காகக் கொலே செய்திருந்தால் அதை எடுத்துச் சென்றிருப்பது அல்லவா நியாயம்? — பணத்தை விட்டுச் சென்றிருக்கிருளே — அத்தனையும் கற்றை கற்றையாக எரிந்து சாம்பலாகியிருக்கிறதே!''

''எரிந்தவை கற்றைகள்தான். ஆனுல் அவை எல்லாம் ஆயிரம் ரூபாய் நோட்டுக்களாகத்தான் இருக்க வேண்டும் என்பது என்ன கட்டாயம்? சில நோட்டுக்களே மேலே வைத்துவிட்டுச்சில வெற்றுக் காகிதக் கட்டுக்களே வைத்துவிட்டு, உண்மைப் பணத்தை எடுத்துக் கொண்டு போயிருக்கக் கூடாதா?''

''ஐ ஸீ'' என்றுர் இன்ஸ்பெக்டர்.

''அதுதான் நடந்தது இன்ஸ்பெக்டர். வந்தது நிம்மிதான்; தந்திரமாக சரசமாடிக் கொன்றுள். பிறகு பெல்டில் சில நூறு ரூபாய்



களை மட்டும் வைத்துவிட்டு மிச்சத்தை எடுத்துக் கொண்டு, 'பாடி'க்குத் தீயிட்டு விட்டாள். பணம் முழுவதும் எரிந்துவிட்டது என்றால்தான் பணத்தை போலீஸ் தேடாது என்பது அவள் திட்டம்.''

''கங்குலியை ஏமாற்றுவதற்காக வேறு ஒருவனை வரச் சொல்லி அவனைக் கொன்று தீயிட்டு விட்டுக் கமலே தலைமறைவாகியிருந்தால்—''

''அப்படி ஒரு சந்தேகம் எனக்கும் வந்தது. ஆனால் அப்படி இராது என்பதற்குச் சாட்சியம் கிடைத்தது. நாங்கள் மதுரை வந்ததும் ''டபிள் ரூம் இருக்கா'' என்றுதான் கமல் கேட்டார். அன்றிரவு ஏதாவது நாடக மாடுவது அவர் நோக்கமாக இருந்தால், அப்படிக் கேட்டிருக்க மாட்டார்.''

''கூல்''ஸ் வந்தது. தலைக்கு ஒன்று எடுத்துக் கொண்டார்கள்.

''இதில் ராமுவின் பங்கு என்ன? அவன் ஏன் உன்னைக் கொல்ல முயன்றான்; நிம்மியை ஏன் கொன்றான்?''

''ராமு நிம்மியின் பழைய காதலன். இரண்டுபேருக்குமே மெட்ராஸ்தான். கொஞ்ச நாள் மதுரையில் இருந்தான். அப்போது கங்குலிக்கு அறிமுகமானான். நம்பிக்கையாக நடந்து கொண்டான். கங்குலி, எல்லாரிடமும் 'ஒரு பயல்' தன்னை ஏமாற்றிவிட்டதைச் சொல்லிக் கொண்டிருந்தது போலவே இவனிடமும் சொன்னார். கமலின் படத்தைக் காட்டியிருக்கலாம்.''

''ஆமாம், காட்டினேன்'' என்றார் கங்குலி.

''பிறகு ராமு பட்டணம் போனான். பழைய காதலி நிம்மியைத் தேடிப் போனபோது, எதிர்பாராத விதமாக அவள் தான் தேடும் கமலிடமே பி.ஏ.வாக இருப்பதாக அறிந்தான். இந்த நிம்மி ஒரு மட்டமான பெண். பணத்துக்காக எதையும் செய்யக் கூடியவள். ராமு ஒரு திட்டம் போட்டான். நிம்மி கமலை மயக்கித் தன் வசப்படுத்த வேண்டியது. கங்குலிக்குத் தகவல் கொடுத்துப் பெருந்தொகையுடன் கமலை மதுரைக்குத் தருவிப்பது. நிம்மியும் கூடவே வந்து, இப்போது செய்தது போல் கமலைத் தீர்த்துக்கட்டிவிட்டுப் பணத்துடன் வந்துவிடுவது— நிம்மி இதற்கு ஒப்புக்கொண்டாள். ராமு திரும்பி மதுரைக்கு வந்தான். ஒரு வாரம் கழித்து மெதுவாகக் கங்குலியிடம் கமலின் இருப்பிடத்தைச் சொன்னான் — சொன்னானா மிஸ்டர்?''

''சொன்னான்'' என்றார் கங்குலி.

''கங்குலி டெலிபோனில் கமலைப் பிடித்து மிரட்டினார். சரியாகப்பதில் சொல்லவில்லை!''

''ஆமாம்.''

''ஆகவே ராமுவை மீண்டும் மதராசுக்கு அனுப்பினார். இந்தத் தடவை பணத்துடன் வருவதாகக் கமல் ஒப்புக் கொண்டார். ராமு உடனே மதுரை திரும்பவில்லை. கமல் யாரையாவது பாதுகாப்பாக அழைத்து வந்துவிட்டால் காரியம் கெட்டுவிடுமே என்ற பயம் அவனுக்கு இருந்தது. புறப்படும் நாள் வரையில் கமலின் நடமாட்டங்களை நெருக்கமாக இருவரும் கண்காணித்தார்கள். கமல்நாத் என்னை அமர்த்திக் கொள்ளப் போவது தெரிந்ததும் என்னைக் கிளம்ப முடியாமல் செய்வதில் இறங்கி, என் மனைவியை பயமுறுத்தி, என் ஆபீஸ் காரியதரிசி நீலாவை ஒளித்து வைத்து, பிற்பகல் வரை போக்குக் காட்டினார்கள். அப்போதும் கமலுடன் நான் கிளம்புவது இழுபறியாக இருக்கவே, முன்னதாகவே ராமு கிளம்ப வேண்டி யிருந்ததால் — கமல் மட்டும் கிளம்பினால் 'அக்பருக்கு ஜே' என்றும் கூட ஒருவரும் கிளம்பினால் 'அக்பருக்கு ஜே ஜே என்றும் தந்தி அடிக்கும்படி ஏற்பாடு' செய்துவிட்டு வந்து விட்டான். அதன்படியே நிம்மி நாங்கள் கிளம்பினதும் தந்தி அடித்தாள். இருவர் வருவதைத்தெரிந்துகொண்ட ராமு ஹோட்டல்நிர்மலாவில்ஆபீஸ் கிளார்க்கிடம் ஸிங்கிள் அறைதான் இருக்கிறது என்று சொல்லச் செய்து, எங்களைப் பிரித்து வைத்தான். அந்தக் கிளார்க்கைப் பிடித்து மிரட்டி உண்மையைத் தெரிந்து கொள்ளத்தான் சற்று முன் போனேன். நடேஷ் தந்தி விஷயத்தைப் 'பின்தொடர்ந்து' நிம்மி சொல்படி நிம்மியின் அம்மா கமலா கொடுத்தது என்பதைக் கண்டு பிடித்தார்.''

''எல்லாம்தான் ராமு — நிம்மி திட்டப்படி நடந்ததே, பின் ஏன் ராமு அவளைக் கொல்ல வேண்டும்?''

''அங்கேதான் விதி திசை திருப்பிவிட்டது. நிம்மி மறுநாள் சென்னை போய்விடுவதாகத்தான் இருந்தாள். கொலை செய்து பணத்தை அபகரித்த பின் நிம்மிக்கு ஒரு சந்தேகம் வந்துவிட்டது. 'கமல் தன்னைப் பற்றி ஏதாவது என்னிடம் பேசியிருப்பாரோ?' என்று. கங்குலி மீது சந்தேகத்தைத் திருப்பி விட நினைத்து, என்னைப் பார்க்க வந்தாள். இது ராமுவுக்குத் தெரியாது. நிம்மி ராமுவிடம் பணத்தைக் கொடுக்கவுமில்லை. அவள் என்னைப் பார்க்க வந்ததைக் கவனித்துக் கொண்டிருந்த ராமுவுக்கு அவள் மீதே சந்தேகம்

''குதிரை — ஏற்றம் பழக ஒரு சுலபமான வழி என்ன? சொல்; பார்க்கலாம்?''

''முதலில் யானை - ஏற்றம் பழகிவிட்டுப் பிறகு குதிரை-ஏற்றம் பழகுவது...!''

-பெ. கலாசாமி



வந்துவிட்டது. தன்னைக் காட்டிக் கொடுக்கத்தான் பார்க்கிருளோ என்று — அதனுல் தான் அவள் என்னுடன் பேசிக் கொண்டிருக்கும்போது, அவளைச் சுட்டான். ஆனுல் குறி தப்பிவிட்டது. இரண்டாவது தடவை ஆஸ்பத்திரியிலிருந்து தப்பி வந்து பழி தீர்த்துக் கொண்டான்.''

''பிரமாதம் பிள்ளாய்—'' இன்ஸ்பெக்டர் எழுந்து வந்து மகேஷைத் தழுவிக் கொண்டார். கை குலுக்கினுர்.

''உன் கம்பெனி எம்ளம் என்ன? கான்ஸரா, நண்டா? துருவிவிட்டாய்; துருவி— ஒண்டர்ஃபுல்! வி ஃபார் கான்ஸர்!'' என்ருர்.

''ஒன் மினிட் இன்ஸ்பெக்டர்! இன்னும் ஒரு விஷயம் பாக்கி இருக்கிறது. நிம்மி பறித்துக்கொண்ட பணம். அதைக் கண்டு பிடிக்க வேண்டாமா?'' என்ருன் மகேஷ்.

''ஓ—ஆமாம். எங்கே இருக்கிறது அது?''

மகேஷ், ஒரு நாலாக மடித்த காகிதத்தை எடுத்துக் கொடுத்தான்: ''இந்தாருங்கள் இன்ஸ்பெக்டர், இது மதுரை ஸ்டேஷன் 'குளோக் ரூம் ரசீது. அங்கே நிம்மியின் பெட்டி இருக்கிறது. அதில்தான் முழுப் பணமும் இருக்கும் — போய் எடுத்துக்கொள்ளுங்கள்.''

''என்னைக் காப்பாத்திட்டீங்க ஸார்'' — கங்குலி ஓடிவந்து கையைப் பிடித்துக்கொண்டு கண்ணீர் பெருக்கினுர்.

''நீங்க இந்தப் பணத்தைக் கிளேம் பண்ண முடியாது மிஸ்டர் கங்குலி'' என்ருன் மகேஷ்.

''அந்தச் சனியன் எனக்கு வேண்டவே வேண்டாம். தூக்கு மேடைக்குப் போகாமே தப்பிச்சேனே, அதுவே போதும்'' என்ருர் அவர்.

''ஆல் ரைட், பிரெண்ட்ஸ்'' எழுந்தான் மகேஷ். ''நான் அடுத்த பிளேனில் மெட்ராஸ் போக வேண்டும். நண்டு வளைக்குத் திரும்புகிறது. எனக்கு ஹோம் சிக்னஸ் வந்துவிட்டது! (என் நீலாக் கண்ணைப் பார்க்க வேண்டும்) — ஷல் ஐ டேக் லீவ் — (என்ன அக்கிரமம்! மஞ்சுவைப் பார்க்க வேண்டும் என்று தோன்றவில்லை — நீலாவைப் பார்க்க வேண்டுமாம்!)


மகேஷ் திருப்தியுடன் ஹோட்டலை விட்டு வெளியே வந்தான். (முற்றும்)

அடுத்த பட்ஜெட்டும் ஆர்.வியும்

கேள்வி: திரு ஆர். வெங்கட்ராமன் நிதியமைச்சராகப் பதவி ஏற்று ஒன்றரை ஆண்டுகள்தான் ஆகின்றன. இதற்குள் அவர் அடுத்த பட்ஜெட்டைத் தாம் சமர்ப்பிப்போம் என்ற நம்பிக்கையே இல்லாத மாதிரி பேசுகிருர். நிதி அமைச்சர்கள் அடிக்கடி மாற்றப்பட்டால்அவர்கள்நாட்டின் நிலைமைகளைப் புரிந்து கொண்டு பொருளாதாரத் திட்டங்களை நிறைவேற்ற முடியுமா?

பொருளாதார நிபுணர் டாக்டர் சி.வி. குரியன் பதிலளிக்கிருர்:


''நாட்டின் பொருளாதார நிலைமையைப் புரிந்துகொள்ள ஒரு நிதியமைச்சருக்கு இத்தனை காலம் அவகாசம் கண்டிப்பாக வேண்டும் என்று இல்லை. பதவிக்கு வருகின்ற மனிதர்களின் புத்திசாலித்தனத்தைப் பொறுத்தது அது. ஆர். வி.யைப் பொறுத்தவரை முதலில் அவருக்கு நிதியமைச்சர் பதவியுடன் தொழில் மந்திரி பதவியும் கூடுதலாகக் கொடுக்கப்பட்டது. அதனுல் முதல் சில மாதங்களுக்கு அவரால் சரியானபடி பொருளாதார விஷயங்களில் அக்கறை காட்ட முடியாமல் போனது. அதற்கப்புறம் அவர் அறிவித்த 'பேரர் பாண்ட்' திட்டம் பணக்காரர்களின் நன்மைக்காகவே கொண்டுவந்த திட்டம். கறுப்புப் பணத்தை ஒழிக்க இது வல்ல வழி. ''பணக்காரர்களே தயவுசெய்து உங்கள் கறுப்புப் பணத்தை அரசிடம் முதலீடு செய்யுங்கள்'' என்று அரசு கெஞ்சுவது அவமானப்பட வேண்டிய விஷயம். அதற்கப்புறம் அவர் அறிவித்த திட்டங்கள் இரண்டும் எந்த வகையிலும் பண வீக்கத்தைக் கட்டுப்படுத்தவோ, அவசியப் பொருள்களின் விலைகளைக் குறைக்கவோ இல்லை. சுதந்திரம் பெற்றதிலிருந்து இதுவரை அறிவிக்கப்பட்ட பொருளாதாரத் திட்டங்கள் அவ்வளவுமே பணக்காரர்களை மேலும் பணக்காரர்கள் ஆக்கிவிட்டனவே தவிர, சாமான்ய மக்களுக்கு ஒன்றும் உதவவில்லை.



ஆர். வெங்கட்ராமன்

ஒரு புதிய பொருளாதாரத் திட்டம் அமல்படுத்தப்படுகிறதென்ருல் அதற்கு நிதியமைச்சர் மட்டும் காரணமல்ல. முழு மந்திரி சபையும் ஆலோசித்து, கட்சிக் கொள்கைக்கு ஏற்பத்தான் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, அறிவிக்கப்படுகின்றன. திட்டம் தோல்வியுற்ருல் ஒரு தனி நபரை மட்டுமே காரணமாக்க முடியாது. எனவே பொதுவாக நோக்கும்போது அடிக்கடி நிதியமைச்சர்களை மாற்றுவது சரியல்ல என்றே நான் கருதுகிறேன்.

டாக்டர் சி.வி. குரியன்



பேட்டி: ப்ரியன்


கன்னத்தில் என்னம்மா சிவப்பு
அது, சின்னக் கொசு கடிச்ச தடிப்பு
கொசுக்களைத் 'தலை தெறிக்க' ஓட்டிடும் டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்.
ஐயா...சாமி...தயவு செஞ்சு ஒண்ணே ஒண்ணு, டார்டாய்ஸ் கொசுவர்த்திச் சுருள். பட்டினியாக்கூட இருப்பேன், ஆனால் கொசுக்-கடியை மட்டும் தாங்க முடியலே...
நல்லதைச் செய்வீர்............வாங்குவீர் டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்
விபத்து இன்ஷூரன்ஸா? முதல்ல, கொசுக்கடிக்கு ஏதாவது இன்ஷூரன்ஸ் இருக்கா?
இன்ஷூரன்ஸ்
கொசுத் தடை இன்ஷுரன்ஸ் டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்
கொளுத்துவீர் டார்டாய்ஸ்-விரட்டுவீர் கொசுக்களை!
டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருளினால்.
Tortoise
தயாரிப்பாளர்:
பாம்பே கெமிகல்ஸ் ப்ரைவேட் லிமிடெட்
.:.போர்ட், பம்பாய்-400 023. .:.போன்: 273831
everest/81/BCL/172-tm


மங்கல மதிமுகத்தில் மெருகூட்ட
ஐடெக்ஸ்
டீலக்ஸ் குங்குமம்
matt finish
நாடெங்கணும் நாகரீக நங்கையர்
நாடி அணிவது ஐடெக்ஸ் குங்குமம்.
மங்கையரின் மலர்முகத்தின் இன்னழகை
எடுத்துக் காட்டுவதற்கெனவே
14 கண்கவர் வண்ணங்களில் கிடைக்கிறது.
சாஸ்திர முறைப்படி தயாரிக்கப்படும்
ஐடெக்ஸ் குங்குமம் சருமத்திற்கு எவ்வித
தீங்கும் விளைவிக்காதது.
DELUXE KUMKUM
EYETEX
EYETEX
ஐடெக்ஸ்
38 ஆண்டுகளாக
உங்கள் நம்பிக்கையின்
மகத்தான சின்னம்
அரவிந்த் லாபரட்டரீஸ் சென்னை 600 033
Imageads-AL-1304 Tam

‘போர்த்திப் படு!’

லிப்டில் இறங்கும்போது ரத்தத்தில் அமிர்தம் இருந்தது. மனசு எல்லா இளம் பெண்களையும் வா வா என்றது. லட்ச ரூபாய்க்குக் கரன்ஸி நோட்டுக்களாக எடுத்து வாரி இறைக்கலாம் போலிருந்தது. நாரிமன் பாய்ண்ட் ஏரியா அவசரமாய் இரவுக்குத் தாவிக் கொண்டிருந்தது.

இருபது நாள் பயிற்சி முடிந்தது.

திரும்பிச் சென்னை வந்து அண்ணா சாலையில் ஏழடுக்குக் கட்டிடத்தின் நாலாவது தளத்தில் இந்தியாவின் மூன்றாவது பெரிய கம்பெனியின் பர்சேஸ் எக்ஸிகியூடிவ் என்ற பெயரில் இயங்கும் நேரம் நெருங்கிக்கொண்டிருந்தது.

அரவிந்த் மற்ற நண்பர்களிடம் விடைபெற்றுக்



பிரதிபா ராஜகோபாலன்

கொண்டான். தமிழ் பேசும் ரங்கராஜனுடன் வெளியே வந்தான்.

''ரங்கராஜ், நீ ஹைதராபாத் போகிறாய். நான் மெட்ராஸ். இருபது நாள் பயிற்சி நிறைய விஷயங்களைக் கற்றுத் தந்தது. விரைவில் சந்திப்போம். அதற்கு முன் இந்த இரவைச் சிறப்பாகக் கொண்டாடலாம்.''

''தாஜ் போகலாமா?''

''வேண்டாம்.''

''காபரே டான்ஸ் போகலாமா?''

''எங்கே?''

''ஹோட்டல் அல்ல. ஒரு பங்களாவில். மிகப் பெரிய மனிதர்களுக்காக ஸ்பெஷல் காபரே. டிக்கட் வேண்டியதில்லை. பர்மிஷன் வாங்கிவிடுகிறேன். எனக்குத் தெரிந்தவர் நடத்துகிறார்.''

''நான் இதுவரை காபரே பார்த்ததில்லை''





திகைப்பு பாவம் (அற்புதம்)

சொல் குளறும், மெய் சிலிர்க்கும், கண்களில் வியப்பு குடி கொள்ளும், விழிப்பதும் இமைப்பதுமாய் இருக்கும். — சிலப்பதிகாரம் : அடியார்க்கு நல்லார் உரை

''இன்று ஆடுகிறவள் மிக்க அழகான பெண். இரண்டு நாள்தான் இங்கு ஆடுவாள். அப்புறம் டெல்லி, கல்கத்தா, சிம்லா என்று நகரங்களை மாற்றிக் கொண்டிருப்பாள்.''

''பார்த்துவிடலாம்.''

டாக்ஸி பிடித்து மாதுங்கா அறைக்குப் போய்க் குளித்து உடை மாற்றி மார்னிங் குளோரி தெளித்து, பக்கத்து கன்ஸர்னில் சாப்பிட்டுவிட்டு, டாக்ஸி பிடித்து மலபார் ஹில் போனார்கள்.

''அரவிந்த், உனக்குப் பெண்களைப் பிடிக்குமா?''

''எந்த மாதிரிப் பெண்களை?''

''நாம் பார்க்கப் போகும் பெண்கள் மாதிரி.''

''பிடிக்காது.''

''ஏன்?''

''என் மனசில் இருக்கும் பெண்கள் சுத்தமானவர்கள்.''

''இவர்கள் அசுத்தமானவர்களா?''

''காபரே டான்ஸ் ஆடுகிறவள் சுத்தம் என்று நம்புகிறாயா?''

''அசுத்தம் எங்கேயும் இருக்கிறது.''

''ஆகவே?''

''எதையும் தெரியாமல் சொல்ல முடியாது.''

''சோதனையில் ஆயுள் பூராவும் கழிந்து விடும். கல்யாணத்துக்கு



இன்ன மாதிரி, காதலிக்க இன்ன மாதிரி, காபரே டான்ஸ் பார்க்க இன்ன மாதிரி என்று பெண்கள் இருக்கிறார்கள்.''

''காதலிக்கிறுயா நீ?''

''இப்போதைக்கு இல்லே. படிக்கிற காலத்தில்.அவள் எதிர்வீட்டில் இருந்தாள்.''

ரங்கராஜன் சிரித்தான். டாக்ஸி பம்பாயின் ஏழரை மணி இரவைக் கிழித்துக் கொண்டு பறந்தது.

''படிக்கிற காலத்தில் வேலேக்காரி கூட லேலா மாதிரி தெரிவாள். வயசு அப்படி.''

''நான் அப்படி இல்லே. மனதாரக் காதலித்தேன். கற்பனை செய்தேன்.''

''இப்போதும் காதலிப்பாயா அவளை?''

''இப்போது கிடைத்தாலும் அவளைப் பண்ணிக் கொள்வேன்'' என்றுன் அரவிந்த்.

''ரொம்பப்பேர் அப்படித்தான் சொல்வார்கள்.''

''நான் அந்த குரூப் இல்லே.''

அரவிந்த் பழைய நினைவுகளில் ஆழ்ந்தான்.

தேவராயபுரம் நகரத்தின் கோபத்துக் குப்பயந்து ரொம்பத் தள்ளி இருந்தது.கேரள எல்லேயில் நெம்மாரா வனங்களின் அணேப்பில் ஓரத்தில் ஒதுங்கி இருந்தது. நாகரிகத்தின் சின்னமாய் மின்சாரம் கூட வராத காலத்தில் அர்விந்த் எட்டு மைல் சைக்கிளில் போய்ப் படித்து வந்தான். அநேகமாய் அவன்தான் நகரத்துக்கும் கிராமத்துக்கும் நாகரிகத்தின் தூதுவனுய், செய்திகளின் தூதுவனுய் இருந்தான்.

எதிர் வீட்டில் குருநாதன் இருந்தார். அவர் முன்னேர்கள் தலேசிறந்த சிற்பிகளாய் இருந்தார்களாம். தேவராயபுரத்தில் இப்போதும் பழங்காலக் கோயில் இருக்கிறது. அதைக் கட்டி முடித்த அவருடைய முன்னேர் இந்த ஊரில் தங்கிவிட்டார்கள். ஆனல் குருநாதன் தம் சிற்பத் தொழிலே மறந்து ஆட்டுக் கல்லும் அம்மிக் கல்லும் செய்து கொண்டிருந்தார்.

அவருக்கு மூன்று பெண்கள். நான்கு பையன்கள். கமலாதான் மூத்த பெண். அரவிந்த் தன்னைவிட நான்கு வயது சின்னவளான கமலாவைத்தான் எல்லாப் பெண்களுக்கும் முன்னேடியாய், பிரதிநிதியாய் நெஞ்சில் வைத்திருந்தான்.

அரவிந்தின் அப்பா அந்த வட்டாரத்தில் கம்பவுண்டராக இருந்தார்.

கிட்டு: ''பயங்கரமான காய்கறி! எது தெரியுமா?''

பட்டு: ''தெரியலேயே''

கிட்டு: ''கத்திரிக்காய்தான்?''

பட்டு: ''எப்படிடா?''

கிட்டு: ''கத்தி, கத்ரி இரண்டும் இருக்கே அதில்!'' -உ. ராஜாஜி



குருநாதன் சாயந்திர வேளைகளில் இவன் வீட்டுத் திண்ணேயில் வந்து உட்கார்ந்து, பழைய கதைகள் பேசுவார். மனைவியை முப்பத்து மூன்றுவது வயதில் இழந்தவர். குழந்தைகளின் நன்மையைக் கருதிக் கல்யாணம் பண்ணிக் கொள்ளாதவர்.

''இனி நமக்கேதுங்க கண்ணுலம்... நாலு வருஷம் போனுக் கமலா கண்ணுலத்துக்கு வந்து நிப்பா...'' என்பார்.

கமலா இப்போதே குடும்பத்தின் தாய்மைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டாள்.

''டீ சாந்தா... கொளம்பைக் கொஞ்சமா ஊத்தி முளுங்கடி... மத்தவங்களுக்கு வேண்டாமா... இவம் பாரு... டவுசரக் கிளிச்சிட்டு வந்திருக்கான்... கிளியாம இருக்கிறது இது ஒண்ணுதான்.... போன தீவாளிக்கு வாங்கின கடனே தீராமத் தள்ளிட்டுப் போகுது. ஊட்டுக்கு ரெவ்வெண்டு கல்லு வச்சிருக்கிற காலம்... நம்மகிட்ட ஏவ அம்மியும் ஆட்டாங்கல்லும் வாங்கிட்டுப் போரு.. ரெண்டு பேரும் தின்னுபோட்டுக் காட்டுக்குப் போயி ரெண்டு சொமை வெறகு பொறுக்கிட்டு வந்துரோணும்....'' என்பாள்.

''போக்கா... காக்கிச் சட்டை போட்ட இன்சுபெக்டரு பாத்தாப் புடுச்சுக்குவாரு.''

''அவன் கெடக்கருன். அடுப்ப கை கால வெச்சா எரிக்கிறது. அவன் பொண்டாட்டி கரண்ட் வச்சா எரிப்பா?''

''ஏக்கா நம்ம ஊருக்கு கரண்டு எப்ப வருமாம்?''

''சுடுகாட்டுக்குப் போறப்ப வரும். நீ கட்டி வச்சிருக்கியா பங்களா... லேட்டுப் போடறதுக்கு?''

''பக்கத்து ஊர்ல ஒரு வெள்ளேக்காரன் வந்திருக்கான். கூட அவன் பொண்டாட்டியும் வந்திருக்காளாம். காட்டைச் சுத்திப் போட்டோ எடுக்க வந்திருக்கான்னு கம்பவுண்டர் ஊட்டு மாமா சொல்லுச்சு...''

அரவிந்த், கமலா வீட்டில் நடக்கும் நிகழ்ச்சிகளேயும் பேச்சுக்களேயும் நேரம் கிடைக்கும்போதெல்லாம் கவனிப்பான்.

''டீ சாந்தி, பொன்மணி போத்திப் படுங்கடி.... படுத்திருக்கிற லச்சணத்தைப் பாரு. பசங்க இருக்கிற ஊட்ல... கொஞ்சமாவது 'இது' இருக்கணும் இல்லே?...''

இந்தப் 'போர்த்திப் படு' வார்த்தைகள் ஒவ்வொரு ராத்திரியும் நாலேந்து முறையாவது கேட்காமல் இருக்காது.

''சின்னப் புள்ளேங்கதானே... எப்படியோ படுத்துட்டுப் போறுங்க உடு'' என்பார் அவள் அப்பா.

''எப்படியோ படுக்கறதுங்கறது என்னப்பா பழக்கம்... இதெல்லாம் பெரிசாகிப் போற எடத்துக்குப் போனலும் இந்தப் பழக்கம்தானே வரும்?'' கமலாவே சின்னப் பெண். ஆனல் அவள் அந்த வார்த்தைகளேப் பேசும்போது ஒரு தாயாகவும், முதிர்ச்சி உடையவளாகவும், கண்டிப்பு உடையவளாகவும் தோன்றுவாள்.

''என்ன கமலா... இண்ணேக்கு என்ன கொழம்பு?'' என்று அரவிந்த் சில சமயம் கேட்பதுண்டு. அவளுடன் பேச வேண்டும் என்ற தாகம் அவனுள்ளே ரொம்ப சமயங்களில் அரிக்கும்,

''எங்க கொழம்பைப் சாப்பிடதாப்ல இருந்தாச் சொல்லேன்.''

''சாப்பிடும்படியா இருந்தாச் சாப்பிடு வேன்.''

''நாங்க சாப்பிடறோமே அப்படின்னு நாங்க என்ன....?''

''சரி. சரி. கோபிச்சுக்காதே...''

''பின்னென்ன நாங்க சோறுக்காமயா ஆம்பளேங்க தின்னுக்கிட்டிருக்கீங்க...?''

''ஆமாமா... நீ ஆக்கினதைத்தான் நான் திங்கணும்னு ஆசை...''

''அப்ப இன்னைக்குத் தின்னுங்க...''

''என்னைக்கும்தான்.''

''அதெல்லாம் முடியாதுப்பா.''

''ஏம்பா'' அவன் சிரித்து விடுவான்.

மனசுக்குள் அந்த வயதின், நிலை புரியாத தன்மையின் ஒரு வெளிப்பாடாக இப்படி நிறைய வார்த்தைகளை வைத்துக் கொண்டு நிறையத் தவித்திருக்கிறான்.

படிக்கவில்லை என்பதைத் தவிர, தான் அவனையும், அவள் தன்னையும் மணம்புரிந்து கொள்ளத் தகுதிகள் கோடானு கோடி இருக் கின்றன என்று மனசைத் தயாராக்கிக் கொண்டிருக்கும்போது கமலா, பக்கத்து ஊரில்தங்கிய வெள்ளைக்காரத் தம்பதிகளுக்கு வேலைக்காரப் பெண்ணுகப் போய்விட்டாள்.

''மூணு வேளையும் சோறு போட்டு, துணி மணி எடுத்துக் குடுத்து மாசம் முப்பது ரூபா தர்றேன்னு சொன்னுங்க... இந்தப் பக்கம் நாலஞ்சு மாசம் இருப்பாங்களாம். அப்புறம் பம்பாய் போயிடுவாங்களாம்... எங்கியோ போய்ட்டு வரட்டும்...'' என்றார் கமலாவின் அப்பா.

அரவிந்துக்கு அந்த வார்த்தைகள் தன் எதிர்காலத்துக்கு நிறைய இருட்டைக் கொண்டு வரும் என்பது புரிந்தது. மன சுக்குள் வளர்த்திக் கொண்ட தோழமையும் அதற்கு மேம்பட்ட காதலும் சரேலென்று விலகியதும், தன் ஆற்றல், உணர்வுகள் என்று எல்லாமும் விலகுவது போல் உணர்ந்து பல நாள் பிரமை பிடித்தவன் போல் நடமாடிக் கொண்டிருந்தான்.

அந்த வருஷம் அவனுடைய அப்பா, நகரத்திலிருந்த ஒரு பிரபல டாக்டரிடம் கம்பவுண்டராகச் சேர்ந்து கொண்டார். அத ஞல் குடும்பம் நகரத்துக்கு நகர்ந்தது. காலத்தின் வேகத்தில் மனசுக்குள் தேவ ராயபுரம் மெல்ல மெல்ல மங்கிக்கொண்டது. ஆனுல் அதே சமயம், கனவிலிருந்து விலுக் கென்று விழித்துக் கொண்டு ரொம்ப நேரம் பிரமை பிடித்து உட்கார்ந்திருப்பது போல் கமலாவின் ஞாபகம் நெஞ்சுடன் அவனை ஆக்ரோஷத்துடன் தாக்கி ஆக்கிரமிக்கும். ஆனுல் அவை பொய்யாய் பழங் கதையாய் மெல்ல மெல்லப் போன பின் எதுவுமே சாத்தியமாய்த் தோன்றவில்லை.

மேல் படிப்புக்காகச் சென்னை வந்து எம். பி. ஏ. படித்து இந்தக் கம்பெனியின் அடித்தள ஆபீசராகித் திறமையாய் முன் னுக்கு வந்து இப்போது கம்பெனியின் பர்சேஸ் எக்ஸிக்யூட்டிவ் என்ற முக்கிய நிர் வாகியாய், மூவாயிரம் ரூபாய் சம்பளத் துக்கு முன்னேறிய பின் பழைய கமலா புதிய உத்வேகத்துடன் புதிய ஞாபகப்



''நமக்குக் கல்யாணமாகி இன் றோடு மூன்று வருடங்களாகிறது... நினைவிருக்கிறதா?''

''ஹூம்....நடந்து போனதை நினைத்து ஏன் கவலைப்படு கிறீர்கள்....!''

பின்னணிகளுடன் மனசில் கிளை கொள்ள ஆரம்பித்தாள்....

மலபார் ஹில். பளபளவென்று மின் னிய பித்தளைக் கேட்டுக்கு இருபுறம் இரு கூர்க்காக்கள் நின்ற அந்தப் பங்களாவின் உள்ளே நுழைய நுழைய காஞ்சீபுரம் பட்டின் மென்மையை உணர்ந்த சுகமே தெரிந்தது.

பெரிய பெரிய அறைகளைக் கடந்து சென்றனர். லஸ்தர் விளக்குகளும் சிவப்பு கம்பளங்களும், ஸ்டீரியோ வசதிகளும், புகை மண்டலமும் நிறைந்த குறிப்பிட்ட அறையில் நுழையும்போது கலர் வட்டங்கள் மாறி மாறிக் குழுமியிருந்த முகங்களுக்குப் புதிய நிறங்களைக் கொடுத்துக் கொண்டிருந்தன.

அரவிந்தும் ரங்கராஜனும் இடம் பிடித்து காபரே டான்ஸரின் உடம்பை ரசிக்கலாம் என்ற ஆர்வத்தில் மிதந்து கொண்டிருந்த போது கொஞ்சலான பெண்மை நிறைந்த ஆணின் ஆங்கிலக் கட்டியத்துக்குப் பின் நிறைய ஜரிகை வைத்துத் தைத்த உடையின் செக்ஸ் அப்பீல் கிழிசல்களுடன் டான்ஸர் நுழையும்போது எல்லோர் மூச்சும் பார்வை யும் திரண்டு அவளின் ஐந்தடி உடம்பில், முக்கியமாய் அவளுடைய புவிசுர்ப்பு மையத் தில் திரண்டது.

விலுக்கென்று வாத்தியக் கோஷ்டியில் தாடி மீசை வைத்த ஒருவன் தன் டிரம்மில் முழு வேகத்துடன் டர்ரென்று ஒரு இழுப்பு இழுத்த பின் எல்லோரும் உயிர் பெற்றனர்.

அரவிந்த் அவளை உற்றுப் பார்த்த பின், ''ரங்கராஜ், இவள் பேர் என்ன?'' என்றான் திடுக்கிட்டு, திகைத்து.

''கமலினி, மதறுஸி.''

''இவளுடைய சரித்திரத்தைப் பற்றி ஏதா வது தெரியுமா?''

''தெரியாது. சொந்த ஊர் கோயமுத் தூர் டிஸ்ட்ரிக்ட் என்று மட்டும் தெரியும்.''

அரவிந்த் மறுபடியும் உற்றுப் பார்த்தான். 'போர்த்திப் படு போர்த்திப் படு' 'என்று எல்லோரையும் ஒழுங்குபடுத்திய கமலா என்ற கமலினி பளபளக்கும் தன் அங்கியைக் கழற்றி எறிந்துவிட்டு வெளிச்ச வெள்ளத் தின் மத்தியில் துள்ளி ஆட ஆரம்பித்தாள்.

தேவராயபுரம் எங்கே? மலபார் ஹில் எங்கே?

உற்சாகமெல்லாம் பறக்கத் தன்னைப் பெரிய போர்வையாய்ப் போர்த்திக்கொள்ள வேண்டும் எனத் தவிக்க ஆரம்பித்தான் அரவிந்த்.





ளம்பர வீடு

— எஸ்.சோமசுந்தரம்





அவனுக்குத் தன்மேலேயே கோபம் வந்தது. ஏன் அப்படிக் கோழையாகிவிட்டான்? அந்தத் தடியன் தண்டபாணி கேண்டீனில் அத்தனை பேர் எதிரிலும் அவனை அவ்வளவு உதாசீனப்படுத்தியபோது சூடாக நாலு வார்த்தையாவது பேசியிருக்க வேண்டாமா? வாயே திறவாமல் வாலைக் குழைத்துக் கொண்டு வருவது போல் வந்துவிட்டானே! சே! என்ன கேவலம்!

இப்படித் தணிந்து தணிந்து போவதே அவன் வழக்கமாகி விட்டதே! அவனுடைய சுபாவமே இப்படித்தானா? சுபாவமாவது சுபாவம்! அதை உதறி எறிந்துதானாகவேண்டும். தனக்கும் ஆணவம் உண்டு. மான ரோஷம் உண்டு என்று உலகம் உணரும்படி செய்துதான் ஆக வேண்டும்.

அவனுடைய உலகம் ஆபீசையும் வீட்டையும் விட்டால் என்ன இருக்கிறது? இந்தக் குறுகலான உலகத்தில் கூட அவனுடைய எண்ணங்களுக்கோ உணர்வுகளுக்கோ மதிப்புக் கொடுப்பவர் யாருமே இருந்ததாகத் தெரியவில்லையே! குட்டக் குட்டக் குனிந்து போகும் அப்பாவி என்றுதானே எல்லோரும் அவனைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்! முதுகெலும்பே இல்லாதவன் என்ற இளக்காரம்தான் எல்லோருக்கும் — கேலியாகச் சிரிப்பார்கள். சிலர். 'ஐயோ பாவம்' என்று பரிதாபப்பட்டு அனுதாபம் தெரிவிப்பார்கள். நிரந்தரமான ஒரு சோகம் இழையோடும் வாழ்க்கையாகி விட்டதே தன்னுடையது.

மேஜை எதிரே கூனிக் குறுகிக்கொண்டு உட்கார்ந்திருக்கிறோம் என்ற உணர்வு அப்போதுதான் அவனுக்கு ஏற்பட்டது. நெஞ்சை நிமிர்த்தி விட்டுக் கொண்டான். முதுகைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். முதுகெலும்பு முடிச்சு முடிச்சாகத் தட்டுப்பட்டது. இது இவ்வளவு வலுவாக இருக்க எதற்காகக் அவன் கூனிக்குறுகவேண்டும்?

கோடியில் மற்றவரை விட வித்தியாசமானவன் என்று தன்னைக் காட்டிக் கொள்வதற்காக மேஜையைச் சாய்வாகத் திருப்பிப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்த தண்டபாணி கூட முதுகை வில்லாக வளைத்துக் கொண்டுதான் மேஜைக்கு முன்னே குனிந்திருந்தான். அந்தக் கூனிய முதுகில் ஒரு குத்து விடுவதற்கு எவ்வளவு நேரமாகும்? குத்து விட்டால்தான் ஆத்திரம் தீரும்போல் இருந்தது. தடிப் பயல்! வேண்டுமென்றே எல்லோரெதிரிலும் அவனை எப்படி அவமானப்படுத்தி விட்டான்!

கேண்டீனுக்குப் போனதே தப்புத்தானோ? அங்கே போகாமலே இருந்திருக்கலாமோ? போக வேண்டிய அவசியம் என்ன இருந்தது? கேண்டீனில் கண்டதையும் சாப்பிடக் கூடாதென்றுதானே ராஜி ஒவ்வொரு நாளும் தலைப் பொறிபோல் அவனுக்கு டிபன்



பரிதாப பாவம் (அவலம்)

கவலையோடு கண்ணீர் பெருக்குதல், முகமும் உடலும் வாடுதல், வார்த்தை குளறுதல்.

— சிலப்பதிகாரம்: அடியார்க்கு நல்லார் உரை



பாக்ஸ் நிறைய ஏதாவது கொடுத்து அனுப்பு கிறுள்? லஞ்ச் டயத்தில் ரூமை விட்டு எல்லோரும் எழுந்து போன பிறகு தான் மட்டும் தனியே உட்கார்ந்து சாப்பிடுவது என்னவோ போல் இருக்கிறது என்று ஏன் நினைத்தான்? கேண்டீனின் கலகலப்பான சூழ்நிலையில் உட்கார்ந்து சாப்பிட வேண்டும் என்று நப்பாசை ஏன்? அதற்கு இடம் கொடுத்திரா விட்டால் தண்டபாணியின் நீசத்தனமான கிண்டலுக்கு இடமே இருந்திருக்காதில்லையா?

பெரும்பாலும் ராஜி டிபன்பாக்ஸில் கெட்டியான மோர் சாதமும் தொட்டுக் கொள்ள ஏதாவது ஊறுகாயும் வைத்திருப்பாள். மோர் சாதம் மத்தியானத்துக்குள் நன்ருகப் புளித்துப் போயிருக்கும். எனவே அவன் ஊறுகாயை எடுத்து டிபன் பாக்ஸ் மூடியில் வைத்து விட்டுச்சாதத்தில் கொஞ்சம் தண்ணீரை விட்டு நெகிழ்த்திக்கொண்டு தான் சாப்பிட ஆரம்பிப்பான். அன்றும் அப்படித்தான். டம்ளரில் தண்ணீர் எடுத்துக் கொண்டு டிபன் பாக்ஸுடன் சாப்பாட்டு மேஜை எதிரே உட்கார்ந்து டிபன் பாக்ஸைத் திறந்தான். இதென்ன! ராஜி ஊறுகாயே வைக்கவில்லையே! மறந்து விட்டாளா?

சட்டென்று அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. டிபன் பாக்ஸை மூடாமலே வைத்து விட்டு ஸெல்ஃப் ஸர்வீஸ் கவுண்டருக்கு விரைந்தான். முப்பது பைஸாவைக் கொடுத்து ஒரு வடைக்குச் சீட்டு வாங்கிக் கொண்டான். வடை கிடைத்தது. ஆனல் அவன் ஆவலுடன் எதிர்பார்த்த சாம்பார் கிடைக்கவில்லை. தீர்ந்து விட்டதென்று சொல்லி அதற்குப் பதிலாக ஓட ஓட சட்னி தான் இரண்டு கரண்டி ஊற்றினுன் கேண்டீன் சிப்பந்தி. மீண்டும் டிபன் பாக்ஸ் எதிரே வந்து உட்கார்ந்து சட்னியைச் சிறிது ருசி பார்த்தான். எப்போது அரைத்த சட்னியோ புளித்துப் போயிருந்தது. அதோடு அழுகல் நெடி மூக்கைத் துளைத்தது. தேங்காய் விற்கும் விலையில் அழுகல் தேங்காயைத் தூக்கி எறியக் கேண்டீன் முதலாளிக்கு மனம் வருமா? சட்னி அபிஷேகம் ஆகியிருந்ததால் வடையும் விரலால் தொடுவதற்கே பிடிக்கவில்லை. டிபன் பாக்ஸையும் வடை பிளேட்டையும் மாறி மாறிப் பார்த்தவாறு அவன் பிரமை பிடித்தாற்போல் உட்கார்ந்திருந்தான்.

அப்போதுதான் தண்டபாணியின் வெண்கலக் குரல் ஒலித்தது. ஆரம்பத்திலிருந்தே தண்டபாணி அவனுடைய தவிப்பைக் கவனித்திருக்க வேண்டும். ''ஏய் ரமணி! ஏண்டா இடிச்ச புளி மாதிரி உட்கார்ந்திட்டே?வழக்கம் போல மோர் சாதம்தானே? சட்டுப் புட்டுன்னு சாப்பிட்டுத் தொலையேன்! புளிப்பு நெடி தாங்க முடியல்லே!''

தண்டபாணியின் இந்தக் கிண்டல் மற்றவர்களின் பார்வையையும் ரமணியின் பக்கம் திருப்பியது.

''டேய்! ரமணி அப்பாவின்னு நினைச்சிண்டிருக்கபே, நாமதான் ஏமா



ளிங்க. பயலோட சாமர்த்தியத்தைப் பாருங்களேன்! முப்பது பைசா வடைக்கு ஈழனு கரண்டி சட்னி! சம்சாரம் தொட்டுக்க ஒண்ணும் வச்சு அனுப்பலே. அதுக்காக இந்த ஐடியா பண்ணியிருக்கான். கேண்டீன் நஷ்டத்திலே ஓடுதுன்னு ஏன் ஓடாது?'' இவ்வாறு கூறிச் சிரித்துக் கொண்டே தண்டபாணி, தட்டிலிருந்த சட்னியை வடையோடு சேர்த்து டிபன் பாக்ஸில் கொட்டி விட்டான்.

''சும்மா சாப்பிடு ரமணி. சங்கோஜப் படாதே!''

ரமணிக்கு ஒன்றுமே பேசத் தோன்றவில்லே. பேச ஆரம்பித்தால் அழுகை வந்து விடும்போலிருந்தது. சட்டென்று டிபன் பாக்ஸை மூடி எடுத்துக் கொண்டு அங்கிருந்து எழுந்து வேகமாக வெளிநடப்புச் செய்தான். தண்டபாணியும் மற்றவர்களும் சிரித்த சிரிப்பு அவன் நெஞ்சை அறுத்தது.

புளித்த மோர் சாதந்தான் என்றாலும் அதுகூட அவன் வாய்க்கு எட்டாமல் போய் விட்டதே! வயிறு காந்திக் கொண்டிருந்தது. மனமோ தீய்ந்து கருகிக் கொண்டிருந்தது. அந்த இடத்திலேயே அந்த டிபன் பாக்ஸ் சாதத்தைத் தண்டபாணியின் தலேயில் கொட்டிக் கவிழ்க்கத் தோன்றவில்லேயே அவனுக்கு!

இப்போதுகூடச் செய்யலாம். டிபன் பாக்ஸில் சட்னி அபிஷேகமான சாதம் அப்படியேதான் இருந்தது. மெதுவா தண்டபாணியின் பின்னே சென்று அவன் கவிழ்த்துக் கொட்டி விட்டால்? முகமெல்லாம் புளித்த மோர் சாதமும் அழுகல் தேங்காய் சட்னியும் வழிய, தண்டபாணி திணறும் காட்சியைக் கற்பனே செய்யவே ரமணிக்கு இன்பமா யிருந்தது.

அவன் பார்த்த பார்வையின் தீட்சண்யம் தண்டபாணியின் உணர்வைத் தாக்கியிருக்க வேண்டும். சட்டென்று நிமிர்ந்த அவன் ரமணி விரைப்பாக நெஞ்சை நிமிர்த்திக் கொண்டிருந்ததைக்கண்டு சிரித்து விட்டான். ''ஏய் ரமணி! என்ன ஆச்சு உனக்கு? நெஞ்சு வலியா? இல்லே, முதுகு வலியா?'' என்று கேட்டான்.

இந்தக் கேள்வியை ரமணி எதிர்பார்க்கவில்லேதான். எதிர்பார்த்திருந்தால் காரசாரமான பதிலே ஒருவேளே உருவாக்கி வைத்திருந்தாலும் வைத்திருப்பான். ஆனால் இப்போது காரசாரமான பதிலுக்காக அவன் மனத்துக்குள்ளேயே ஒத்திகை பார்க்க வேண்டியிருந்தது. வாயிலிருந்து வார்த்தை கிளம்ப மறுத்தது. சட்டென்று தொய்ந்தாற் போல் மேஜை மீது குனிந்து ஏதோ எழுத ஆரம்பித்தான். தண்டபாணியின் கேலிச் சிரிப்பு அவன் காதில் விழுந்து அவனேயே வேதனேப் படுத்தியது.

''சார், உங்களே மானேஜர் ஐயா கூப்பிடறாங்க.''

ரமணி துள்ளி எழுந்தான். ஆனால் கால்கள் தொய்ந்து துவண்டன. நெஞ்சு திக் திக்கென்று அடித்துக் கொண்டது. மானேஜர் எதற்காகக் கூப்பிடுகிறார்? நேற்று ஒரு ஃபைலே அவருடைய கையெழுத்துக்காக அனுப்பி யிருந்தான். அதில் ஏதாவது தப்புக் கண்டு பிடித்து விட்டாரோ?

சில நிமிஷங்கள் பொறுத்து மறுபடியும் அவன் தன் இருக்கையில் வந்து அமர்ந்த போது அவன் முகத்தில் வெற்றிக் களிப்பு அலேமோதிக் கொண்டிருந்தது. அவன் அனுப்பியிருந்த ஃபைலில் மானேஜர்சுட்டிக் காட்டிய தவறு தவறே அல்ல. அவர் சரியாகப் புரிந்து கொள்ளாத முறைதான். சென்ற ஆண்டுத் துவக்கத்தில் இரண்டாயிரம் பேல் பேப்பர் ஸ்டாக் இருந்ததாக ரமணி ஸ்டேட்மெண்டில் குறிப்பிட்டிருந்தான். அதை நடப்பு ஆண்டுத் துவக்கம் என்று நினேத்துக் கொண்டுதான் மானேஜர் அவன் மீது எரிந்து விழுந்தார். இந்த ஆண்டுத் துவக்கத்தில் ஸ்டாக் இருநூறு பேல் கூட இல்லேதான். மானேஜர் ஆண்டு மாறிப் புரிந்து கொண்டதை ரமணி பக்குவமாகச் சுட்டிக் காட்டியதும் அவர் முகம் போன போக்கைப் பார்க்க வேண்டுமே! அதை நினேத்து ரமணிக்குச் சிரிப்பு வந்தது.

சட்டென்று அவனுள் ஓர் ஆவேசம் பொங்கி எழுந்தது. சற்று நேரத்துக்கு முன்பு தனக்கும் முதுகெலும்பு இருக்கத்தான் செய்கிறது என்று நெஞ்சை நிமிர்த்திவிட்டுக்-கொண்டானே, அந்த ஆணவம் மேனேஜரின் எதிரே நின்றபோது எங்கே போயிற்று? ஃபைலேச் சரியாகப் பார்க்காமல் அவன் மீது சீறி விழுந்தவர் தன்னுடைய தவறு புரிந்ததும் அவனிடம் மன்னிப்புக் கேட்க வேண்டியது அவசியமில்லேயா? ''நீ போகலாம்'' என்று அவர் அமர்த்தலாகக் கூறியதும் தப்பினேம் பிழைத்தோம் என்று வெளியே வந்துவிட்டானே? மான ரோஷம் உள்ளவனு யிருந்தால் என்ன செய்திருக்க வேண்டும்? ''மிஸ்டர் மானேஜர், அவ்வளவு அலட்சியமாக என்னேத் தட்டிக் கழித்து அனுப்பிவிட முடியாது. உங்கள் தவறுக்கு நீங்கள் மன்

அச்சம்!

போர் வெறியில் நியூட்ரான் குண்டு வீசப்பட்டால் கதிரியக்கத்திலிருந்து பாதுகாப்புப் பெற 'டிராயூட்' என்ற ஜெர்மானியர் பெரிய கோளம் ஒன்றை உருவாக்கியுள்ளார். இந்தக் கோளத்தைத் தோட்டத்திற்குள் புதைத்து விட வேண்டும். நியூட்ரான் வெடித்ததும் இதற்குள் புகுந்து கொள்ளலாம். இதற்குள் 9 பேர் 14 நாட்கள் வரை வாழலாம். மின்சார உற்பத்திக்கான உபகரணங்களே இயக்குதல், கோளத்தினுள் வரும் காற்றைக் கட்டுப்படுத்துதல், கதிரியக்க அளவை அளந்து கொள்ளுதல் போன்றவற்றை உள்ளிருந்தே செய்யலாம். தற்போது ஜெர்மனியில் இந்தப் பாதுகாப்புக் கோளங்களின் விற்பனே விறுவிறுப்பாக இருக்கிறதாம்!

- ஏ. வி. தேவன்



னிப்புக் கேட்டாக வேண்டும். அதன் பிறகு தான் நான் இங்கிருந்து நகர்வேன்!'' என்று மண்டையில் அடித்தாற் போல் பேசியிருக்க வேண்டாமா? என்னமோ, தானே தவறு செய்துவிட்டவன் போல், அந்த ஆளிடம் குழைந்து பேசியது எவ்வளவு கேவலம்!

இப்போதுகூட என்ன முழுகிப் போயிற்று? நேரே அதே மானேஜரிடம் போய் ''மன்னிப்புக் கேட்கப் போகிறீங்களா இல்லையா?'' என்று விரைப்பாகக் கேட்டாலென்ன?

அவனுடைய மனத்தில் ஓடிய எண்ணங்களை அவனுடைய உடல் மதித்தால்தானே? அவனது விருப்பங்களை லட்சியம் செய்தால் தானே! இடித்த புளி மாதிரி அசையாமல் உட்கார்ந்திருந்தது. ''விருப்பங்கள் புரவிகளானால் ஆண்டிகளும் உலகை ஆளலாம்'' என்று எப்போதோ படித்த ஆங்கில வாக்கியம்தான் ரமணிக்கு ஞாபகம் வந்தது.

தண்டபாணியின் மேஜைக்கு எதிரே எல்லோருக்கும் பொதுவாக வைக்கப்பட்டிருந்த டெலிபோன் ஒலித்தது. நாலைந்து தரம் மணி அடிக்கும்வரை அதன் பக்கமே திரும்பாமலிருந்த தண்டபாணி, வேண்டா வெறுப்பாக ரீசிவரைக் கையில் எடுத்து, ''ஹலோ'' என்றான். வேண்டுமென்றே குரலைக் கட்டையாக்கிக் கொண்டு. மறுகணம் அவன், ரமணி இருந்த திசையில் திரும்பி, ''ரமணி! போன் உனக்குத்தான்!'' என்றான். ''லேடீஸ் வாய்ஸ்!'' என்று கூறினான் குறும்பாகச் சிரித்துக்கொண்டே.

''ஹலோ, ரமணிதான் பேசறேன். — ஓ, நீயா? என்ன ராஜி?''

ராஜி பேசப் பேச ரமணியின் முகம் தொங்கிக் கொண்டே போயிற்று. 'உம்', 'சரி' என்ற வார்த்தைகளைத் தவிர வேறெந்த வார்த்தையும் கிளம்பவில்லை, அவன்வாயிலிருந்து. பேசி முடித்து விட்டுத் தோய்ந்த நடையுடன் அவன் தனது இருக்கையில் சென்று அமர்ந்தான்.

மனத்தில் ஆத்திரம் மூண்டு என்ன பிரயோசனம்? டெலிஃபோனிலேயே அதைக் கொட்டித் தீர்க்க அவனால் முடிந்ததா?

ராஜியின் அண்ணாவும் மன்னியும் கல்பாக்கத்திலிருந்து காரில் வந்து விட்டார்களாம். ராஜி அவர்களோடு ஊர் சுற்றக் கிளம்பி விட்டாள். அவர்களுக்கு ஏதேதோ ஷாப்பிங் செய்ய வேண்டுமென்று இருந்தால் இவளும் அவர்களுடன் ஒட்டிக் கொள்ளத் தான் வேண்டுமா? அண்ணா கல்பாக்கத்தில் சீனியர் என்ஜினியராக ஆயிரக் கணக்கில் சம்பாதித்துக் கொண்டிருக்கிறான் என்ற பெருமை அவளுக்கு.

ஷாப்பிங் முடித்துக் கொண்டு தேவி தியேட்டரில் சினிமாவும் பார்த்துவிட்டுஇரவு பத்து மணி சுமாருக்குத்தான் வீட்டுக்குத் திரும்பி வருவார்கள். அநேகமாக இரவுச் சாப்பாட்டையும் வெளியிலேயே முடித்துக் கொண்டுதான் திரும்புவார்கள். இதையெல்லாம் கூறும்போது ராஜியின் குரலில் தான் எவ்வளவு குதூகலம்! வீட்டுச் சாவியைப் பக்கத்து வீட்டில் கொடுத்துவிட்டுப் போகிறாளாம்! இந்தக் கரிசனமாவது தோன்றியதே!



''இந்தப் புது 'டேப்' போட்டப்புறம்தான் எனக்கு விடுமுறை நாட்களில் தூக்கம் வருகிறது.''

''என்ன இருக்கு அந்த ''டேப் பிலே?''

''டைப்ரைட்டர், தொலைபேசி சத்தங்கள் சேர்ந்த ஆபீஸ் சூழ்நிலையை 'ரெக்கார்ட்'பண்ணியிருக்கேன்!''

—பி. ஆர். கண்ணன்

அவனுடைய பசிக்குப் பரிகாரமாக வீட்டில் ஏதாவது இருக்குமா? புதிதாகச் சமையல் செய்து வைக்க எங்கே ராஜிக்கு நேரம் இருந்திருக்கப் போகிறது! அதைப் பற்றி நினைத்திருப்பாளா என்பதே சந்தேகம்தான். அநேகமாக மத்தியானத்து மிச்சங்கள்தான் மேடையில் கொலு இருக்கும். கிடைத்ததை விரவி வாயில் போட்டுக் கொண்டு மிச்சமிருந்தால் மோரோ, இல்லாவிட்டால் தண்ணீரோ குடிக்க வேண்டியதுதான். தூங்கி விட முடியாது. பத்து மணிக்கு மேல் அவர்கள் வந்து கதவை இடிப்பார்களே!

அண்ணன்காரன் ராஜியை வீட்டு வாசலிலேயே இறக்கி விட்டு அப்படியே கல்பாக்கத்துக்குத் திரும்பிப் போனால் எவ்வளவு நன்றாயிருக்கும்! ஆனால் அப்படிப் போய்விடமாட்டானே! உள்ளே வரத்தான் வருவான். தான் ஏதோ உச்சாணிக் கொம்பில் உட்கார்ந்திருப்பதாக நினைத்துக் கொண்டுஅவனை நோக்கி ஓர்அலட்சியப் பார்வையை வீசத்தான் வீசுவான். அவன் கையாலாகாதவன் அப்பாவி என்று ஜாடை மாடையாகச்சொல்லிக் காட்டுவான். அப்பா அவசரப்படாமலிருந்திருந்தால் ராஜியின் அழகுக்கும் படிப்புக்கும் அவளுக்கு ஐ.ஏ.எஸ். மாப்பிள்ளையே கிடைத்திருப்பான் என்று அங்கலாய்ப்பான்.

அவன் அங்கலாய்ப்பது இருக்கட்டும். இந்த ராஜி வேறு 'ஈ' என்று இளித்துக் கொண்டு அண்ணனுடைய அதி சாமர்த்தியப் பேச்சை ரசித்தபடி நிற்பாளே?

எரிமலையாகக் குமுறி வெடிக்கத் தோன்றும் அவனுக்கு. ஆனால் வெடித்த நாள் ஏது?

தாமாகவே ரமணியின் கைகள் முதுகைத் தொட்டுப் பார்த்துக் கொண்டன. முதுகெலும்பு ஒரு முண்டு முடிச்சு குறைவில்லாமல் அப்படியேதான் இருந்தது!

ரயிலில் ஒரு காதலன்

சுந்தரராஜன்



மீண்டும் அந்தப் படத்தை எடுத்துப் பார்த்தேன்.

பெண்ணே, வருகிறேன்!

அவள் அழகாக இருந்தாள். நீண்ட புருவங்கள் கண்களில் நிறைந்திருந்த மயக்கத்தைத் தரும் ஏதோ வஸ்து ஒன்று, அழகான புன்னகை ஒன்றில் அளவாக விரிந்திருந்த இதழ்கள், அவைகளின் வழியாக வெளிப்பட்ட முத்துப் பற்களின் பளபளப்பு, வடிவெடுத்து அமைந்திருந்த முகம், அதன் கீழ் அழகுடன் இறங்கிக் கொண்டிருந்த கழுத்து.....

பெண்ணே, உன் அழகுக்கு என் வணக்கங்கள்.

அவள் என்னுடன், என் வாழ்வில் இணைந்தால், எத்தனை இனிமையானதாக இருக்கும்!

பெண்ணே... காத்திரு எனக்காக!

''என்ன இன்னிக்குக்கூட்டமே இல்லே?''

நிமிர்ந்து பார்த்தேன்.

ஓர் இளைஞன்... அறிமுகப் புன்னகையுடன் கூட முகத்தில் ஒரு படபடப்பும் இருந்தது.

சித்திரை வெய்யிலின் புழுக்கம் இருவரையும் தாக்கிக் கொண்டிருந்தது.

''ஆச்சரியம்தான்!'' என்றேன்.

அன்பு பாவம் (உவகை)
கண்கள் மலரும், இனிய உணர்ச்சி மனத்தில் நிரம்பும், சிறிதும் கோபமற்ற முறுவல் நகை மலரும். - சிலப்பதிகாரம்:
அடியார்க்கு நல்லார் உரை



''இந்தவைகை எக்ஸ்பிரஸைக் கோடையில் மட்டும் ராத்திரி விடலாம், இல்லையா?'' என்றான் அவன் தொடர்ந்து.

யார் இவன்... அவளுடன் என் கனவுப் பயணத்தைத் தொடங்க நினைக்கையில் என் எதிரில் அமர்ந்து, சிவ பூசையில் கரடியாய்...

எங்கள் இருவர் வரிசைகளிலும் வேறு யாரையும் காணோம். சரி, இவனுடன் பேசித்தாகை வேண்டும். விடமாட்டான்!

அந்த இளைஞனை மீண்டும் கவனித்தேன். அதே சங்கடமான புன்னகையுடன் நெளிந்தான்.

''சார், எங்கே மதுரையா?''

''ஆமாம்!'' — எரிச்சலில் வேண்டும் என்றே பொய் சொன்னேன்,

''நானும் மதுரை தான் போறேன். ஆமாம் சார், இது எப்ப திருச்சி போகும்?''

''ஏழேகால்மணியாகும்னு நினைக்கிறேன்.''

''சாரிசார்... ரொம்பத் தொணதொணக்கறேனா?''

''சார், என் பெயர் மோகன். டில்லியில் ஒரு கம்பெனியில் ஸ்டெனோவாக இருக்கேன்.''

''ஐ சீ... ஐ ஆம் குமார். மெட்ராஸ்ல பேங்க் ஆபீசரா இருக்கேன்.''

''ரொம்ப சந்தோஷம் சார்.''

வைகை எக்ஸ்பிரஸ் ஏராளமான புழுதியையும், சூரியன் ஏராளமான உஷ்ணத்தையும் வண்டிக்குள் வாரி இறைத்துக்கொண்டிருந்தன.

விழுப்புரம் ஜங்ஷனில் அவன் என்னிடம் திடீரென்று கேட்டான்:

''சார் தப்பா நினைக்கக் கூடாது! நீங்க யாரையாவது காதலிச்சு இருக்கீங்களா?''

அவன் கேள்வி என்னை அசர வைத்தது. அந்த போட்டோவில் இருந்த பெண்ணின் ஞாபகம் ,வந்துவிட்டுப் போனது.

''இல்லே!'' என்றேன்.

அவன் சிறிது நேரம் யோசித்தான்.

''சார் தப்பா நினைக்கலியே?'' என்றான் மீண்டும்.

விருத்தாசலம் ஸ்டேஷன் வந்தது. அவன் இறங்கிப் போய் ஒரு சிகரெட் பாக்கெட் வாங்கி வந்தான்.

''சார்... சிகரெட்...''

''நோ தேங்க்ஸ்!''

''சார்...நீங்க பெரிய ஆபீசர். உங்க முன்னால் நான் சிகரெட் குடிக்கிறது தப்பு. ஆனா, எனக்கு இப்ப இது ரொம்பத் தேவை''

''ப்ளீஸ்... கோ அஹெட்!''

''இளைஞனே, உனக்கு என்ன கஷ்டம்? எதையோ மனத்தில் வைத்துக் கொண்டு ஏன் தவிக்கிறாய்?''

''சார், உங்களை என் அண்ணன் மாதிரி நினைச்சுப் பேசறேன். சில விஷயங்கள் சொல்லலாமா?''

நான் தலையை அசைத்தேன்.

''உங்களை ஏன் தெரியுமா காதலிச்சது உண்டான்னு கேட்டேன்? நான் காதலிக்கிறேன் சார்... முதல்ல திருச்சியில் இருந்தோம் சார்



நாங்க... பக்கத்துத் தெருவில் தான் சார் அவ இருந்தா....''

அவன் கொஞ்ச நேரம் மௌனமானுன். சின்ன வயசுக் காலங்களை எண்ணுகிருனே?

''ஏன்தான் சார், வயசாறதோன்னு தோணுது? சின்ன வயசுல குழந்தைகள் விளையாட்டுல என்ன சார் அந்தஸ்தா குறுக்கே நின்னது? ஆனு, பெரியவங்க ஆனப்புறம்... ஆமா சார், குழந்தைகளா இருக்கறச்சே, அவளோட நான் விளையாடின விளையாட்டுக்கள் கொஞ்சம் கொஞ்சமா, நாங்க வளர்றச்சே எங்க காதலா மாறிச்சு...''

நான் கேட்டுக் கொண்டிருந்தேன்.

''எனக்கும் இங்க ஒண்ணும் சரியா வேலை கிடைக்காம டில்லிக்குப் போற மாதிரி தலையெழுத்து. ஆனு, அவ அப்பப்ப கடிதம் போடுவாள். நானும் அவ ஃப்ரெண்டு ஒருத்தியோட ஆபீஸ் விலாசத்துக்கு அவளுக்கு எழுதுவேன்....''

வெயிலின் புழுக்கம் கொஞ்சம் குறைந்த மாதிரி தோன்றியது.

''என்ன சார், என்னைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?''

''நீங்கதான் அண்ணன்னு சொன்னீங்களே! ஆல் த பெஸ்ட்!'' நான் வாஸ்தவமாகவே உணர்ச்சி வசப்பட்டேன்.

திருச்சி வந்து கொண்டிருந்தது. அவன் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தான். ''அதோ சார்... நான் எழுதின மாதிரியே வந்திருக்கா!''

வண்டி நின்றதும் அவன் வேகமாக இறங்கி நடக்க ஆரம்பித்தான். நானும் என் கைப் பையை எடுத்துக் கொண்டு தொடர்ந்தேன்.

''ஒண்ணும் டிரபிள் இல்லையே, இந்திரா?''

அவள் தலையை அசைத்தாள்.

''வா போகலாம்! இனிமே நம்மை யாராலும் பிரிக்க முடியாது.''

அவன் என்னைப் பற்றி முற்றிலுமே மறந்து போய்விட்டான் எனத் தோன்றியது.

''சுருக்கமாச் சொல்றேனே... என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறதுல அவங்க வீட்டுல ஆர்வம் கிடையாதாம். தன் பெண்ணை உசத்தியா ஏதாவது டாக்டருக்கோ, என்ஜினியருக்கோ கொடுக்கணுமாம்...''

அவன் குரல் கொஞ்சம் உடைவதுபோல் தோன்றியது.

''நான்கூட எழுதினேன் சார்... 'பேசாம நீ அப்பா அம்மா சொல்றவனையே கல்யாணம் பண்ணிக்கோ'ன்னு ம்ஹூம்... கேக்க மாட்டாளாம்.''

அவன் குரலில் இப்போது பெருமை குடிகொண்டிருந்தது.

அவன் பின்னர் தன் திட்டத்தை விவரித்தான். கேரளாவில் அவனுக்கு ஒரு வேலை கிடைத்து இருக்கிறதாம். டில்லி வேலையை ராஜினாமாச்செய்துவிட்டு வருகிருனும். திருச்சியில் இவன் காதலி காத்திருக்கிருளாம். இருவருமாக மதுரை போய், அங்கிருந்து கேரளா போவார்களாம்.''

''மிஸ்டர் மோகன்... என் விலாசம் பத்திரம். ஏதாவது என்னுல் உதவ முடியும்னு கண்டிப்பா எழுதுங்க....''

அவன் திரும்பினுன். என் கையில் பையைப் பார்த்துக் குழம்பினுன்.

''சார்... மதுரை போறதாச் சொன்னீங்களே....''

அவள் அன்னியக் குரல் கேட்ட திகைப்பில் தன் முகத் திரையை விலக்கி என்னை ஒரு வினுடி பார்த்தாள்.

''சார் யார்ன்னு சொல்லலியே, இந்திரா?'' — அவன் தொடங்கினுன். நான் குறுக்கிட்டேன்.

''நானே சொல்றேன்...'' — நான் அவள் பக்கம் திரும்பி மெதுவாகத் தொடர்ந்தேன். ''நான்தான் நாளைக்கு உங்களைப் பெண் பார்க்க வரதா இருந்தவன்...''

அவர்கள் இருவரும் அப்படியே நிற்க, நான் மெல்ல ஜனக் கூட்டத்தில் கரைந்தேன்!

தலை குனிவு

ருக்மிணி பார்த்தசாரதி

வீட்டை விட்டுக் கிளம்பும் போதே நேரமாகி விட்டது. ''இன்று கட்டாயம் கிளாஸுக்கு லேட்தான்!'' என்று நினைத்துக் கொண்டே பள்ளிக்கு விரைந்த கணேஷ், நான்கு தெருக்கள் இணையும் இடத்துக்கு வந்ததும் சற்றுத் தயங்கினான். வலது பக்கம் செல்லும் தெரு அவன் பள்ளிக்குக் குறுக்கு வழி. ''இதில் நுழையலாமா?'' என்று எண்ணியவன் அத் தெருவில் வரிசையாக இருந்த கடைகளைச் சட்டென்று நோட்டம் விட்டான். மூன்றாவது கடை ஆறுமுகத்தினுடைய பழக் கடை. ''ஆறுமுகம் இல்லா விட்டால் சிட்டாக இந்தத் தெரு வழியே ஓடிவிடலாம்!'' என்று நினைத்தவன் ஏமாந்து போனான். ஆறுமுகம் நிதானமாக ஆப்பிள் பழங்களை ஒரு பழைய துணியால் துடைத்துக் கொண்டிருந்தாலும் தன் கழுகுக் கண்களால் தெருவில் போவோர் வருவோரையும் கவனித்தவாறிருந்தான். அவன் பார்வையிலிருந்து தப்புவது துர்லபம்.

வேறு வழியின்றி கணேஷ் இடது புறம் திரும்பி நடக்கலானான். ''பரவாயில்லை... முதல் பீரியட் ஸயன்ஸ்தான். ஸயன்ஸ் மாஸ்டர் பிரம்படி தரமாட்டார்!'' என்று திருப்திப்பட்டுக் கொண்டான். மனத்தில் ஒரு மூலையில் தன் தந்தையின் மேல் கோபம் பொங்கிற்று. ''எந்தக் காரணத்தை முன்னிட்டும் ஆறுமுகம் கடை வைத்திருக்கும் தெருவில் கால் வைக்காதே! அவன் உன்னை நிறுத்துவான். எனக்குத் தலை குனிவாய்ப் போய்விடும்!'' என்று அவர் கண்டிப்பாய்க் கட்டளையிட்டிருந்தார்.

இந்த அதிசயக் கட்டளையை நினைத்து கணேஷ் எத்தனையோ தடவை குழம்பியிருக்கிறான். ஆறுமுகத்திடம் அவன் தந்தைக்கு என்ன பயம்? பயம்தானா? ஆறுமுகம் சொந்தமாகக் கடை வைத்திருக்கும் ஒரு கௌரவமான மனிதன். ஏமாந்தவர்கள் தலையில் அழுகல் பழங்களைக் கட்டாத நாணயஸ்தன். அவனிடம் எதற்காகப் பயப்படவேண்டும்? ஒருவேளை ஆறுமுகம் அவன் தந்தைக்கு ஏதாவது உதவி செய்து, அவர் அந்தக் கடனை அடைக்காமல் இருந்திருப்பாரோ? இதுவும் அவ்வளவாகச் சாத்தியமில்லை. அவன் தந்தை அரசாங்கத்தில் உயர்ந்த அதிகாரி. வசதியானவர். பின் அவருடைய விநோதக் கட்டளைக்குக் காரணம் என்ன? இருவருக்குமிடையே சுமுகமான உறவு இருந்து வருவதையும் கணேஷ் அறிவான். இருவரும் சகோதரர்கள் போலப் பேசிச் சிரித்து மகிழ்வார்கள்.

அப்படியிருக்க, அந்தக் கட்டளை எத்தனை பைத்தியக்காரத்தனமானது!

ஒரு நாள் அவனை அவன் தந்தை 'மாஜிக் ஷோ' ஒன்றுக்குக் கூட்டிச் சென்றார். காலி பாத்திரத்திலிருந்து கங்கை நீர் வரவழைப்பது, இளம் பெண்ணை இரண்டு துண்டாக அறுத்துப் பின் மந்திரம் போட்டு இணைப்பது, நான்கு துணிகளால் கண்களைக் கட்டிக் கொண்டு சீட்டுக் கட்டின் அத்தனை சீட்டுக்களையும் சரியாகச் சொல்வதுமாகச் சக்கைப் போடு போட்டு விட்டார் மந்திரவாதி. கணேஷ் அப்படியே அயர்ந்து போய்விட்டான். ஷோ முடிந்து வீடு திரும்ப தந்தையும் மகனும் பஸ் பிடித்தபோது, கணேஷ், ''உலகத்திலேயே இவர்தான் பெரிய மந்திரவாதி!'' என்று குழந்தைத் தன்மாகச் சொன்னான்.

''பூ! இவர் ஒன்றுமே இல்லை! நான் உன் வயசாயிருந்தபோது, என் அப்பாவோடு ஒரு மாஜிக் ஷோ பார்த்தேன். அதுவல்லவா மாஜிக் ஷோ!'' என்றவர், அந்த ஷோவைப் பற்றிய வர்ணனையில் மூழ்கிப் போனார்.

'சொல்லிவிடலாமா?' என்று ஒரு கணம் யோசித்தான், கணேஷ். ஆனால் உடனேயே தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டான். அவர் இட்ட கட்டளையை அவரே மீறி நடக்கிறார். என்னதான் ஆகிறதென்று பார்க்கலாமே! வெகு நாட்களாக அவனைக் குழப்பிக் கொண்டிருந்த கேள்விக்கு விடை கிடைத்துவிடும்!

ஆறுமுகத்தின் கடையை நெருங்கிய பின்தான் அவர் சுய உணர்வு பெற்றார். ஆறுமுகமும் அவரைக் கண்டு விட்டான்.

லபக்கென்று ஒரே தாவலில் வீதியில் இறங்கி அவருக்கு அருகே வந்து நின்றான் ஆறுமுகம்.


''நான் செய்த அதிர்ஷ்டம், நீங்களும் பையனும் வந்தது!'' என்றான். முகத்தில், குரலில் இன்பம்.

கணேஷ் தன் தந்தையின் முகத்தைப் பார்த்தான். அதிலும் இன்பம்தான்! பதிலே சொல்லாமல் ஆறுமுகத்தையே வாத்ஸல்யத்தோடு பார்த்துக் கொண்டிருந்தார். பின், ''கடை எப்படி நடக்கிறது?'' என்றார்.

''லாபம்தான்.. எந்தக் குறையும் இல்லை, ஒரே ஒரு குறையைத் தவிர.''

''அதென்ன குறை?''

ஒய்?



எக்ஸ் சோப்பிற்கு
விளம்பரம் கொடுத்த
செக்ஸ் நடிகை
இரண்டு மாதமாய்க்
குளிக்கவே
இல்லையாம்!

-ஸ்ரீ. ஸ்ரீதரன்

''கணேஷுடைய ஸ்கூல் பையன்கள் இந்த வழியே தினம் போறதை நான் பார்க்கிறேன். இவன்மட்டும் கண்ணில் படறதில்லை...''

''நான்தான் அப்படி ஆர்டர் போட்டேன் ஆறுமுகம்!''

''ஏன்?'' அவன் முகத்தில் சோகம் லேசாகப் படர்ந்தது.

''நீ உன் பழைய வழக்கத்தை ஆரம்பித்து விடுவாயோ என்கிற பயம்!''

''மாட்டேன். உங்களுக்குப் பிடிக்காததை நான் செய்ய மாட்டேன். பையன் இந்த வழியாய் ஸ்கூல் போகட்டும்... பார்த்து சந்தோஷப்படறேன்...''

''நிஜமாகவா?''

''நீங்கள் வேணுமானால் பரீட்சை வையுங்களேன்!''

'சரி! ஒரு டஜன் வாழைப் பழம் கொடு!''

ஆறுமுகம் நல்லதாகப் பெரிதாகப் பார்த்து ஒரு டஜன் பழத்தை எடுத்து ஒரு கவருக்குள்இட்டுத் தந்தான். ''இரண்டரை ரூபாய்'' என்று விலையைச் சொல்லிப் பணத்தைப் பெற்றுக் கொண்டான்.

தந்தையும் மகனும் வீடு நோக்கி நடந்தார்கள். ''கணேஷ்! இனிமேல் நீ இந்தத் தெரு வழியே ஸ்கூல் போகலாம். எனக்கு ஆட்சேபணை இல்லை!'' என்றார்.

''அப்பா! இப்போதாவது விவரமாகச் சொல்லக் கூடாதா?''

''சரி, கேள்! சுமார் இருபது வருஷங்களுக்கு முன் என் அப்பாவிடம் ஒரு வயதான தோட்டக்காரன் இருந்தான். ஒரு நாள் அவன் தன் ஆறுவயதுப்பேரனை அழைத்து வந்து, ''இவன் தாய் தந்தை இல்லாத அநாதை...உங்கள் வீட்டில் எடுபிடி வேலைக்கு வைத்துக் கொண்டு அன்பாக நடத்துங்கள்!'' என்று வேண்டிக் கொண்டான். என் தந்தையும் சம்மதித்தார். மறுவருடமே, ஏதோ தன் கடமை முடிந்து விட்டது போல், அந்தத் தோட்டக்காரன் இறந்து போனான்.

எடு பிடி வேலைக்கு வந்த சிறுவனை வீட்டில் ஒருவனாகப் பாவித்தார் என் தந்தை. பள்ளிக்கு அனுப்பிப் படிக்க வைத்தார். எட்டாவதுக்கு மேல் அவன் படிக்க விரும்பவில்லை. அந்தப் பையன்தான் ஆறுமுகம். என்னை விட வயதில் பதினெட்டு வயது இளையவன்; ஆனால் ஒரேவீட்டில் என்னோடுவளர்ந்தவன்.''

கணேஷ் கவனமாகக் கேட்டுக் கொண்டே வந்தான்.

''வருடங்கள் பறந்தன. என் தந்தை இறக்கு முன் தம் உயிலில் ஒரு தொகையை ஆறுமுகத்தின் பெயருக்கு எழுதி வைத்தார். அதைக் கொண்டு அவன் சொந்தமாக வியாபாரம் ஆரம்பிக்க நான் ஏற்பாடு செய்யும்படியாக அன்புக் கட்டளை இட்டிருந்தார். அவருக்குச் செய்யும் அஞ்சலியாக நினைத்து அந்தக் கட்டளையை நான் நிறைவேற்றினேன். ஆறுமுகத்தின் இஷ்டப்படியே பழக் கடை ஆரம்பித்துக் கொடுத்தேன்.

''இந்த உதவியை அவன் மறக்கவேயில்லை. மாதா மாதம் கூடை நிறைய் பழங்களை என் வீட்டுக்கு இலவசமாக அனுப்ப அரம்பித்தான். இது எனக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. அவனைக் கூப்பிட்டுக் கண்டித்தேன். அவன் பிறகு, வீட்டுக்குக் கூடைப் பழம் அனுப்பவில்லையே தவிர, உன் அம்மா இந்தப் பக்கம் வந்தால் பழங்களைத் தந்துவிட்டுப் பணம் வாங்க மறுத்தான். பலன்,



அவளும் அவன் கடையில் பழம் வாங்கு வதை நிறுத்திக் கொண்டாள். எங்கே உன்னிடமும் இலவசமாகப் பழங்களைக் கொடுத்து என்னைத் தலை குனிய வைப் பானோ என்ற பயத்தில்தான் நான் அப் படி உன்னிடம் கட்டளையிட்டேன்.''

''இதில் தலைகுனிவு என்ன அப்பா?''

''என் தந்தை அவனுக்கு உதவியிருக் கலாம். அது அவருடைய பொன்னுன மன சைக் காட்டுகிறது. அவர் பிரதி எதிர்பார்த்து உதவ வில்லை. அவன் தன் நன்றியைக் காட்ட விரும்பினுல், சிறிதளவு எப்போ தாவது,விசேஷ நாட்களுக்குப்பழம் தரட்டும். அதில் தவறில்லை. ஆனுல் இப்படியா இல வசமாகக் கூடை கூடையாக்! இது என்னை யும், என் தந்தையின் அன்பையும் அவ மானப்படுத்துவதாகாதா? பிரதி எதிர்பாரா மல் செய்யப்பட்ட உதவியை களங்கப் படுத்தக் கூடாது கணேஷ்! ஆனுல் இப் போது பார்! நான் வாங்கின பழத்துக்கு ஆறுமுகம் சராசரி விலை கேட்டான். பழ வியாபாரம் அவன் ஜீவனம். இதில் இல வசமாகக் கொடுப்பது அவனுக்கு அநீதி, எனக்குத் தலை குனிவு... அவன் வியாபாரம் செழித்து அவன் வசதியோடு வாழ வேண்டு மென்று நான் விரும்ப மாட்டேனு?''

கணேஷ் பதில் சொல்லவில்லை. ஓசியில் பொருள்களைப் பெறுவதையே கெட்டிக்காரத் தனமாக நினைக்கும் மனிதர்களிடையே அவன் தந்தையின் பண்புதான் எத்தனை அழகானது, அபூர்வமானது என்று நினைத்துப் பெருமித மடைந்தான்.

அவசரக்காரி

'உன்னை ஆசைப் படு கிறேன்' என்று சொன்ன பாவத்துக்குத் தன்னை முச் சந்தியில் நிறுத்திச் செருப் பால் அடித்து அவமானப் படுத்திய ஆர்த்தியைப் பழி வாங்கத் துடிக்கிருன் ராஜேஷ். உடனே செருப் புத் தைக்கும் குப்பனைத் தயார் செய்து அறிவுசால் ஆனந்தாய் மாற்றி, மாயை வலை விரித்து, ஆர்த்தியின் மனம் மானம் எல்லாம் பறித்து வஞ்சம் தீர்க்கிருன். ரொம்பப் புதுமையா இல்லை! குடையால் அடித்திருந்தால் குடை ரிப்பேர் செய்பவரை தயார் செய்திருப்பார் வில்லன்.

படத்தோடு மக்கள் எங்கே தம்மை யறியாமல் ஒன்றிவிடப் போகிருர்களே என்று பயந்து டைரக்டர் இடை வேளைக்குப் பின் ஒரு குண்டைத் தூக்கிப் போடு கிருர், ஆர்த்தியின் அண் ணன்தான் ராஜேஷ் என்று! அது எப்படி? (பக்கத்து சீட் டுக்காரருக்கே இல்லாத அக்கறை நமக்கேன்?)

அப்புறம் என்ன, அண்ண னுக்குப் பாசம் பீறிடுகிறது; தங்கைக்குக் காதல் மனம் நோகிறது. குப்பன், சாரி ஆனந்த், தேடப்படுகிருன். அவன் விபத்தில் அடிபட்டு நினைவிழந்து, மறுபடியும் ஞாபகம் பெற அவஸ்தை யில் நமக்கு எல்லாம் மறந்து போகிறது.

எல்லா புது முகங்களும் 'எதுக்கு வீணு எங்களுக்கு அறிமுகம்' என்று சொல்லும் படி வந்து போகிருர்கள்.

தாரை தப்பட்டையுடன் இனியும் ஆயிரம் பாடல் களை (ஒரே மெட்டில்!) போடசங்கர் கணேஷுக்குச் சாமர்த்தியம் இருக்கலாம்; ஆனுல் தாங்கும் சக்தி நமக் கில்லை. மைசூர் முழுவது மான லொக்கேஷன்களும் வித்யாசமாய்ப் பளிச்சிட்ட விஸ்வம் நடராஜின் ஒளிப் பதிவும்தான் 'பொறுத்துக் கொள்ளுங்கள்' என்று நம் மைத் தேற்றும் அம்சங்கள்.

கடனே என்று க்டைசி யில் இறந்து போகிருர்கள் அண்ணனும் தங்கையும். பட மும் நிர்கதியில் விடப்படு கிறது, நம்மைப் போலவே.

—சிந்து-ஜீவா





இதோ ஒரு சிறு கிராமம்

‘வானம் பார்த்த சீமை’ என்று ஒரு செல்லப் பெயர் புதுக்கோட்டைப் பகுதிக்கு உண்டு. கண்மாய்களையும் கிணறுகளையும் நம்ப வேண்டிய பகுதி. எனவே வானம் பொழிந்தால்தான் இங்கு வளம் பொழியும்.

இப்போதைய புதுக்கோட்டை, மாவட்ட அந்தஸ்துப் பெற்றுவிட்டது. ஒரு, சின்னக் கிராமம், அதுவும் புதுக்கோட்டை நகரை ஒட்டிய பகுதியாகப் பார்த்துப் புறப்படுகிறோம்.

அரசந்தம்பட்டி!

திருமயம் வட்டத்துப் பேரையூரைச் சேர்ந்த சின்னஞ் சிறிய கிராமம். வரலாற்றுப் புகழ் பெற்ற வெள்ளாற்றின் தென் கரையில் சுமார் அறுபது வீடுகளுடன் இன்னமும் உறங்கிக் கொண்டிருக்கிற கிராமம்.

அரசந்தம்பட்டியில் வேளாண்மைதான் முக்கிய தொழில் என்கிறார்கள். நெல், கேழ்வரகு பயிர் செய்வார்கள். ஏரியை நம்பியா வேண்டும். ஏரி பெருகினால் ஐந்து மாதம் சமாளிப்பார்கள்.

நாம் போயிருந்த நேரம் சுத்தமான வறட்சி. வெறும் மண்ணைக் குவித்துச் சாலை என்று பெயர் பண்ணி யிருந்தார்கள். தன்னிறைவுத் திட்டம் என்று சொன்னார்கள். ஒரு சின்னத் தூறல் விழுந்தாலும் இந்தச் செம்மண் சாலை காணாமல் போய்விடும்.

அரசந்தம்பட்டியிலிருந்து ஐந்து கி. மீ. தொலைவில் நமனசமுத்திரம் ஆலை. கிராமத்திலிருந்து சுமார் பத்துப் பேர் அதில் வேலை செய்கிறார்கள்.

நாடார்கள், அம்பலக்காரர்கள், வேளாளர்கள் தவிர அரிசனங்களும் இருக்கிறார்கள்.

நாம் ஊருக்குள் நுழைகிறபோதே ஏதோ அரசாங்க அதிகாரிகள் வருகிறார்கள் என்கிற பரபரப்பில் கூடுகிற மக்கள்.

நான் அரசாங்க ஆள் இல்லை. பத்திரிகைக்காரன் என்று அறிமுகம் செய்துகொண்டவுடன் அவர்களுடைய ஆர்வம் குறைகிறது. இருந்தாலும் தங்களுடைய காலம் காலமான குறைகளைச் சொல்கிறார்கள்.

மிராசுதார் இராமையா பிள்ளை. இந்தக் கிராமத்தைப் பற்றிய ஐம்பது வருட கால ''வளர்ச்சி'' இவருக்குத் தெரியும். சுந்தர நாடார். நாற்பது வருட கால நினைவுகள் இவருக்கு உண்டு.

''காமராஜர் காலத்தில் ஏரி முழுவதும் தூர் வாரினார்கள். அப்புறம் கலைஞர் காலத்தில்



ஏரியின் தெற்குப் பகுதியை மட்டும் ஆழப்படுத்திக் கரையை உயர்த்தினர்கள். இப்போது எதுவுமே இல்லே'' என்கிறர், சுந்தர நாடார்.

புதுக்கோட்டை சமஸ்தானம் இருந்த போது இந்த ஏரி முறைப்படி பராமரிக்கப் படுமாம்.

''ஏரியில் தண்ணீர் பெருகினல் இங்கே யாரும் தூங்க முடியாது. கொஞ்சம் அசந் தாலும் கிராமம் வெள்ளாற்றோடு போய் விடும்'' என்கிறர் இராமையா பிள்ளே.

புதுக்கோட்டை இங்கிருந்து 14 கி.மீ. நூற்றுண்டைக் கொண்டாடுகிற மன்னர் கல்லூரி இருக்கிறது. பக்கத்தில் 7 கி.மீ. தொலேவில் நற்சாந்துப்பட்டியில் ஒரு உயர் நிலேப்பள்ளி இருக்கிறது. ஆனுலும் இத்தனே வருஷத்திலும் பட்டப் படிப்புப் பெற்றவர் ஒரே ஒருவர் மட்டும்தான் என்பது வியப் பாகவே இருக்கிறது. இப்போது எம். காம் படித்து வருகிற இந்த மாணவரைப் பார்த் ததன் விளேவோ என்னவோ, இந்த ஆண்டு மேல் நிலேப் பள்ளி வகுப்பில் ஒருவர் வணிக வியல் படித்து வருகிறர்.

மற்றபடி அதிகப்பட்சம் எஸ். எஸ். எல்.சி. படித்தவர்கள்கூட ஒன்றிரண்டுபேர்கள்தான். எஸ். எஸ். எல். சி. படித்த பெண் என்று இங்கே யாரையும் காட்ட முடியாது.

''கள்ளுக் கடை திறக்கணும். அப்பத் தாங்க வேலே கெடைக்கும். கணக்கு எழுதற ஆளிலேருந்து கள் இறக்கறவன் வரைன்னு ஒரு கடைக்குப் பத்து சனம் வேலே பாக்கு முங்க'' என்கிறர் சுந்தர நாடார். அவ ருடைய மனேவி ராமாயி அம்மாளும் இதை எதிரொலிக்கிறர்.

ஆனல் மற்ற பிரிவாருக்கு இது உடன் பாடில்லே. கள்ளுக் கடைகள் கிராமத்தில் அமைதியைக் குலேத்துச் சச்சரவுகளே உண் டாக்கும் என்று அவர்கள் அஞ்சுகிறர்கள்.

நேற்றுவரை கிராமத்தின் எந்த ஒரு பிரச் னேக்கும் வழி காட்டியவர்கள் கணக்கப்பிள்ளே கிர்ராம முன்சீப் போன்றவர்கள்தான். இவர் களின் மூலமே கிராம ஜனங்கள் அதிகாரிகளே அணுகியிருக்கிறர்கள். கிராம அலுவலர்கள் பற்றிய அரசின் முடிவுக்குப் பிறகு இனிமேல் என்ன நடக்கும் என்பதைப் பொறுத் திருந்தே பார்க்க வேண்டும்.

''பட்டுப்பெரியானுக்குப் போனவருஷம் பூசை போடலிங்க... வசதி இல்லே. அதாங்க மழை பெய்யலே...''

இப்படி ஒரு கருத்தும் நம் காதில் விழுகிறது. ஆடி மாதம் கிராம தேவதைக்கு நடைபெறும் இந்தப் பூசைக்கு 'வீட்டு வரி' வசூலித்து நடத்துவார்களாம். இரண்டா யிரம் ரூபாய் செலவாகுமாம்.

கூட்டுறவு இயக்கங்கள் பற்றி இவர்களுக் குத் தெரியவில்லே. எந்த உதவியையும் அர சாங்கமே முன்வந்து செய்து தரவேண்டும் என்கிற மனேபாவம் மேலோங்கி யிருக்கிறது.

''எங்களுக்குப் பால் மாடு வாங்கித் தர ணும். பாலேயும் அவுங்களே வாங்கிக்கிட ணும்'' என்பதுதான் இவர்களுக்குத் தோன் றுகிற மாற்று வழி.

ஒரு பத்துப் பதினேந்து குடும்பங்களில் பனே ஓலேக் கூடைகள் முடைகிறர்கள். கைத்தொழில் என்று சொல்ல இது மட்டும் தான்.

ஒரு அவசரமான பிரசவக் கேஸ் என்றல் 5 கி. மீ. தூரம் புழுதிக் கால்வாயைத் தாண்டிப் பிரதான சாலேக்குப் பெண்களேத் தூக்கிக்கொண்டுதான் போக வேண்டும். மழை பெய்து ஏரிப் பாசனம் தொடங்கி விட்டால் சாலே என்பதே கிடையாது. 5 கி. மீ. தூரமும் அங்கங்கே வெட்டி விடு வார்கள். அப்போது நிலேமையை நினேத்துப் பார்க்கவே முடியவில்லே.

இந்தக் கிராமத்தில் அரசியல் கட்சிகள் வேர் பிடிக்கவில்லே. ஒரு பக்கம் இது ஆறுதல் அளிப்பதாய் இருந்தாலும், கிராமம் வளர்ச்சி பெறுமைக்கு இதுவும் ஒரு காரணமோ என்று கூடத் தோன்றுகிறது.

''நாங்கள்ளாம் சோத்துக் கட்சிங்க... எலெக்சன் சமயத்திலே பெரியவங்க பார்த்து யாருக்கு ஓட்டுப் போடச் சொல்றுங்களோ அதாங்க... இதுவரைக்கும் மந்திரிங்க யாரும் இங்க வந்ததில்லிங்க. எலெக்சன் அப்ப ஓட்டுக் கேட்க யாராச்சும் வர்ரதோட சரி.''

இந்தக் கிராமத்தில் ஒரு மன நிறைவளிக் கிற விஷயமும் உண்டு. நோய்த் தொல்லே என்று எதுவுமே கிடையாதாம். எப்போ தாவது காலரா, அம்மை என்று அறிகுறிகள் கண்டால் நற்சாந்துபட்டி மருத் துவ மனேயிலிருந்து உடனே வந்து தடுப்பு ஊசி போட்டு விடுவார்களாம்.



ஹெல்த் விசிட்டர்கள் மாதம் தவருமல் வந்து தேவையான மருந்து மாத்திரைகள் தந்துவிடுகிருர்களாம்.

எந்த வித அடாவடித்தனமும் இல்லாத அமைதியான கிராமம் என்கிருர் மிராசு ராமையா பிள்ளை.

வறுமை எவ்வளவுதான் தாண்டவமாடி ஞலும், ஒன்று மட்டும் விசுவரூபமெடுத்து வருவது தெரிகிறது. பெண்களைக் கட்டிக் கொடுக்க வேண்டுமாஞல் வெளியூர்களில் தான் மாப்பிள்ளை தேட வேண்டும். பத்துப் பவுன் நகை, மோட்டார் சைக்கிள் என்று கேட்கிருர்கள். அதுவும் ஆறு வருஷமாய்த் தான் இந்த நிலை என்கிருர்கள். விளைவு, கிராமத்தில் திருமணமாகாத பெண்களின் எண்ணிக்கை கூடிக் கொண்டே போகிறது.

நகரங்களைப் பார்த்து வேறு எதைக் கற்றுக் கொள்கிருர்களோ இல்லையோ, இதுபோன்ற தேவையற்ற விஷயங்கள் நன்கு பாடமாகி விடுகின்றன.

இது ஒரு மாதிரிக் கிராமம் இல்லைதான். இதை வைத்து ஒரு மாவட்டத்தை எடை போட முடியாது என்பதும் உண்மை. இருப் பினும், மன்னர் ஆட்சியின்போது வளம் கொழித்த ஒரு பூமி, மக்கள் ஆட்சி முறை யின் நடைமுறைகள் எப்படி இருந்தபோதி லும், இன்னமும் அவலம் சூழ்ந்ததாகவே இருக்கிறது என்பதும் உண்மை.

புதுக்கோட்டை முனிசிபல் எல்லைக்குள் அமைந்த திருவப்பூர்ப் பட்டு நெசவும், பக்கத்துக் கிராமம் செல்லுகுடிக் கம்பள நெசவும் – இப்போது வெறும் கதைகள். நகரங்கள் வளர்ச்சியடையும் அதே நேரத் தில் கிராமங்களும் கிராமத் தொழில்களும் நசித்துப் போக வேண்டும் என்பது தவிர்க்க முடியாததா?

- நகர்வாலா

[நீங்கள் கிராமத்தில் வசிக்கிறீர்களா? அல்லது உங்கள் பூர்வீக கிராமத்துக்குச் சமீபத்தில் சென்று வந்தீர்களா?- அப்படியாஞல் அக்கிராமத்தின் சாத னைகள் அல்லது அதற்கு ஏற்பட்ட சோதனைகள், அது சந்திக்கும் பொருளாதார, சமூகப் பிரச்னைகள், மக்க ளின் துயரங்கள், மகிழ்ச்சிகள், தொழில், பண்பாடு முதலிய பல கோணங்களில் அதனைப்பார்த்து ரசமாக வும் சுருக்கமாகவும் (கல்கியில் ஒன்றரைப் பக்கத்துக் மேற் போகாமல்) எழுதுங்களேன். பிரசுரமாகும் சுவையான கட்டுரைகளுக்குப் பரிசு உண்டு. வசதிப் பட்டால் புகைப்படங்களும் அனுப்பலாம். - ஆசிரியர்]

நேசிக்கிறார்கள். பெண்கள் அதிகம் மாரி யம்மன் கோவில்களுக்குப் போகிறார்கள்.

நாட்டுக் கோட்டை செட்டிமார்கள் தண்டபாணி கோவிலுக்கே அதிகம் போகிறார்கள்.

மாரியம்மன் கோவிலும் தண்டபாணி கோவிலும் ஒரே மாதிரி அங்கே பராமரிக்கப் படுகின்றன.

அந்தக் கோவில்கள் எல்லாவற்றிலும் பேசுவதற்கு அவனை ஏற்பாடு செய்திருந்தார்கள்.

அடுத்து அவன் போன இடம் ஈப்போ.

ஈப்போ நகரினுடைய மேயர், பாராளுமன்ற உறுப்பினர், ஒரு கட்சியினுடைய தலைவர், அந்த ஊர் எம். எல். ஏ. என்ற பெருமைகளையெல்லாம் பெற்ற டத்தோ சீனிவாசகம் அங்கே ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார்.

அவர் கட்டியிருந்த பிரும்மாண்டமான மாளிகையில், மண்டபத்தில் அந்தக் கூட்டம் நடைபெற்றது. ஏராளமான தமிழர்கள் கூடியிருக்க, மண்டபம் நிரம்பி வழிந்தது.

இப்போதெல்லாம் அவனுக்கு வருகிற அழைப்புகள், மதத்தைப் பற்றிப் பேச வேண்டும் என்றுதானே குறிப்பிடுகின்றன. அந்த மதத்தைப் பற்றி அங்கே நீண்ட நேரம் அவன் பேசினான்.

எல்லாரும் மெய் மறந்து கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஏதோ அந்த ஊரிலேயே தான் வாழ்ந்து விடக் கூடாதா என்ற ஆசையும் கூட அவனுக்குத் தோன்றிற்று. அந்தக் கூட்டத்திலே கூட அதை அவன் வெளியிட்டான்.


மலேஷியாவில் மக்கள் எவ்வளவு ஒற்றுமையாக வாழுகிறார்கள்! மூன்று இனங்கள் வாழுகின்றன. சீனர்கள், மலாய்க்காரர்கள் தமிழர்கள். இந்த மூன்றுக்குள்ளேயும் இன பேதமின்றி அரசாங்கம் நடைபெறுகிறது. அரசாங்கம் மூன்றையும் அங்கீகரித்திருக்கின்றது. மூன்று மொழிகளையும் ஒப்புக் கொண்டிருக்கின்றது.

இவ்வளவு நாகரிகமும், பண்பாடும், இவ்வளவு ஒற்றுமையும் வேறு எந்த நாட்டுக்கும் வராது'' என்று அவன் மேடையிலே பேசிய போது, உண்மையிலேயே அங்கு கூடியிருந்த மக்கள், தாங்கள் அப்படிப்பட்ட ஒரு நாட்டில் வாழுகிறோம் என்ற பெருமிதத்தோடு கையொலி எழுப்பினார்கள்.

அடுத்தடுத்துப் பல ஊர்களில் கூட்டங்கள்.

ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்குப் போவதென்றாலே உற்சாகம். காரணம், சாலைகளெல்லாம் ரப்பர் கலந்து போடப் பட்டிருந்தன. அந்தச் சாலையிலே பயணம் செய்வது அவ்வளவு சுகம். நமது ஊர்ச் சாலைகளைப் போல் குண்டும் குழியுமாக எங்கேயும் இல்லை. நடுக் காட்டிலே கூட ஒரு வளைவு இருந்து பாலம் இருக்குமானால் அங்கேயும் விளக்குகள் பொருத்தப்பட்டு வழி காட்டிகள் அமைக்கப்பட்டிருந்தன. சாலைகளை யெல்லாம் அவ்வளவு சுத்தமாகப் பராமரிக்கிறார்கள் மலேஷிய நாட்டிலே.

அந்த நாட்டினுடைய சுற்றுப் பயணம் அவன் கருத்தை விட்டு அகலாது, இன்னும் இருக்கிறது. (வளரும்)



● குறும்புத் தனமாக ஜோக் அடிக்கும் வஸந்த், சாமர்த்தியமான சிந்தனை செய்யும் கணேஷ், பைப்பையும் ஆராய்ச்சியையும் ஒன்றாகச் சுவைக்கும் பேராசிரியர், இனிக்கும் இனியா இவர்கள் அனைவருக்கும் உயிர் கொடுத்தன சுஜாதாவின் அற்புதமான நடையும் மணியம் செல்வன் படங்களும்.

கிணத்துக்கடவு கல்லாபுரம் தங்கராசு

● கதையினைக் குறுகிய காலத்தில் முடித்து விட்ட ''சுஜாதா'' ஒழிக! என்னைப்போன்ற உள்ளங்கள் உங்களை வாழ்த்த வேண்டுமானால் உடனடியாக இதே போல் ஒரு தொடர் கதையினை கல்கியில் தொடருங்கள்!

ஈரோடு-7 செம்மறியன் — ''205''

● ஒரு வேண்டுகோள்: புத்திசாலித்தனம் + நகைச் சுவை சேர்ந்து எழுதப்பட்ட இந்த அற்புதமான நாவலைத் திரைப்படமாக்கிக் கெடுப்பதற்கு இடம் தராதீர்கள்.

சென்னை-49 ஏ. எஸ். பாலகுமார்

● முடித்த விதம் அபத்தம். தமிழ் சினிமாவில் வருவது போல் இறுதியில் போலீஸ் வருவதைத்தான் குறிப்பிடுகிறேன்.

ஒண்டிபுத்தூர் சிந்தாமணி ஹக்கீம்

● என்ன வஸந்த்! கடைசியில் இப்படிச் செய்துவிட்டாயே! இதுவரை சற்றுத் தடுமாறினாலும் சமாளித்து வந்தாய். ஆனால் கடைசி அத்தியாயத்தில் மிகவும் மோசமாக ஆபாசமாக நடந்து கொண்டு விட்டாயே!

சென்னை-61 வி. ஜி. நேசன்

● டியர் வஸந்த், நீங்கள் குண்டடியிலிருந்து தப்ப வேண்டுமே என்று கலங்கி யிருந்தாலும் அதில் தப்பிவிடுவீர்கள் என்ற நம்பிக்கை இருந்தது. ஆனால் எங்கே இனியாவைக் கல்யாணம் செய்துகொண்டு, என்னைப் போன்ற பல காதலிகளைக் கலங்க விடுவீர்களோ என்று பயந்ததற்கு, நல்ல வேளை— அப்படி நிகழவில்லை!

சென்னை-4 ஆர். மோகனா

● நெல்லை மாவட்ட மாணவ மாணவிகளிடையே வேகமாய் இப்போது ஒரு பழக்கம் பரவி வருகிறது. யாராவது மாணவன் ஒருவன் பெண்ணிடம் அறுவை ஜோக்கோடு அசடு வழிந்தால் அவனை ''வஸந்த் வஸந்த்'' என்று கிண்டலிக்கிறார்கள்.

திருநெல்வேலி ச. த. மூர்த்தி

வாசகர் கருத்து

நீலவான் அரங்கில் நிலாவழகி நித்திய நர்த்தனம் புரிகிறாள்.

கரிய பெரிய இருட் போர்வைக்குள்ளும் அவளது களிநடனத்தில் பிரகாசப் புன்னகை குளுமையாய் ஒளிபரப்புகிறது.

மாளிகையின் நிலா முற்றத்தில் படுத்துக் கொண்டு கனத்த சிந்தனையின் பாரம் தாங்காது அலைமோதி ஆழ்ந்து கிடக்கிறார் சோழ சாம்ராஜ்யத்தின் அமைச்சர் திரு நாராயண பட்டர்.

—'கவிகுமுத சந்திரப் பண்டிதர்'...

இது அவரது புலமைக்குக் கிடைத்த விருது.

தமிழிலும் சம்ஸ்கிருதத்திலும் தகுதி மிக்க மாவல்லார்.

இப்பேர்ப்பட்டவருடைய அருமை மகள்— அழகு மகள் — பொன்னனைய பேரழகி — கண்ணனைய செளந்தர்ய லகரி— சொர்ண சுந்தரிஎன்பாள், அவருக்கு ஓர் எரியும் பிரச்னையாகி இருந்தாள். காதல் என்பது எரியும் பிரச்னைதானே?

அதிராஜ சோழன் மூட்டிய காதல் தீயில் சொர்ணசுந்தரி பிரச்னைக்குரிய கேள்விக் குறி.

இந்தக் காதலுக்கு என்ன தீர்வு காண்பது?

''என்ன தீர்வு காண்பது சுந்தரி?''


நிலா முற்றத்தில் ஒளிக் குளியலெடுத்துக் கொண்டு ஓயாது சிந்தனை வயப்பட்ட நாராயணப் பட்டர்தாம் இக்கேள்விக் குறியை நெஞ்சில் கொடுவாளைப் போல எழுப்பிக் கொண்டிருந்தார் என்பதில்லை.

இதோ சோழ யுவராஜன் அதிராஜ சோழனும், சொர்ண சுந்தரியும் நிலவொளிப் போதையில் களவழிக் கேள்விகளை எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

''என்னைப் பொறுத்த மட்டும் கவலைப்பட ஒன்றுமே இல்லை; நான் உங்கள் சம்மதத்துக்கெல்லாம் நம்பிக்கையுடன் ஐக்கியமாகிவிட்டவள். எனது தந்தையார்க்கு இது தெரியும், ஒரு நாராயணப் பட்டரைச் சோழ நாடு இழந்துவிடக் கூடாது.''

சொர்ண சுந்தரியின் சொப்பனக் கண்கள் சுகபாறிய தொனியுடன் பனிக்கின்றன. மேலும் அவளது யாழனைய நாவு அசைகிறது:

''இளவரசே! நான் அந்தணப் பெண் என்பதால்தானே உங்கள் தந்தை அஞ்சுகிறார்? அரசர்களுக்கு இந்த சாஸ்திரம் பொருந்தாது என்று அர்த்த சாஸ்திரம் சொல்லுகிறது''



அதிராஜ சோழன் அர்த்தமுடன் தனது சொர்ணப் பதுமையை நோக்குகிறான்.

''சுந்தரி! சாணக்கிய போதனையைக் கேட்க இங்கே சந்திரகுப்த சாம்ராஜ்யமா நடக்கிறது?''

''சொன்னால் கோபித்துக் கொள்ள மாட்டீர்களே?''

''ம்ம்!''

''இங்கே தமிழருடைய சாம்ராஜ்யமா நடக்கிறது?''

ஓ...குலோத்துங்க சோழ மகா சக்கரவர்த்திகள் தெலுங்கு ரத்தக் கலப்புடையவர் என்பதை இதை விடக் கூராக யாரால் சொல்ல முடியும்?

இளவரசன் அதிராஜ சோழன் கோபித்துக்கொள்ளவில்லை. சத்தியமான காதல் கோபத்தில் குளிப்பதில்லை.

கூ.....கூ....

'நன்றாகக் கேட்டாயடீ!' என்று ஆதரிப்பது போலக் குயில் கூவுகிறது.

காதலர்களின் அப்பட்டமான சமாச்சாரங்களை அருகிலிருந்து ரசிப்பவையே குயில் கூட்டங்கள்....

''புறப்படுவோம் இளவரசே!''

''ம்ஹூம்! நிலா மறையட்டும்.''

''முடிவு?''

''எனக்கு சாம்ராஜ்யம் தேவையில்லை.''

''இது சத்தியம்தானே இளவரசே?''

''சே! என்ன இது? ஏட்டுச் சுவடிக் காதல்கள் கேட்பது போல!''

''நமது காதல் ஏட்டுச் சுவடியாய்விடக் கூடாதல்லவா?''

''சுந்தரி! கலிங்கப் போர் முடியட்டும். அப்பாவின் கவலை நமது மகா சேனாதிபதி கருணாகரத் தொண்டைமான் மீது இருக்கிறது. வெற்றியுடன் திரும்பட்டும். நமது காதலும் வெற்றி பெறும்!''

நிலா மறைகிறது....

அவன் அவளை அணைக்கிறான்.

''தேவையா?''

''ம்ம்!''

எத்தனையோ முறை இயல்பாகிவிட்ட சங்கமம்.

நிஜமான காதலுக்கு இதுவே சத்தியமான அச்சாரங்கள்...

மரபுகளுக்கு ஆத்மா கிடையாது.

காதலுக்குச் சித்தாந்தம் ஏது? வேதாந்தம் ஏது?

சங்கமம் புனிதமாகிறது.

சங்கமமே புனிதத் துறைதானே?

வட கலிங்கப் போரில் வெற்றி கண்ட மிதப்பில் சோழப் பேரரசு கோலாகலத்தில் மூழ்குகிறது.

முதலாம் குலோத்துங்க மகா சக்கரவர்த்திகள் அடைந்த பெருமைக்கு ஈடு ஏது? இணை ஏது?

சாம்ராஜ்யமே குதூகலித்துக் கொண்டிருக்கிறபோது இந்த அதிராஜ சோழன் ஏன் அவலமுடன் உலாவுகிறான்?

பட்டத்தரசி — புவன முழுதுடையாள் — தியாகவல்லி தேவியார் கவனிக்கிறாள்.



முதல் பட்டத்தரசி மதுராந்தகி தேவியார் இறக்கிறபோது இவனைப் பற்றித்தான் அதிக மாகக் கவலைப்பட்டார்கள். ஏழு பிள்ளைகளைப் பெற்ற அந்த மதுராந்தகி மகா தேவியார் ஏழாவது பிள்ளையான இவனைப் பற்றிக் கவலைப்பட்டது....

இவனது பிறப்பியத்தில் (ஜாதகத்தில்) அரியணைப் பாக்கியமில்லை. இப்போது இவனது போக்கு அதனை மெய்ப்பிக்கிறது.

''அதிராஜா! இப்படி வா!''

அவனது கண்களில் படர்ந்த நீர் ஒரு காவியத்தைப் பறைசாட்டுகிறது.

''உன்காதலை நான் ஆதரிக்கிறேனடா...''

''அம்மா!''

இளவரசரது முகம் சுந்தரமாய் மலர்ந்து சொர்ணமாய் மின்னுகிறது.

இதழ்களில் புன்னகைப் பிரவாகம்.

''அதிராஜா! சொர்ண சுந்தரி பட்டத்தரசியாக முடியுமா?'' — சிற்றன்னையாயினும் அவளே தாய். அவள் கேள்வி.

''முதலில் நான் பட்டத்தில் அமர முடியுமா? சொல்லுங்கள் அம்மா!''

புவனமுழுதுடைய தியாக வல்லி தேவியார்க்கு விழிப்பு.

ஓ....இவனுக்கு அந்தப் பிறப்பிய மர்மம் தெரியுமோ?

''உனக்கு யார் சொன்னது?''


''ஒருவர் சொல்ல வேண்டுமா? எனக்கு முன்னால் அறுவர் வரிசை கட்டி நிற்கிறார்கள். அவர்களை மீறி நான் அரசுக் கட்டிலில் அமர வேண்டும். இது நடக்கிற காரியமா தாயே!''

ஆ! இவன் பிறப்பியத்தைப் பற்றிக் கூற வில்லை; முன்னே பிறந்தவர்களைப் பற்றிக் கூறுகிறான்.

''ஏன் குமாரா? எங்கேனும் பிரதிநிதியாக இருந்து ஆளக் கூடாதா?''

சிகரெட் புகைப்பது தீங்கானது என உணர்ந்து அப் பழக்கத்தை விட முயல்பவர், சிகரெட் பிடிக்க வேண்டும் என்கிற உந்துதல் ஏற்படும் போதெல்லாம் தொலைபேசியில் குறிப்பிட்ட எண்ணில் தொடர்பு கொள்ளலாம். மறு முனையிலிருந்து இடையறாது இருமல் சத்தம் கேட்கும்! — அமெரிக்காவில்!

-கே. வி. கோபால்



''அதற்குப் பரம்பரை ரத்தம் அவசி மில்லை; அந்தண ரத்தமே போதும்''

அயர்ந்து போனாள் அரசமாதேவி.

''மகனே! உனது வாதம் எனக்குப் பிடி கிறது. நான் ஒரு வழி சொல்வேன். அத மூலமாகத்தான் நீஅரச ஆதரவுடன்சொர்ண சுந்தரியை மணக்க முடியும். ஒருவிதத்தி அமைச்சர் மகள். ஆயினும் உனது தந்தை ரசனைக்கு அடிமையாகிறவர். ரசனையுள்ள வர்களுக்கு இதயம் இருக்கும். வா, நார யணப் பட்டரைப் போய்ப் பார்ப்போம்.''

அதிராஜ சோழனது நெஞ்சு அதிரசமா இனிக்கிறது.

அபயன் — மனுகுல தீபன்—விருதராசப பயங்கரன் — முதலாம் குலோத்துங்க சோழ மகா சக்கரவர்த்திகளுக்கே வியப்புக் கலந் வேதனையைத் தந்தது அந்தச் செய்தி.

எந்த விதக் காரணமும் இல்லாமல் ஓய்வு வேண்டி எதற்காக அமைச்சர் திரு நாரா யணப்பட்டர் தமது பிறப்பிடமாகிய *தி புவனி நோக்கிக் குடும்பத்துடன் செல்ல வேண்டும்?

சக்கரவர்த்திகளுக்கு இந்தக் காதல் விவ காரம் முற்றுமாய்த் தெரியாது.

கலிங்க வெற்றிக்குப் பிறகு அவருக்குத் திரி புவனத்தையே தர எண்ணி யிருக்கும்போது, அவர் எதையும் பொருட்படுத்தாது போன தன் நோக்கம் என்ன?

ஆறு பௌர்ணமிகள் வானத்தில் அற் புதமாக வட்டமிட்டன.

திரிபுவனத்திலிருந்து அவசர அவசரமாகச் செய்தி வருகிறது.

சோழச் சக்கரவர்த்திகள் செய்தியைப் பார்வையிடுகிறார்.

திருநாராயணப் பட்டரிடமிருந்துதான் செய்தி.

ஏதோ ஒரு காவியம் — தமிழிலும் சம்ஸ்கிருத சுலோகங்களுடனுமாக அவர் எழுதி இருக்கிறார் என்றும், அதன் அரங்கேற்றம் அடுத்த பூரணை தினத்தன்று என்றும், அதற்கு சக்கரவர்த்திகளின் குடும்பம் வருகை தர வேண்டும் என்றும் எழுதியிருந்தார். சக்கரவர்த்திகள் வரவில்லை யென்றால், தாம் இ காறும் பணிபுரிந்த சேவை வீணானது என் குறிப்பிட்டிருந்தார். அந்த அரங்கேற்றத்துக்கு ஏறத்தாழ பன்னீராயிரம் பிராமணப் பண்டிதர்கள் கலந்து கொள்கிறார்கள் என்று குறிப்பிட்டிருந்தார். தலைநகரில் அரங்கேற்றினால் *ஜயங்கொண்டாரின் எதிர்ப்பு ஏற்படும். எனவே எனது பிறந்த மண்ணில் அரங்கேற்றம் என்று குறிப்பிட்டிருந்தது சிந்திக்கக் கூடியதாகவும் வரவேற்கக் கூடியதாகவும் இருந்தது. எனவே அவர் தம் குடும்பத்துடன் புறப்பட ஆயத்தமானார்.

திரிபுவனிக் கிராமமே திரண்டு கோலாகலமாக இனித்துச் சிறக்கிறது.

எங்கு நோக்கினும் புலமை மிக்க பிராமணோத்தமர்கள்.

---

* புதுச்சேரிக்கு அண்மையில் இருப்பது.
* கலிங்கத்துப் பரணி பாடியவர்

சாலை விபத்துக்களைப் பற்றி ஆராய்ச்சி செய்வதற்காக ஒரு கம்ப்யூட்டரை நிறுவினர்கள். ஏகப்பட்ட விபத்துக்களைப் பற்றிய விவரங்களை அதனிடம் கொடுத்



தார்கள். இந்த விபத்துக்களை எப்படித் தவிர்க்கலாம் என்று கேட்டனர். கம்ப்யூட்டர் சொன்னது: ''சாலைகளை நீக்கி விடுங்கள்!''

— ராமுசாமி

சிவன் கோவில் மண்டபம்.

அழகுற அலங்கரிக்கப்பட்டிருந்தது.

சோழ மகா சக்கரவர்த்திகள் குடும்பத்துடன் எழுந்தருளி இருக்கிருர்.

குமாரர்களில் மூத்தவன் ராச ராச சோழ கங்கனும் கடையவன் அதிராஜ சோழனும் சிற்றன்னை-பட்டத்தரசி தியாகவல்லி தேவியாரும் மூத்தவள் பெரிய நாச்சியார் அம்மங்கா தேவியும் வருகை புரிந்திருக்கிருர்கள்,

திரு நாராயணப்பட்டர் இறைவனைத் தொழுது அடுத்த படியாக சக்கரவர்த்திகளை வணங்கிக் காவியத்தை அரங்கேற்றுகிருர்.

அரங்கேறிய நூல்—

'*குலோத்துங்க சோழ சரிதை.'

ஆ! என்ன அற்புதமான காப்பியம்! ஜயங்கொண்டார் எழுதி வரும் கலிங்கத்துப் பரணிக்கு இது ஈடு செய்யுமோ? அல்லது அதனினும் மீறி நிற்குமோ?

சம்ஸ்கிருத மேற்கோள்களைக் கேட்டு, அதன் ஆழம் நிறைந்த வர்ணனைகளைக் கேட்டு உடன் விளக்கும் தமிழ்ப் பாக்களைக் கேட்டு 'ஆகா, ஆகா' என்று பாராட்டாதார் யார்?

ஏதோ காப்பியம் என்று நினைக்க, இது எனது வாழ்க்கைச் சரிதமாக இருக்கிறதே...!

ஜயங்கொண்டார் கலிங்க வெற்றியைப் பாடுகிருர்....

இது குலோத்துங்கனுடையவாழ்க்கையைப் பாடுகிறதே!

அதுவும் தேவ பாஷையுடன் கூடிய சூத்திரங்களுடன்....

குலோத்துங்க சோழ சரிதை முடிகிறது.

ஒருவர் எதிர்க்க வேண்டுமே?

அந்தணர்கள் முறைப்படி அவருக்கு அபிஷேகங்களைச் செய்கிருர்கள்.

திரிபுவனிக்குக் கிடைத்த புகழ்...

சோழ சாம்ராஜ்யத்துக்கே கிடைத்தது போல....

''ஒ.... திருநாராயணப் பட்டரே! பெருமைக்குரியவனுகிருன் இந்தக் குலோத்துங்க சோழன்! எனது முன்னேன் ராச ராச-சோழர்க்கு நாடக ரூபத்தில் சரிதம்! எனக்கோ காப்பிய ரூபத்தில் சரிதம்! இக்கணமே உங்களுக்கு சொர்ணுபிஷேகம் செய்ய ஆணையிடுகிறேன்!''

மெய் சிலிர்த்துக் கூவுகிருர் குலோத்துங்க மகா சக்கரவர்த்திகள்.

பட்டு பீதாம்பரத்துடன் எழுந்து நின்று வணங்கிய திருநாராயணப் பட்டர், ''மகா சக்கரவர்த்திகள் சமூகத்துக்கு ஒரு விண்ணப்பம்! சொர்ணுபிஷேகம் வேண்டி நான் இதனை யாக்கவில்லை'' என்றுர்.

''கைம்மாறு கருதாமல் தான் யாத்து இருக்கிறீர்கள்; நானறிவேன்!''

''இல்லை சக்கரவர்த்திகளே... கைம்மாறு கருதியே இதனை யாத்திருக்கிறேன்!''

சக்கரவர்த்திகள் மட்டுமா அதிர்ந்து நோக்குகிருர்? கூடியிருந்த சகலரும் அவ்விதமாகவே நோக்குகிருர்கள்.

''பட்டரே! எதைக் கருதி இந்தக் காப்பியம்?''

''சொர்ணத்தைக் கருதி!''

''சொர்ணம்?''

''எனது மகள் சொர்ணத்தைக் கருதி!''

''மகளுக்கென்ன? வரன் கிடைத்து விட்டானு? சொல்லுங்கள். அவனுக்கு எனது சோழ சாம்ராஜ்யத்தில் எந்தப் பகுதியைக் கேட்டாலும்வரதட்சிணையாகத்தருகிறேன்!''

''வரதட்சிணையல்ல, மகா சக்கரவர்த்திகளே! 'வரன் தட்சிணை' வேண்டும்! அதுவே நீங்கள்எனக்குச்செய்யும் சொர்ணுபிஷேகம்!''

குலோத்துங்க சோழ மகா சக்கரவர்த்திகளுக்கு முதலில் புரியவில்லை. பிறகுதான் அவருக்குத் தெளிவாய்ப் புரிகிறது.

''யார் அவன்?''

தியாகவல்லி கணீரென்று சொன்னுள்: ''அதிராஜ சோழன்.''

ஒரு கணம் தயக்கம்.

ஒரு மகா காப்பியம்... தனது வாழ்க்கை வரலாறு பாடியவருக்கு...

''தந்தேன் பட்டரே!''

குலோத்துங்கசோழருடைய குரல் ஓங்கி ஒலிக்கிறது.

ஓ......

திரிபுவனியே அதிரும்படி கோஷங்கள்...

அந்த வாழ்த்தொலிகள் அடங்க வெகு நேரம் பிடித்தது.

''பட்டரே! கங்கை கொண்ட சோழபுரத்தில் முதலில் உங்களுக்குச் சொர்ணுபிஷேகம், பிறகு உங்கள் குமாரத்தி சொர்ணுவுக்கு மங்களாபிஷேகம்!''

மீண்டும் வாழ்த்தொலிகள்.

''குலோத்துங்க சோழ சக்கரவர்த்தி!''

''வாழ்க! வாழ்க!''

''மனுகுல தீப சப்தம விஷ்ணு வர்த்தனர்''

''வாழ்க! வாழ்க!''

''இராச நாராயண விருத ராச பயங்கரர்!

''வாழ்க! வாழ்க!''

விண் அதிர்ந்தது.

மண் மகிழ்ந்தது.

---

* Ins 198 of 1919.



அரிப்பும் எரிச்சலும் தரும்
வியர்க்குருத் தொல்லையிலிருந்து
விடுதலை பெறுவீர்!
நைஸில்
உபயோகிப்பீர்-
மிகத்துரித நிவாரணம்
அளிக்கும்
வியர்க்குரு
பவுடர்.
2
பேக்குகளில்—
'ப்ளூ' மற்றும்
'ஸாண்டல்வுட்'
வாங்குவீர் நைஸில்.
விரட்டுவீர்
வியர்க்குருவை.
பால்கம் பவுடரைவிட
குறைந்த விலையில்!
மருந்துக் கலவை
யுள்ள நைஸில்:
1. அதிக வியர்வை
யைத் தவிர்க்கிறது.
2. வியர்வையை
உறிஞ்சுகிறது.
3. துர்நாற்றம் ஏற்
படுத்தும் கிருமி
களை அழிக்கிறது.
4. சருமத்திற்கு இத
மளிக்கிறது.
nycil
PRICKLY HEAT
POWDER
GN-79-PR-TM

அந்தஸ்து எங்கே இருக்கிறது?

எம்.கே.சங்கரன்

மூன்று மணி. உமாவுக்கு ஃபோன் வந்தது.

''ஹலோ....!''

''உமா, பெர்மிஷன் போட்டுட்டு உடனே புறப்பட்டு வா'' — அம்மாவின் குரல்.

''ஏம்மா?''

''அஞ்சு மணிக்கு உன்னைப் பார்க்க மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வரார்ருங்க.''

சுருக்கென்று நெஞ்சில் தைத்தது உமாவுக்கு. போனில் அம்மாவுடன் எப்படி வாதாடுவது?

''எல்லா ஏற்பாடும் செஞ்சு வச்சுட்டோம். நீ இப்பப் புறப்பட்டால் சரியா இருக்கும். சீக்கிரம் வா.''

ரிசீவரை வைத்து விட்டு உமா ஆசனத்தில் அமர்ந்தாள். நெஞ்சு கனத்தது.

''அம்மா, அஸிஸ்டண்ட் மானேஜர்! கூப்பிடுரார்'' ஆபீஸ் பையன் வந்து சொன்னான்.

கதவைத் திறந்து உள்ளே சென்றாள். மேலதிகாரி ஆசனத்தில் சந்திரன். இருபத்தைந்து வயது இளைஞன். பால் வடியும் இனிமையான முகம். அவனைப் பார்க்கக் கூசி உமா தலை கவிழ்ந்தாள்.

''உமா, இன்று உன்னை அம்மாவிடம் இன்ட்ரடியூஸ் பண்ணப் போறேன்.''

''சாரி சார்....'' உமாவின் கண்களிலிருந்து நீர் பொங்கி வழிந்தது.

''ஏன் உமா அழறே?''

அம்மாவிடமிருந்து போன் வந்ததைத் தயக்கத்துடன் சொன்னாள்.

''இதுக்குத்தானா? முதலில் உன் அம்மா ஏற்பாடு செய்த ஃபங்க்ஷனை முடிச்சுட்டு வா''

''அதெப்படி முடியும்? மனசில் ஒண்ணு வச்சிக்கிட்டு....''

''கல்யாணமே ஆன மாதிரி ஏன் கலவரப்படறே? உன் எண்ணத்தைப் பெற்றவங்க கிட்டத் தெரிவிக்கிறதுக்கு இது ஒரு சான்ஸ். பெர்மிஷன் சாங்ஷன் பண்ணிட்டேன். உடனே புறப்பட்டுப் போ.''

உமா வீட்டுக்கு வந்தாள்.

''யார்ட்ட கேட்டுப் பெண் பார்க்க வரச் சொன்னீங்க?'' என்று அம்மாவிடம் வெடித்தாள்.

''பெத்தவங்க நாங்க. உனக்குக் கல்யாணம் முடிச்சு வைக்க உன்னிடமே அனுமதி கேட்கணுமா?''

''நான் படிச்சிருக்கேன். ஆபீஸ்லே வேலை பார்க்கிறேன்...''

''அதனால் நீ விவரம் தெரிஞ்சவ. நாங்கள் ளாம் உன் உரிமைல தலையிடக் கூடாது. அப்படித்தானே சொல்றே?''

''கல்யாணி மணி அஞ்சாகப் போகிறது. மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வந்துடுவாங்க. உமாவுக்குச் சீக்கிரம் டிரஸ் பண்ணி விடு.'' மனைவியை அவசரப்படுத்தினர்.

தந்தையின் எதிர் நின்று பேச உமாவுக்குத் துணிவில்லை. கல்யாணி உமாவைச் சமாதானம் செய்து அழைத்துச் சென்று அவளை அலங்கரித்துத் தயார்ப் படுத்தினாள்.

பெண் பார்க்கும் நிகழ்ச்சி முடிந்தது. பையன் சாதாரண கிளார்க்தான். ஐநூறு ரூபாய் சம்பளம். பையனின் குணம் விசேஷமானது என்று பலர் சிபாரிசு செய்திருந்தனர்.

பையனுக்கு உமாவைப் பிடித்து விட்டது. நகையோ வரதட்சிணையோ இயன்றதைச் செய்யலாம் என்று சொல்லி விட்டான். நாள் பார்த்து முகூர்த்தம் வைப்பதாக உறுதி செய்யப்பட்டது.



''நம்ம அந்தஸ்துக்கு மாப்பிள்ளை குறைவாத் தோணுது'' — கல்யாணி சிறிது குறைப்பட்டாள்.

''அந்தஸ்த்தா? அது எப்படி இருக்கும்?'' என்று சேகர் நக்கலாகக் கேட்டார்.

''கல்யாணி, நம்ம பொண்ணுக்கு வாழ்வு அமைச்சுக் கொடுக்கணும். பையனுக்கு அந்தத் தகுதி இருக்கு. நாம் வசதியா இருந்ததை நினைச்சா நம்ம பெண்ணுக்கு இந்த ஜன்மத்தில் கல்யாணம் செய்துவைக்க முடியாது.''



''முதல்ல உமா மனசு என்னன்னு கேளுங்க. அவ வேறென்னவோ நினைக்கிற மாதிரி தெரியுது...''

சேகர் உமாவிடம் வந்தார். அவள் கண்ணீர் வடிப்பதைக் கண்டு திகைத்து விட்டார்.

''என்ன உமா....''

உமா குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்தாள்.

அவளைப் பார்க்கச் சேகருக்குத் தங்கை அருணாவின் நினைவு வந்தது. அருணா உமாவைப் போலவே இருப்பாள். அன்று அருணா இப்படித்தான் அழுதாள்.

அருணா அவருக்கு ஒரே தங்கை. அவளிடம் எத்தனை அன்பு வைத்திருந்தார்? பருவமடைந்த பெண்கள் வெளிவராத அந்தக் காலத்தில் தங்கையைப் படிக்க வைக்கணும் என்று தாய் தந்தையரிடம் வாதாடி அருணா பி. ஏ. படிக்கக் காரணமா யிருந்தார்.

சுற்று வட்டார மாளிகை வாசிகள், பெரும் தனக்காரர்கள் பலர் அருணாவைப் பெண் கேட்டுப் படை எடுத்துக் கொண்டிருந்தனர். தங்கையின் அதிர்ஷ்டத்தை எண்ணிப் பூரித்துக் கொண்டிருந்தார்.

கல்லூரிப் படிப்பு முடிந்து வரும் தங்கையை வரவேற்க சேகர் ஸ்டேஷனுக்குச் சென்றிருந்தார். அருணாவுடன் சிரித்து அளவளாவியவாறு இறங்கிய அவனைக் கண்டதும் துணுக்குற்றார்.

அவன் சின்னசாமியின் மகன் கணேசன். சேகரின் ரத்தம் கொதித்தது. கணேசனின் தாய் தந்தை மட்டுமல்ல, பாட்டன் முப்பாட்டன் கூட பரம்பரை பரம்பரையாகத் தங்கள் குடும்பத்தினருக்கு ஏவினதைச் செய்யும் கூலிக்காரர்கள். குடியிருக்க வீடு கிடையாது. ஓலைப் பறை குடிசைதான். இன்று கணேசன் காலேஜில் படித்து விட்டதால் தங்களுக்குச் சமமாகி விடுவானா?

''அருணா, நம் அந்தஸ்தென்ன? கூலிக்காரப் பய மகன் கணேசன் கூட நீ வரலாமா?''

''அண்ணா, கணேசனுக்கு உள்ள மதிப்பு பற்றி உனக்குத் தெரியாது. ஸ்டேட்ல பஸ்ட் ஸ்டூடன்ட்! காலேஜ் வட்டாரத்தில் கணேசன்னா போதும் கிரேட், ப்ரிலியண்ட் இண்டலிஜெண்ட்னு பேரெடுத்திருக்கிறார்!''

கணேசனைப் பற்றி அருணா பெரிய லெக்சர் அடித்தாள். அந்த ஒரு நாளோடு அருணா நிற்கவில்லை. கணேசன்தேடி அவன் இருப்பிடத்துக்கே போக ஆரம்பித்தாள்.

நயந்தும் மிரட்டியும் பார்த்தாயிற்று. அருணா அழுது அடம் பிடித்தாள். யாரும் எதிர்பார்க்கவில்லை. அருணா கணேசனுடன் டவுனுக்

குப் போய்ப் பதிவுத் திருமணம் செய்து கொண்டு வந்து நின்றாள்.

''வாச நடையிலே காலை வைக்காதே!''

கைப்பிடித்தவனோடு வீட்டுக்கு வந்த அருணாவைச் சேகர் தெருவிலேயே நிறுத்தி விட்டார்.

தாய் தந்தையர் கூட மனமிளகி அவர்களை ஏற்றுக்கொள்ளத் தயாராயினர். சேகர் ஆத்திரம் தீரவில்லை.

அன்று அழுது அடம் பிடித்த அருணாவின் முகம் உமாவிடம் காணப்பட்டது. கண்ணீர் வடிக்கும் மகளையும் யோசனையில் இருக்கும் கணவனையும் பார்த்த கல்யாணி சேகரைத் தனியாக அழைத்துச் சென்றாள்.

''கல்யாணி, இந்தப் பெண் பிள்ளைகளைக் கண்ணுக்குக் கண்ணாக வளர்த்து அதுக்கு நல்லது செய்யணும்னு நினைக்கிறோம். அதுகள் படுத்தற வேதனையோ... என் தங்கச்சி அருணாவை இழந்த வேதனையே எனக்கு இன்னும் தீரல்ல. உமாவை நினைச்சுப் பயமா இருக்கு.''

''உமாவை நான் விசாரிக்கிறேன். தைரியமா இருங்க.''

கல்யாணி உமாவிடம் பேசிவிட்டு வந்தாள்.

''உமாவோட ஆபீசில் சந்திரன்னுபேராம். அஸிஸ்டன்ட் மானேஜரா இருக்கானாம். உமாவைக் கல்யாணம் செய்துக்கறதா சொல்றானாம்.''

சேகர் அமைதியாகக் கேட்டார்.

''அவ தலையெழுத்தை நாம ஏன் மாத்தணும்? உன் மகளை வரச் சொல்'' என்றார்.

உமா சந்திரனுக்கு போன் செய்தாள்.

''சந்திரன், அப்பா உங்களைப் பார்க்கணும் என்கிறார். உங்க அப்பாவிடம் கல்யாணம் சம்பந்தமாக இன்றைக்கே பேசணும் என்கிறார்.''

''உடனே அழைச்சுட்டு வா. எங்க வீட்டு வாசல்ல உனக்காகக் காத்திட்டிருப்பேன்.'' சந்திரன் பதிலளித்தான்.

தயாரிப்பாளர் : ''நான் எடுத்திருக்கிற படத்தில் ஒரு சீனில் பாருங்க... கதாநாயகி நீச்சல் தொட்டியில் குளிச்சுக்கிட்டிருக்கா... அப்போ ஒருத்தனைப்பார்த்துட்டு டக்குனு எழுந்திருக்கிறா... அப்போ...''

நண்பர் : ''சென்ஸார்காரங்க டப்புனு வெட்டிப் புடறாங்க...''

-குருமூர்த்தி



தந்தையுடன்உமாபோனபோது சொன்ன படியே சந்திரன் காம்பவுண்டுக்கு வெளியே நின்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். இருவரையும் ஆர்வத்தோடு வரவேற்று மாளிகைக்குள் அழைத்துச் சென்றான்.

சந்திரன் தாயை அழைத்து வந்தான். பட்டுப்புடவைசரசரக்கக் கழுத்திலும் கைகளிலும் அணிகலன்கள் நிறைந்து குலுங்கச் செல்வச் சீமாட்டியாக வந்தாள் சந்திரனின் அன்னை.

அவளைப் பார்த்த சேகர் சட்டெனத் தலையைத் தாழ்த்திக் கொண்டார்.

''அண்ணா, நீங்களா...!''

நீண்ட நாள் பிரிவின் பாசம் பொங்கிப் பெருகியது சேகருக்கு. தங்கையுடன் எப்படிப் பேசுவது? சேகர் தத்தளித்தார்.

உமா சொந்த மாமன்மகள். சந்திரனுக்குப் பூரிப்பு!

அருணாவின் கணவன் கணேசன் எங்கே? சேகரின் கண்கள் தேடின.

''கான்பரன்ஸுக்குப் போயிருக்கார். சென்ட்ரல் மினிஸ்டர்ஸ் கலந்துக்கறாங்க. மாலை வந்துடுவார்!'' அருணா பெருமைமிளிரச் சொன்னாள்.

இப்போது சின்னச்சாமியின் மகன் சாதாரண கணேசன் இல்லை. நாடு முழுதும் புகழ் பெற்ற பெரிய பொருளாதார மேதை. டில்லி, கல்கத்தா, பம்பாய் முதலிய நகரங்களில் பேரோடும் புகழோடும் சாதனைகள் புரிந்துவிட்டுத் திரும்பி இருந்தார்.

தேவைக்குமேல் செல்வம் குவிந்துவிட்டது. பெரும் மேதையின் புத்திரன் என்ற செல்வாக்கில் சந்திரனுக்கு இளம் வயதிலேயே உயர் பதவியைப் பெரிய கம்பெனி வலியக் கொடுத்தது.

''அண்ணா, என் புருஷனை நீ குறைச்சு மதிப்பிட்டே. இப்பொழுது நாங்க உன்னைவிட எத்தனையோ மடங்கு உயர்ந்துவிட்டோம்!'' அருணா சொல்லாமல் சொல்வது போலிருந்தது.

முள்ளின் மேல் இருக்கிற வேதனை சேகருக்கு. உமா அத்தையிடம் நெருங்க முடியாத மாதிரி ஒதுங்கி நின்றாள். வந்த காரியம் பேசப் படவில்லையே என்ற தவிப்பு சந்திரனுக்கு.

''புறப்படலாமா உமா?''

அவள் 'சரி' என்றாள்.

''அண்ணா! அடிக்கடி வாங்க.'' அருணா வழி அனுப்பி வைத்தாள்.

வீட்டை விட்டு இறங்கிக் கேட்டை நெருங்கும்போது சந்திரன் ஓடி வந்தான்.

''மாமா, கல்யாண விஷயமாய்க் கேட்காமல் போறீங்களே?''

''உன் அம்மாவும் நானும் பெரும் போராட்டத்தில் பிரிந்தவர்கள். இன்றுதான் சந்திக்கிறோம். பிறகு பேசலாம்.''

சந்திரன் கேட்டோடு நின்று விட்டான். சேகர் உமாவுடன் விரைந்து நடந்தார்.

வீட்டுக்கு வந்ததும் சேகர் அருணாவைச் சந்தித்ததைச் சொன்னார்.

''கல்யாண விஷயமாக் கேட்டீங்களா?'' என்றாள் கல்யாணி.

''நானாக் கேட்க மாட்டேன். கேட்கவும் என்னால் முடியாது.''

''பெண்ணைப் பெத்தவங்க நாம். தன் மானம் பார்த்தால் முடியுமா? நீங்க கேட்டிருந்தால் அருணா சம்மதிச்சிருப்பாள்.''

''அதுதான் இல்லை.'' உமா பளிச்சென்று சொன்னாள்.

''அம்மா, சந்திரன் வீடு தேடி நாங்க ஏன் வந்தோம் என்கிறதை சந்திரனுடைய அம்மா தெரியாமலா இருப்பாங்க? சந்திரன் படற அவசரத்துக்குத் தாயிடம் கண்டிப்பாகச் சொல்லி இருப்பார். கல்யாணம் பத்தி அவங்க மூச்சே விடவில்லை.''

நிச்சலனமாய் உமா சொல்வதைச் சேகர் ஆச்சரியத்துடன் பார்த்தார்.

''ஒருவேளை அருணா அண்ணா கேட்கட்டுமே பதில் சொல்லலாம் என்று இருந்திருக்கலாம். என்னைப் போல் அவளுக்கும் தன் மானம் இருக்காதா? கவலைப்படாதே உமா! நானே என் தங்கையிடம் வலியக் கேட்கிறேன்.''

''அப்பா, நீங்க தலை குனிஞ்சு நான் வாழணுமா? நீங்க கேட்கவே வேண்டாம். நடக்கிறது எதுவானாலும் நடக்கட்டும்.''

மறு நாள் உமா ஆபீசுக்குப் புறப்பட்டு வாசலில் வந்தாள். மோட்டார் பைக்கில் சந்திரன் அதி வேகமாக வந்து இறங்கினான்.

''அப்பா, சந்திரன் வந்திருக்கார்'' — சந்திரனை உமா வீட்டுக்குள் அழைத்து வந்தாள்.

''மாமா, எனக்கும் உமாவுக்கும் இன்றைக்கே கல்யாணம் நடந்தாகணும்.''

படபடப்புடன் வந்த சந்திரனைச் சேகர் உட்கார வைத்தார்.

''ஏன் இவ்வளவு அவசரப்படறே சந்திரா?''

''நேற்று வீட்டில் பெரியசண்டை. உமாவை எடுக்க அப்பா சம்மதிக்க மாட்டேங்கிறார்.''

''காரணம்?''

''எல்லாம் ஸ்டேட்டஸ் பிராப்ளம்தான். சென்ட்ரல் மினிஸ்டர் ஒருவருடைய பெண்ணை எனக்கு ஏற்கனவே பேசி முடிச்சிட்டாராம். அவர் அந்தஸ்துக்கு அது தான் சரிப்படுமாம்.''

''உன் அம்மா என்ன சொல்கிறாள்?''

''அம்மாவும் அப்பாவுக்கு ஒத்துப் பாடுகிறாள். உங்க பழக்க வழக்கங்கள் எங்களுக்கு ஒத்துப் போகாதாம். அகில இந்திய லெவல்ல அப்பா உயர்ந்த பொசிஷன்ல இருக்காராம். அதுக்குத் தகுந்த மாதிரி வாழ்க்கையை அமைச்சுக்கிடணுமாம். உங்களுக்குப் பண உதவி செய்து உமாவைப் பெரிய இடமாப் பார்த்துக் கொடுத்து விடலாம் என்கிறாள்.''

சேகரின் நெஞ்சு கடித்தது. தாங்கிக் கொள்ளச் சிரமப்பட்டார்.

''சந்திரா, ஒரு காலத்தில் அந்தஸ்து வெறியில் தலை கால் தெரியாமல் குதிச்சவன் நான். வீடு வாசல் போய், பிழைப்புக்காக ஊர் ஊரா அலைந்ததில் அந்தஸ்து ஒண்ணு இருக்கிறதை மறந்தே போய் விட்டேன். என் தங்கை அருணா? அந்தஸ்தைத் துச்சமா மதிச்சு வசதி நிறைஞ்ச குடும்பத்தை உதறிக் கணேசனைக் கைப்பிடித்தாள். இன்றைய நிலையில் அவளே அந்தக் கொள்கையில் மாறி அந்தஸ்தை அனுசரிக்க ஆரம்பித்துவிட்டாள். அவளுக்கு முன் நான் அந்தஸ்து குறைந்தவனாகி விட்டேன். அந்தஸ்துன்னா என்ன அர்த்தம் என்கிறதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.''

''மாமா, அவங்கவங்க நிலைமைக்குத் தக்கபடி அந்தஸ்துக்கு அர்த்தம் கற்பிச்சிக்கிடறாங்க. எனக்கு அது பற்றிக் கவலை இல்லை. இன்றைக்கே உமாவைக் கல்யாணம் செய்து அவங்க முயற்சியை முறியடிக்கணும். ஏற்பாடு செய்யுங்க மாமா.''

''சந்திரா, நான் அப்படிச் செய்தால் எனக்கும் அருணாவுக்கும் வித்தியாசமில்லாமல்

''உன்னைப்போல் அதிர்ஷ்டசாலி யார் இருக்கிறார்கள்?''

''எதனாலே அப்படிச் சொல்கிறாய்?''

''காதலித்தவளை மணந்து கொண்டிருக்கிறாயே...!''

-பெ. கலாசாமி



போய்விடும். என் பெண்ணைக் கள்ளத் தாலி கட்டி அனுப்பற நிலைமைக்கு என் அந்தஸ்து குறைஞ்சு போயிடல்ல. தயவுசெய்து நீ போய்விடு.''

''உமாவை ஏமாத்திடக் கூடாது என்கிறதுக்காக வந்தேன். நீங்களே உதறும்போது எனக்கென்ன? மந்திரி மகளைக் கல்யாணம் முடிக்கத் தீர்மானிச்சுட்டேன். கல்யாணத்துக்கு வந்து சேருங்க.''

சந்திரன் விருட்டென்று போய்விட்டான்.

கண்ணீரோடு அருகில் வந்தாள் உமா.

''உமா, உன்னை ஏமாத்திட்டேனா?''

''இல்லை அப்பா. நீங்க சொன்னதுதான் சரி. நம்மைக் குறைத்து மதிக்கிறவங்க குடும்பத்தில்வாழநான்குறைந்தவள் இல்லை.''

உமா தனக்கும் அந்தஸ்து உண்டு என்பதைத் தந்தையிடம் உறுதிப் படுத்தினாள்.





சரிதா ஏன் தயங்கினார்?

ஒவ்வொரு முறையும் ''பழைய வீட்டுக்குப் போகலாமா?'' என்று நான் சரிதாவைக் கேட்கும்பொழுது சரிதா தன் அம்மாவைத் தயக்கத்துடன் பார்க்க. அம்மா என்னிடம் ''போலாம் சார், கொஞ்சம் பொறுத்துக் குங்க'' என்பார். எனக்கு ஒன்றுமே புரிய வில்லை. 'ஏன் இப்படி நடந்து கொள்ளு கிறார்கள்?'

ஒரு வழியாக அவர்களைச் சேத்துப்பட்டி லுள்ள அவர்களது பழைய வீட்டுக்கு அழைத் துச் சென்றேன். உள்ளே நுழைந்ததும், சரி தாவின் தாயாருடைய கண்கள் கலங்கிவிட் டன. ''என்ன ஆயிற்று உங்களுக்கு?'' என்று நான் அனுதாபத்தோடு விசாரித் தேன்.

''இதுக்குத்தாங்க சலன், நான் வரமாட் டேன்னு சொல்லித் தள்ளிப் போட்டுக்கிட்டே போனேன், அப்போ நாங்க பைனான்ஸ் கம்பெனி வைத்திருந்தோம். படம் எடுத் தோம். அப்புறம் எல்லாமே மாறிட்டுத்து. பைனான்ஸ் கம்பெனி நஷ்டத்தைக் கொடுக்க ஏகப் பிரச்னைகள். இன்று சரிதா திரை உலக நட்சத்திரமாக வளர்ந்து விட்ட போதிலும் கூட நாங்கள் இவ்வளவு பெரிய வீட்டில் இல்லை என்பது உங்களுக்குத் தெரியும். பழைய நினைவுகள் துயரத்தை ஏற்படுத்தாமலிருக் கத் தான் இங்கு வருவதையே தவிர்க்க முயன் றேன்'' என்றார் சரிதாவின் தாயார்.

இவற்றை யெல்லாம் காதில் போட்டுக் கொள்ளாமல் துள்ளல் நடையுடன் நேரே சமையல் அறைக்குச் சென்றார் சரிதா. ''அப் பொழுது எனக்கு ஏழு வயசிருக்கும் சலன் சார்! இந்த மேடை அளவுக்குக் கூட வளர்ந் திருக்க மாட்டேன். நான், என் தங்கை, என் தம்பி மூணு பேரும் அடிச்ச லூட்டி இருக்கே கொஞ்ச நஞ்சமில்லை! பண்டிகை நாட்கள் வந்தால் ஒரே குஷி. ஸ்கூல் லீவு. அம்மா பட்சணங்கள் செய்வாங்க. கேச ரியோ, மைசூர் பாகோ கிளறி இது மேலே தான் வைப்பாங்க, ஆறணும்கிறதுக்காக. நான் உடனே தங்கையையோ, தம்பியையோ விட்டு அம்மாவைக் கூப்பிடச் சொல்வேன். ''அம்மா'' என்று அவர்கள் அலறினதுதான் தாமதம். அம்மா என்னவோ ஏதோன்னு சமையலறையை விட்டு வெளியே போவாங்க. இங்கே கொஞ்சம் கேசரி உள்ளே போகும். கத்திய வாய்களுக்கும் கையிலே கொஞ்சம் பங்கு எடுத்துப்பேன்! இப்படி இருந்த காலம் எவ்வளவு இனிமையா இருந்துச்சு!

''நாங்க குழந்தைகள் எல்லோரும் ஒண்ணு இந்த பெட்ரூம்லேதான் படுத்துப்போம். என் தங்கை விஜயாவை ஏப்ரல் ஃபூல் செஞ்ச ஞாபகம் இப்பக்கூடப் பசுமையா இருக்கு! பாக்கி நாட்களிலே ஏமாந்தாலும் ஏப்ரல் முதல் தேதி அன்று மாத்திரம் அவள் யாரிடமும் ஏமாற மாட்டாள். முன்னெச் சரிக்கையோடு இருப்பாள். அவளை ஏ.எஃப். ஆக்கணும்னு நான் முடிவு செஞ்சேன். ராத் திரி திடீர்னு முழிப்புக் குடுத்தது. முதல் தேதி காலை மணி நாலு. விஜயாவை எழுப்பி னேன். ''யாரோ கதவைத் தட்டற மாதிரி இல்லே?'' என்றேன். கூர்ந்து அவளும் கவ னிச்சா. ''டக்டக் டக்''னு சத்தம் கேட்டது. இவளுக்குப் பயம் வந்துருச்சு. திரும்ப ஐந்து நிமிஷத்துக்குப் பிறகு அதே சத்தம். பயந் துண்டே பெட்ரூம் கதவைத் திறக்கவும், அந்தச் சத்தம் பாதியிலே நிக்கவும் சரியா இருந்தது. ''அம்மாவைக் கூப்பிடலாமாடீ?'' இது விஜயாவின் கேள்வி. ''இல்லே இல்லே! நீ படுத்துக்க, நான் பார்த்துக்கறேன்'' என்று பெரிய மனுஷி போல் நான் சொன்னேன். ''ஏப்ரல் ஃபூல்'' என்று கத்திக் கொண்டே தம்பி உள்ளே ஓடிவந்தான்!

✱ மொட்டை மாடிக்குப் போவோமா..



...ாருளா தாரம் பார்த்தியா?
...வேகமா
முன்னேறுது?
ஆர்.வி



அடாடா!
பிரமாதமா மார்க்
வாங்கி
இருக்கீங்களே!
மார்க் குறைவா இருந்தாலும் கோவிச்சிக்க மாட்டீங்கன்னு நம்பறேம்!
மாநில இ. காங்கிரஸ் முதல்வர்கள்
இந்திரா
பிராகிரஸ் ரிப்போர்ட்
0/100



மூணு பேர்ல
இரண்டு பேர்
மாட்டிக்கிறலே
போதும்
இந்திரா
ரே கமிஷன்
ஊழல் ஆட்சி
அதிமுக
ரூபாய்
ரூபாய்
கேரளா கூட்டணி
திமுக
ரூபாய்

இரவல் உறவுகள்

ராஜேஷ்குமார்

டாக்டரம்மாள் இருண்டுபோன முகத்தோடு அறையை விட்டு வெளியே வரும்போதே எனக்குப் புரிந்து விட்டது. இந்தத் தடவையும் அந்தப் பிஞ்சு கருகிவிட்டது என்கிற விஷயம்.

''ஸாரி மிஸ்டர் பசுபதி... இந்தத் தடவையும் சின்ன உயிரை என்னால் காப்பாற்ற முடியவில்லை.'' நிஜமான சோகத்தோடு சொன்னாள் டாக்டரம்மாள்.

நான் வறண்ட புன்னகையொன்றை இதழ்களில் தவழ விட்டேன்.

''பரவாயில்லை டாக்டர். அடுத்த தடவையாவது அந்தப் பாக்கியத்தை ஆண்டவன் எனக்குத் தரட்டும்...''

டாக்டரம்மாள் நான் சொன்னதைக் கேட்டுப் பெருமூச்சொன்றை விட்டாள்.

''ஸாரி மிஸ்டர் பசுபதி! இந்த ஜென்மத்தில் உங்களுக்கு அந்தப் பாக்கியம் இல்லை''

''டாக்டர்!'' — நான் ஏறக் குறைய அலறினேன்.

டாக்டரம்மாள் மெல்லிய குரலில் சொன்னாள்: ''உங்க மனைவியின் கர்ப்பப் பை இந்தப் பிரசவத்தோடு மூன்று தடவை குழந்தையைத் தாங்கியிருக்கிறது. எல்லாமே இறந்து பிறந்த குழந்தைகள். அதனாலே கர்ப்பப் பை சேதமாகியிருக்கு. அதை மருந்தாலே சரிப்படுத்தணும். அப்படிச் சரிப்படுத்தினாலும் கூட கர்ப்பம் ஆகாம இருக்கிறது நல்லது. மீறி ஆனா பிரசவ நேரத்தின்போது பெரிய உயிரா? சின்ன உயிரா என்ற மரணப் போராட்டம் வந்துடும்... பி காஷியஸ்!''

டாக்டரம்மாள் சொல்லிவிட்டுத் தன் அறையை நோக்கி நடந்தாள்.

நான் திக்பிரமை பிடித்து நின்றேன்.

எவ்வளவு நேரம்?

தெரியவில்லை.

யாரோ என் தோளைத் தொட்டார்கள். திரும்பினேன்.

தோளில் துண்டு அணிந்த அந்த நடுத்தர வயது மனிதர் நின்றிருந்தார். நான் அவரை முன் பின் பார்த்ததுகூட இல்லை. அவர் மெதுவான குரலில் கேட்டார்:

''குழந்தை தவறிடிச்சு போலிருக்கே?''

'ஆமாம்' என்கிற பாவனையில் தலையசைத்தேன்.

''டாக்டரம்மா சொன்னாங்க... உங்களைப் பத்தின எல்லா விவரமும் சொன்னாங்க. உங்களுக்குப் பிறக்கிற குழந்தைங்க எல்லா இறந்து பிறக்கிறதாகவும், இனிமே உங் மனைவி கர்ப்பம் தரிக்கிறது ஆபத்துன்னு சொன்னாங்க....''

நான் அவர் பேசுவதையே பார்த்து கொண்டிருந்தேன். யார் இந்த மனிதர்? எதற்காக இவ்வளவு பரிவாய் விசாரிக்கிறார்? எனக்குப் புரியவில்லை.

''உங்க மனக் குறையைத் தீர்த்து வைக்கிறதுக்காக வந்தேன்.'' — அவர் மெல்ல புன்னகைத்தார். அதில் கனமான சோகம் தெறிப்பதை நான் கவனிக்கத் தவறவில்லை.

''என்னோட மனக் குறையை நீங்க தீர்த்து வைக்கிறீங்களா? புரியலியே!''

''எம் பேரு தனகோடி. போத்தனூர்ல தான் குடியிருக்கேன்... மூணு நாளைக்கு முன்னாடி என்னோட மனைவியை இந்தக் க்ளினிக்குக்குத்தான் பிரசவத்துக்குக் கூட்டி வந்தேன். சுகப் பிரசவந்தான். பெண் குழந்தை பிறந்தது. ஆனா திடீர்னு என்னோட மனைவிக்கு பிட்ஸ் அட்டாக் ஆகி சீரியஸ் ஆ விட்டது. ரெண்டு நாளா டாக்டருங்க ரொம்பவும் முயற்சி பண்ணினாங்க. அவளைக் காப்பாத்தறதுக்கு. ஆனா முடியல்லே... நேத்தைக்கு மத்தியானம் அவ கண்ணை மூடிட்டா''



நான் அதிர்ந்தேன். ஒன்றும் பேசத் தோன்றாமல் அவர் முகத்தையே பார்த்தேன்.

கண்களில் துளிர்த்த நீரை மேல் துண்டால் ஒற்றிக் கொண்டே பேசத் தொடங்கினார்.

''நேத்தைக்கு மத்தியானத்திலிருந்தே அந்தக் குழந்தையை என்னால சமாளிக்க முடியல்ல... எனக்குச் சொந்த பந்தம் யாரும் கிடையாது. அவ வழியிலேயும் யாரும் கிடையாது. அதனால குழந்தையை யார் கிட்ட ஒப்படைக்கிறதுன்னும் எனக்குத் தெரியல்ல. குழந்தைங்க இல்லாத நீங்க என்னோட குழந்தையை ஏத்துக்கிட்டா எம் மனசுக்கு நிம்மதியா இருக்கும்...''

நான் சந்தோஷத்தில் தத்தளித்தேன்.

அவர் என் கைகளைப் பற்றிக் கொண்டார்.
''டாக்டரம்மாவோட பேசி ஒரு முடிவு டுத்த பின்னுடித்தான் உங்க கிட்ட சொல் றன். குழந்தையை எடுத்து நீங்க வளர்க்க ரம்பிச்ச பின்னுடிஉங்க வாழ்க்கையில நான் றுக்கிட மாட்டேன். ஏன்னு ஆபீஸ்ல ாற்றல் வாங்கிக்கிட்டு கல்கத்தா பக்கம் போயிடப் போறேன். இந்த ஊர்ப் பக்கம் ான் திரும்பவே மாட்டேன்....''

அவர் உறுதியான குரலில் சொன்னர்.

''குழந்தை எங்கேங்க?'' — நான் ஆர்வ மாகக் கேட்டேன்.

''வாங்க காட்றேன்...'' — அவர் உள்ளே அழைத்துக் கொண்டு போனர். ஏழாம் நெம் பர் தொட்டிலில் உறங்கிக் கொண்டிருந்த குழந்தையைக் காட்டினர்.

குழந்தை தூங்கிக் கொண்டிருந்தது. நல்ல சிவப்பு. தலை நிறைய கருகருவென்று முடி. இரண்டு பக்கங்களிலும் இரண்டு ரோஜாக் களை வைத்தது போன்ற கன்னங்கள். சிமிழ் போன்ற உதடுகள்.

குழந்தையை வாரி எடுத்தேன். அப்பப்பா என்ன இதமான பாரம்!

முகத்தைச் சுளித்துச் சிணுங்கியது குழந்தை.

''ஒரு சின்ன வேண்டுகோள்!'' என்றுர் அவர்.

''என்ன?''

''குழந்தைக்கு 'அம்பிகா'ன்னு பெயர் வையுங்கள். ஏன்னு அம்பிகா என்னேட மனைவி பேர்.''

நான் நீர் நிறைந்த கண்களோடு தலை யாட்ட—

அவரும்நீரால் கனத்த விழிகளைத் துடைத்த படி குழந்தையின் கன்னங்களை வருடிவிட்டு அறையை விட்டு வெளியேறினர்.

இதுவரை நீங்கள் படித்தது பதினறு வருடங்களுக்கு முந்தின நிகழ்ச்சி.

இன்றைக்கு?

அம்பிகாவைப் 'பெண் பார்க்க' வரு கிருர்கள்.

மாப்பிள்ளைப் பையனுக்கு ரயில்வேயில் உத்தியோகம். பெற்றவர்களுக்கு இரண்டா வது பையன். பார்க்க லட்சணமாகவும் இருப்பதாகப் புரோக்கர் சொல்லியிருந்தார். பேரும் அழகான பேர் — மது.

மாலை நான்கு மணிக்கு அவர்கள் வருவ தாக ஏற்பாடு.

சொன்ன படியே வந்தார்கள். பவ்ய மாய் வரவேற் றேன்.



மாப்பிள்ளைக்கு அப்பா ஆஜானுபாகுவாய் அங்கவஸ்திரம் தோளில் புரள ஒரு ஜமீன தாரின் தோரணையோடு வந்தார். மாப்பிள் ளைக்கு அம்மா மகாலட்சுமியாய் இருந்தார்: மாப்பிள்ளைப் பையன் தளதளவென்று ஊட்டி ப்ளம்ஸ் பழம் மாதிரி இருந்தான்.

என் மனசுக்குள் ஓர் உதைப்பு.

அம்பிகாவின் பூர்வீகத்தைப் பற்றி இவர் களிடம் சொல்லலாமா வேண்டாமா? சொன் ஞல் அதை எப்படி ஏற்று ஜீரணம் செய்து கொள்வார்கள்? ஆஸ்பத்திரியில் அநாதை யாய்க் கிடந்த பெண்ணை எடுத்து வளர்த்து எங்கள் தலையிலா கட்டப் பார்த்தீர்கள் என்று சண்டைக்கு வந்தால்?

'வேண்டாம்.. சொல்லாதே' என்றது மனம்.

ரவா கேசரியையும் வெங்காய பஜ்ஜியை யும் ரசித்துச்சாப்பிட்டார் மாப்பிள்ளைக்கு அப்பா. அம்பிகாவிடம் சகஜமாகப் பேசினுர். சிரிக்கச் சிரிக்கப் பேசினுர். காப்பி ஒன்றரை டம்ளராய்க் கேட்டு வாங்கிச் சாப்பிட்டார்.

நான் முள்ளின் மேல் உட்கார்ந்தமாதிரி அவஸ்தையோடு நெளிந்தேன். பார்ப்ப தற்கு நல்லவராய் இருக்கிருர். உண்மையைச் சொல்லிவிடலாமா?

''வேண்டாம்... சொல்லாதே!'' — எச் சரித்தது மனம்.

''எங்களுக்குப் பொண்ணு ரொம்பவும் பிடித்தம். மத்த விஷயங்களைப் பேசிடலாமா சம்பந்தி'' — என் கையைப் பற்றிக்கொண் டார் மாப்பிள்ளையின் அப்பா.

நான் கஷ்டப்பட்டுப் புன்னகைத்தேன்.

அவர் என் முகத்தைக் கூர்ந்து பார்த்து விட்டார். சாமர்த்தியக்காரர்!

''ஏன் என்னவோ மாதிரி இருக்கீங்க?''

நான் நெற்றியில் அரும்பிய வியர்வையைத் துண்டால் ஒற்றிக் கொண்டே சொன்னேன்:

''ஒண்ணுமில்லே. உங்க கிட்ட தனியாக் கொஞ்சம் பேசணும்!''

''தனியாவா?''

''ஆமாம்.''

''எதைப் பத்தி?'' என்று கேட்ட மாப் பிள்ளையின் அப்பா சட்டென்று முகம் மாறிய வராய், ''ஓ! அதைப் பத்தியா? நானே உங்ககிட்டப் பேசலாம்னு இருந்தேன்'' என்ருர்.

நான் திடுக்கிட்டுப் போய் அவரைப் பார்த்தேன்.

அவர் புன்னகைத்தபடி என் கையைப் பற்றினுர்.

''இப்படிக் கொஞ்சம் வெளியே வாங்க பேசலாம்....''

வாசல் தாண்டி மல்லிகைப் பந்தலுக்குக் கீழே வந்து நின்று கொண்டோம்.

அவர் குரல் தழுதழுக்கப் பேச ஆரம்பித் தார். ''இந்த விஷயத்தை நியாயப்படி நாங்க புரோக்கர் மூலமாச் சொல்லியிருக் கணும். உங்க கிட்ட நேரிலேயே சொல்லிட லாம்னு என்னோட மனைவி அபிப்ராயப் பட்டா. அதனுல்தான் இப்போ சொல்றேன். என்னிக்குமே இந்தப் பையன் மதுவை நாங்க அந்நியமா நினைத்ததே யில்லே. என் னோட முதல் பையனுக்கு என்னென்ன உரிமை இருக்கோ அத்தனை உரிமையும் இவ னுக்கும் இருக்கு. இருபத்தஞ்சு வருஷத்துக்கு முன்னடி எங்க வீட்டுத் திண்ணையிலே பத் னஞ்சு நாள் குழந்தையா யிருந்த மதுவை எவளோ ஒருத்தி போட்டுட்டுப் போயிட்டா. 'வறட் வறட்'டுன்னு கத்தற குழந்தையோட சத்தம் கேட்டு வந்து பார்த்தோம். சொர்ண விக்கிரகம் மாதிரி இருந்த குழந்தையைப் பார்த்துத் திகைச்சுப் போனேம். போலீஸ்ல சொல்லிக் குழந்தையோட தாயைக் கண்டு பிடிக்க முயற்சி செஞ்சோம். முடியல்ல. குழந்தையை அநாதை விடுதியில் சேர்க்க வும் மனசு வரல்லே. நாங்களே வளர்க்க ஆரம்பிச்சோம். இதுநாள் வரைக்கும் மது வோட மனசுல தான் ஒரு அநாதைங்கிற உணர்வு ஏற்பட்டு விடாதபடி நடந்து வர் ருேம். தயவு செஞ்சு இந்த அற்பக் கார ணத்தை ஒரு பொருட்டா நினைச்சுக்கிட்டு உங்க மகளைக் கொடுக்க மறுத்திடாதீங்க... அவன் ரொம்பவும் மனசு உடைஞ்சு போயிடு வான்... ப்ளீஸ்!''

அவர் என் கைகளைப் பற்றிக் கொண்டு கெஞ்சக் கெஞ்ச—

எனக்கு அழுவதா சிரிப்பதா என்று புரி யாமல் திணறினேன்.



''இந்தச் சூட்கேஸை ஸ்டேஷனுக்கு வெளியே கொண்டுபோக எவ்வளவு கேக்க றேப்பா?''

''நாலு ரூபாய் கொடு சாமி!''

''பார்த்தியா கமலா! நாலு ரூபாய் கேக்கு ருன். நான் ஒண்ணரை ரூபாய்தானே கேட் டேன். குடுத்தீன்னு நானே வெளியே கொண்டுவந்து வச்சுடுறேன்!''

- அ. இராமதாஸ்




மன்மதன்:

இவன் காதற் கடவுள். இவனுக்கு காமன், காமவேள், வேனிலான், மதனன், மாறன், அருங்கன் முதலிய 33 பெயர்கள் உள. இவன் திருமாலின் மானச புத்திரன். இவனுக்கு தென்றல் — தேர்; கிளி — குதிரை; இருள் — யானை; தாழை மடல் — வாள்; கரும்பு — வில்; சுரும்பு — நாண்; தாமரை, மாம்பூ, அசோகு, முல்லை, நீலோற்பலம் ஐந்து மலர்களும் அஸ்திரங்கள். வலது கைக்கு மேலே காணப்படும் ஐந்து மலர்களும் பஞ்ச பாணங்கள் எனப் பெறும். சிவபிரானால் எரியுண்டு உருவிலியான இவன் மக்கள் கண்ணுக்குப் புலப்பட மாட்டான். ஆனால் ரதியின் கண்களுக்கு மட்டும் புலப்படுவான். ஆகவேதான் ரதிக்கு எதிரில் இவனைச் சித்திரிக்கும் மரபு ஏற்பட்டுள்ளது. இவனை கிரேக்கர் ஈரோஸ் (EROS) என்பர்; ரோமானியர் க்யூபிட் (CUPID) என்பர்.

நமது முன்னோர்கள் நமக்குப் பரம்பரைச் சொத்தாக அளித்துவிட்டுச் சென்றுள்ளது இந்த கலைப் பொக்கிஷங்கள். இன்றைய மதிப்பீட்டில் இச் சிற்பங்கள் பல கோடி ரூபாய்க்குச் சமம். இந்த அரிய பொக்கிஷத்தைக் கட்டிக் காப்பாற்றிப் போற்றி, வரும் தலைமுறையினருக்கு அளிப்பது நம் கடமை; நமது பண்பு.

தலைமுறை தலைமுறையாக வந்த கலைப் படைப்பின் அடிப்படை தூய்மை என்னும் பக்தியும், நேர்மை என்னும் சக்தியும்தான்! அந்த அடிச்சுவட்டைப் பின்பற்றுவது நமது லக்ஷ்மி மில்ஸ். ''செய்யும் தொழிலே தெய்வம்; அதில் நேர்மையே நமது செல்வம்'' என்ற குறிக்கோளுடன் மக்களுக்குச் சேவை புரிவதையே தலையாய கடமையாகக் கொண்டு விளங்குவது நமது லக்ஷ்மி மில்ஸ்!

லக்ஷ்மி
மில்ஸ்
கம்பெனி லிமிடெட்
கோயம்புத்தூர்



ஆசைக்கு வெட்கம் உண்டு

அரவிந்தன்

'தர்மசங்கடம் — தர்ம சங்கடம்' என்கிருர்களே அதன் சரியான அர்த்தம் தெரியாதவர்கள் அப்போது தாமுவைப் பார்த்தால் போதும்! உண்மையில் அவனுக்கு அன்றைக்கு ஏற்பட்டதற்குப் பெயர்தான் ''தர்மசங்கடமான நிலே!''

தாமு — ஓர் அழகான இருபத்தேழு வயது வாலிபன். பி.எஸ்.சி. பட்டதாரி. பிளாஸ்டிக் தட்டுகள், பேஸின்கள், குடங்கள், தயாரிக்கும் ஒரு சேட் கம்பெனியில் அவன்தான் ஆல் இன் ஆல்! ''ஸ்வஸ்திக் என்டர்பிரைஸர்ஸ்'' என்று இரண்டரை அடிக்கு முக்கால் அடி உயரத்தில் ஜே. ஸி. ரோடு முனேயில் ஒரு போர்டு தொங்கும்.

'சேட்' ரொம்ப அழுத்தக்காரன்.

மூணில் ரெண்டு கறுப்பு!

வெளுப்பிலேயே தினசரி பதின்மூன்று பதினுலு லட்சம் வியாபாரம் பதிவாகும்.

தாமு அங்கே வேலேக்குச் சேர்ந்த புதிதில் ரொம்பத்தான் நியாய உணர்வுக்கு மதிப்புக் கொடுக்கிறவனுகவும் உண்மையான பாரத புத்திரனுக இருக்க வேண்டும் என்கிற ஆசை உடையவனுகவும் இருந்தான். சேட்டின் கருப்பு பிஸினஸ் ஆரம்பத்தில் அவனுக்கு எரிச்சலாகவே இருந்தது.

பாவி — இப்படி அரசாங்கத்தையும் அதிகாரிகளேயும் ஏமாத்துகிருயே நீ உருப்படுவாயா? குஜராத்தில் இருக்கும் உன் ஒரே மகள் என்னேப் போல ஒரு 'அன்றுடம் காய்ச்சி'யை இழுத்துக் கொண்டு ஓடிவிடப் போகிருள் பார்! யாருக்காக இப்படி பொய்யும் புனேசுருட்டும் செய்து சொத்துச் சேர்க்கிருய்? யாருக்காக அதிகாரிகளேயும் அரசாங்கத்தையும் ஏமாற்றி இந்தச் சொத்தைச் சேர்க்கிருய்?

ஒரு நாள் திடீரென்று 'கொட்டாவி' விட்டாயானுல் உன் வெள்ளி அரைஞாணேக் கூட அறுத்துக் கொண்டுதான் வீட்டை விட்டு உன் பிணத்தை வெளியே அனுப்புவார்கள்.

நூற்றைம்பது ரூபாய் சம்பளம்—

பிச்சைக் காசு—

இன்னும் கொஞ்சம் சேர்த்துத்தான் கொடுத்தால் என்ன? உன் கையில் எந்தத் தேள் வந்து கொட்டிவிடும்?

கோபமும் திட்டும் குறைவில்லாமல் இருக்குமே தவிர, சேட்டுக்குக் கனவிலும் துரோகம் நினேத்ததில்லே தாமு.

அதுவும் அந்த வருஷம் தீபாவளிக்குப்பிறகு சேட் புதுக் கணக்குப் போடும்போது தாமுவின் சம்பளத்தை அவனே எதிர்பார்க்காத அளவாக அப்படியே இரட்டிப்பாக்கிய பிறகு தாமு 'சேட்'டுக்கு நிச்சயமாய் பரிபூரண விசுவாசியாகிப் போனுன்.

அங்கே அவன்தான் 'ஆல் இன் ஆல்!'

அவன்தான் மானேஜர்.

'போரா'க்களேக் கைவண்டியில் ஏற்றி வெளியூர்களுக்கு அனுப்ப லாரி புக்கிங் ஆபீஸுக்கு ஓடுகையில் அவன்தான் கிளார்க்!

ஓயாமல் வரும் டெலிபோன்களுக்குப் பதில் சொல்லும் போது அவன் டெலிபோன் ஆபரேட்டர்.

அன்றைய கணக்கு வழக்குகளேச் சரிபார்த்து இரவு பத்தரை மணிக்கு மேல் சேட்டிடம் கணக்கை ஒப்படைத்து விட்டுக் கிளம்பும்போது அவன் கணக்குப்பிள்ளே.

மறுநாள் காலே பத்து மணிக்கு பேங்க் வாசலில் நிற்கும்போது அவன் ஆபீஸ் பையன்!

அங்கு எல்லாம் அவனே!

சேட்டுக்கும் அவன்மீது நல்ல நம்பிக்கை இருந்தது.

நம்பிக்கை என்றுல் அல்ப சொல்பமான நம்பிக்கை இல்லே — அபார நம்பிக்கை.

குஜராத்தில் கல்லூரி விடுமுறை என்று அப்பாவிடம் கொஞ்ச நாள் செல்லமாக இருந்துவிட்டுப் போக வந்திருந்த அவருடைய ஒரே செல்லப் பெண் மிருதுளாவை தாமுவோடு பெங்களூரைச் சுற்றிப் பார்க்க அனுப்புகிற அளவுக்கு அவன் மீது அபரிமிதமான நம்பிக்கை உண்டு 'சேட்'டுக்கு!

சுண்டினுல் ரத்தம் தெறிக்கிற மாதிரி அப்படி ஒரு சிவப்பான — ஒல்லியானுலும் அழகான ஒல்லியாய் —

ரசிக்கத் தகுந்த மாதிரியான ஒல்லியாய் — ஒரு ரோஜாப் புஷ்பம் போல இருந்த மிருதுளாவுடன் பெங்களூரைச் சுற்றி வருவது தாமுவுக்கும் ஒரு சந்தோஷமான அனுபவமாகவே தோன்றியது.

இங்கேதான்—

இந்த இடத்தில்தான்—

சரியாக இந்த இடத்தில்தான்—

ஆரம்பத்தில் சொன்ன தர்மசங்கடமான நிலை ஆரம்பமாயிற்று தாமுவுக்கு! — அதுவும் அவன் மிகவும் சங்கோஜி.

அதுமட்டுமல்ல. ஊரில் — தமிழ் நாட்டில்— திருச்சிக்குப் பக்கத்தில் ஒரு சிற்றூரில் அவனுக்காக அவன் அத்தை பெண் அருணா காத்திருக்கிறாள்.

வார்த்தாள்! ஆம். அவள் பெரிய மனுஷியாகிப் போனாள்.

இப்போது விதி லேடி டாக்டரின் வடிவில் இன்னும் சதி செய்து கொண்டிருக்கிறது.

மற்றப் பெண்களைப் போல இல்லையாம். இவ்வளவு காலம் கடந்து ஆகியிருப்பதால் அதற்குள் அவசரப்பட்டு கல்யாணம் செய்து வைத்தால் ஏதாவது ஒன்று கிடக்க ஒன்று ஆகிவிடவும் வாய்ப்பு உண்டு. எதற்கும் இந்த ஒரு வருஷம் பார்த்துக் கொண்டு எல்லாம் 'நார்மலாக' இருந்தால் அடுத்த 'தை'யில் முகூர்த்தம் வைத்துக் கொண்டு விடலாம் —'நெருங்கின சொந்தத்திலே வேறு தருகிறீர்கள். நான் சொல்கிறபடி பார்த்துக்கொண்டு செய்வதேநல்லது. பிறகு உங்கள்



உண்மையில் காத்துத்தான் இருக்கிறாள்.

பிறந்ததுமே அவர்கள் இருவரும் ஒருவருக்கு மற்றவர் என்பது தீர்மானமாகிப் போன விஷயம்.

ஒவ்வொரு வீட்டிலே பன்னிரண்டு வயதுக்கும் பதின்மூன்றுக்கும் பெண்கள் வயதுக்கு வந்து நிற்க, அருணா மட்டும் பதினெட்டு முடிந்து பத்தொன்பது வயதாகியும் 'பெரியவ'ளாகாமலே தாமுவின் பொறுமையை அளவுக்கு அதிகமாகவே சோதித்து விட்டுக் கடைசியாகப் போன மாதம் தான் அவன் வயிற்றில் பாலை

இஷ்டம்' என்று தீர்மானமாகச் சொல்லி விட்டாள்.

ஆத்திரப்பட்ட தாமுவை அருணுதான் தேற்றினுள்.

''கிணற்று நீரை வெள்ளமா கொண்டு போய் விடப் போகிறது?''

அருணுவின் இந்தக் கடைசி அஸ்திரம் தாமுவின் மனத்தில் சற்று ஆழமாகவே ஊடுருவித் தைத்தும் விட்டது!

''மனசுக்காகத்தான் அருணு உன்னைக் காதலிச்சேன். இப்பவும் அதுக்காகத்தான் நேசிக்கிறேன். இனிமேலும் அதுக்காகவே காத்திருப்பேன்'' என்று அவனும் வீம்பாகவே சொல்லிவிட்டுப் பெங்களூர் கிளம்பி விட்டான்.

பெங்களூரில் சித்தப்பா இருந்தார்.

ஜெயநகரில் வீடு.

ஏறக் குறைய அறுபது எழுபது லட்ச ரூபாய்ச் சொத்துக்களும் ஒன்றரைக்கோடிக்கு மேல் வியாபாரப் புழக்கமுமுள்ள சேட்டின் ஏக புத்ரி மிருதுளா தாமுவோடு பெங்களூரைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பியபொழுது அவளே கூட இப்படி நினைத்துப் பார்த்திருப்பாளா என்பது சந்தேகம்!

விஸ்வேஸ்வரய்யா டெக்னலஜிகல் மியூசியம் வாசலில் பாதையின் ஒரு முனையில் இருந்து மியூசியத்தின் வாசலுக்குவரும்போது திடீரென்று பாய்ந்துவந்த கர்னடகா ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ் ஒன்றிலிருந்தும்— இரண்டு பக்கமும் சூழ்ந்து கொண்ட ஆட்டோக்களில் இருந்தும் அவளைக் கையைப் பிடித்து இழுத்துக் காப்பாற்றிய தாமுவை நன்றியோடு அவள் பார்த்த அந்தக் கணத்தில்தான் அவள் மனத்திலேயே அந்தத் தீர்மானம் உருவாகி யிருக்க வேண்டும்!.

மியூசியத்துக்கு உள்ளே சுற்றிச் சுற்றிவரும் போது அதன் ஒவ்வொரு மாடியாக ஏறும் போது பிறகு கப்பன் பார்க்கிலும் அவள் கண்களின் விளிம்பில் தாமுவின் மீது மெலிதான காதல் மையிட்டிருந்தது.

லேசான உரசல்களில்—

படியில் ஏறும்போது சோர்ந்துவிட்ட பாவனையில் அவன் கைகளைப் பற்றிக் கொண்டு நடந்ததில்—

''இந்தாப்பா, குடுகுடுப்பை அதான் துணி குடுத்தேனே இன்னும் ஏன் நிக்கிறே?''

''ஒரு சோப்பு இருந்தால் குடு தாயே! துணியிலே அழுக்கு நாத்தம் சகிக்கலே!''

—அ. இராமதாஸ்



புல்வெளியில் அவன் அருகில் ஒட்டினாற் போல உட்கார்ந்து கொண்டதில்—

ஒவ்வொரு அசைவிலும் அவள் காதல் அவனுக்கு நன்றாகவே தெரிந்தது.

அவனைப் பொருத்தவரை மிருதுளாவின் சொத்தோ சுகமோ அழகோ படிப்போ—வேறு எதுவுமோ பெரிதில்லை! அவன் அருமைக் காதலி அருணுவுக்குப் பிறகுதான் எல்லாமே! ஆனுல்... ஆனுல்...

மிருதுளாவின் மனத்தை நோகச் செய்தால் அந்தக் கணமே அந்தக் கம்பெனியில் தன் சீட்டுக் கிழிந்துவிடும்! மிருதுளா, சேட்டின் ஒரே செல்ல மகள். அவள் பொருட்டு சேட் எத்தனை பேரை வேண்டுமானுலும் வீட்டுக்கு அனுப்புவான்.

தாமு தர்மசங்கடத்தின் உச்சியில் கையைப் பிசைந்து கொண்டும், தலையை அனுவசியமாகப் போட்டுப் பிய்த்துக் கொண்டும் பைத்தியம் பிடித்தவன் போல் இருந்தான்.

மிருதுளா!—

அருணு!—

யார்?—

இருவரில் யார்?—

அவன் மனத்தில் ஒரு தராசு தொங்க—தராசின் இரண்டு தட்டுக்களிலும் மிருதுளாவும் அருணுவுமே ஏறி நின்று கொண்டிருந்தார்கள்.

தட்டு அப்படியும் இப்படியுமாக ஆடியது.

ஒருபக்கம் அருணுவின் மீது சின்ன வயசில் இருந்து வளர்ந்து கொண்டுவந்த காதல்.

மறு பக்கம் மிருதுளாவின் பணம், அவள் காதல். அதை ஒப்புக்கொள்ளாவிட்டால் எப்படியும் போய்விடப் போகும் தன்னுடைய உத்யோகம்....!

கடைசியில் அருணுவின் தட்டே தாழ்ந்து நின்றது.

அன்றைக்கு மைசூர் போவதாக இருந்த திட்டத்தை மாற்றி, கப்பன் பார்க் போகலாம் என்றாள் மிருதுளா.

பார்க்கில் அவர்கள் இருவரும் ஒரு ஓரமாகச் சற்று ஒதுக்குப்புறமாக உட்கார்ந்து கொண்டு இருந்த போது—

அவள் வெட்கத்துடன்—

இயல்பாகவே சிவந்த முகம் மேலும் சிவக்க, விரல்களால் புல்லை இழுத்து அதன் அடிப் பகுதியைக் கடித்துத் துப்பியபடி—

கொஞ்ச நேரம் வெட்கப்பட்டுவிட்டு—

தனக்குள்ளாகவே தைரியத்தை வரவழைத்துக்கொண்டு சொன்னுள்:

''தாமு ஐ...ஐ... லவ்... யூ!''—

ஒரு கூடை நெருப்பை யாரோ தன் தலை மீது ஒரே சமயத்தில் சாய்த்தது போல் இருந்தது தாமுவுக்கு.

''என்ன என் பேச்சுக்குப் பதிலையே காணேம்?'' மிருதுளா அவன் தோளைப் பற்றி லேசாக உலுக்கினுள்.

சட்டென்று தூக்கக் கலக்கத்திலிருந்து எழுந்தவனைப் போல் விழித்துக் கொண்டான் தாமு.

''ம்...ம்...'' என்றான்.

மிருதுளாவுக்கு அதுவே கோபமாகிவிட்டது.

''எவ்வளவு சீரியஸான ஒரு விஷயத்தைப் பற்றிச் சொன்னேன் தூங்கினீங்களா?... சேச்சே!''—

மிருதுளா கோபத்துடன் 'விசுக்'கென்று எழுந்து 'விடுவிடு'வென்று நடந்தாள்.

தாமு அவள் பின்னாலேயே ஓடினான்.

''இப்படிப் பேசாமல் இருந்தால் என்ன அர்த்தம்?''

''நீ ரொம்பச் சுலபமாக் கேட்டுட்டே மிருதுள்! நான் அவ்வளவு சீக்கிரம் ஓ.கே. சொல்லிவிட முடியுமா என்ன? எனக்கும் யோசிக்கக் கொஞ்சம் நேரம் குடு...!''

''இதிலே என்ன யோசிக்க இருக்கு?''

''எவ்வளவோ இருக்கு!''

''ஆல்ரைட் இன்னிக்கு சாயங்காலம்வரை டயம் தரேன். அதுக்குள்ளே நல்லா யோசியுங்க. இன்னிக்கு ராத்திரி நாம பிரிஞ்சு போறதுக்குள்ளே நல்ல பதிலைச் சொல்லணும்... ஓ.கே?''

''ஓ.கே.''

அவளைப் போலவே கட்டை விரலை மட்டும் உயர்த்தி ''தம்ஸ் அப்'' செய்து காட்டினான் தாமு.

''ஒரு புடவை வாங்கணும் தாமு!''

சட்டென்று புடவைக் கடை வாசலில் நின்று கொண்டு சொன்னாள் மிருதுளா.

தாமு பாக்கெட்டைத் தொட்டுப் பார்த்தான். சேட் தந்த பணம் இருந்தது.

''ம்... போகலாம்'' என்று கடைக்குள் நுழைந்தான். மிருதுளா அவன் பின்னாலேயே வந்தாள்.

''மேட்சிங்கா ப்ளவுஸ் கிடைக்குமா? அப்போதான் இந்த ஸாரியை எடுத்துப்பேன்.''

''வாங்கம்மா பார்க்கலாம்!''

அந்த சேல்ஸ்மேன் கையில் புடவையைச் சுருட்டிக் கொண்டு ஜாக்கெட் பீஸ்கள் அடுக்கி இருந்த பகுதிக்குப் போனான்.

கடைக்காரன் எடுத்துப் போட்ட நாலைந்து துணிகளைப் பார்த்துச் 'சட்'டென்று உதட்டைப் பிதுக்கினாள்.

சோதனையாக அந்தப் புடவையின் உடம்பு நிறத்துக்குச் சரியான மேட்சிங் ப்ளௌஸ் கிடைக்கவில்லை.

''அப்போ எனக்கு இந்தப் புடவையும் வேண்டாம்!''

'பளிச்'சென்று சொல்லிவிட்டு 'விடுவிடு' நடந்து வெளியேறிவிட்ட மிருதுளாவை ஆச்சரியமாகப் பார்த்தான் தாமு.

மனத்தில் பளிச்சென்று ஒரு வெளிச்சம் மின்னலிட்டது.

''ஒரு புடவைக்கு இவ்வளவு மேட்சிங் பார்க்கிறாயே மிருதுள். அந்தப் புடவையை நீ ஆசைப்பட்டுத்தானே தேர்ந்தெடுத்தாய்? இப்போது அந்த ஜாக்கெட் கிடைக்கவில்லை என்பதற்காகப் புடவையின் மேல் வைத்த ஆசையைக் கூட சேர்த்து உதறிவிட்டாயே?'' மென்மையாக அவளைச் சமாதானப்படுத்துகிற குரலில் கேட்டான்.

நடந்து கொண்டிருந்த மிருதுளா நின்றாள்.

''மேட்சிங் ப்ளவுஸ் இல்லாமல் வெறும் புடவையை வைத்துக் கொண்டு என்ன பண்ணுவதாம்? வீண்தான் அது.''

''நடிகை வெட்கப்படுற ஸீன் எடுக்க முடியாததினாலே ஷூட்டிங் கான்ஸல் ஆயிருச்சு!''

''ஆச்சர்யமாயிருக்கே, வெட்கப்படற மாதிரி ஏன் எடுக்க முடியலே?''

''நடிகை நகத்தை வெட்டித் தொலைச் சிட்டாங்களாம்! நகத்தைக் கடிச்சாத்தான் வெட்கப்பட முடியும்னு சொல்லிட்டாங்க!''

அ. இராமதாஸ்

''நான் ஒண்ணு சொல்வேன். கோபித்துக் கொள்ளக் கூடாது.''

''என்ன?'' என்கிற மாதிரி இடுப்பில் கையை ஊன்றிக் கொண்டு நின்றாள்.

''ஒரு புடவைக்கு இவ்வளவு தூரம் மேட்சிங் பார்க்கிற நீ உன் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்க எவ்வளவு தூரம் யோசித்துத் தேர்ந்தெடுக்க வேண்டும்? தி[illegible]ரென்று என்னை 'லவ்' பண்ணுவ்தாகச் சொல்[illegible]ணுயே! நாம் இருவரும் எந்த விதத்திலாவது மேட்சிங்கா என்று நினைத்துப் பார்த்தாயா?''

சட்டென்று அவள் முகம் கறுத்தது.

பார்வை தாழ்ந்தது.

இவ்வளவு நேரமும் இருந்த துள்ளலும் துடிப்பும் மாறிப் போயிற்று.

ஆழமாக யோசிக்கிறாள்!

தாமுவுக்குச் சந்தோஷமாக இருந்தது.

அதன் பிறகு அவள் அவனிடம் எதுவும் பேசவில்லை. சற்று விலகியே நடந்தாள்.

பெங்களூர் நகரம் புகை மூட்டம் போன்ற மெலிதான பனியில் மூழ்கி — மெர்க்குரி விளக்குகள் சோகையாய் வெளிச்சம் பரப்பிய முன் இருட்டு நேரத்தில் அவர்கள் வீட்டை அடைந்தார்கள்.

மிருதுளா காலிங் பெல்லை அழுத்திவிட்டு மௌனமாக நின்றிருந்தாள்.

தாமுவை ஊடுருவிப் பார்த்தாள்.

''ஐ'ம் ஸாரி...!'' என்றாள்.

தாமு அவளை அனுதாபத்துடன் நிமிர்ந்து பார்த்தான்.

அவள் முகம் இறுகி யிருந்தது.

லேசாக வெட்கப்படுவதும் தெரிந்தது!

ஆசைக்கு வெட்கம் இல்லை என்று யார் சொன்னது? அதற்கும் வெட்கம் உண்டு என்று தாமுவுக்குத் தோன்றியது.

ஆசைக்கு வெட்கம்உண்டு, வேதனைஉண்டு, சோகம் உண்டு, எல்லாம் உண்டு என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டே அவன் திரும்பி நடந்தான்.

அருணாவை நினைத்துக் கொண்டே நடந்த அவனைப் பார்த்து ஆட்டோ டிரைவர் ஒருத்தன் கையை நீட்டிக் கோபமாகத் திட்டிக் கொண்டே ஆட்டோவைச் சட்டென்று வளைத்து நெளித்து சர்க்கஸ் பண்ணுகிறமாதிரி ஓட்டிப் போனான்.

தாமுவின் அப்போதைய மனநிலையில் எதுவுமே அவனைப் பாதிக்கவில்லை!

ஆம்!— ஆசைக்கு ரோஷம்தான் இல்லை போலிருக்கிறது!

''சீனு! 'பிரேக்' கெல்லாம் நன்னுப்பிடிக்கிறதான்னு 'செக்' பண்ணிண்டு அப்புறமா சைக்கிளை ரோட்டிலே இறக்கு!''

சைக்கிளை நான் தொடும்போதே அம்மா உள்ளே யிருந்து குரல் கொடுக்கிருள்.

''சித்திரை மாச வெய்யில் வீணுப் போறதேன்னு வெளியிலேயே சுத்தாதே! எண்ணெய் தேய்ச்சு வேறே குளிச்சிருக்கே. சீக்கிரம் வீட்டுக்கு வந்துடு.''

இன்னும் ஒரு விநாடி தாமதித்தாலும் அம்மா ஒரு மணி நேரத்துக்குப் புராணத்தை நீட்டிவிடுவாள் என்ற அச்சத்தோடு சைக்கிளைத் தள்ளிக் கொண்டு அந்த ஒடுக்கமான சந்தை விரைவாய்க் கடக்கிறேன். பெரிய சாலையோடு வந்து இணைந்து, வண்டியில் ஏறி மிதிக்கும்போது... மூச்சு முட்டல்களிலேயிருந்து தற்காலிக விடுதலை பெற்ற உணர்வு நெஞ்சை நிறைக்கிறது.

நெடுஞ்சாலையில் வாகனங்கள் ராட்சத வேகத்தில் சீறிக்கொண்டு கணத்துக்குக் கணம் மின்னலிட்டு மறைகின்றன.

''சீனு! ஓவர் ஸ்பீடா ஓட்டாதே!''

''சீனு! ரெண்டு பக்கமும் நன்னுப் பார்த்துட்டு ரோடை 'க்ராஸ்' பண்ணு!''

அம்மா... செவிப் பறையில் வந்து மோதுகிருள். ஒரு கையால் 'ஹாண்டில் பாரை'ப் பிடித்தபடி மற்றெரு கையால் ஒரு காதை அழுந்தப் பொத்திக் கொள்கிறேன்.

ஜுர வேகத்தில் வெறி பிடித்தாற்போல் விழுந்தடித்துக் கொண்டு பறக்கும் இந்த வாகன ஓட்டிகளின் வீடுகளில், அம்மாவைப் போல் எச்சரிக்கை மணி அடிக்க ஆட்கள் இருப்பதில்லையோ?

அம்மா...! பயமே வாழ்க்கையாய், வாழ்க்கையே பயமாய் ஆகிப்போன அம்மா! உருவமற்ற பிரமைகளில், மருட்டும் கற்பனைகளில், முகமற்ற பயங்களில்... தன் கால வண்டியை ஓட்டிக் கொண்டிருக்கும் அம்மா!

இவள் எப்போது இப்படி மாறிப்போனுள்?

இளமைக் கால அம்மா... இப்படி ஒரு பய முகத்தைக் காட்டிக் கொண்டிருந்ததாய் எனக்குச் சுத்தமாய் நினைவில்லை. தன் கல்லூரி நாட்களில் மலையேற்றக் குழுவினருடன் முகமெல்லாம் சிரிப்பாய் போட்டோ ஆல்பத்தில் பார்த்த அம்மாவை, கோடை விடுமுறை ஒன்றில் எல்லோருமாய் ஊட்டி போனபோது அப்பாவையும் எங்களையும் கரையில் நிற்க வைத்துவிட்டு, தானே தனியாய்ப் படகை வலித்துக் கொண்டு அக்கரை வரை சென்று வந்த அம்மாவை... எனக்கு இன்னும் நன்ருய் ஞாபகம் இருக்கிறது.

பயம்.... அம்மாவின் பிறவிக் குணம் இல்லை. ஆனுல் அது ஒரு தொத்து நோயாய், அவளைப் பற்றிக்கொள்ளத் தொடங்கியது... எப்போதிலிருந்து?

• • •

ஆசிரியர் உதிர்த்த 'ஜோக்' சிரிப்பலைகளால் 'டென்த் ஸ்டாண்டர்ட்-ஏ' அதிர்ந்து கொண்டிருக்கிறது.

முகமற்ற பயங்கள்

எம்.ஏ. சுசீலா



''ஆர் சீனிவாசனை எச். எம். கூப்பிடறுரு சார்!''

''சீனிவாசன்!'' — ஆசிரியர் என்னைப் பார்க்கிறுர். எழுந்து எச். எம். அறைக்கு வருகிறேன். அங்கே காத்திருந்த மாமா, ஒரு வார்த்தைகூடப் பேசாமல் என்னை அழைத்துக்கொண்டு வீட்டுக்கு வருகிறுர்.

நண்பர் ஒருவருடன் நேற்று பெங்களுருக்குக் காரில் சென்றிருந்த அப்பா, சாலே விபத்தில் சதைக் கூளமாகி அங்கே... நடுக்கூடத்தில் கிடத்தப்பட்டிருக்கிறுர். அம்மா மூலேயில் சரிந்து கிடக்க, தங்கை ஜாளு ஓடி வந்து என் கைகளேப் பிடித்துக்கொண்டு தேம்புகிறுள்.


அப்பாவின் அகால மறைவால் ஏற்பட்ட சூனியம், பாதுகாப்பற்ற நிலே அம்மாவின் துணிச்சலேச் சூறையாடி அவளேக் கோழையாக்கி விட்டிருப்பதை என்னுல் நன்ருகவே புரிந்துகொள்ள முடிகிறது. குடும்ப பாரத்தைத் தனியே சுமப்பதால் விளேந்த பொறுப்பான பயங்கள்.... எங்கள் இருவரின் நிகழ் காலம் குறித்த கவலேயோடு கூடிய பயங்கள் எதிர்கால இருட்டில் எப்படி நடக்கப் போகிருேம் என்ற தயக்கமான பயங்கள்—நெஞ்சில் புரையோடிப்போன நிரந்தரமான காயத்தால் விளேந்த இந்த ஆழமான பயங்களோடு சில அர்த்தமற்ற பயங்களும் அம்மாவை அலேக்கழிக்கும்போதுதான் அவற்றைப் போக்க வழி தெரியாத கையாலாகாத்தனத்தோடு நான் ஊமையாய் விழிக்கிறேன்.

அம்மாவின் பயத்துக்குத்தான் எத்தனை முகங்கள்? எத்தனை வண்ணங்கள்?

சிலவேளேகளில் நான் நினேப்பதுண்டு... 'அம்மாவின் பய ரேகை எட்ட முடியாத இடம்.... இறந்த காலம் ஒன்றுதான் — அது முடிந்து போனதாக இருப்பதால்!'

வீட்டுக்குள் நுழைகிறேன். அம்மாவுக்கும், ஜானுவுக்குமிடையே உரத்த குரலில் ஏதோ விவாதம் நடந்து கொண்டிருக்கிறது.

''உனக்கென்னடி! நீ பாட்டுக்கு 'ஸ்கூலோடே எக்ஸ்கர்ஷன் போறேன். ப்ரண்ட்ஸோட டூர் போறேன்'னு ஈஸியாய்ச் சொல்



அருள்வாக்கு

படிப்படியாக பக்குவமாவோம்!

நாம் பிறந்ததற்கு என்ன பிரயோஜனம்? எதற்காகப் பிறந்தோம்? என்று அடிக்கடி நினேக்க வேண்டும். அந்தப் பிரயோஜனத்தை அடைவோமா என்று நினேக்க வேண்டும். 'நமக்கு ஏன் பாபம் வருகிறது, கோபம் வருகிறது, காமம் வருகிறது? இவையெல்லாம் ஏன் வரவேண்டும்? எப்போதும் ஆனந்தமாக சந்தோஷமாக இருக்கக் கூடாதா?' என்று தோன்றுகிறது. இதற்குப் பதில் ஒன்றும் நமக்குப் புரியவில்லே.

எல்லாம் நல்லதற்குத்தான். ஒரு மரத்திலே புஷ்பத்திலிருந்துதான் காயும் பழமும் உண்டாகின்றன. புஷ்பமாக இருக்கும்போது மூக்குக்கும், பழமாக இருக்கும்போது நாவுக்கும் உபயோகப்படுகின்றன. பழம் நல்ல மதுரமாக இருக்கிறது. இந்த மதுரம் வருவதற்கு முன்பு எப்படி இருக்கிறது? பூவில் கசப்பாகவும், பிஞ்சில் துவர்ப்பாகவும் காயில் புளிப்பாகவும், பிறகு மதுரமாகவும் இருக்கிறது. மதுரம் என்பதுதான் சாந்தம். சாந்தம் வந்தால் எல்லாப் பற்றும் போய்விடுகிறது. உடனே கீழே விழுந்து விடுகிறது. அதுபோல் இதயத்தில் எல்லா இடத்திலும் மதுரம் வந்து விட்டால் தானுகவே எல்லாப் பற்றும் போய்விடும். புளிப்பு இருக்கும்வரை பற்றும் இருக்கும். அப்போது காயைப் பறித்தால் காம்பில் ஜலம் வரும். காயிலும் ஜலம் வரும். அதாவது மரமும் காயை விட்டுவிட விரும்பவில்லே. காயும் மரத்திலிருந்து விடுபட விரும்பவில்லே. ஆனுல் நிறைந்த மதுரமாக ஆகிவிட்டால் தானுகவே பற்றும் போய்விடும். பழம் தானே இற்று விழுந்துவிடும். மரமும் பழத்தை விடுகிறது. பழமும் மரத்தை விடுகிறது. இரண்டும் ஜலம் விடாமல் அதாவது அழாமல் ஆனந்தமாக இருக்கும். படிப்படியாக வளர்ந்து மனம் முழுவதும் மதுரமான ஒவ்வொருவனும் இப்படியே ஆனந்தமாக சம்சார விருக்ஷத்திலிருந்து விடுபட்டு இருப்பான். பழமாக ஆவதற்கு முன் ஆரம்ப தசையில் எப்படிப் புளிப்பும் துவர்ப்பும் வேண்டியிருக்கின்றனவோ அதுபோலக் காமம், வேகம், துடிப்பு எல்லாமும் வேண்டியவை தாம்போலிருக்கிறது. இவற்றுக்கு நாம் ஆரம்ப தசையில் ஆட்படும்போதே இவற்றிலிருந்து பூரணமாக விடுபட முடியாது. ஆனுலும் இவையெல்லாம் ஏன் வருகின்றன என்று அடிக்கடி நினேத்தாவது பார்க்க வேண்டும். 'இதனுல் ஏதாவது பிரயோஜனம் உண்டா? அவசியமாக வருகிறதா? அநாவசியமாக வருகிறதா என்று நினேத்துப் பார்க்க வேண்டும். அப்படி நினேக்கவில்லேயென்ருல் அவை நம்மை ஏமாற்றிவிடும். ஏமாந்து விடுவோம்.

—ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்

டுவே! தினம் தினம் நீங்க ரெண்டு பேரும் ட்டுக்கு வந்து சேர்ற வரைக்கும் என் யிறு பதை பதைச்சிண்டிருக்கிறது எனக் ன்னு தெரியும்?''

என் முகத்தைப் பார்த்ததும் ஜானு, என் பாரிசைக் கோருகிறுள். /

''நீயே சொல்லுண்ணு! மனசுக்குப் டிச்ச மாதிரி டிரஸ் பண்ணிக்கத்தான் இந்த ட்டிலே உரிமை இல்லே! நான் என்ன பல்ஸூம் மாக்ஸியுமாகேட்கிறேன்? ஆஃப்டர் ல் ஒரு சல்வார் கம்மீஸ்! அதுக்குத்தான் ம்மா 144 போடறுன்னு, இப்ப எங்க ளாஸிலே அத்தனை பேரும் 'டூர்' போகும் பாது எனக்கு மட்டும் பர்மிஷன் தர மாட் டங்கிறுளே?''

'என். ஸி. ஸி. கேம்ப்ஸ், ரைஃபில் ஷூட் ங்ஸ் இதிலெல்லாம் கலந்துண்டு பதக்கங் ளும், பரிசுகளுமா வாங்கிக் குவிச்சிருக்கிற யாம்மா இன்னிக்கு இப்படிக் கோழை பிட்டே?'

''அம்மா! என்னைத்தான் பி.எஸ்.ஸி. படிக் ற இந்த நிலையிலேயும் கூட நீ எங்கேயுமே வெளியூர் போக அனுமதிச்சதில்லே!... சரி ன் கேஸ் வேறே! நாங்க பையங்க. அங்கே, ங்கே முரட்டுத்தனமாச் சுத்துவோம்னு பயப்படறது நியாயம். ஆனு... ஸ்கூலிலே, இவ்வளவு பெண்களைக் கூட்டிண்டு போறச்சே லேடி டீச்சர்ஸ் கவனமாய்ப் பார்த்துக்க மாட் டாளா?''

''சீனு! இந்த விஷயத்தில் நீ தலையிடாதே. இதோ பாருடி ஜானு! உனக்கு ஒரு கல்யா ணத்தைப் பண்ணி ஒருத்தன் கையிலே ஒப் படைச்சிடறேன். அப்புறம் நீ காஷ்மீர்லே ிருந்து கன்னியாகுமரி வரைக்கும் எங்கே வேணும்னுலும் அவன் கூடப் போயிட்டு வா!''

ஜானு முணுமுணுத்தபடியே உள்ளே போகிறுள்.

● ● ●

வாசல் வராந்தாவில் விளக்கு எரிகிறது. சேரில் உட்கார்ந்து புத்தகம் படித்துக் கொண்டிருந்த அம்மா, என் தலை தெரிந்த தும் எழுந்து வந்து கதவைத் திறக்கிறுள். வழக்கமான படபடப்பில்லை. பதற்றமான வார்த்தைகள் இல்லை. கனத்த மௌனம், அவளைச் சுற்றித் திரை போட்டிருக்கிறது. அவள் சொல்லைவிட, அந்த மௌனம் என்னை வெகுவாய்ச் சுடுகிறது.

சட்டையைக் கழற்றிக் கோட்ஸ்டாண்டில் மாட்டிவிட்டுக் கொல்லைப்புறம் போகிறேன். திரும்பி வரும்போது அம்மா என் சட்டைப் பையில் ஏதோ குடைந்து கொண்டிருக்கிறுள். சட்டைப் பைகளை அலசி ஆராய்ந்த பின், மெள்ள முகர்ந்து பார்க்கிறுள். எனக்கு அர்த்தம் புரிகிறது. 'டீன் ஏஜ்' பழக்கங் களுக்குத் தன் மகனும் அடிமையாகி இருப்பானே என்ற சந்தேகத்தோடு கூடிய பயம் அது!

மிக்க நன்றி, ஆனால்...



● முஸ்லீமாகிய நானே, கல்கியின் மூலம் தான் ஆயிரம் விளக்கு மசூதி பற்றி, முழு விவரங்களும் தெரிந்து கொண்டேன். மிக்க நன்றி. ஆனல் கட்டுரையில் ஒரு தவறு. தொழுகை விளிப்பு அராபிய மொழியில்தான் சொல்லப் படுகிறது. உருது மொழியில் அல்ல.

விருத்தாசலம் எம். ஏ. காதர்

○ மேற்படி கட்டுரையில் வேறு சில தவறுகளையும் முஸ்லிம் வாசகர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர், அவர்களுக்கு நன்றி. - ஆசிரியர்

○ 'தர்க்கா' என்பது சாதுக்களின் அடக்கஸ்தலத் துக்குப் பெயர். அங்கு தொழுகை நடக்காது. மசூதி அல்லது பள்ளி வாசல் என்பது தொழுகை நடக்கு மிடத்தின் பெயர்.

○ மசூதிகளில் திருமணம் போன்றவற்றை நடத்தி வைப்பவர் 'காஸி'. தொழுகைகளை நடத்தி வைப் பவர் 'பேஷ் இமாம்'. (ஆயிரம் விளக்குமசூதியில் இரு பொறுப்புக்களையும் வகிப்பவர் ஒருவரே. அதனுல் தான் குழப்பம்).

○ காலை வணக்கம் உருது மொழியில் நமஸ்ஸுபோ என்றும் அராபிய மொழியில் நமஸ் ஃபஸர் என்றும் அழைக்கப்படும்.

அன்று ஞாயிற்றுக் கிழமை. மூன்று பேரும் ஒன்ருய் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கிறோம். அம்மாவின் கவனம், வேறெதிலோ லயித்திருக்கிறது. அவள் தனக் குள் மூழ்கி அமிழ்ந்து கொண்டிருக்கிறுள்.

''ஜானு! அம்மாவுக்கு என்னடி ஆச்சு இன்னிக்கு?''

''அதை ஏன் கேட்கிறே அண்ணு? நம்ம 'நியூஸ் பாக்ஸ்' லட்சுமி மாமி, காலம்பற வந்து ஒரு கதை சொல்லிவிட்டுப் போனு! அதிலேயிருந்துதான் அம்மா இப்படி 'அப் செட்' ஆயிட்டா!''

நான் கேள்விக் குறியுடன் ஜானுவைப் பார்க்க, அவள் விவரிக்கிறாள்.

''அந்த மாமியோட தங்கை ஹஸ்பெண்ட் பத்து வருஷத்துக்கு முன்னாடி ஹார்ட் அட்டாக்லே போயிட்டாராம். ஆத்திலே ரெண்டு பொண்கள்... ஒரு பையன். பையனைத்தான் மலையாய் நம்பி... வயத்தை, வாயைக் கட்டி எம். பி. பி. எஸ். வரைக்கும் படிக்க வச்சிருக்கா! படிப்பு முடியப்போற சமயத்திலே, அவன் கூடப் படிச்ச 'நார்த் இண்டியன்' ஒருத்தியை யாருக்கும் தெரியாமக் கல்யாணம் பண்ணிண்டிருக்கான். இப்ப வடக்கேயே போய்க் குடியேறிட்டான். குடும்பத்தை அவன் திரும்பிக் கூடப் பார்க்கிறதில்லேங்கிற ஏக்கத்திலே அந்த மாமிக்குச் சித்த பிரமையே பிடிச்சுடுத்தாம்.''

''அது சரி. அதுக்கும், அம்மாவோட சோகத்துக்கும் என்ன சம்பந்தம்?''

கை கழுவிவிட்டு வருகிறேன். அம்மா, 'ஹிஸ்டீரியா' வந்தவளைப் போல வேகமாய் எனக்கு முன்னால் வந்து ஒரு ஆவேசத்தோடு என் கைகளைப் பிடித்துக் கொள்கிறாள்.

''சீனு!... நீயும் அப்படிச் செஞ்சிடுவியா? எனக்கே வரவர உடம்பு தள்ளலே! ஜானுவைத் தனியாய் விட்டுடுவியா?''

அவள் பிடியிலிருந்து என் கைகளை அவசரமாய் விடுவிக்கிறேன். காலங் காலமாய் உள்ளே நீறு பூத்துக் கொண்டிருந்த எரிமலை கண் திறந்து கொள்கிறது.

''அம்மா! வில் யூ ஸ்டாப் திஸ் நான்சென்ஸ். கண் முன்னாலே இருக்கிற நிஜங்களைப் பார்த்துச் சந்தோஷப்படறதை விட்டுவிட்டுத் தூரத்திலே இருக்கிற நிழல்களைத் துரத்திண்டு இன்னும் எத்தனை நாளைக்குத்தான் ஓடப் போறே? போலியான பிரமைகளும், பொய்யான மிரட்சிகளும் உன்னைச் சுத்திப் போட்டிருக்கிற வேலியை முதலிலே உடைச்சிண்டு வெளியே வா! வேணும்னா ஜானுவைக் கைவிட மாட்டேன்னு அரசியல்வாதிகள் செய்யற மாதிரி என் ரத்தத்தைக் கீறிக் கையெழுத்துப் போட்டு வாக்குமூலம் தரட்டுமா?... சரி! நாளைக்கே இன்னொரு வீட்டிலே ஒரு பொண்ணு ஓடிப்போவா... ஜானுகிட்டேயும் அப்படி ஓடமாட்டேன்னு வாக்குறுதி வாங்கிக்கோ! எங்க செயல்கள் உன்கிட்டே ஏற்படுத்தாத நம்பிக்கையையா வார்த்தைகள் உண்டாக்கிடப் போறது?''



பிற்பகல் முழுவதும், வீட்டில் புயலடித்து ஓய்ந்த அமைதி நிலவுகிறது. மாலையில் அதை நானே கலைக்கிறேன்.

''நான் மூர்த்தியோட சினிமாவுக்குப் போறேன். வர லேட்டாகும்.''

''நீயுமா போறே! ஜானு வேறே அவ 'பிரண்ட்' சித்ராவோட 'பர்த் டே பார்ட்டி'க்குப் போறேன்னு சொல்லிண்டு இருக்காளே!''

''அவளும் போயிட்டு வரட்டுமே'' என்று சொல்லியபடி கிளம்புகிறேன்.

• • •

'பஸ்ஸரை' அழுத்தியவுடன் அம்மா விரைந்து வந்து கதவைத் திறக்கிறாள். நானும், ஜானுவும் சேர்ந்து வந்திருக்கும் மகிழ்ச்சியுடன், இரவு எட்டுக்குள் நாங்கள் வீடு வந்துவிட்ட திருப்தியும் அவள் முகத்தில் பூரணமாய் நிலவுகிறது.

''சாப்பிட வாங்கோ ரெண்டு பேரும்.''

''எனக்கு வாண்டாம்மா! 'பார்ட்டி'யிலே வயிறு 'ஃபுல்'.

''சரி. நீ வாடா சீனு.''

தட்டலம்பிப் போட்டு அம்மா பரிமாறுகிறாள். குழம்பு ஊற்றும்போதுதான் திடீரென்று நினைவு வந்தவளாய்க் கேட்கிறாள்.

''ஆமாம்! நீ சினிமாவுக்குப் போறேன்னியே? அதுக்குள்ளே படம் விட்டாச்சா? நீ எப்படி ஜானுவைப் பார்த்தே? ரெண்டு பேரும் எப்படிச் சேர்ந்தேள்?''

''நான் சினிமாவுக்குத்தாம்மா போனேன். டிக்கட் வாங்கி உள்ளே கூடப் போயாச்சு. அப்புறம்தான் ஜானு சித்ரா வீட்டுக்குப் போறுங்கறது 'ஸ்ட்ரைக்' ஆச்சு. அவா வீடு ரொம்பத் தள்ளின்னா இருக்கு! பஸ் ஸ்டாப்பும் லோன்லியா இருக்கும்... சரி... டிக்கட் போனால் போறது. இன்னொரு நாள் படம் பார்த்துக்கலாம்னு மூர்த்தி கிட்டே சொல்லிட்டு அப்படியே கிளம்பி நேரே சித்ரா வீட்டுக்குப் போயிட்டேன். ஜானு அப்பத்தான் புறப்பட்டுண்டிருந்தா! இன்னிக்குனு பார்த்து அங்கே பவர் கட் வேறே!''

பேசிக்கொண்டே சாப்பிட்டு முடிக்கிறேன்.

அம்மா அசைவின்றி உட்கார்ந்திருக்கிறாள். அவள் முகத்தில் அப்பாவின் மறைவுக்குப் பின் அன்றுவரை நான் கண்டிராத ஆயிரம் 'வாட்' விளக்கேற்றினாற் போன்ற பிரகாசம். என் கன்னங்களைத் தன் கைகளால் ஆசை தீர வருடித் திருஷ்டி கழிக்கிறாள்.

''சீனு... இனிமேல் நான் எதுக்குமே பயப்பட மாட்டேண்டா! இந்த நிமிஷத்திலேயிருந்து அதுக்கெல்லாம் விடுதலை கொடுத்து அனுப்பிச்சிட்டேன்.''

பேச வார்த்தைகளற்ற மகிழ்ச்சித் திகைப்பில், அவள் கரங்களை, ஆதுரத்துடன் பற்றிக்கொள்கிறேன்.

பன்னீர் புஷ்பங்கள்

கைநிறைய ரீலே வைத்துக் கொண்டு கதை சொன்ன காலம் மலையேறிவிட்டது. மெலிசான கதையமைப்புக்கு வித்தியாசமான ட்ரீட்மெண்ட் தருவது இன்று மாறிவரும் ட்ரெண்ட். இந்த வகையில் பாலைவனச் சோலைக்குப் பின் பன்னீர் புஷ்பங்கள்.

முழுக்க முழுக்கப் பள்ளி மாணவர்கள் கதை. தன் பள்ளிக்குப் புதிதாய் வந்து சேரும் உமாவுடன் (புது முகம் சாந்தி) நட்புக் கொள்கிறான் பிரபு (சுரேஷ்) — ஒரு சின்ன உரசலுக்குப் பின். பிரபுவைச் சுயமாய்ச் சிந்திக்க விடாமல் அவ்வப்போது அபாரமான யோசனைகள் சொல்லி உமாவை வளைக்கத் தோழர் குழாம் உதவுகிறது. கூட வரும் பப்பாவுடன், மனோஹரும் — ஷியாம் சுந்தரும் அசத்துகிறார்கள்.

சலனமில்லாத நட்பில் விரிசல் விழக் காரணமாகிறார் இடையில் உட்புகும் புது ஆசிரியர் — பிரதாப். ஆசிரியர் முறையில் உமாவுடன் நெருங்கிப் பழக பிரபுவுக்கு 'கன்னா பின்னா' சந்தேகங்கள் முளைத்து, முரடனாய் மாறி, கெட்ட பெயர் சம்பாதிக்கிறான். அறிவுரைக்குப் பின் நல்லவனாகிறான். மறுபடியும் வரும் எதிர்ப்பைச் சமாளிக்க, நண்பர்கள் எல்லாம் சேர்ந்து 'உமா — பிரபு' ஜோடியுடன் 'FRIENDS' பாணியில் ஓடுகிறார்கள்.

ஆங்கிலப் படம் அளவுக்கு இருக்க வேண்டிய படத்தைக் காலைவாருகிறது ஒளிப் பதிவு. அழகான லொகேஷன்கள் இருந்தும் தெளிவு இல்லாத கேமரா. பாடலுக்குப் பாடல் நெஞ்சம், — கொஞ்சும், ராகம் — மேகம், தாளம் — கீதம் என்று எழுதிப் போரடிக்கிறார். கங்கை அமரன். இசையை இளையராஜாவிடம் விட்டதனால் தப்பித்தோம்.

பைலா பாடல், ஆட்டம் பாட்டம் ஏதும் இல்லாமல் கிட்டாரை மீட்டிக் கொண்டு ஒரு இழுவைப் பாடலைப் பாடி 'பிக்னிக் மூடை'யே அவுட்டாக்குகிறார்கள்.

போதும் என்கிற அளவு நடிப்புடன் அழகாய் வருகிறார்கள் புது முகங்கள் சுரேஷும் சாந்தியும்.

'ராஜ பார்வை' பாரதி - பாசுவும்' 'அவள் அப்படித்தான்' சோமசுந்தரேஷ்வரும் சேர்ந்த இந்த டீமிற்கு அடுத்த முறையாவது வெற்றி கிட்டட்டும். —'சிந்து-ஜீவா'



எதிர்பார்க்கவேயில்லை.

ஷாக். ஹாரிபிள் ஷாக். தலைக்கு மேல் குண்டுப் போட்டவள் மாயா. போட்டுவிட்டுச் சிரித்தாள். வெள்ளையாய்ச் சிரித்தாள். போட்டது குண்டு என்று தெரியாமல்... முகம் மலர அகம் குளிர... மார்பு பூரிக்க...

மாயா சிரித்தாள். அவன் விழித்தான்.

''மாயா... என்ன சொல்றே?''

பதறிப்போனான். மகா சீரியஸாய்க் கேட்டான்.

''ஞான் சத்யம் பறையுன்னு'' சந்தோஷமாய் அணைத்துக் கொண்டாள். புரு மார்பு. ஸ்பரிசம் ரசிக்கவில்லை. அவளை விலக்கினான்.

''எந்துவா?'' என்றாள். குழம்பியபோது.. அவன் சுத்தமாய்த் தெளிந்தான். வலி!! அவளை நெருங்கி, செல்லமாய் வயிற்றைத் தடவி ''நம்ம வாரிசு! என் சாதனை!'' என்றான். சிரித்து வை(த்)தான்.

மாயா உண்டாகியிருக்கிறாள். அவள் வயிற்றில் என் கரு விஷயம் முற்றிவிட்டது. இந்நிலை நீடிக்கக் கூடாது. நீடிக்க விடக் கூடாது. நீடித்தால்....

மனசில் ஷர்மிலி வந்து நின்றாள். விரலால் முடியை அலட்சியமாகக் கோதி விசிலுடன் கண்ணடிக்க... ஷர்மிலி. அவளைப்போல ஒரு பெண் கலியுகத்தில் அபூர்வம். செக்ஸியான விழிகள். உதடுகளில் லாகிரி. கூர்மையான அழகான நாசி. வெடுக்கென்று கடிக்க ஆசை வரும்.

ஷர்மிலி! அவளோடு ஒப்பு நோக்கினால் மாயா 'சுழி'. சுத்தமான 'ஸீரோ'. பெரிய யானை முட்டை! திரண்ட மார்பும், திரண்ட சொத்தும் ஷர்மிலி கவர்ச்சியை இன்னும் அதிகரிக்க, அவன் கிரங்கித்தான் போனான்.

முயற்சிகள்... முயற்சிகள்...

கண்ணாடி முன் அதிக நேரம் நின்றான் — அவளுக்காக.

கல்லூரி வாசலில் நிறையத் தவம் கிடந்தான் — அவளுக்காக.

மெல்ல, மெல்லமுயன்று, பரிச்சயப்பட்டு, நெருங்கி, சிரித்து, 'ஏ' ஜோக்கடித்து, சிரித்து, சிரிக்க வைத்து, அவள் சிரிக்கும்போது குலுங்கல்களை இரசித்து...

—ஸாரி மாயா! எங்க அப்பா பத்தி உனக்கு தெரியாது. நம்ம காதலைப் பத்திச் சொன்னா அவர் குதி குதின்னு குதிக்கிறார். என் அந்தஸ்தென்ன, அதென்ன, இதென்னன்னு... ஹி இஸ் எ ஹார்ட் பேஷண்ட் யூ நோ? இந்நிலையில் அவருக்கு ஷாக் குடுக்கிறது...

குரல் கம்மப் பேச வேண்டும். கொஞ்சம் அழவேண்டும்.

கிளம்பு முன் நிறைய ஒத்திகை பார்த்துக் கொண்டான். அதிர்ச்சி தரப் போவதாய் எண்ணிப் போனவன், அதிர்ச்சியை வாங்கிக் கொண்டு வந்து சே(ா)ர்ந்தான்.

''நிங்ஙள்க்கு எந்தானு வேண்டது மோனோ மோளோ?''

மாயா கண் மின்னக் கேட்டாள். அந்த ஆர்வப் பளபளப்பின் அழகு.... ம்ஹூம்! அது அழகாகவே இல்லை. ஷர்மிலியின் முன் இவள் எந்த மூலை?

''இப்பவே என்ன அதைப் பத்தி? இவ்வளவு நல்ல நியூஸ் சொல்லியிருக்கே. ஐ ஷூட் செலிப்ரேட் திஸ்'' என்றான். உதட்டில் அழுத்தமாய் முத்தமிட்டான். ''இது ஜூனியருக்கு'' என்று மீண்டும் முத்தமிட்டான். அவள் சிவந்து துடைத்துக் கொண்டபடி, ''ஜூனியரிண்டெ அம்மைக்கு?'' என்று சிரிக்க....

'பேர'ரிடம் ஐஸ்கிரீம் சொன்னான். வந்தது. வழக்கத்தை விட இனிப்பாய் அவள் உணர்ந்தாள். வழக்கத்தை விடக் கசப்பாய் அவன் உணர்ந்தான்.


பிரிந்தபோது—

''ஜூனியர் பத்திரம்!'' என்றான். சிரித்—தான், தாள், தார்கள்!

ஓவியர் திரு மணியம் செல்வனிடம் ஒரு கேள்வி:

இந்தக் கதையிலே உங்களுக்கு மிகவும் பிடித்தமான அம்சம் :

- O தலைப்பு
- O நடை
- O முடிவு
- O குண சித்திரம்



சாமியார் பாறை

அன்றிரவு அவன் நிறையக் குழம்பினுன். மண்டையை உடைத்துக் கொண்டு யோசித்தான். புரண்டான், எழுந்தான், நடந்தான். நின்றுன். யோசனையாய்த் திரும்பி வந்தான். படுத்தான், எழுந்து தண்ணீர் குடித்துப் படுத்தான். புரண்டான்...

உறக்கம் வராத ராத்திரி. மூளையில் குடைசல்.

இப்ப என்ன பண்ண? பெரிய பூகம்பம்? காலடியில் 'சரசர'வென்று பூமி சரிந்த மாதிரி மூளையிலேயே கிள்ளி எறிந்துவிட வேண்டும். இல்லாவிட்டால் ஷர்மிலியை நழுவ விட்டு விட முடியாது. ஷர்மிலி ஒரு தேவதை. பணங் காய்ச்சி மரம். ஏராளமான உடம்பு, ஏராளமாய்ப் பணம். அதை அவன் மட்டுமே அனுபவிக்க வேண்டும். அதற்கான எந்த விபரீதத்தையும் அவன் சந்திக்கத் தயார்,

மாயாவைக் கொன்றுவிட வேண்டும்... மாயாவைக் கொன்றுவிட வேண்டும்.. மாயாவைக்கொன்றுவிட வேண்டும்... ஏப்படி?

சட்டென்று அவன் நினைவுக்கு வந்தது சாமியார் பாறை!

கீழே இருந்து பார்த்தால் மேஏஏலே உச்சி வழுக்கையாய் ஒரு பாறை. பருத்திக் குன்றுக்குப் பக்கத்தில் ஷர்மிலியின் உடம்பு மாதிரி ஏகச் செழிப்பான பிரதேசம். அவளை நினைத்தாலும் அந்தப் பாறையை நினைத்தாலும் பச்சையான எண்ணப் பிரசவங்களே!

சின்னச் சின்ன முயல்களும், நரிகளுமான மலை. சூரியன் உள்ளே நுழைய அனுமதி பெறவேண்டும். எப்போதும் குளுமை. மாயாவுடன் இறுக்கமாய், நெருக்கமாய், உடல் சூடுகளை ரசித்தபடி நடந்து போயிருக்கிறுன், மணிக் கணக்காய் உயரே நடந்துபோய் உச்சியை எட்டிப் பிடித்தார்கள், அந்தப் பாறையை அவனுக்கு அறிமுகம் செய்து வைத்ததே மாயாதான். பயமாய், பலமான ஆதாரத்துடன் அவன் அன்று கீழே பார்த்தபோது-

ஓ!... என்ன பயங்கரம்! தலை கிறுகிறு வென்று சுற்றியது. தன்னை அறியாமலேயே பிடி நழுவிக் கீழே விழுந்துவிடுவோமோ என்று அவன் பயந்து போனுன். "கொள்ளாம்! இதக் காணுன் இத்தர பேடியோ?"



எஸ். சங்கர நாராயணன்

சூடாமணி சூடுகிறார்



இந்த வருடம் சங்கீத சூடாமணி விருது எம். சந்திரசேகரனுக்கு கிருஷ்ணகான சபையினரால் வழங்கப்பட இருக்கிறது. குறிப்பாக இந்த ஆண்டு அவரைத் தேர்ந்தெடுத்ததில் ஏதேனும் காரணம் இருக்கிறதா?

''நீங்கள் கேட்பதன் அர்த்தம் புரிகிறது. நிச்சயமாக ஊனமுற்றோர் ஆண்டு என்பதற்காக இல்லை. என்னுடைய வாசிப்புக்கும் கலைத் திறமைக்காகவும்தான் இந்த விருதை அளிக்கிறார்கள். மேலும் விருது வழங்குவது எனக்குப் புதிது அல்லவே? '' என்று சற்று அழுத்தமாகவே சொல்கிறார் எம். சந்திரசேகரன். (1975ல் திரு டி. வி. சங்கரநாராயணனுடன் வெளிநாடு சென்றபோது கூட, 'வாத்ய ரத்னாகர' என்ற பட்டம் யு. எஸ். ஸில் வாங்கியிருக்கிறார்.)

''பிரபல வித்வான்களுக்குத் துணையாகவும் வாசிக்கிறீர்கள். தனிக் கச்சேரியும் செய்து வருகிறீர்கள். எதில் அதிக திருப்தி?''

''இரண்டும்தான். பாட்டுக் கச்சேரிகளுக்கு இணையாக வாசிக்கும்போது ஏற்படுகிற திருப்தி அலாதி. நம்மைப் பல வித்வான்கள் விரும்பி வாசிக்கச் சொல்லிக் கேட்கிறார்கள் என்பதில் ஒரு தனி மகிழ்ச்சி இருக்கிறதே! தனியாக வயலின் வாசிக்கும்போதும் நான் கூடவே மெல்லப் பாடிக் கொண்டிருப்பதைக் கவனித்திருக்கலாம். வாய்ப் பாட்டு, கச்சேரி முழுமை பெற உதவுகிறது.''

''சினிமாவினால் கர்நாடக சங்கீதத்துக்குப் பாதிப்பு உண்டா?''

''இல்லை. அது வேறு இது வேறு. ஆனால் சினிமா சக்தி வாய்ந்த மீடியம். உதாரணமாக 'ப்ரோ சேவா' கீர்த்தனையை எடுத்துக்கொள்ளுங்கள். ரொம்ப வருஷத்துக்கு முன் எம். எஸ். பாடிப் பிரபலப்படுத்தினார். இப்போது 'சங்கராபரணம்' சினிமாவில் அந்தப் பாட்டு மறுபடி அதிக பாபுலர் ஆகிவிட்டதை மறுக்க முடியாதே?''

''உங்களால் மறக்க முடியாத நிகழ்ச்சி ஏதாவது உண்டா?

''25 வருஷம் முன்னால் கொட்டூர் (திருவாரூர் பக்கம்) கிராமத்தில் தனிக் கச்சேரி செய்தேன். அதில் கதன குதூகலம் ராகம் வாசித்தேன். திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளை, பாடி முடித்த பிறகு, என் கையைத் தடவிக் கொடுத்து, 'இந்தக் கை இன்னும் எவ்வளவு வாசிக்கப் போகிறதோ' என்று சொல்லிப் பாராட்டினார். நிறையப் பேர் பாராட்டியிருக்கிறார்கள். ஆனால் இதை என்னால் மறக்கவே முடியாது!''

பிரெய்லி முறை மூலம் பல மொழிகள் படிக்கக் கற்றுக்கொண்டுள்ள இவர் உற்சாகமாகப் பேசுகிறார். தமக்காகத் தம் வாழ்வையே தியாகம் செய்தவரும், வயலினுக்குக் குருவும் — தமது அம்மாதான் என்று நெகிழ்ந்து சொல்கிறார். தாயார் சாருபாலா சங்கீத பரம்பரையில் தோன்றியவர். வயலின் மேதை டி. கே. ஜெயராம அய்யரைக் குருவாகப் பெற்றவர். அண்மைக் காலமாக சந்திரசேகரின் மகள் பாரதியும் (பி.எஸ்ஸி. பட்டம் பெற்றவர்) கூட வாசிக்கிறார். பிள்ளைகள் மிருதங்கம் கற்றுக் கொள்கிறார்கள்!

—பேட்டி : தமயந்தி, சாருகேசி

என அவள் சிரித்தாள். கேரளப் பெண்களுக்கே தைரியம் ஜாஸ்திதான்.

சாமியார் பாறை. நல்ல இடம். ஆள் நடமாட்டம் இல்லாத பகுதி. இந்நிலையில் காரியம் சாதிப்பது சுலபம். மிகச் சுலபம்.

விசிலடித்தான். நிம்மதியாய்ப் படுத்தான். காலை விழித்தபோது சூரியன் முறைத்திருந்தான். இவன் கொட்டாவி விட்டு மாயாவின் ஹாஸ்டலுக்குப் போன் பண்ணினான். மாயா ஆச்சரியப்பட்டாள். ''பிக்னிக்கோ? இப்பொழேவோ?'' என்றாள்.

நிறையப் பேசிச் சம்மதிக்க வைத்தான். பின் மானேஜரின் வீட்டு முகவரிக்கு போன் பண்ணி அழுதான். ''பாட்டி... பாட்டி... போயிட்டாங்க சார்!'' என்று மீண்டும் அழுதான்.

மிகச் சரியாய் அவள் சிவப்பு 'லொட லொட' ஹைதர் காலத்து பஸ்ஸில் வந்து இறங்கினாள். கயிறிழுத்துக் கண்டக்டர் மணியடிக்க பஸ் ஜலதோஷச் சத்தங்களுடன் ஜன்னி கண்ட மாதிரி தூக்கித் தூக்கிப் போட்டுப் போனது.

கையை ஆட்டி வந்தாள். மிக அழகாய் லோ-ஹிப் உடுத்தி, மிக அழகாய் அலங்கரித்திருந்தாள்! கடைசி அலங்காரம்! அவள் சிரித்தாள். அவன் முயன்றபோது

உதடு கோணிக் கொண்டது. பயம், பரபரப்பு எப்படிச் சமாளிக்கப்போகிறோம் என்ற திகில்.

கற்றாழைப் புதரில் சலசலப்புகள். ஒரு ஓணான் தலை உயர்த்திப் பார்த்தது. வேறு சப்தமில்லை. மலை வந்து விட்டது. அவர்கள் ஏறினார்கள். ஆனால் பேசிக் கொள்ளவில்லை.

அவனின் இந்த மௌனம் அதிசயம்.

அவளுக்குப் புரியவில்லை. என்ன ஆகி விட்டது இவனுக்கு? ஏன் இப்படி எதையோ பறிகொடுத்த மாதிரி இருக்கிறான்?

மாயாதான் நெடுகப் பேசினாள். 'எத்தர சௌந்தர்யம்!' என வியந்து கொண்டே வந்தாள். குதிரைப் பாய்ச்சலாய் ஒரு ஓடையில் தண்ணீர் ஓடிற்று. உள்ளங்கைக் குளுமையை அனுபவித்தபடி அந்த அந்த நீரின் இனிமையை ரசனையுடன் குடித்தாள்.

அவள் செயல்களைப் பார்க்கப் பார்க்க அந்த மனசின் வெள்ளையில் இவன் பலவீனப்பட்டான். காதுக்குள் ஒரு குரல் 'இது நியாயமா! நியாயமா?' என்று துவங்கிவிட்டது. பிடிவாதமாய் அவன் ஷர்மிலியைப் புகுத்திக் கொண்டான்.

''அச்சண்ட்ட சோதிச்சோ? நம்மட விவாகம் பற்றி எந்தானு பறஞ்சு?''

''அவரென்ன சொல்றது? அவர் சம்மதிக்காவிட்டாலும் நம்ம கல்யாணம் ஒண்ணும் நின்னுடாது, மாயா!'' சொல்லும்போது குரல் நடுங்கிற்று. முகம் வெளிறிற்று.

சாமியார்ப் பாறை நெருங்கிவிட்டது. அவள் முடிவு நெருங்கி விட்டது. விடுதலை இனி எனக்கு விடுதலை. நான் இனி சுதந்திர புருஷன். எனக்கும் மாயாவுக்கும் சம்பந்தமே இல்லை. பிறகென்ன, ஷர்மிலி!...

''எனக்கு நடக்கான் கழியுன்னில்லா.'' மாயா உட்கார்ந்து விட்டாள், கால்களை லேசாய் அழுத்தி விட்டுக் கொண்டு.

''நான் வேணாப் பிடிச்சு விடட்டுமா?''

சிவந்தாள், சிரித்தாள். விலக்கவில்லை. அவன் கன்னத்தில் மூக்கை அழுத்திப் புதைத்து முகர்ந்தாள்.

''சாமியார்ப் பாறைக்குப் போகலாமா?''

''...ச்.... எனக்கு இஷ்டமில்லா. இங்ஙனே நமக்குத் திரிச்சுப் போகாம்'' என்றாள்.

அவனுக்குப் பகீர் என்றது.

''என்ன இது? இவ்வளவு தூரம் வந்துட்டு அதைப் பார்க்காமல் எப்படித் திரும்பறது? டயர்டா இருந்தா கொஞ்சம் கழிச்சுப் போலாம்.''

அவள் மீண்டும் எழுந்தபோது அவன் அவளை அணைத்தபடி கூட்டிப் போனான். பாறையை நெருங்கினார்கள்.

சாமியார் பாறை—

கீழே மரங்களும், மற்ற பாறைகளும் நேற்றுப் பிறந்த குழந்தை மாதிரி சிறியதாய், மிகப் புதிசாய்த் தெரிந்தன..

''அந்தோ ஒரு ஓடை தெரியுது பாத்தியா? அதுக்குப் பக்கத்திலே ஒரு எறும்பு போறது பார்!''

''ஓ!'' என மாயா வியப்பைச் சொன்னாள்.

மாயா, என்னை மன்னித்து விடு!

''உனக்குத்தான் இந்த சீனரி பிடிக்குமே நல்லாக் குனிஞ்சு பார்....''

அவள் குனிந்தாள். அவன் சர்வ நிச்சயமானான். நெஞ்சில் வன்மம். போ சனியனே! என் காலைச் சுற்றிய பாம்பே! ஒழிந்து போ! கண் காணாத இடத்துக்குப் போய்ச் சேர்!...

வெறியுடன் பாய்ந்து நெருங்கி அவளைத் தள்ளப் போனபோது—

சடாரென்று விலகினாள். முற்றிலும் ஆதாரமே இல்லாமல் அவன் திக்குமுக்காடிப் போனான். சமாளிக்க முடியவில்லை. அப்படியே நிலைகுலைந்து குப்புறக் கவிழ்ந்தான்.

பின்னாலேயே அவள் அலறலும் கண்ணீரும் கூட வந்தன. சுனையும் மரங்களும் பெரிதாகிக் கொண்டே வர... அவன் கீழே — இன்னும் கீழே இறங்கினான். இறங்கிக் கொண்டே இருந்தான். எமன் பூமியிலிருந்து மேலே பார்த்துச் சிரித்தபடி அவனை வரவேற்கக் காத்திருக்க...

''என்னை மன்னித்துவிடு, டியர்! முதலிலேயே உன் திட்டம் புரிந்து போயிற்று. என்றாலும் எனக்கு உன் மேல் கோபம் இல்லை. நானும் ஜூனியரும் இனி உன் நினைவிலேயே வாழ்வோம்!'' என்று...

—அவள்.... மலையாளத்தில்...

கத்தினது.... கத்தினது....

எதிரொலித்தது.... எதிரொலித்தது...


எங்கள் வீட்டு சமையல்
எப்போதும் சுவையுடனும்,
நல்ல மணத்துடனும்
இருக்கக் காரணம்
V.V.D
தேங்காய் எண்ணெய்
உங்கள் தேவைக்கேற்றபடி
பலவித பாக்கிங்குகளில்
கிடைக்கின்றது.
SUPERIOR
V.V.D
COCONUT OIL
V. V. தனுஷ்கோடி
நாடார் & சன்ஸ்
91, தெற்கு ராஜ வீதி, தூத்துக்குடி-628 001
EP-VVD-1008


For imaginative kids or adults...
Spectrum
COLOUR PENCILS
Make colourful gifts, too.
Smooth, strong, in many pretty colours.
And in various combinations:
• Assortments of 6 or 12
• Half-size or full-size
• In cartons, metal boxes or plastic pouches...
The Madras Pencil Factory
15, Stringers Street,
Madras 600 001.
MAKERS OF BETTER PENCILS
Spectrum
COLOUR PENCILS
SPECTRUM
MPF
ADWAVE/MPF/1620D

ஓவியர் திரு ஜி. கே. மூர்த்தியிடம் ஒரு கேள்வி.
"இந்தக் கதையில் இந்தக் கட்டத்தைப் படம் போட ஏன் தேர்ந்தெடுத்தீர்கள்?"

"**நா**ன் சொன்னதைக் கவனமாகக் கேட்டுக்கிட்டியா? கதவைத் தட்டுவேன். அவள் திறப்பாள். நீ 'கபால்'ன்னு உள்ளே பூந்து அவளைத் தள்ளிக் கட்டிப்போட்டுட்டு, வாயில் துணியைத் திணிச்சுடு. அதுக்குள்ளே நான் வாசல் கதவை மூடிட்டு வந்திடறேன். அதுக்கப்புறம் எல்லாம் சுலபமாக முடிஞ்சிடும்.''

சக தோழனுக்குச் சொல்லிக் கொடுத்தான் கோவிந்தன். அந்த வட்டாரத்தின் பிரபல திருடன். திட்டமிட்டுச் செயலாற்றுவதில் அசகாயசூரன். எதையும் துல்லியமாகச் செய்யக்கூடியவன்.

கோவிந்தனின் பார்வை அருணின் வீட்டின்மீது ஆசையாகப் படிந்தது. கண்காணித்தான். தன் 'கம்ப்யூட்டர்' மூளையில் பதிவு செய்து கொண்டான். அதன்படி...

அருண் வாரத்தில் ஆறு நாட்கள் வெளியூர் ஓட்டல்களில் (வேண்டா வெறுப்பாக) சோறு சாப்பிடும் மெடிகல் ரெப்ரஸென்டேட்டிவ். கீதா — சமயத்தில் 'கீத்'—சில நேரங்களில் 'கீ....த்'— அவனது இருபது வயது மனைவி. உதடு — ரேகா; கண்கள் — ஸ்ரீவித்யா; கன்னம் — ஸ்ரீப்ரியா — இப்படி உடம்பின் ஒவ்வொரு பாகத்துக்கும் ஒரு நடிகையை உதாரணத்துக்கு வைத்திருந்தான் அருண். 'முதல் குழந்தை இப்போது வேண்டாம்' என்ற கொள்கை கணவன், மனைவி இருவரிடத்திலும். வாரம் ஒரு முறை தான் கணவன் மனைவி சந்திப்பு. அன்று சீதாபாடு அவஸ்தைதான் — இனிய அவஸ்தை!

சில ஆயிரங்கள் 'சூடான பணமாக' இரும்புப் பீரோவில் அவசரத் தேவைக் கென்று உறங்கிக் கொண்டிருக்கும். கூடவே ஒருசில நகைகள் துணையாக...



மூன்று மணிக்கு அருகில் இருக்கும் பால் டிப்போவில் கவர் பால் வாங்குவாள். நான்கு மணி வரை குட்டித் தூக்கம். வேலைக்காரப் பெண் காலையில் பாத்திரங்களைத் தேய்த்துவிட்டு, ஈரக் கையைக் கிழிசல் பாவாடையில் துடைத்து விட்டுப் போய் விடுவாள். மீண்டும் மறுநாள்தான் அவளது வருகை. கடுமையான வெய்யில் நேரம். யாரும் வெளியே தலையை நீட்ட மாட்டார்கள்.

மூன்று மணி, நாற்பத்தைந்து நிமிடங்கள், சில வினாடிகள் கழித்துக் கதவைத் தட்டினால் போதும். அரைத் தூக்கக் கலக்கத்துடன் கதவைத் திறக்கும் கீதாவை எளிதில் மடக்கிவிடலாம். அரை மணியில் அடித்த கொள்ளையுடன் கம்பி நீட்டிவிடலாம்.

கோவிந்தனின் 'கம்ப்யூட்டர்' மூளையில் பதிவாகியிருந்தன.

அந்த நாள்.

கோவிந்தனின் கணக்குப்படி அருண், திருச்சி பெரிய கடை வீதியில், எட்டு மாத கர்ப்பிணி போன்று காட்சி தரும் தோல் பையில் 'மாதிரி' மருந்துகளுடன் கடை கடையாக ஏறிக் கொண்டிருப்பான்.

மூன்று மணி நாற்பத்தைந்து நிமிடங்கள், சில வினாடிகள் கடந்துவிட—

சுற்றும் முற்றும் பார்த்துவிட்டுக் கதவருகில் வந்து நின்றான் கோவிந்தன். அருகில் அவனது தோழன்.

அழகிய கதவைத் தட்டக் கையை ஓங்க—

''பக்கத்தில் வாயேன். ஒரு 'இச்' தர்றேன்'', என்று வீட்டினுள்ளிருந்து அருண் இசையாகக் கேட்க, கோவிந்தன் சிலையாக நின்றுவிட்டான். அருண் எப்போது வந்தான்? தன் திட்டத்தில் முதல் சறுக்கலா?

''நான் மட்டும்தானே இருக்கேன்? திடீருன்னு டூர்லேந்து திரும்பி வந்திருக்கேன். சாயந்திரமே போகப் போறேன். தரக்கூடாதா? ப்ளீஸ்.... கீத்....'' அருண் கெஞ்சினான்.

''ச்சீ! போங்க.... நேரம் காலம் கிடையாதா? பட்டப் பகல் நேரத்திலே...'' கீதா சிணுங்கினாள்.

சீலிங் ஃபேன் 'டொர், டொர்' என்று சத்தமிட்டு அவனுக்கு ஒத்துப் பாடியது.

''போங்க... போங்க. முடியாது.... ஆ! கையை விடுங்க... வளையல் நொறுங்குது... ஸ்.....ஆ.... மீசை குத்....'' — கீதா முனகினாள்.

கோவிந்தன் அதற்கு மேல் அங்கு நிற்க அவன் பைத்தியம் இல்லை. தோல்வியைச் சுமந்தபடி உடனே கிளம்பினான் தன் தோழனுடன். தெருவைத் தாண்டிவிட்டான்.

அருண் எப்போது வந்தான்? குழப்பம் மட்டும் கோவிந்தனுக்கு மூளை முழுவதும் சூழ்ந்திருந்தது.

கோவிந்தன் சென்ற பிறகு—

''ஏய் கீத்! என்ன பண்றே அங்கே?'' அருண் கேட்டான்.


''நீங்க அசடு வழிந்ததை யெல்லாம் உங்களுக்குத் தெரியாமல் 'டேப்' செய்து வைத்து விட்டேன். உங்க அசட்டுத்தனத்தை எல்லாருக்கும் போட்டுக் காண்பிக்கிறேன். இப்போ பேசினது கூட பதிவாகி யிருக்கும்.'' கீதா குரல் கேட்டது.

சற்று நேரத்தில் கீதா 'டேப்'பை ஆஃப் செய்துவிட்டு குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்தாள்.


''உங்க குரலை மட்டும் என்கிட்டத் தந்து விட்டு என்னைத் தவிக்க விட்டுட்டு ஆக்ஸிடெண்டிலே போயிட்டீங்களே? ஏன் அன்னிக்கு அவசரமாக வந்தீங்க? அவசரமாக என்னை விட்டுப் போகவா? அருண்... அருண் அருண்....

மரமும், மன்னனும்

பஞ்சாப் அரசர் ரண்ஜீத்சிங் நாட்டைச்சுற்றிப் பார்த்து வந்த சமயம், ஒரு மரத்தடியில் இளைப்பாறிக் கொண்டிருந்தார். அவர் மீது ஒரு சிறு கல் விழுந்தது. காவலர்கள் ஒரு கிழவியைப் பிடித்து இழுத்து வந்தனர். அரசர் 'ஏன் கல்லெறிந்தாய்?' எனக் கேட்க; பசியாற கனி கொய்யும் பொருட்டு மரத்தின் மீது கல்லெறிந்ததாகக் கூறினாள். அரசர் தன் பணியாளிடம் கிழவிக்குத் தேவையான உணவும் பணமும் கொடுத்தனுப்பக் கூறினார். அமைச்சர் 'தங்கள் மீது கல்லெறிந்தவர்க்குச் சன்மானமா?' என்றார். அரசர் சிரித்து, 'மரத்தின் மேல் கல்லெறிந்தால் அது காயோ, கனியோ தருகிறது, என் மீது பட்டதற்கு நான் தண்டனை தந்தால் மரத்தை விடத் தாழ்ந்தவன் ஆவேனே!' என்றார்.



- மதுரை நாகுவேலன்



✖ "...மாலையில் குட்டை மதில் மீதுஉட்கார்ந் திருப்போம்..."

அறையில்தான் குடியிருந் தேன்'' என்று பிரதாப் சுட்டிக் காட்ட, அந்த அறையில் படமெடுக்க அனு மதிக்க வேண்டும் என்று கேட்டவுடன், அறைக் கத வைத் திறந்து வைத்து விட்டு, ''படமெடுத்த பிறகு என்னை அழையுங்கள்; நான் உங்களுக்குத் தொந்தரவாக நிற்க விரும்பவில்லை'' என்று பெருந்தன்மையுடன் கூறி மறைந்துவிட்டார், அந்த அறையில் இன்று வசிப்பவர்.

''இப்பொழுது அறையை ஒழுங்காக வைத்திருக்கிறார். நான் வசித்தபோது ரொம்ப மோசமாக இருக்கும். இரவில் விளக்குகள் பல மணி நேரம் எரிந்து கொண்டிருக்கும். காரணம் நான் ஒரு புத்தகப் புழு.'' என்ற பிரதாப், தாம் புத்தகப் பிரியனாக இருந்ததால் ஏற் பட்ட சண்டையையும் விவரித்தார்.

''எனது நண்பனிடமிருந்து ஒரு நாள் ஒரு புத்தகத்தை வாங்கிக் கொண்டு வந்தேன். படித்து முடித்த பின் எங்கே வைத்தேனோ நினைவில்லை. நண்பன் மிக அவசரமாக அந்தப் புத்த கம் தேவை என்று வற்புறுத்த ஆரம்பித்தான். எங்கு தேடியும் புத்தகம் மாயமாய் மறைந்த விதம் தெரியவில்லை. நண்பன் கோபமாய்ப் பேசிவிட்டுப் போய்விட்டான்.

''ஒரு ஞாயிற்றுக் கிழமை அறையைச் சுத்தப்படுத்தலாம் என்று உட்கார்ந்தேன். காட்ரஜ் பீரோவை நகர்த்தி, பின்னால் ஒட்டடை தூசுகளைத் தட்ட நினைத்தபோது, அதன் பின்னால் நான் தேடிக்கொண்டிருந்த நட்பை முறித்த புத்த கம்! முதல் காரியமாகப் புத்தகத்தை நண்பனிடம் திருப்பிக் கொடுத்து ஃபிராக்சர் ஆன நட்புக்குக் கட்டுப்போட்டு விட்டு வந்தேன்'' என்ற பிரதாப், குளியலறைக்குள் எட்டிப் பார்த்து விட்டு ஒருமுறை உடலைச் சிலிர்த்துக் கொண்டார். ''என்ன விஷயம்?'' என்று கேட்டேன்.

''நான் குளிக்கப் போனால் அப்போது டாப் ஹிட்டாக இருக்கும் பாடலைப் பாடிப்பார்க்கா மல் இருக்க மாட்டேன். சரியாகப் பாட வரும் வரை விடமாட்டேன். இதனால் குளியலறையை விட்டு வெளியே வர ஒரு மணி நேரமாவது ஆகும். ஒரு நாள் இப்படித்தான் நான் பாடிக்கொண்டே குளிக்கும்போது சுடு தண்ணீர் வரும் குழாயைத் திறக்க, குமிழ் கையுடன் வந்துவிட்டது! தலைக்கு மேலே கொதிக்கும் தண்ணீர் கொட்டுகிறது. துள்ளி அப்பால் நகர்ந்தேன். ஷவரை நிறுத்த முடியவில்லை. ஷவரின் சிதறல் மேலே படாமல் குமிழைத் திரும்பப்பொருத்த முடியவில்லை. என்ன செய்வது எனப் புரியாமல் 'ஓ' எனக் கத்தினேன். நான் கத்துவதே வழக்கமாகப் பாடுவது போல் இருந்ததோ என்னவோ, யாருமே உதவிக்கு வரவில்லை. குளியலறையை விட்டு வெளியே வரலாம் என்றால் சோதனை போல் கதவு திறக்க மாட்டேன் என்று அடம் பிடித்தது. உடம்பெல்லாம் சோப்பு நுரை வழிய. ஒரு கை கதவைத் திறக்க முயல, மறு கை குமிழைப் பொருத்த முயல ஒரே சமயத்தில் பரத நாட்டியமும் குச்சுபுடியும் ஆடுவதுபோல் இருந்தது. இதற்குள் பக்கத்துக் குளிய லறையின் கதவு திறக்கப்படும் ஓசை கேட் டது. அங்கு குழாய் திறக்கப்படவே எனது குழாய்த் தண்ணீர் நின்று விட்டது. நானும் குழாயைப் பொருத்தி இறுக்கி மூடி னேன். இப்போது நினைத்துப் பார்த்தால்கூட உடம்பெல்லாம் வெந்து புண்ணாகிவிடுமோ என்று பயமாயிருக்கிறது'' என்றார் பிரதாப்.

தோட்டத்துக்கு வந்தோம். அங்கு மதில் மீது அமர்ந் தார். ''மாலையில் சாப்பிட்டவுடன் நாங்கள் இந்தக் குட்டைச் சுவரின் மீதுதான் உட்காருவோம். நண்பர்கள் சிலர் தெருவில் போகும் வரும் பெண்களை ரசிக்க ஆரம்பிப்பார்கள். வேறு சிலர் பெண் நண்பர்களின் வரவை எதிர் நோக்கியிருப்பார்கள்....''

''நீங்கள்...?'' என்றேன்.

''எனக்கு இரண்டுமே, அன்றும் இன்றும் கிடையாதப்பா! ஆளைவிடு!'' என்று கண் சிமிட்டிக்கொண்டே கூறினார் பிரதாப்.

-''சலன்''

புகைப்படங்கள்: யோகா

✖ ''இப்போ எல்லாம் 'நீட்'டாக இருக் கிறது .... நான் இருந்தபோது ஒரே களே பரம்!''

அன்ருெரு நாள்—

வாசல் வளேவில் பின்னிக் கிடந்த மல்லிகைக் கொடியில் பூப் பறித்துக் கொண்டிருந்தாள் உமா.

நிறையப் பூக்களே வைத்துக் கொண்டு கைக்கு எட்டாத உயரத்தில் அசைந்தாடிக் கொண்டிருந்த ஒரு கொடியை வளேக்க அவள் ஸ்டூலின் மேல் எம்பி நின்று பிரயத்தனம் செய்தபோது அவளுடைய மேலாடை விலகிக்கொண்டு விட்டது.

அவள் அதைக் கவனிக்கவில்லே.

மொட்டை மாடியில் இருந்த சதாசிவம், எதிர் வீட்டு ஜன்னலில் தெரிந்த இளேஞனிடம் தென்பட்ட பரபரப்பையும் அவனுடைய கண்களில் தெறித்த பிரமிப்பையும் கண்டு, அவனுடைய பார்வை சென்ற இலக்கை நோக்கி எட்டிப் பார்த்தார்.


கெட்டுப் போய்க் கொண்டிருக்கும் புதிய தலேமுறையினருக்கு மத்தியில் தன் பெண்ணே நல்லொழுக்கத்தின் இலக்கணமாக வளர்த்து வருவதாக இறுமாப்புக் கொண்டிருக்கும் அவர், பொறுப்பாரா அந்தக் காட்சியை?

அன்று அப்பாவின் கோபம் அவளுடைய மேனி எங்கும் வரிவரியாக எழுதப்பட்ட வேதனேயில் தேற்றுவார் யாருமின்றித் தனிமையில் விசித்துக் கொண்டிருந்த வேளேயிலும், 'அப்பா நல்லதுக்குத்தானே கண்டிக்கிருர்' என்று எண்ணிய தன் அப்பாவித்தனத்தை எண்ணி இப்போது தனக்குள் நகைத்துக் கொண்டாள் உமா.

'இந்த ஒரு வருடத்தில் நான் எவ்வளவு மாறிப் போய்விட்டேன்' — அவளுக்கே பிரமிப்பாக இருந்தது.

சிறு வயது முதல் அப்பா வரைந்த கோட்டுக்குள்ளேயே பேதமையோடுமுடங்கிக்

மௌனம்



—கருணையானந்தன்—

சண்டமாருதமாகக் கீழே இறங்கி வந்தார்.

''வா....உள்ளே!''

கையில் கழியுடன் ருத்ரமூர்த்தியாக நின்ருர் சதாசிவம்.

''அதென்ன எருமை மாடாட்டம்...... கொஞ்சம் கூட ஸ்மரணே இல்லாமல்...? ஒரு நாளேப் போல மறு நாள் இப்படிக் காட்டிக்கிட்டு நின்னேன்ஞ வேணுமின்னுதான் இப்படி நிக்கறேன்னு கணக்குப் போடுவான்... இருட்டற வேளேயில நீ கோயிலுக்குப் போறப்ப வந்து 'வர்றயாடி'ன்னு கையைப் பிடிச்சு இழுப்பான்.''

வயதுக்கு வந்துவிட்ட பெண் என்ற தயக்கமோ, தாயில்லாப் பெண்ணுயிற்றே என்ற தாட்சண்யமோ இல்லாமல் விளாசித் தள்ளிவிட்டார் சதாசிவம்.

அவருக்கு ஒழுக்கம் முக்கியம்.

''மிருகங்களேவிட மனுசா ஒசத்தின்ஞ ஆம்பளேயை விடப் பொம்மனுட்டி ஒசத்தி... புரிஞ்சுக்கோ. ஏன்ஞ... அவதான் சபல புத்தியுள்ள ஆணேயும் அடக்கி ஆண்டு சமுதாய ஒழுங்கைக் கட்டிக் காத்துப் பரிபாலனம் பண்றவ. அந்தப் பொறுப்பை உணர்ந்து ஒழுக்கமா நடந்துக்கணும்கிற பிரக்ஞை ஒவ்வொரு விஞடியும் பொண்ணுக்கு இருக்கணும்... புரியுதா?''

சுடு சரங்களாக வந்து விழுந்தன வார்த்தைகள்.

கிடக்கப் பழகிப் போயிருந்தவள், 'ஸ்பெஷல் கிளாஸ்' என்று அப்பாவிடம் பொய் சொல்லிவிட்டு வந்து இதோ — 'பாய் பிரண்டோடு' கடற் கரை மணலில் உட்கார்ந்து கொண்டிருக்கிருள்.

''என்ன டியர்.... இருக்கியா?'' — அவள் விலாவில் நிமிண்டிஞன் சதீஷ்.


''....ம்ம்ம்'' — அவள் முறைப்பாகச் சிணுங்கிஞலும் உள்ளுக்குள் இனிப்பாக இருந்தது அவளுக்கு.

'சதீஷ் என்னிடம் எத்தனே அன்பாக இருக்கிருர்!'

ஊரில் விரல் விட்டு எண்ணிவிடக் கூடிய ஒருசில பணக்காரர்களில் சதீஷின் அப்பாவும் ஒருவர். சதீஷ் அவருக்கு ஒரே பிள்ளே. பெண்களே வசப்படுத்தும் கம்பீரமான தோற்றம்.

ஓவியர் (லதா) திரு வி. வி. சீனிவாசன் அவர்களிடம் கேட்ட கேள்வி;

இந்தக் கதையைப் படித்ததும் உங்களுக்குக் கடந்த கால சம்பவம் ஏதும் நினைவு வந்ததா? (அனுபவித்தது அல்லதுகேள்விப்பட்டது.)



சதீஷின் நட்புக்காக எத்தனையோ பெண்கள் காத்துக் கிடந்தனர்.

'நான் அதிர்ஷ்டக்காரி'— அடிக்கடி நெருடும் அந்த எண்ணக் கீற்றில் உமாவின் மனம் பூரித்துப் போகிறது.

சதீஷின் அறிமுகம் கிடைத்த நாள் தொட்டு, ஒரு புது உலகுக்கே வந்துவிட்டாற்போல் ஒரு இன்ப மயக்கம் அவளைத் தாலாட்டிக் கொண்டே இருந்தது.

கடல் காற்று அவள் காதோரத்துமயிர்சுருளைச் செல்லமாக வருடிவிட்டுச்செல்கிறது. அந்தச் சுகத்தில் அவளுக்குச் சிலிர்க்கிறது.

''ஆனாலும் உன்னைப்போல் ஒரு பயந்தாங்கொள்ளியை நான் பார்த்ததேயில்லை'' தவழ்ந்து வந்த அலைகளை நோக்கிச் சிறு கற்களை எறிந்து கொண்டிருந்த சதீஷின் குரலில் எரிச்சல் மண்டிக் கிடந்தது.

விஷயம் இதுதான்—

ஒரு பிற்பகலில் காரில் மகாபலிபுரம் போய் உல்லாசமாகச் சுற்றித் திரிந்துவிட்டு மாலையில் ஊர் திரும்பிவிடலாம் என்பது அவனுடைய கோரிக்கை. கொஞ்ச நாட்களாகவே நச்சரித்துக் கொண்டிருந்தான். உமாவுக்குத் தைரியமில்லை.

''நானென்றும் கோழை இல்லை சதீஷ். அஞ்சுவதற்கு அஞ்சாமை பேதைமையில்லையா''? —இதமாகக் கேட்டாள் உமா.

''நீ என்னைக் கண்டு பயப்படறே — அப்படித்தானே?'' — அவன் கண்களில் தெரியும் கோபம் நிஜமா அல்லது விளையாட்டுக்கா?

''வேண்டாம் சதீஷ்... நீங்கள் இப்படியெல்லாம் பேசினால் நான் அழுதுவிடுவேன்... பிறகு உங்களோடு பேசவே மாட்டேன். என்னைப் புரிந்து கொள்ள மாட்டேன் என்கிறீர்களே. உங்களோடு 'பிக்னிக்' வர எனக்கு மட்டும் ஆசை இல்லாமலா? மகாபலிபுரம் என்ன... நீங்கள் எங்கே அழைத்தாலும் வரத் தயார். ஆனால் எல்லாம் நம் கல்யாணத்துக்கு அப்புறம்தான்!''

''நல்லா இருக்கு நீ சொல்வது... நானா கல்யாணம் பண்ணிக்க மாட்டேனென்கிறேன்... நீதான் உங்கப்பாவைச் சம்மதிக்க வைக்கிறது கஷ்டம்னு சொன்னே'' என்றான் சதீஷ்.

உமா மௌனமானாள்.

'ஒழுக்கத்தை உயிர் மூச்சாக வலியுறுத்தும் முன்கோபக்கார அப்பாவுக்கு இந்தக் காதல் விவகாரம் தெரிய வந்தால் மென்னியைத் திருகிவிடுவார்... சந்தேகமே யில்லை.'

'சரி... அப்பாவுக்குப் பயந்து கொண்டே இருந்தால் காதல் என்னாவது?'

வாதமும் எதிர் வாதமுமாக அவள் நெஞ்சில் தோன்றி அவளை அலைக்கழித்தது.

'சந்தர்ப்பம் பார்த்துச் சீக்கிரமே அப்பாவிடம் விஷயத்தை வெளியிட வேண்டும்... அப்பா கத்தி ஆர்ப்பாட்டம் செய்யத்தான் செய்வார்' என்றெண்ணிய உமா, அப்படியொரு சந்தர்ப்பத்தில் தன் பங்கு நியாயத்தை எப்படி எடுத்துரைத்து அப்பாவைச் சம்மதிக்க வைக்க வேண்டும் என்று மனத்திற்குள்ளாகவே ஒத்திகை பார்க்கலானாள்.

சதீஷின் கார் நின்று கொண்டிருந்த இடத்துக்கு வந்து விட்டார்கள்.

''உமா... காரில் ஏறு...உன்னைக்கொண்டு போய் வீட்டில் 'டிராப்' பண்ணிவிட்டுப் போகிறேன்'' என்றான் சதீஷ் காரின் கதவைத் திறந்து வைத்துக் கொண்டு.

''ஊஹூம். வம்பாகிப் போகும். வழக்கம் போல் நான் பஸ்ஸிலேயே போய்க்கொள்கிறேன்.'' என்று சொல்லிவிட்டு நகர்ந்தாள்.

புத்தகச் சுமையை நெஞ்சோடு அணைத்தபடி படியேறித் தன்னுடைய அறையை நோக்கி விரைந்த உமாவை ஹாலிலிருந்து வந்த சதாசிவத்தின் குரல் தடுத்து நிறுத்தியது.

''நில்.... இத்தனை நேரம் எங்கே போயிருந்தாய்?''

அந்தக் கர்ஜனையைக் கேட்டதும் பழக்கம் காரணமாக நடுநடுங்கிப் போன உமா சட்டென்று சுதாரித்துக் கொள்ள முயன்றாள்.

தன்னுடைய 'ஸ்பெஷல் கிளாஸ்' போய் வெளிப்பட்டுப் போன உண்மை நொடியில் புரிந்துவிட்டது அவளுக்கு.

ஆரம்பத்தில் அவருடைய கையை ஓங்க விட்டுவிட்டால் எல்லாமே கெட்டுப்போகும்.

துணிந்துவிட்டாள் உமா.

நழுவி நழுவிப் போய்க் கொண்டிருந்த தைரியத்தை நெஞ்சில் ஒன்றுகூட்டி நிலைப்படுத்தி, தாழ்ந்திருந்த பார்வையை நேராக்கி அப்பாவை ஒரு கணம் தீர்க்கமாகப் பார்த்தாள்.

''என் பாய் பிரண்டைச் சந்திக்கப் போயிருந்தேன்.''

இதைச் சொல்லிவிட்டு அங்கே ஒரு பிரளயத்தையே எதிர்பார்த்துக் கண்களை இறுக மூடிக்கொண்டு விட்டாள் உமா.

இடிவிழுந்தவர் போலானார் சதாசிவம்.

அலுவலகத்திலிருந்து வரும் வழியில் உமாவின் வகுப்புத் தோழி வதனாவைக் கடைத்தெருவில் பார்த்தார். அவர் மனம் துணுக்குற்றது. வதனாவை அழைத்து அவளுக்குச் சந்தேகம் ஏற்படாத வண்ணம் கேள்விகளைப் போட்டு, 'ஸ்பெஷல் கிளாஸ்' இல்லை என்ற உண்மையைத் தெரிந்து கொண்டு விட்டார்.

வினாடிகள் நிமிடங்களாக உருப்பெற்ற பின்னும் எதிரே இடிமுழக்கங்கள் கேட்காத ஆச்சரியத்தில் இமைகளைப் பிரித்த உமா, அப்பாவின் நிலை கண்டு துணுக்குற்றாள்.

'ஆட்டுக் குட்டியைப் போல் அடங்கிக் கிடந்த மகள் எதிர்த்துக் கொண்டு நிற்கிறாளே' என்ற அதிர்ச்சியா?

'எது எப்படியானாலும் முதல்கட்ட வெற்றி எனக்குத்தான்' என்றெண்ணிய உமா அந்த வெற்றியை உறுதி செய்து கொள்ளவும், பூரணமாக்கிக் கொள்ளவும் அவசரப்பட்டாள்.

''நானும் சதீஷும் ஒருவரையொருவர் நேசிக்கிறோம் அப்பா....''

சதீஷ்?

சதாசிவத்துக்கு மீண்டும் ஓர் அதிர்ச்சி.

சதீஷைப் பற்றி அவர் நிறையவே கேள்விப்பட்டிருக்கிறார். –அப்பாவிப் பெண்களை ஆசை காட்டி மோசம் செய்யும் பணக்கார வீட்டு விளையாட்டுப்பிள்ளை என்று.

'உமாவை ஒழுக்கமுள்ள பெண்ணாக வளர்க்க நான் கையாண்ட கடுத்தமான வழிமுறைகள் மிக மோசமாகத்தான் தோற்றுப்போய்விட்டன' என்றெண்ணிக் கொண்டார் சதாசிவம்.

மிஞ்சிக்கொண்டு நிற்கும் மகளைப் பார்த்தார்.

அவளைத் தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள அவர் நம்பியிருந்த 'கண்டிப்பும் கறாரும்' செல்லாக் காசாக்கிவிட்ட உண்மை புரிந்தது. மகளுக்கு முன் நிராயுதபாணியாக நிற்பதான பிரமையில் செயல் இழந்து சோர்ந்து சோபாவில் சரிந்தார் சதாசிவம்.

இந்த மௌனம் ஒரு வகையில் அவளுக்குச் சாதகமே. அவள் சொல்ல நினைத்ததை



''சிமிண்ட்டிலே நிறைய மணல் கலந்து அரசாங்கக்கட்டிடங்கள் கட்டினார்னு அந்தக் கண்ட்ராக்டரை அஞ்சு வருஷம் ஜெயிலிலே போட்டாங்க! ரெண்டாம் நாளே தப்பிச்சுண்டு ஓடிட்டார்!''

''எப்படி?''

''அந்த ஜெயிலும் அவர் கண்ட்ராக்டிலே கட்டினதாச்சே! ஈஸியா சுவத்தைப் பெயர்த்துண்டு கிளம்பிட்டார்!''

-அ. இராமதாஸ்

இடையூறு இல்லாமல் சொல்லி முடித்து விடலாமல்லவா?

''அப்பா...அவர் பெரிய பணக்கார வீட்டுப் பிள்ளை. நம்மை விட அந்தஸ்தில் பல படிகள் உயர்ந்தவர்.... ஆனால் என்னிடம் எத்தனை அன்பாகப் பழகுகிறார் தெரியுமா?''

இறுகிப் போயிருந்த சதாசிவம் ஒன்றுமே பேசவில்லை.

''அப்பா... சுதந்திரமாய்ப் பறந்து திரிய வேண்டிய பறவையைக் கூண்டுக்குள் 'பாதுகாப்பாக' அடைத்து வைக்க நினைக்கும் உங்களுடைய பத்தாம் பசலித்தனம் அர்த்தமில்லாதது.''

சதாசிவத்தின் புருவம் உயர்ந்தது.

'ஒன்றுமே தெரியாது என்று நான் எண்ணிக் கொண்டிருந்த உமாவா இப்படிப் பேசுகிறாள்?'

''நான் இன்னமும் சின்னப் பெண் இல்லை நல்லது கெட்டது தெரியாமல் போவதற்கு. என்னைப் புரிந்து கொண்டு உங்கள் கட்டுப்பாட்டைத் தளர்த்தி என் உணர்ச்சிகளுக்கு நீங்கள் சுதந்திரம் தரவேண்டும்.''

''......''

தான்மட்டும் மேலே பேசிக் கொண்டு போவது அர்த்தமற்றதாகப் பட்டது உமாவுக்கு. அப்பா வாயைத் திறந்து பேசினால் நல்லது என்று நினைக்கத் தொடங்கினாள். 'ஆமாம்....ஒன்றுமே பேசாமல் தொடர்ந்து மௌனத்தைக் கடைப்பிடிப்பதன் மூலம் 'அரூப'மாகி நிற்பவரை நோக்கி எப்படிக் குறிபார்த்துக் கணை தொடுப்பது... வெல்வது?'

''நீங்கள் நினைப்பது போல் நான் ஒன்றும் கெட்டுப் போய்விடவில்லை...''

''......''

''சதீஷ் என்னை மணந்து கொள்வதாக வாக்களித்திருக்கிறார்.''

''.....''

அப்பாவின் மௌனம் காரணமில்லாமல் எரிச்சலூட்டியது உமாவுக்கு. என்ன நெஞ்சழுத்தம் இவருக்கு என்றொரு எண்ணக் கீற்று எழுந்தது.

''இவள் கத்தினால் கத்திவிட்டுப் போகட்டும்... நம்மை மிஞ்சி என்ன நடந்துவிடும் பார்க்கலாம் என்று தப்புக் கணக்குப் போட்டீர்களானால் நிச்சயம் ஏமாந்துதான் போவீர்கள்...''

—நிஜமாகவே கத்தினாள் உமா.

ஊஹூம். சதாசிவம் அசையவே யில்லை.

அவருடைய மௌனம் மெள்ள மெள்ளத் தன்மீது ஒரு பாதிப்பை ஏற்படுத்தி ஆதிக்கம் செலுத்த முற்படுவதை உணர்ந்த உமா திடுக்கிட்டுப் போனாள்.

சொல்ல விரும்பியதைச் சீக்கிரமே சொல்லி முடித்துவிட்டு அங்கிருந்து ஓடிப்போய்விட வேண்டும்போல் ஒரு துடிப்பு.

''இது என்னுடைய வாழ்க்கைப் பிரச்னை. உங்களுடைய அபிப்பிராயத்தை என் மீது திணிக்க முயற்சி செய்யாதீர்கள்...''

''.....''

''நீங்கள் எங்களுடைய காதலை அங்கீகரித்து ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லாவிடில்—''

உணர்ச்சிப் பின்னலில் வார்த்தைகள் வராமல் தடைப்பட்டன. காரணமில்லாமல் கண்களில் நீர் துளிர்த்து நின்றது.

மூச்சை நன்றாக இழுத்து வாங்கித் தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டு மேலேதொடர்ந்தாள் உமா.

''நீங்கள் சம்மதித்தால் எங்கள் திருமணம் சம்பிரதாய முறைப்படி நடக்கும். இல்லாவிடில் எப்படியும் எங்கள் திருமணம் நடந்தே தீரும்...''

''......''

''நீங்கள் குறுக்கே விழுந்து தடுக்க முயன்றாலும் உங்கள் முயற்சி வெற்றிபெறாது.''

''.....''

''சட்டம் எங்கள் பக்கம்தான். ஞாபகமிருக்கட்டும்.''

—ஆவேசமே வந்து விட்டாற்போல் கோபாவேசமாகச் சுட்டு விரலை ஆட்டிப் பேசிய உமா இன்னமும் கலையாத அப்பாவின் அசாதாரண மௌனம் தன்மீது அழுத்தமாகப் படிந்து உடும்புப் பிடியாய் இறுக்குவதை உணர்ந்தாள்.

அவளுக்கு மூச்சுத் திணறல் எடுத்தது.

அங்கேயிருந்து ஓடிப்போய்விடத் துடித்தாள். கால்கள் ஒத்துழைக்க மறுத்தன.

ஓரிரு விநாடிகளில் மூச்சோட்டம் நின்று போய்விடுமோ என்ற மிரட்சி அவளை ஆட்கொண்டது.

தாங்க முடியாத அந்த மரணவஸ்தையிலிருந்து விடுபட வேண்டும் என்ற துடிப்பில்...

என்ன செய்கிறோம் என்ற பிரக்ஞையே இல்லாமல் — அனிச்சையாக 'ஓ'வென்று பெருங் குரலில் கதறி அழுதபடி அப்பாவின் காலடியில் போய் விழுந்தாள்.

''என்னை மன்னிச்சுடுங்கப்பா...''

தமது கடும் வார்த்தைகளும் கண்டிப்பும் பயனற்றுப் போன இடத்தில் தமது மௌனமே வெற்றி பெற்று விட்டதைக் கண்ணுற்ற சதாசிவம் மேலும் திகைத்துப் போனார்.

● அருமையான அட்டைப் படம். இரண்டு விரல் தொப்பியில் காட்டுவது இரட்டை இலையா? இரண்டுக்கு மேல் வேண்டாம் என்பதா? அல்லது சர்ச்சில் காட்டிய விக்டரி சின்னமா?
திருநெல்வேலி ஜி. சதாசிவம்

● விஜய் அமிருதராஜ் விம்பிள்டனில் வெற்றி பெருவிட்டாலும் ஆடும் களத்தில் அவர் கையாளும் நேர்மையான வழிகளைப் படித்துப் பெருமிதம் அடைந்தேன். வெற்றியை எந்த விதத்தில் பெறுகிறோம் என்பது மிகவும் முக்கியம்.
சென்னை-28 எல். ஆர். விஜயகுமார்

● மக்வானு பேசியதைப் பத்திரிகைகளில் படித்து வேதனைப்பட்டுக் கொண்டு இருந்த என் போன்றவர்களுக்கு கார்ட்டூனிஸ்ட் உமாபதி அமைச்சரின் தலையில் ஒரு தட்டுத் தட்டியதைப் பார்த்தபோது உண்மையிலேயே பூரிப்பாக இருந்தது.
மதுரை-1 சு. பாலமூர்த்தி

● முதல் பக்கத்தில் மாணவி அல்லா மிஸ்ஸிக் சாதிக்கிறார். தலையங்கத்தில் விஜய் சாதிக்கிறார். செம்பியன் கட்டுரையில் 'மாதாஜி' சாதிக்கிறார். உள்ளே அனந்தன் சாதிக்கிறார். கோவி. மணி சேகரன் கதையில் திருநாராயணப் பட்டர் சாதிக்கிறார். எல்லாமே சாதனையாக இருக்கின்றதே! சாதனை மலரோ?
களமருதூர் கிணவை ர்மணி

● அப்பாடா! வெகு நாளைக்குப் பிறகு செம்பியன் கட்டுரை வந்துள்ளதே என்று வெகு ஆர்வமாகப் படித்தேன். ஆமாம், இந்திராவைக் கிண்டல் செய்யவில்லை என்றால் உங்களுக்குத் தூக்கமே வராதா?.
குதிரிமங்கலம் வி. ரங்கநாதன்

● இந்திரா அம்மையாரைப் புகழ்ந்து எழுதுவதில் போட்டா போட்டியாக இங்கு பல பத்திரிகைகள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. அம்மையாரின் உண்மை உருவத்தைப் படம் போட்டுக் காட்டிவரும் கல்கி போன்ற ஒன்று இரண்டு பத்திரிகைகள் கூட கையில் ஜால்ராவைப் பிடித்துக் கொள்ள வேண்டுமென்று எவரேனும் ஆசைப் பட்டால், அவர்கள், எதிர்ப்புக் குரலே நாட்டில் இருக்கக் கூடாது என்ற இந்திராவின் கொள்கையை ஏற்றவர்களாகத்தான் இருப்பார்கள். கல்கி, அவர்களுக்கு அடிபணிந்துவிடக் கூடாது.
சிதம்பரம் சிவ. ராஜகுமார்

● ஜே. எஸ். ராகவனின் ''ஒரு எழுத்தாளரும் ஐந்து எடிட்டர்களும்'' கதையைப் படித்தேன். சமீபத்தில் இதைப் போன்ற உயர்ந்த ஹாஸ்யக் கதையைப் படித்ததில்லை. அதுசரி, பத்திரிகை உலக ஜாம்பவான்களான விகடன், குமுதம் ஆசிரியர்களை ''இதயம் பேசுகிறது'' ஆசிரியர் பின்னால் நிற்பதுபோல படம் போட்டிருக்கிறீரே, என்ன ''தில்'' உமக்கு?
மின்பாறை வெ. சியாமளா ரமணி



● ஜே. எஸ். ராகவனின் 'ஐந்து எடிட்டர்கள்' கதை ரொம்பப் பிரமாதம். கிட்டத்தட்ட நான் எழுதும் கதையை ரசிப்பது போல ரசித்தேன்!
புதுடில்லி ''அகஸ்தியன்''

● இன்றைய இளம் எழுத்தாளர்கள் நிறையப்பேர் இப்படியான பகல் கனவில்தான் மிதந்து கொண்டிருக்கிறார்கள். ஐந்து எடிட்டர்கள் அல்ல; அவர்களின் துணை எடிட்டர்கள் அத்தனை பேரையும் கனவில் கண்டு வாய்ப்பைத் தேடிக் கொண்டு இருக்கிறார்கள்!
பெங்களூர் ப. மூர்த்தி

● கிண்டியா? கிண்டலா? நடு பக்க ஜோக்ஸ் அனைத்தும் மனத்தைச் சுண்டி இழுத்து வண்டி வண்டியாகச் சிரிக்க வைத்தன.
சிவகாசி கே. ராகவன்

● 'ஆணவம்' சிறுகதையில் வரும் ''கடைசித் தடவையாக ஸ்கோலுக்குப் போயிட்டு வந்துடறேன்'' என்ற வரி மனத்தைத் தொட்டது. கதையின் முடிவும் நன்றாக இருந்தது.
விழுப்புரம் கே. ஜி. ராதாகிருஷ்ணன்

● இவ்வாரம் கல்கியில் எல்லா அம்சங்களும் சிறப்பாக இருந்தாலும், ருக்மிணி பார்த்தசாரதியின் ''தலை குனிவு'' சிறுகதைக்குத்தான் முதலிடம்.
குரோம்பேட்டை வி. தியாகு

● திரு நாராயண பட்டருக்கு மட்டுமா சொர்ணபிஷேகம்? அழகு தமிழில் அருமையானதோர் காவியத்தைத் தந்த மணிசேகரரே! பெற்றுக்கொள்ளும் எங்களது வாழ்த்தபிஷேகத்தை!
சென்னை-63 எல். ரவி சங்கர்

● ''அகப்பட்டுக்கொண்டார்கள்'' பகுதியில் எஸ். சந்திரமௌலி வழங்கிய துணுக்கைப் படித்தேன். கென்யாவில் உள்ளதைப் போல் இங்கும் சம்பளச் சட்டத்தை அமுல் செய்தால் என்ன? சாராய, கள் யுகத்தில் சில குடும்பங்கள் அரை வயிறு கஞ்சியாவது குடிக்க உதவியாக இருக்குமே!
மேட்டுப்பாளையம் எம். பி. ரத்னகுமார்

● ''தே. மா.ப. சுண்டல்'' பகுதி ''தொ. வ. எ. கே. கொ.'' (தொடர்ச்சியாக வரட்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.)
சென்னை-4 ஏ. சங்கர்

ரோடோரத்து கான்கிரீட் கிராதியின் மேல் உட்கார்ந்திருந்தான் ராஜாராமன். பார்வைக் கிரணங்கள் குறிப்பில்லாமல் சஞ்சாரிகள் மேலும் குறிப்பாக வண்ணப் புடவைகள் மேலும் லயித்திருந்தன. இது அவனது நித்திய கருமம். இப்படி சாயந்திர நேரத்தில் உட்காருவது... இன்னும் கொஞ்ச நேரத்தில் அங்கே வந்து கூடப் போகிற

வறுமைக் கோடு



பொழுது போக்கு சூரர்களோடு முதலமைச்சர்களை, பிரதமர்களை, ஜனாதிபதிகளை ஆக்கி அழித்து, நடிக நடிகையர்களின் அவலங்களைப் படம் பிடித்து, இரவல் ராணிகளை வாயால் மேய்ந்து, பத்து மணிக்கு மனசில்லாமல் பிரிந்து போவது அவர்களுக்கு வாழ்க்கை....

''ஏனுங்க... நாளைக்கு கலெக்டர் ஆபீஸ் எத்தனை மணிக்குத் தொறக்கும்.. கலெக்டர் எத்தினி மணிக்கு வருவாரு...''

ராஜாராமன் குரலுக்குரியவனைத் திரும்பிப் பார்த்தான்.

தன்னைக் கேள்வி கேட்ட ஆள் வறுமைக் கோட்டில் எந்த வர்க்கத்தில் சேர்த்தி

அமரர் கல்கி
நினைவுச்
சிறுகதைப் போட்
1000 ரூபாய்
முதல் பரிசுக்
கதை

என்று ராஜாராமனுக்குப் புரியவில்லே. அவன் தலேயைப் பார்த்தான். ஒவ்வொரு தடவையும் முடிவெட்டுகிறபோது மட்டுமே எண்ணெய் போட்டு வாரி ஒழுங்கு செய்வான் போலப் பட்டது. சட்டை வேஷ்டியில் அழுக்கும் புழுதியும். துவைத்து ஒரு வாரம்... மாசம் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாத படி இருந்தது. உழைப்பில் முகம் கறுத்து, ஒடுக்கு விழுந்திருந்தது. அந்த ஒடுக்குகளே மறைக்க முடியாத முக ரோமம். கால் செருப்பின்றி விரல்கள் திசை மாறிப் பார்த்தன.

இவனுக்கும் கலெக்டர் ஆபீஸுக்கும் கலெக்டருக்கும் என்ன சம்பந்தம் இருக்க முடியும் என்று ராஜாராமனுக்குப்புரியவில்லே.

''நாளேக்குப் பத்தரை மணிக்கு ஆபீஸ். கலெக்டர் வர்ற நேரத்தைச் சொல்ல முடியாது. வரலாம்... வராமலேகூட போகலாம்....''

''இல்லே... நாளேக்கு கலெக்டர் வருவாராம். ஏ-ஒண்ணு சொன்ஞர்.''

''ஏ-ஒன்...'' ராஜாராமன்'' நிமிர்ந்தான்.

''என்ன விஷயம்?''

''கலெக்டரைப் பார்க்கணும்.''

''என்னடா இவன் பைத்தியக்காரஞ இருக்கானே'' என்று ராஜாராமன் மனசுக்குள் சலிப்புப் பிறந்து எரிச்சல் குமிழ் போட்டு வெடித்தது. அவருக்கு ஆயிரம் வேலே இருக்கும். பஸ் ஸ்ட்ரைக்... விவசாயிகள் பிரச்னே... பால் போராட்டம்... எதிரே கூட்டம் போட்டுக் கொடிபிடித்து நிற்கிற கம்யூனிஸ்ட் இளேஞர் கூட்டம்... அடுத்த நாள் உண்ணு விரதத்துக்கு ஒரு பந்தல் வேறு தயாராகிக் கொண்டிருந்தது. நாளேக்குக் காலே பிரமுகர் ஒருத்தர் வருகை வேறு...

''கலெக்டரைப் பார்க்கறது கஷ்டமாச்சேப்பா. அவருக்கு ஏகப்பட்ட வேலே இருக்கும்... உன்னேப் பார்ப்பாரா?''

''அதெல்லாம் பார்க்கலாமுங்க... அங்க கிளார்க் ஒருத்தர் இருக்காரு... அவருகிட்ட ஒரு சீட்டு எழுதித் தந்துட்டா கூப்பிடுவாரு. போய்ப் பார்க்கலாமாம்...''

'அவ்வளவு சுலபமா?' என்று ராஜாராமன் யோசித்தான். அவன் கலெக்டரை இந்த மாதிரி பேட்டி கண்டதில்லே.

''நீ சொல்ற மாதிரி சுலபமாப் பார்க்க முடியாதுன்னு நினேக்கிறேம்ப்பா.''

''இல்லீங்க... நான் ரெண்டு மாசம் முன்னே கூடப் பார்த்துப் பேசினேன்.''

''இவனுக்குக் கொஞ்சம் சரக்கு இருக்கணும்'' என்று ராஜாராமன் நினேத்தான்.


''என்னப்பா சமாசாரம்?''

''பி. ஏ. பி. தண்ணி தகராறுங்க. நம்ம வயலுக்குத் தண்ணி விட மாட்டேன்னு பக்கத்துக் காட்டுக்காரன் தகராறு பண்றுன். அதற்குக் கலெக்டரைப் பார்த்துச் சொன்ஞ அவரு நேரா வந்துபார்த்து ஏற்பாடு பண்ணுவாரு.''

''நேரா வந்து பார்த்து....''

''ஆமாங்க...கூடவே வருவாரு.''

இவன் பைத்தியமோ என்று இப்போது எண்ணம் எழுந்தது. இந்தப் பரட்டைத் தலே சொல்



வதைக் கேட்டு, கலெக்டர் நேராக வரு வதாவது.

''நேரா வர அவருக்கு நேரம் இருக் கணும்பா...''

''அதெப்படிங்க... நேரா வந்தாத்தானே ஒரு ஒழுங்கு ஆகும்? அங்க பயிரு காயுது... ரெண்டு வருஷமா விவசாயம் பண்ண முடி யலே. நம்மகாட்டுக்குத் தாசில்தாரு வந்தாரு. சப் கலெக்டர் வந்தாரு. ஒண்ணும் முடி யல்லே....''

சுதந்திர இந்தியாவின் மேலும் அதன் தூண் களான ஆபீஸர்கள் மேலும் தனக்கிருக்கிற சொந்த அபிப்பிராயங்களை இந்தப் பட்டிக் காட்டான் மாற்றிவிடுவானோ என்ற பயம் ஏற்பட்டது ராஜாராமனுக்கு. தாசில்தார் சப் கலெக்டர் இவன் காட்டுக்கு வருவ தாவது...

''உங்க ஊரு எதுப்பா?''

அவன் பஸ் ஸ்டாண்டிலிருந்து ஆரம்பித் தான். அவன் விவரணம் பத்து நிமிடம் பிடித்தது. ஊருக்குப் போய்ச் சேர மூன்று மணி நேரம்... இரண்டு பஸ்..ஒரு கட்டை வண்டி... மூணு பர்லாங் கால்நடை...இங்கே சப் கலெக்டர் வந்திருக்கிறார்...!

''உன்னோட பிரச்னை என்னப்பா?''

''பாருங்க... நம்ம வயல் கீழ் கால்லே இருக்குங்க. இன்னொருத்தர் வயல் மேல் கால்லே இருக்கு. பி.ஏ.பி. தண்ணி...''

''மறுபடியும் பி.ஏ.பி. தண்ணி'' அது என்ன என்று யோசித்தான் ராஜாராமன். சட்டென்று புரியவில்லை. ''பி.ஏ.பி.ன்னு என்ன?''

''அதாங்க பரம்பிக்குளம்...''

''ஓ...பரம்பிக்குளம் ஆளியாறு திட்டமா? சரி, சரி. மேலே சொல்லு.''

''அந்த பி. ஏ. பி. தண்ணி அவன் வயல்லே புகுந்து நம்ம வயலுக்கு வரணுமுங்க. நம் வயலு கோடியிலே இருக்கு... தண்ணி வர வேறே வழியும் கிடையாது. அவன் வயல் வழியாத்தான் வந்தாகணும்... இந்தத் தண்ணி வயலுக்குக் கொண்டார நான் பட்ட பாடு எவ்வளவு இருக்கும் தெரியுங்களா... வந்தும் பிரயோஜனமில்லீங்க... அவன் வயலைத் தாண்டி தண்ணியை வரவிடமாட் டேங்கறான். தண்ணியை அடைச்சிறான்...''

''அதிலே அவனுக்கு என்ன நஷ்டம்?''

''பொறாமைதாங்க. ஒருத்தன்பொழைச்சா இன்னொருத்தனுக்கு ஆகுதுங்களா?''

''உனக்கு எவ்வளவு நிலம்இருக்குதுப்பா?''

''அது ஒண்ணும் ஜாஸ்தி இல்லீங்க... நாலு ஏக்கர்தான்...''

''எவ்வளவு மதிப்புப் பெறும்?''

''ஒரு நாப்பது ரூபா பொறும்.. நெறை சீர் பண்ணியிருக்கனுங்க. வாங்கினது இருவதுக்குத்தான்....''

''நாற்பதாயிரம் ரூபாய்...'' ராஜாராமன் அவனை மறுபடி பார்த்தான். தனக்குச் சொந்தமாக என்ன தேறும் என்று கணக்குப் போட்டான். எவனாவது ஏமாந்த மாமனார் கிடைத்தால் தன் சம்பாத்தியத்துக்கு இரு பது பவுன் போடுவார். இப்போதைய கடன் மூவாயிரம். இனி தன் தங்கைகளால் ஏற் படப் போகிற கடன் சமாராகப்பத்தாயிரம். வரப்போகிற நகையும், ஏற்படப் போகிற கடனும் ஒன்றை யொன்று கபளீகரம் செய்யப் பார்த்துக் கடைசியில் பெண் டாட்டி கழுத்தில் ஒரு தாலிச் சரடு மிச்ச மானால் ஜாஸ்தி... இதில் நாற்பதாயிரம் என்பது இதமான கனவே தவிர என்றுமே நடக்க முடியாத நிஜம். ஆனால் இந்தப் பட்டிக்காட்டான் தன்னுடைய ஒரு இத மான கனவின் மூலதனத்துக்குச் சொந்தக் காரன்... அவனுக்காகத் தைத்திராத அந்தச் சட்டையில் ஒன்பது கிழிசல். ஒரு வண்டி அழுக்கு... ஆனால் அவனுக்கு இப்போது நாற்பதாயிரம் சொந்தம்....

''ம்... சரி... அப்புறம் என்ன ஆச்சு?''

''நியாயப்படிங்க ஒருத்தர் வயலுக்குப் பாயற தண்ணியை இன்னொருத்தர் நிறுத் தினாத் தப்புங்க. கலெக்டர் பார்த்து அவ

நினைவில் நிற்கும் காட்சி

பதினாறு வயதினிலே

''சப்பாணி'' ஒரு வளர்ந்த உருவம். வயது முதிர்ந்த பருவம். மனத்தால் வளராத சொன்ன தைச் செய்யும் உழைக்கும் ஐந்தறிவு ஜீவன்.

தாயைப் போல் வளர்த்த ஒரு ஜீவன் மறைந்து விட்ட நேரத்தில் அவளது மகளுக்குப் பாதுகாப்புத் தரவேண்டியது தனது நன்றிக் கடன் என்கிற ஏதோ ஒரு எண்ணத்தில் உந்தப்பட்டு ''மயிலு''க்கு இரவு காவல் காக்கிறான்.

காய்ச்சலால் வாடி வதங்கித் தூங்கி எழு கிறாள் மயில். வழக்கமாய் வீட்டுவாசலில் தூங்கும் சப்பாணி இன்று வீட்டினுள் வந்து தூங்கும் அதி சயத்தை வாய் விட்டுக் கேளாமல் பார்வையால் பார்க்கிறாள் மயில்!


'மயிலு மயிலு! என்னை மன்னித்துவிடு மயிலு ராத்திரி நீ ஜுரத்திலே எதை எதையோ பேசினே! சரியாத் தூங்கலே. அதனாலே நானே கஞ்சி காய்ச்சிக் கொடுத்துட்டுக் காவலாக இந்த இடத்தி லேயே அப்படியே இருந்திட்டேன். அதே அசதி யிலே தூங்கிட்டேன்!

'மயிலு! ஆத்தா கோழி வளர்த்தா, ஆடு வளர்த்தா ஆனா நாயை வளர்க்கலே ஏன் தெரி யுமா? அதான் நான் இருக்கேனே'

என்று முடிப்பான் சப்பாணி! மயிலாக ஸ்ரீதேவி சப்பாணியாகக் காதல் இளவரசன் கமலஹாசன்!

இந்தக் காட்சி சமீப காலத்தில் 'ஓஹோ!' என்று எல்லோராலும் புகழ் உச்சிக்கு ஏற்றம் பெற்ற படமாகப் ''பதினாறு வயதினிலே''யில் வருகிறது.

ப. மூர்த்தி



னுக்கும் தண்ணி விடாமச் செய்யலாம். தாசில்தாரு, சப் கலெக்டர் எல்லாம் வந்து பார்த்து ராஜி பண்ணுங்க... அவன் ஒத்துக்கலே. சரி...சரின்னு தலையாட்டுவான்... அவங்க போனதும் தண்ணியை அடைச்சிடுவான்.... பாருங்க இதுல விவரமா எழுதியிருக்கேன்....''

ஒரு காக்கிப் பையைத் திறந்து, பின்பு ஒரு பாலிதீன் பையை விரித்து ஒரு குட்டைப் பேப்பரை எடுத்து அதில் குறிப்பாக ஒன்றைக் காட்டினான். அழகான ஆங்கிலத்தில் தன் சிரமங்களை டைப் செய்திருந்தான். பக்கத்து வயல்காரன் இந்தியாவின் பசுமைப் புரட்சியை எப்படி வேரறுக்கிறான் என்று விளக்கி யிருந்தான். தனக்குத் தொல்லை தருகிற அண்மைக் காட்டுக்காரனுக்கு பி. ஏ. பி. தண்ணீர் நிறுத்துவது சரியான வழி என்று வாதாடி யிருந்தான்.

''இது யாருப்பா எழுதினது?''

''நம்ம வக்கீலுங்க.''

''வக்கீல்கிட்ட எதுக்குப் போனே?''

''அவன் மேலே மகசூல் நஷ்டத்துக்காக ஒரு கேசு போட்டிருக்கேங்க. இரண்டு வருஷமா நாப்பது பொதி மேலே எனக்கு மகசூல் கிடைக்கலிங்க... தவறிப்போச்சில்லே?''

நஷ்டம் எவ்வளவு என்று ஒரு மாதிரி கேட்டுத் தெரிந்து கணக்குப் போட்டுப் புரிந்து கொண்டான் ராஜாராமன்.

''ஏம்பா பதினைஞ்சாயிரம் இருபதாயிரம் நஷ்டம் வரும்போல் படுதே...''

''அதுக்குத்தாங்க கேஸு....''

''ஜெயிக்குமா?''

''அதெல்லாம் ஜெயிக்குமுங்க... வக்கீல் சொல்லியிருக்காரு. மேல் வீட்டிலே மணியக்காரரு போட்டு ஜெயிச்சாரே...''

''இதுக்கு எவ்வளவு செலவாச்சு?''

''ஒரு ரெண்டாயிரம் ரூபா வரை ஆச்சுங்க.''

''பாவம்பா நீ...''

''என்னங்க செய்யறது..''

''ஏம்பா... அவன் தண்ணியைத்தான் அடைக்கறானே... உனக்கு நியாயப்படி வர வேண்டிய தண்ணிதானே... நீ எடுத்து விடறது?'' என்றான் ஆத்திரத்தோடு... இவனெல்லாம் கோழை என்று மனத்தில் எழுந்தது.

''நீங்க சொல்றபடி நடக்கறதுன்னா குத்து வெட்டு போலீஸ்னு வேறே அலையணுங்க. அப்படிச் சாமர்த்தியம் பார்க்கறதுலே என்னங்க பிரயோசனம் இருக்கு... சட்டம் இருக்கு... கலெக்டர் இருக்காரு....''

அவன் நம்பிக்கை ராஜாராமனுக்கு ஆச்சரியத்தை அளித்தது. தானும் தன்னைப் போன்ற மற்றவர்களும் நினைத்தது போல் இவர்கள் எடுத்ததற்கெல்லாம் கசாப்படி வியாபாரம் செய்பவர்கள் அல்ல என்பது புரிந்தது. தனக்குக் கேட்கிறபோதே கோபம் வருகிற ஒரு விஷயத்தில் பட்டு அனுபவிக்கிற இவனுக்குக் கோபம் வருவதில்லை... நிதானிக்கிறான். முன்பின் யோசிக்கிறான்....

''ஏம்பா நீ விவசாய சங்கத்திலே மெம்பரா?''



நினைவில் நிற்கும் காட்சி

நல்லதம்பி

நல்ல தம்பி என்ற படத்தில் என். எஸ். கிருஷ்ணனும் டி. ஏ. மதுரமும் தேவதூதர்களால் இந்திர சபைக்கு அழைத்து வரப்படுகிறார்கள். இந்திரன் அவர்களைப் பார்த்து யாரென்று கேட்க, தருமம் தழைத்தோங்கும், தமிழ் நாட்டிலிருந்து வந்திருப்பதாகக் கூறி, தமிழ்நாட்டின் பண்பு, கல்வி கலாசாரம், செல்வம் ஆகியவற்றைப் புகழ்ந்து பாடலின் மூலம் என்.எஸ்.கே. விவரிக்கிறார். ''பூலோகத்தில் மதுவை ஒழித்து விட்டார்களாமே?'' என்று இந்திரன் வினவ, ''குடி கெடுத்த குடி ஒழிந்தது. அடிதடி சண்டை அதுவும் ஓய்ந்தது'' என மதுவிலக்கால் பெண்களுக்கு ஏற்பட்ட நன்மைகளைப் பற்றி மதுரம் பாடுகிறார். என்.எஸ். கிருஷ்ணனும் மதுவிலக்கால் தான் மனிதனாகிப் போனதாகக் கூறுகிறார். இதையெல்லாம் கேட்ட இந்திரன், மதுவின் தீமையையும் மதுவிலக்கின் நன்மையையும் இந்திர லோகத்தில் பிரசாரம் செய்யுமாறு அவர்களை வேண்டுகிறார்.

மதுவிலக்குப் பிரசாரத்துக்கென அரசாங்கம் கோடிக் கணக்கான பணம் செலவழித்தும் சாதிக்க முடியாத பலனை மேலே கண்ட சினிமாக் காட்சி சாதித்தது.

என். நாகலட்சுமி

''ஆமாங்க...போன மாசம் சேர்ந்தேன்.''

''கவர்ன்மெண்டு கடன் வாங்கியிருக்கியா?''

''வாங்கினேனுங்க... திருப்பிக் கட்டிட்டேன். ஒரு நானூறு ரூபாய் வரை திருப்பித் தரணுங்க... தந்துவிடுவேன்...''

''இப்போ பலபேரு திருப்பித் தரமாட்டேன்னு சண்டித்தனம் செய்யறாங்களே... உங்க ஊர்ல அதிகம் யாரு வாங்கியிருக்காங்க?''

''ஒருத்தர் இருக்காருங்க. அவருக்கு அம்பது ஏக்கர்வரை தேறும். இருபதாயிரம் வரை வாங்கியிருக்காரு... ஏதோ போராட்டம் பண்றாங்களாம். திடீர்னு ஒரு நாளு கவர்ன்மெண்டிலே கட்டச் சொன்னா கட்டிடுவாரு... நம்மாலே முடியுங்களா...கொஞ்சம் கொஞ்சமாக் கட்டிட்டேன்.''

''ஏம்பா விவசாயிகள் சங்கத்திலே சொல்லி ஊருக்குள்ளே ஒரு ராஜி பண்ணிக்க உன்னாலே முடியாதா?''

''அதுக்கெல்லாம் அவன் கட்டுப்பட மாட்டாங்க... அவன் ஒரு முட்டாளுங்க... நான் எல்லா வழியையும் பார்த்துட்டேன்.''

''ஏம்பா ரெண்டு வருஷமா விளைச்சல் இல்லியே என்ன பண்றே?''

''என்னமோ பண்றேங்க... அப்பப்போ ஒழவு வேலைக்குப் போறேன். வீட்டிலே பொஞ்சாதியும் பொண்ணும் காட்டு வேலை செஞ்சு சம்பாதிக்கிறாங்க. பொழுது போகுது....''

''நெலத்திலே வேறெ ஏதாவது போடறது....''

''அதுலே பிரச்னை இருக்குதுங்க. அப்படியும் செய்ய முடியாது.''

''ஏம்பா கலெக்டர் உன்னோட வேலையை ஒத்துக்கிட்டு உங்கூட எப்படி வருவாரு?''

''எல்லாம் வருவாருங்க. அங்க நாத்தப் புடுங்கி நட்டாச்சு... நாலு நாள்ளே தண்ணி வரல்லே...பயிறு காஞ்சுடும்.... எவ்வளவு எருவு, மருந்து....செலவு... சொன்னா நம்ப மாட்டீங்க... பொண்ஜாதி தாலிக் கொடியை அடகு வெச்சி இங்கே வந்திருக்கேன்...''

ராஜாராமனுக்கு மளுக்கென்று கண்ணில் நீர் ததும்பியது...

''மத்தியானம் சாப்பிட்டியாப்பா?''

''சாப்பிட்டேனுங்க.''


''ஏம்பா பயிறு காஞ்சிடும்னு சொல்றே கொஞ்சம் முன்னே வரக் கூடாது?''

நினைவில் நிற்கும் காட்சி

கண்ணகி

காலஞ்சென்ற திரு பி. யு. சின்னப்பா, திருமதி பி. கண்ணாம்பா நடித்த 'கண்ணகி' திரைப் படம், அக்காலத் திரைப்பட உலகில் ஒரு அமர காவியமாக விளங்கிற்று. காதுக்கினிய கானங்கள் 64! இளங்கோவன் வசனமென்றால் அதற்கு ஒரு தனி மதிப்பு. நிரபராதியான கணவன் கள்வன் எனக் குற்றம் சாட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்டான் எனச் செய்தி கேட்டாள் கண்ணகி. அவள் புழுவாய்த் துடிக்கிறாள். பாண்டிய மன்னனின் சபைக்குப் புயல் எனச் சீறி வருகிறாள். அவள் தலைவிரி கோலமாக ஓடிவரும் காட்சி!

கண்ணாம்பாவின் உணர்ச்சி மிகுந்த வசனமும், சபையும், சுற்றுப்புறமும் நமக்கே அந்தப் பாண்டிய மன்னன் நிலையில் இருப்பது போல் ஒரு நடுக்கம்! பாண்டிய மன்னன் ''நானோ அரசன்! நானே கள்வன்!'' என்று கூறி உயிர் விடுகிறான். மதுரை மாநகரம் பற்றி எரிகின்றது. —ஜி. ராமமூர்த்தி



''நானும் ரெண்டு மாசமா இதே வேலையாத்தான் அலையறேனுங்க... இந்தத்தடவை முடிஞ்சுடும்.... கலெக்டர் பதினொரு மணிக்கு வந்திடுவாங்களா...''

''நீதான் வருவாருன்னு சொல்றியே.''

''ஆமாங்க... ஏ-ஒன் சொன்னாரு.... பக்கத்தில எந்தச் சினிமாக் கொட்டகை இருக்கு?''

''எதுக்கு?''

''ராத்திரி எங்க தங்கறது? ஒரு கொட்டகையில் ரெண்டு மணி வரை படம் பார்த்துட்டு பஸ் ஸ்டாண்ட் போயி...'' என்று தன் திட்டங்களை விவரித்தான்.

பயமாக இருந்தது ராஜாராமனுக்கு.

''இதோ பார்... கலெக்டர் வராட்டாக் கூடப் பரவாயில்லே; உள்ளூர் இன்ஸ்பெக்டர்... தாசில்தார்... வாய்க்கால் இன்ஸ்பெக்டர் எல்லாருக்கும் கலெக்டரை விட்டுத் தந்தி கொடுக்கச் சொல்லு. நீங்க ஒண்ணும் செய்யாட்டி நான் செத்துப் போவேன் தர்ம துரையேன்னு கால்ல விழுந்துடு...''

''சரிங்க....''

''தந்தி கண்டிப்பாக் கொடுக்கச் சொல்லு. பயிறு காயிறதுன்னு சொல்லு. இந்தத் தடவை தண்ணி உன் வயலுக்கு வரல்லே... குடும்பமே தற்கொலைதான் பண்ணிக்கணும் மின்னு புரியும்படியாச் சொல்லு.''

''சரிங்க....''

அவன் சொல்லுவான் என்று பட்டது. கொஞ்ச நேரம் இருவருக்கும் மத்தியில் மவுனம் நிலவியது.

''சரிப்பா... மணி எட்டாச்சு... நீபோய் எங்காவது ஒரு கடையில சாப்பிடு... அப்படியே போனா சரியா இருக்கும்.''

''நான் வர்றேனுங்க.'' என்று பெரிதாகக் கும்பிட்டான்.

காக்கிப் பையைக் கக்கத்தில் இடுக்கிக் கொண்டு தூக்கிக் கட்டிய வேட்டியோடு நடக்க ஆரம்பித்தான்.

''உனக்கு இன்னிக்கு அறுவைக்குச் சரியான ஆள் கிடைச்சது ராஜா'' என்று பின்னால் நண்பர்கள் கேலி செய்வதை மௌனமான புன்னகையோடு தவிர்த்தான் ராஜாராமன்.

மறுநாள் ராஜாராமன் அதே கான்கிரீட் கிராதிகளின் மேல் உட்கார்ந்திருந்தான். அந்தப் பட்டிக்காட்டான் வருவானா என்று கண்கள் கூட்டத்தைச் சலித்தன. அவன் வரவில்லை. ஒருவேளை அவன் கலெக்டரைத் தன்னோடு அழைத்துச் சென்றிருப்பானா என்று நினைத்துப் பார்த்தான். அவநம்பிக்கையே சுரந்தது. தந்தி இத்யாதி விஷயங்கள் நடந்திருக்குமா என்றும் தெரியவில்லை.

ஒரு சின்ன விவசாயியின் கறுத்துப்போன முகமும் கருகக் காத்திருக்கிற பயிர்களும், தாலிக் கொடியும் மட்டும் மனத்தில் எழுந்து இலேசாக நெஞ்சை அடைத்தது. பிரச்னைகள் புரிந்த அவனுக்கு, பிரச்சினைகளுக்கு எந்த விடையும் கிடைக்கவில்லை. ரோட்டில் பலர் என்னவோ பேசிச் சிரித்துக் கொண்டு போனபோது அவர்களின் மீது ஏனோ காரணம் இல்லாத வெறுப்பு மட்டும் சுரந்தது ராஜாராமனுக்கு.

நிகழ்காலத்தை நாம்தான் பார்த்துக் கொள்ள வேண்டும். வருங்காலம் தன்னைத் தானே கவனித்துக் கொள்ளும். வெற்றியில் நிதானம் போகும். கூடவே வெற்றியும் போய்விடும். அதை உணர்ந்து நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். சாதாரண மனி தன் புகழ் பெறும்போது அவன் செய்யும் தவறுகளும் புகழப்படுகின்றன. அதை உணர வேண்டும். அதையெல்லாம் தெரிந்து கொண்டு மனப் பக்குவத்துடன் கலைக்காக நம்மை அர்ப்பணித்து, ''கலையை'' அதன் மூலம் ''நிலையை'' உயர்த்திக்கொள்ளவேண் டும்.

புதுக் கலைஞர்கள் வருவதை நான் விரும்பு கின்றேன். அந்த அரும்புகள் மலராக நான் எல்லா ஒத்துழைப்பும் தருபவன். பல புதுக் கலைஞர்கள் என்னுடன் நடித்துள்ளனர். நடிக்கின்றனர். அறிமுகமாகின்றனர். எனக்கு அவர்கள் Long run ஓட்டத்தில் என்னுடன் ஓடிவர வேண்டும் என்பதே ஆசை. நேற்று வந்து இன்று மறையக் கூடாது. புதிய தலைமுறை என்னுடன் இணைவதை, நானும் அவர்களுடன் போட்டி போட்டுக் கொண்டு நடிப்பதைப் பூரிப்பாக வரவேற்கிறேன். இந்த எண்ணம், இந்த வரிகள், என் மனத் தின் அடித்தளத்திலிருந்து வரும் விருப்பம் கலந்த ஆசீர்வாதம். ஒரு தாயின், ஒரு தமையனின் அரவணைப்பான குரல்தான் இந்த வாக்கியங்கள்.

''தமிழ் பேசும் படம்'' பிரச்னைகள் இல் லாமல், பல குடும்பங்களின் அடுப்புக்கும் உலைக்கும் உத்திரவாதம் தரும் ''கலைஞர்'' களை உருவாக்க வேண்டும்.


வாய்ப்புக் கிடைத்து வந்தவர்களுக்கும், வாய்ப்பை எதிர் நோக்குபவர்களுக்கும், வாய்ப்பை மீண்டும் பயன்படுத்தி வரத் துடிப்போருக்கும் என் நேசக் கரங்களைத் தந்து அழைக்கிறேன். மனம் விட்டுப் பேசி விட்டேன் உங்களுடன் இந்தக் கட்டுரை ரூபத்தில்.

''ரசிகர்களை''... அவர்கள் ''ரசனையை'' அடிப்படையாகக் கொண்டதே என் ''கலைப் பணி''. பொதுவாக உலகத்தில் அனேகம் பேருக்குத் தங்களுடைய துன்பத்தைக்கூட தாங்கிக்கொள்ள முடியும். மற்றவர்களின் இன்பத்தைத் தாங்கிக் கொள்ள முடியாது. இது சகஜம். மனந் தளரவே கூடாது.

மற்றவர்கள் வழி உண்டாக்கிய பிறகு நடப்பதா... இல்லை... நாம் நடந்து புது வழியை உண்டாக்குவதா... இதுதான் ஒவ் வொரு கலைஞனும் தன் கால கட்டத்தில் சிந்தித்துச் செயல்பட வேண்டிய பிரச்னை. அதைத்தான் ''பாணி'' என்கிறோம்.

''கலைதான் சிந்தனை''. ''கலைஞனுக வாழ் வது லட்சியம்'' இந்தப் பிரக்ஞை கலைஞர் கட்கு அவசியம்.

வியாதியில் படுத்திருப்பவர்கட்கு மருந்தை விட, கனிவான ஆறுதல் வார்த்தைகளே தெம்பூட்டும். பரிட்சைக்குப் போகும் மாண வனுக்கு ஊக்கமும், பந்தயத்தில் ஓடும் வீர னுக்கு ஆரவாரம் நிறைந்த பாராட்டும் அவசியம். அதுமாதிரிதான் கலைஞனுக்குப் பத் திரிகைகளின் பாராட்டுதலும் விமர்சனமும்,



நினைவில் நிற்கும் காட்சி

பராசக்தி

''பராசக்தி'' படத்திலே குணசேகரன் கோயிலில் குழப்பம் விளைவித்ததாகவும் பூசாரியைத் தாக்கிய தாகவும் குற்றம் சாட்டப்பட்டு நீதி மன்றத்திலே நிற்குக் காட்சி.

சிவாஜியின் நடிப்பும் அதற்கு ஒளியூட்டும் வசனங்களும் மறக்க முடியாதவை.

குணசேகரன் நீதி மன்றத்திலே இப்படி வாதாடு கிறான்:

''கோயிலில் குழப்பம் விளைவித்தேன் - கோயில் கூடாது என்பதற்காக அல்ல. கோயில் கொடியவர் களின் கூடாரமாக ஆகிவிடக் கூடாது என்பதற் காக. பூசாரியைத் தாக்கினேன் - அவன் பக்தி மான் என்பதற்காக அல்ல. பக்தி பகல் வேஷமாகி விடக்கூடாது என்பதற்காக. 'நீ யார்? உனக்கு ஏன் அக்கறை!' என்பீர்கள். நானே பாதிக்கப்பட்டேன். 'சுயநலம்' என்பீர்கள். ஆம். ஆகாரத்துக்காக அழுக்கைச் சாப்பிட்டுத் தடாகத்தைச் சுத்தப்படுத்து கிறதே மீன் அதைப் போல.''

நீண்ட வசனம்தான். ஆனல் அந்தக் காட்சி படம் பார்ப்பவர்களின் சிந்தனையைத் தூண்டி சிந்திக்க வைக்கும் காட்சியாகும்.

பி. சரோஜா

நகத்தைக் கிள்ளுவதாகக் கூறித் தலை யைக் கிள்ளலாமா? புகழ்வதாகச் சொல்லிப் புதைகுழியில் தள்ளலாமா? காழ்ப்புணர்ச் சியை விமர்சனமாகச் சொல்லலாமா?

''நல்லுறவு'' இதயபூர்வமான ''ஆதரவு'' இதைத்தான் கலைஞன் பத்திரிகைகளிடம் எதிர்பார்க்கிறான். லட்சம் லட்சமாகச் சம்பாதிக்கும் பணத்தை விட அந்த ஒரு வரி பாராட்டில்தான் எங்களுக்கு உவகையும் உலகமும்.

பொன்விழாக் காண்கிறது பேசும் பட உலகம்.

கிட்டத்தட்ட பொன் விழா காணுகிறேன் கலையுலகில்.

அத்தனை கலைஞர்கள் சார்பிலும் அமரர் கல்கியின் மாபெரும் சிந்தனையில் உருவான கல்கி... இந்த பேசும்பட உலகின் பொன் விழாவுக்கு மலரிட்டு, கலைத் தாய்க்குச் சமர்ப் பித்தமைக்கு வணக்கங்கள்.

தலைமுறைகள் சகாப்தமாகி சிரஞ்சீவித்து வம் பெற வாழ்த்துங்கள்.

ஜெய்ஹிந்த்!

இதோ - ஒரு திரைக்கதாசிரியன்

அனுராதா ரமணன்

சுற்றிவர நாலு பேர். நடுவில் நாகரத்தினம். தமிழ்த் திரை உலகில் இன்று மிகப் பிரபலமான பெயர். அவார்டு வாங்கிய டைரக்டர். இதுவரையில் எடுத்த படங்கள் அனைத்தும் நூறுவது நாளைத் தாண்டி வெற்றி முழக்கம் கொட்டியிருக்கின்றன.

அவர் பக்கத்தில் 'கம்'மென்று இடித்த புளி மாதிரி அமர்ந்திருப்பவர்தான் — நாகரத்தினத்தை, டைரக்டராக அமர்த்திப் படமெடுக்க ஆரம்பித்திருக்கும் பட அதிபர் குணசேகரன். இவரும் பதினைந்து இருபது வருடங்களாகப் பட உலகில் பெரும் புள்ளிதான்.

இருவருக்கும் இப்போதைய அவசரத் தேவை — கதை! நல்ல கதை! ஓகோவென ஓடக்கூடிய கதை.

சுற்று வட்டாரத் தேவதைகள் — உதவி டைரக்டர்கள் — விக்கிரமாதித்தனின் சிம்மாசனத்துப் பதுமைகள் போல் ஆளுக்கொரு கதையைச் சொல்ல...

''ப்சு!''

அத்தனையையும் நாகரத்தினம் — தமது ஒரேயொரு தலையசைப்பால் நிராகரிக்கிறார்.

''நல்ல நாட் வேணும்பா... இதெல்லாம் சரிப்பட்டு வராது...''

''நம்ம வெற்றி வேந்தனோட புது நாவல் ஒண்ணு — இந்த மாசம் ஒரு மாத வெளியீடா வந்திருக்கு...''

''யாரு... சமீபத்தில பத்திரிகை வெள்ளி விழாவுல தங்கப்பதக்கம் வாங்கினரே...அவர் எழுதினதா?'' — குணசேகரன் கேட்கிறார்.


''ஆமாங்க.. நல்லா எழுதுவான். சமயத்திலே கிறுக்குப் பிடிச்சாப்பல — யாருக்குமே புரியாத மாதிரி எதையாவது எழுதுவான். கேட்டா, 'இதுதான் இலக்கியம்'பான். 'சினிமாவுக்காகக் கதையெழுதறது எம் பொழப்பில்லே'ன்னு தெனவெட்டாப் பேசுவான். 'எங்கதையில சினிமாவுக்கேத்த கரு இருந்தா எடுத்துக்குங்க... ஆனா மாத்திக் கீத்தி எதுவும் செய்யக் கூடாதுன்னு கண்டிஷன் போடுவான். சரியான தொல்லை பிடிச்ச ஆளு... மனசுக்குள்ள தான்தான் பெரீய இலக்கியவாதின்னு நினைப்பு...''

''சரி, விடுங்க. இலக்கியம் நமக்கு எதுக்கு? நமக்கு வேண்டியது பிக்சருக்கான ஸ்டோரி.''

குணசேகரன் அரைக் கண்ணை மூடியபடி சொல்கிறார். மனசுக்குள் — கதையைத் தேடி, இந்தப் பத்து நாட்களாக ஓட்டலின் ஏ.சி. அறைக்கும், டைரக்டருக்கும், உதவி டைரக்டர்களுக்கும், கதாசிரியர்களுக்குமா எத்தனை ரூபாய் செலவழிந்திருக்கிறது என்கிற புள்ளி விவரம் — டாக்சி மீட்டர் போல் பய முறுத்த...

''சட்டுப்புட்டுன்னு ஒரு கதை கிடைச்சு, பூஜை முடிஞ்சு ஷெட்யூல் ஆரம்பிச்சுட்டாத் தேவலை....''

''இப்ப போன வாரம் 'சாவி'யில —ராதிகா மனோகரன் ஒரு குறு நாவல் எழுதியிருக்காங்களே பேரு கூட ஷோக்கா இருந்துச்சுங்க.... அது என்ன வடிவேலு?''



''என்னவோ 'இரவின் மோகம்'னு...''

''ஆங்... அதுதான்... பிரமாதம் சார். எடுத்தா அதுவும் நம்ம ஹீரோயினுக்குப் பொருத்தமான கேரக்டர்...''

''அப்ப அதை முடியுங்களேன் நாகு... என்ன... வொர்ல்ட் லாங்வேஜஸ் ரைட்ஸ் போட்டு ஏழாயிரம் வரைக்கும் கேட்டுப் பாருங்க. தமிழுக்கு மட்டும்தான் உரிமை தருவேன்னு சொன்னக்க ஒத்துக்காதீங்க.''

''உம்... முடிக்கலாம்தான்...''

''அப்பாலே என்ன யோசனை.. முதல்லே மொத்தமா ஐயாயிரத்துக்குள்ள முடிக்கப் பாருங்க. முடியாட்டி ஐந்நூறு ஐந்நூறு ஏத்திப்பாருங்க. மூணு தவணை போட்டுப்போம். மொதல்லே அட்வான்ஸ் ஆயிரத்தொண்ணு அடுத்தாப்பல பூஜை போடறப்ப மூவாயிரம். மிச்சத்தைப் படம் முடிஞ்சதுக்கு அப்பாலப் பார்த்துப்போம்...''

''இதுலதாங்க உதைக்குது.. அந்த அம்மாவோட கதை ஒண்ணு எங்கிட்ட இருக்குது. இளையராஜாவை வெச்சு ஒரு பாட்டுக்கூட எடுத்திட்டேன். ஹீரோயினுக்கு அட்வான்சு வேற கொடுத்தாச்சு. ஒரு மிஸ்டேக்கு மட்டும் பண்ணிட்டேன். மீதித் தொகைய ஒப்பந்த தேதிக்குள்ளாறக் கொடுக்கலே. அட, என்ன பண்ணிப்பிடுவாங்கங்கற நெனைப்பு. இப்ப கதை உரிமை என்கிட்டதான்னு பேப்பர்லே அறிவிப்புக் கொடுத்திட்டா... 'ஒழியுது. இப்ப மீதியைக் கொடுத்திடறேன் தாயே'ன்னு, எத்தனையோ கேட்டுப் பார்த்தேன். ரொம்பவும் கண்டிப்பா இருந்ததால் பேசின தொகைக்கு மேலே பத்தாயிரம் ரூபா வரைக்கும் கூடக் கொடுக்கிறதா நம்ம புரொட்யூஸர் ராஜப்பா சொன்னரு. லட்சம் கொடுத்தாக்கூட இனிமே வேணும்னுட்டா... விஷயம் தெரிஞ்ச பொம்பளை. திருப்பிப் போய் அடுத்த கதைக்கு நான் நிக்க முடியாது...''

''சரி, விடுங்க. நான் வேறே ஆளை விட்டுக் கேக்கச் சொல்றேன்.''

''வேணுங்க. அந்த அம்மாவோட கதையே நமக்கு வேண்டாம். உலகத்துல வேற கதையா இல்லே...''

குணசேகரன் நாகரத்தினத்தின் விரலிடுக்கில் புகையும் 'டிரிபுள் ஃபைவ்' சிகரெட்டையே வெறித்தபடி முகவாயைச் சொறிந்து கொள்கிருர். வயிற்றுக்குள் பகபகவென எரிச்சல்.

நாகரத்தினம் புகைக்கும் சிகரெட் அவரது பர்ஸிலிருந்த நூறு ரூபாய்த் தாள்களில் ஒன்ருக அவருக்குத் தெரிகிறது. அதுமட்டுமல்ல. 'திரைக் கதை சொல்கிறேன்' என்று கற்றை கற்றையாய் வெற்றிலை பாக்குப் புகையிலையைச் செலவழிக்கும் கும்பல்கள்... இது தவிர அவ்வப்போது தாக சாந்திக்காக வாங்கப்படும் தீர்த்த வகையருக்கள்.... நொறுக்குத் தீனிகள்...



அன்று இரவு — வெகு நேரம் வரையிலும் கதையைப் பற்றியே சிந்தித்தபடி படுத்திருக்கிறார் குணசேகரன்.

''இப்ப பத்திரிகைங்கள்லே வர்ற கதையில எதுனாச்சும் நமக்குத் தோதா இருக்குமா சாந்தா....''

அவர், தம் மனைவியைக் கேட்கிறார்.

''எல்லாம் வெறும் குப்பைங்க...''

அவள் பளிச்செனப் பதில் சொல்கிறாள். அதாவது, தன்னைப் பொறுத்த மட்டில்— இலக்கியமே குப்பைதான் என்பது போல.

நாகரத்தினமும் சும்மா இல்லை. அலசு அலசு என்று அலசிக் கொண்டிருந்தார்.

''கதை கிடைக்கிறதுக்கு லேட்டாச்சுன்னா அப்பாலே ஆடி மாசம் வந்திடும். பூஜை போட முடியாது. அதனால இந்த மாசக் கடைசிக்குள்ளாரப் பூஜை போட்டு நம்ம ஜெயமாலினியைப் புக் பண்ணி ஒரு கிளப் டான்ஸ் எடுத்திடு. இல்லாட்டி கவிஞரைக் கேட்டு ஒரு பாட்டு வாங்கி வேலைய ஆரம்பிச்சுடு.''

குணசேகரன் சொல்லிவிட்டார். நாகரத்தினத்தின் பாடுதான் திண்டாட்டம். சாதரணமாய் தயாரிப்பாளர்களை — உண்டு இல்லை என வகையாய் ஆட்டி வைக்கும் நாகுவே குணசேகரனின் வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டார் என்றால், அது அந்த மனிதரின் செல்வாக்கினால்தான்.

'எதுக்கும் ரெண்டு மூணு இங்கிலீஷ் படம் பார்க்கலாம். ஐடியா கிடைக்கும்...'

நாகரத்தினம் சாதாரணமாய் இந்தி, தெலுங்கு, கன்னடப் படங்களைப் பார்த்துக் காப்பியடிக்க மாட்டார். எவனாவது 'இது என் படத்தின் தழுவல்' என மல்லுக்கு நின்றால் என்னசெய்வது... போதாக்குறைக்கு பத்திரிகைகள் வேறு — தான் காப்பியடித்த விஷயத்தை விமரிசனத்தில் எழுதி மானத்தை வாங்கும். மேலும் காப்பியடிப்பதிலும் வெளி நாட்டுப் படங்களைக் காப்பியடிக்கலாமே என்கிற அளவுக்கு அயல் நாட்டு மோகம்...

''இந்தாங்க, சினிமாவுக்குப் போறதா என் கிட்டே சொல்லிட்டு அந்தச் சிறுக்கி வீட்டுக்குப் போய், ரூமுக்குள்ளே பூந்துகிட்டு வர்றவங்க போறவங்களுக்கு 'இல்லே'ன்னு அவளை விட்டுச் சொல்லச் சொன்னீங்கன்னா எனக்குக் கெட்ட கோபம் வரும். அப்புறம் நீங்க வெளியில தலை தூக்க முடியாதபடி செஞ்சிடுவேன்.''

நாகரத்தினம் சினிமாவுக்குக் கிளம்பும் போதே மனைவி நீலாவின் பயமுறுத்தல். இது இவர்களின் சொந்த விஷயம். நாகரத்தினத்துக்குச் சின்ன வீடு ஒன்று உண்டு. இதனால், கட்டியவள் அவ்வப்பொழுது— ரேஸ் குதிரையின் கடிவாளத்தை இழுத்துப் பிடிப்பது போல அவரை அடக்கி ஆள வேண்டிய நிலைமை.

எப்போதும் வீட்டிலிருந்து கிளம்பும் போது, கார் டிரைவர் ரங்கனுடன்தான் கிளம்புவார். சிலபல சமயங்களில் அவருக்கு நிதானமிருக்காதாகையால் ரங்கனின் துணை அவசியம். அவன் இல்லாமல் காரை எடுக்கக் கூடாது என்பதும் லீலாவின்கட்டளை.

சின்ன வீட்டுக்குப் போவதானால் — இந்த ரங்கனுக்கு டிப்ஸ் உண்டு. பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன் என்பது போல...

ஏதோ இதுபோன்ற உபரி வருமானம் இருப்பதால்தான் குடும்பஸ்தனாக ரங்கனுக்கு முடிகிறது. அவனது மனைவியும் நாகரத்தினத்தின் வீட்டுச் சமையற்காரியாக நாள் முழுதும் உழைக்கிறாள். இல்லாவிட்டால், நாலு குழந்தைகளை வைத்துக்-கொண்டு எப்படிச் சமாளிக்க முடியும்?

''டேய் ரங்கா! வீட்லெ சொல்லிட்டு வா.. நைட் ஷோ முடிஞ்சு வர லேட்டாகும்...''

நாகரத்தினம் அரை மனசுடன் குரல் கொடுக்கிறார்.

இதே ஆங்கிலப் படத்தை இளையவளுடன் பார்க்க வேண்டும் என்பது அவரது ஆசை. ஆனால் முடியாது. லீலா சமயத்தில் தியேட்டருக்கே வந்தாலும் வந்து விடுவாள். இல்லாவிட்டால் தியேட்டர் மானேஜருக்கு போன் செய்து தன் கணவனுடன் இன்னும் யார் யார் வந்திருக்கிறார்கள் எனக் கேட்டு உளவறிவாள்.

ரங்கனைப் பொறுத்த மட்டில் குஷிதான். அவனது சம்பளத்தில் ஆங்கிலப் படம் பார்க்கும் பாக்கியம் இந்த ஜென்மத்தில் கிடைக்கக் கூடிய விஷயமா?

'நம்ம ஐயா கிட்ட இந்தப் பலவீனம் இருக்கிறதாலேதானே — ஏதோ உன் காட்டுலேயும் மழை பெய்யுது!' — இப்படி ரங்கனின் மனைவி அடிக்கடி கேலி செய்வதுண்டு.

''இதப் பாரு ரங்கா... லிமிட்டோட பார்த்துக்க... ஓவராப் போட்டுட்டு தியேட்டர்லே கலாட்டாப் பண்ணப் போறுரு.''


''அதெல்லாம் நான் பார்த்துக்கறேம்மா''

நினைவில் நிற்கும் காட்சி

ஔவையார்

மூவேந்தர்களின் குறுகிய நோக்கத்தால் பாரி மகளிரின் காதலன் தெய்வீகன் சிறைப்படுகிறான். அதை அறிந்த ஔவையார் ஓடோடியும் சென்று விநாயகப் பெருமானிடம் முறையிடுகிறாள். விநாயகர் கண் திறக்கிறார். திருநீறணிந்த யானையாக உருவெடுக்கிறார். நிகரற்ற யானைப் படை தயாராகி விடுகிறது. யானைப் பட்டாளம் அணி வகுத்துச் சென்று கோட்டையைத் தகர்த்துத் தெய்வீகனை மீட்கிறது. ஜெமினியின் மகோன்னத தயாரிப்பான 'ஔவையார்' படத்தில் வரும் இந்த அற்புதக் காட்சியே என் நினைவில் நிற்கும் திரைப் படக் காட்சி.

-ஆர். தீனதயாளன்



புதிய

ஃபேப்

டிட்டர்ஜெண்ட்
கட்டி

வெளுக்கிறது உங்கள் துணிகளை அதிகத் தூய்மையாக



விசேட பளிச்சிட வைக்கும் சக்தியை உள்ளடக்கிய உன்னத ஃபார்முலா.

புதிய ஃபேப் டிட்டர்ஜெண்ட் கட்டியின் சக்திவாய்ந்த நுரைவளம் ஆழ ஊடுருவிச் சுத்தம் செய்து விடாப்பிடியான அழுக்குகளையும் அறவே அகற்றுகிறது.
அதன் விசேட பளிச்சிட வைக்கும் சக்தி வெள்ளைத்துணிகளை அதிக வெண்மையாக்குகிறது— வண்ணத்துணிகளை அதிகமாக பிரகாசிக்க வைக்கிறது—
உங்கள் துணிகளுக்கு தூய்மை கலந்த புதுமணம் தருகிறது.

அது ஈரக்கசிவற்றது—எனவே அதிக துணிகளை வெளுக்கிறது—உங்களுக்கு சிறந்த சிக்கனம்.

இணையில்லா வெண்மையும், ஈடில்லா பிரகாசமும் தரும் சலவைக்கு-புதிய ஃபேப் டிட்டர்ஜெண்ட் கட்டி!



தமிழ்நாடு மற்றும்
பாண்டிச்சேரியில் கிடைக்கிறது.

கோல்கேட்-
பாமோலிவ்
தரமாக அளிப்பது

FDC.G.2 TM



நினைவில் நிற்கும் காட்சி

சக்கரதாரி

'சக்ரதாரி' படத்தில் பழம்பெரும் நடிகர் மறைந்த நாகையா தம்மை மறந்த நிலையில் கையை உயரே கூப்பி, பாண்டுரங்கனை ஜபித்துக் கொண்டிருக்க, இரு கால்களும் அவரது தொழிலான மண் பாண்டம் செய்ய மண்ணைத் துகைத்துக் கொண்டிருக்கின்றன. தாயாரால் தனித்து விடப்பட்ட குழந்தை தவழ்ந்து வந்து அவரது காலடியில் அகப்பட்டு மிதிபட்டு, மண்ணோடு மண்ணாகப் போய் விடுகிறது. அதைக் கண்டு மெய் சிலிர்த்து, விக்கித்து நின்றேன். —லட்சுமி சபேசன்

ரங்கன் பிரமாதமாக உடை அணிந்து கொண்டு கிளம்புகிறான். அவனது வாழ்க்கையில் — அவன் உழைக்கிற உழைப்புக்கு இதெல்லாம் சின்னச் சின்ன இளைப்பாறல்கள்.

நாகரத்தினத்துக்குச் சினிமாவில் மனம் லயிக்கவில்லை. அடிக்கடி நினைவு எங்கெங்கோ அலைபாய்கிறது. கொடுத்த காசுக்கு வஞ்சனையில்லாமல் ரங்கன்தான் ஆர்வத்தோடு படம் பார்க்கிறான்.

நாகுவின் சிகரெட் தொற்றிய இதழ்களில் மிகச் சின்னதாய்ச் சிரிப்பு.

'இவனுக்கு என்னத்தைப் புரியுதுன்னு இத்தனை ரசிச்சுப் பார்க்கிறான்....'

மறுநாள் குணசேகரன் போன் செய்த போதுகூட கதையைப் பத்தி எதுவும் சொல்ல முடியாத நிலைமை.

''இன்னும் ரெண்டு நாள் டயம் கொடுங்க. அருமையான கதையோட சந்திக்கிறேன்.''

இன்னும் எத்தனை நாள்தான் இழுத்தடிக்க முடியும்?

'இனிமே முடியாது. லீலா கிட்டே ஏதாவது சாக்குச் சொல்லிட்டுச் சின்ன வீட்டுக்குப் போயிட்டு வந்தாத்தான் 'மூட்' வரும்.'

ரங்காவை அழைத்து, காரை எடுக்கச் சொல்வதற்காக கார் ஷெட் பக்கம் போன நாகு — ரங்கன் தன் மனைவி மக்களுடன் கலகலப்பாய்ச் சிரித்துப் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டு கொஞ்சம் தயங்கினார்.

'பாவம், இவனும் மனுஷன்தானே... என் கூடவே சுத்திக்கிட்டிருந்தா — பெண்டாட்டி பிள்ளைங்களோட பேசறது எப்ப...'

மனசுக்குள் மனிதாபிமானம் குரல் கொடுக்கிறது. சற்றுப் பொறுத்துக் கிளம்பலாம் எனத் திரும்பியவர் — பேச்சுக் குரல் கேட்டுத் தயங்குகிறார்.

''மச்சான், நேத்துப் பார்த்த படம் நல்லா இருந்துச்சா?'' — ரங்கனின் மனைவி.

''ஐயோ — அதையேன் கேட்கறே... படமுன்னா அது படம்...''

ரங்கனின் குரலில் ஆங்கிலப் படம் பார்த்த பெருமை கரை புரண்டோடுகிறது.

''என்னா கதை... சொல்லுப்பாவ்....''— மூத்தவன் நச்சரிக்க — ரங்கன் ஆயிரம் பிசுக்காரம் செய்தபடி சொல்லத்தொடங்குகிறான்.

சத்தியமாய் நேத்து அவன் பார்த்த படத்துக்கும், இப்பொழுது அவன் சொல்லும் கதைக்கும் ஸ்நானப் பிராப்தி கூட இல்லை.

நாகரத்தினத்துக்குத் தெரியும். இருந்தாலும் அவன் சொல்கிறது புதுக் கதை.

ரங்கனுக்குத் தன் மனைவி மக்களிடம் தனக்கு ஆங்கிலம் புரியும் என்பதைக் காட்டிக் கொள்வதில் ஒருவிதப் பெருமை.

அந்தப் பெருமையில் — நேற்று பார்த்த படத்தில் தனக்குப் புரிந்ததை அவனது கைச் சரக்கையும் சேர்த்து அவர்களிடம் அழகாகக் கயிறு திரிக்கையில்....

அற்புதமான திரைக் கதை ஒன்று உருவாகிறது!

நாகரத்தினம் அகன்ற புன்சிரிப்புடன்— சின்னவள் வீட்டுக்குப் போவதை ஒத்திவைத்துவிட்டுக் குணசேகரனுக்குப் போன் செய்ய விரைகிறார்.

''யாரு... குணசேகரண்ணேயா... நான்தான் நாகு பேசறேன். நம்ம படத்துக்குக் கதை கிடைச்சிட்டது அண்ணே...''

''என்னங்க, மூலக் கதை யாருதுன்னு கேட்கறீங்களா?... நானேதாங்க. பிரமாதமான தீம். லேடீஸ், குழந்தைங்க அத்தனை பேரையும் அட்ராக்ட் பண்ணிடும்...''

''அடேடே, நன்றி யெல்லாம் எதுக்கு? என்னோட ரைடரக்ஷன்லே தயாராகிற படத்து மேலே எனக்கு மட்டும் அக்கறை இல்லையா... உங்களை விட நான்தாங்க ராப் பகலா—தூக்கம் வராம, இதைப் பத்தியே யோசிச்சு மண்டையை உடைச்சுக்கிட்டேன். படம் ஸக்ஸஸ்தான்... கவலையே வேணாம். விடுங்க....''

''என்னங்க... எவனாவது கதை தன்னோடதுன்னு உரிமை கொண்டாடிட்டு வந்திடுவானோன்னு பயப்படறீங்களா... ஹா ஹா... ஒரு நாள் கூட நாகரத்தினம் அந்த மாதிரி செய்ய மாட்டான். மூளைய வச்சுக்கிட்டு எதுக்காகச் சும்மா இருக்கணும்? கொஞ்சம் மூட் வந்துட்டா ஒரு நிமிஷத்துக்கு ஒரு கதை — என் கற்பனையில தோணுங்க.''

நாகரத்தினம் கர்வமாய், பெருமையாய், கம்பீரமாய்ச் சிரிக்கிறார்.

இப்படிப்பட்ட அருமையான கதையை — கற்பனைச் செறிவுடன் — ஜனரஞ்சகமாய், எந்தக் கதையையும் தழுவாததாய், பின்னால் கோர்ட்டு, கேஸ் என்று தொந்தரவு எதுவும் தராததாய் ஒரு வெற்றிப் படத்தின் மூலக் கதையை — இலவசமாய் அளித்த அந்தக் கதாசிரியன் — அதோ — அங்கே கார் துடைத்துக் கொண்டிருக்கிறான்!



உங்கள் கேசம் அடர்த்தியின்றி
சக்தியின்றி இருக்கிறதா? உங்கள்
கேசத்தைப் பக்குவப்படுத்தி அழகையும்
ஆரோக்கியத்தையும் அளிக்கிறது...
செழுமையான புரதப்போஷாக்கு நிறைந்த
ஹேலோ எக் ஷாம்பூ
ஊட்டம் குறைந்த நிலையில் உங்கள் கேசம் அடர்த்தி
யின்றியும், சக்தியின்றியும், ஆரோக்கியமின்றியும்
காணப்படுகிறது.
பட்டுப்போன்ற, பொன் நிறமுள்ள வழவழப்பான
ஹேலோ எக் ஷாம்பூ செழுமையான புரத ஊட்டம்
நிறைந்த உத்தியின் மூலம் உங்கள் கேசத்தை சீராகப்
படியவைத்து அதற்குத் தேவையான எல்லா
ஊட்டங்களையும் அளிக்கிறது. உங்கள் கேசம் அழகாக
ஆரோக்கியமாக, அடர்த்தியாகத் திகழ்கிறது.
ஹேலோ எக் ஷாம்பூவின் செழுமையான நுரைவளம்
உங்கள் கேசத்தில் புகுந்து அதை பொலிவுடனும்
தூய்மையான பளபளப்புடனும் திகழச் செய்கிறது.
ஹேலோ எக் ஷாம்பூ...
அழகிய அடர்த்தியான ஆரோக்கியமான கேசத்திற்கு
EGG
Halo
SHAMPOO

கமான் கமல்!

'பத்மஜா'



டேக் 1

கமான்!

க்ளாப்ஸ்!

படபடவென்ற கைதட்டல்.

வெள்ளித் திரையை சூபர் சர்ஃபில் தோய்த்தது போல் வெள்ளை வெளேர் ஃபுல் கை ஷர்ட்டை இன் பண்ணிக்கொண்டு அதிகாரிகள் புடைசூழ, ராஜ பார்வையுடன் உள்ளே நுழைந்தார் கமலஹாசன்!

''த்ரீ சியர்ஸ் ஃபார் சேல்ஸ் எக்ஸிக்யூடிவ் கமல்! த்ரீ சியர்ஸ்!''

''நோ தாங்க்ஸ்!'' கைகளால் சைகை காட்டியபடி தலையை லேசாக அசைத்தபடி எல்லார் மீதும் பார்வையை வீசியபடி நுழைந்தார்.

அவருக்கான அரியாசனத்தில் அமர்ந்ததும் ஹரன் பிரதர்ஸ் நிர்வாகத்தின் எம். டி. எழுந்தார்.

''ஃப்ரண்ட்ஸ்! சந்தோஷத்தோடு உங்களை வரவேற்கிறேன். யாருடைய அதிருஷ்டமோ காஸ்மடிக்ஸ் சாதனங்கள் தயாரிக்கும் இந்த நிர்வாகத்தில் சேல்ஸ் எக்ஸிக்யூட்டிவாகக் காதல் இளவரசன் கமல் வந்து சேர்ந்திருக்கிறார்! அவரை ஏற்றுக்கொள்ள இந்த நிர்வாகம் பெருமிதம் அடைகிறது. ஹாசன் பிரதர்ஸ் உலகத்தை ஒதுக்கிவிட்டு இந்த ஹரன் பிரதர்ஸ் நிர்வாகத்துக்குக் கை கொடுக்க வந்திருக்கிறார்.

மெல்லிசையை உதறிவிட்டு சாஸ்திரீய சங்கீதத்தை அணைத்த சங்கராபரணம் துணிச்சலோடு இங்கே சேர்ந்திருக்கிறார்.

யாரோ ஒருவர் எழுந்து மாலை போட, மறுபடியும் அந்த டாஜ் ஓட்டலின் கான்ஃபரன்ஸ் ஹால் அதிர்ந்தது.

''...சேல்ஸுக்குத் தேவையான குவாலிபிகேஷன் — வசீகரிக்கும் குணதிசயம். ஓஹோவென்ற பர்ஸனாலிடியுள்ள கமல் இந்தப் பதவிக்கு ஏற்றவர். நிகரற்றவர். பேச்சில் நகைச்சுவை கலந்த அலட்சியம், லாகு

நட்னத்திடம் கேட்கப்பட்ட கேள்வி:

ல் இந்தக் கதையைப் படித்தால் என்ன செய் என்று எண்ணுகிறீர்கள்?

- ○ சிறுவார்.
- ○ சிரிப்பார்.
- ○ சூள் கொட்டுவார்.
- ○ வாணிக்குப் படித்துக் காட்டுவார்.
- ○ வக்கீலுக்கு ஃபோன் பண்ணுவார்.
- ○ கதாசிரியருக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுவார்.



வம்,சாமர்த்தியம், சரளம்... இந்தப் பதவிக்கு டெய்லர் மேட்மான்!''

கைதட்டல்!

''அவருடைய சுக்ர வசீகரம் கோடௌனைக் கூடக் கோபுரமாக்கிவிடும்...''

கமல் குறுக்கிட்டார்.

''கோடௌன் குடிசையாகாமல் இருந்தால் சரி....''

''நோ...நோ... கமல்... நோ ஜோக்ஸ்''—எம். டி. கமெண்ட்ஸ்.

சேல்ஸ் டிவிஷன் சம்பந்தப்பட்ட விருந்தினர்களுக்கிடையே ஒரு அவசர பத்திரிகை நிருபர்,

''என்ன சார்... என்ன இந்த முடிவு?''

''இட்ஸ் மை பிளஷர் டு அக்ஸெப்ட் திஸ் ஜாப்! உழைப்பு — அது எங்கிருந்தால் என்ன? ஐ ஸிம்ப்ளி லவ் திஸ் ஜாப்....''

தொடர்ந்தார்.

புதிய வேலையை முதலிரவு நாயகியை வர்ணிப்பது போல் வர்ணித்தார் கமல்!

வாணி கமல் பக்கமாகத் திரும்பினர்.

புன்னகை!

டேக் 2

சாய்வு மெத்தை நாற்காலியில் கமல்!

''மாமனர் மிஸ்டர் கணபதி ஜியாஃப்ரி மானர்ஸ் சேல்ஸ் டிவிஷனில் புள்ளி. உயரமான புள்ளி.

''மாப்பிள்ளையும் அதே லைனிலா? இன்ஸ்பிரேஷனு? அப்படித்தானு?''

ஸ்டெனோ-கம் - செக்ரட்டரி ப்ரீதி சற்றுச் சுதந்திரமாகக் கேட்க...

கமல் சிரித்தார்.

மேஜையின் கால்கள் வழியாக காமிரா பார்க்கிறது.

தம் தலையைக் கோதியபடி ப்ரீதியைப் பார்வையிடுகிறார் கமல்.

கண்கள் 'வாவ்' என்கின்றன.

எழுந்தார்.

''ஹலோ ப்ரீதி! இந்த அறையில் என்னென்ன எங்கெங்கு இருக்க வேண்டும் என்பதைச் சொல்கிறேன்... பத்து ஸ்டெப்ஸ் இங்கிருந்து அந்த ஃப்ளவர் வாஸ்... இடது பக்கமாய் ஐந்து ஸ்டெப்ஸ் சோபா... வலது பக்கமாய் நேராய் பன்னிரண்டு ஸ்டெப்ஸ் சின்ன ஷெல்ஃப்! பிறகு ஆறு ஸ்டெப்ஸ்....''

செக்ரட்டரி — அந்த இளம் மாது, மார்பு விம்ம, அவரைப் பரிதாபமாய்ப் பார்த்தாள்.

''சாரி ஸார்....'' அவள் கண்களில் பச்சாதாபம் இருந்தது. ''...சார் ராஜ பார்வை படத்தில் வந்தது போல்...''

கமல் பெரிதாகச் சிரித்தார்.

''நோ....நோ... என் குருநாதர் பாலசந்தர் அருளால், பார்வை தீட்சண்யமாய்த் தான் இருக்கிறது. ஐ அம் ஓகே! ஜஸ்ட் ஒரு எஸ்திடிக் ப்யூட்டிக்காக... 'அது அது' இருக்க வேண்டிய இடத்தில் இருக்க வேண்டும் என்று....''

கடைசி வார்த்தையின் இரட்டை அர்த்தம்.

கண்ணடித்தார் கமல்.

அந்த ப்ரீதி சிரித்தாள் ஸ்ரீதேவியைப் போல்!

களுக்!

டேக் 3

டெலிபோன் சிவந்த மேனியுடன் கணகணத்தது. அதன் ரிசீவரின் இடையை வாணியை அணைப்பது போல் அணைத்தார் கமல்.

''கமல் ஸ்பீக்கிங்.''

''சேல்ஸ் டைரக்டர் ஸ்பீக்கிங்.''

''டைரக்டரா?.... எத்தனை மணிக்கு ஷூட்டிங் சார்... ஷெட்யூல் எங்கே ஏ.வி.எம்.மிலா?''

''வாட்?''

''ஓ! ஸாரி சார். டைரக்டர் என்ற வார்த்தை காதில் விழுந்ததும்... பழைய ஞாபகம்... வெரி சாரி...''



லாரிடிரைவர் ராஜாக்கண்ணு

யார் சொன்னது லாரி டிரைவர்கள் ஏழைகள் என்று? இதோ இங்கு 'ஐந்து நிமிடத்துக்குஒரு டெரீன்கோட்டைமாட்டிக்கொண்டு டுயட், சண்டை என்று வாரி வழங்குகிருர் லாரி டிரைவர் — கம் — ஓனர் ராஜாக்கண்ணு.

கதை சொன்னுல் 'சீ... வேண்டாம்!... புதுசா ஏதாவது சொல்' என்று பத்து வயதுச் சிறுவன்கூட முரண்டு பிடிப்பான். எப்பவும் போலவே ஹீரோவுக்கு ஒரு தங்கை — கண்ணில்லாத குறை வேறு! மாரோடு சேர்த்தணைத்துப் பாட்டுப் பாடி நேசம் செய்கிருர் ராஜாக்கண்ணு.

இடைவேளை வரை பிறர் குறை தீர்த்து, பின் தான் செய்யாத குற்றத்தால் சிறை சென்று, 'உயிர் துறந்தாவது உன்னைப் பழி தீர்ப்பேன்' என்ற சூளுரையுடன் தப்பிக்கும் ராஜாக்கண்ணு'ட்ராவல்ட்டோ' நடன வகைகளுடன் வில்லனைத் தீர்க்கிருர். துணைக்கு மேஜர். இருவரும் கமல்—ரஜினி டீம் என்ற நினைப்புடன் ஆர்ப்பாட்டம் செய்கிருர்கள். இளமையின் உயிர் ஊசலாடுகிறது!

பாம்பின் விஷமேற்றி, பல் முளைத்து, ட்ராகுலா ஸ்டைலில் கடித்து... அஷ்ட கோணல் முகமும், மனிதப் பாம்பாய் மாறி ஊர்வதும் நெளிவதும்.... மற்றவர்களுக்கு நம்பியார் தேவலை என்று படுகிறது.

நல்ல அம்சம் என்று தேடினுல் விஜயகத்தின் வெளிப்புறப் படப்பிடிப்பைச் சொல்லலாம். படத்தில் வந்தவரை திருப்தி செய்கிருர் சுருளி—மனேரமாவுடன். ஸ்ரீப்ரியா—ஸாரி, நோ கமெண்ட்ஸ்!

கேட்கும்போதே உடன் மறந்துபோகும் இசை எம். எஸ். வி. யினுடையது. என்டி ஆரின் தெலுங்கு மசாலாவைத் தமிழ்ப்படுத்த திருலோகசந்தர் பட்ட கஷ்டம் வீண்! அபாரமான செட்களைப் போட்டிருக்கும் ஆர்ட் டைரக்டரை மட்டும் பாராட்டி வைப்போம்.

ஜெயமாலினியுடன் அசிங்கமான சேஷ்டைகளுடன் நடனமாடி என்ன சாதிக்கப் போகிருர் சிவாஜி? 'ஏ' சர்ட்டிபிகேட் என்ருல் 'ஏமாந்தவர்களுக்கு மட்டும்' என்று அர்த்தம் பண்ணிக் கொள்ளலாம். —'சிந்து-ஜீவா'

''தாட்ஸ் ஆல் ரைட்!'' — சிரித்தார் சேல்ஸ் டைரக்டர்.

''சார் நம் நிர்வாகத்தின் சேல்ஸ் உயரச் சில யோசனைகள், திட்டங்கள் வைத்திருக்கிறேன்!''

''சொல்லுங்கள்....''

''கொஞ்சம் பொறுமையுடன் கேளுங்கள். ஆரம்பத்தில் ஸ்லோ மோஷனில் ஐடியா வந்து... பிறகுதான்....''

''ஓகே! ஓகே! சொல்லுங்கள்!''

''அதற்குச் செலவெல்லாம் நிறைய ஆகும். தாராளமாக ஆகும். கஞ்சத்தனமான ப்ரொட்யூசரிடம் மாட்டித் தவிக்கும் ப்ரொடக்ஷன் மானேஜரைப் போல, டைரக்டரைப் போல என்னை மாட்டி விடாதீர்கள்.''

''நோ...நோ... என்ன பட்ஜெட் சொல்லுங்க சார். அதற்கு மேலேயே சாங்ஷன் செய்கிறேன். கேரி ஆன்....''

கமலின் காமிரா மூளையில் கற்பனை ஃபிலிம் ஓட ஆரம்பித்தது.

அந்த அறையில் வால் பிக்சரில் ஆசையாய், ஆவேசமாய் அருவி பாய்ந்து நிலமகளைக் குளித்துச் சுகம் பெற வைத்துக் கொண்டிருந்தது. அருவியின் கரையில் அந்தப் பெண், தன் அழகான பிரதேசங்களைக் கமலுக்குக் காட்டியவாறு, அவரை மகிழ்வித்துக் கொண்டிருந்தாள் — வாணி அங்கு இல்லை என்கிற தைரியத்தில்!

கமல் ட்ரிம்மாக இருந்தார். அந்த ஹேர் ஸ்டைல்! புதுமுக நடிகையிடம் சிச்சுவேஷனை, டயலாக்கை விளக்கும் டைரக்டரைப் போல ஆரம்பித்தார் பீடிகையுடன்.

''ஸார், கேக்கறீங்களா?''

''யெஸ்....''

''நம்ம ஸேல்ஸ் டிவிஷனில் பணிபுரிகிறவர்கள் சேல்ஸ் வேலைக்கு ஃபீல்டிற்குப் போகிறவர்கள், ஷோரூமில் இருப்பவர்கள் இன்னின்ன நேரத்தில் இன்னின்ன பொருட்களை விற்பனை செய்யும்போது இன்னின்ன உடைகளை, இன்னின்ன விதத்தில் அணிய வேண்டும் என்று முறை இருக்கிறது. அதைத் தீர்மானிக்க ஒரு ஸ்பெஷலிஸ்ட்! அட்வைஸர் தேவை. அதற்கு வாணியைச் செலக்ட் பண்ணுகிறேன்.

''நெபாடிஸம் என்று நினைக்காதீர்கள்... ஷி இஸ் க்ளவர் இன் டிரெஸ் செலக்ஷன். என் பலரக வேடங்களுக்கு அவள் சரியாக, கச்சிதமாய் செலக்ட் பண்ணிய அனுபவம். கடல் போன்ற அனுபவம். அதற்காகத்தான். ஷி இஸ் கிரேட் இன் திஸ் ரெஸ்பக்ட்... யுவர் ஒப்பினியன் ஸார்....''

''கேர்ரி ஆன்... கோ அஹெட்...''

கமல் கனைத்துக் கொண்டார்.

''ஐடியா வந்திரிச்சி'' என்று கல்யாணராமன் தனமாய் அவரது மூளை இசை பாடியது.

மளமளவென்று பொரிந்து தள்ளினுர்.

''ஃபைனலி ஒரு ஃபிலிம் எடுக்க வேண்டும். அட்வர்டைசிங் பப்ளிசிட்டி... எல்லாம் இதில் அடங்கும். ஆர்ட்டிஸ்ட் செலக்ஷன் என்னிடம் விட்டுவிடுங்கள். நம் ஐ லைனருக்கு மாதவியை, லிப்ஸ்டிக்கிற்கு தீபாவை... ஹேர் ஆயிலுக்கு

ஸ்ரீதேவியை... ஸ்னேவுக்கு ஸ்வப்னவை... பவுடருக்கு என் பர்சனல் அஸிஸ்டென்ட் ப்ரீதியை.... ஐ திங்க் மை செலக்ஷன் இஸ் ஓ.கே!''

''குட்....குட... கோ அஹெட்!'' — சேல்ஸ் டைரக்டர் வானில் மிதந்துகொண்டிருந்தார். நட்சத்திரத் தேவதைகளின் பட்டியலில் மயங்கிக் கொண்டிருந்தார்!

கமலின் செக்ரட்டரி இனிய நகையை இதழ்களில் அணிந்தவாறு குறிப்பெடுத்துக் கொண்டிருந்தாள்.

கமல் தொடர்ந்தார்.

''ஸார்... அந்த விளம்பரப் படம் கமர்ஷியல் ஹிட்டாக அமைய ஒரு கார் சேஸ்... ஒரு கிளப் டான்ஸ் — மசாலா இருக்கும்...''

''மசாலாவா? மிஸ்டர் கமல்! நாம்ப மசாலா தயார் பண்றதில்லேயே! காஸ்மடிக் சாதனங்கள் மட்டும்தான் தயாரிக்கிறோம்!''

கமல் தலையில் அடித்துக் கொண்டார்.

''நோ ஸார்... மசாலா.... ஐ மீன் ஜனரஞ்சகமாக என்று சொல்ல வந்தேன்...''

''ஓகே! ஓகே!''

''பத்திரிகைகள் நம் பக்க பலமாக இருப்பார்கள். தாராளமாய் ஒரு முழு பக்க விளம்பரம் கொடுங்கள் எல்லாருக்கும்.''

''ரைட்டோ.''

''....தென் அந்த விளம்பர படத்திற்கான ஷூட்டிங்கை நாளை ஆரம்பிச்சிடறேன் ஸார்....''

''ஓகே!''

வால் பிக்சர் ஈர அழகி மார்பு நிமிரச் சிரித்துக் கொண்டிருந்தாள்.

டேக் 4

கமல் அவசரமாய் வாஹினியின் மூன்றுவது ஃப்ளோரில் நுழைந்து கொண்டிருந்தார்.

ஏதோ தீவிர யோசனை.

உலகப் பட விழாவில் புது ஐடியாக் கிடைத்த டைரக்டரைப் போல் துள்ளிக் கொண்டு போனார்.

''மாதவிக்கு டயல் பண்ணு....

''அந்த செட் போட்டாயிற்று?....''

பொரிந்து தள்ளிக் கொண்டிருந்தார்.

நுழைந்தார்,

—பாலசந்தர்.

''என்னடா கமல்?''

''வணக்கம் சார்!''

''ஏதோ கேள்விப்பட்டேன்.... சேல்ஸ் எக்ஸ்கியூட்டிவ் வேலைக்குச் சேர்ந்திருக்கிறயாமே... என்ன இந்தத் தில்லு முல்லு எல்லாம்!''

''சார்! இந்தச் சினிமா ஃபீல்டே ஒரு நூல்வேலி மாதிரிதான் சார். பத்திரமில்லாதது. நிரந்தரமில்லாதது. உத்திரவாதமில்லாதது. ஜனங்க நினைச்சாத் தூக்கறுங்க, நினைச்சா சரிச்சுக் கடாசிடறுங்க...''

''வாஸ்தவம்தாண்டா.... அது சரி.... இங்கே என்ன வேலை? ஆபீசிலே ஒழுங்கா வேலை பார்க்க வேண்டியதுதானே... இங்கே என்னடா உலாத்திக்கிட்டு....?''

''ஸார் படம் பிடிக்கிறேன்... கம்பெனி பிராடக்ட்ஸ் பப்ளிசிட்டி படம். இந்த மூணவது ஃப்ளோர்ல பாருங்க. அந்த லைட் எஃபக்டே வர மாட்டேங்குது. இப்ப என்ன ஆகிறதுன்னு நடிகை குளிச்சிட்டுக் கண்ணடி முன்னே நின்னு... மெல்ல உடை நழுவ... அதில் நடிக்கிற என் பர்சனல் செக்ரட்டரி வெறும் முதுகைக் காட்ட, பவுடரை எடுக்க.... என் சேல்ஸ் அஸிஸ்டென்ட் அவளை நெருங்க, அவள் ஒயிலாய்த் திரும்ப...''

பாலச்சுந்தர் நெற்றியின் நடு மத்தியில் அடித்துக் கொண்டார்.

''என்னதான் கௌரவா சேல்ஸ் எக்ஸிக்யூடிவ் வேலைக்குப் போய்ச் சேர்ந்தாலும் இந்த ஸ்டுடியோ புத்தி போகலை பார்த்தியா? நானும் ஏ.ஜி.எஸ். ஆபீசிலே போய் மறுபடியும் சேரலாம்னு இருக்கேன்!''

''வேணும் சார்... வேணும்...''

''ஏண்டா?''

''ஐயைய்யோ வேணும்... நீங்க அங்கிருந்து ரிஸைன் பண்ணின நாளிலிருந்து இன்னி தேதி வரை ஒரு மாதிரியா அங்கே ஸிஸ்டமாடிக்கா வேலை நடக்கிறதா கேள்வி.''

''படவா ராஸ்கல்!'' — பாய்ந்தார் பாலச்சந்தர்!

—ஓடினார் கமல்!


இன்னிக்கி என் இண்டர்வியூவை
எப்படித்தான் சமாளிக்கப் போறேனோ?
எனக்குக் கடுமையான தலைவலி.
நான் சொல்றதைக்
கேளுங்க, அனாஸின்
சாப்பிடுங்க!



ரஜினிஹாசனும் ராசம்மாவும்



அகஸ்தியன்

பாரதிராஜா பார்த்திருந்தால் கொத்திக் கொண்டிருப்பார். பாக்யராஜ் சபலப்பட்டிருப்பார். பாலசந்தரும் கிறங்கியிருப்பார். மகேந்திரன் மயங்கியிருப்பார்.

அவ்வளவு அழகான, சினிமாவுக்கு ஏற்ற முகவெட்டு உடைய—

கிராமம் அது!

ஊருக்கு நடுவே இருக்கும் தெருவில், மங்களூர் ஓடு போட்ட சின்ன வீட்டு வாசலில், நன்றாக மெழுகப்பட்ட மண் தரையில் உட்கார்ந்துகொண்டு அரிசி நோம்பிக்கொண்டிருக்கிறார் ஒரு வயதான மூதாட்டி.

அன்புள்ள வாசகர்களே; மூதாட்டி என்று அலட்சியமாகக் கவனிக்காமல் இருந்துவிடாதீர்கள்.

இந்தப் பெண்மணி பெயர் ராசம்மா — நமது ஹீரோயின்!

□ □ □

ஏழு அபஸ்வரங்களையும் கலந்து அவள் பாடிக்கொண்டே அரிசியில் கல்லைப் பொறுக்கிக்கொண்டிருந்தாள். அவள்பாட்டை இளைய ராஜா கேட்டிருந்தால், இத்தனை நாள் ஏதாவது ஒரு திரைப் படத்தில் போட்டிருப்பார்.

ராசம்மாவுக்கு அறுபதுவயதிருக்கும். நடுத்தரக் குடும்பப் பாங்கு அவளுடைய நூல் புடவையிலும் கழுத்தில் உள்ள காப்பிக் கொட்டைச் சங்கிலியிலும், காது கம்மலிலும், நெற்றியில் உள்ள கம்பீரமான பொட்டிலும் வெளிப்படுகிறது.

பாட்டுப் பாடிக் கொண்டிருந்தாலும் கல்லைப் பொறுக்கிக் கொண்டிருந்தாலும் அவள் பார்வை மட்டும் அவ்வப்போது தெருக் கோடிக்கே போய்க் கொண்டிருந்தது.

''என்ன ராசம்மா... இன்னும் தபால் காரன் வரலியா?'' என்று வீட்டினுள்ளிருந்து ஒரு குரல் வந்தது.

''அதுதானே குந்திக்கினு பார்த்துக்கிட்டு இருக்கேன். புதன் கிழமைன்னு நம்ம குமார் லெட்டர் வருமே.... அதோ தெருக் கோடியிலே தபால்காரர் சைக்கிள் தெரியுது...''

அடுத்த இரண்டு நிமிடத்துக்குள் தபால்காரர் ராசம்மாவிடம் ஒருகவரைக் கொடுத்துவிட்டுப் போய்விட்டார்.

''ஒண்ணேத்தானே...லெட்டர் வந்திருக்கு. வந்து படியுங்க. கவரிலே என்னமோ பொம்மை யெல்லாம் அச்சடிச்சிருக்குது.''

வயதானதால் ஏறியிருந்த உடல் மினுமினுப்புடனும் நரைத்த மீசையுடனும் இருந்த கிழவர் வெளியே வந்து, மூக்குக் கண்ணாடியைச் சரி செய்து கொண்டு கவரை வாங்கிப் படிக்க ஆரம்பித்தார்.

''நம்ப குமார் எழுதின லெட்டர் இல்லே, ராசம்மா... ஏதோ 'சினிமா ஜோதி'ங்கிற பத்திரிகைக்காரங்க எழுதியிருக்காங்க....... அட... உன் பேருக்குத்தான் எழுதியிருக்காங்க... இன்னது... இன்ன... மெட்ராஸுக்குப் போய் வரப் பணம் தர்றாங்களாம்.''

''எதுக்கு?''

''சினிமாவிலே ஆக்ட் கொடுக்கலே, ரஜனிஹாசன்னு ஒருத்தரு... அவரைப்

பார்த்துப் பேசற அதிர்ஷ்டப்பரிசு உனக்கு அடிச்சிருக்காம். அவரோட . உட்கார்ந்து சாப்பாடு கூடச் சாப்பிடலாம்....''

''இது என்ன கூத்து? யாரு அந்த ஆக்டரு... நான் சினிமாவைப் பார்த்தனு? நாடகத்தைப் பார்த்தனு? அரிதாரம் பூசற வங்களை நான் ஏன் போய்ப் பார்க்கணுமாம்? இது இன்னு வேடிக்கை?'' என்று கேட்டாள் ராசம்மா.

□ □ □

0
00ப்ளாஷ் பேக்!

''இது என்னய்யா வேடிக்கை'' என்று கேட்டார் ஆசிரியர்.

''வேடிக்கையாகத்தான் இருக்கப்போவுது.. ராசம்மா, இரும்புலியூர் கிராமம்னு பேர் வந்திருக்குது.... பாரேன், ரஜினிஹாசனைப் பேட்டி காண ஒரு கிழவி வந்து நிக்கப் போவுது.... முதல்லேயே சொன்னேன் இது நல்ல ஐடியா இல்லேன்னு... பத்திரிகையிலே கூப்பனைப் போடறதாம்... அதில் பேர் எழுதி வாசகர்களை அனுப்பச் சொல்றதாம். ரஜினிஹாசன் ஏதாவது ஒண்ணை எடுப்பாராம். அந்த வாசகர் ரஜினிஹாசனைப் பேட்டி காண்பாராம். அதைப் படம் எடுத்துப் பத்திரிகையில் போடறதாம்.சரியான பேத்தல்.''

''ஹாசன் கொடுத்த ஐடியாதான்ஸார் இது. டாப் ஹீரோவை வெச்சு ஏதாவது பண்ணணும்னு நீங்கதானே சொன்னீங்க.''

சினிமா ஜோதி ஆசிரியர் ''ஹூம் போவட்டும். அதுவரைக்கும் ஒரு பொம்பளை பேர் வந்ததே. சந்தோஷம்.... ஏன்யா... யாராவது காலேஜ் ஸ்டூடண்ட்டைப்பி டிச்சுப் போட்டு, குலுக்கல்லே இவங்க பேர் தான் வந்ததுன்னு சொல்லிப் பேட்டியைப் பண்ணச் சொல்லிடலாமே....''

''முடியாது சார்.ரஜினிஹாசனுக்குஇந்தத் தில்லு முல்லு எல்லாம் பிடிக்காது. அவரோட ராஜ பார்வையைக் கோபப் பார்வையா மாத்திப்புடுவாரு.''

''சரி...சரி... அந்த ராசம்மாவுக்கு லெட்டர் அனுப்பு.... ஆவறது ஆவட்டும்... அப்புறம் நம்ம இலக்கிய மலருக்கு வேறு என்னென்ன செய்யப் போறீங்க?''

'' 'சினிமாவில் செக்ஸ்' என்ற தலைப்பில் ஜெயமாலினியின் ஆராய்ச்சிக் கட்டுரை, ஆபாச வசனங்கள் பற்றிச் சில குடும்பப்பெண்களின் கருத்துரையாடல், ஏ-படங்கள் எடுப்பது எப்படி என்று சில டைரக்டர்கள் பேட்டி.....''

''வெரி குட்....''

□ □ □

அன்புள்ள பாட்டிக்கும் தாத்தாவுக்கும் குமார் எழுதிக் கொண்டது. நீங்கள் அனுப்பிய ரூபாய் வந்து சேர்ந்தது. ஹாஸ்டல் பணம் கட்டிவிட்டேன். நீங்கள் நலம் தானே?

'சினிமா ஜோதி' என்ற பத்திரிகையில் ஒரு பேட்டி வந்திருந்தது. தமாஷுக்காகப் பாட்டியின் பெயரில் அந்தப் பேட்டிக் கூப்பனை அனுப்பி வைத்திருந்தேன். இந்த வார இதழில் அதிருஷ்டசாலியாக உன் பெயர் வந்திருப்பதாகப் போட்டிருக்கிறார்கள். சினிமாநடிகர் ரஜினிஹாசனை நீ சந்திக்கவும், அவரைப் பேட்டி காணவும் போட்டோ எடுத்துக்கொள்ளவும் உனக்கு நல்ல சான்ஸ்... இதற்கு நீ மறுக்கக் கூடாது. ஏனென்றால் உன்னோடு அவரைப் பார்த்துப் பேச எனக்கும் சான்ஸ் கிடைக்கும். ரஜினிஹாசன் உலகிலேயே பெரிய ஆக்டர். என் உயிருக்கு உயிரான நடிகர். அவருக்காக உயிரையும் விடத் தயார்... பாட்டி ப்ளீஸ்... தயவு செய்து சரி என்று சொல்லு... இப்படிக்கு, குமார்.

□ □ □

முதலில் உதவி ஆசிரியர் 'சினிமா தும்பி'க்கு அதிர்ச்சியாகத்தான் இருந்தது. ராசம்மாவைப் பார்த்ததும். அடப் பாவமே, ஒரு கிழவியையாரஜினிஹாசனைச்சந்திக்க அழைத்துச் செல்ல வேண்டும்? இந்தக் கிழவி என்ன கேள்வி கேட்கப் போகிறாள், என்ன சுவையாக இருக்கப் போகிறது! இலக்கிய மலர் சுத்த பேத்தலாகத்தான் அமையும் என்று எண்ணினார்.

ராசம்மாவைக் காரில் ஏற்றிக் கொண்டு ஸ்டுடியோவுக்குப் புறப்பட்டார். கூட ஒரு போட்டோகிராபர். குமாரும் பாட்டியுடன் வந்தான்.

கோடம்பாக்கம் ரோடில் போய்க் கொண்டிருக்கும்போது பாட்டி, ''ஏண்டாப்பா... உன் பேர் இன்னு சொன்னே? சினிமா தும்பியா? சினிமாத் தம்பியா?... இந்தப் பக்கம் தானே வ ட ப ழ னி



கோயில்இருக்கு... போய்ச் சாமி கும்பிட்டுப் போவலாம்...'' என்றாள்.

''இல்லேங்க... ரஜினிஹாசனுக்கு டைம் சொல்லியிருக்கோம்... அதனாலே...''

''நல்லாயிருக்குதுப்பா தும்பி. போனால் போவுதுன்னுஅவரைப் பார்க்க நான் வரேன். நான் பார்க்காத நாடகமா, கூத்தா! அந்தக் காலத்திலே நானே சந்திரமதியா வேஷம் கட்டியிருக்கேன்... கோவிலுக்குப் போவலாம் முதலில்'' என்று கண்டிப்புடன் சொல்லவே தும்பியால் மறுக்க முடியவில்லை.

கோவிலில் கூடம் கொளுத்திவிட்டுப் புறப்பட அரை மணி ஆயிற்று.

◘ ◘ ◘

''இன்னுப்பா பெரிய ஆக்டரைப் பார்க்கப் போறோம்னு சொன்னியே... அல்லாம் தகரக் கொட்டகையா இருக்குது? பங்களா கிங்களா மாதிரி இல்லே....''

''பாட்டி இதுதான் ஸ்டுடியோ... இங்கே தான் படம் எடுக்கிறாங்க. ரஜினிஹாசனின் வீடு இது இல்லே.''

''படம் எடுக்க இம்மாம் எடம் எதுக்கு? நம்ப ஊர்த் திருவிழாவிலே மரத்தடியிலே கறுப்புத் துணி போர்த்திக்கிட்டு எடுத்துக் கொடுப்பான். இந்த மெட்ராஸ்காரங்களுக்கு ஒண்ணும் தெரியலே!'' என்றாள் பாட்டி.

ஷூட்டிங் ஃப்ளோருக்குள் பாட்டியையும் குமாரையும் அழைத்துச் சென்றார் தும்பி. உள்ளே ஷூட்டிங் நடந்து கொண்டிருந்ததால், கதவுக்கு வெளியே நிற்கச் சொன்னார்கள்.

''வேலே மெனக்கெட்டு நான் வந்திருக்கேன். வெளியே நிக்கச் சொல்றாங்களே. அரிசியைப் புழுக்கணும், கேவுரு அரைக்கணும், புளியை ஆயணும். அல்லா வேலேயையும் விட்டுப்போட்டு, கிழவனேயும் தனியா வுட்டுப்பிட்டு நான் வந்திருக்கேன். போப்பா குமார். உனக்காக வந்தேன்.''

''இல்லே பாட்டி... உள்ளே போட்டோ பிடிக்கறாங்க.''

''போட்டோ பிடிச்சா இன்ன? நாலு பேர்பார்த்தாக்கெட்டா போயிடும்? போடா எனக்குக் கதை சொல்றே. நான் பார்க்காத போட்டாவா?''

இதற்குள் ஷூட்டிங் முடிந்துவிடவே, பாட்டியை உள்ளே அழைத்துக்கொண்டு போனார் தும்பி.

உடனே அடுத்த ஷூட்டிங் ஆரம்பித்துவிடவே,, எல்லாரும் 'சைலன்ஸ்... சைலேன், சைலே, என்று பலவித ஸ்தாயிகளில் கத்த விளக்குகள் எல்லாம் உயிர் பெற்றன. ஃபேன்கள் நின்றன.

ரஜினிஹாசன் ஒரு கப்ரே பெண்ணுடன் மேடையில் ஆடுவதைப் படம் பிடித்தார்கள்.

''என்னப்பா, தும்பி... பெரிய ஆளுங்களா இருக்காங்க... அந்தப் பொண்ணுக்குக் கொஞ்சம் உடம்பை மூடற டிரஸ்ஸாகக் கொடுக்கக் கூடாதா?.... ஏம்மா கொழந்தை இப்படி ஆடறயே நல்லா இருக்கா...'' என்று கேட்டுவிட்டாள்.

''யாரு இந்தக் கெயவி...? கண்டவங்களே உள்ளே உட்டுடறாங்க...''

''என்னேய்யா கெயவின்னு சொன்னே? நான் நாலு படி அவல் இடிப்பேன். நீ இடிப்பியா? கண்டவங்கன்னு சொன்னே?.... யாருப்பா சினிமா தும்பி... சொல்லு... என்னேயும் போட்டோ பிடிக்கத்தான் இட்டாந்திருக்குதுன்னு சொல்லு... போம்மா கொழந்தை போய் உடம்பை மூடிக்கோ'' என்றாள்.

தும்பி ஒரு மாதிரியாக விஷயத்தை விளக்கி 'காபரே'யை அனுப்பி வைத்தார்.

இதற்குள் அங்கு வந்த ரஜினிஹாசன் ''ஹலோ... டும்பி... இவங்கதான் ராசம்மாவா... வாங்க அம்மா... வணக்கம்மா. இவ்வளவு தூரம் என்னேப் பார்க்க வந்ததுக்கு மகிழ்ச்சி'' என்றார்,



நினைவில் நிற்கும் காட்சி

ரம்பையின் காதல்

◘ அந்தக் காலத்தில் *(1939-40)* நான் பார்த்த படங்களிலேயே மிகச் சிறந்தது, 'ரம்பையின் காதல்'. கே. சாரங்கபாணி, கே. எல். வி. வசந்தா, டி. ஏ. மதுரம், முதலியவர்கள் நடித்தது.

இந்திர சபைக்கு நாட்டியமாட காலந்தாழ்த்தி வருகிறாள் ரம்பை. பூலோகத்தில் ஏதோ ஓர் இடம் மனத்தைக் கவரவும், சொக்கி நின்றுவிட்டாளாம்! ஆத்திரம் வந்த இந்திரன் அவளைச் சபிக்கிறான் — எந்த இடம் அவளைக் கவர்ந்ததோ, அங்கேயே சிலையாக நிற்கும்படி. இரவில் மட்டும் அவள் சுயரூபம் பெறுவாள்.

யத்பவிஷயன் என்ற அப்பாவியின் கண்ணைக் கட்டி அழைத்து வந்து சிலைக்குக் கல்யாணம் பண்ணி வைக்கிறார்கள் அவன் நண்பர்கள். தான் மணந்து கொண்டிருப்பது சிலை என்று தெரியாமல் குஷியாகப் பாடுகிறான் யத்பவிஷயன். அவனுக்குத் தலைகால் தெரியவில்லை. சிலையைத் தடவிப் பார்த்தபடி ஆனந்தமாகப் பாடும் காட்சியில் சக்கைப் போடு போட்டிருந்தார் நடிகர் சாரங்கபாணி.

—ஜி. எஸ். பாலகிருஷ்ணன்

''நன்னு யிருடாப்பா... பதினாறும் பெத்து நல்லா இருக்கணும்... நீதான் ஆக்டரா... நானும் வேஷம் கட்டியிருக்கேன்.''

''அப்படியா?''

''என்ன இழுத்த மாதிரி கேக்கறே? ராவிக்கெல்லாம் வேஷம் கட்டிப் பாட்டுப் பாடி கூத்துப்போட்டிருக்கேன்...ஆமாம்... அந்தப் பொண்ணுதான் வெக்கமில்லாமல் உன்மேலே விழுதுன்னு. நீகூடவா அப்பிடிக் கட்டிப் பிடிக்கணும். உன்னைப் பார்த்தா பெரிய வூட்டுப் புள்ள மாதிரி இருக்குது...''

தும்பி கையைப் பிசைந்து கொண்டார். ரஜினிஹாசன் ஒரு முரட்டுக் காளை. திடீர் என்று முரண்டுக் குணம் வந்துவிடும். நல்ல காலம் அப்போது வரவில்லை. குமாருக்கு ஒரே குஷி. பெரிய ஹீரோவுக்கு அரை அடி தூரத்திலே நின்று கொண்டிருக்கிறானே!

ஹீரோவோ பாட்டியுடன் பேசிக் கொண்டிருப்பதில் உற்சாகம் காட்டினார்.

''இல்லை பாட்டி... இதெல்லாம் சும்மா நடிப்பு... ஆமாம், நீங்க என் படம் எதெது பார்த்து இருக்கீங்க?''

''உன் படத்தைக் கண்டேனா உன்னைக் கண்டேனா? இந்தத் தம்பி இட்டாந்துடுத்து. ஆமாம்... உன் கலியாணம் ஆயிடுச்சா?''

''ஆயிடுச்சு பாட்டி... ஏன் கேக்றீங்க?''

''அது இருக்குதே, அது ஒண்ணும் சொல்லாதா,உன்னை?நல்ல பொண்ணாகஇருக்கும்.''

''பாட்டீ...இதெல்லாம் சும்மா பொழைப்புக்காக ஆடற ஆட்டம்...''

''ஆமாம், உன் பேர் இன்னா? மறந்துட்டேன்... ரஜினிஹாசா... உனக்கு எத்தினி பசங்க?...''

''இப்பத்தான் கல்யாணம் ஆச்சு.''

''குளிச்சிட்டு இருக்கா?''

''மூணு மாசமா இல்லே...''

இந்தச் செய்தி தும்பிக்கே நியூஸ். இலக்கிய மலரில் வருவதற்குள் வேறு ஏதாவது பத்திரிகையில் வந்துவிடப் போகிறதேஎன்று யோசித்துக் கொண்டே சுற்று முற்றும் பார்த்தார். அவர் பயந்தபடி ஒரு சினிமா நிருபர் இருந்தார்.

''இந்தாப்பா சலன்... நீ இந்த நியூஸை ஃப்ளாஷ் பண்ணிடாதே...'' என்றார்.

பாட்டியோ சுவாரசியமாகப் பேசிக் கொண்டிருந்தாள்.

''ஆமாம், இப்படி வேஷம் கட்டி ஆடறியே இன்னா சம்பளம் கொடுப்பாங்க? எத்தனை மரக்கால் நெல்லு கொடுப்பாங்க?'' என்று கேட்டாள். குமார், ''பாட்டீ...'' என்று ஆரம்பித்ததும், ''தம்பி குமார், நீங்க பாட்டியைச் சும்மா விட்டுடுங்க... அவங்க கேட்கிறபடி கேட்கட்டும்'' என்றார் தும்பி.

அப்போது டைரக்டர் ''ரஜினி வர்றியாப்பா — ஷாட் ரெடி'' என்றார்.

''நீ யாருப்பா வெள்ளைத் தொப்பி... அவரைக் கூப்பிடறே...''

''பாட்டி, அவர் டைரக்டரு. அவர் சொல்றபடிதான் நாங்க நடிக்கணும்...''என்றார் ரஜினிஹாசன்.

''அப்படியா சமாசாரம்... அப்பா, வெள்ளைத் தொப்பி... இப்படி யெல்லாமா பொம்பளையோட கூத்தாடச் சொல்றது! ஒனக்குப் பொண்டாட்டி பிள்ளை கிடையாதா? கூடப் பிறந்த அக்கா தங்கச்சி கிடையாதா?'' என்று கேட்டாள்.

டைரக்டர் அதைக் காதில் வாங்கிக்கொள்ளாமல் காரியத்தில் முழுகிவிட்டார்.

''பாட்டி.... ரெண்டு நிமிஷம்... வந்துடறேன்''என்று சொல்லிவிட்டு ரஜினி ஹாசன் ஷாட்டுக்குப் போய்விட்டார்.

காமிரா முன் அவர் நிற்க, டேப்பிலிருந்து ''கண்ணில் விளையாடும் கன்னியே... என் கனியே.... என் கனவே....'' என்று பாட்டு வர ஹீரோ உதட்டசைக்க, அந்த வரி படமாக்கப்பட்டது.

''இன்னா வந்துட்டே?.... அவ்வளவுதானா? மூச்சு வாங்கிடுத்தா? விடிய விடிய மூச்சு விடாம அந்தக் காலத்திலே பொன்னுசாமி பாடுவாரு... இந்தக் காலத்திலே ஒரு வரி பாட்டுப் பாடறத்துக்குள்ளாற தம் பூடுது... போவட்டும். உன் சம்பளம் இன்னான்னு சொல்லலையே?''

போட்டோகிராபர், ''பாட்டி, கொஞ்சம் இப்படித் திரும்பிப் பாருங்க... படம் எடுத்துடறேன்'' என்றார்.



நினைவில் நிற்கும் காட்சி

காக்கும் கரங்கள்

● ஏ. வி. எம். புரொடக்ஷன்சாரின் ''காக்கும் கரங்கள்'' என்னும் படத்தில் ஒரு காட்சி.

நாகேஷ் ஒரு வேலையில்லாப் பட்டதாரி. அவர் தன் தங்கையின் பிறந்த நாள் பரிசாக ஒரு நெக்லசும், சாக்லெட் டின்னும் வாங்கி வருகிறார். நெக்லஸைக் கண்டு மகிழ்வுற்ற அவர் தங்கை, ''அண்ணா! மிகவும் நன்றாக உள்ளது!'' எனக் கூற அதனைக் கேட்ட நாகேஷ் நெகிழ்ந்து, ''அம்மா! நான் வாங்கி வந்த இந்த நெக்லஸ் தங்கமும் இல்லை, வெள்ளியும் இல்லை; கவரிங் நகை! இதன் விலை வெறும் பதிமூன்று ரூபாய்தான். நான் வாங்கி வந்த இந்த சாக்லேட் டின்னுக்குக்கூட இன்னும் நான் பணம் கொடுக்கவில்லை!'' எனக் கூறிப் பாசத்தால் கண்ணீர் விடுகிறார். அதற்கு அவர் தங்கை, ''உங்கள் பாசமே எனக்கு விலை உயர்ந்த பரிசு'' எனக் கூறி அவரைச் சாப்பிட அழைத்துச் செல்கிறார். உருக்கமான இந்தக் காட்சியே என் நினைவில் நிற்கும் காட்சி.

—எஸ். ராஜா

''எடேன்... சொல்லி யிருந்தா கிழவரை அழைச்சாந்திருப்பேன் இல்லே... குமார், இப்படி வா... தம்பி... இது என் பேரப் புள்ளை... ஆமாம்... இதையும் உன் கூடச் சேத்துக்கோயேன். உன்னை மாதிரி அதுவும் பொழைச்சுப் போறது'' என்றாள் பாட்டி.

பாட்டியின் பேச்சைக் கேட்டு ரஜினி ஹாசன் சிரிக்கவில்லை. ''செய்துட்டாப்-போறது பாட்டி... உங்க பேரனும் இப்படிக் கட்டிப் பிடிச்சு ஆட வேண்டி யிருக்குமே!''

''ஆடட்டுமே...சம்பளம்தருவாங்கல்லே!''

டைரக்டர் ''ப்ரேக்'' என்று சொல்ல, இரண்டொரு பேர், 'ப்ரேக்' ப்ரேக்' என்றனர்.

''இன்னா குரல் கொடுக்கிறாங்க?''

''சாப்பாட்டுக்குப் போறதுக்கு டைமாயிடுச்சு... வாங்க பாட்டி, வாங்க ரஜினி ஹாசன்'' என்று கூறி அவர்களைக் காரில் ஏற்றி ஒரு ஐந்து நட்சத்திர ஓட்டலுக்கு அழைத்துச் சென்றார் தும்பி.

பாட்டி இஷ்டத்துக்கு கமெண்ட் அடித்தார். தும்பிக்கு எல்லாம் தமாஷாக இருந்தது.

''இது இன்னாப்பா தட்டுத் தட்டா வெக்கறாங்க? நானு வெறும் கேவுரு கூழு, பச்சை மிளகாய்தான் சாப்பிடுவேன். கண்டதைத் தின்னால் வவுத்துக்கு ஆவாது. இது என்ணப்பா கத்தி, குத்தின்னு வெக்கறாங்க'' என்று கேட்டாள்.

அப்போது டைரக்டர் அங்கு வந்தார். தும்பியோ ஹாசனை எதிர்பார்க்கவில்லை.

''வாங்க சார்.... நீங்க....''.

''உட்காருப்பா... ரஜினி... தும்பி..... திடீர்னு எனக்கு ஒரு ஐடியா... இந்தப் பாட்டியம்மாவைப் பாத்ததும் தோணித்து. அந்த டீச்சரம்மா கேரக்டரை எடுத்துட்டுப் பாட்டியாக மாத்திடலாம். இவங்க பேசற விதம், முகத்திலே இருக்கிற கம்பீரம் எல்லாம் என்னை, இம்ப்ரஸ் பண்ணிட்டுது. மூணு நாள் வொர்க் பண்ணால் போதும்.''

ரஜினிஹாசன், ''நான் கூட நினைச்சேன். அந்த ரோலுக்கு டீச்சரம்மாவை விட வயசான ஒருத்தரைப் போட்டால் நல்லா இருக்கும்னு... பாட்டியைக் கேளுங்க....'' என்றார்.

□ □ □

''இன்னாப்பா இது... அதிசயமா இருக்குது. ஒருதலை ராகத்தையே சாப்பிட்டுடுத்து... ஒரு பாட்டியை வெச்சுக்கிட்டுக் கில்லாடி வேலை பண்ணி யிருக்காங்க... சொல்லக் கூடாது, கிழவியும் வெளுத்துப் பிச்சு, உதறிக் கட்டியிருக்குது....''

''ராஜ பார்வையிலே தாத்தாவைப் போட்டதைப் பார்த்து இவங்க கிழவியைப் போட்டிருப்பாங்க....''

''ஆனால் கிழவி இவ்வளவு பூந்து விளையாடும்னு அவங்களே நெனைச்சிருக்க மாட்டாங்க....''

''தமாஷுக்குத் தமாஸ்... அதே சமயம் கடைசி சீன்லே ரஜினிஹாசனைக் கட்டிக்கிட்டு நாலு டயலாக் பேசுதே... ஸும்மா அழுதுட்டேன். நகத்திடுத்து அப்பா...''

''பாரேன்... இனிமே அல்லா புரட்யூசருங்களும் அந்தப் பாட்டியைப் படத்திலே போடுவாங்க....''

''புரட்யூசரை வுடு.... இப்பவே பத்திரிகையிலே போட்டோவாப் போடறாங்க..... ராசம்மா அணிவது எங்கள் காசிப் பட்டுப் புடவையே என்று அவங்களை மாடலாகப் போட்டு விளம்பரமும் வரலாம்.''

''சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்காரங்க மட்டும் சும்மா இருப்பாங்களா?''

''ஆமாம். இந்த ராசம்மாவை எப்படித்தான் டைரக்டர் சந்திரபாலன் தேடிப் பிடிச்சாரோ?''

□ □ □

சினிமா ஜோதியின் இதழில் இரண்டு பக்க அளவு வெளியான அறிவிப்பு:

அடுத்த இதழ்: எமது இலக்கிய மலர். 'சினிமாவில் செக்ஸ் — ஜெயமாலினியின் ஆராய்ச்சிக் கட்டுரை. ஆபாச வசனங்கள்— குடும்பப் பெண்கள் கருத்துரையாடல். 'ஏ, படங்கள் எடுப்பது எப்படி — டைரக்டர்கள் கூறுகிறார்கள். பாட்டியர் திலகம் ராசம்மாவை ரஜினிஹாசன் பேட்டி காண்கிறார்!

நினைவில் நிற்கும் காட்சி

தேவதாஸ்

காதலால் நெஞ்சம் உருகி உருகிக் கரைந்தது. குடியால் உடம்பும் சீர்குலைந்து விட்டது. மூச்சு முடியப் போகிறது என்பதை உணர்ந்து கொண்ட தேவதாஸ் கண்ணை மூடுவதற்குள் பார்வதியைக் கடைசியாகப் பார்த்துவிட வேண்டும் என்று விரும்பி ஒரு மாட்டு வண்டியை அமர்த்திக்கொண்டு புறப்படுகிறான். காற்றும் மழையும் சீறியடிக்கின்றன. வண்டிக்குள் இருமலும் இரத்தமுமாய் தேவதாஸ் துவண்டு சரிகிறான். நிலைமை நிமிடத்துக்கு நிமிடம் மோசமாகிக் கொண்டே போகிறது. இன்னொரு பக்கம் அங்கே அரண்மனை போன்ற விட்டில் பார்வதி அமைதி இல்லாமல் அலைகிறாள். தீய சகுனங்கள் அவளைப் பதைக்கச் செய்கின்றன.

பரபரப்பான இக்காட்சியில் வண்டி ஓட்டுபவன் தேவதாசின் நிலையைப் பார்த்து இரக்கப்படுகிறான். யதார்த்தமான முகபாவத்தோடு வண்டியை முடிந்த மட்டும் வேகமாகவே ஓட்டுகிறான். காற்றும், மழையும் தாக்கியபோதும் அந்த எளியவன் காட்டுகின்ற மனிதாபிமானம் நம் நெஞ்சில் உயர்ந்த இடத்தைப் பிடித்து விடுகிறது.

- முத்து தங்க ஐயப்பன்



கேள்வி: நமது முதலமைச்சருடன் பல படங்களில் நடித்திருக்கிறீர்கள் அல்லவா?

பதில்: ஆமாம். அவர் முதல்மைச்சரானது தமிழகத்துக்கு நன்மை என்றாலும் எங்களைப் போன்ற பலருக்குத் தனிப்பட்ட முறையில் நஷ்டம். அவர் இடத்தை நிரப்ப யாராலுமே முடியாது. சண்டையிலும் சரி, அதை அமைப்பதிலும் சரி, அவருக்கு நிகர் அவரேதான். அழகாகச் சொல்லிக் கொடுப்பார். சிரமமே தெரியாது. 'அடிமைப் பெண்' படத்துக்காக ஒரு சண்டைக் காட்சி. சத்யா ஸ்டுடியோவில் 35 அடி உயரத்துக்குப் படிகள் அமைத்திருந்தார்கள். இந்த செட்டில் கீழிருந்து மேலாக ஒவ்வொரு படியாக நாங்கள் சண்டையிட்டுக் கொண்டே செல்லவேண்டும். என் கையில் ஒன்றரை அடி நீள முள்ளரோமானிய பாணி கத்தி. அவர் கையில் ரஜபுத்திர அரசர்களின் நீளமான கத்தி. சண்டையிட்டுக் கொண்டே மேலே சென்று நான் ஒரு சுற்றுச் சுற்றிவிட்டுச் சண்டையைத் தொடர வேண்டும். சுற்றினேன். சுற்றிய பிறகு சற்றுத் தடுமாறி மறுபுறத்தில் காலை வைக்க அவர் சரேலென்று என்னைப் பிடித்தார். இல்லையென்றால் 35 அடி உயரத்திலிருந்து நான் விழுந்திருப்பேன். பிறகு அவர் என்னைக் கோபித்துக் கொண்டார். ''எப்படிச் சண்டையிடப் போகிறோம், எங்கே நிற்க வேண்டும் என்பதெல்லாம் முன்பே பார்த்துக்கொள்வது கிடையாதா? ஒருபுறம் மட்டும் தான் படி இருக்கிறது என்பதை மறக்கலாமா?'' என்றார்.

கேள்வி: உங்களுடைய உண்மைப் பெயரே மனோகர் தானா?

பதில்: இல்லை. லட்சுமி நரசிம்மன். ஒரு நாள் எனது நண்பர் 'மனோகரா' வேடத்தைச் செய்ய இருந்த நடிகர் திடீரென்று சொந்த ஊருக்குச் சென்று விட்டதாகவும் அதனால் நான்தான் நடிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். ஒரே நாளில் வசனங்களை மனப்பாடம் செய்து நடித்துக் கைதட்டல்களைப் பெற்றேன். இதன் விளைவாக அந்த நாடகத்தின் பெயரான மனோகராவையே மனோகர் என்று சுருக்கி எனக்குப் பெயரிட்டார்கள். அதுவே நிலைத்துவிட்டது.

கேள்வி: விபத்துக்கள் சண்டையிடும்போது ஏற்படாதா?

பதில்: பல சமயம் ஏற்பட்டிருக்கிறது. 'நான்' படப்பிடிப்பின்போது துப்பாக்கியின் பொய்க் குண்டு உரசிக் கொண்டு சென்றதால் கழுத்து வலி ஏற்பட்டுப் பல நாள் அவஸ்தைப்பட்டேன். 'கொஞ்சும் சலங்கை' படப் பிடிப்பின்போது ஓடும் குதிரையை விட்டு விட்டு ஓடும் ரதத்துக்குத் தாவ வேண்டும். கண நேர தாமதம் காரணமாய் நல்ல அடி. இதெல்லாம் இந்தத் தொழிலில் சகஜம்.

சிரித்துக்கொண்டே கூறி விடை கொடுத்தார் மனோகர்.

பேட்டி: சலன்

மாலினியின் மறுபக்கம்

ஜெ.எம்.சாலி



மாலினி...மாலினி...மாலினி!

வீடு முழுதும் ஓடி ஓடித் தேடியாயிற்று. பதிலும் இல்லே; ஆளும் இல்லே.

பாஸ்கர் பதறிப் போனுன். மாலினியைக் காணவில்லே.

எங்கே போயிருப்பாள்? இன்றைக்கு அவன் திரும்பி வருவான் என்பது மாலினிக்குத் தெரியும். புன்னகைக் கோலத்தோடு வர வேற்பாள் என்று எதிர்பார்த்து வந்திருக்கிறுன்.

மாலினி எங்கே போய்விட்டாள்?

அவுட்டோர் படப் பிடிப்பை முடித்துக் கொண்டு மனம் முழுதும் மகிழ்ச்சியைத் தேக்கிக்கொண்டு திரும்பியவனுக்கு வீட்டில் அதிர்ச்சி காத்திருக்கிறது.

மாலினிக்குக் கோப தாபமா? இருக்க நியாயமில்லே. வழக்கமாக அவுட்டோர் போகும்போது அவளே அழைத்துக்கொண்டு போவதில்லே. அதில் அவள் அக்கறை காட்டியதில்லே. அலுத்துப்போன விஷயமோ? அவள் கலந்துகொண்டிராத படப் பிடிப்பா...!

கொடி கட்டிப் பறக்க வேண்டியவளே நடு வழியிலே மடக்கித் தன் வாழ்க்கை நாயகியாகப் பாஸ்கர் வரித்துக் கொண்டது இனிய கதை. அவனுல் அது சுலபமாக முடிந்தது. இளம் பட அதிபர், டைரக்டர் என்ற தகுதிகள் அவனுக்கு உதவியவை.

சரி, அதெல்லாம் பழைய கதை.

மாலினி கதாநாயகி அல்ல. நடிகை அல்ல. இப்பொழுது அவள் திருமதி பாஸ்கர்.

பல நாள் பிரிவுக்குப் பிறகு படப் பிடிப்பை முடித்துக்கொண்டு திரும்பியவனே வரவேற்க மாலினி இல்லேயே!

வீடு வெறிச்சோடிக் கிடந்தது. சூழ்நிலேயைப் பார்த்தால் மாலினி நேற்ருே அதற்கு முதல் நாளோ வீட்டை விட்டுக் கிளம்பியிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

மாலினி எங்கே போனுள்?

யாரிடம் கேட்பது?

வீடே மௌனத்தில் மூழ்கியிருக்கிறது.

டிரைவர் ஒரு பக்கமாக ஒதுங்கி நிற்கிருன். சென்ட்ரலுக்கு வண்டியை எடுத்து வந்தவன் இவன்தானே! மாலினிதான் இவனிடம் தகவல் தெரிவித்திருக்க வேண்டும்...

''தங்கராஜ்!''

கரகரப்பான குரலில் அவன் அழைத்ததும் ''யெஸ் ஸார்!'' என்று சல்யூட் அடிக்காத குறையாக விழித்துக் கொண்டு பார்த்தான் டிரைவர்.

''அம்மா எங்கே போனுங்க?''

''தெரியாதுங்க.''

''எப்பப் போனுங்க?''

''நேத்திக்கே அவங்க....!''

''ஒண்ணும் சொல்லலேயா?''

இல்லே என்ற தலேயசைப்பு.

மௌனமாக வீட்டை விட்டுப் போகும்படி என்ன நடந்து விட்டது?

''அப்ப உனக்கு ஒண்ணும் தெரியாது, இல்லே?''

''அவுங்க எதுவும் சொல்லலே!''

இதுதான் எல்லே. இதற்கு மேல் தன் மனேவியைப் பற்றி டிரைவரிடம் விசாரித்து விவரம் தெரிந்து கொள்வது அழகல்ல, நாகரிகம் அல்ல.

நேற்றிலிருந்தே மாலினி வீட்டில் இல்லே என்பது வெளிச்சமாகி விட்டது.

இப்பொழுது பாஸ்கரைச் சுற்றி இருள் வட்டம்.

மாலினியை எங்கே தேடுவது?

டெலிபோன் டயலேச் சுழற்றினுன் பாஸ்கர்.

மறுமுனேயில் ரிஸீவர் எடுக்கப்பட்டது. மாலினியின் வீடுதான் அது!

''பாஸ்கர் பேசறேன்!'' என்ருன்.

''ஓ! மாப்பிள்ளேயா? எப்ப வந்தீங்க?'' அவள் அப்பா கேட்கிருர்.

''இப்பத்தான்.... சித்தே முன்னுடி!''

''பிரயாணம்நல்லபடியா இருந்ததில்லே?''

''ஆமாம்... ரொம்ப சௌகரியம். சரி... மாலினி அங்கே வந்தாளா?''

''மாலினியா? இங்கே எதுக்கு வரணும்? இங்கே வர்றதா இருந்தாக்கூட டெலிபோன் பண்ணிட்டுத்தானே வருவாள்...''

மாமனுரின் குரல் கிணற்றில் இறங்குகிறது.

''ஓ! மாலினி அங்கே வரவில்லேயா? சரி... சரி...''

உரையாடல் துண்டு பட்டது. மேற்கொண்டு பேசுவதற்கு என்ன இருக்கிறது?

தலே சுற்றியது பாஸ்கருக்கு.

ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது.

மாலினி வீட்டை விட்டு ஓடிப்போய்விட்டாள் என்று பச்சையாகச் சொல்லிப் பார்க்க மனம் கூசுகிறது.

மாலினியிடம் படிப்பு இருந்தது. அழகைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. அவளுடைய பழக்க வழக்கங்களும் திறமைகளும் பாஸ்கரைக் கவர்ந்தன. படவுலகில் அவளுக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது என்பதை பாஸ்கர் ஆரம்பத்திலேயே கவனித்துவிட்டான். ஆனால் அவளை விட்டுவைக்க முடியாமல் மனம் அடித்துக் கொண்டேயிருந்தது. சதா அவளைப் பற்றிய நினைப்புக்கள் ...சஞ்சாரங்கள்...

என்ன அர்த்தம்? அதற்குப் பெயர்தான் காதலா? ஆமாம். மாலினியை அவன் காதலித்தான். அதிகநாள்காத்திருக்க விரும்பவில்லை. நேருக்கு நேர் ஒருநாள் அவளிடம் பேசினான். இணங்கினாள். இல்லறம் ஆரம்பமாயிற்று...

குடும்பத்திலும் சுற்றிலும் முணு முணுப்பு இருந்தது. 'பாஸ்கருக்கு வேறு பெண் கிடைக்கவில்லையா? நடிகையை மனைவியாக்கிக் கொண்டிருக்கிறானே!' என்ற முனகல்கள் கொஞ்ச நாள் இருந்தன. அவன் கவலைப்படவில்லை. அவன் எதிர்பார்த்த மகிழ்ச்சியையும் சுகத்தையும் மாலினி கொடுத்துக் கொண்டிருந்தாள்.


ஆனால் இப்போது சந்தேகம் முளைத்து விட்டது.

'என்ன இருந்தாலும் மாலினி ஒரு நடிகையாக இருந்தவள்தானே! வாழ்க்கை என்ற பெயரில் இத்தனை நாளாக அவள் நடித்து வந்திருக்கிறாள். திடீரென்று வெறுப்போ, விரக்தியோ, அதிருப்தியோ ஏற்பட்டு வீட்டை விட்டு வெளியேறிவிட்டாள். இந்தத் துணிச்சல் ஒரு குடும்பப் பெண்ணுக்கு வருமா? வராது.... வராது... நடிக்கத் தெரிந்தவளுக்குத்தான் அது வரும். அது முடியும்!' கல்யாணத்துக்கு முன் அவள் எப்படியோ இருந்திருக்கலாம். ஆனால்இப்போதும் அந்தப் போக்கு தொடரலாமா?'

மாலினியைக் கொஞ்சம் கீழே இறக்கிவிட்டு நிறுத்திவைத்துப் பார்க்கிறது பாஸ்கரின் நெஞ்சம்.

பாஸ்கர் டெலிபோன் டயலைச் சுழற்றினான்.





எழுதுவது யார்?

போட்டி முடிவு

சினிமா சிறப்பிதழுக்கென முழுநீள நாவல் எழுதிக் கொண்டிருப்பவர் **"மௌலி"** என சரியாக ஊகித்தவர்கள் நாலுபேர். **ரூ. 500/-**பரிசைப் பகிர்ந்து கொள்கிறார்கள்.

(1) என். கல்யாணராமன்
3, வீர ராகவன் தெரு
நங்கநல்லூர் சென்னை-61

(2) மா. அருணசலம்
23, கணேசன் தெரு
நாங்குநேரி அஞ்சல்
திருநெல்வேலி மா.வ.

(3) என். லக்ஷ்மி
59, 6வது தெரு
சுரேந்திர நகர்
ஆதம்பாக்கம் சென்னை-88

(4) ஆர். ஜெயராமன்
யுனைடெட் கமர்ஷியல் பாங்க்
பாண்டிச்சேரி

திருமதி சுதா ராஜனின் வீடு. அந்தப் பெண்ணே ரிஸீவரை எடுத்தாள்.

''மிஸஸ் சுதாராஜன் பேசறேன்!''

''நான்தான் பாஸ்கர்... வீட்டிலேயிருந்து...''

''எப்பத் திரும்பி வந்தீங்க? அவுட்டோர் எப்படி இருந்தது? எனிதிங் ஸ்பெஷல்...?''

சுதா கேள்விகளை அடுக்கிக் கொண்டே போனாள். மாலினியும் அவளும் நெருங்கிய சிநேகிதிகள். மாலினி அவ்வப்போது போக வர இருக்கிற இடம் சுதாவின் வீடுதான். அங்கே போயிருக்கலாம் என்ற சந்தேகத்தில் தான் சுதாவை டெலிபோனில் அழைத்தான்.

''மாலினி அங்கே இருக்காளா?''

''மாலினியா? இங்கேயா? என்ன கேக்கறீங்க பாஸ்கர்?... அவள் என் வீட்டுப் பக்கமே தலை காட்டலையேன்னு நான் ரொம்பக் கோபமா இருக்கேன்... அவள் வந்ததும் என்னோடே பேசச் சொல்லுங்க...''

ஏமாற்றம். சுதாவின் வீட்டுக்கும் மாலினி போகுவில்லையா?

மாலினி போகிற இடங்கள் ஒன்றிரண்டு தான். அங்கெல்லாம் வரவில்லை என்கிறார்கள். எப்படிக் கண்டு பிடிப்பது?

போலீஸ் உதவிதான் சரியான வழி என்று பொறி தட்டியது. ஆனால் தன் விஷயத்தில் அது சரிப்படுமா, சாத்தியமாகுமா என்ற சந்தேகமும் வந்தது.

பட அதிபர் — டைரக்டர் பாஸ்கரனின் மனைவியைக் காணவில்லை என்பதே பத்திரிகைகளுக்குப் பெரிய தீனி.

மாலினி ஏன் போனாள், எப்படிப் போனாள் எதற்காகப் போயிருக்க வேண்டும் என்ற ஹேஷ்யங்களைப் பத்தி பத்தியாக எழுதுவார்கள்.

'பட அதிபர் பாஸ்கரின் மனைவி ஓடிப் போய்விட்டாளாம்' என்று எத்தனை ஆயிரம் பேர் பேசிக் கொள்வார்கள்... வாய் விட்டுச் சிரிப்பார்களே! அவளுடைய கற்பை அலசுவார்களே! அப்பொழுது அவனுடைய மானம், மரியாதை யெல்லாம் மண்மேடாகி விடாதா?

காதும் காதும் வைத்த மாதிரி ஏதாவது செய்தாக வேண்டும். தாமதப்படுத்தினால் நிலைமை தலைகீழாகி விடும். விபரீதம் ஏற்பட்டு விடக் கூடாது.

முதலில் மாமனார், மாமியாரை அணுக வேண்டும். பிறகு சுதாராஜனைத் துணைக்கு அழைக்கலாம். ஒன்றுக்கு நாலு பேராக வலை போட்டுப் பார்த்தால் பலன் கிடைக்காமல் போகாது.

மேற்கொண்டு பாஸ்கர் யோசிக்கவில்லை. உத்வேகத்துடன் எழுந்து தானே காரை எடுத்துக்கொண்டு புறப்பட்டான், மாமனார் வீட்டுக்கு.

வாசலில் காரை நிறுத்திவிட்டு உள்ளே வந்தபோது திடுக்கிட்டுப் போனான் பாஸ்கர்.

மாலினிதான் எதிரே வந்து நின்றாள்.

''மாலினி!... நீ இங்கேயா இருக்கே?''

அவன் குரல் தணிந்திருந்தது.

அவள் நிமிர்ந்து பார்த்துவிட்டுத் தலை குனிந்து கொண்டாள். 'ஆமாம், அம்மா வீட்டிலேயேதான் இருக்கிறேன்' என்று உறுதிப்படுத்தும் பார்வை.

''நான் டெலிபோன்லே விசாரிச்சேன்...''

''தெரியும்!''

''நீ இங்கே வரலேன்னு சொன்னாங்களே?''

''நான்தான் அப்படிச் சொல்லச் சொன்னேன்!'' மாலினி கூசாமல் சொன்னாள்.

''சுதா வீட்டுக்கு டெலிபோன் பண்ணினேன்.''

''தெரியும்... அவளே சொன்னாள்!''

''மாலினி! என்ன பேசறே நீ? என்ன நடந்துபோச்சு இப்படி நாடகம் நடத்தற அளவுக்கு? திறமையான நடிகைங்கறதை என்கிட்டயே நிரூபிக்கணும்னு திட்டமா? புருஷனைப் பாதியிலே விட்டுப் பொறுப்பில்லாம ஓடிவர்றது என்ன நீதி...? பத்திரிகைக் காரங்க உன் கற்பையும் விசுவாசத்தையும் சந்தேகிக்க எழுத வாய்ப்பளிக்கிற மாதிரி. நீ நடந்து கொள்ளலாமா?''

பாஸ்கர் பேச வேண்டியதைப் பேசித் தீர்த்து விட்டான். இனி எதையும் சொல்ல வேண்டியவள் மாலினிதான்.

கனைத்துக்கொண்டாள்.

''நான் பேசறதுக்கு ஒண்ணும் இல்லே... இதோ பாருங்க, எல்லாம் இதிலே இருக்கு!''

மாலினி நீட்டிய பத்திரிகையை வாங்கிக் கொண்டான். பளிச்சென்று கண்ணில் பட்டது செய்தி. பெரிய எழுத்தில் அவன் பெயரும் ஒரு நடிகையின் பெயரும் இணைக்கப்பட்டு சுவாரஸ்யமான வருணனை கீழே தரப்பட்டிருந்தது.

விழி கொட்டாமல் அவன் படித்தான்.

படப்பிடிப்புக்குப் போன இடத்தில் பட அதிபர் — டைரக்டர் பாஸ்கர் நடிகைகளுடன் உல்லாசம்...

மஞ்சள் பத்திரிகைக்குரிய பரிபாஷையில் வெகு நீளமாகவே செய்தி வெளியாகி இருந்தது.

''மனைவியின் பொறுப்புன்னு சொன்னீங்க. கற்புன்னு சொன்னீங்க. விசுவாசம்னு—சொன்னீங்க. நடிப்பது கூடாதுன்னீங்க. இதெல்லாம் பெண்ணுக்கு மட்டும்தானா? உங்களுக்கு வேண்டாமா? கூடாதா?'' என்று அவள் கேட்டாள்.

பாஸ்கர் வாயடைத்து நின்றான். நெஞ்சில் குறுகுறுப்பு. குற்றமுள்ள நெஞ்சல்லவா?

''மாலினி, என்னை மன்னிச்சிடு!''

அவன் முணுமுணுத்தான், பத்திரிகையைக் கசக்கியபடி.

''என்னாலே தாங்கிக்க முடியலே... இது மாதிரி செய்தி வர்றதைச் சகிச்சுக்கிட்டிருக்க முடியாது. ஏன்னா இந்த அவமதிப்பிலே உங்க பெண்டாட்டியான எனக்கும் சரி பங்கு உண்டு இல்லையா? நானே கடிவாளம் போடத் தவறினா, நீங்க எங்கேயோ போயிடுவீங்கன்னு எனக்குப் புரிஞ்சது. சொல்லிக் காட்ட வழி தெரியலே... அதனாலதான் இந்த வழியைத் தேடினேன்.!''

''மாலினி... இதுவே கடைசி நடிப்பா இருக்கட்டும். இனி நீ கிழிச்ச கோட்டைத் தாண்ட மாட்டேன்... இப்பவே கிளம்பு வீட்டுக்குப் போகலாம்.''

அவள் மறுக்கவில்லை. உரிமையோடு மாலினியின் கையைப் பற்றிக்கொண்டான் பாஸ்கர்.



மேலட்டையில்:

கலைவாணர் என். எஸ். கே.

வண்ணப்படம்: சுகாசினி

வண்ணப்படம் எடுத்தவர்: ஹரீஷ்

நினைவில் நிற்கும் காட்சி

நெஞ்சில் ஓர் ஆலயம்

இளம் தம்பதியர். கணவனுக்கு மறுநாள் மேஜர் ஆபரேஷன். அறுவை செய்யப் போகும் டாக்டரோ மனைவியின் முன்னாள் காதலன். தான் இறந்துவிட்டால் காதலனையே மணந்துகொள்ளும்படி மனைவியிடம் வேண்டுகிறான் கணவன். தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை துஷ்பிரயோகம் செய்யக் கூடாது என டாக்டரிடம் எச்சரிக்கிறாள் மனைவி. அவள் நம்பிக்கையைப் பெற இரவும் பகலும் பாடுபடுகிறார் டாக்டர். ஆபரேஷனுக்கு முதல் நாள் இரவு மணப்பெண்ணாய் ஜோடித்து வரும்படி அன்பு மனைவியிடம் வேண்டுகோள் விடுக்கிறான் கணவன். அபசகுனங்களால் மனம் கலங்கி நிற்கும் பேதை, கணவனுக்காகக் கல்யாணத்தன்று இருந்த அலங்காரத்துடன் அவன் முன் வந்து,

என்ன நினைத்து என்னை அழைத்தாயோ?
ஏனிந்தக் கோலத்தைக் கொடுத்தாயோ?
முன்னம் இருந்த நிலை நினைத்தாயோ?
முகத்தைப் பார்த்துக்கொள்ளத் துடித்தாயோ?

என்று கண்ணீர் மல்கப் பாடுகிறாள். முத்துராமனும் தேவிகாவும் உணர்ச்சி பொங்கச் சிறப்பாக நடித்தனர்! 'நெஞ்சில் ஓர் ஆலய'த்தில் இடம்பெற்ற காட்சி என் நெஞ்சில் இடம் பெற்றிருக்கிறது.

• வி. வசந்தா தேவி



இயக்குனர் எல். வி. பிரசாத்:

திரைப் படத்துறையின் பல்கலைக் கழகம்

இந்தியாவிலேயே முதல்பேசும் படமான 'ஆலம்ஆரா'வில் நடித்தார். முதல் தெலுங்கு பேசும் படமான பக்த பிரகலாதாவிலும் நடித்திருக்கிறார். முதல் தமிழ் பேசும் படமான காளிதாசாவிலும் இவர் வயதான கோயில் அர்ச்சகராக வருகிறார்! இந்த அரிய வாய்ப்பைப் பெற்ற எல். வி. பிரசாத் ஊமைப் படக் காலத்திலேயே நடித்தவர். மிஸ்ஸியம்மா, மனோகரா, ஸம்ஸாரம், இருவர் உள்ளம் போன்ற பல தமிழ், தெலுங்குப் படங்களை இயக்கியவர். தயாரிப்பாளர்; ஸ்டூடியோ முதலாளி. திரை உலகுத் தொடர்பான பல்வேறு ஸ்தாபனங்களிலும், மத்திய அரசின் குழுக்களிலும் அங்கம் வகிப்பவர். இப்படி அஷ்டாவதானியாக விளங்குகிறார் எல். வி. பிரசாத்.

எல். வி. என்பது எதைக் குறிக்கும்?

''என் பெயர் இப்படி அமைந்த விதமே ஒரு வேடிக்கை'' என்கிறார் பிரசாத். ''என் முழுப் பெயர் அக்கினி லக்ஷ்மி வரப்ரஸாத ராவ். அந்த நாளில் என்னைப் போன்று திரை உலகில் பிரவேசிக்க ஆர்வமுடன் இருப்பவர்கள் சொல்பம் பேர்தான். சிறு சிறு வேடங்களில் நடிப்போம். ஒரே ஆள் ஒரே படத்தில் மூன்று நான்கு வேடத்தில்கூட நடிப்போம். தினமும் படப்பிடிப்பு நிலையத்துக்குச் சென்றுவிட வேண்டும். நம் பெயரைக் கூப்பிடுகிறார்களா என்று காத்துக்கொண்டிருக்க வேண்டும். நான் நடிக்கவேண்டிய காட்சி வந்து விட்டால் கூப்பிடுபவர் ஒவ்வொரு முறையும் மிகவும் கஷ்டப்பட்டார். முழுநீளப் பெயரைக் கூப்பிட அவர் படும் சிரமத்தைப் பார்த்து ஏ. எல். வி. பிரஸாத ராவ் எனச் சுருக்கி வைத்துக் கொண்டேன். அதுவும் அவருக்குப் போதவில்லை. என்னை அழைத்து 'நான் உன்னை இன்னும் சுருக்கப் போகிறேன்' என்றார். எல். வி. பிரசாத் ஆனேன்!''

எழுபத்தி மூன்று வயதான எல். வி. பிரசாத் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். விவசாயியாகத்தான் வாழ்க்கையைத் தொடங்கினர்.


சிறிது காலத்துக்குப் பிறகு பம்பாய்க்கு வேலை தேடிச் சென்றார். அங்குதான் இவர் முதன் முதலில் ஒரு காமிராவின் முன்னால் நின்றது. அது ஊமைப் படம்.

இம்பீரியல் கம்பெனியில் நுழைந்து நடிகராக இரண்டு வருடம் காலம் தள்ளினர். அந்தக் கம்பெனிதான் இந்தியாவின் முதல் பேசும் படமான 'ஆலம் ஆரா'வை எடுத்தது. அதில் சிறு சிறு வேடங்களாக நான்கைந்து வேடங்களை ஏற்றார் எல். வி. பிரசாத்!


''தினமும் ஸ்டூடியோவுக்குப் போக வேண்டும். கால் ரூபாய் பெற்றுக் கொண்டு ஒரு நாவிதர் முக க்ஷவரம் செய்து விடுவார். அன்று வேலை இருக்கிறதோ இல்லையோ க்ஷவரம் செய்து கொண்டுவிட வேண்டும். பெயர் கூப்பிடும்போது 'பிரசண்ட் சார்' சொல்லிவிட்டு அன்று நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வேடத்துக்கான உடைகளை அணிந்து தயாராக நின்றுவிட வேண்டும். ஷாட் தயாரானவுடன்அழைப்பார்கள். ஷாட் எப்பொழுது வரும் என்பது டைரக்டருக்கே தெரியாது! அது எப்படியானாலும் அன்று டைரக்டர்தான் எல்லாம். இந்தக் காலம் போல் அல்ல.''

'ஸ்ரீ' என்ற படத்துக்கு ஒளிப் பதிவு உதவியாளராக இருந்தபோதுதான்இவர்வாழ்க்கை ஒளி பெற்றுப் பிரகாசிக்க ஆரம்பித்தது.


அன்று



இன்று



ராஜபார்வையில்



வட்டிக்குத்தான்) கொடுத்துவிட்டு, தயாரிப்பாளர்களிடம் பிறகு வாங்கிக் கொள்ளுவார்கள். எங்களுக்குப் பணத்தைக் கொடுக்கும்போது கமிஷனோடு வட்டியையும் பிடித்துக்கொள்ளுவார். ஆனல் இப்போதெல்லாம் இந்த ஏஜெண்டுகள் கூட எங்களைக் கைவிட ஆரம்பித்து விட்டார்கள்'' என்று கூறி, ஒதுங்கி அமர்ந்து கொண்டார் கமலா.

'சஸ்பென்ஸில் ஒரு விஷயத்தை வைத்து விட்டு அவள் ஒதுங்கிக் கொள்ளவே 'அது என்ன?' என்று தெரிந்து கொள்ள மீண்டும் அவரை அணுகினேன்.

''ஸார், இனிமே ஏதாவது தெரிஞ்சுக்கணும்னு எங்க சங்கத்திலே போய்க் கேட்டுக்குங்க'' என்ருர்.

ஒரு வழியாக, முகவரியை அறிந்துகொண்டு 'தென்னிந்திய வெண்திரை சக நடிகர்கள் சங்கத்தை'' அடைந்தேன். ஜூனியர் ஆர்ட்டிஸ்ட்களுக்கான ஒரே சங்கம் இதுதானும். 1958ல் ஆரம்பிக்கப்பட்டு இடையில் இரண்டாகப் பிளவுபட்டு, 1978ல் இருந்து மீண்டும் ஒன்ருக இணைக்கப்பட்டு நடந்து வரும் இந்தச் சங்கத்தில் 473 பேர் அங்கத்தினர்களாக இருக்கிருர்கள். இதில் பெண்கள் 243 பேர். ஆண்கள் 230 பேர். சங்கப் பொறுப்பாளர்களில் ஒருவரான பாண்டியனிடம் விசாரிக்கிறேம். அவரும் ஏஜெண்டுகளைத் தாக்கு, தாக்கென்று தாக்க ஆரம்பிக்கிருர்.

''தயாரிப்பாளர்களுக்கும் எங்களுக்கும் ஒரு பாலமாக இருக்க வேண்டிய இந்த ஏஜெண்டுகள் இப்போது தயாரிப்பாளர்களுக்குப் பாரமாகவும், எங்களுக்குப் பாதகமாகவும் இருக்கிருர்கள். தயாரிப்பாளர் 10 துணை நடிகை வேண்டுமென்ருல் 5 பேரை எங்கள் சங்கத்திலிருந்தும் மீதி ஐந்து பேரை அவர் இஷ்டப்படி வெளியில் உள்ளவர்களையும் அழைத்துச் செல்கிருர். ஆனல் தயாரிப்பாளரிடம் 10 பேருக்கும் சங்கம் என்ன சம்பளம் நிர்ணயித்திருக்கிறதோ அதை வாங்கிக்கொள்கிருர். அவர் அழைத்து வந்த ஐந்து பேருக்கும் எங்கள் உறுப்பினர்களுக்குக் கொடுக்கும் பணத்தில் பாதிகூடக் கொடுப்பதில்லை. இதுபற்றி யாராவது கேட்டால், அந்த நடிகரையோ அல்லது நடிகையையோ சான்ஸ் தராமல் ஒதுக்கிவிடுகிருர். மேலும், இந்தஏஜெண்டுகள் தரும் முன் பணத்துக்கு வட்டி விகிதம் ரொம்பக் கடுமை. ஒரு வார இடைவெளிக்கு ஒரு மாத வட்டி வாங்கிவிடுகிருர்கள். போதாக் குறைக்குத் தயாரிப்பாளர்களிடம் ''சங்கத்தைச் சேர்ந்தவர்களைப் போட்டால் அதிகச் செலவாகும் அவர்கள் டபுள் கால்ஷீட், பேட்டா, அது இது என்று கேட்பார்கள்'' என்று இல்லாததையும் பொல்லாததையும் கூறி, தாங்களே ஆட்களைக் கொண்டு போய் விடுகிருர்கள்.

''ஒரு நாளைக்கு 30ரூபாய் கிடைக்கும் என்ருலும் மாதம் 30 நாளும் எங்களுக்கு வேலை இருக்காது. நாலைந்து நாட்களுக்குத்தான் இருக்கும். எங்கள் விதியை நாங்களே நொந்து கொள்ள வேண்டியதுதான்.''

சங்கத்துக்கு அருகிலிருந்த சில ஜூனியர் ஆர்டிஸ்டுகளின் வீட்டுக்குப் போனேன். எல்லாம் குடிசைகள்தான். உள்ளே நுழைந்து பார்த்தால் ஒரே தட்டு முட்டுச் சாமான்கள். எவர்சில்வர் பாத்திரம் ஒன்றுகூடக் கண்ணில் படவில்லை. வறுமை தாண்டவமாடுவது பளிச் சென்று தெரிகிறது.

''சில துணை நடிகைகள் நல்ல வீட்டில் டி. வி. ஃப்ரிட்ஜ் என்று வைத்திருக்கிருர்களே?''

''நடிப்பைத் தொழிலா நடத்திச் சம்பாதித்த பணமாக அது இருக்காது'' என்று வெடுக்கெனக் கூறுகிருர் நெடு நாட்களாகத் துணை நடிகராக இருந்து வரும் கோவிந்தன்.

படம் : ஆனந்தன்

கட்டுரை : கௌசல்யா



நாயகி



புகைப்படக்காரர்களுக்குக் கிளுகிளுப்பு ஊட்டும்வகையில் மாலைவெய்யிலைப் பாதி தலையில் வாங்கிக்கொண்டு அந்த பாசஞ்சர்வண்டி வந்து ஸ்டேஷனில் நின்றது.

''அட சீக்ரம் இறங்கு புள்ளே.''

''ஏ இறங்குதே! நேரத்திலே புடவையைப் பிடிச்சு களாட்டிருச்சு ப்சாசு'' — வெறும் முதுகில் ஒரு டப்.

''ஙேய்'' ப்சாசின் சுருதி சுத்தமான அழுகையுடன் ஒரு பரட்டைக் கும்பல் இறங்க....

''ஏறுங்க! ஏறுங்க. அது என்ன உள்ளாற தாள் போட்டுக்கிட்டு. இங்க என்ன மனுஷங்களா தெரியலையோவ்'' — வாய் கத்தியபடி இருக்க, ஒரு ஏழு உருப்படிகளை ஜன்னல் வழியே நொடிப் பொழுதில் திணித்து, சொக்கலாலில் கொஞ்சத்தை முடித்து எறிந்து தலைவர் அதே மலைக்கள்ளன் பாதையில் உள்ளே புக, மொட்டைக் கும்பல் விடை பெறுகிறது.

அந்தச் சிறு போக்குவரத்துக்குக் காரணமான 'ஸ்ரீ ரங்கநாயகியைத் தரிசிக்க இங்கே இறங்கவும்' போர்டைக் கடந்து வெளியே போகும் வாசலை நோக்கி நடக்கிறான் விஜி, விஜய், பிச்சே என முறையே கல்லூரியில், நோட்டுப் புத்தக உள் அட்டையில், வீட்டில் அழைக்கப்படும் விஜயராகவன்.

அந்த ஊரிலிருந்து பக்கத்து டவுனில் புகை வண்டியில் போய்ப் படித்து வரும் பேறு பெற்ற வெகுசிலரில் ஒருவன். ''சார்'' எனக் கூப்பிட்டு டவுனில் அவருக்கென வாங்கிய ஏ. ஆர். ஆர். சீவல் பொட்டலத்தை அந்த ரயில்வே அதிகாரியிடம்

மௌலி





கொடுக்கிறுன். அவரை ஸ்டேஷன் மாஸ்டர் என்றுல் வெள்ளை வெளேர் என்ற உடுப்புடன் பாலிஷ் போட்ட ஷூவுடன், தொப்பி சகிதமாக நிற்கும் மற்ற ஊர் ஸ்டேஷன் அதிகாரிகளை என்னவென்று அழைப்பது? இலை, சூரணம் இரண்டும் பழகினதால் 'தேங்க்ஸ்' 'தேக்ஷ்' ஆக அவரிடமிருந்து வெளிவருகிறது.

சைக்கிள் ஸ்டேண்டைச் சேர்ந்தவுடன் விஜி தழையக் கட்டிய நாலு முழ வேஷ்டியை அவிழ்த்து மறக்காமல் கணுக் காலுக்கு மூணு அங்குலம் மேலே கட்டிக்கொண்டு கெமிஸ்ட்ரி நோட்டிலிருந்து அஞ்சங்குல சீப்பால் தலையை— (தலையில் இருக்கும் 'பப்'பை தற்காலிகமாக அடுத்த நாள் காலைவரை விடை கொடுத்து) படிய வாரிவிட்டு, மடித்த சட்டையின் கையை காமராஜ் அளவுக்குப் பிரித்துவிட்டு வீட்டை நோக்கிப் புறப்படுகிறுன்.

என்றும் அவனுக்குத் தனிமைதான். வீட்டில் மூத்த பிள்ளை. கெடுபிடி அதிகம். வரம் இருந்து பெற்ற பிச்சே. ஊரில் 'ரங்கன் பிள்ளை தங்கம்' என்று சொல்லாவிட்டாலும் 'அசத்து', 'காலிப் பய' எனப் பெயர் வந்துவிடக்கூடாது என்று தேவைக்கு அதிகமாகவே கண்டிப்பும், கருருடன் வளர்க்கிறுர் ரங்கநாதன். மகனின் உடல் வளர்ச்சியைக் கூட பார்க்காமல், 'வீட்டில் எப்போதும் அரை நிஜாருடன்தான் இருக்கணும்' என்று உத்தரவு பிறப்பித்தவர்.

'உசந்திருச்சே தவிர என்ன பெரிசா வயசாயிடிச்சி' — தன் வயதைக் காட்டப் பிடிக்காமல் காலில் ரோமம் வளர்ந்த நிலையிலும் அரை நிஜாருடன் வெளியே திரிய மனம் கூசிற்று அவனுக்கு.

ஸ்டேஷனை ஒட்டிய கடை வீதியில் வீட்டுக்குக் காப்பித் தூள் வாங்கிக்கொண்டு அந்தச் சிறு நெரிசலைத் தாண்டிப் போகையில் மறக்காமல் முருகேசன் கடையின் முன் வண்டியை நிறுத்தி மணி அடிக்க, பதில் கிடைக்கவில்லை. பையன் வெளியே டெலிவரிக்குப் போயிருக்கிறுன் என நினைத்துக் கொண்டு இறங்கி உள்ளே செல்ல முருகேசன் எதிரே வந்து,

''வாங்க தம்பி, பையன் டவுனுக்குப் போயிருக்கான். பெரிய ஆர்டர் ஒண்ணு. காலையிலதான் வேலை முடிஞ்சுச்சு. நாளை பகலுக்கு வீட்டுக்கு அனுப்பிடறேன்னு அப்பாருகிட்டச் சொல்லிடுங்க.'' — எனச் சொல்ல விஜி நகருகிறுன்.

'முருகேசன் ஷூ மார்ட்' தெரியாதவர்கள் இருக்க முடியாது. இன்னும் அத்தியாவசியத்துக்கே கடைகள் பல தேவையாக இருக்க, 'ஷூ மார்ட்' அந்த ஊருக்கு அதிகப்படிதான். அக்கம் பக்கத்து ஊர் ஹோல் சேல் கடைகளும் பக்கத்து கல்லூரி என். ஸி. ஸி. பூட்ஸ் ஆர்டர்களும் தடையின்றி அவரைத் தேடி வருவதால் . இந்த ஊர் கால்களை வயிற்றுக்காக நம்ப வேண்டிய அவசியம் அவருக்கில்லை. தனிக்கட்டை. பார்த்தால் வெளியே தெரியாது. அவர் பிறப்பால் ஒரு சக்கிலியர் என்று. அந்த ஊர் பாதி ஏழைக் குடும்பங்களுக்குத் திருப்பித் தராத

கடன் அவர் ஒருவரிடமிருந்துதான் கிடைக்கும். அவர் வசதியினாலோ என்னவோ கோவிலுக்கு அவர் வந்து போவதற்கும் தனி அபிஷேகம் நடத்துவதற்கும் ஊருக்குள்ளே பெரிய பேச்சு இன்று வரை எழுந்ததில்லை...

மகளிர் ஸ்பரிசத்தை என்றுமே நினைத்துக் கூடப் பார்க்காத அவருக்கு ஒரு சந்ததி இல்லையே என்ற மனக் குறை மட்டும் என்றும் உண்டு.


"எப்பத்தான் வேலைக்குப் போவே?" —வேர்க்கடலையை அள்ளிப் போட்டபடி கேட்கிறாள்.

"இப்பத்தான் காலேஜிலேயே காலையேவச்சிருக்கேன். இருக்கு இன்னும் பல வருஷம்."

—திரும்பி வரும்போது எது வாங்கி வரச் சொன்னாலும் விஜி அதில் தனக்கு ஒரு சதவிகிதம் ஒதுக்கி கண்ணம்மாவிடம் அவிச்ச கடலை வாங்கி விடுவான்.

கண்ணம்மா வாய் ஓய்ந்திருப்பது அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது. அவளை உசுப்ப ஒரு கேள்வி போதும்.

"என்ன, பட்டணத்துக்கு அனுப்பின பொண்ணை இன்னும் காணோம். அவ்வளவு தானா?"



"அட, உன் நாக்கில புத்து வைக்க, ஏண்டா உன்னைக் கேட்டுத்தான் அனுப்பினனா? இந்தக் கேலியும் நக்கலும் எங்கிட்டவேணாம். காய்ச்சின எண்ணெயை முகத்தில சாய்ச்சிருவேன்.

"வர்ராபாருங்கடா எம்மவ. ஊரையே வாங்கிச் சுருக்குப் பையிலே போட்டுக்கறேன் பாரு. மொத்தமாப் பணம் சேத்துக்கிட்டு வான்னு விட்டு வச்சிருக்கேன் நானு. வம்பா பேசறீங்க..."

ஏதோ ஷூட்டிங் நடத்த வந்த கும்பலை வேடிக்கை பார்க்கப் போன கண்ணம்மாவின் மகளை, கண்ணம்மாவின் பாஷையில் — 'பார்த்து அதிசயிச்சு', 'இப்படி ஒரு முகம் இத்தனை யுகமா எங்க கண்ணில படலை. எத்தினி லட்சமானாலும் தர்றோம். வா, பட்டணத்துக்கு. நீதான் எங்க படக் கதாநாயகி'ன்னு — கண்ணம்மாவிடம் அச்சாரம் ரெண்டாயிரம் (சைபர் மட்டும் மறதியில் கூடுதலாகச் சேர்த்து விட்டாள்) குடுத்துக் கூட்டிப் போய்விட்டார்கள். தனியா பங்களா, கார் எல்லாம் கொடுத்திருக்கிறார்களாம். ஏதோ ஒரு புரொடக்ஷன் மானேஜரும், துணை நடிகர்கள் சப்ளையரும் கூட்டிப் போய் ஏறத்தாழ ஒரு வருடத்துக்கு மேல் ஆகப்போகிறது. போனதும் இரண்டு தபால் வந்தது. அப்புறம் ஆறு மாதம் கழித்து ஒன்றுதான். சினிமாவில் நுழையவே கஷ்டப் படுவதாக.

அப்புறம் கிணத்தில் போட்ட கல். எதிரே டீக்கடையில் பையன்கள் வேண்டுமென்றே இரைந்து படிக்கும் மஞ்சள் பத்திரிகை விஷயங்களைக் கேட்டு, மனத்தில் ஏற்படும் திகிலை "எந்தத் தொழிலா இருந்தா என்ன, நேர்மையா இருக்க முடியாதா என்ன? இப்ப நர்ஸுங்க இருக்காங்க. ஆசுபத்திரியில வர்றவங்க போறவங்களைத் தொட வேண்டி தான் இருக்குது. கெட்டா போயிடறாங்க?" —டவுனிலிருந்து அவ்வப்போது வரும் நர்ஸ் மேரியிடம் சொல்லி, "ஆமாமாம்" என அவள் சொல்லக்கேட்டு ஆறுதல் கொள்வாள்.

"கோவிலுக்குப்போயிட்டறேன்" எனக் கூச்சலிட்டுவிட்டு வெளியே புறப்பட்டான் விஜி. அம்மன் கோயிலுக்கு அதிகம் போக மாட்டான். தன் வயதை ஒத்த பெண்கள் திண்டு திண்டாக வளர்ந்திருக்க, தான் மட்டும் சின்னப் பையன் போல் அரை நிஜாருடன் அவர்கள் முன்னால் நிற்பதா?

"அம்பி, சின்னப் பையன்தானே நீ. பெண் பிள்ளைங்க பக்கம் வந்து நில்லு" எனக் குருக்கள் ஒரு நாள் சொல்ல, இன்னும் அவமானமாய்ப் போய்விட்டது. அவன் ஒரே தோஸ்த் அந்த ஊர் ஐயனார். இருபது அடி உயரச் சிலை. அவர் முன் புல் தரையில் படுத்து இருட்டும்வரை அண்ணாந்து அவரைப் பார்த்திருப்பான். அங்கே அதிகம் ஜன நட மாட்டம் இராது. எந்த வீட்டிலிருந்து பார்த்தாலும் அவர் தலை தெரியும்.

"உமக்கு குஷிய்யா. எல்லா வீட்டு விஷயங்களும் அப்பப்ப நேரே பார்த்திடுவே" எனக் கிண்டலும் செய்வான்.

"உன் உயரம் நான் இருந்தால் என் பி.டி. வாத்தியாரை ஒரே அமுக்கா காலால அமுக்கிருவேன்" — ஆதங்கமும் படுவான். அவருக்கு அவன் கொடுத்திருக்கும் அந்தஸ்து எந்த விடைத் தாளிலும் முதலில் 'ஐயனார்துணை' என்று பல வருஷங்களாய்எழுதுவதுதான்.

'உனக்கு இன்னும் வயசு பத்தாது' என்று ஜோ சிரித்தபடியே அன்று பகலில் சொன்னது நினைவுக்கு வந்தது. கடைசி மணி அடித்தவுடன் பதைபதைத்து வண்டியைப் பிடிக்கக் கிளம்புவது; குனிந்த தலை நிமிராமல் வகுப்பில் முதல் பெஞ்சில் உட்கார்ந்து எழுதுவது;


'வடுகநாதனில் புது ஹிந்திப் படம். வர்றியா?'

'சே. லேப் மார்க் போயிடும்' எனப் பதிலளிப்பது வகுப்பே அல்லோலகல்லோலப் பட அவன் மட்டும் இஞ்சி தின்ன ஏதோ போல் விழிப்பது; — இவையெல்லாம் இவனை மற்றவர்கள் கண் முன் மெது வடையாகக் கணிக்க வைத்தன.

இப்போதெல்லாம் அவனுக்குச் சிந்தனையில் ஒரு தடுமாற்றம் இருந்து வருகிறது. குளத்து வழியே நடக்கும்போது கால் நிற்கிறது. நிஜார் உதவுகிறது. பெண்கள் குளிக்கின்றனர். பின் பெஞ்சு மாணவர்கள் பேசும் வார்த்தைகளில் ஏதோ ஒன்று ரெண்டு காதில் விழுந்தாலும் போதும். தனிமையில் அதை வைத்துப் பல விதங்களில் கற்பனையை ஓட்டினான். ஒரு நடிகையின் பெயரை ஆசிரியராய்ப் போட்டு வெளிவரும் ஒரு இரண்டு

பக்கம் பின் செய்யப்பட்ட புத்தகத்தை எப்படியாவது ஒரு முறை படித்து விட வேண்டும் என்ற ஒரு வெறி. காசு கொடுத்து வாங்கி விடலாம். எப்படிப் படிப்பது? அவன் அன்றுட டைம்டேபிள் ஏற்கனவே முடிவு செய்யப்பட்டது. வீட்டுக்குள் எடுத்துச்செல்ல முடியாது. 'குதிர்' எப்படியும் பார்த்துவிடும். படிப்பைப் பாதியில் நிறுத்திவிட்டு வீட்டில் ஒரே பெண் என்ற செல்வாக்குடன் ஏகாதிபத்தியம் நடத்தும் தன் தங்கை ராதாவைத் தான் அப்படிக் கூப்பிடுவான். இருட்டி விட்டது.

அறுபதிலிருந்து எழுபதுக்குள் இடையே ஒரு நம்பரைக் குறிப்பிட்டு இது ஒரு சுவாரஸ்யமான நம்பர் என வாத்தியார் சொல்ல அனைவரும் சிரித்தனரே ஏன்? குழம்பிக் கொண்டிருந்தது மனம். ''படிக்கிறதுன்னு படி. இல்லே விளக்கை அணைச்சுட்டு தூங்கு'' தந்தையின் குரல். அவர்கள் பாஷையில் படிப்பது என்றால் அவன் படிப்பது தெரு முழுவதும் கேட்க வேண்டும். அப்போது தான் திருப்தி. படிக்க மட்டும் அவனுக்குத் தனி அறை உணடு. தங்கை தூங்கும்வரை ரேடியோ சிலோன் கேட்கலாம். பத்திரிகைகள் படிக்கலாம். தாய் மாமன் குடும்பத்துடன் சினிமாப் போகலாம். அவன் கூடாது. 'குழந்தை கெட்டுப் போயிடும்'. பக்தப் பிரகலாதாவையே தான் ஒரு முறை சென்ஸார் செய்த பிறகுதான் அவனை அரை மனதாய்அனுப்பி வைத்தார் தந்தை.



பக்கத்து டவுனில் ரைஸ் மில்லில் உத்யோகம் பார்க்கும் தாய் மாமன் சுந்தரம் அடிக்கடி வருவான். மனைவியுடனும் வருவான். தனியேயும் வருவான். தனியே வந்தால் கொல்லைப் புறத்தில் அமர்ந்து ராதாவுடன் ஜோக் அடித்துக் கொண்டிருப்பான். விஜி அந்தப் பக்கம் போனால், 'போடா போய் வேலையைப் பாரு. பெரியவங்க பேசற இடத்தில உனக்கென்ன வேலை' என்பான். மனத்துக்குள் ஒரு 'நறநற' அவ்வளவுதான் விஜியால் முடியும்.

'ஆப்பக்கார கண்ணம்மா மக திரும்பி வந்திருக்குது' ஊர் முழுதும் பேச்சு. அவனுக்கு ஒரு நெகிழ்ச்சி. பாவம் கண்ணம்மா. விடிந்தது அவள் கஷ்டம். வேகாத வெய்யிலில் பஸ் ஸ்டாண்ட் பக்கம் கடையும், ஆப்பமும் சுட்டு விற்றது போதும். அவள் சொன்னது போல் பாதி ஊரை வாங்கி விடுவாளா? உடனே கண்ணம்மாவின் மகளைப் பார்க்க வேண்டும் போல் இருந்தது. அந்தக் காலத்தில் தன்னோடு விளையாடிய கும்பலில் அவளும் ஒருத்தி எனத் தன்னை நினைவு வைத்துக் கொண்டு பேசுவாளா, இல்லை இடையே அவள் பருவம் வந்த பிறகு வெளியே கூட வராமல் சிரிக்கவே பயந்தாளே அப்படி இருப்பாளா? மாலை வரை காத்திருக்க வேண்டி யிருக்கிறது. மாலையில் திரும்பும்போது கண்ணம்மா அதே போல் கடையில். பக்கத்தில் மரத்தில் சாய்ந்தபடி நிற்கிறதே ஒரு பெண், ஆம், அது கண்ணம்மாவின் மகள் நாயகிதான்.

அழுக்குப் பாவாடை, தாவணி. தாவணி அதன் வேலையைச் செய்ய மறந்திருந்தது. அவள் முகத்தில் ஒரு சிரிப்பு, எங்கோ சூனியத்தைப் பார்த்தபடி ஒரு பாட்டு.

அப்போது அந்த கார், வீடு... கண்ணம்மா பொய் சொன்னாளா... இல்லை, அவளே பொய்யாக்கப்பட்டு விட்டாளா?

கண்ணம்மா தன்னைப் பார்க்கும் முன் நகர்ந்தான்.

துணை நடிகர் சப்ளையர் அன்று காலையில் பெண்ணைக் கொண்டு வந்து இறக்கி விட்டு—

''நாலு மாசமா பொண்ணு சரியில்லை. ஏம்மா மொதல்லியே சொல்லக் கூடாது? பொண்ணுக்கு மூளைக் கோளாறுன்னு — நடிக்கவும் தெரியல. அட்ஜஸ்ட் பண்ணிக் கத்துக் குடுக்கலாம்னு பார்த்தா அதுவும் முடியல.''

''அட பாவிகளா! என் பொண்ணைப் பைத்தியமா அடிச்சுட்டீங்களேடா...''

கதறி அழுதாள் கண்ணம்மா.

''இத்தன மாசம் சும்மா சோறு போட்டோமே... எங்களுக்குத் தேவைதான்...''

கண்ணம்மா விடியவில்லையே எனக் கூட வருந்தவில்லை. அஸ்தமித்து விட்டதோ எனத் தான் பயந்தாள். பருவத்தின் எல்லையில் பெண்ணை, பைத்தியத்தை, எப்படிக் குணப்படுத்த, எப்படிக்காப்பாத்த...

ஊர் பேச ஆரம்பித்து விட்டது.

நாயகி என்ன கண்டாள், காலையில் ஒரு உருண்டை தாயார் உருட்டிப் போட, ஊர் சுற்றக் கிளம்பி விடுவாள். நண்பர்கள்,பகை, தெரிந்தவர், தெரியாதவர் எல்லாருக்கும் அதே சிரிப்புத்தான்.

''கண்ணம்மாவைப் பொண்ணைக் கூட்டிக்கிட்டுப் போய் வைத்தியம் பார்க்கச் சொல்லணும். ஊர்ல எவனாவது அசிங்கம் பண்ணிட்டா நம்ம பேர் கெட்டுடும்.'' ஊர்ப் பிரமுகர் ஒருத்தர்; — ஞாயிறு பகல் சீட்டாட்டத்தில் ஆரம்பித்து வைக்க, அனைவரும் ஆமோதித்தனர்.

ஆனால் ஒரு பயலேனும் கண்ணை மூடிக் கொள்ளவில்லை. கண்ணுக்கு வாய் இருந்தால் அவன் மானத்தைக் கப்பலேற்றிவிடும். அவள் பருவத்தை அவனவன் கண்ணினால் எடை போட்டான்.

முருகேசன் 200 ரூபாய் பணம் தந்தார். கண்ணம்மா கும்பிட்டு நிற்க, ''கவலையை விடு. பொண்ணு குணமாவட்டும். கடையைப் பெரிசு பண்ணு. நடந்ததை மறந்துருவே.''

''அறிவு கெட்டவனே! மேலேயிருந்து தூசு தட்டாதே, கண்ணில விழுது.''

—கீழே ஏணியைப் பிடித்துக் கொண்டிருந்த தாய் கண்ணைத் துடைத்துக் கொள்ள, பண்டிகைக்காகப் பரணிலிருந்து பாத்திரங்களைத் தேடிக்கொண்டிருந்தான் விஜி.

''வௌவால் புழுக்கை நாற்றத்திலே நிக்கக்கூட முடியலே. சும்மா கத்தினே இறங்கிப் போயிருவேன்'' — விஜி மிரட்டி அந்த இருட்டில் துழாவித் துழாவிப் பாத்திரங்களைத் தேடிக்கொண்டிருந்தான். கையில் ஏதோ பைண்ட் செய்த புத்தகம் இடறுகிறது. சில சமயம் பழைய நோட்டுப் புத்தகங்கள், ஒரு பக்கம் மட்டும் எழுதப்பட்டுக் கிடைக்கும். பிரித்துப் பார்த்தால் இரண்டு பக்கமும் பிரிண்ட் செய்த புத்தகம். அதைப் பழைய இடத்துக்கு நகர்த்தும்போது ஒரு படம் கண்ணில் பட்டது. 'நம் வீட்டில் எப்படி இந்த மாதிரிப் புத்தகம்....' திரும்ப வைத்து அதை வைத்திருந்த இடத்தைப் பார்த்துக்கொண்டு பாத்திரம் தேடுவதில் முனைந்தான்.

''இத்தோடு சேர்ந்து ஐநூறுக்கு மேலே ஆயிருச்சி'' என்றாள் கண்ணம்மா.

''நான் உன்னைக் கணக்குக் கேக்கலையே?''

''நீங்க சொல்லித்தான் இந்த வைத்தியம் முயற்சி பண்றேன். எனக்கு நம்பிக்கை போயிருச்சி.'' — அழுதபடி நகர்ந்தாள்.

ஏழைகளுக்குத்தான் எவ்வளவு ஆபத்தான சோதனை வைக்கிறான் இந்த இறைவன்! ஊர் தலைவர்களில் ஒருவர் தன் மகளுக்குத் துணையாக நாயகியை இருக்கச் சொல்லிவிட்டு இரவில் அவளைத் தண்ணீர் கொண்டு வரச் சொல்லி, அசடு வழிய முயல தன் வழக்கமான சிரிப்பால் அவர் மகளிடமே அவர் மாட்டிக்கொள்ள, நாயகிதான் நாயகியைக் காப்பாற்றினாள் என்று கண்ணம்மா சொன்னதைக் கேட்டு நடுங்கியே போனார் முருகேசனார்.



'முதலில் O.IN ஹைட்ரோலிக் அமிலத்தைத் தயார் செய்துவைத்துக் கொள்ளுங்கள். பின்னர் ஜெல்யல் பிளாஸ்கில்....' — ஆங்கிலத்தில் டெமான்ஸ்ட்ரேட்டர் போனவருட ரிகார்டு நோட்டைப் பார்த்துப் படிக்க,, தன்னுடன் கப் போர்ட் அறையைப் பங்கு போட்டுக் கொள்ளும் மாணவன் செய்முறை நோட்ஸ் எழுதுவான் என்ற தைரியத்தில் டிராயரைப் பாதி திறந்து வைத்துக்கொண்டு அதனுள் வெளியே தெரியாதபடி வீட்டிலிருந்து தவணை முறையில் இடம் மாற்றி மாட்டிக் கொள்ளாமல் கொண்டு வந்தஅந்த உடல் சாஸ்திரப் புத்தகத்தை வேகம் வேகமாகப் படித்துக் கொண்டிருந்தான் விஜி.

'சனியன், எத்தனை பக்கங்கள். சீக்கிரம் படித்துத் தொலைத்தால் திரும்பும்போது இன்றே ரயிலிலிருந்து தூக்கி எறிந்து விடலாம்' எனப் பக்கங்களைப் புரட்டுகிறான்.

போதாத காலம். அவ்வப்போது சந்தேகம் வேறு. புருவங்களிலிருந்து விழுந்த வியர்வை, புத்தகத்தை நனைத்துக் கொண்டிருக்கிறது.

ஒரே வெள்ளைக்காரர்கள் படங்கள். சுதந்திரத்துக்கு முன்னதாக எழுதினது போல் இருக்கிறது. இதைத் தன் பெற்றவர்கள் வைத்திருந்தார்கள் என்ற நினைப்பே அவனுக்கு வெட்கத்தைத் தந்தது.

விவசாயிகள் போராட்டமாம். வண்டிகள் எல்லாம் ஸ்டேஷனுக்குத் தாமதமாய் வந்து கொண்டிருந்தன. அடுத்த வண்டி கும்பலும் சேர்ந்து ஸ்டேஷனில் எங்கு பார்த்தாலும் தலைகளாகத் தென்பட்டன.

அதோ! ஜோவும் அவன் நண்பர்களும் அருகே நிற்க, தனக்குத் தகுதி வந்துவிட்டதாக இப்போது விஜிக்கு ஒரு தெம்பு. ''விவசாயிகள் போராட்டத்தில் எத்தனை பேர் வதைபட்டார்களோ தெரியாது. ஒருத்தன் மட்டும் இன்னிக்கு வாங்குவான்'' என ரகு விமர்சிக்க,அனைவரும்மெதுவடையைப்பார்த்தனர். சிரித்தனர். சிறிது நேரத்தில் தூக்கி எறியப் போகும் புத்தகத்தை ஒருமுறை அவர்கள் முன் காட்டி 'முட்டாள்களா, படத்தோட புக் வச்சிருக்கேண்டா' எனச் சொல்ல வேண்டும் என்று ஆசையாக இருந்தது. ஆனால் பயணத்தில் வழி முழுவதும் வாயைத் திறக்கவில்லை.

இறங்கும்போது 'ஜோ' ''உங்களுக்கெல்லாம் தியரி மட்டும்தான் தெரியும். பிராக்டிகலும் பாஸ் செய்தவன் நான்'' என சொல்ல, ''பாவி யாருடா அது?'' என மற்றவர்கள் அவனைக் கேட்க, அவன் சொல்லும் நேரத்தில் பாழாய்ப்போன வண்டி பாதியில் ஊதிக் கெடுத்தது...

வரவர வழக்கத்தைவிடத் தனிமை அதிகம் தேவைப்பட்டது அவனுக்கு. இரவில் தனி அறையில் வாய் எதையோ கத்தியபடி இருக்க, மனக் கண் முன் அருகிலேயே மாதுகள் வலம் வந்தபடி இருந்தனர். ஏன் படித்தோம் அந்தப் புத்தகத்தை என்றிருந்தது. விளக்கை அணைத்துப் படுத்து விடலாம் எனத் திரும்பிய அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. திண்ணையை யொட்டிய ஜன்னல் வழியே வெளியே யிருந்து நாயகி அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

'போ, போ' என்றான் பதற்றத்தில்.

அவள் நகருவதாகத்தெரியவில்லை. மாறாகச் சிரித்தாள். வழக்கம்போல் தாவணி தன் ஒழுங்கீனத்தைப் பறைசாற்றியது. ஆங்லேயப் பெண்கள் அலைமோதினர்.

வியர்வைக் குட்டையில் இருந்தான் விஜி. மெதுவாகச் சிரித்தான்.

அவளும் அப்படியே நின்றாள்.

ஜன்னல் அருகே சென்று ஒட்டி இந்தப் பக்கம் நின்றான்.

அவள் ஆட்சேபிக்கவில்லை.

மெதுவாக அவள் நெற்றியில் ஊதினான்.

அவள் சிரித்தாள்.

ஜன்னலைப் பிடித்தபடி இருந்த அவள் விரல்களை லேசாக ஸ்பரிசித்தான்.

அவள் ஆட்சேபிக்கவில்லை.

தன் உதடுகளால் அவள் விரல்களைத் தொட்டான்.

அவள் உடலில் மின்சாரம் பாயவில்லை. ஆனாலும் சிரித்தாள்.

அவள் அவன் விரலைக் கேட்டாள்.

கையை அவள்புறம் நீட்டினான்.

''அய்யோ''

''என்ன...என்ன....'' — எனக் கூடத்திலிருந்து பல குரல்கள்.

அவன் விரல்களைக் கடித்து விட்டிருந்தாள் அவள். அப்போதும் சிரித்தாள். ஆனால், கரவில்லை.

''ஒண்ணுமில்ல. பைத்தியம் வந்து நின்னு பயமுறுத்திச்சு'' என்றான்.

''துடப்பம் உள்ளாற இருக்குது. அதைக் காட்டு போயிரும்'' என்றாள் வெளியேயிருந்து தாய். அவனுக்கு மனம் வரவில்லை. சீக்கிரம் இரவுக்கு வழிவிட வேண்டும் என்றே என்னவோ அன்று சூரியன் வெகு சீக்கிரம் புறப்பட்டு இருந்தான்.

''இதுக்கு என்ன பதில் சொல்றதுனே தெரியல'' என்றாள் கண்ணம்மா.

''அவசியமில்லை. யோசிச்சுச் சொல்லு. நான் உன் மகளைக் கட்டிக்கிறதிலே உனக்கு ஏதேனும், கொஞ்சமேனும் லாபம் இருக்கிறதா நினைச்சா சம்மதம்னு சொல்லு. போ,'' கண்ணம்மா குழம்பினாள். ஒருவேளை தன் மகளுக்குப் புத்தி சரியாகி விட்டால் குறைந்த வயசிலே ஒரு பையனைப் பிடிச்சி...''

அவள் குணமாகும் எண்ணத்தை நேற்று வரை கை விட்டிருந்தோமே இன்று ஏன்? பெண்ணுக்குத் தகப்பன் இருக்கும் இடத்தில் இருக்கும் ஒருவனை மனத்தில்கூட மாப்பிள்ளையாக நினைக்க அவளால் முடியவில்லை.

'எத்தனை ஆயிரம், ஆயிரம் குடும்பத்தில் இளம் வயதுப் பெண்கள் வயதானவர்களுக்கு வாழ்க்கைப்படுவதில்லை? நமக்கு மட்டும் ஏன் இந்தத் திடீர் சுயநலம்?

கண்ணம்மா பதில் சொல்வதாகச்சொல்லிப் போய் ஓடிவிட்டது ஒரு வாரம். அவளைக் காணோம். முருகேசனார் புரிந்து கொண்டு விட்டார். அவர் வாழ்க்கையில் கல்யாணம் பற்றிப் பேச்சு எடுத்ததே அன்றுதான் முதல் தடவை. சம்மட்டியால் அடித்துக்கொள்ள வேண்டும் போலிருந்தது.பணத்தைக்காட்டிப் பெண்ணை விலைக்கு வாங்கப் பார்ப்பதாக அவள் நினைத்து விடுவாளே. ஊரில் அவர் வரன்கேட்ட விவரமும் சகலருக்கும் தந்தி வேகத்தில் போய்ச் சேர்ந்தது.

'யானைக்கும் அடி சறுக்கும்.'

'பாவம், ஆம்பள ஆம்பளதானே.'

—இப்படிப் பலப்பல விமர்சனங்கள். எல்லாவற்றையும் விட மேலோங்கிய பேச்சு—

'முருகேசனாரை கண்ணம்மாஏமாத்திட்டா. பாவம், முருகேசனார். ஏமாந்து அவசரத்தில் பணத்தை அள்ளி வீசிட்டார்.'

'எண்ணண்ணே அநியாயம், உங்களுக்கு என்ன குறை? தாரம் இழந்தவரா, இல்லை. வச்சுக்கிறேன்னுதான் சொன்னீங்களா... கொடுத்து வைச்சிருக்கணும்.'

முதல் தடவையாகச் சாராயம் சாப்பிட உட்கார்ந்த முருகேசனாரிடம் யதார்த்தக் கும்பல் பேசத் தொடங்கிற்று.

கல்லூரிஹாஸ்டலில் அன்று பிலிம் ஷோ கல்லூரியில் பிலிம் ஷோ என்றும், அட்டெண்டண்ட்ஸ் அவசியம் எடுப்பார்கள் என்றும் சொல்லி வீட்டில் முதல் முறையாக அனுமதி பெற்று படம் பார்த்துத் திரும்பும்போது நேரம் 11 மணியையும் கடந்து விட்டது. முதல் முறை இரவில் வீட்டை விட்டு வெளியே இருக்கிறோம் என்ற மகிழ்ச்சியும், தனியே திரும்புகிறோம் என்ற பயமும் கலந்து வண்டியை வேகமாக மிதிக்கிறான்.

நல்ல பவுர்ணமி நாள். சைக்கிள் டைனமோ ஒளியைக் கக்க, இரைந்து மனம் போனபடி பாடிக்கொண்டு கடை வீதியைத் தாண்டுகிறான்.

இப்போதுதான் தெரிகிறது கடை வீதி உண்மையிலேயே பெரியதுதான் என்று. தார் ரோடிலிருந்து இறங்கித் தன் வீட்டை நோக்கித் திரும்பும்போது கண்ணம்மா கடை இருக்கும் இடம் கண்ணில் பட அவனையும் அறியாமல் நாயகி வாயில் எப்போதும் முணுமுணுக்கும் பாட்டு வருகிறது. அதற்கு மேலேயும் இட்டுக்கட்டித் தன் சொந்த மெட்டில் சரணம் போட்டு முடித்தான். பல்லவி ஒரிஜினல் குரலில் அருகே கேட்பது போல் பிரமை. ஆமாம்! அந்தப் பெண் குரல்தான். வண்டியை மேட்டில் ஏற்றி நிறுத்திப் பார்க்க, நாயகி நிலவை ரசித்தவாறு கோவில் மண்டபம் அருகில் புதர் நடுவே உட்கார்ந்திருந்தாள். பைத்தியம் நடு இரவில் இங்கே இருக்கிறதே. அவள் விரல் கடித்த இரவிலிருந்து ஏனோ அவன் மனம் அவளிடம் பரிதாபப்பட்டது.



''ஏய், எந்திருச்சி வீட்டுக்குப் போ. பூச்சி பொட்டு இருக்கும்'' — அதே சிரிப்பு.

''எந்திரிச்சிப் போன்னு சொல்றேன் இல்ல ஆத்தா தேடும்.'' — அதே சிரிப்பு.

கோபத்துடன், ''சனியன்! நாளைக்கு ஏதாவது ஒண்ணு...''அவள் கையைப் பிடித்துத் தூக்க, தூக்கிய வேகத்தில் அவள் அவனை இழுக்க அவள் மீது விழுகிறான். அவள் சிரிக்கிறாள் பெரிதாக. அவன் உடல் அவள் இளமையைத் தொட்ட அதிர்வில் அப்படியே கிடக்க, அவள் தன் முகத்தின் கீழ் இருக்கும் அவன் தலையை இறுகப் பிடித்து உலுக்கிச் சிரிக்க, நொடிப் பொழுதில் அவன் உடல் நடுங்கத் தொடங்குகிறது. அவனால் இனி மேல் தன்னைக் கட்டுப்படுத்த முடியாது என உணர்ந்து விட்டான். ஆங்கிலேய மாதுகள் ஓடுகின்றனர். ஆடுகின்றனர். ஒரு சோதனைக் குழாயில் லெட் நைட்ரேட்டை எடுத்துக்கொண்டு... சோதனைச் சாலையில் வாத்தியார் சொன்னதும், தான் பார்த்ததும் எதிரொலிக்க, பதினேழாம் பக்கத்தை மனத்தில் புரட்டி அதைச் சொல்ல முயலத்

தொடங்குகிறான். அவள்... அவளோ... சிரிக்கவில்லை. சிணுங்கவில்லை. முகத்தில் வெறி சிரிப்பு புன்னகையாக மாற கண்கள் மூடிக் கிடக்கிறாள். தன் உடலில் இவ்வளவு ரசாயன மாற்றங்களை அவன் அனுபவித்ததில்லை. இயற்கை அவனை வென்று கொண்டிருந்தது.

முதலில் ஒரு அறை. அப்படியே அவன் சட்டையுடன் தூக்கப்படுகிறான். வேதனை, அதிர்ச்சி, பயம், உணர்ச்சிகள் இந்த வரிசையில் அவனை ஆக்கிரமிக்கத் திரும்புகிறான். முருகேசனார். வெறித்துப் பார்க்கிறார். சஸ்சன் சிவந்து கிடக்க, அவர் பார்வை நாயகியின் மேல். அதில் வெறியோ வெறுப்போ அவனால் உணர முடியவில்லை. தேவையும் இல்லை. கால்கள் அங்கு நிற்காமல் ஓடுகிறான். எப்படி சைக்கிளை எடுத்தான், ஓடினான், வீடு வந்தான் அவனுக்கே தெரியாது. படுக்கையில் விழுந்தான்.

தவலையில் பால் தூக்கிக் கொண்டு போகும் சிலரும், கறிகாய்க் கூடைகளும், ஆலைக்குப் போகும் தொழிலாளிகளும் நின்று வெறித்துப் போக, அந்த விடிகிற நேரத்திலும் வேலை இல்லாத சிலர் பல் குச்சி சகிதம் அங்கங்கே நின்று வேடிக்கை பார்க்க, இதோ கண்ணம்மா ஓடிவருகிறாள்.

''அடிப் பாவி, குடியைக் கெடுத்திட்டியே'' — கையில் இருந்த சவுக்குக் கொம்பால் மகளை அடிக்க, ஆடை விலகிக் கிடக்க, உறக்கத்தி லிருந்து அதிர்ந்து எழுந்திருக்கிறாள் மகள். அவள் பக்கத்தில் படுத்திருந்த முருகேசனார் சப்தம் கேட்டு, கண்ணைத் திறந்து பார்த்து எழுந்திருக்க முடியாமல் உட்கார அவரைப் பார்த்த கண்ணம்மா—

''சீ? நீயும் ஒரு மனுஷனா'' என மகளை இழுத்துக் கொண்டு சொன்னாள்.

''நான் பயந்ததையே செய்துட்டியேடி, பாவி... பைத்தியமா அலைஞ்சு கெடந்ததுக்குப் பட்டணத்திலேயே செத்துச் தொலைச்சிருக்கலாமே நீ?''

அடிபட்ட வலியில் அடிதான் அந்தப் பெண்ணுக்குத் தெரிந்தது.

''**வி**ஜி எங்கே காணோம்?''— ரங்கநாதன் கேட்க,

''நேத்தைக்கு ஏதோ பரீட்சையாம். அய்யனார் கோயிலுக்கு ரிசல்ட் ஒழுங்கா வரணும்னு வேண்டிக்கப் போறேன்னுட்டு காலையிலேயே போயிருக்குது.'' —பதில் வந்தது.

அய்யனார் முன் முடிந்தவரை அழுதான்.

''என்னை மன்னிச்சிடு. தண்டிச்சிடு. மாட்டிவிட்டுடாதே. நான் எப்படி இப்பிடி நடந்துக்கிட்டேன். எங்கேயிருந்து தைரியம் வந்திச்சி எனக்கே தெரியல...'' அழுது ஓய்ந்து வீடு திரும்பும்போது 'நீ போ பார்த்துக்கறேன்.'ன்னு சொன்னது போல் ஒரு பிரமை.

'உண்மையிலேயே நான் தப்பு செய்தேனா? 'இல்லை'. 'ஆமாம்' — இரண்டு பதிலும் ஒரே அளவில் கிடைத்தது.

'நான் என்ன செய்தேன்' என யோ கிறான்.


''போவும்போது முருகேசன் கடையி இந்த ஜோடியைக் கொடுத்து டயர் அடிக்க சொல்லு.''

'கடவுளே, இப்போதுதானே வேண் லேல்'

''எனக்கு நேரமில்லே. வண்டி போயிடும் சொல்லிப் பார்த்தான்.

''போவட்டும்'' — ஒரே பதிலில் அட கிறார் தந்தை. முருகேசனே வந்து தந்தை யிடம் சொல்லுமுன் நாமாகப் போய்ப் பே விடுவதும் நலந்தான். தனக்கு அறிவுரை சொல்லலாம், அதட்டலாம். உள்ளே கூ டிப் போய் காலில் விழுந்து விடலாம்.

முருகேசன் கடை அருகே வரவர எப்ப யேனும்அவரைச்சந்திப்பதைத்தவிர்க்க மன தில் தோன்றியது. வேகமாகக் கடை தாண்டிப் போய் காப்பித் தூள் கடையி ஒரு பையனிடம் கொடுத்து அனுப்பிவி டால் போதும் மாலைவரை தப் கலாம். அதற்குள் இந்தக் குழப்பத்துக் ஒரு முடிவு கட்டி விடலாம். ஆசைை நிராசையாக்க முருகேசனே அதோ வெளி நிற்கிறார். தெருவில் கும்பலும் இல்லை. பதுங் வும் முடியாது. அவர் லேசாகச் சிரிக்க



அவன் ஜோட்டைப் பேய லிருந்து பிரிக்க,

''உள்ளாற பையன் கிட்ட கொடுத்திட்டுப் போ.''

''ம்'' — உள்ளே போ வெளியே வந்தான்.

''உடம்பு சரியில்லை. தம் கிட்ட கொடுத்தனுப்பு றேன்.''—முருகேசனார் தா இது? ஏன் இப்படி?

''வர்றேன்.''

''ம்''—வண்டியை எடுக்கு போதும் குழப்பமாக இரு தது. ஒருவேளை தன்னை அடையாள தெரியவில்லையோ? ஒரு வேளை நடந்த தெரியவில்லையா? சாராயவாசனை வ ததே.

ஆம். உள்ளபடியே முருகேசனாருக்கு அங் நடந்தது எதுவுமே தெரியவில்லை. தன்னை ஏதோ ஒன்று உந்த கண்ணம்மாவைப் பார் துப் பேசக் கிளம்பியவர் சிரிப்புச் சத்த கேட்டு அங்கே வந்திருக்கிறார். பின்ன விடிந்ததுதான் தெரியும். ஆனால், அவரு குள் தவறு செய்துவிட்ட குற்ற உணர் தலை தொங்கச் செய்து விட்டது. அதுவ கேலி மட்டும்தான் இருந்தது. இனிமே 'ஊர் தூற்றுமே'? ஊரை விட்டு ஒழிந் விடலாமா? செய்த தவறுக்கு உலகைவிட்டே ஒழிந்துவிட வேண்டும். வெளியே போகவே அவருக்குத் தைரியம் இல்லை.

விஜி சிறிது சுதந்திரமாகத் இயங் தொடங்கினான். ஆனாலும் நாயகியைக் கண் ணம்மா கடையில் பார்க்கும்போது மட்டு பயம் குறையவில்லை. கண்ணம்மா இப்போது மகளைப் பிரிவதில்லை. உறங்கும்போது கயி றைப் போட்டுக் கட்டியும் போட்டு வி கிறாள். சிறிது பணம் சேர்த்து ஊரை வி

டுப் போகத் திட்டமும் போட்டு வைத்திருந்தாள்.

கேட்டபோது தரவில்லை என்பதற்காகப் பெண்ணுக்கு அவப் பேரைக் கொடுத்துவிட்டானே, பாவி.

அவள் மனம் அவரைச் சபித்துக்கொண்டிருந்தது. மகள் உடலைத்தான் அவளால் கட்ட முடிந்தது. வயிற்றில் வளரும் கருவைப் பற்றி அவள் நினைக்கவில்லை. பாவிப் பெண். கடை வீதியில், மளிகைக் கடையின் வாசலில் அனைவருக்கும் குழப்பமில்லாமல் புரிய வைக்கும்படி வாந்தி எடுத்துத் தொலைத்து....

'தலை சுற்றல்' 'பித்த நீர்' எனக் கண்ணம்மா முடிக்கு முன் கூட்டத்தில் கிழவி ஒருத்தி, ''ஆமா, இது சுமக்கிறதுக்குச் சமிக்ஞை.''

முதல் முறையாக வெகு நாட்களுக்குப் பிறகு முருகேசன் கடையை விட்டு வெளியே வந்தார். மனத்தில் ஒரு முடிவுடன் நடக்கிறார். கண்ணம்மா வீட்டைநோக்கித்தான். அந்த நடையின் வேகமே மற்றவர்களின் கேலிச் சிரிப்பை அடங்கச் செய்தது.

கண்ணம்மாவுக்கு அழுவதைத் தவிர வேறு பதில் சொல்லத் தெரியவில்லை. 'தப்பு பண்ணேன். நான் தண்டனையைத் தேடிக்கறதுக்குள்ளாற அம்மன் எனக்கு ஒரு கடமையை விட்டிருக்கா. பொண்ணுக்குக் குணமாகிற பிரச்னையை விடு. அவளோட பெண்மையின் களங்கத்தை நான் ஒருத்தன் மட்டும்தான் போக்க முடியும்னு நினைக்கிறேன். அந்தப் பொண்ணுக்குத் தேவை இப்போ பாதுகாப்பு. வேற ஒரே வழி பொண்ணைச் சாக அடிக்கறதுதான். சொல்லி அனுப்பு. அஞ்சு நிமிஷம் முன்னாலே நானும் போயிடறேன்.'



'சே! பாவம் நாயகி. இப்பிடி ஒரு பெண்ணுக்கு வரக்கூடாது' — விஜி பிரச்னை வேறு யாருடையதோ என நினைக்கும் அளவுக்கு விடுபட்டிருந்தான்.

''இந்த மாதிரி வாழறதுக்குச் சாகலாம்'' —அவன் தாய் பக்கத்து வீட்டு அம்மாவிடம் வம்பளந்து கொண்டிருந்தாள்.

நாயகியைத் தன் வீட்டுக்குத் தாலி கட்டிக் கூட்டிப் போனார் முருகேசன்.

''எனக்குத் தெரிஞ்சு தேனிலவுக்குப் பிறகு தாலி கட்டின ஒரே ஆள் நீதான்யா'' — கேலி தமாஷாகியது. பின்னர் அதுவும் அடங்கியது. தன் மகள் போல் பெண்ணையும் அதன் வயிற்றில் வளரும் வாரிசையும் பேணிக் காத்தார். கண்ணம்மாவும் இப்போதெல்லாம் அழுவதில்லை. சிரிப்பு... இனி மேல் இருக்கும்.

பாதித் தூக்கத்தில் புரண்டவன் விசும்பல் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டான். எழுந்து விஜி பக்கத்து அறைக் கதவோரம் நிற்க, ராதா அழுதபடி இருக்க, அப்பாவும் அம்மாவும் பையில் துணியை அடைத்துக் கொண்டிருக்க, 'ஊரில் யாருக்கேனும்...'

''என்ன ஆச்சு, எங்கே கிளம்பறீங்க?''— அவன் வருகையை எதிர்பார்க்காத அவர்கள் சிறிது விழித்து, ''பக்கத்திலே கல்யாணத்துக்குப் போறோம். ரெண்டு நாளிலே வந்திடுவோம்'' என்றனர்.

''அதுக்கு ராதா ஏன் அழுது?''

''காலைல விடி விளக்கைக் கீழே தள்ளி உடச்சிடுச்சி. அதான்.''

(அது சரி) திட்டினவள் கண் ஏன் அழுது அழுது வீங்கி யிருக்கிறது? பளீர் எனக் கேட்கும்படி வளர்க்கப்படவில்லையே. விடியற்காலையில் ஊரைவிட்டு ஏதோ கல்யாணம் எனப் புறப்பட அவசியம்? அது கல்யாணத்துக்கு இல்லை. ஏதோ கலாட்டா ஆகியிருக்கிறது. அவர்கள் பையில் திணிக்கும் ஒரு புடவையேனும் கல்யாணத்தில் கட்டும் படியாக இல்லை. ராதா அழுகை, தாய் விசனம்!

இத்தனை வருடங்களாக இல்லாமல் தாயும் தந்தையும் சேர்ந்து வீட்டைத் தனியே விட்டுப் போகும் அளவுக்குப் பிரச்னை பெரிது. ராதாவும் தப்புச் செய்துவிட்டாள்.

பாவம், கண்ணம்மாவுக்குச் சாமர்த்தியம் பத்தாது. அம்மாவுக்கு மகனிடமே மறைக்கும் அளவுக்குத்தைரியம் இருக்கிறது. யாராய் இருக்கும். வருவானே ஒரு தடியன் சுந்தரம் அவனாகத்தான் இருக்கமுடியும்.

இரண்டொரு நாள் கழித்துப் பெற்றவர்கள் வீடு திரும்பினர். கல்யாணத்தைப் பற்றி ஏமாற்றுப் பேச்சுப் பேசினர். ராதா துவண்டு வந்தாள். படுத்த படுக்கை. எதிர்பார்த்த படியே தந்தை தோளில் துண்டை எடுத்துப் போட்டுக்கொண்டு கிளம்பினார். வடிகட்டின ஏமாந்தவனைத் தன் மகளுக்குப் பார்க்க.

வரன்களை அலசுகிறார்கள். விஜிக்குச் சிரிப்புத்தான் வருகிறது. பெரிய வேடிக்கை, ராதாவும் வெட்கமின்றித் தன் விருப்பு வெறுப்புக்களைச் சொல்கிறாள்.

தாயும் கேட்டுக் கொள்கிறாள்.

'இது ஒரு நாடகக் கும்பல். சே, நானாக இருந்தால் வெட்டியே போட்டிருப்பேன்.'

ஊரை அடைத்துக் கல்யாணம் நடந்தது. பையன் அழகாக, மூக்கும் முழியுமாக இருக்கிறான். மொட்டைக் கடிதாசு எழுதலாமா என்றுகூடத் தோன்றியது விஜிக்கு. அந்தக் கழுதை ராதாவும் முதல் முதலாக ஆண் பிள்ளையைப் பார்ப்பது போல் கீழ்க் கண்ணால் பார்க்கிறாள். முட்டாள் மகிழ்ந்து போகிறான். முகத்தில் பெருமை வேறு.

அன்றுதான்வெகு நாட்களுக்குப் பிறகு கண்ணம்மா கடைக்கு வந்திருந்தாள். பெண்ணுக்கு இன்னும் ஒரு வாரம் தள்ளிப் போகும் என்று மருத்துவச்சி சொல்ல, வியாபாரத்தில் எதையாவது சேர்ப்போம் என்று ஆசை. அவளை ஒரு பைசா செலவு செய்ய விடாமல் தானே பார்த்துப் பார்த்து எல்லாவற்றையும் கவனித்து வந்தார் முருகேசன்.

பிரசவம் தன் குடிசையில்தான் இருக்க வேண்டும் என்று கண்ணம்மா கண்டிப்பாகச் சொல்லிவிட்டாள். வயறு கனம் கூடக் கூட பாவம் நாயகி வேதனையுடன் சிரித்தாள்.

''அக்கா அக்கா ஓடிவாங்க. மவளுக்கு வலி எடுத்திடுச்சி. மருத்துவச்சியக் கூட்டி வந்துட்டோம். உடனே வாங்க.''


கேட்டவுடன் கடையை மூடக்கூட நேரமில்லாமல் ஓடினாள் கண்ணம்மா.

''தாயே, ரங்கநாயகி, உனக்குத் தாலியும் தூளியும் வாங்கிக் கட்டறேன் தாயே, மவளை நல்லபடியாப் பிரசவிக்கச் செய்.''

பத்து அடிகளிலேயே குழந்தை அழுகைச் சத்தம் காதில் விழுந்தது. ஒரு சிறிய ஆறுதல். உள்ளே சென்று பார்த்தாள். அழகான சிசு. பிஞ்சுக் காலை உதைத்து அழுதது. சுகப் பிரசவமாம். ''என்ன பேரன் எடுத்திட்டிகளா?'' மருத்துவச்சி விசாரித்தாள்.

''குழந்தைஆரைப் போல இருக்கு ஆயா?'' — கண்ணம்மா கேட்க,

''உன் மவளைப் போல இல்லே. ஆமா, உம் மவ எதுக்கும் சிரிச்சுக்கிட்டே இல்ல இருக்கும். இது அழுதுக்கிட்டே இல்ல பொறந்திருக்கு'' — மருத்துவச்சியை அனுப்பிவிட்டு உள்ளே நுழைந்த கண்ணம்மா மகள் கண் விழித்திருப்பதைக் கண்டாள்.



''பிள்ளைக் குழந்தை அழகா இருக்குது பார்த்தியா?'' என கண்ணம்மா கேட்டு — 'பைத்தியக்காரப் பெண் குழந்தையை ஏதாவது செய்துவிடப் போகிறதே' என நினைக்கு முன் மகள் குழந்தை முகத்தில் உட்கார்ந்திருந்த ஈயை ஓட்டுவதைக் கண்டதும் அதிர்ச்சி அடைந்தாள். கண்களில் நீர் சொரிய,

''தாயே, எம் மவளை நல்லபடியா ஆக்கித்தந்திட்டியே அம்மா. என் வேண்டுதல் வீண் போகலே. என் அழுகை வீண் போகலே. நாயகி நீ நல்லாயிட்டே.''

தன் உடலில் தாவணி விலகுவதே தெரியாத மகள் குழந்தை மேல் உட்கார்ந்திருந்த ஈயை விரட்டுவதைப் பார்த்துப் பெருமிதப் பட்டாள்.

முருகேசனால் நம்ப முடியவில்லை. ஆளைக் கூப்பிட்டு, குழந்தைக்குத் தங்கச் சங்கிலி, வளையல், மனைவிக்குப் புடவை வாங்கச் சொன்னார். கோயிலுக்கு ஓடினார். தம் ஆடையில் நல்லதாய் ஒன்று எடுத்துப் போட்டார். நாயனம் சகிதம் சீர் எடுத்துக்கொண்டு தனக்கு வேண்டிய கும்பலுடன் கண்ணம்மா குடிசையில் நுழைந்தார்.

''உள்ளாற வாங்க'' — மகனைக் காட்டினாள் கண்ணம்மா. காலம் காலமாகச் சொப்பனத்தில் தன் நெஞ்சை உதைத்த தன் மகன் நேரே வந்துவிட்டதில் அவருக்கு மட்டற்ற மகிழ்ச்சி,

தன்மேலும் பெருமை — 'கிழப் பய, உனக்கு வந்த வாழ்வைப் பாரேன்'

குழந்தையுடன் கண்ணம்மா பின்னால் நாயகி முன்னால் நின்றார்.

''யார் வந்திருக்காங்க பாரு,''

நாயகிக்குப் புரியவில்லை. யாரோ ஒரு வயதான பெரிய மனிதர் கண் முன் நிற்பது தான் தெரிந்தது. ''உன் வீட்டுக்காரர்... குழந்தைக்கு அப்பா... கேட்ட வாரிசைக் கொடுத்திருக்கா என் மவ...''

''என் குழந்தையைக் குடுங்க'' — குரல் வித்யாசமாகத் தொனிக்க, நாயகி கையை நீட்டினாள்.

''அப்பன் கையிலதான் இருக்கட்டுமே'' —கண்ணம்மா.

''யாரு அப்பன், இவரா? இல்லே, இல்லே. இருக்க முடியாது. என் குழந்தையைக் கொடுத்திடுங்க.''

''என்னடி புலம்பறே. குழந்தைக்கு அப்பன் முன்னே நிக்கறுரு. மரியாதை இல்லாம பேசறே.''

''இவர் அப்பன் இல்லே. இருக்காது.'' எதிர்பாராத வேகத்தில் குழந்தையைப் பிடுங்கினாள்.

''என் குழந்தை இது. தரமாட்டேன்.''

''நாயகி... பைத்தியமா இருந்த உன்னை''

''ஷு... ஓய்வெடுக்கட்டும் நாயகி. வெளியில் வாங்க கொஞ்சம். இப்பத்தான் குணமாயிட்டு வருது. பைத்தியமா இருக்கிறப்ப கல்யாணம் நடந்திச்சி. தெளிஞ்சு பார்க்கறப்ப ஒரு கிழவனைக் காட்டி இவன்தான் புருஷன்னு எந்தப் பொண்ணு சம்மதிக்கும்? அப்புறமாப் பேசிக்கலாம்.''

''நீங்க வாங்க மறுபடியும்.''

''வரேன். எம் மவன் இழுப்பானே.''

மகளிடம் நடந்த எல்லாவற்றையும் விவரமாகச் சொல்லி முடித்தாள் கண்ணம்மா.

நாயகி: ''எப்பேர்ப்பட்ட நல்ல மனசு அந்தப் பெரியவருக்கு!''

—கண்ணம்மாவுக்கு அதிர்ச்சி.

நாயகி: ''ஆமாம்மா. இந்தக் குழந்தை அவரது இல்லே. ஆரம்பத்திலிருந்து எனக்கு ஏதோ சொல்லுது!''

''பைத்தியமே. நடந்ததைச் சொன்ன பிறகு கூடவா உனக்கு நம்பிக்கை வரலே?''

''அப்ப, நான் முன்னமே தப்புச் செய்திருக்கணும்.''

''பாவி, அதை மட்டும் சொல்லிடாதே.''

நாட்கள் ஓடிக் கொண்டிருந்தன. முருகேசனர் வந்து போனர். கண்ணம்மா எப்படி எப்படியோ சொல்லிப் பார்த்தாள். வெகு நாட்களுக்குப் பிறகு ஊர் வாய் மெல்லத் தொடங்கியது. முருகேசனர் வந்தார், கண்ணம்மாவிடம்—

''உன் மவளுக்கு என்னைக் கணவனா ஏத்துக்க முடியலே. இதை நான் எதிர் பார்க்கலே. போவுது. என் வாரிசை மட்டும் கொடுத்திடு.''

''மன்னிக்கணும் ஐயா.'' — முதல் முதலாக அவர் முன் வந்து நின்ற அவள் அவர் காலைத் தொட்டுக் கும்பிட்டாள்.

''என் தெய்வம் மாதிரி நீங்க. இப்பவும் சொல்றேன். என் வாழ்நாள் முழுசையும் ங்க வீட்டில உங்களுக்கு ஒரு வேலேக்காரியா ணிவிடை செஞ்சு ஓட்டறேன். என் தாய் ன்னப் பத்திச் சொன்னவுடனே நான் டுத்த முடிவு... இந்தக் குழந்தை உங்க ாரிசு இல்லே.''

''பின்னே?'' — கண்ணம்மா.

''அது தெரிஞ்சா இந்நேரம் இப்பிடிப் பேசிக்கிட்டிருக்கவே மாட்டேன். எனக்கே தெரியலே. கண்டு பிடிப்பேன். இல்லே, வரே வரலாம். கண்டுபிடிக்காமயும் போக ாம். ஐயா அதனலான் சொன்னேன், ங்க வீட்டில....''

''போதும் நிறுத்து'' — கண்ணம்மா.

''அப்படி குழந்தை கிரயமா வேணும்னு ன்னே அழிச்சிட்டுக் குழந்தைக்குப் பாது ாவலனு ஆயிடுங்க.''

''தாயே, என்னே ஏன் சித்திரவதை செய் றே. அப்பன் தெரியாத குழந்தைன்னு அதுக்கு என்ன கிடைக்கும் உலகத்திலே.''

''எனக்குக் கிடைச்சுதே அது கிடைச்சாப் போதும்.''

மகள் தன்னே இடிப்பதாக உணர்ந்தாள் 'எதைப் பத்தியும் நீங்க'' — திரும்பிப் பார்க்க முருகேசனர் அங்கே இல்லே. அந்த நடையில் வேகமில்லே... மிடுக் கில்லே...... காரணமில்லே....

பைத்தியத்துக்குப் புத்தி தெளிந்துமுருகேசனரைத் தகப் பன் இல்லே என்று சொல்லி விட்டது.—

என்ன தைரியம் இருந்தா இப்படிச் சொல்லும் நாயகி! குழந்தையையும் அதன் அழ கையும் மற்றவர்கள் வர்ணிக்க விஜிக்கு அதைப் பார்க்க வேண்டும் போல இருந்தது.


குடிசையில் யாரும் இல்லாத நேரத்தில் எட்டிப் பார்த்தான். என்ன நிறம்! அது தான் நாயகி மறுத்திருக்கிருள்.

புருஷனைக் கண்டு பிடிப்பதாகச் சவால் விட்டிருக்கிருளாமே. ஏன் இப்படிச் சொல்ல வேண்டும்?சிறிது சிறிதாகப் பழைய சம்பவம் மனக்கண் முன் வர ஒருவேளே தான் ஏதாவது... மீண்டும் ஒரு முறை குழந்தையைப் பார்க்கப் 'பக்'கென்றது.

தன் தலேயில் வகிடுக்குப் பக்கத்தில் இருக்கும் முடியில் இருப்பது போன்ற அதே சுழி அதே இடத்தில் குழந்தையிடமும்....

ஆம்! இது எனக்குப் பிறந்த குழந்தை தான்! மறுபடியும் மறுபடியும் பார்த்தான். ஆச்சரியம்! அத்தோடு பயமும் கூடிக் கொண்டே போயிற்று. ஒருவேளேநாயகிக்குப் பழைய நினைவு வர, தன் வீட்டின் முன் வந்து நின்று, குழந்தையைப் பெக்க இருந்த வக்கு இப்ப எங்கடா எனக் கேட்டால்?

'இப்பஎன்ன திடீர்னு வேண்டுதலே. வெயில் காலமும் இல்லே. உனக்குப் பைத்தியம் பிடிச்சிருச்சி' எனப் புலம்பியபடியே தாய் மழுங்க அடிக்கப்பட்ட அவன் மொட்டைத் தலேயில் தண்ணீர் ஊற்றினுள்.



அதே அம்மன் கோயிலில் மண்டபம் அருகே உள்ள மரத்தில் ஒரு நாள் தான் தவறு செய்த இடத்தைப் பார்த்தவாறே கயிற்றில் தொங்கி நிம்மதியற்றவாழ்க்கைக்கு ஒரு முடிவு கண்டார் முருகேசனர். வந்த கும்பலுக்கு விளங்காதது, ''என் தெய்வமே என்னே மன்னிச்சிடுங்க'' — என நாயகி தாங்க முடியாமல் அழுது துடித்தது தான்.

தன் செய்கை விஜிக்கே வெட்கமாக இருந்தது. என்ன ஆண்மைத்தனம் இது. நான் கோழை. அய்யனர் முன் 'எனக்கு ஒரு வழி காட்டு' எனத் தினமும் வேண்டுவான்.

வயதையோ, உருவத்தையோ தாண்டி நிற்பது பெத்த பாசம். குழந்தையைத் தினமும் பார்க்க வேண்டும் என்ற வெறியும், கூடவே 'நாயகி ஏதாவது கேட்டுவிட்டால்?' எனப் பயமும் வரும். ஓரிரு முறை அமைதியாகக் குழந்தையைத் தோளில் போட்டுக் கொண்டு நடக்கும்போது எதிரே போய் மாட்டிக்-கொண்டு அசட்டுச் சிரிப்புச் சிரிக்க, அவளும் சிரிக்க, தோளில் உள்ள தன் குழந்தை, தன்னேப் பார்க்கும்போது கண் கலங்கிவிடும்.

வீட்டில் 'குதிருக்குக்' குழந்தை பிறந்து ஊரைக் கூட்டிக் கொண்டாடினர்கள்.

கண்ணம்மா படுக்கையில் விழ, நாயகி கடையைக் கவனிக்க, பக்கத்தில் மரத்தடியில் கிழிந்த துணியில் ஈமொய்க்க, தன் வாரிசு படுத்திருப்பதைப் பார்த்து, அவன் கண்ணில் ரத்தம் வந்தது. ஒரு நாள் குழந்தைக்கு டீ கொடுப்பதைப் பார்த்து ஓடிப்போய், நாயகியிடம், ''அது பச்சைக் குழந்தை. அதை ஏன் கண்டதைக் கொடுத்துக் கொல்றே. டின்னிலே எத்தினி பவுடர் வருது...''என்ருன்.

''அது அப்பன் வந்து சம்பாதிச்சுத் தரட்டும்ங்க.'' —தெரிந்து சொன்னது போலவே பட்டது.

வீட்டில் ஒழுங்காகப் பேசுவது இல்லே. யாரைக் கண்டாலும் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. தன் இயலாமையை வெளிக்காட்ட கோபம்தான் ஒரே ஆயுதமாய்க் கிடைத்தது அவனுக்கு.

வகுப்பில் ஆசிரியர், நம்மில் ஒருவரேனும் தணிந்து தாழ்ந்த குலப் பெண்ணே ஏற்ருல் நாட்டில் ஏற்றத்தாழ்வு இருக்கும் இடம் தெரியாமல் ஓடிவிடும். உங்களில் யார் யார் முன் வருவீர்கள் எனக் கேட்டபோது முடிந்த வரை கையை உயரத் தூக்கி யிருக்கிருன். நினைத்தாலே வெட்கம். காரித் தன் மேலேயே துப்பிக் கொள்கிருன்.

தன் மனத்துக்குள் வீடு கட்டி, தானும் தன் குடும்பமும் வாழ்க்கை நடத்துவதாகக் கற்பனை செய்கிருன். நிஜம் குறுக்கே வரும் போது வெறியே வருகிறது. தன்னேயும் அறியாமல் நாயகி வீட்டையே ஏதோ காரணத்தை வைத்துச் சுற்றிச் சுற்றி வந்து காவல் புரிகிருன். ஒரு கும்பல் —

''இப்பத்தான் ஒருத்தனும் இல்லியே உனக்கு'' என அவளிடம் பேசப் போக அசுர வேகத்தில் சொன்னவன் மண்டையைப் பிளந்தான்.


ராதாவின் குழந்தை ஆண்டு விழாவின் போது பட்டுத் துணி கடையில் வாங்கி வரச் சொல்ல—

'பாவிங்களா. என் குழந்தை மழையிலும் வெய்யிலிலும் காயுது. திருட்டுத்தனம் பண்ணவ மகளுக்கு என்ன உசத்தி பட்டு' — பாதியைக் கிழித்து நாயகி அசந்து இருந்த போது கடையில் கீழே கிடந்த தன் குழந்தை இடுப்பில் செருகி ஓடினான்.

அடுத்த நாள் தன் குழந்தை பழையபடி இருக்க, காணாமல் போன பாதிப் பட்டு கோயில் அம்மன் மேல் இருக்கத் தெரிந்து கொண்டான்.

''என்னை என் இப்படி சோதனை செய்யறே அய்யனாரே. இப்ப நான் எப்பிடி உலகத்துக்குச்சொல்வேன்? நான்யாரு? எனக்கு என்ன தகுதி இருக்கு? என்னாலெ உண்மையையும் ஒப்புக்கிட்டு என்னசெய்ய முடியும்? குழந்தைப் பாசம் மட்டும் இவ்வளவு கொடுத்துட்டு என்னை ஏன் எதுக்கும் லாயக்கற்றவனாகப் பண்ணிட்டே.''

அய்யனார் முன் அழுதவாறு மயங்கி விழுகிறான்.



அவன் பிடிவாதமும் கூப்பாடும் பலிக்கவில்லை. அவனை ஹாஸ்டலில் சேர்த்து விட்டார்கள். இந்த ஊரில் இருந்தால் அவன் உருப்பட முடியாது என்பது தந்தையின் முடிவான கருத்து. பதில் பேச வழி இல்லாது பெட்டியுடன் கிளம்ப, தாய் அவன் வாரம் ஒரு நாள் காசு போடும் உண்டியலை எடுத்துத்தர, சம்பிரதாய அழுகைகள் முடிந்து கிளம்புகிறான். வழியில் ஏதோ காரணம் ஒன்றைச் சொல்லிவிட்டு கடையை நோக்கி ஓடி, உண்டியலை உடைத்து, துணியில் பணத்தை முடிந்து நாயகி நகர்ந்த சமயம் தூளியில் தூங்கும் குழந்தையின் மடியில் போட்டுவிட்டு ஓடிவிடுகிறான்.

வழியில் அனைவருக்கும் சொல்லிக்கொண்டு ஸ்டேஷனுக்குள் நுழைகிறான். ஸ்டேஷன் அதிகாரி துக்கம் விசாரிக்கிறார். 'பிழ்யட்பா' (பிரிலியன்ட் பாய்) 'கா வஸ் யு' (காட் ப்ளெஸ் யு)

வண்டி ஒரு மணி நேரம் லேட். தந்தை விடை பெற்றுக் கிளம்ப, தனியே அமர்ந்தவன், யதேச்சையாகத் திரும்ப, நாயகி குழந்தையுடன் பிளாட்பாரத்தில் நிற்க, நம்ப முடியாமல் ஒரு நிமிஷம் ஆடிப்போய்விட்டான்.

'போகலாமா, வேண்டாமா'

மணி அடிக்கிறது. நல்ல சகுனம். அவளை நோக்கி நடந்தான்.

''எங்கே இப்பிடி?''

''சும்மா.''

''ஊருக்குப் போறேன். ஹாஸ்டலில தங்கிப் படிப்பு.''

''ம்....''

(என்ன தைரியம் இருந்தா என்னை அநாதையா விட்டுட்டுப் போவே நீ. பார்க்கிறேன், எப்பிடி வண்டி ஏர்றே நீயுன்னு)— அவள் கேட்கவில்லை.

''நேரே வந்து சொல்லணும்னு நினைச்சேன், நேரம் இல்லை.''

''ம்....''

''குழந்தை பத்திரம். தரையில படுக்க வைக்கிறே பூச்சி பொட்டுக் கடிச்சுதுன்னா? கண்ட டீயெல்லாம் கொடுக்கற.''

''ம்...''அவன் பேசுவதையே பார்க்கிறாள்.

''ஒரு நிமிஷம்.'' — அதிகமாகப் பேசி மாட்டிக் கொண்டு விடுவேனோ என்று நினைக்கிறான்.

வண்டி வ்ந்து நிற்கிறது.

''வண்டி வந்திருச்சி.''

''ம்...''

''நான் போட்டா?''

''ம்...''

''நீ எதையும் பத்தி ஐயனார் கிட்ட வேண்டிக்க.'' — அவனுக்குத் தெரியாது. அவன் வரும்போதெல்லாம் அவள் ஐயனார் பின்னால் இருப்பாளென்று.

''மறந்துற....''

''முடியுமா...?''

''எனக்குத்தான் உங்களை...'' — கார்டு விசிலூத,

''ஏறிக்கவா?''

''ம்....''

''நான் வளர்ந்துருவேன் நிச்சயமா. வந்து உன்னை....''

வண்டி நகரக் குழந்தையை அவன் பக்கம் திருப்பி—

''அப்பாருக்குப் போயிட்டு வா ன் னு சொல்லு.''

குழந்தை கையைப் பிடித்து ஆட்ட, அவன் சிலையாய் நிற்கிறான்.

வண்டி ஓடுகிறது.

அவன் வருவான் தன்னிடம் என்ற கற்பனையில் நடக்கிறாள் நாயகி.

(முற்றும்)

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd, at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600 032. (Phone: 431543) Editor : K. Rajendran

''என்னை உனக்குப் பிடிச்சிருக்கா?''

''இப்பத்தான் கேட்கிறதா?''

பக்கத்து அறையில் உரத்துக் கேட்டுக் கொண்டிருந்த ஆங்கிலச் செய்தி நிறுத்தப் படவே, சட்டென விரிந்த நிசப்தத்தில் அவள் குரல் துல்லியமாகக் கேட்டது.

''பின்னே, எப்பக் கேட்கணுமாம்? நாளைக்கா இல்லே....'' கொஞ்சம் தயக்கமும் வெட்கமும், குறும்பும் கொஞ்சம் தூக்கினாற் போல் தென்பட்ட அசட்டுச் சிரிப்புமாகக் கேட்டான். ''இன்னிக்குப் பன்னிரண்டு மணிக்கா?''

''இல்லே. ஒரு மாசம் முன்னாலே. பொண்ணு பார்க்கிறேன் பேர்வழின்னு குலாப்ஜாமூனும் ஓமப்பொடியுமா நொறுக்கிட்டு, நுரையை ஊதி ஊதித் தள்ளி காப்பியைக் குடிச்சிட்டு, உங்கப்பா 'சரி'ன்னவுடன் தைரியமா உள்ளே எட்டிப் பார்த்தீங்களே... அப்போ.'' பிசிறில்லாமல் பேசிய அவளின் புத்திசாலித்தனம் சட்டென உறைத்தது.

''அப்படீன்னா, என்னை... உனக்கு...?''

''வேற 'சாய்ஸ்' இல்லே. உங்களை மாதிரி. நீங்கள் நாலஞ்சு பெண்களைப் பார்க்கல்லே?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே. எந்த மடக் கழுதை சொன்....''

''உங்கம்மா.''

'கப்'பென்று 'சிப்'பானான்.

''எங்கப்பா பார்த்ததுலே படிப்பு, வேலை, ஜாதகம்னு பொருந்தி வந்தது, உங்க ஒருத்தருடையதுதான்.''

''அப்போ நான்தான் உன்னை விரும்பியிருக்கேன்... அத்தனை பெண்கள் நடுவே. ஆனா நீ அப்படி இல்லே...'' — அவளை மிஞ்சிவிடவேண்டும் என்கிற ஆவேசம் வாதாட, முன்னேறினான்.

அவன் மார்பில் இழைந்த தன் முகத்தைச் சட்டென உயர்த்தி அவள் கூறினாள்,

''உறவு முறைகளிலே எதையும் நாமா விரும்பித் தேர்ந்தெடுக்கிறது இல்லே—இந்த உறவைத் தவிர. ஆனா கடவுள் ஏற்படுத்தித் தந்த உறவுகளையெல்லாம் ரொம்பச் சுலபமா உதற முடியற நமக்கு, இந்த ஒரு உறவுதான் சாசுவதமாத் தோன்றது. இதுக்கு அடிப்படைக் காரணம்...''

''புரியுது சாலினி... போறுமே உன் பேச்சு.'' அவன் அவசரப்பட்டான்.

''நாம ஏன் 'அதை' இரண்டாம் பட்சமாக்கிட்டு, சகஜமான ஒரு மன நெருக்கத்தை முதல்லே வளர்த்துக் கொள்ளக்கூடாது?''

அவன் உறுத்துப் பார்த்தான். ''நான் நாலைந்து பெண்களைப் பார்த்ததுக்கும், அப்படிப் பையன்களை உன்னாலே பார்க்க முடியாததுக்குமாக இப்ப என்னைப் பழி தீக்கறையா?'' நிறுத்திக் கேட்டான்.

''உங்களைப் பழிதீர்க்கறதா?... பார்த்தீங்களா... அப்ப 'ஸெக்ஸ்'னா உங்களுக்கு மட்டும்னுதான்னு நினைக்கிறீங்க. எனக்கும் அதில் பாதிப் பங்குண்டுன்னு தோணலையா?''

''சட்''. உதறிவிட்டு எழுந்தான் முரளி. ''வாட் நான்ஸென்ஸ்''.

''இட் இஸ் ஸென்ஸ். இது ஒரு முயற்சிதான். ஆனா...''

''ஆனா, உன் மனசு மாறச்சேதான் கை விடுவே இல்லையா? அதுக்காக நான் நாக்கைத் தொங்கப் போட்டு நாயாட்டம் காத்துண்டு இருக்கணும் இல்லையா? இதான்... இதுக்குத்தான்,பொட்டைப் பசங்களை நாலெழுத்துக்கு மேலே படிக்க வைக்கக் கூடாதுங்கறது. கொஞ்சம் தன்னைச் சுற்றிப் பார்க்கத் தெரிஞ்சுட்டா, ஏதோ ரொம்ப... ன்னு நினைச்சுக்கறது... மத்தவாளைத் தூசியா ட்ரீட் பண்றது...''

''அப்படிப் பண்ண ஆம்பிளைகளுக்கு மட்டும்தான் உரிமை இருக்கணுமா?''

பதில் பேசாமல் 'ஷர்ட்டை' எடுத்து மாட்டி, தலை சீவி, செருப்பை மாட்டினான். மேஜை மேலிருந்த திரட்டுப் பால் கிண்ணத்தை மெத்தை மேல் வீசிவிட்டு, பர்ஸை உருவிக் கொண்டான்.

''எங்கே கிளம்பறாப் போல?''

''மனசு சரியில்லை. நைட் ஷோ.''

''எனக்கும்தான். நானும் வரேன்.''

தலையில் கையை வைத்து அழுத்திக்கொண்டான் முரளி.

தபால்காரர் முதல் பால்யத்தோழர்கள் ஈறாகச் செய்த கேலிப் பேச்சுக்களை அசட்டுச் சிரிப்போடு வரவில் வைத்தான். லீவு கிடந்தது இன்னும் இருபது நாட்களுக்கு.

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி



''ஏண்டா முரளி, இந்தக் காவேரிக் கரையிலே இன்னும் கொஞ்ச நாள் இருக்கட்டுமே சாலினி! 'ஹனிமூன்'போகப் போறையோ?''

அம்மாவின் ஆதங்கம். ''சரிதான்'' என்றுன். — 'ஹனிமூன்' போகிற மூஞ்சியைப் பார்க்கலே!' கொஞ்ச நாள் இந்த மனிதர்கள் நடுவே இருந்துவிட்டுப் போனுலே நல்லது தான்.'

சாலினி புத்திசாலி. அவள் முன்னே உடம்பு முறுக்கேறினுலும் அறிவு தோற்றுப் போகிறது. அழகும், அறிவுமாக இணைந்த அந்த அபூர்வ வஸ்து தனக்குக் கிடைத்துவிட்டதில் பெருமை கரை புரண்டாலும், அதை ஆதிக்கம் செய்வதில் தான் கண்ட மகத்தான தோல்வி!...

—சாலினி தன்னைவிடப் புத்திசாலி. அவனுள் புகைந்தது.

''கட்டின புடைவையோடு குளிச்சா, இங்கெல்லாம் கேலி செய்வாளோ!''

—தலையை உசுப்பி, வழிந்த நீரை வாயால் ஊதியவாறு கண்களைத் திறந்தான் முரளி.

அருகில் சோப்புப் பெட்டி, பிளாஸ்டிக் குவளை, மடித்துப் போட்ட வாக்கில் ஒரு டர்கிஷ் டவல், புதுப் புடவை, பெட்டிகோட் வகையறு... போதாக் குறைக்கு, கரையில் கழற்றிப் போட்ட செருப்பு ஜதை.

சிரித்தான்.

''பேஷா. இப்ப காவேரிக்கு நீ செருப்போட வந்த தற்கே வழி முழுக்கச் சிரிச்சிருப்பா.''

ஒன்றும் புரியாமல் அவள் நிற்பதைப் பார்க்கவே அவனுக்கு ஆனந்தமாக இருந்தது.

''அய்....யோ. கால்ல என்னவோ குறு குறுங்கறது.'' பரபரத்து அவள் குனியப் போய், நிலை தடுமாற, கையிலிருந்த சோப்புப் பெட்டி முதலான சமாசாரங்கள் நழுவிக் காவேரியில் ஸ்நானம் செய்ய,

சட்டென இரும்புப் பிடியாக புஜத்தைப் பற்றி நிறுத்தினன்.

''மீன் கால்ல இருக்கிற அழுக்கைக் கவ்வும், வேறே ஒண்ணுமில்லே. அது சரி, குளிச்சு, இங்கேயே டிரஸ் மாத்தலாம்னு வந்தியா...'' வாய் விட்டுச் சிரித்த அவனைக் கண்கொட்டாமல் அவள் பார்த்திருக்க, தண்ணீரோடு போக ஆரம்பித்தவைகளை ஒரே தாவலில் சேகரித்து வந்தான்.

''நீங்க நீஞ்சுவீங்களா என்ன?''

அவளின் ஆச்சரியத்தை அசட்டை செய்தான்.

''அம்மா அறிவுஜீவி! உன் சட்டையையெல்லாம் சுருட்டி வெச்சு, புடவையைப் பாந்தமா சுத்திண்டு குளிச்சிட்டு வா. வீட்ல வந்து உலர்ந்த துணி மாத்திக்கலாம்.''

''ஐய, தெருவிலே அப்படியேவா ஈரமாப் போறது?''

''ஹய்! உனக்கு முன்னலே லட்சம் பேரு அப்படிப் போன தெரு இது. ஆயிரம் பேரு இப்பப் போரு, உன்னை யாரு சட்டை பண்ணப் போரு?''



வலது கையில் அடங்கிய இடுப்பை அழுத்தி அடிக் குரலில் கூறினன். ''முதல்ல உன் 'ஸெல்ப் கான்ஷியஸ்னஸ்'ஸை விட்டு ஒழி. வெளியிலேயும், வீட்டிலும், 'ரூமு'க்கு உள் ளேயும்....''

நீரில் முங்கப் பயந்து, முகத்தில் தேய்த்த சோப்பைக் குவளையில் முகந்த நீரால் கழுவிக் கொண்டிருந்தாள் சாலினி. புடவைக் கொசுவம் நீரில் கனத்துக் காலைத் தடுக்க உடைகள் உடலோடு பதிய....

அவன் சுவாரஸ்யமாக ரசித்துக் கொண்டிருந்தான்.

''ஈரக் கால்ல செருப்பு போட்டா மண் உறுத்தறது. கையிலே எடுத்துக்கறேன். நீங்க இதையெல்லாம் பிடியுங்க.''

கையில் வைக்கப்பட்ட சோப்புப் பெட்டி, குவளை, புடவை, நனைந்த உள் பாவாடை...

'தட்'டென மண்ணில் கைவிட்டான்.

''என்னை வேணும்னே சீண்டி விடறே நீ.'' திரும்பிப் பார்க்காமல் விடு விடுவென்று வீட்டைப் பார்க்க முன்னேறினன்.

''காவிரிக்குப் புதுசு, பாவம், சாலினியை விட்டுட்டு நீ உன்பாட்டுக்குவந்துட்டயாமே?''

அம்மா தந்த காப்பியைச் சுவைத்துக் கொண்டே, ''என்னதான் சொல்லு. நம்ம பசுவோட பால் ருசியே தனிதாம்மா'' என்றுன்.

''சட்டையும் பாடியும் எப்படி உடம்போட ஒட்டிப் போயிருக்கு பாரு. அவிழ்க்க முடியாமெ. குளிக்கப் போனவ என்னைக் கேட்கப்படாதா?... நீ ஒண்ணும் நினைச்சுக்காதே சாலி, முரளிக்கு வெட்கமா இருந்திருக்கும். தனியா வந்துட்டான். என் பிள்ளை சாது'' — சமையல்கட்டில் அம்மாவின் குரல் கேட்டது.

''அப்படியெல்லாம் சாதுவா இருக்கக் கூடாதும்மா'' என்ற பதிலும் கேட்டது.

கொஞ்சம் ரசிப்போடு கூடவே, 'இவள் குயுக்திப் பேச்செல்லாம் அப்பிராணியான அம்மாவிடம்தான் காட்டணுமோ' என்கிற எரிச்சலும் எழுந்தது முரளியிடம்.

புறக்கடைக் கோடியில் ஓரமாகக் கிணறு. சுற்றிலும் வாழை, கீரை, கத்தரி என்று பசுமைப் பட்டாளம். அதன் கரையாகக் கனகாம்பர வரிசை. பந்தல் கொள்ளாமல் 'சென்ட்' அடித்துக் கொண்டு முல்லையும் ஜாதியும்.

விடிந்தும் விடியாத அந்தக் காலை நேரத்தில் எல்லாமே அப்போதுதான் பிறந்து கொண்டிருக்கும் புதுமையில் கொஞ்சம் கொஞ்சமாக உருப்பெற ஆரம்பிக்க, கிணறு வரை வந்த முரளி, சூழ்ந்திருந்த இயற்கையின் ஓர் அங்கமே போலக் குளித்து, செண்டாகக் கட்டிய ஜாதி, முல்லையை நாலாக மடித்துத் தோள் வரை புரளச் சுமக்கும் தலைப் பின்னலுடன், தண்ணீர் சேந்திக் கொண்டிருந்த அவளைப் பார்த்தான்.

''பேஸ்ட் எங்கே?''

ஒற்றை விரல் சுட்டிக் காட்டியது.

'டூத் பிரஷ்'ஷை நீட்டினன்.

''ஊஹூம்.''

அவனுக்குள் உறுமிற்று.

''போய் என் 'ஷேவிங் ஸெட்'டைக் கொண்டு வா.'' அந்த அழகிய பின்புறத்தை நோக்கிக் கூறினன்.

''வெள்ளிக் கிழமை. புரட்டாசி மாசப் பிறப்பு. உங் கையாலே பாயசத்தை நைவேத்யம் பண்ணி எல்லோருக்குமா கொடு சாலி.''

''சரிம்மா'' தலையாட்டிவிட்டு ஷேவிங் செட்டுக்காக விரைந்த அவளை மாமியாரின் குரல் இழுத்தது. ''உன் கையாலே பாயசம் சாப்பிட்ட பிறகுதான் எங்களுக்குக் காப்பி இன்னிக்கு.''

—ஐயோ பாவமே, தூங்கி எழுந்து இத்தனை நேரம் வெறும் வயிற்றோடு காத்திருக்கிறார்களா என்ன!—

செக்ஸ் இருந்துவிட்டால் மட்டும் படம் ஓடிவிடுமா? கிடையாது. சில உதாரணங்கள்: 'ஹம் தேரே ஆஷிக் ஹீன்' படத்தில் ஹேமமாலினியின் தொடைகள் காட்டப்பட்டன. ஆனல் அந்தப் படம் படுதோல்வி அடைந்தது!



ஷாலிமார், சத்யம் சிவம் சுந்தரம் படங்களில் ஜீனத் அமன் தன் மார்பகங்களை நன்றாகவே காட்டினர். இரண்டுமே படு தோல்வியடைந்தன!

'லாஹீகே தோரங்' படத்தில் ஷபனு ஆஷ்மி குளிக்கும் காட்சி வந்தது. பிரயோஜனம்?! ஸீரோ தான்!

'கீமத்', 'ப்ரான் ஜாயே ஃபிர் வகன்ந ஜாயே' படங்களில் ரேகா செக்ஸியாக நடித்தார். அந்தப் படங்கள் வெற்றிபெறவில்லை. ஆனல் அதே ரேகா அடக்கமான உடையில் தோன்றிய 'கூப் சூரத்' படம் பெரும் வெற்றி பெற்றது.

ஜயாபாதுரி எந்தப் படத்திலும் செக்ஸியாக நடிக்கவில்லை. ஆனல் அவர் நடித்த பல படங்கள் பிரமாதமாக ஓடின!

('பிலிம் மிரர்' கடிதம்)

அனிதா ராமச்சந்திரன்

மடமடவென்று ஊதுவத்தியைக் கொளுத்தி வைத்து, நெய்யைத் தெளித்து, பாயசத்தைக் கொண்டு வைத்து, கற்பூரம் கொளுத்தி, பூவைத் தூவி, நீரைச் சுற்றி...

அவன் உலுக்கிய உலுக்கலில் அலமலந்து போனாள். "கேட்டுட்டு புழக்கடைக் கோடியிலே நானிருக்கறேன். நீ இங்க, உன் பாட்டுக்குச் சாவகாசமா... என்ன அர்த்தம்?"

அவனுள் வெடித்தது.

பளாரென்று தாங்கிக் கொண்ட இடக் கன்னத்தைப் பொத்தியவாறு நின்றாள். ஒரே கணம்தான். பாயசம் வார்த்த கிண்ணங்களைப் பெரியவர்களிடம் கொடுத்து, சரசரவென சர்ப்பமாய் நழுவிப் போனாள்.

நாடகத்தைப் பார்த்த அம்மா, 'இதன் உள்ளீடாக வேறு ஏதோ அர்த்தங்கள் இருக்கிற'தை உணர்ந்தாள். ஐந்து நிமிஷத்தில் முரளியைப் பிடித்தாள்.

"இந்தா முரளி, வெள்ளிக் கிழமை. மாசப் பிறப்பு. சாலினி கையால் பாயசம் சாப்பிட்டு விட்டுத்தான் வேறெதுவும்னு... இந்தா குடி. கொஞ்சம் பொறுத்துக் காப்பி குடுக்கச் சொல்றேன். எங்கே அவ?...."

எந்தச் சாயலும் காட்டாமல் திரும்பினாள்.

கையை நீட்டி நடுவீட்டில் அடித்தது அவனுக்கு வலித்தது இப்போது.

'சே! என் வீக்னெஸை எப்படிக் காட்டிக் கொண்டு விட்டேன்! இனிமேல் அவ மதிப்பிலே நான் பூஜ்யம்தான்.'

அப்பா வாசலில் ஹிந்துவைப் புடம்போட அம்மா சமையல் உள்ளில் மூழ்கியிருக்க, விடுபட்டு மாடிப் படி ஏறினான். கடைசிப் படியில் கால் 'பிரேக்' போட்டது. குளிர்ந்திருந்த அந்த மொட்டை மாடியின் விசாலத்தில் லேசான வெய்யில், கைப்பிடிச் சுவர் ஓரமாய் விரித்திருந்த நீண்ட நிழல் பாயில் நீட்டிக் குப்புறப் படுத்திருந்தாள் சாலினி.

தலைக்கு மேலாக ஒரு கை நீண்டு சலித்திருக்க, பரந்து கிடந்த புடவைக் கசங்கலில் புதுக் குளியலின் சந்தன மணமும், புதுப் பூவின் வெண்மையும், வாசனையும் கவிந்திருக்க, கலைந்த கருங் கூந்தலும்...

மனம் கனிந்து போனது. இந்த ஒரு மாதப் பழக்கத்தில், அவள் கூறினபடியே ஏற்பட்டுவிட்ட நெருக்கம் உறைத்தது. பக்கத்தில் மண்டியிட்டு, உச்சம் தலையிலிருந்து பாதம் வரையில் கையை ஓட்டியபோது சிலிர்த்துக் கொண்டான். காலைக் குளிரில் உடல் 'குப்'பெனச் சூடேறி, வியர்த்தபோது, லேசான விசும்பலில் உந்தப்பட்ட அந்த முதுகின் வளைவு அவனை என்னென்னவோ செய்தது.

அவளிடம் மன்னிப்புக் கேட்க நினைத்தான்.

தன் அன்பை எடுத்துச் சொல்ல வார்த்தைகள் தேடினான்.


தங்கள் இருவர்பாலும் எழுந்த பச்சாத்தாபத்தை உணர்த்த விரும்பினான்.

அவள் 'தியரி' சரிதான் எனத் தன் தோல்வியை ஒப்புக்கொள்ளவும் தயாரானான்.

ஆனால், பேச்சும், பேதமும், பெயரும் உறவும், உறவுகளின் அர்த்தங்களும், அனர்த்தங்களும், தோல்வியும், வெற்றியும் ஆக, எல்லாமே பொருளற்றுப் போன ஒரு பொருள் நிறைந்த நிமிஷத்தையே உருவாக்க முடிந்தது அங்கே, அவனால்.

வேலைகளைமுடித்து, சாவகாசமாகத் தன் புடவையைக் காயப்போட மாடியேறி வந்த அம்மா, வெய்யலில் பழுத்துக் கொண்டிருந்த வெள்ளைப் பூக்குவியலைப் பார்த்தாள். ஈரக் காற்று ஏதோ கிசுகிசுத்தது.

கொசுவிய புடவையும் கையுமாக அங்கேயே அமர்ந்து, ஒருவித வாத்சல்யத்தோடு அந்தக் காரைத் தரையை நீவி விடுவது போலக் கையால் தடவி விட்டாள். இதன் மேல் எத்தனை தடவை இப்படிப் பூக்கள் நிறைந்திருக்கும்! ஒரு இடைவெளி, ஒரு தட்டுப்பாடு இல்லாத எத்தனை பரம்பரைகள் இதன் மேல் மனசு



"ரெண்டு பேரும் ஒரே டிசைன்லே சட்டை போட்டிருக்கீங்களே; சகோதரர்களா? இல்லே, நண்பர்கள் தானா?"

"ரெண்டுமில்லே.ஒரே ஜவுளிக் கடையிலே கடன் வாங்கறவங்க; அவ்வளவுதான்!"


-பெ. கலாசாமி

ஆறி இருக்கும்! நிரந்தரமான மனுஷ்யத்துக்கு ஒரு சாட்சியா இது! பெண் நிமிரும் போது ஒடுங்கிப்போய், அவளாக அடங்கும் பாவனைகளை அப்பட்டமாய் நம்பி, குழந்தையாகிப்போய், அந்த நம்பிக்கை தந்த போலி அதிகாரத்தில் ராஜ்யம் பண்ணி... அப்பா, தாத்தா, தாத்தாவுக்குத் தாத்தா என்று....

இந்தப் பரிணாமக் குணம் மட்டும் எத்தனை நூறு தலைமுறையானாலும் மாறாது போலும்!

பூக்களை அள்ளிக் கையில் குவித்து நீண்ட மூச்சை இழுத்து முகர்ந்தாள். அந்தக் கணம் அவளுக்குள் கால ப்ரக்ஞை தவறிப்போய்,

'இன்று விடியற்காலை தன் தலையிலிருந்து உதிர்ந்த அருமைப் பூக்களோ அவை' என எண்ணிக் கொண்டாள்.



புரிந்தது ஜகந்நாத தத்துவம்!

பி. ஆர். குமார்

நாங்கள் பிரயாணம்செய்த அந்த பாசஞ்சர் ரயில் வண்டி 'நட்ட' நடு நிசியில் அந்த ஊரைச் சென்றடைந்தது. இறங்கித்தான் ஆகவேண்டும். ஏனென்ருல், அதற்கு மேல் வண்டி போகாது! மேலும் பல நாட்களாகப் பிளான் போட்டுப் போட்டு, ஒரு மாபெரும் அகில இந்திய, ஏன், அகில உலகப் புகழ் வாய்ந்த திருத்தலத்துக்கு வந்திருக்கிருேம்!

கண்ணைக் கசக்கி, தூக்கத்தை விரட்டி, குழந்தைகளை எழுப்பி, அழவைத்து, மூட்டை முடிச்சுக்களைத் திரட்டிக் கொண்டு பிளாட்பாரத்தில் காலடி வைத்தபோது—

யம்மாடியோவ்! யார் இந்த ஆசாமி?

பத்து விரல்களிலும் பளபளக்கும் மோதிரங்கள், 'பளிச்'சென்ற பஞ்ச கச்சம், ஆளைத் தூக்கி ஒரேயடியாக அடிக்கும் 'சென்ட்' வாசனை, கையில் சேனைக் கிழங்கை விட சற்றுச் சின்ன சைஸில் 'டிஜிடல் கடிகாரம்!'

''ஸாருக்கு எந்த ஜில்லா?''

மார்புறத் தழுவிக் கொள்ளாத குறையாக வெகுஅருகில் வந்து வெகு வாத்சல்யத்துடன் அந்த 'ராஜகுமார' ஆசாமி கேட்கும்போது சொல்லாமல் இருந்தால் எப்படி? எப்போதும் எல்லாரிடமும் சொல்லுவது போல் ''தென்னர்க்காடு மாவட்டம்'' என்று கூறி வைத்தேன்.

அவரும் அதைக் கொஞ்சம் கூடச் சட்டை பண்ணமல், ''வாருங்கள்! நம் ஆஸ்தானத்துக்குப் போவோம்! அங்கு கட்டில் உண்டு! எலக்ட்ரிக் ஃபான் உண்டு! அட்டாச்ட் பாத்ரூம் உண்டு!'' என்று அடுக்கிக் கொண்டே என் கையிலிருந்த பெட்டியை வாங்கிக் கொண்டார்! (பிடுங்காத குறைதான்!)

நானு கொடுப்பேன்? ஓஹோன்னும்! அவருடைய சாகஸங்களைப் பற்றி முன்னமேயே தெரிந்து வைத்திருக்கிறேனே!

அது சரி, அவர் யார் என்றுதானே கேட்கிறீர்கள்? அவர்தான் புகழ் பெற்ற ''பூரி பண்டா.'' மாட்டிக் கொண்டால், ''கொண்டா, கொண்டா'' என்று நம்மிடம் கடைசிப் பைசா—வரை கறந்து விடுவார்! இவர்களில் ''டா (பெரிய) பண்டா'' என்ற ''சூப்பர் டீலக்ஸ்'' பிடுங்கல் ரகம் வேறு தனியாக இருக்கிறது.

''எங்கு காணினும் சக்தியடா!'' என்பது போல், பூரி க்ஷேத்திரத்தில் எங்கு திரும்பினுலும் பண்டாக்கள்தான்! ராஜா காலத்தில் அவர்கள் அனைவரும் நாட்டின் நிலவரத்தை நேரில் கண்டறிந்து அரசவையில் தகவல் கொடுத்து வந்தவர்களாம்!

அப்பேர்பட்ட பண்டாவின் பிடியிலிருந்து நீமட்டும் எப்படித் தப்பிப்போய் பூரி ஜகந்நாதனைத் தரிசனம் செய்து வந்தாய் என்று தானே கேட்கிறீர்கள்? அது மாபெரும் ரகசியம் — ஜகந்நாத தத்துவத்தைப் போல!

⌘ 'ரத யாத்ரா'வின் போது பலபத்ரா, சுபத்ரா, ஜகந்நாதர் மூவரும் தேரில் பவனி வரும் காட்சி

டூப்

நளினி சாஸ்திரி

''**சா**ர்! இந்தப் பையன் உங்களைப் பார்த்துப் பேசாம போமாட்டேன்னு ரெண்டு நாளா பட்டினியா — பழியா வாசல்லயே கெடக்கான். செத்துருவான் போலிருக்கு. என்ன பண்ணட்டும் சார்.''

''சரி. உள்ளே அனுப்பு'' என்றான் கஜனி.

கஜனி அகில மொழிகளிலும் ஒரு கலக்குக் கலக்கிவிட்ட சூப்பர் ஸ்டார். 1985வரை கஜனி கால்ஷீட் ஓவர். உண்டு, குடித்து, உறங்க நேரமில்லா கஜனி அன்று தன் பிறந்த தினமாதலால் வித்தியாசமாக இருக்கட்டுமே என்றுதான் அந்தப் பையனை உள்ளே அழைத்து வரச் சொன்னான்.

அமாவாசையைத் தேய்த்துக் குளித்த கருப்பில், கலைந்த தலையுடன் நுழைந்த அந்தப் பன்னிரண்டு வயதுப் பையனுக்கு கஜனியைக் கண்டதும் ஜன்ம சாபல்யம் அடைந்த மாதிரி இருந்தது. கிட்டப் போய் கஜனி காலில் விழுந்து சேவித்தான். எழுந்து ஸ்டைலாக சல்யூட் விறைப்பாக அடித்தான். கஜனியிடம் நெருங்கிப் பவ்யமாகக் கன்னத்தைத் தொட்டான். கிள்ளி முத்தம் தந்தான்.

அருவருப்புக் கொள்ளாத கஜனி பையனைத் தட்டிக்கொடுத்து, ''தம்பி பேரு என்ன? தம்பி ஊரு எது? என்ன சமாச்சாரம்?'' என்று எக்ஸ்பிரஸ் வேகத்தில் கேள்விகள் அடுக்க, பையன் புரியாமல் விழித்துப் பின் புரிந்ததும், தன் பிளாஷ்பாக் சொன்னான்.

டொ ய் ங்..... டொய்ங்..... டொய்ங்..... (பிளாஷ் பேக் ஆரம்பம்.)

வீடு. முத்து அந்த உடைந்த கண்ணாடிச்சில்லை ஜன்னலில் வைத்து அரை மணி நேரமாய்த் தலையைக் கலைத்து விட்டான்.

''ஏண்டா! சாமி புண்ணியத்துல அந்த மெக்கானிக் வாரத்துக்குப் பதினைஞ்சி ரூவா தரான். அதுல அஞ்சு ரூவாவ சினிமால கொண்டு போய்த் தொலைக்கிறியே இது நாயமா? அப்படி சினிமா பாக்கலைன்னா என்னடா குடி முழுகிடும்'' — பெற்றவள் அங்கலாய்த்தாள்.

''இத பார் என்ன சொல்லு நம்ப கஜனி கைல வம்பு வச்சுக்காதே. கஜனி படம் தண்ணீர் இன்னிக்கு ரிலீஸ். என்னமா சண்டை போடுவார் தெரியுமா? சண்டைக்கே கொடுக்கிற காசு பத்தாது.''

''பெரிய கஜனி. போடா நீயும் போய் அவன்கூடக் கூத்தாடு போ!''

முத்து ஸ்டைலாகத் தலையை உதறிவிட்டு அம்மாவை ஓரக்கண் பார்வையும் சுளித்த முகமுமாய்ப் பார்த்துக் கொண்டு வெளியேறினான், வேகமாய்.

வொர்க் ஷாப்பில்:

''டேய் முத்து ஒரு தபா கஜனி ஆட்டம் ஆடுரு பார்க்கலாம்!'' சகபாடிகள் அழைப்புக் கிணங்க இடுப்பு முன்னும் பின்னும் விலுக்விலுக்கென்று துடித்துப் போக — கஜனி மாதிரி அந்த லேட்டஸ்ட் டேன்ஸ் கொடுத்தான்.

''அட்டகாசம்வாத்யாரே! கொன்னுட்டே! பேசாம நீயே சினிமால நடிக்கலாம் நைனா.''

இப்படியும் இன்னும் இது மாதிரியும் சுற்றியிருந்தவர்கள் முத்து மனத்தில் போட்ட விதை விஸ்வரூபமெடுத்து ஒரு சுபயோக சுபதினத்தில் அவன் வீட்டைவிட்டுப் பத்து ரூபாய்சில்லறையைப் பெருங்காய டப்பாவில் இருந்து எடுத்துக் கொண்டு பட்டணத்துக்குக் கம்பி நீட்டினான்.

சினிமாவில் நடிக்கவும், கஜனியைப் பார்க்கவும் நடந்தே வந்து விடாமுயற்சியாய் கூர்க்காவிடம் போராடி சத்யாக்கிரகம் இருந்து...

டொய்ங்.... டொய்ங்..... டொய்ங்....

''**மு**த்து உன் கதை ரொம்ப உருக்கமா இருக்கு'' கஜனி கண்களில் நீரைத் தேடினான். பழக்க தோஷத்தால் கிளிசரின் இல்லாமல் நீர் வர மறுத்தது.

''உனக்கு இப்ப என்ன வேணும் கேள்.''

''சார், நானும் உங்களாட்டம் ஆக்ட் தரணும். சண்டை போடணும். பாடணும். கார் ஓட்டணும்.''

முத்துவின் கண்களிலும் வார்த்தைகளிலும் ஒரு வேகத்தைக் கஜனி கண்டான். அவன்



வேக மனம் உடனே ஒரு கணக்குப் போட்டது. செக்ரட்டரியைக் கூப்பிட்டு: ''முத்துவை உடனே 'ஓவரால்' பண்ணி புது டிரஸ் வாங்கிக் கொடு. ரெண்டு நாளைக்கு என் கூட்வே இருக்கப் போறான் பையன். O.K. done.''

இந்தப் பொறுக்கிப் பையனைக் கூடவே வச்சுக்கப் போறாரு? என்னாச்சு இவருக்கு? வழக்கம்போல கஜனியின் செயல்களுக்கு அர்த்தம் புரியாத செக்ரட்டரி கட்டளையை நிறைவேற்ற ஓடினான்.

மணி பத்து. பர்த்டே பார்ட்டி. அலங்கார அறை. பூக்கள் கலர் கலராய் வண்ண விளக்குகள். குளிரிய ஏ. ஸி. அறையின் நட்ட நடு சென்டரில்(தாங்க்யூ இரவிச்சந்திரன்) பெரிய 'பருந்து' மாதிரி கேக். சுற்றிலும் காக்கா மாதிரி கூட்டம். பெரிய பெரிய நடிகைகளும், நடிகர்களும்வந்தார்கள். கண் கொள்ளா முத்து பிரமித்து நின்றான்.

எல்லோரும் பாட கஜனி கேக்கை வெட்டி முத்துவைத் தேடி அவன் வாயில் முதல் கேக் துண்டைச் செருகினான்.

யார் இந்தப் பையன்?

பிரபல நிருபர் கலன் உடனே தன் பத்திரிகைக்குக் கிசுகிசு உற்பத்தி செய்தார். 'கஜனி ரகசியத் திருமணமா? முதல் மனைவி மூலம் 12 வயதுப் பையன். முதல் மனைவி விவாகரத்தா?'

பார்ட்டி முடியாத கையோடு பல போன் கால்கள் கஜனியை அழைத்தன. கதாநாயகி வியர்வையில் மேக்கப் கலைய' வாடிப் போகிறாளாம். எட்டாவது ஃப்ளோரில் நடிகை தும்பிகா பிரபாகரை விவாகரத்து செய்துவிட்டு ஆறுவது ஃப்ளோரில் தான் பெற்ற குழந்தையுடன் அப்பா கஜனி வருகைக்காக லிப்ஸ்டிக் தடவிக் கொண்டு காத்திருந்தாள்.

பார்ட்டியில் பாதியைக் கான்ஸல் செய்த கஜனி, முத்துவுடன் 'சள்ளுபுள்ளு' படத்துக்கான ஷூட்டிங் போனான். கஜனியைக் கண்டதும் காத்திருந்தவர்கள் முகத்தில் பூ மலர்ந்தது. (ராஜேந்திர குமார் கவனிக்க)

சண்டைக் காட்சி. கஜனி வில்லன் முன் போய் சட்டையை உலுக்கினான். வில்லன் ஓங்கி ஒரு கும்மாங் குத்து உண்மையாய்க் கொடுத்தான். இவ்வளவு நேரம் காத்திருந்த கோபம். கஜனி வாயைப் பிளந்து கொண்டு சேரில் சாய்ந்தான்.

பார்த்துக் கொண்டிருந்த முத்துவுக்குக் கோபம் எகிறியது. பாய்ந்து வில்லனைக் கிழித்துப் போடலாமா? ஸ்பானர் இருந்தால் வில்லனின் பொட்டில் பட்டென்று விட்டிருப்பான். எல்லாம்கெட்டுப் போச்சு. கஜனிக்கு என்னாச்சு? கராத்தேலே ரெண்டுவெட்டுத்தந்தா வில்லன்கவுந்துட மாட்டானா? ஏன் இவர் பயந்து ஒக்கார்ந்துட்டார்?



முத்து மெதுவா காதில் ''சார்! திரும்ப அடிக்காம விட்டிருக்கக் கூடாது'' என்றுன் பொய்க் கோபத்தோடு.

அதற்குள் இன்னெரு கஜனி அதே டிரஸ் ஸில் வந்து, வில்லனை உதைத்து, குதித்து, எம்பி, கரணம் போட்டு, மரணம் தப்பி, டேன்ஸ் ஆடி, தூள் கிளப்பினுன். முத்து இரண்டு கஜனியையும் மாறி மாறிப் பார்த் தான். உட்கார்ந்திருந்த கஜனியைக் கிள்ளிப் பார்த்தான்.

''முத்து எனக்குச் சண்டை தெரியாது. உண்மையா எனக்காகச் சண்டை போடறது அவன்தான். அவன் என் டூப்.'' இவ்வளவு தானு? முத்துவுக்கு கஜனி சப்பென்றுனுன்.

''இங்க பாரு சார்! இந்த உலகத்தில நத்திங் இஸ் இம்பாஸிபிள். உங்க மகளை அடைஞ்சே தீருவேன்.''

''இங்க பாரு ஸார்! இந்த உலகத்ல நத்திங் ஈஸ் இம்பாஸிபிள். உங்க மகளை அடைஞ்சே தீருவேன்.''

''இங்க பாரு சார்! இந்த உலகத்ல நத்திங் ஈஸ் இம்பாஸிபிள். உங்க மகளை அடைஞ்சே தீருவேன்.''

''இங்க பாரு சார்! இந்த உலகத்ல நத்திங் ஈஸ் இம்பாஸிபிள். உங்க மகளை அடைஞ்சே தீருவேன்.''

கஜனி வசனம் நாலாவது டேக்கில்தான் ஓ.கே.வானது. முத்துவுக்கு உலக மகா கபாரடித்தது. அடுத்த சீனில் இரட்டை வேட ஜேனி. ஹேர்ஸ்டைல் வேற மாதிரி. மேக்கப் ரூமுக்குள் முத்துவும் போனுன். மேக்கப் மேன் புது டோப்பா கொண்டு வந்து கஜனி தலையிலிருந்ததைக் கழற்றி — மொட்டைத் தலை! — புதியதை மாட்டினுன்.

என்னது கஜனி மொட்டையா? பொய்! எல்லாம் பொய்! மயிர்கூடப் பொய்தானு? இந்த கிராப் ஸ்டைலுக்காகவே கஜனியைத் துதிக்க ஆரம்பித்த முத்து உடைந்துபோனுன்.

''என்ன முத்து பார்க்கறே. கண்ணுல பாக்கறதும் பொய். காதால கேக்கறதும் பொய். தீர விசாரிக்கிறதும் பொய். அது தான் உலகம். இந்த உலகத்தில குனியக் கூடாது. உலகத்து மேல நீ நிக்கணும்.'' கஜனியின் தத்துவம்முத்துவுக்குப் புரியவில்லை!

மாறுவேட கஜனி ஸ்டூடியோவில் இருந்த ஓடாத காரில் அமர்ந்து — ஷாட் 5 டேக் 2 கிளாப் — ஸ்டியரிங் உடையுமளவு திருப்பித் திருப்பினுன் — இப்படியும் அப்படியும். அடிக் கடி பின்னுல் துரத்தாத காரைத் திரும்பிப் பார்த்துக் கொண்டான்.

''என்ன சார், கார் ஓடவேயில்லை?'' டேக் முடிந்து முத்து வினவ,

''எனக்குக் கார் ஓட்டத் தெரியாதப்பா. எல்லாம் நடிப்பு. பிற்பாடு டூப் ஓட்டுவான். எல்லாம் மாயம். கனவு. கனவுத் தொழிற் சாலை (Thanks to சுஜாதா) இது. அவ்வளவு தான். தொட்டால் சுடும். தூர இருந்தால் குளிரச் செய்யும்.''

சே! எல்லாம் டூப்தானு? 'இல்லாதவன்' படத்ல நாலு லாரிக்கு நடுவில கார்ல பாய்ந்து பாய்ந்து தாவுர டக்கர் சீன் எல்லாம் பொய் தானு?

அடுத்த சீனில், பாடல் காட்சிக்கான வாயசைப்பு. கஜனி காமிராவைப் பார்த்துக் கண்ணடித்து வாயை மெல்ல அசைக்க பக்கத் தில் ஸ்பீக்கரில் எஸ். பி. பி.. ''கண்ணடித் துப் பார்த்தா கட்டழகுப் பாப்பா'' என்று அலறிக் கொண்டிருக்க.. சே! கஜனிக்குப் பாடக் கூடத் தெரியாதா?

அன்றிரவு ஏகப்பட்ட உணவு வகையினுல் முத்துவுக்கு வயிறு கெட்டு, தூக்கம் பறி போனது. சிந்தனை மனத்தில் குடைந்தது. அரை மணி நேரக் கனவில் அம்மா வந்தாள். கையில் மோர் சாதம் பிசைந்து ஊட்டினுள். கடிச்சிக்க மாவடு தந்தாள்.

அம்மா!

சாப்பாட்டுக்கு இப்ப என்ன பண்ணுவாள்?

அடுத்த நாள் காலை ''சார் நான் சினிமால சேரல. சினிமா பிடிக்கல. எல்லாம் பொய்யா இருக்கு. ஊர்ல அம்மா கஷ்டப்படும். நான் ஊருக்கே போறேன் சார்.''

கஜனி தன் திட்டம் பலித்ததில் மகிழ்ந் தான். செக்ரட்டரியைக் கூப்பிட்டு முத்து பேரில் பத்தாயிரம் ரூபாய் டெபாஸிட்— அவன்படிப்புக்காகச்செய்ய உத்தரவிட்டான்.

''முத்து ஊர்ல போய் நல்லாப் படிக்க ணும். படிச்சுப்பெரிய என்ஜினியரா வரணும். அம்மாக்கு வீடு கட்டித் தரணும். அம்மா வோட சண்டை போடக் கூடாது. அம்மாவை எப்போதும் காப்பாத்தணும். சந்தோஷமா வெச்சிக்கணும். உட்டுட்டு ஓடிடக்கூடாது. என்ன? போய்ட்டு வா.''

இதைச் சொல்வதற்குள் கஜனியின் மனம் உடைந்து போனது. பதினைந்து வருடம் முன்னுல் இதே மாதிரி தன் அம்மாவை விட்டு நடிக்க ஓடிவந்ததும், அநாதரவாய்த் தன் அம்மா இறந்து போனதும் கஜனியின் மனசில் கீறிவிட்டன.

இப்பக் கோடியாய்ப் பணமிருந்தும் ஆசை யான அம்மா இல்லை. அவளை வாங்க முடிய வில்லை. இதைப் போல அன்றைக்குத் தனக்கு யாரேனும் உதவி செய்திருந்தால் தன் வாழ்க்கை எப்படி மகிழ்ந்திருக்கும் என்று நினைத்த கஜனியின் கண்ணில் நீர் வழிந்தது— கிளிசரின் இல்லாமல்!

''என்னது? காற்று நன்முக அடிக்கிறதே என்று கவலைப்படு கிருயா? இதிலேகவலைப்பட என்ன இருக்கிறது...?''

''காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள ஒன்றுமில்லையே என்று தான் கவலைப்படுகிறேன்...!''

—பெ. கலாசாமி.



"இன்னும் ரெண்டுநாளைக்குத்தான்அரிசி வரும். முன்கூட்டியே சொல்லிட்டேன். ஏன் மொதல்லியே சொல்லலேன்னு எரிஞ்சு விழாதீங்க'' என்றாள் விமலா, முறத்தில் அரிசி கொட்டியபடி.

நாளிதழில் மூழ்கியிருந்த ரகுராமனுக்குச் சற்று எரிச்சல் கிளர்ந்தது. இருந்தும் காலையில் அடக்கிக் கொள்ள வேண்டும் என்ற விவேகத்துடன் ''என்ன விமலா, இன்னைக்குத் தேதி இருபத்தி ஏழு. இன்னும் மூணு நாளு இருக்கே சம்பளத்துக்கு. இப்பப் போயி எப்படி அரிசி வாங்கறது? மாசம் ரெண்டு தரமா சம்பளம் தர்றான்?'' என்று மெல்லிய குரலில் சொன்னான்.

''நானா சம்பாதிக்கிறேன்? நீங்கதானே ஏற்பாடு செய்யணும்? எங்க பெரியம்மாவும் புள்ளைகளும் ஒரு வாரம் இருந்துட்டுப் போனாங்க. அதுல தீந்திடுச்சுன்னு சொல்லுவீங்க.''

''இங்க பார் விமலா. நான் பேசாததைக் கற்பனை பண்ணிக்காதே.''

''சரி, அரிசிக்கு எங்கே போறது?''

''மீனாட்சியவுங்க அம்மா கிட்டச் சொல்லி நாடார் கடைல வேணுங்கிற அரிசி வாங்கிக்க.''

''கடனா?''

''ம்.''

''நான் வாங்க மாட்டேன். எனக்கு என்னவோ போலிருக்கு.''

''விமலா எனக்கும்தான் என்னவோ போலிருக்கு. இருந்தாலும் அரிசி வயிறு சம்பந்தமான விஷயம். சும்மா கேக்கலே. கடனாத்தான் கேக்கறோம்.''

''நீங்க இந்த மாசம் சம்பளத்துல அம்பது ரூபா எடுத்துட்டுத்தான் குடுத்தீங்க. அது இருந்தாலும் இப்ப ஒருத்தர் கிட்டப் போய் நிக்க வேண்டாம்.''

''அந்த அம்பது ரூபாயை நான் ஒண்ணும் வேஸ்ட் பண்ணலேயே? பி. காம் எக்ஸாம் பீஸ் கட்ட வாங்கின கடன்தான். இப்பத்தான் அடைக்க முடிஞ்சுது.''

''இத்தனை கஷ்டப்பட்டு பி. காம் படிச்சு ஆபீஸ்ல ஆயிரமா கொட்டிக் கொடுத்தான்? எழுபத்தி அஞ்சு ரூபா இன்சென்டிவ் இன்க்ரிமெண்ட் குடுத்தான். இந்த வருஷம் எம். காம் படிக்கோணும்னு வேறே சொல்லிக்கிட்டிருக்கீங்க.''

''சொல்லிக்கிட்டிருக்கீங்க என்ன? அப்ளிகேஷன் வாங்கிப் பூர்த்தி பண்ணி வச்சிருக்கேன். பி. காம் டிகிரி சர்டிபிகேட்டுக்கு அட்டஸ்டேஷன் வாங்கினாப் போதும்.''



அட்டஸ்டேஷன்

பிரதிபா ராஜகோபாலன்

''ஆமா, மறந்துட்டேன், நீங்க முந்தி வாங்கின பி.எஸ்ஸி டிகிரிக்கு ஏதாவது இன்கிரிமெண்ட் குடுக்க மாட்டாங்களா?''

ரகுராமன் அவளைச் சட்டென முறைத்துப் பார்த்தான்.

''இதைச் சொன்னா மட்டும் சுருக்குன்னு கோபம் வரது. எவளோ ஒருத்தி பின்னால சுத்திக்கிட்டு, அவளை நம்பி வாழ்க்கையை, நாசமும் பண்ணிட்டு, இப்ப அரிசி இல்லே பருப்பு இல்லேன்னு அல்லாட வேண்டியிருக்கு!''

''விமலா, அதப் பத்திப் பேச வேண்டாம்னு எத்தனை தடவை சொல்லியாச்சு?''

''பேசக் கூடாதுதாங்க. ஆனா என்ற மனசு கேக்கலேயே. அவளாலே, படிப்புப் போச்சு, பெத்தவங்க அன்பு போச்சு, சொத்து போச்சு வாழ்க்கைல நல்ல விஷயங்கள் எல்லாம் போச்சு. இப்ப வெடிய வெடியப் படிச்சு ஒடம்பு கெடுத்துக்க வேண்டியதாப் போச்சேன்னுதான் மனசு வேதனைப்படுது.''

''நான் எல்லாம் உணர்ந்துதான் வெச்சிருக்கேன். உனக்கும், நம்ம குழந்தைகளுக்கும்தான் இப்பிடி உழைக்கிறேன். அவங்க வாழ்க்கையாவது என் மாதிரி ஆகாம சந்தோஷமா சௌகரியமா இருக்கணும். மத்தபடி எனக்கு எந்தவித நஷ்டமும் இல்லே. நீ மனைவியா வந்ததே என் எல்லா வித நஷ்டத்தையும் சரிக்கட்டிடுச்சு விமல்.''

விமலா அவனையே பார்த்தாள்.

ரகு, எம்.எஸ்.ஸி. முதல் வருடம் படித்துக்கொண்டிருக்கையில் ஷைலஜாவின் காதலுக்கு உள்ளானான்.

அவனுடைய கல்லூரியில் நடந்த ஒரு கண்காட்சியில் அவள் தன் தோழிகளுடன் வந்திருந்தாள். அதே நகரில் பெண்கள் கல்லூரியில் பி.எஸ்ஸி. இறுதி ஆண்டு படித்துக் கொண்டிருந்தாள். வந்திருந்த பெண்களிலே நடுநாயகமாய், எல்லார் மனசையும் ஈர்ப்பவளாய் இருந்தாள்.

ரகு, அன்றிரவே மனப் பிறழ்ச்சியுடன் அவளுக்காகவே பிறந்தவன் போல் கற்பனை செய்து கொண்டு புரண்டான். மூன்றாவது நாள், ரொம்ப இயல்பாக, அவளுக்காக வருடக் கணக்காகக் காத்திருப்பவன் போல் அவள் கல்லூரி வாசலில் போய் நின்றான். கொஞ்ச தூரம் நடந்தார்கள். அவனைத் தெரிந்து கொண்டு அவள் பேசினாள். எதிரே தெரிந்த ஹோட்டல் வீனஸின் குடும்ப அறையில் சாப்பிட்டார்கள்.

மறுபடியும் வந்த வழி திரும்பி, ரேஸ் கோர்ஸ் வந்து அப்போது இருந்த தாமஸ் பார்க்கில் உட்கார்ந்து இருட்டும் வரை பேசினார்கள்.

இவர்கள் காதல் மற்ற மாணவர்களுக்குத் தெரிந்தது. ரகுவின் தந்தைக்கும் தெரிந்து விட்டது.

ஹாஸ்டலுக்கு வந்து விசாரித்தார், உண்மையை உறுதி செய்து கொண்டார்.

''உனக்கு இது சரின்னு படுதா?''

''படுதுங்க.''

''அந்தப் புள்ளை ஒரு மாதிரின்னு சொல்றாங்களே.''

''ஒரு மாதிரின்னா?''

''உம்மாதிரி காசு உள்ள பசங்களாப் பார்த்துப் பழகுவாளாம். கறக்கிறவரைக்கும் கறந்துட்டு விட்டுடுவாளாம். இது வரைக்கும் நாலு பசங்களாச்சாம்...''

''யாரு சொன்னா?''

''விசாரிச்சேன். விசாரிச்ச அளவு எல்லாரும்தான் சொன்னாங்க.''

''இத பாருங்க. அந்தப் பொண்ணு ரொம்ப அழகு. படிப்பிலே யுனிவர்ஸிடிலே பர்ஸ்ட்டா வருவா. இந்தப் பசங்க அவ ரூப் நோட்டுக்குக்கூடக் கட்டி வர மாட்டானுக. பொறாமைல சொல்றானுக. நான் அந்தப் பொண்ணைத்தான் கட்டிக்கப் போறேன்.''

''அவ நம்ம சாதிகூட இல்லே....''

''அதப் பத்தி நான் நெனைச்சுக்கூடப் பார்க்கல்லே.''

''உன் முடிவு இதுதானா?''

''ஆமாப்பா.''

''அப்படியா?... இப்ப இருக்கிற சொத்து நான் தலையெடுத்து நானாச் சம்பாதிச்சது. அத என்ன வேணாலும் பண்றதுக்கு எனக்கு பவர் இருக்கு.''

''சொத்து எனக்கில்லேன்னுசொல்றீங்க?''

''ஆமாம்.''

''ரொம்ப சந்தோஷம்.''

அவர் போய்விட்டார்.

போன பத்தாம் நாளே, சொத்தை இரு மகள்களுக்கும், உள்ளூர் காமாட்சியம்மன் கோயிலுக்கும் எழுதி வைத்து விட்டார்.

ரகு, ஷைலஜாவிடம் நடந்ததைச் சொன்னான். மௌனமாகக் கேட்டுக் கொண்டாள்.

''இந்தக் காலத்துல பணம் இல்லேன்னு அவனவன் பஞ்சமா பாதகம் எல்லாம் பண்றான். நீங்க, உங்கப்பாவிடம் கொஞ்சம் அட்ஜஸ்டபிளா பேசி இருக்கணும்.''

''என்ன சொல்றே ஷைல்?''

''பிராக்டிக்கலா வாழ்க்கையைப் பத்தி உங்களுக்கு ஒண்ணும் தெரியலே. அப்பா தன் நெலேல பிடிவாதமா இருக்கிறார்னு தெரிஞ்சதும், 'சரிப்பா, ஏதோ நடந்து போச்சு'ன்னு மன்னிப்புக் கேட்க வேண்டியதுதானே? அவரும் சமாதானமாப்போயிருப்

பாண்டியில் நிறைய ஆட்டோரிக்ஷாக்கள் உள்ளன.

ஷூனல்ப.... பட்டாணி கடை டு கோரி மேடு.... ஒரு நபருக்கு 75 பைசா கட்டணம் என்ற விகிதத்தில்தான் ஓட்டுகிறார்கள் - பஸ் ரூட் போல!

-க.சு. ரங்கநாதன்



பாரு. படிப்பு முடிஞ்சதும் ஒரு நாள், மனசறிஞ்சு பக்குவமா சொல்லிக் கல்யாணத்துக்கு ஒப்புதல் கேட்டிருக்கலாம். நான் அதுவரை ஓடியா போயிடறேன்?''

''என்ன சொல்றே ஷைல்?''

''உங்களை நம்பறதுலே அர்த்தமில்லேன்னு தோணுது. என்னை மறந்துடலாம்.''

''ஷைல்....''

அவள் எழுந்து போய்விட்டாள். அவளைப் பற்றி அப்பா சொன்னது சரிதானே?

அதற்குப் பின் அவன் பகீரதப் பிரயத்தனம் செய்து பார்த்தான். அவளுடன் பேச முடியவில்லை. எத்தனையோ முறை கல்லூரி வாசலுக்குப் போய்க் காத்திருந்தான். லட்சியமே செய்யவில்லை அவள். ஒரு நாள், ஆத்திரப்பட்டு, பஸ் ஸ்டாண்டில் அத்தனை பேர் முன்னிலையிலும் அவள் கையைப் பிடித்து ''என்னைத் தெரியலையா ஷைல்?'' என்று இழுத்து விட்டான். அவள் உடனே, ''ப்ளடி ரோக்! என்னை எதுக்குத் தொட்டே?'' என்று பளாரென்று அறைந்து விட்டாள். சுற்றி இருந்த அத்தனை பேரும் அவனைத் துவைத்து விட்டனர்.

அன்றுதான் மனத்திலிருந்த அவள் காதலைத் தூக்கி எறிந்தான். கல்லூரியில் எல்லோருக்கும் தெரிந்து மிகவும் கேவலமாகப் போய்விட்டது. படிப்பு நின்றது. ஒரு நண்பனின் உதவியினால் இப்போது இருக்கிற வேலை கிடைத்தது. பெற்றோர் அவனைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. அவனும் அந்த நகரிலிருந்து நாக்பூருக்குப் போய் வேலையில் சேர்ந்து விட்டான். அப்புறம் நண்பரின் தங்கையையே திருமணம் செய்து கொண்டான். இந்த ஆறு வருடத்தில் இரண்டு பையன்கள், ஒரு பெண்.

பல ஊர்களுக்கு டிரான்ஸ்பராகி, போன மாதம்தான் இந்த ஊருக்கு வந்தான்.

ஆபீசில் பி.காம், எம். காம் படித்தவர்களுக்கு இன்சென்டிவ் இன்க்ரிமெண்டும், பதவி உயர்வும் கிடைக்க வழி இருந்தது.

அதனால் தபாலில் படித்து பி. காம் பாஸ் பண்ணினான். இப்போது எம். காம் படிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதில் தீவிரமாக இருந்தான்.

பதினொரு மணிக்கு சப் கலெக்டர் ஆபீஸில் இருக்கும் ஒரு நண்பனுக்குப் போன் செய்தான்.

''கெஜட்ட் ஆபீசர் ஒருத்தர்கிட்ட அட்டஸ்டேஷன் வாங்கணும்ப்பா. லஞ்ச் டைமுக்கு வர்றேன். யார் கிட்டயாவது வாங்கிக் குடு.''

''இப்ப வாப்பா. லஞ்ச் டைம்ல யார் இருப்பா?''

''ஓன் அவர் பர்மிஷன் போட்டுட்டு வர்றேன். நாளைக்குத்தான் அப்ளிகேஷனை அனுப்பக் கடைசி நாள்.''

''அதுதான் வான்னு சொல்றேனே?''

அவன் நண்பனின் செக்ஷனுக்குப்போனான்.

''இப்பத்தான் எங்க ஆபீசரு வெளியே கிளம்பினாரு. இல்லேன்னா அவர் கிட்டயே வாங்கி இருக்கலாம். சரி, சப் கலெக்டர்



அவள்: ''எங்கப்பா நம் திருமணத்துக்குச் சம்மதிச்சுட்டார். உங்கப்பா..?''

அவன்: ''ஹூம் அவரும் தான் சம்மதிச்சுத் தொலைச்சுட்டார்!''

உ. ராஜாஜி

இருக்காங்க. வாங்கித் தர்றேன்'' என்றவன், அவனுடைய சர்ட்டிபிகேட்டைச் சரிபார்த்து இனிஷியல் பண்ணி உள்ளே அழைத்துக் கொண்டு போனான்.

மாடியில் சப் கலெக்டரின் அறைக்கு முன்னால் நின்றிருந்த அட்டெண்டரைக் கூப்பிட்டான்.

''ஏம்ப்பா சன்னாசி! அம்மா இருக்காங்களா?''

''இருக்காங்க சார்.''

''அட்டஸ்டேஷன் ஒண்ணு வாங்கணும்.''

''என்னப்பா இதுக்கெல்லாம் போய், சப்கலெக்டர் கிட்ட வாங்கிட்டு? ஒரு பி.டி.ஓ. கிடைச்சாக்கூடப் போதும்'' என்று இடைமறித்தான் ரகு.

''அம்மா ரொம்ப நல்ல மனசு சார். தப்பா நெனைக்க மாட்டாங்க. குடுங்க.'' என்று சர்டிபிகேட்டை வாங்கிக்கொண்டு போனார் சன்னாசி.

''ஏம்பா, சப் கலெக்டர் லேடியா?''

''ம்.''

''பேரு?''

''ஷைலஜா. இன்னும் கல்யாணம் ஆகலே. இதோ பார் இந்தப் போஸ்டர்லே அவங்க போட்டோ இருக்கு'' என்றவன், எதிர்ச் சுவரிலிருந்த போஸ்டரைக் காண்பித்தான்.

அனாதைப் பெண்களுக்குத் தையல் இயந்திரம் வழங்கும் விழா சம்பந்தமாக அந்தப் போஸ்டரில் சப் கலெக்டர் ஷைலஜா சிரித்துக்கொண்டிருந்தாள்.

ரகு ஒரு விநாடி உறைந்து விட்டான்.

'அந்த' ஷைலஜாதான் இந்த ஷைலஜா.

தன் தலையெழுத்தையே மாற்றியவளின் கையெழுத்துக்காகத்தான் நிற்கிறோம் என்பதை எண்ணியதும் ரத்தம் தன்னை விட்டு வழிந்து உடல் வெளுத்து நிற்பதாய் உணர்ந்து திகைத்தான்.

உலகப் புகழ் பெற்ற
கோனி கேஸட் டேப்களை வாங்க
நான்கு முக்கிய காரணங்கள்



ஹிஸ்ஸ்

இந்த வார்த்தையை
வெகு விரைவில்
மறந்து விடுவீர்கள்.
ஏனெனில் 'இம்மாதிரி
யான சீறும் சப்தத்தை
எங்கள் டேப்பில் கேட்க முடியாது.
தெளிவான சப்தத்தை கேட்பதற்காக
எங்கள் டேப்கள் வழுவழுப்பாகவும் ஒரே சீராகவும்
பூசப்பட்டது. மெல்லிய சப்தத்தையும் உச்சஸ்தாயியையும்
துல்லியமாக கேட்க முடியும்.

கட்



ஒரு டேப்பின் கடைசி கட்டம்
தான் இது. இருப்பினும்
இதைப்பற்றி ஆரம்பத்
திலேயே கூறுவது
முக்கியமாக
கருதுகிறோம்.
கோனிகேஸட்
டேப்கள்
நீடித்து உழைப்
பவை. ஏனெனில் சக்திக்கும்
நீள் சக்திக்கும் எங்கள் டேப்
பல்வேறு சோதனைகளுக்
குட்பட்டு வருகிறது. நீங்கள் கேட்பது முதல் தடவையோ அல்லது
ஐநூருவது தடவையோ, சப்தம் ஒன்ருகத்தானிருக்கும். துல்லியமாக,
புத்தம் புதியதாக.

டார். அவனது கண்களில் கண்ணீர் மல்கிற்று. எவ்வளவு தூரம் இடைவெளி இருந்தாலும் கூட அந்த உணர்ச்சியை அவர் விட்டுவிடவில்லை. அந்த அன்பை அவர் மறந்துவிடவில்லை. அவனுடைய பிறந்த நாள் என்றால் தான்தானே வாழ்த்துச் சொல்வோம்; ஏன் இந்த ஆண்டு அமைதியாக இருக்கிறது என்று எண்ணியே அவனுக்கு டெலிபோன் செய்தார்.

''இல்லை ஐயா, நீங்கள் இல்லாமல் அந்த விழாவை நான் எப்படி நடத்துவது? அதனாலே நான் நடத்தவில்லை'' என்று அவன் கூறினான்.

''சே! சே! நான் வருகிறேன். நீ நடத்து'' என்று அவர் சொன்னார். உடனே அவன், வழக்கமாக அந்த விழாவை நடத்துகின்ற திரு டி. பார்த்தசாரதி செட்டியாரையும், மற்றவர்களையும் சேர்த்துக் கொண்டு அந்த விழாவைத் தொடங்கினான்.

அந்த விழாவிலே தலைவர் காமராஜ் அவர்களும், ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்களும் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களும் மற்றவர்களும் கலந்து கொண்டார்கள்.

மீண்டும் தலைவர் காமராஜர் அவர்களோடு அவனுக்கு நெருக்கமான உறவு ஏற்பட்டது. ''என்றைக்கிருந்தாலும் ஸ்தாபன காங்கிரஸ் எவ்வளவுதான் தோற்றாலும் காமராஜரை விட்டு விட்டு ஒரு அரசியலை இந்தியா நடத்த முடியாது'' என்று அவன் மேடையிலே கூறினான், தலைவர் காமராஜரைப் பற்றிய அந்த உணர்வு அவனுக்கு எப்போதும் உண்டு. ''காமராஜ் எடுத்த முடிவுகள் தவறாக இருக்கலாம், ஆனால் காமராஜ் என்கிற உத்தமமான உன்னதத் தலைவரை விட்டு விட்டு இந்திய அரசியல் இயங்க முடியாது'' என்பதிலே அவனுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது.

அந்தப் பேச்சைக் கேட்டு காமராஜருக்குக் கூட ஒரு திருப்தி இருந்தது.

ஆனால், அவனைப் பற்றி இரண்டு வித அபிப்பிராயங்கள் பரவலாயின.

அவன் காங்கிரஸ் என்ற பேரிலே எங்கே மேடை போட்டாலும் ஏறிவிடுகிறான் என்று பலபேர் கருதினார்கள். உண்மையும் அது தான். காங்கிரஸ் என்று கூறிக் கொண்டு யார் கொடியைப் போட்டாலும், அந்தக் கொடியின் நிழலிலே போய் நிற்க அவன் தயங்கியதே கிடையாது. காங்கிரஸ் ஒன்றாகவே இருக்க வேண்டும்; அது ஒன்றே நாட்டை ஆளவேண்டும் என்பதிலே, அன்று முதல் இன்றுவரையிலே அவனுக்கு ஒரே அபிப்பிராயம்தான். இந்திரா காங்கிரஸாயினும், ஸ்தாபன காங்கிரஸாயினும், எது ஜெயிப்பதாயினும் அவன் அதிலே ஒத்துழைக்கத் தயார்.

காங்கிரஸ்காரனை விட ஒருவன் உன்னதமாக இருந்தால் அவனால் தாங்கமுடிவதில்லை. காங்கிரஸை விட ஒரு கட்சி உயரத்திலிருந்தால் அதை அவனால் பொறுக்க முடிவதில்லை. காங்கிரஸின் மீது அவனுக்கு ஏற்பட்ட பற்றுதல் வெறியாகவே மாறியிருந்தது. அந்த வெறித்தனத்தின் விளைவுதான் இந்திரா காங்கிரஸ் மேடையிலேயும் அவனைத் தோன்ற வைத்தது, ஸ்தாபனக் காங்கிரஸ் மேடையிலேயும் அவனைத் தோன்ற வைத்தது.

தலைவர் காமராஜர் அவர்களுடைய அந்த ஆண்டு பிறந்த தின விழாவை பிரம்மாண்டமாகக் கொண்டாட வேண்டும் என்று அவன் முடிவு கட்டினான். ஆகவே மற்றவர்களைச் சேர்த்துக் கொண்டு அதைக் கொண்டாடினான். ஒரு இசைத்தட்டு கொடுக்க வேண்டுமென்று காங்கிரஸ்காரர்கள் விரும்பினார்கள். நல்ல இசைத்தட்டு ஒன்றும் பதிவுசெய்து வெளியிடப்பட்டது. (வளரும்)


அருள்வாக்கு

பணத்தை விட்டுக் குணத்தைக் கொள்க!

'நாகரிக வாழ்க்கை' என்கிற பெயரில் ஏதோ ஒன்றுக்கு ஆசைப்பட்டுக் கொண்டு இப்போது பல நல்ல வழிகளை விட்டு விட்டோமே என்பதை நினைத்தால் தான் பரிதாபமாக இருக்கிறது. நாகரிக மார்க்கத்தில் போய்க் கொண்டிருந்த மேல் நாட்டில் பலர் வாழ்க்கையின் நிறைவு இதில் இல்லவே இல்லை என்று சலிப்படைந்து, நம்முடைய வேதாந்தம், பக்திமுறை இவற்றுக்குத் திரும்ப ஆரம்பித்திருக்கிறார்கள். நாமோ அநாதிகாலமாக நமக்கு வந்துள்ள அற்புதமான பிதிர்ராஜிதத்தை அலட்சியம் செய்து, மேல் நாட்டுக்காரர்கள் வேண்டாம் என்று கழித்துக் கட்டியதை எடுத்துக்கொள்கிறோம்.

இத்தனை கோளாறுகளுக்கும் மூலம் பணமே பெரிதாகி விட்டதுதான். இனியாவது பணத்தில் பற்றுதலை விடவேண்டும். சத்குணங்களைச் சம்பாதிக்கப் பாடுபடவேண்டும். அப்போதுதான் ஜன்மா எடுத்த பலனை நாம் அடைந்து லோகத்துக்கும் உபகாரம் செய்தவர் ஆவோம்.

—ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்



விழுதுகள் வீணாகிப் போனால்..

கமலா நடராசன்

காலையில் எழுந்தபோது சந்தானத்துக்கு உடல்நிலை சரியில்லாதது போல் தெரிந்தது. இன்று கடைக்குச் சென்று வர முடியுமா எனக் கவலை விரித்தது.

ஒன்பது மணிக்கெல்லாம் அங்கு இருக்க வேண்டும். இல்லாவிட்டால் முதலாளிக்கு ஏக கோபம் வந்துவிடும். முன்பு இரண்டொரு முறை கால தாமதமாகச் சென்றபோது, ஜாடையாகப் பேசினார். பிறகு நேரிடையாகவே கண்டித்தார். அன்றைக்கு இருந்த மனநிலையில் சந்தானம் அவரிடம் ஏதோ எதிர் வார்த்தையாடப் போய் வீட்டுக்கு வரும்படி ஆகிவிட்டது.

நான்கே நாட்கள்தான்.

பட்டினி அரக்கன் அந்த வீட்டில் புகுந்து படுத்தி வைத்த பாட்டில், மரியாதை ரோசம் போன்ற மதிப்புக்குரிய நண்பர்கள் எல்லாம் அவரிடம் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிப் போக, இவர் முதலாளியின் கால்களில் மீண்டும் போய் விழுந்தார்.

அதிலிருந்து அதிக ஜாக்கிரதை.

இப்போது—

எழுந்தவர் வெளியே வந்தார். அடுக்களையை எட்டிப் பார்த்தார். சரஸ்வதி ஈற விறகை ஊதி ஊதி எரித்துக் கொண்டிருந்தாள்.

ரேழியைக் கடந்து கொல்லைப்புறம் வந்த போது—

சாரங்கன் — மூத்த மகன் — கிணற்றடியில் ஊதிக் கொண்டிருந்தான் சிகரெட்டை!

மறுபுறமாகத் திரும்பியவர் கனைத்தார்.

மகன் சிகரெட்டை மறைத்து அணைத்தான்.

தலைக்கு மேல் வளர்ந்து விட்டவன், அந்த அளவுக்காவது தன்னிடம் மரியாதை வைத்திருக்கிறானே.

''அடுப்புக்கு விறகு இல்லையாமே, அம்மா சொன்னா'' — எங்கோ பார்த்தபடி அவன் சொல்ல இவர் பெருமூச்செறிந்தார்.

விறகில்லை என்று சொன்ன மகன் வீட்டுக்குள் போய்விட்டான், தன் பொறுப்புத் தீர்ந்து போனது என்ற கருத்தில்.

தினமும் காலை ஐந்தரை மணிக்கெல்லாம் எழுந்து விடுபவர், இன்று ஏழு மணிக்குத்தான் எழுந்திருக்கிறார். என்ன செய்கிறது என்று கேட்கக்கூட சரஸ்வதிக்குப் பயம். அவரும் எது செய்தாலும் யாரிடமும் சொல்வதில்லை.

சொல்லி ஆகப்போவது என்ன?


அந்த வீட்டுப் பிரச்னைகளின் ஆரம்பமோ முடிவோ அவரிடம்தான் என்று ஆகிவிட்ட பிறகு யாரிடத்தில் எதைச் சொல்வது?

சரஸ்வதி பற்பொடியை கொடுத்து விட்டுத் தண்ணீ இறைத்து வைத்தாள். செம் எடுத்துக் கொடுத்தாள்.

கிணற்றங்கரை ஓரமிருந்த குப்பை மேட்டில் கோழி ஒன்று தன் குஞ் களைக் கொத்தி விரட்டிக் கொண் ருந்தது.

பக்கத்து வீட்டுக் கோழி.

போன மாதமெல்லாம் அது த குஞ்சுகளைக் கூட வைத்துக் கொண் மேய்ந்தது. குப்பைக் கூளங்களை கிளறிவிட்டு, குஞ்சுகள் மேய வ செய்தது. ஆர்வத்தோடு அவை புழுக்களையும், தானியங்களையும் கொத்தி தின்னுவதை ரசித்தது.



ஒரு குறிப்பிட்ட காலம்தான்..

இப்போது அந்தக் குஞ்சுகள் வளர்ந்து விட்டன. ஆகாரத்துக்காக அதிக அளவு தானியங்களைத் தின்னத் தொடங்கி விட்டன. தங்களுக்கான உணவைத் தாங்களே தேடிக் கொள்ளும் பக்குவத்துக்கும் வந்துவிட்டன. இன்னமும் அவற்றை அதுவே சேர்த்துக் கொண்டு மேய்வதானல் பிறகு இதன் கதி?

கொத்தி விரட்டுகிறது.

சரஸ்வதியும் சந்தானமும் அனுதாபப்பட்டார்கள்.

கோழியிடமா குஞ்சுகளிடமா? அவர்களுக்கே புரியவில்லை.

பல் துலக்கிவிட்டு அவர் உள்ளே நுழைந்த போது அடுக்களையில் விறகு வாங்கும் படலம் தொடங்கி இருந்தது.

''நாங்க போனுத்தான் எடையிலே ஏமாத்திடறுனே. எப்பவும் போல அப்பாவையே வாங்கிட்டு வரச் சொல்லு.''

''நான் போவேன், போன தடவையே முப்பத்தஞ்சு ரூபாய் பாக்கின்னுன். இப்போ எந்த மூஞ்சியோட அவன் கிட்டப் போய் நிக்கறது?''

''விறகுக் கடை மட்டுமா? நேத்து நான் வந்தப்போ மளிகைக் கடைக்காரன் வழியில் நிறுத்திப் பணம் கேட்கிறுன். சே, வெளியே கிளம்ப வெட்கமா இருக்கு.''

வலிக்கிறது. நெஞ்சிலோ மனத்திலோ ஏதோ ஓர் இடத்தில்!

கும்பகோணம் டவுன் பஸ் ஸ்டாண்டில் கூட்டம் நிரம்பி வழிந்தது.

அவர் தெருவில்கடைசி வீட்டில் இருக்கும் கிருஷ்ணன். எப்போதும் சுறுசுறுப்பான முகம் கொண்ட இருபது வயது இளைஞன்.

பஸ் ஸ்டாண்டில் ஒரு சின்னப் பழக்கடை.

இரண்டு வருடங்களுக்கு முன் அவன் அப்பா சிவகுருநாதன் பக்கவாதத்தில் விழுந்துவிட்டார். வயதுக்கு



வந்ததும் நராதருமாக மூன்று பெண் குழந்தைகள். மொத்தக் குடும்பமும் இன்று இவன் தலையில். சுமக்கிறுன்!

வாழ்க்கையை ஒரு சவாலாக ஏற்றுக்கொண்டு வைராக்கிய உணர்வோடு மிக அநாயாசமாகச் சமாளிக்கிறுன். போன மாதம் ஒரு தங்கையின் கல்யாணத்தையும் முடித்து விட்டான்.

பஸ் வந்து விட்டது.ஏகக் கூட்டம்.

கிருஷ்ணன் உடனடியாக ஓடி ஏறினுன். இடம் பிடித்து உட்கார்ந்து கொண்டான்.

''வாங்க மாமா.''

அவன் அழைத்தான். அவர் மெள்ள ஏறி வந்த பிறகு அந்த இடத்தை அவருக்குக் கொடுத்து உட்கார வைத்துவிட்டு இறங்கிப் போனான். அந்த யாரோ பெற்ற பிள்ளையின் அன்பு அவரை நெகிழச் செய்தது.

காந்தி பார்க் அருகில் பஸ் நின்றது.

உட்கார்ந்து வந்தது கூடக் களைப்பாகத் தெரிந்தது. கம்பியைப் பிடித்துக்கொண்டு இறங்கியவர் தடுமாறினார்.

''பெரியவரே பார்த்து....''

அவரை விட வயதானவர் யாரோ அவருக்குக் கை கொடுத்து உதவினார். சந்தானம் நன்றி சொல்லிவிட்டு மெள்ள நடந்தார்.

அந்தப் பெரிய ஓட்டலின் வாசல் ஓரம் அந்தச் சிறுவன்.

செருப்புத் தைப்பவன்.

சில சமயங்களில் அவனோடு அவனுடைய வயதான தகப்பனும் இருப்பான். பல சமயங்களில் இவன் மட்டுமே. ஒரு முறை பத்துக் காசு பேரத்தில் தம்முடைய வார் அறுந்த செருப்பை இவனிடம் தைத்துக்கொள்ள மறுத்து வேறு இடத்தில் இவன் கேட்ட தொகைக்கும் பதினைந்துகாசு அதிகம் கொடுத்துத் தைத்துக் கொண்டு போனவர் சந்தானம்.

திடீரென்று அவர் கண் முன் அந்த ரஸ்தாவும் போக்குவரத்துக்களும் சுழலத் தொடங்க—

சட்டென்று ஒரு ஜாக்கிரதை உணர்வில் அவர் அவன் ஓரமாகச்சென்று உட்கார்ந்து...

கண் விழித்தபோது—

அவன் சோடா ஒன்றை உடைத்து அவர் முகத்தில் தெளித்துவிட்டு வாயில் கொஞ்சமாகப் புகட்டிக் கொண்டிருந்தான்.

''என்னங்க செய்யுது?''

''ஒண்ணுமில்லே. கொஞ்சம் மயக்கம்.''

எழுந்து உட்கார்ந்தார்.

''எங்கே போகணும்?''

கொஞ்சம் யோசித்தார். 'வீட்டுக்கே போய்விட வேண்டியதுதான்'.

விவரம் சொன்னார். பையன் சைக்கிள் ரிக்ஷா ஒன்றைப் பேசி விட்டான்.

சந்தானம் பையைத் துழாவிக் கிடைத்த ஐம்பது காசை அவனிடம் கொடுத்தார். சோடாவுக்காக.

அவன்: ''விளையாட்டா லேடி டைப்பிஸ்ட்டிடம் போய் ஐ லவ் யூ சொன்னேன்!''

இவன்: ''என்ன ஆச்சு...?''

அவன்: ''வினையா முடிஞ்சிடுச்சு...! எனக்கு ரொம்ப சந்தோஷம்னுட்டா அவ!''

- உ. ராஜாஜி



''வேண்டாங்க. இதுக்கெல்லாம் யாராவது காசு வாங்குவாங்களா? எங்க அப்பாவுக்கு ஒண்ணுன்னு இதே மாதிரி யாராவது உதவ மாட்டாங்க?''

கண்களில் கண்ணீர் பனிக்க சந்தானம் ரிக்ஷாவில் அமர்ந்தார்.

சரஸ்வதி பதைத்துப் போனாள்.

டாக்டரிடம் கூட்டிப் போகப் பையன்களைத் தேடினாள். முடிவில் அதே ரிக்ஷாவில் வைத்துத் தானே அழைத்துப் போனாள்.

இரத்தக் கொதிப்பு. இதய பலவீனம்!

டாக்டர் ஊசி போட்டார். நிறைய மருந்து மாத்திரைகள் எழுதிக் கொடுத்தார். நீண்ட நாட்கள் ஓய்வு தேவை என்றும் சொல்லி அனுப்பினார்.

சந்தானம் படுக்கையில் விழப்போக—

சரஸ்வதி படாத பாடு பட்டுக் கொண்டிருந்தாள்.

அன்று பெரியவன் செய்தி கொண்டு வந்தான். 'அப்பாவின் இடத்தில் ஜவுளிக் கடையில் வேறு ஆள் போட்டு விட்டார்களாம்.'

''இனிமே என்னம்மா செய்யறது?''

அடுத்தவனும் சின்னவனும் அதிகக் கவலைப்பட்டார்கள்.

சரஸ்வதிக்கு ஒரே பிரார்த்தனை சந்தானம் எழுந்து உட்கார வேண்டுமே என்று.

அந்தப் பிரார்த்தனைக்கும் அவள் பட்ட பாட்டுக்கும் பலனோ என்னவோ அவர் எழுந்து உட்கார்ந்து விட்டார்.

ஒருநாள் சாரங்கன் சந்தோஷமாக வீட்டுக்குள் நுழைந்தான்.

''அம்மா! வேலை கிடைச்சுப் போச்சு! நெல் மண்டி ஒன்றில் வரவு செலவு மேற்பார்வை. வேலை கொஞ்சம் அதிகம் தான். என்றாலும் மாதம் இருநூற்றைம்பது சம்பளம்.''

சரஸ்வதிக்குச் சந்தோஷம். ''எப்படியோ உனக்கு ஒரு வேலை கிடைத்த நேரம் மத்தவங்களுக்கும் கிடைக்கட்டும். இனிமேலாவது இந்தக் குடும்பம் கஷ்டம் இல்லாமல் இருக்கட்டும்.''

சாரங்கன் திடுக்கிட்டான். ''என்னம்மா சொல்றே, வேலை எனக்கா? சரியாப் போச்சு போ. இருந்திருந்தும்கணக்கெழுதும்வேலைக்கா என்னைப் போகச் சொல்றே? அப்பாவுக்காகத்தான். அந்த வேலையை ரொம்பக் கெஞ்சிக் கூத்தாடிப் பேசி முடிச்சிருக்கேன். அவர் வேலை இல்லாமல் உட்கார்ந்த பிறகு இந்தக் குடும்பம் என்ன கதிஆயிட்டுது பாரேன்!''

சரஸ்வதி அதிர்ந்து போனாள்.

சந்தானம் விரக்தியோடு சிரித்தார்.

மறுநாள்—

இதோ சந்தானம் வேலைக்குப் புறப்படுகிறார். எத்தனையோ விழுதுகள் தாங்கி நிற்கும் மரமும் ஒரு நாள் விழப் போவது நிச்சயம். விழுதுகள் வீணாகிவிட்ட மரம் கொஞ்சம் சீக்கிரம் விழுந்துவிடப் போகிறது — வித்தியாசம் அதுதானே?

வேதாந்தம் அவருக்குக் கை கொடுத்தது.

இப்பொழுதெல்லாம் நம்பிக்கைகளின் தேய்பிறைக் காலம். கடவுள் விஷயத்தில் மட்டுமல்ல. எல்லா விஷயங்களிலும்தான். வேலுமணியும், ராமமூர்த்தியும் சீரியஸாக ஜெபித்துக் கொண்டிருக்க ப்ரேம் வெறுமனே வெறித்திருந்தான்.

கும்பலாய் வந்த சில தாவணிகள் 'களுக்' பிராண்ட் சிரிப்பு அரட்டைகளை வாசலிலேயே விட்டு விட்டு... சிரத்தையாய் 'வேண்டுதல்கள். காலேஜ் படிக்கையில் 'சைட்' அடித்த ராதாவுக்காக பக்தியாய் வேண்டியதிலிருந்து பயமுறுத்தும் பரீட்சை வரை விண்ணப்பித்து... வேண்டி....

ஆனால் இப்பொழுது?

'வேலை கிடைக்க அருள்புரி அந்தோணியாரே' என்று நாப்பதாவது தடவையாகவா?

கோவிலைவிட்டு வெளி வந்து – மேடு ஏறி, நிதானமாய்ச் சுற்றிக்கொண்டு போய்... காலேஜ். இன்றும் பளீரிட்ட வெய்யிலில் அதே கம்பீரம். மனம் சிலிர்த்து அடங்கிற்று.

நான்கு வருஷங்கள் இளவரசனாய் நிஜ வெளி உலகத்தைக் கசப்புக்களை மறந்திருந்த இடம். அந்த வசந்தகால நினை-

டல்கள்! ஒரு காலத்தில் இதே டிபார்ட்மெண்ட் ஆட்களை எப்படியெல்லாம் கிண்டல் செய்து.... அதற்கெல்லாம் இதுதான் தண்டனையோ...? ப்ரேமுக்கு ஆத்திரம் பொங்கியது.

யாருமில்லாத கிளாஸுக்குள் போய், சாக்பீஸ் எடுத்து போர்டில் ஆத்திரமாய் எழுதி, அவசரமாய் வெளியே வந்தான். மனத்தில் குரோத திருப்தி. ராமமூர்த்தி கேட்க, சொன்னான். அவர்கள் திருப்தியாய்ப் புன்னகைத்தார்கள்.

நடக்க... நடக்க, ஏகப்பட்ட ப்ளாஷ் பேக்குகளின் இனிமையான தாக்குதல்கள். பயத்தைப் பறக்க விட்டு மாணவிகள் அரட்டை, கிண்டலுடன் மாணவர்கள் புகைமண்டலச் சிரிப்புடன் குதூகலமாய்... அனைத்தையுமே ப்ரேம் அண்ட் கோ பொறுமையாய் வெறித்தார்கள்.

காலேஜை விட்டு இறங்குகையில் மறுபடி கண்ணீர்த் திரை. இனிமையான சொர்க்கம் இன்னும் நிஜமாய், நிதர்சனமாய் இங்கிருக்க... தாங்கள் மட்டும் காலத்தின் வெறித்தனமான கட்டாயத்தால் வெளித் தள்ளப்பட்டதைப் போல ஏக்க உணர்வுகள் மனத்தில் தகித்தன.

''என் பிரேம் நாலு வருஷமாச்சே பி.ஏ. முடிச்சு. நமக்கெல்லாம் வேலையே கிடைக்-



என்று மாறும் இந்த சோகம்?

வுகள் எழ... மனத்தில் பாரமாய் ஏதோ அழுந்திற்று. சற்று அழுதால் தேவலாம் போல உணர்வு. கண்ணீர்த் திரையினூடே கட்டிடங்கள்.

அந்தச் சொர்க்கத்துக்குப் பிறகு இதோ நரகத்தின் பரிமாணங்களை உணர வைக்கும் பொழுதுகள் தொடர்கதையாகிக் கொண்டிருக்கின்றன. சகல சர்வ இடங்களிலும் அலட்சிய அசுரன் ஆர்வமாய் அணைக்கும் பொழுதுகள்.

சிரிப்பும், கும்மாளமுமான இப்போதைய மாணவர்கள் ப்ரேம் அண்ட் கோவை அலட்சியமாய்ப் பார்த்தார்கள்.

''இங்கிலீஷ் டிபார்ட்மெண்ட்தான் வசதி. அங்கே போவோம்.'' என்றான் வேலுமணி.

அட்டஸ்டேஷன் முடிந்தாயிற்று தான். ஆனால் எத்தனை சலிப்பு வார்த்தைகள்! அலட்-

காமப் போயிடுமோ?'' என்றான் வேலுமணி பயமாக.

அந்தக் கேள்வியின் பின் தொடர்ந்த பல கசக்கும் நிஜங்கள் வீர்யமாய் அவர்களைத் தாக்க... மௌனித்தார்கள்.

'இளைஞர்களே கவனியுங்கள்.

'யுனிவர்சிட்டி என்கிற எந்திரம் பட்டதாரிகளை உற்பத்தி பண்ணிக் கொண்டிருக்க இவர்களைப் பயன்படுத்திக் கொள்ளாமல் போகும் நிலைக்குக் காரணம் என்ன? வேலை இல்லாத் திண்டாட்டம் என்கிறதான பிரச்னை உருவானதல்ல. உருவாக்கப்பட்டது. சிலரின் சுயநலத்திற்காய்.

'சிந்தியுங்கள். ஒன்றுபடுங்கள். கண்டிப்பாக நீங்கள் ஒன்றுசேர்ந்து செயல்பட்டாக வேண்டும் இதற்கு!.

நேற்று போன கூட்டத்தின் நாற்பது வயது தலைவர் சோடா குடித்து, முஷ்டி மடக்கி ஆவேசமானர் மீண்டும் பிரேமின் மனத்துள்!.

மனம் கசந்து போயிற்று.

'எதைச் செய்வது? எதையுமே செய்ய முடியாத இயலாமையில் இருக்கையில் என்ன செய்வது?' சலித்துப் போய், பின் ஜெயமாலினி வரை ஏதோதோ பேசிப் பிரிந்தார்கள்.

ரயில்வே ஸ்டேஷன்.

பிரேம் தன் மாமூல் ஸிட்டில் சாய்ந்தபடி வெறித்திருந்தான்.

'முழுசாய் நாலு வருஷங்கள். பி.ஏ. முடித்து எம்ப்ளாய்மெண்டில் பதிவு பண்ணி. பி. ஏ. படிப்பு இத்தனை மதிப்பிழந்து விட்டதா? நான் காலேஜ் படி ஏறிய பின் மீசை முளைத்தவன்களும், தாவணி போட்டவள்களும், இன்று எனக்குச் சரிசமமாய் பி. ஏ. முடித்து 'வாண்டட்' காலத்தைப் பார்த்துச் சம போட்டிக்கு வந்து... ச்சே!

விசித்திரச் சிரிப்புடன் கம்பார்ட்மெண்டில் ஏறினன்.

"சார் ரிஜிஸ்டர் பண்ணி நாலு வருஷமாச்சு. ஒரு இண்டர்வியூ கூட வரலே· ஏதாவது பண்ணணும் ஸார் நீங்க."

சொட்டைத் தலை நிமிர்ந்து எரிச்சலாய் வார்த்தைகளைக் கொட்டியது.

"அதுக்கு நாங்க என்னப்பா பண்றது? ஆமா, எஸ். டி. இல்ல எஸ். ஸி. இப்படி உண்டா?"

"இல்லே சார். எப். சி.தான். பேருக்கு ஃபார்வர்ட் கிளாஸ். லைஃப் மிடில் கிளாஸ். இப்படியே இருந்துச்சுன்னு இனி லோ கிளாஸ் ஆயிடுவோம்னு பயமா இருக்கு."

"நல்லாப் பேசறியே. கதை எழுதிப் போடறது. இப்பத்தான் ஆயிரத்தெட்டுப் பத்திரிகை வருதே" – கிண்டலுடன் களக், களக் சிரிப்பு.

எழுந்த எரிச்சலைச் சிரமமாய் அடக்கினன்.

"சார் எப்படியா....வது...."

"அதான் முடியாதுன்னுட்டனே. தமிழ்ல தான சொன்னேன்."

"அப்ப சுந்தரத்துக்கு இண்டர்வியூ தந்தது எப்படி? லஞ்சமா?"

அவர் முகம் வெளிற: "கெட் அவுட்."

சட்டென்று பாய்ந்துகழுத்தைப்பற்ற அவர் அலற,இரண்டு மூன்றுபேர் உள்ளே வந்தனர்.



கார்த்திகா ராஜ்குமார்

''எந்த மனுஷனாவது தலையிட்டீங்கன்னா இவன் தீர்ந்தான். ஏண்டா லஞ்சம் வாங்கிப் போன வருஷம் பாஸ் பண்ணினவனுக்குக் குடுத் திருக்கே. எங்க மாதிரி ஆளுங்க கிட்ட 'லா' பேசிறீங்களாடா...''

உலுக்கினான் பிரேம்.

''ஏய்... என்னை விட்டுடு... ப்ளீஸ்.'' என்று தீனமான குரலில் அவன் கெஞ்ச... பிரேம் சிரித்தான். வாய் விட்டுச் சிரித்தான். திடுமென பளீரென்று அடி விழ...

''ஏய் என்ன ஆச்சு? எதுக்கு என்னைப் பிடிச்சு இப்படிக் குலுக்கறே'' என்று ஒருத்தன் வீறிட...

கற்பனைகளிலிருந்து விடுபட்டு... சட்டென நிஜத்துக்கு வந்தான்.

''ஸாரி...ஸாரி... ஏதோ ஞாபகம்.''

லவ்டேல். இறங்கினான் பிரேம்.

ரயிலுள் நடந்தது.... போன வாரம் எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சில் நடந்த கசப்பின் பிரதிபலிப்போ? மனத்தில் இப்படி எதிர்பாராமல் வெளிப்பட்டு?... ஒரு வேளை நிலைமைகள் இப்படியே தொடர்ந்தால் இன்றைய கற்பனையின் நிகழ்ச்சி நிஜமாகலாம். கற்பனையோ கனவோ ஆனால் மனத்துக்கு வெகு ஆறுதலாக உணர்ந்தான் பிரேம்.

வீடு. வழக்கமான இடத்தில் சாய்ந்து சோர்வாய், சோகமாய் ஜன்னலில் அஸ்தமன வானத்தை வெறிக்கையில் அவன் அம்மா வந்து காப்பியை நீட்டினாள்.

''ஏய் பிரேம். இந்தா காப்பி. கொஞ்சம் தெம்பா இரேன்.''

''இவன் இந்த மாதிரி மூஞ்சியை வச்சுட்டு இருந்தா எவன் லட்சுமி வேலை குடுப்பான்? ஏண்டா ஷேவ் பண்ணித் தொலையறதுக்கென்ன?''

அப்பாவின் வழக்கமான கோபாவேசக் குமுறல்கள் ஆரம்பமாயின.

மனத்தை அடக்கிக் கொண்டு அனைத்தையும் அலட்சியப்படுத்தினான்... படுத்திக் கொண்டிருந்தான்.

''பல்லெல்லாம் சொத்தையா இருக்குமே ஒரு அத்தை..''
''ஆமா...''
''அவள் சொத்தையெல்லாம் உன் பேருக்கு எழுதி வச்சுட்டாளாம்!'' —பெ. கலாசாமி



வெறுமை. மனசெங்கும் வெறுமை. தினசரி தொடர்கதையாகின்ற விரக்தி. பழகிப் போன, சலித்துப்போன சலிப்பு.

திடுமென 'சில்'லென்ற ஸ்பரிசம். பார்வையைத் திருப்ப... அவன் தங்கை ப்ரியா வாஞ்சையான, பாசப் புன்னகையுடன்.

''ஏண்ணா ஒருமாதிரி இருக்கே? சீக்கிரமா வேலை கெடைச்சிடும் பாரேன். இன்னிக்கு வேளாங்கன்னிக்கு வேண்டிக்கிட்டேன்.''

கண்களில் கண்ணீர் துளிர்த்தது. அவள் கைகளை இறுகப் பற்றிக் கொண்டான். அந்த இளம் பிஞ்சுக் கைகளின் ஸ்பரிசம் அவனுக்குச் சொல்ல முடியாத அளவுக்கு ஆறுதலைத் தந்தது.

''அண்ணா... நசீர் அண்ணா வரேன்னுச்சு ராத்திரிக்கு.''

நசீர். மனசு முழுக்க அன்பை நிரப்பிக் கொண்டு பிரேமுக்கு வேலை இன்னும் கிடைக்காததற்காய்க் கவலைப்படும் ஜென்மம். சிநேகிதத்தின் மகத்துவத்துக்கு —உதாரணமாய் இருக்கும் ஆத்மா.

நசீர் வந்தான் சொன்னபடி.

''பிரேம், இந்தத் தடவை உனக்கு வேலை நிச்சயம். ஏன்னா இந்தக் கம்பெனியில் எங்க மாமாவோட....'' என்று நசீர் உற்சாகமாய் அடுக்கிக் கொண்டிருந்ததை, பிரேமைத் தவிர வீட்டில் மற்றவர்கள் எல்லோருமே மகா நம்பிக்கையுடன், ஆர்வமாய்க் கவனித்துக் கொண்டிருந்தார்கள். பிரேம், நசீர் இப்படிச் சொல்வது எத்தனாவது தடவை என்று யோசித்துக் கொண்டிருந்தான்.

''ஏய் பிரேம்? என்ன சொல்றே?''

''ம்?'' — நிமிர்ந்தான் பிரேம். சற்று முன் கோபமாய் உறுமிய அப்பா, வெகு சாந்தமாய் வேலை கிடைப்பதற்கான சாத்தியக் கூறுகளைப் பற்றி நசீரிடம் கேட்க ஆரம்பித்தார்.

அம்மா நம்பிக்கைகளுடன், அவர்களைக் கவனித்திருக்க...

ப்ரியா, 'நான்அப்பவே சொன்னேனே!' என்பதைப் போல் புன்னகைத்தாள்.

அவனைத் தவிர மற்ற அனைவருக்குமே நம்பிக்கைகள்... நம்பிக்கைகள். வலுக் கட்டாயமாய் ஒரு புன்னகையைப் போலியாய் உதிர்த்து, மனசில் பிசிறடித்த எண்ணங்களை உலுக்கி, உதறிவிட்டு,

''நசீர், அப்ப இந்தத் தடவை ஹார்ட் ட்ரை குடுத்திடலாமே'' என்றான். அவன் போலி உற்சாகத்தில், எல்லாருமே ஏமாந்து முகம் மலரத் திருப்தியானார்கள்.

நசீரிடம், 'போடா (அன்பான) இடியட்' என்றான் பிரேம் மனத்துள்.


விடியற்காலை திடீரென விழிப்பு வந்தது. இருள் மறைந்து கொண்டிருக்க, ஆதவனின் ஆக்கிரமிப்பு அடையாளங்கள் அங்கங்கே. நேற்றைய இரவுச் சம்பவங்கள் ப்ரேமின் மனத்தில் வந்தன. மீண்டும், மீண்டும் வந்தன.

ஆச்சரியமாய் ஒரு நம்பிக்கைக் கிரணம்... மிக மெல்ல...

'நெஜமாவே ஒருவேளை இந்தத் தடவை நசீர் சொல்றமாதிரி வேலை கெடைச்சிடுமா?'

வெளி

விமலாதித்த மாமல்லன்



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி 81

சாயங்காலம் ஊருக்குப் போகிறோம் என்று அப்பா சொன்னவுடன் அப்புட்டாவுக்கு நிலை கொள்ளவில்லை. கதவுக்குப் பின்னால் இருந்து துணிக் கம்பை எடுத்தான். இரண்டு சட்டைகளைக் கொடியிலிருந்து எடுத்து ஒரு பக்கமாக மடித்து வைத்தான். கால் சட்டைகளைத் தேடினான். கொடியில் ஒன்று காயாமல் இருந்தது. கொடியின் இன்னொரு கோடியில் இருந்த அம்மாவின் புடவையை விலக்கினான். உள்ளே ஒன்று இருந்தது. அதை எடுத்தான். அதற்குப் பட்டன்கள் அறுந்து போய்விட்டிருந்தது. கொஞ்சம் தயக்கத்துக்குப் பின்னர் அதையும் சட்டைகளுடன் வைத்துவிட்டு வெளியில் ஓடினான்.

எதிர் வீட்டுக் கதவு மூடியிருந்தது. திண்ணையில் ஏறி ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தான். ஜன்னலின் கீழ்க் கதவுகள் மூடியிருந்தன. ஒரு பெண் கொஞ்சம் சிரமத்துடன் புடவை உடுத்திக் கொண்டிருந்தாள். அவள் முகம் கொஞ்சம் வேர்த்திருந்தது. அந்தப் பெண் நிமிர்ந்து பார்த்தாள், சிரித்தபடி 'என்னடா அப்புட்டா' என்றாள்.

''சந்துரு இருக்கானக்கா?''

''இல்லே வெளியிலதான் இருப்பான்.''

''நாங்க ஊருக்குப் போறோமே.''

''எந்த ஊருக்குடா?''

''எங்க தாத்தா இருக்காரே அந்த ஊருக்கு''

''மெட்ராஸுக்கா?''

அப்புட்டா தலையை ஆட்டினான்.

''எப்பப் போறே?''

''இன்னிக்கு.''

''யார் யார் போறீங்க?''

''அப்பா, அம்மா, நா.''

''எப்ப வருவீங்க?''

''லீவெல்லாம் முடிஞ்சி ஸ்கூல் தெறக்கச் சத்தான். வருவோம்.''

அப்புட்டா ஜன்னல் கம்பிகளில் ஒட்டிக் கொண்டு நின்றிருந்தான். அந்தப் பெண் புடவையைக் கொசுவியபடியே ஜன்னலருகில் வந்து நின்றாள்.

'எனக்கு என்ன வாங்கிட்டு வருவே?'

'சாக்லேட்.'

'அதுதான் இந்த ஊர்லயே கெடைக்குமே. மெட்ராஸ்லேருந்து என்ன வாங்கிண்டு வருவே?'


அப்புட்டா கொஞ்ச நேரம் யோசித்தான். அவனுக்குத் தெரிந்த பொருட்களெல்லாம் இந்த ஊரிலேயே கிடைக்கிறதாகத்தான் இருந்தன.

அவன் யோசிப்பதைக் கண்டு சந்தோஷப் பட்டவளாக ஜன்னல் கம்பிகளுக்கிடையே பொருந்தி இருந்த அவன் வயிற்றில் முத்தம் கொடுத்தாள். சந்துருவின் மேல் பொறாமையாக இருந்தது. இவ்வளவு நல்ல அக்கா அவனுக்கு மட்டும் கிடைத்திருப்பது பற்றி.

'அதோ வரான் பாரு சந்துரு.'

அப்புட்டா ஜன்னலை விட்டுத் திண்ணையி இருந்து இறங்கித் தெருவைப் பார்த்

அறிமுக எழுத்தாளர்



ரூ 250/= மூன்றாவது பரிசுக் கதை —

ஓடினான். சந்துரு கையில் பம்பரத்துடன் நொண்டியடித்தபடி ஓடிவந்து கொண்டிருந்தான்.

'நான் ஊருக்குப் போறேனே!'

'எந்த ஊருக்கு?'

'எங்க தாத்தா ஊருக்கு.'

சந்துருவின் முகத்தில் உற்சாகம் குறைந்து விட்டது.

'எப்ப வருவே?'

'லீவெல்லாம் முடிஞ்சு ஸ்கூல் தெறக்கும் போதுதான் வருவேன்.'

'அப்ப லீவுமுழுக்க அங்கதான் இருப்பியா?'

'ஆமாம். எங்க தாத்தாவோட நான் செத்த காலேஜ், உயிர்க் காலேஜ், பாம்புப் பண்ணை, பீச்சு எல்லாம் போவேனே.'

'பெரிய்ய செத்த காலேஜ் போடா.' வவ்வவ்வே என்று முகத்தை வலித்துக் காட்டிவிட்டு, 'இந்த லீவுல எனக்கு நெறையாக் கத சொல்றேன்னு தாத்தா சொல்லி இருக்காரே' என்றான்.

'எங்க தாத்தாவும்தான் கத சொல்லுவாரு. பீச்சுக்குக் கூட்டிட்டுப் போயி கத சொல்வாறே.'

'பெரிய்ய பீச்சு. பீத்திக்காதே.'

சந்துரு கதவைத் தள்ளித் திறந்துகொண்டு உள்ளே போய் வேகமாகக் கதவை மூடிக் கொண்டான்.

அப்புட்டா வீட்டுக்கு வந்தான். அப்பா தரையில் படுத்திருந்தார். அம்மா இரண்டு பைகளைச் சுவர் ஓரமாக வைத்திருந்தாள். ஊருக்குப் போவது குறித்து எந்த சந்தோஷமும் அப்பாவிடமும் அம்மாவிடமும் காணப் படாதது அப்புட்டாவுக்கு ஆச்சரியமாக இருந்தது.

'மூஞ்சலம்பிக்கோ. நாழியாயிடுத்து' என்றாள் அம்மா.

அப்புட்டா முகம் கழுவிக் கொண்டான். டவலைத் தேடினான். கிடைக்கவில்லை. பையில் எடுத்து வைக்கப்பட்டிருக்க வேண்டும். அம்மா தன் புடவையால் அவன் முகத்தைத் துடைத் விட்டாள்.

அப்பா எழுந்தார். சொம்பில் இருந்த நீரில் சமையல்கட்டில் முகம் கழுவிக்கொண்ட பின்னர் டவலைத் தேடினார். பையில் எடுத்து வைத்துவிட்டதை அம்மா தெரிவித்தாள். அப்பா கத்துவார் என்று அப்புட்டா எதிர் பார்த்தான். அவர் கத்தவில்லை. முறைத்துப் பார்த்தார். அப்பாவுக்கு இதுபோல் அடிக்கடி அம்மா மேல் கோபம் வருகிறது. அடிக்கிறார். இருந்தாலும் அப்புட்டாவுக்கு அப்பாவை ரொம்பப் பிடிக்கிறது. அது மட்டும் எப்படி என்றே தெரியவில்லை. அப்பா வேஷ்டியிலேயே முகம் துடைத்துக் கொண்டார்.

அம்மா வீட்டைப் பூட்டி சாவியை அப்பா விடம் கொடுத்தாள். அப்பா ஒரு பையையும் அம்மா ஒரு பையையும் எடுத்துக் கொண்டு தெருவிறங்கினார்கள். அப்புட்டா அப்பாவின் கையைப் பிடித்தபடி எதிர் வீட்டைப் பார்க் காத மாதிரி பார்த்தான். ஜன்னலில் சந்துரு எட்டிப் பார்ப்பது தெரிந்தது. அப்புட்டாவுக்குப் பெருமையாக இருந்தது.

பஸ்ஸில் ஜன்னல் ஓரமாக அப்புட்டா உட்கார்ந்து கொண்டான். அவனுக்குப் பக்கத்தில் அம்மாவும் அப்புறம் அப்பாவும் உட்கார்ந்திருந்தனர். சீட்டின் மேல் நின்று கொண்டால் தெருவை இன்னும் நன்றாகப் பார்க்க முடியும். அதற்கு அப்பா நிச்சயம் சம்மதிக்க மாட்டார்.

'எப்பம்மா தாத்தா வீட்டுக்குப் போவோம்?'

'ராத்திரி ஒன்பது மணிக்கு.'

இருட்டிய பின்தான் ஊர் போய்ச் சேருவோம் என்பது தெரிந்ததும் உற்சாகம் குறைந்து விட்டது. தாத்தாவை வெளிச்சத்தில் பார்க்க முடியாது என்பது கொஞ்சம் வருத்தமாக இருந்தது.

சந்துருவுக்கு ரொம்பத் திமிர். அவனுடைய தாத்தா அவனுடனேயே இருக்கிறார் என்பதில். அவன் தாத்தா மடியில் உட்கார்ந்திருக்கும் போதெல்லாம் அப்புட்டாவை இளக்காரமாகவே பார்ப்பான். அந்த மாதிரி சமயங்களில் எல்லாம் ஊரிலிருக்கிற தாத்தாவுடன் தான் எப்படி இருப்போம் என்று அப்புட்டா நினைத்துப் பார்த்துக்-கொள்வான்.

அவன் தாத்தாவுடன் திண்ணையில் உட்கார்ந்துகொண்டிருப்பான். தெருவில் பொரி கடலையோ சோன்பப்புடியோ போகும். தாத்தா சொல்லிக் கொண்டிருந்த கதையைப் பாதியில் நிறுத்திவிட்டு வாங்கித் தருவார்.

அவனுடைய தாத்தா சந்துருவின் தாத்தாவைப் போல் கருப்பாக இருக்கமாட்டார். செக்கச் செவேலென்று பெரிய மீசையுடன் இருப்பார். காதில் கடுக்கன் போட்டிருப்பார். உயரமாக இருப்பார். அப்புட்டா தாத்தாவை ஒரு சின்னப் புகைப்படத்தில் பார்த்திருக்கிறான். அதில் அவர் ஒரு குட்டிப் பாப்பாவுடன் இருக்கிறார். இந்தக் குட்டிப் பாப்பா நீதான் என்று அம்மா சொன்ன போது அவனால் நம்ப முடியவில்லை. தான் இதுவரை தாத்தாவைப் பார்த்ததாக அவனுக்கு நினைவே இல்லை. அப்புறம் எப்படித் தாத்தா தூக்கி வைத்துக் கொண்டிருக்க முடியும்?

அப்புட்டா அம்மா மடியில் தலை வைத்துத் தூங்கிவிட்டான்.

அப்பா எழுப்பினார். தூக்கக் கலக்கத்துடன் பஸ்ஸிலிருந்து இறங்கினான். கொஞ்ச நேரத்தில் தூக்கம் கலைந்து விட்டது. இருட்டாக இருந்த தெருக்கள் வழியே போக வேண்டி இருந்தது. அப்புட்டாவுக்குக் கால் வலித்தது. அப்பாவைத் தூக்கிக் கொள்ளச் சொன்னான். அப்பா கையிலிருந்த பையை அம்மாவிடம் கொடுத்துவிட்டு அப்புட்டாவைத் தூக்கிக் கொண்டார். கொஞ்ச நேரத்திலேயே அப்புட்டா திரும்பவும் தூங்கி விட்டான்.

காலையில் டபக் டபக் என்ற சத்தம் கேட்டு எழுந்தான். ஒரு பெண் பம்ப் அடித்துக் கொண்டிருந்தாள். தண்ணீர் விட்டு விட்டு விழுந்து கொண்டிருந்தது. அந்த மாதிரிக் குழாயை அவன் இதுவரை பார்த்ததேஇல்லை. அம்மா வந்து பல்பொடி கொடுத்தாள். குழாய்க்குப் பக்கத்தில் பல் விளக்குமாறு அந்தப் பெண் சொன்னாள். பல் விளக்கி முடித்ததும் அந்தப் பெண் வந்து முகம் கழுவி அவளுடைய புடைவையிலேயே துடைத்து விட்டாள். அப்புட்டா அவளைக் கொஞ்சம் தயக்கத்துடன் பார்த்தான்.

''என்னடா யாரோன்னு பாக்கறியே உன் அத்தைதாண்டா நான்.''

அறையிலிருந்து தாத்தா வெளியில் வந்தார். அந்தப் பெண் மேற்கொண்டு எதுவும் பேசாமல் உள்ளே போய்விட்டாள். தாத்தா புகைப்படத்தில் பார்த்தது போல் அப்படியே இருந்தார். சந்துரு தாத்தாவைப் போல் இந்தத் தாத்தாவுக்குத் தொப்பை எல்லாம் இல்லை. அப்புட்டா அவருக்குப் பக்கத்தில் போனான். அவர் குனிந்து பார்ப்பார் என்று நினைத்தான். அவர் எங்கேயோ பார்த்துக் கொண்டிருந்தார்.

'தாத்தா!'

பார்க்கவில்லை.

அவருடைய வேஷ்டியைப் பிடித்தபடி இன்னொரு முறை 'தாத்தா' என்றான்.

பார்க்கவில்லை.

''நான்தான் தாத்தா அப்புட்டா''.

குனிந்து பார்த்தார்.

''நான்தான் தாத்தா மிஸ்டர் சதாசிவ ஐயர் பிள்ளை.''

சிரிப்பார் என எதிர்பார்த்துச் சிரித்தான். அவர் முகத்தில் பிரதிபலிப்பு இல்லாமல் போகவே அப்புட்டாவின் சிரிப்பு பாதியிலேயே உறைந்து விட்டது. வேஷ்டியை விட்டு விட்டான்.

அறைக்குள் போனான். அத்தை இருந்தாள். இவனைப் பார்த்ததும் 'வா' என்று தலையசைத்தாள். அருகில் போய் உட்கார்ந்து கொண்டான்.

விட்டுப் போன விளம்பர "விட்"டுகள்

— நயினாரகரம் மணி

பையன்:

"அதோ பாருங்கப்பா, பல்லவன் ரோட்டுல போகுது!"



"அவரு ஒரு நாளைக்கு இல்லாட்டி என்ன கஷ்டமாயிருக்கு?...."



'அத்தை, ஏன் தாத்தா என்னோட பேச மாட்டேங்கறார்? அவருக்கு என்னைப் பிடிக்க லையா?'

அத்தை அவனை அணைத்துக் கொண்டாள். ''இல்லேடா கண்ணு ஏதோ யோசனையில் இருந்திருப்பார். அப்புறமா உன்னோட பேசு வார்.''

இந்தப் பதில் அப்புட்டாவைச் சமாதானப் படுத்தவில்லை.

தாத்தா மட்டும் என்றில்லை. இந்த வீட்டில் யாரும் யாருடனும் பேசிக்கொள்ளாமல் தான் வளைய வருகிறார்கள். அப்புட்டாவுக்கு இந்த வீட்டில் இருக்கவே பிடிக்கவில்லை. தெருவை வேடிக்கை பார்க்கத் திண்ணையில் போய் உட்கார்ந்து கொண்டான். திண்ணை ரொம்பவும் சின்னதாக இருந்தது. சந்துரு

தாத்தா அப்பாவைப் பார்த்துக் கத்தி கொண்டிருந்தார்.

'நான்தான் எனக்குப் புள்ளையே இல் லேன்னு எப்பவோ தலை முழுகியாச்சே. அப புறம் ஏண்டா வந்தே?'

அப்பா பதில் பேசாமல் தலை குனிந்து இருந்தார்.


''போடா வெளியே, பணம் வேணுமாட பணம்.''

'போடா' என்றபடி தாத்தா அருகில் வந்ததும் அப்பா நகர்ந்து சென்று அவரருகில் இருந்த பையை எடுத்துக் கொண்டார். அப புட்டா அப்பாவின் அருகில் சென்று இன் னொரு பையை எடுத்தான். கனமாக இருந் தது. அம்மா உடனே பையை வாங்கிக் கொண்டாள்.

அப்பா கதவை நோக்கி நகர்ந்ததும் அப புட்டா வேகமாக நடந்து தெருவில் போய்

கொச்சியின் அருகே வசிக்கும் கோபாலன் என்ற 70வயது மாஜி டாக்ஸி டிரைவருக்குப் புதுமை யான அனுபவமொன்று கிடைத் திருக்கிறது.

பிரபல கிரிக்கெட் ஆட்டக்கார ரான விஜய் மர்செண்ட் தம் மனைவி, மகள் அதிதியுடன் கொச்சியில் 1957 இல் இந்தக் கோபாலனுடைய டாக்ஸியை அமர்த்திக்கொண்டு மூன்று வாரங்கள் கேரளாவில் சுற்றுப் பயணம் செய்தார். ஊர் திரும் பும் போது கோபாலனுடைய நன் நடத்தையைப் பாராட்டி 'நீ என் னுடைய டிரைவராக வர விரும் பினால் பம்பாயில் எனக்குக் கடி தம் எழுதினால் போதும். பிற ஏற்பாடுகளை நான் கவனித்துக் கொள்கிறேன்' என்றுகூறி, தம் முகவரியிட்ட கடிதமொன்றைக் கொடுத்துச் சென்றாராம்.



25வருடங்களுக்குப் பிறகு த கண்பார்வை மங்கிய நிலையி தன்னைப்பற்றியும், குடும்ப நி யையும் விவரித்துச் சமீபத்தி விஜய் மர்செண்டிற்குக் கடித எழுதியிருக்கிறார் கோபாலன் 'எங்களிருவருக்கும் வயதாகி பிரயாணம் செய்யமுடியாத நி யிலிருக்கிறோம். மகள் அதி பரதநாட்டியம் கற்று வருகிறாள் இதுவரை அவள் கேரளாவை பார்த்ததில்லை. நாட்டிய நிகழ் சிக்காக அங்கு வரும் சந்தர்ப்ப தில் அவசியம் உன்னைப் பார்க் வருவாள்' என்று பதில் எழு யதுடன் பம்பாயிலுள்ள சர் வி டல்தாஸ் தக்கர்ஸே சாரிடபி ட்ரஸ்ட் மூலம் மாதம் நூறுருபா உதவித்தொகைகோபாலனுக்கு கிடைக்கும்படியும் ஏற்பாடு செ திருக்கிறார் விஜய் மர்செண்ட்.

- டெக்கான் ஹெரால்டிலிருந்

அ. கும

வீட்டுத் திண்ணையைப் போல் அகலமாக இல்லை. தெரு வெயிலாக இருந்தது. அவ னளவே இருந்த ஒரு பையன் ஒரு பெரிய கோணியுடன் இந்த வீட்டுக் குப்பைத் தொட்டியில் எக்கிக் குனிந்து எதையோ எடுத்துக் கோணியில் திணித்துக் கொண்டு இந்த வீட்டைக் கடந்து போனான். அப் புட்டாவின் இன்னொரு கால் சட்டையைப் போலவே இந்தப் பையனின் கால் சட்டை யிலும் பட்டன்கள் இருக்கவில்லை. அவன் சென்றுவிட்டதும் தெரு அனாதையாகிவிட் டது. யாருமற்ற தெருவையே பார்த்துக் கொண்டு அப்புட்டா வெகு நேரம் உட் கார்ந்திருந்தான்.

உள்ளே இருந்து பெரிய சத்தம் கேட்டது. திண்ணையிலிருந்து குதித்து உள்ளே வந்த வன் கதவுக்குப் பக்கத்தில் நின்றுவிட்டான்.

நின்று கொண்டான். வெயில் ஏகமாக ஏ விட்டிருந்தது. அப்பாவும் அம்மாவும் நட கத் தொடங்கியதும், அப்புட்டா ஓரக் கண் ணால் வீட்டைப் பார்த்தான். கதவருகி அத்தை நிற்பது தெரிந்தது. அத்தைக் டாட்டா காட்டவேண்டும் போல இருந்தது நிற்க முடியாத அளவுக்குத் தார் ரோ சூடேறிக் கிடந்தது.

சந்துரு தாத்தாவைப் பற்றி நிச்சயமாக கேட்பான். அவனுக்கு என்ன பதில் சொ வது என்று நினைக்க நினைக்க அழுகையா வந்தது. வெறுங் காலுடன் இந்த வெ லில் நடப்பது கஷ்டமாக இருந்தது. கொஞ் நேரத்திலேயே அப்புட்டாவுக்குக் கால் வலி கத் தொடங்கி விட்டது. ஆனால் தூக்கி கொள்ளச் சொல்லி அப்பாவைக் கேட் வில்லை.

சாரதா இரண்டு நாட்களாக ஆபீசுக்கு ரவில்லை அதைப் பற்றி யாரும் கவலைப் -வும் இல்லை. உடல்நிலை சரியாக இல்லை ன்று லீவு போட்டிருந்தாள்.

இரண்டு நாட்கள் லீவு முடிந்ததும் அவள் ரியாலயம் வரவில்லை. இன்னொரு லீவு ண்ணப்பம்தான் வந்தது. மெடிகல் சர்ட் பிகேட்டோடு, இன்னும் ஒரு வாரத்துக்கு வு கேட்டிருந்தாள்.

முகம், கை, கால்கள் வீங்கியிருப்பதாகவும் நீர் கழிக்க முடியாமல் இருப்பதாகவும் பரி ாதனைக்காக ஜெனரல் ஆஸ்பத்திரியில் ர்க்கப்பட்டிருப்பதாகவும் அந்த லீவு விண் ப்பத்தில் குறிக்கப்பட்டிருந்தது.

சாரதா எங்கள் காரியாலயத்தில் ஒரு டைப்பிஸ்ட். எட்டுப் பேரில் அவள் ஒருத்தி. ந்த எட்டுப் பேருக்கும் நான் சூப்பர்வைசர் திரி. நானும் டைப்பிஸ்ட்தான். ஆனால் டைப்பே அடிக்காத டைப்பிஸ்ட்! என் வேலை ட்டெழுத்துக்காகக் காரியாலயத்தின் பல லாகாக்களிலிருந்து வரும் கையெழுத்துப் ரதிகளை இந்த எட்டு டைப்பிஸ்ட்டுகளுக்கும் மாகப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டியது; வர்கள் டைப் செய்து கொடுத்ததைச் பார்த்து அந்தந்த இலாக்காக்களுக்குச் ர்ப்பிக்க வேண்டியது.

எட்டுப் பேரில் நான்கு பேர் பெண்கள். ரதாதான் அந்த நான்கு பேரிலும் இளைய ள். வயதில் மட்டுமல்ல, சர்வீசிலும் அவள் ான் ஜூனியர். மூன்று வருடங்களுக்கு முன் ான் சேர்ந்தாள். அப்போது அவளுக்கு பது இருபத்தி மூன்று. அதாவது இப் ாது இருபத்தாறு.

வேலையில் சேர்ந்தபோதும் அவளுக்குக் ல்யாணம் ஆகியிருக்கவில்லை. அதன் பிறகும் துவரையில் கல்யா ம் நடக்கவில்லை. ல்யாணத்துக் கத்தான் அவள் வலை செய்து சம்பாதிப்பதாகவும் பணம் சேர்த்து வைத்துக் கொண்டிருப்பதாகவும் பேசிக் கொண்டார்கள்.

நான்கு பெண் டைப்பிஸ்ட்டுகளிலும் எல்லோரையும் விட சாரதாதான் அழகானவள்.

எனக்கும் அவளுக்கும் சென்ற ஒரு வருஷமாகப் பேச்சு வார்த்தை கிடையாது. அதற்குக் காரணம் விசித்திரமானது.

ஒரு நாள் மத்தியானம் சுமார் மூன்று மணிக்கு சாரதா என்னிடம் வந்து தனக்குக் கொஞ்சம் வெளியே போய்விட்டு வர வேண்டிய வேலை இருப்பதாகவும் ஒரு அரை மணி நேரம் பெர்மிஷன் வேண்டும் என்றும் கேட்டாள். நானும் அனுமதித்தேன்.

ஆனால் அவள் நாலரை மணிக்குத்தான் திரும்பி வந்தாள்.

''ஸாரி மிஸ்டர் ரகுநாத்! நேரமாயிட்டுது'' என்றாள்

''அந்தக் கதையெல்லாம் வேண்டாம். உனக்குக் கொடுத்திருக்கும் வேலையை முடிச்சுட்டுத்தான் நீ வீட்டுக்குப் போகணும்'' என்றேன், கண்டிப்பாக.

''அப்ப நான் வேலையை முடிக்கிறவரையிலும் நீங்களும் இருந்தாக வேண்டுமே?'' என்றாள்.

''ஐ டோண்ட் மைண்ட் இட்'' என்றேன்.

ஐந்தேமுக்கால்மணிக்கு சாரதா வேலையை முடித்து எல்லாவற்றையும் என்னிடம் ஒப்படைத்துவிட்டு, ''போகலாமா?'' என்று ஆக்ரோஷத்தை உள்ளடக்கிக் கேட்டாள்.

''எனக்கு ஆட்சேபணை இல்லை. போவதும், போகாததும் உன் இஷ்டம்'' என்றேன்.

எதற்காக அப்படிப் பதில் சொன்னேன் என்று எனக்கே தெரியவில்லை.

சாரதா என்னை முறைத்துப் பார்த்துவிட்டுப் புறப்பட்டுச் சென்றாள்.

ஐந்து நிமிடங்கள் கூட ஆகிஇருக்காது. சாரதா படபடப்புடன் திரும்பி வருவதைப் பார்த்தேன்.

''இதெல்லாம் முன் யோசனையுடன் நீங்க போட்ட திட்டமா? நீங்க இவ்வளவு



அயோக்கியத்தனமா நடந்துப்பீங்கன்னு நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை!''

''விஷயம் என்னன்னு சொல்லலாம...!''

''வெளியே கதவு பூட்டியிருக்கு'' என்று சாரதா கூறியதும் நான் அதிர்ந்து போய் விட்டேன்.

''அப்படியா? எனக்கும் இந்தத் தவறுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது சாரதா! என்னை நம்பு. இது வாட்ச் மேனுடைய முட்டாள்தனம்'' என்று அவளுக்குச் சமாதானம் கூறிவிட்டு, ஜன்னலில் ஏறி நின்று தொண்டை கிழியக் கத்தி, வாட்ச்மேனை வரவழைத்துக் கதவைத் திறக்கச் செய்து, அவனை நன்றாகத் திட்டி, சாரதாவை வெளியில் அனுப்பினேன். நானும் வெளியே வந்தேன். ஆனால் நான் எவ்வளவு சொல்லியும் சாரதாவுக்கு என்மீது நம்பிக்கை விழவில்லை.

அதற்கு மறுநாளிலிருந்து எங்களிடையே பேச்சு வார்த்தை நின்று விட்டது. என்னைப் பற்றிப் பலவிதமான அவதூறுகளும் கிளம்பி ஆபீசில் பரவிவிட்டது.


சாரதா என்னோடு பேசுவதை நிறுத்திய பிறகுதான் எனக்கு அது எவ்வளவு பெரிய இழப்பு என்பது புரியத் தொடங்கியது.

ஆபீசில் பலர் ஆஸ்பத்திரி சென்று அவளைப் பார்த்துவிட்டு வந்தனர். எனக்குப் போய் அவளைப் பார்க்க வேண்டும் என்று இருந்தபோதிலும் அதற்குத் துணிச்சல் வரவில்லை.

தரகர்: ''மாப்பிள்ளைப் பையன் ஒரு அல்ட்ரா – மாடர்ன் டைப்! அதனாலே.... பெண்ணும் கட்டுப் பெட்டியா இல்லாம இருக்கணும்னு எதிர்பார்க்கிறார்....''

பெண்ணின் தந்தை: ''பிளேபாய் பத்திரிகைக்கு ஆண்டுச் சந்தா போதாதான்னேன், பிடிவாதமா ஆயுள் சந்தாவே கட்டியிருக்கிறாள்! போதுமா?''

-பெ. கலாசாமி



இன்னும் இரண்டு நாட்களில் என் கா களில் விழுந்த செய்தி பயங்கரமானதா இருந்தது. சாரதாவின் இரண்டு சிறுநீரக களும் பழுதடைந்து போய் விட்டிருக்கி றனவாம்! இப்பொழுது டயாலிசிஸ் மூ மாகச் சிகிச்சை அளித்துக் கொண்டிருக்கிற களாம்! ஆனால் இருபத்தாறே வயதா பெண்ணுக்கு இந்த முறையில் இரண் நாளைக்கொரு முறை சிகிச்சை அளித்து சிறுநீரை வெளியேற்றுவதென்பதும், இப்ப அவள் உயிர் பிழைத்திருப்பதென்பதும் வெ நாட்களுக்கு நடக்காது. ஒவ்வொரு முை டயாலிசிஸ் அளிப்பதற்கும் கிட்டத்தட் ஆயிரம் ரூபாய் செலவாகும்.

ஐந்தாறு முறை டயாலிசிஸ் சிகிச் அளித்த பிறகு ஆஸ்பத்திரியில் இந்த சிகிச்சையை இனி நீடிப்பது கஷ்டம்; இவ பிழைக்க வேண்டுமானால் பழுதடைந்திரு கும் சிறுநீரகங்கள் இரண்டையும் அகற் விட்டு வேறு யாருடைய சிறுநீரக ஒன்றையாவது எடுத்துப் பொருத்த வே டும் என்றும் அப்படிச் சிறுநீரகம் தான செய்பவர்கள் யாரையாவது கண்டு பிடி வேண்டும் என்றும் சொல்லி விட்டார்களா

இந்தச் சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக் ஏராளமான செலவாகுமென்பதால் ஆபீசி இதற்காக எல்லோரிடமும் நன்கொடை வசூலிக்கத் தொடங்கினார்கள். ஒவ்வொ வரும் நூறு இருநூறு என்று தாராளமாக கொடுத்து உதவினார்கள்.

இந்தச்சமயத்தில்தான் என்குடும்பநிலை என்னால் இந்த நன்கொடைக்காக ஒரு நூ ரூபாய்கூடக் கொடுக்க முடியாத அவஸ் யில் சிக்கியிருந்தது.

உறவினர்களில் யாரும் தம் சிறுநீரகத் அவளுக்குத் தர முன்வரவில்லையாம். அப்ப அம்மா, அண்ணாக்கள், அக்காக்கள் என் ஏழெட்டுப் பேர் இருந்தும் ஒருவரும் அத குத் தயாராக இருக்கவில்லையாம். என யாராவது பணத்துக்கு ஆசைப்பட் கொண்டு சிறுநீரக தானம் செய்ய மு வந்தால்தான் உண்டு. அப்படி இரண் மூன்று பேர் வந்தார்களாம். ஆனால் அவர் பெருந் தொகை ஈடாகக் கேட்கிறார்களா கிட்டத்தட்ட எழுபத்தையாயிரம் ரூபா எனவே கலெக்ஷன் செய்யப்பட்ட தொ யில் இவ்வளவு பெருந் தொகை கொடுத் சிறுநீரகம் வாங்க முடியாது. சாரதாவி உயிர் இப்போது ஊசலாடிக்கொண்டிருந்த

எனக்குச் சாரதாவின் உறவினர்களைப்ப நினைக்கும்போது ஆத்திரம் பீறிட்டுக்கொண் எழுந்தது.


'இவ்வளவு ஆத்திரப்படுகிறாயே அவர் மேல். நீ இதற்குத் துணிவாயா?' எ கேள்வி எழுந்தது எங்கோ ஒரு மூலையில்.

'டொனேஷன் நூறு ரூபாய் கொடு முடியவில்லை என்று வருத்தப்பட்டாயே? நூறுகள் மதிப்புக் கொண்ட டொனே கொடுக்க உனக்கு இது வாய்ப்பு. உபயோ படுத்திக்கொள். செய்வாயா?' என்ற து டுதல்.

ஆகவே நேரே ஓடினேன் ஆஸ்பத்திரி சம்பந்தப்பட்ட டாக்டரிடம் என் வி

கண்ணதாசனுக்கு என்ன உடம்பு?

அமெரிக்கா செல்வதற்கு முன் கவிஞர்
ன்னை பொது மருத்துவ மனையில் ஒரு
த காலத்துக்கு மேல் தங்கிச் சிகிச்சை
ற்று வந்தார். அவருக்கு சிகிச்சை அளித்த
க்டர் திருவேங்கடமும் தற்சமயம் அமெரிக்
பில் கண்ணதாசனுடன் இருக்கிறார். அமெ
ா போவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய
ண்டும் என்று காரணம் கூறி ஆஸ்பத்திரி
டாக்டர்கள் டிஸ்சார்ஜ் செய்வதற்கு முன்
ணதாசனே டிஸ்சார்ஜ் செய்யப்பட
ம்பியதால் வீட்டுக்குப் போக அனுமதித்
ர்கள். இருமல், கபம் இவைதாம் அப்
ைதய பிரச்னைகள். 'பிராங்கோஸ்
ப்பி செய்ய வேண்டும் என்று சொன்
களாம். இதன் மூலம் வாய் வழியாக
குழாயை நுழைத்து சுவாஸப் பைக்குள்
ப்பவற்றைத் தெளிவாக வெளியே
ந்தே பார்க்க முடியும். ஆனால் பொறுக்க
யாத வலி இருக்கும்.
அமெரிக்கா போக வேண்டும் என்ற
ணம் உடல்நிலையினால்தான் முதலில்
வானது' என்று கவிஞரின் வீட்டில் கூறி
கள். அதற்கு ஏற்றாற்போல் தமிழ் மகா
ம் நடக்கவே அதிலும் கலந்துகொண்டு
றற்பொழிவாற்றிக் கிடைக்கும் வருவாயை
ல் நலத்தைச் சரிசெய்துகொள்ளப் பயன்
த்த எண்ணி யிருக்கிறார்.
'என்னுடைய சுவாஸப் பையில் ஏதோ
டி இருப்பதாக மருத்துவர்கள் சந்தேகிக்
ர்கள். அதைப் பார்த்து விடுவதற்காகத்
ன் அமெரிக்கா போகிறேன்'' என்று
ஞரே ஒரு சமயம் போவதற்கு முன் கூறி
ாம்.
கவிஞரோடு நெருங்கிப் பழகியவரும், அவ
கு 1948லிருந்து மருத்துவம் பார்த்துக்
ண்டு வருபவருமான டாக்டர் யூ. சீனி
ஸ ராவ் சில விஷயங்களைக் கூறினார்:
'கவிஞர் கண்ணதாசனுக்கு மிகுதியான
க்கரை நோய் உண்டு. ரத்த அழுத்தம்,
லீரல் பிரச்னைகளும் இருந்தன. சர்க்கரை
ாதி உள்ள அவருக்குப் போளி என்றால்
வும் பிடிக்கும். ஒவ்வொரு வருடமும்



அவரது பிறந்த நாளன்று போளிகளை எடுத்துச் சென்று ''ஒன்றுக்கு மேல் சாப்பிடக் கூடாது'' என்ற உத்தரவுடன் கொடுத்து விட்டு வருவேன். அவருக்கு என்மீது மிகுந்த நம்பிக்கையும் அன்பும் உண்டு. மருந்தை உட்கொள்ளுவதற்கு முன்பு சந்தேகம் வந்து விட்டால் எனக்கு ஃபோன் செய்து கேட்ட பிறகுதான் சாப்பிடுவார். திடீரென்று இப்படியானது ஏன் என்று யோசித்துப் பார்த்தால் மூன்று காரணங்கள் தோன்றுகின்றன. ஒன்று சர்க்கரைச் சத்து ரத்தத்தில் அதிகமாகி நினைவிழந்திருக்கலாம். அல்லது மூளையில் உள்ள சிறு சிறு ரத்த நாளங்கள் ரத்த அழுத்தம் அதிகமானதால் வெடித்திருக்கலாம். அல்லது மூன்றாவதாக யுரேமியா. — சிறுநீரகங்கள் சரியாகப் பணியாற்ற முடியாமல் போகும் போது ரத்தத்தில் யூரியா சத்து அதிகரித்து விடும். இந்த மூன்றில் ஏதாவது ஒன்று நேர்ந்திருந்தால் அபாய நிலைமை என அறிவிப்பார்கள். இவற்றில் எது என்பது டாக்டர் திருவேங்கடம் திரும்பி வரும்போதுதான் தெரியும்.''

இதற்கிடையில் நாம் கண்ணதாசன் பூரண ஆரோக்கியம் பெறப் பிரார்த்திப்போம்.

பேட்டி: சலன்

ைதச் சொன்னேன். உடனே ரத்தப் பரி
ாதனை செய்து பார்த்தார்கள். என் ரத்த
ு சாரதாவின் ரத்தமும் குரூப் பொருந்தி
ந்தன. எனவே 'டிரான்ஸ்ப்ளான்டே
ன்' செய்யலாம். வேலூருக்குப் போக
ண்டும் என்றார்கள். சரி என்றேன். ஏற்
டுகள் தொடங்கின.
சாரதாவின் முன் நின்றேன்.
''கேள்விப்பட்டேன். எனக்கு ரொம்ப
தோஷம். உங்களை நான் தவறாகப் புரிந்து
ாண்டு இவ்வளவு நாளும் உங்களுடன்
சாமல் இருந்ததற்காக மன்னியுங்கள்.
னால் உங்கள் தானத்தை நான் ஏற்றுக்
ாள்ள முடியாது. நீங்கள் செய்வது
த்தியக்காரத்தனம். என் நெருங்கிய
துக்களே செய்ய முன் வராத தியா
தை நீங்க ஏன் செய்ய வேண்டும்? நாளைக்கு
னாலே உங்களுக்கு ஏதாவது நேரிட்டால்
க அப்பா அம்மாவும் மற்ற பந்துக்களும்
னைத்தானே திட்டுவாங்க? வேண்டாம்.
என் விதி இப்படின்னு நான் போறேன்''
என்று கூறிச் சாரதா கண்ணீர் விட்டாள்.

''சாரதா! உன் நெருங்கிய பந்துக்களே செய்யாத தியாகம் நான் செய்யறதாச் சொல்றியே, எப்படியானால் அவங்களை விட நெருங்கிய பந்துவா என்னை நீ ஏன் ஏத்துக்கக் கூடாது?''


சாரதாவின் கண்களில் ஒரு மலர்ச்சி!

''நீங்க சொல்றது....?''


''ஆமாம், சாரதா கடவுள் அருளாலே இந்த ஆபரேஷன் சக்ஸஸ்புல்லா முடிஞ்சு நாம் ரெண்டு பேரும் பிழைச்சு எழுந்தால் நாம் ஏன் கல்யாணம் பண்ணிண்டு சௌக்கியமா இருக்கக் கூடாது?''

''ரகுநாத்! இவ்வளவு பெரிய மனசு உள்ள உங்களை எவ்வளவு சின்னவரா நான் நினைச்சுட்டேன் மறுபடியும் கேக்கறேன்; என்னை மன்னிச்சுடுங்க!''

''மன்னிக்காமலா இப்படி....'' என்று அவள் கைகளைப் பற்றினேன்.


உங்களைப்
போன்றவர்களை திருப்தி
செய்ய சார்மினரால்தான்
முடியும்
CHARMINAR
THE VAZIR SULTAN
TOBACCO CO. LTD.
AZAMABAD HYDERABAD

தெரியுமா, குர்பானி தட்டு?




● சென்னை வானொலி நிலையத்தில் குளிர் நீர் அமைப்பு அருகே ஒரு டம்ளர் வைக்கக் கூடாதா என்றும், பின்பு குடிநீர் அமைப்பையே பெயர்த்து எடுத்து விட்டார்கள் என்றும் சில இதழ்களுக்கு முன்பு குறைப்பட்டிருந்தோம். ஆனால் தற்பொழுது புதிதாகக் குளிர் நீர் அமைப்பும், அருகே ஒரு டம்ளரும் வைத்துள்ளார்கள். எனவே வானொலி நிலயத்தாரைப் பாராட்டுகிறோம்.

● அமைச்சர் குழந்தைவேலு அண்மையில் வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகத்தில் எம்.ஏ. தேர்வு எழுதினர்.

● இவ்வாண்டு எஸ். எஸ். எல். சி. தேர்வில் இரண்டாவது இடத்தைப் பெற்ற மாணவன் சகாய மில்டனுக்கு அ.இ.அ.தி.மு.க. ஆயிரம் ரூபாய் வழங்கியுள்ளது. தேர்வில் முதல் இடத்தைப் பெற்ற மாணவனுக்குக் கிடைக்காத பாராட்டும் பரிசும் இரண்டாவது இடத்தைப் பெற்ற மாணவனுக்குக் கிடைத்திருப்பதைத்தான் அதிர்ஷ்டம் என்று கூற வேண்டுமோ?

● புடவைகளுக்கு சினிமாப் பெயர்களைச் சூட்டி விற்பதைப் பார்த்துள்ளோம். இப்போது பாத்திரங்களுக்கும் சினிமா பெயர்களை சூட்டத் தொடங்கி விட்டனர். இந்த வரிசையில் முதல் வெளியீடு 'குர்பானி' என்ற பெயரில் வெளியாகியுள்ள ஒரு எவர்சில்வர் தட்டு.



● துண்டு போட்டு
பகடை ஆடி
பணத்தைச் சேர்த்து
மதுக்குக் கொடுத்து
வெறியில் திளைத்து
குடியைக் கெடுத்து
உயிரைக் கொடுக்கும்



வெறியர்கள் வீண்
சுமைக் கூலிகள்

என்ற கவிதை கடந்த வாரம் சென்னை மின் வண்டியில் கையால் எழுதப்பட்டு ஒட்டப்பட்டிருந்தது. கவிதைக்குக் கீழே ஜா.நி.சா. என்றிருந்தது. அவ்வப்போது சிரமம் பாராமல் பொன் மொழிகளையும் தத்துவங்களையும் துண்டுத் தாள்களில் எழுதி மின் வண்டிகளில் மட்டும் ஒட்டுகிறார் இந்த 'ஜா.நி.சா.'

—யெம்ஜி

● சென்னை நகரத்து ஆட்டோ ஒன்றில் (டி.எம். க்யூ 1923) ''இலவசம் பிரசவத்துக்கு'' என்று எழுதியிருக்கிறது.

● வத்தலக் குண்டு பஸ் நிலையம் அருகே ஒரு ஜவுளிக் கடையின் பெயர் ''ஜவுளிக் கடல்.''

—யெஸ்பால்

ஊர் வம்பு—

வணக்கம். நானே சாந்தா!



ஆர். சூடாமணி

“அரை நாள் லீவு வேணும்.”

“பெண் பார்க்க வராங்களா?”

சாந்தாவுக்குக் கன்னத்தில் அடி வாங்கினற்போல் இருந்தது. ஏனென்ருல் மானேஜரின் ஊகம் சரிதான்.

“ஆமாம் ஸார். ஆனு... ஆனு...”

பேச முடியவில்லே. உணர்ச்சிகள்தான் குமுறின.

“லீவு எடுத்துக்கிட்டுப் போங்க. பெஸ்ட் விஷஸ். இந்தத் தடவையாவது கல்யாணம் நிச்சயமாகட்டும்.”

மீண்டும் சாந்தா அடியுண்டாள். மானேஜர் குத்திக் காட்டும் நோக்கத்துடன் பேசவில்லே. யதார்த்தமாய், அவளே ஆசீர்வதிக்கும் ஒரு பெரியவர் என்ற முறையில்தான் பேசினர். எனினும் சாந்தா புண்பட்ட நெஞ்சோடுதான் பஸ் ஸ்டாண்டை அடைந்தாள். உண்மைதான், பிள்ளே வீட்டார், அவளேப் ‘பெண் பார்க்க’ வருவது இதுவரை பலமுறை நடந்துவிட்ட சடங்கு.

வீடு சேர்ந்ததும் நேரே தந்தையிடம் வந்து “அப்பா இன்னிக்கு வரப்போறவங்களே வர வேணும்னு சொல்லி அனுப்பிச்சிடுங்க” என்ருள்.

“என்ன உளர்றே?” என்ருர் அப்பா. அம்மா திடுக்கிட்டு நோக்கிய திலும் அதே கேள்வி வெளிப்பட்டது.

“உளறல் ஒண்ணுமில்லே. இப்படிக் கண்டவனும் வந்து வந்து என்னேப் பார்த்துட்டுப் போறது எனக்குப் பிடிக்கல்லே, அவ்வளவுதான்.”

“இத்தனே காலமாயில்லாம இப்ப என்னடி புதுசு?” என்ருள் அம்மா.

“ரொம்பக் காலமா ஒரு தப்பைப் பண்ணினேம் என்கிறதுக்காக அதைத் திருத்திக்கணும்னு தோணற போது திருத்திக்காம இருக்கணுமா?”

“திருத்திக் கணும்கிற மாதிரி இதில் தப்பு என்ன வந்தது?”


அவள் தாய் அவளேக் குழப்பத்துடன் பார்த்தாள். இன்று திடீரென்று சாந்தாவுக்கு என்ன வந்து விட்டது? கடந்த பத்தாண்டுகளாய் அவளேப் ‘பெண் பார்க்க’ வரன்கள் வரவில்லேயா என்ன? அப்போதெல்லாம் இவ்வாறு அவள் ஆட்சேபிக்கவில்லேயே?... இது வரை யாருக்கும் அவள் உருவம் பிடிக்காமல் போனதில்லே. எல்லாம் பொருளாதாரப் பிரச்னேதான்.

“இப்படியெல்லாம்பேசாதேம்மா சாந்தா! இந்த வாட்டி எப்பாடு பட்டாவது இந்த வரனே முடிச்சுடலாம். கூடக் குறையச் செலவானுலும் கடன் வாங்கியாவது...”

“கடன் வாங்கியாவது எதுக்கும்மா கொடுக்கிறது? இந்தப் பழக்கங்கள் எதுவுமே எனக்குப் பிடிக்கல்லே. இனி நான் என்னே யாரும் பெண் பார்க்க வரவோ பணத்தைக் கொடுத்துக் கல்யாணத்தை விலேக்கு வாங்கவோ சம்மதிக்க மாட்டேன்.”

இத்தனே திடமாய்த் தன்னுல் ஒரு முடிவெடுக்க முடியுமென்று அன்று காலேகூட அவள் நினேத்திருக்கவில்லே. ஆனுல் சில ஆண்டுகளாகவே நெஞ்சில் கேள்விகள் எழுந்த வண்ணம் இருந்தன. கொடுக்கல்—வாங்கல் இல்லாத சமத்துவ அடிப்படையில் ஒரு பெண்ணுக்குக் கல்யாணம் நடக்க முடியாதா? அப்படி முடியாத அந்தக் கல்யாணம் எனக்கு வேண்டாம் என்று சொல்லக் கூடிய திண்மை ஒரு பெண்ணுக்கு இருக்கக்கூடாதா? பெண்ணின் நிலேயைக் கொச்சைப்படுத்தும் மனப்பான்மையின் ஓர் அம்சம்தானே இந்தப் ‘பெண் பார்க்கும்’ சம்பிரதாயம்?

காலேயில் எழுந்திருக்கும்போதே ‘இன்று என்னேப் பார்க்க வருகிருர்கள்’ என்ற நினேவின் கிளர்ச்சி. நேரம் செல்லச் செல்ல மனத்தில் பரபரப்பு, ஆவல், கவலே ‘அவர்களுக்கு என்னேப் பிடிக்குமா? பிடிக்க வேண்டுமே, கடவுளே!’ வீடு மணக்கச் சக்தியை மீறிய தரத்தில் ஸ்வீட், காரம், காப்பி. உடம்புக்கு வித்தியாசமாய் அலங்காரம், ‘இந்



தச் சேலை எனக்கு நன்று யிருக்குமா? தலையை இப்படிச் சீவிக்கொள்வது என் முக அமைப்புக்கு எடுப்பாய் இருக்கிறதா? மெல்லக் கண் உயர்த்தி 'அவனை'ப் பார்த்து, அந்த முன் பின் தெரியாத 'அவனு'க்குத் தன்னைப் பிடிக்க வேண்டுமே என்று ஏங்கி, 'அவர்கள் கேட்பதையெல்லாம் கடன் வாங்கியாவது செய்ய ஒப்புக் கொள்ள வேண்டுமே' என்று பெற்றோருக்கே துரோகம் நினைத்து, யாருக்கோ நமஸ்காரம் செய்து அவர்கள் பாடச் சொன்னால் பாடி, கேள்வி கேட்டால் பதில் சொல்லி, இன்னொருவர் முகக் குறிப்பில் தன் வாழ்வையே நிர்ணயிக்கும் தீர்ப்பை எதிர்நோக்கி...

இதுவா திருமணத்தின் அஸ்திவாரம்? மன — குணப் பரிச்சயங்களுக்கு இடமளிக்காத இது போன்ற சடங்கா உடைக்கக் கூடாத, வாழ்நாள் முழுவதற்குமான புனித பந்தம் என்று பிரமாதமாய்ச் சொல்லப்படும் ஓர் உறவுக்கு அஸ்திவாரம்? அதுவும் இப்போது அவள் சிறு பெண்ணல்ல. சம்பாதிக்கிற, அறிவு முதிர்ச்சி கொண்ட, முப்பது வயதுக்காரி. இன்னுமா அவள் வேஷம் போட்டுக் கொண்டு, அன்னியர்கள் முன் பயந்து நின்று, அவர்கள் அவளை மதிப்பிடும் நோக்கத்துடன் மேலும் கீழும் பார்க்கும் போது கவலையுடன் காத்திருந்து....சீ!

உள்ளத்தில் குமைந்து கொண்டிருந்த உணர்வுகளெல்லாம் மானேஜரின் அந்தப் ''பெண் பார்க்க வராங்களா?'' என்ற பேச்சுக்களில் குபீரென்று உசுப்பப்பட்டுத் தன்மான ஆவேசத்துடன் ஒரு தீர்மானமாக உருப்பெற்றிருக்க வேண்டும்.

''அதெல்லாம் எனக்குத் தெரியாது சாந்தா. இப்போ திடீர்னு அவங்களை வரக் கூடாதுன்னு சொல்ல முடியாது. இந்த ஏற்பாடெல்லாம் செய்யறபோது சும்மாத் தானே இருந்தே? சம்மதமில்லேன்னு அப்பவே சொல்றதுக்கென்ன? காலையில்கூட அரை நாள் லீவு போட்டுட்டு வந்துடறேன்னு தானே சொல்லிட்டுப் போனே?''

''அது என் தப்பு. அதுக்காக உங்ககிட்ட மன்னிப்புக் கேட்டுக்கிறேன். ஆனா இப்போ தயவு செஞ்சு எனக்காக அவங்களை நிறுத்துங்கப்பா! ப்ளீஸ்!''

''உன்கூடப் பேச நான் தயாராயில்லே. உள்ளே போய்க் காப்பி குடிச்சுட்டு அழகாட்ரெஸ் செய்துகிட்டுப் பிள்ளை வீட்டுக்காரங்க வரப்போ ரெடியா இரு.''

ஆறுமணிக்கு ஐந்து நிமிடங்கள் இருக்கும் போது ''அவர்கள்'' வந்தார்கள். அப்பாவும் அம்மாவும் வரவேற்க வாசலுக்கு ஓடினார்கள். சாந்தாவின் தங்கைகள் வழக்கம் போல் பின்கட்டுக்குப் போய்விட்டார்கள். சாந்தாவைப் பெண் பார்க்க யாராவது வந்தால் அவர்கள் அப்படிப் போய்விட வேண்டுமென்பது அம்மா கட்டளை.

''இதோ இப்படி உட்காருங்கள், இந்த நாற்காலி சௌகரியமாய் இருக்கும். ஸாருக்கு அங்கே காத்து வருதா? ஃபானை இன்னும் வேகமாய் விடலாமா? இந்தப் பக்க



மெல்லாம் அடிக்கடி கரெண்ட் கட் ஆயிடுது. இப்போ ஆகாம இருக்கணும்.''

''அப்போ பெண்ணை வரச்சொல்லலாமே'' என்றார் பிள்ளையின் தகப்பனார்.

''ஓ யெஸ். தேவானை நீ போய்ச் சாந்தாவை அழைச்சிட்டு வரியா? அப்படியே டிபனைக் கூடக் கொண்டுவந்துடலாம்.''

சாந்தாவின் தாய் உள்ளே போகத் திரும்பினாள். அவள் உள்ளேபோக அவசியம் நேரவில்லை. சாந்தாவே கைகளில் ஒரு ட்ரேயில் சிற்றுண்டித் தட்டுக்களுடன் அறைக்குள் வந்துகொண்டிருந்தாள்.

''விஸிட்டர்ஸ் வந்து கொஞ்ச நேரமாகுதே, டிபன் கொண்டு வரலாம்னு நினைச்சுத்தாம்ப்பா கொண்டு வந்தேன்'' என்று சாந்தா ட்ரேயை அங்கிருந்த ஒரு மேஜை மேல் வைத்தாள். பிறகு தலை நிமிர்ந்து நின்று, வந்தவர்களைப் புன்னகையோடு பார்த்துக் கரம் குவித்தாள்.

''வணக்கம். நான் தான் சாந்தா. இந்த வீட்டுக்காரரோட மூத்தமகள். நீங்க தானே பி.டபிள்யூ,டி. என்ஜினியர் மிஸ்டர் கார்த்திகேயனும் அவர் மனைவியும் மகனும்? நீங்க வரப் போறதாய் அப்பா சொல்லியிருந்தார். உங்களைச் சந்திச்சதில் ரொம்பச் சந்தோஷம்'' என்று கூறிவிட்டுச் சாந்தா அவர்களுக்கு எதிரே நாற்காலியில் உட்கார்ந்தாள்.

அவள் பெற்றோருக்கு அதிக அதிர்ச்சியா அல்லது கார்த்திகேயன் தம்பதிக்கா என்று சொல்ல முடியாமல், எல்லோரும் அவளை வெறித்தார்கள்.

''உங்க பேர் தனபால்னு அப்பா சொன்னதாய் நினைக்கிறேன், அது சரிதானே?'' என்றாள் சாந்தா வரனிடம். அவன் பேச முடியாமல் மலைத்து உட்கார்ந்திருந்தான்.

''ஏ.ஜி. ஆபீசில் வேலை பார்க்கிறீர்களாம். நான் ராஜன் என்டர்ப்ரைஸஸ்ல ஸ்டெனோவாக இருக்கேன்.''

அறை மிகவும் நிசப்தமாக இருந்தது.

''டிபன் எடுத்துக்குங்க. சாப்ட்டுக்கிட்டே பேசலாம்'' சாந்தா டிரே மீதிருந்த சிற்றுண்டித் தட்டுக்களை எடுத்து விருந்தாளிகள் முன் வைத்தாள். தாயின் பக்கம் பார்வை சென்றது. ''அம்மா, ஏம்மா அப்படி நெளியறே? மறுபடியும் முதுகை நோகுதா?'' சாந்தா வந்திருந்தவர்களைப் பார்த்தாள். ''எங்கமாவுக்கு ரெண்டு மூணு நாளா லேசாய் முதுகு வலி. வேலைப் பளுதான். இன்னிக்குத்தான் கொஞ்சம் சுமாராச்சு. ஓய்வு எடுத்துக்கச் சொன்னேன், காலைல ஆபீஸ் போறபோதே. உடம்பைக் கஷ்டப் படுத்திக்கிட்டு உங்களுக்காக இத்தனை தினுசு பலகாரம் செஞ்சிருக்காங்க. பாருங்களேன், எதுக்கு இந்தச் சம்பிரதாயமெல்லாம்? வரவங்க பலகாரமா கேக்கறாங்க? இப்ப பாருங்க. முதுகு நோவு திரும்பியும் அதிகமாயிடுச்சு.'' மீண்டும் தாயைப் பார்த்தாள்.

''சீ,சீ, உளறாதே''என்றாள் அவள் தாய் பதற்றத்துடன்.

''இதில் என்னம்மா தப்பு? சிநேகித முறையில வந்திருக்காங்க.உன் உடம்புக்காகலைன்னு சொன்னா தப்பாகவா நினைக்கப் போறாங்க?''

''எனக்கு ஒரு உடம்புமில்லே. நீ... நீ... முதல்லே அவங்களுக்கெல்லாம் நமஸ்காரம் பண்ணு சாந்தா.''

''நான்தான் அப்பவே கை குவிச்சு வணக்கம் சொன்னேனே? ஆனா பதிலுக்கு யாரும் எனக்கு வணக்கம் செய்யலே. நம்ம சமூகத்தில் மரியாதைப் பண்புகளுக்கு என்ன ஆயிட்டு வருதுன்னு புரியலே.''

வந்தவர்களின் முகங்கள் சிவந்தன. அவள் பெற்றோர்கள் அரண்டு போனார்கள்.

''எல்லாரும்டிபன் சாப்பிட்டுக்கிட்டிருங்க, நான் போய்க் காப்பி எடுத்து வரேன்.''

காலிடிரேயை எடுத்துக் கொண்டுசாந்தா எழுந்து போனாள். கார்த்திகேயன் தம்பதி ஏதோ மந்திரக் கட்டிலிருந்து விடுபட்டவர்கள் போல் அவள் பெற்றோரை விழித்துப் பார்த்தார்கள்.

''என்னய்யா இது? உங்க மகளுக்கு மூளை கீளை சரியில்லையா? எங்களை அவமானப் படுத்தவா இங்கே வரவழைச்சீங்க?'' என்று கார்த்திகேயன் இரைந்தார்.

''ஸார், தயவு செய்து மன்னிக்கணும். எங்களுக்கே ஒண்ணும் புரியல்லே. எங்க சாந்தாவுக்கு இன்னிக்குத் திடீர்னு என்னமோ ஆயிருக்குது. உடம்பு சரியில்லையோ என்னமோ. எப்பவும் அவ இப்படி நடந்துக்கிட்டதே இல்லை....''

''அவளுக்கு உடம்பு சரியில்லைன்னா அதுக்காக எங்களை இன்ஸல்ட் பண்றதா? இப்படிப் பட்ட இடத்தில் சம்பந்தம் பண்ணணும்னு எங்களுக்குத் தலையெழுத்தா என்ன?''

''ஸார், ஸார், பெரிய மனசு பண்ணி நீங்க எங்களை மன்னிக்கணும். என் மகள் சார்பில் நான் மன்னிப்புக் கேட்டுக்கிறேன். அவளுக்குப் புத்தி சொல்றேன். நீங்க தயவு செஞ்சு இந்தக் கல்யாணப் பேச்சை முறிச்சிடாதீங்க....''

சாந்தா அறைக்குள் நுழைந்தாள். அவள் கைகளில் காப்பி இருந்தது. அவளைத் தொடர்ந்து வந்த இரு பெண்களில் ஒவ்வொருத்தியும் இரண்டு தம்ளர் காப்பி கொண்டு வந்திருந்தாள்.

''இதோ இவங்க ரெண்டு பேரும் என் தங்கைங்க ஸார். அம்மா, நம்ம எல்லோருக்

மனைவி: ஒவ்வொரு நாளும் உங்கள் கைக்குட்டையை ஆபீசிலே மறந்து போய் வச்சுட்டு வந்துடறீங்களே; ஏன்?

கணவன்: மறுநாள் ஆபீஸ் போறதுக்கு அந்த ஒரு காரணமாவது இருக்கட்டுமே என்றுதான்! - பெ. கலாசாமி



குமே காப்பி கொண்டு வந்திருக்கேன். ஏன்னு சாந்தா வந்திருப்பவர்களைப் பார்த்தாள். ''இது ஒரு நட்புமுறையிலான விஸிட்தான். நீங்க எங்க வீட்டுக்கு ஒரு 'ஸோஷல் கால்' பண்ணி யிருக்கீங்கன்னுதான். நான் வச்சுக்கப் போறேனே தவிர என்னைப் பெண் பார்க்க நீங்க வந்திருப்பதா வச்சுக்கப் போறதில்லே. ரெண்டு தரப்புகள் சிநேக மாகிறதுக்கு ஏதோ ஒரு சந்தர்ப்பம் அமை யணும். இல்லையா? இந்தப் 'பெண் பார்க்கிற பேச்சு' என் வரைக்கும் அப்படி நம்ம ரெண்டு குடும்பங்களும் அறிமுகமாகிறதுக்கு ஒரு வியாஜம் மட்டும்தான். இது ஒரு ஸோஷல் வருகையானதாலே எல்லாரும் ஒண்ணாய் உட்கார்ந்து காப்பி குடிக்கலாம்னு நினைக்கிறேன்.'' அவள் மூன்று விருந்தினர் முன்பும் தன் பெற்றோர் முன்பும் ஆளுக் கொரு காப்பித் தம்ளரை வைத்தாள். உடன் பிறந்தவர்களுக்கு ஒவ்வொன்று கொடுத்து விட்டுத் தானும் எடுத்துக் கொண்டாள்.

ஆத்திர மிகுதியால் கார்த்திகேயனுக்குப் பேச்சு வர சிறிது நேரமாயிற்று. ''என்ன சொன்னே? இது... இது 'ஸோஷல் காலா?''

''ஆமாம்.''

''பெண் பார்க்கிற சடங்கு இல்லையா?''

''இல்லே.''

தன்னைச் சுட்டெரிக்கும் அத்தனை பார்வை களையும் சாந்தா நிதானமாய்ப் பார்வை யிட்டாள். பார்த்துக்கொண்டிருக்கையிலேயே அவள், கண் முன் ஒரு வித்தியாசம் உரு வாவது தெரிந்தது. தனபாலின் பிரமித்த பார்வை மெல்லத் தளர்ந்து கொண் டிருந்தது. இழையாய் ஒரு புன்னகை அவன் முகத்தில் வெளிப்பட்டது.

''என் தங்கைகளில் இவ பெரியவ. பேரு வீணு. இவளும் ஒரு கம்பெனியிலே வேலே பார்க்கறு. அவ சின்னவ. ஸரிதா.''

தனபால் மரியாதைப் பாங்குடன் எழுந்து நின்று அந்தப் பெண்களை நோக்கிக் கரம் குவித்தான். ''வணக்கம்.'' பிறகு சாந் தாவை நோக்கினுன். ''உங்களுக்கும் வணக் கம் சொல்றேன் மிஸ் சாந்தா.''

''வணக்கம்.'' அவளும் புன்னகையோடு கரம் குவித்தாள். ''எல்லோரும் உட்கார லாமா? வீணு, ஸரிதா, நீங்களும் உட் காருங்க.''

''நீங்களே உட்காருங்க. நாங்க போறேம். இனிமே எங்களுக்கு இங்கே என்ன வேலே?'' என்று கார்த்திகேயன் எழுந்தார்.

''பாவிப் பொண்ணே என்ன காரியம் செஞ்சிட்டேடி?'' என்று சாந்தாவின் தாய் ஓலமிட்டுக் கொண்டே ''பெண் பார்க்க யாரும் வரக் கூடாதுன்னு அப்புறம் உனக்குக் கல்யாணம் எப்படி ஆகும்?'' என்ருள்.

''ஆகாமல் போனுல் நான் செத்துடமாட் டேம்மா'' என்ற சாந்தா காப்பியை ஒரு வாய் பருகினுள்.

''உங்களுக்கெல்லாம் சர்க்கரை சரியா இருக்கா?''

''ஓ, சரியா இருக்கே! காப்பி ரொம்ப நல்லா இருக்கு மிஸ் சாந்தா, தாங்க்ஸ்'' என்ருன் தனபால்,



''உள்ளே ஏதோ சிரிப்பொலி யும், அழுகையுமா அமர்க்களப் படுகிறதே என்ன மாமி?''

''ஒண்ணுமில்லே, புதிதாக வந் திருக்கும் மருமகளே, மற்றப் பெரிய மருமகள்கள் 'ராகிங்' செய்யருங்க, அவ்வளவுதான்!''

– ஏ. வி. தேவன்

''அப்புறம் தறுதலையாய்த் தானே மாப் பிள்ளை தேடிக்கச் சொல்லும்'' என்று சாந்தா வின் தாய் தொடர்ந்து ஓலமிட்டாள்.

சாந்தா புன்னகை செய்தாள். ''மிஸ்டர் தனபால்! ஒண்ணு கவனிச்சிங்களா? நம்ம சமூகத்தில் ஒருத்தர் தானே புருஷனேயோ மனைவியையோ தேடிக்கிறதை என்னமோ பெரிய தப்பு மாதிரியும் தான்தோன்றித் தனம் மாதிரியும் நினைக்கிருங்க. உங்க அபிப்பிராயம் என்ன?''

''நான் அப்படி நினைக்கல்லே. தங்கள் வாழ்க்கையைத் தாங்களே நிர்ணயிக்கக்கூடிய மனப் பக்குவமும் பொறுப்பும் உள்ளவங் களுடைய செயலாய்த்தான் நான் அதை நினைக்கிறேன். ஏன்னு நானே என் ஆபீசில் வேலே பார்க்கிற ஒரு பெண்ணைக் காதல் கல்யாணம்தான் செஞ்சுக்கப் போறேன்'' என்ருன் தனபால்.

''என் வாழ்த்துக்கள்'' என்ருள் சாந்தா.

''என்னடா இது தனபால்?'' அவன் தந்தை கோபமாய்க் கூவினுர்.

''மன்னிச்சுக்குங்கப்பா. எனக்கு அந்த எண்ணம் ரொம்ப நாளாய் உண்டு. ஆனுல் உங்ககிட்டேயும் அம்மா கிட்டயும் சொல் லப் பயமா யிருந்தது. அதைத் தவிர, சம் பிரதாயத்தை மீறத் தைரியமும் போதலே. இங்கே பெண் பார்க்க வரணும்னு நீங்க சொன்னப்பக்கூட மாட்டேன்னு சொல்ற தைரியமில்லாமத்தான் வந்தேன். ஆனு இப்போ...'' அவன் கண்கள் சாந்தாவின் மேல் மதிப்புடன் பதிந்தன.

''இப்போ இங்கே நடந்ததைப் பார்த்தப் புறம் மனசுக்குச் சரின்னுதோணற விதமாய் நடந்துக்கற தைரியம் வந்துடிச்சு.''

''சீ! பிள்ளையா நீ? தறுதலே!'' கார்த்தி கேயன் வேகமாய் வெளியேறினுர்.

தனபால் மீண்டும் கைகுவித்தான். ''நான் போய் வரேன் மிஸ் சாந்தா. உங் களுக்கு ரொம்ப நன்றி.''

சாந்தா தலைநிமிர்ந்த கம்பீரத்துடன் ''யூ ஆர் வெல்கம்'' என்ருள்.

ஜகதாவுக்குச் சாப்பாடே பிடிக்கவில்லை சுவாரஸ்யமே இல்லாமல் ஏனோ தானோ என்றுதான் சமையலை ஆக்கி வைத்திருந்தாள். ரசித்துச் சாப்பிடுவதற்குக் கணவரும் குழந்தைகளும் வீட்டில் இல்லாதபோது தனக்கு மட்டும் வக்கணையாகச் சமைத்துக் கொள்ள யாருக்குப் பிடிக்கும்?

லதாவும் கிரீஷும் விடுமுறையை முன்னிட்டு அவரவர் பள்ளிகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பிக்னிக் பார்ட்டியிலும் கல்வி சுற்றுலாக் கோஷ்டியிலும் கலந்துகொண்டு சென்றிருந்தனர். அவர்களுடைய அப்பாவும் ஆபீஸ் வேலையாக பம்பாய்க்குப் போயிருந்தார். இன்று முழுவதும் வீடு வெறிச்சென்றுதான் இருக்கப் போகிறது. நாளைக்குத்தான் வழக்கமான கலகலப்பை எதிர்பார்க்க முடியும்.

தனிமை பாரமாக இருந்தது. தனபாக்கியத்தைப் பிற்பகல் வேலைக்கு வரவேண்டியதில்லைஎன்று சொல்லாமலிருந்திருக்கலாமோ? அவள் வழக்கம்போல் இரண்டு மணிக்கு வந்தால் ஐந்து மணி வரை ஏதாவது வேலை கொடுத்துக் கொண்டிருக்கலாம். பேச்சுத் துணைக்குப் பேச்சுத் துணை. பொழுது போவது கஷ்டமாக இராது.

ஆனால் துலக்குவதற்குப் பற்றுப் பாத்திரங்கள்கூட ஒன்றிரண்டுக்கு மேல் இல்லை. அவளும் பாவம், தன் வீட்டில் குழந்தை குட்டிகளுடன் போராடிக் கொண்டு தானே வேளை தவறாமல் இங்கும் வந்து பாடுபடுகிறாள். அரை நாள் பொழுதாவது அவளுக்கு ஓய்வு இருக்கட்டுமே!

''தனபாக்கியம், மத்தியானம் உனக்கு லீவு. வீட்டில் நல்லா ஓய்வு எடுத்துக்கோ. ஏதாவது சினிமா பார்க்கறதானாலும் பார்த்துட்டு வா!''

''ஆமாம்! நான் சினிமா பார்த்து வாழ்ந்தேன்! அன்றாடப் பொழப்பே எனக்குச் சினிமாவாத்தானே இருக்கு!''

''ஏன், உன் புருஷன் சம்பாத்தியம்?''

''என்ன சம்பாத்தியம் போங்க, அவருக்குத் தெரிஞ்ச வேலை படத்துக்குக் கண்ணாடி போட்டுச் சட்டம் அடிக்கிறது ஒண்ணுதான். அன்னாடம் கடை கடையா அலைஞ்சுட்டுத்தான் வராரு. யாரு வேலை குடுக்கறாங்க! வாரத்திலே ஒரு நாள் ரெண்டு நாள் வேலை கெடைச்சாவே அதிர்ஷ்டம். அப்புறம் கூலிக்கு நடையா நடக்கணும்.''

ஜகதாவுக்குச் சங்கடமாயிருந்தது. ஏன் தனம்,




சுட்டது

[illegible]ா சந்திரன்

நம்ம வீட்டில ஒரு வேலே இருக்குன்னு சொன்னேனே! ஸ்வாமி படங்கள் நாலஞ்சு மாட்டாம வச்சிருக்கு. சுவர்ல ஆணி இறங்க மாட்டேங்கிறது. ஜம்பராலே துளே போட்டுத்தான் ஆணி அடிச்சுப் படங்களே மாட்ட முடியும். உன் புருஷனே அனுப்பி அதைச் செஞ்சு குடுன்னு சொல்லி யிருந்தேனே!'' என்ருள்.

''மறக்கலீங்க. நான் அவர் கிட்டச்சொல்லவும் சொன்னேன். இன்னிக்குப் போறேன், நாளேக்குப் போறேன்னு தட்டிக் கழிச்சுக் கிட்டே இருக்காரு. நான் வேலே செய்யற எடத்துக்கு வரச் சங்கோசப்படருரோ என்னவோ!'' — ஒரு பெருமூச்சுடன் தனபாக்கியம் வீட்டை விட்டுப் புறப்பட்டாள்.

பாவம் தனபாக்கியம்! வஞ்சனே இல்லாத உழைப்பாளி. வெகுளி. சூதுவாது தெரியாது. கள்ளம் கபடு கிடையாது.



''நம்ம ஐயா கையிலே சொல்லி என் வீட்டுக்காரருக்கு ஏதாச்சும் வேலே பார்த்துக் குடுக்கச் சொல்லுங்கம்மா. புண்ணியமாப் போகும். பியூன்வேலேயோ, எடுபிடிவேலேயோ எதுவாயிருந்தாலும் சரி. மாசம் பொறந்தா சம்பளம் கைக்கு வராப்பலே ஏதாச்சும்...''

ஜகதா கணவரிடம் சொல்லாமல் இல்லே. அவரும் ''ஆகட்டும், சந்தர்ப்பம் வரட்டும்'' என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

அன்றைக்கு ஜகதா உறுதியாகக் கூறியிருந்தாள் — ''தனபாக்கியம், ஐயா ஊர்லருந்து வந்துடட்டும். எப்படியாவது உன் புருஷனுக்கு வேலே கிடைக்க ஏற்பாடு செய்யச் சொல்றேன்.''

கணவர் பம்பாயிலிருந்து வந்ததும் முதல் காரியமாக அதைச் செய்ய வேண்டுமென்று மனத்தில் முடி போட்டுக் கொண்டு ஓய்வு எடுத்துக்கொள்ளச் சென்ருள் ஜகதா.

தெரிந்தகடைகளிலெல்லாம் ஏறிஇறங்கி எங்குமே வேலே கிடைக்காமல் அலுத்துச் சலித்து வீடு திரும்பி வந்தான் வீரப்பன். பிற்பகல் இரண்டு மணிக்குமேல் ஆகிவிட்டது. ஒரே பசி. வீட்டில் ஏதும் இருக்காது என்று தெரியும். தனபாக்கியம் காலேயில் வேலே செய்கிற இடத்திலிருந்து மிச்சம் மீந்தது ஏதாவது கொண்டு வந்திருந்தாலும் குழந்தைகளுக்குக் கொடுத்திருப்பாள். இப்போது மறுபடியும் வேலேக்குப் போயிருப்பாள்.

சே! என்ன போக்கற்ற பிழைப்பு இது! சொந்தத்தில் கடை என்று ஒன்று இருந்தால் இந்தத் திண்டாட்டம் இருக்குமா? கடை போட்டுக் கொள்வதற்கு மூலதனமாக ஒரு பத்தாயிரம் ரூபாய் கையில் இருந்தால்...

இந்தக் கற்பனேயுடன் அவன் வீட்டை நெருங்கியபோது குடிசைக்குள்ளிருந்து காதில் விழுந்த தனபாக்கியத்தின் குரல் அவனுக்கு வியப்பளித்தது. தான் பிற்பகலில் வேலேக்குப் போகாததன் காரணத்தை அண்டை வீட்டுக்காரிக்கு விளக்கிக் கொண்டிருந்தாள் அவள்.

''அந்த வீட்டு ஐயா வெளியூர் போயிருக்காரு. புள்ளேங்களும் வீட்டில இல்லே. அம்மா ஒண்டிதானே வீட்டில! அதனுலதான் அரை நாள் லீவு குடுத்து அனுப்பிட்டாங்க.''

சட்டென்று ஒரு தீர்மானத்துக்கு வந்த வீரப்பன் ஓசைப்படாமல் அங்கிருந்து அகன்ருன்.

ஜகதா கட்டிலில் படுத்தவாறு ஏதோ பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்து விட்டுக் கண்ணயரப் போன சமயம் அழைப்பு மணி ஒலித்தது. ஜகதா சலிப்புடன் எழுந்து வந்து ஜன்னல் வழியே வெளியே பார்த்தாள்.

''யாரது?''

''நான்தான் வீரப்பனுங்க. தனபாக்கியத்தோட புருஷன்...'' என்று கூறியவாறு ஜன்னல் பக்கமாக வந்து நின்ருன் வீரப்பன்.

ஜகதா ஓரிரு தடவை அவனேப் பார்த்திருக்கிருள்.

''என்ன வேணும் வீரப்பா?''

''தனபாக்கியம் அனுப்பிச்சுதுங்க. பூஜை ரூமில ஆணி அடிச்சுப் படங்க மாட்டணும்னு சொன்னீங்களாம்.''

''ஆமாம். சொன்னேன். காங்க்ரீட் சுவர். ஜம்பர் வச்சு அடிச்சுத் துளை போட்டாத் தான் ஆணி இறங்கும்....''

''கையோட எல்லாம் கொண்டு வந்திருக்கேனுங்க. வேற எங்கேயும் வேலை கிடைக்கலே. இதையாவது செய்து குடுத்திட்டுப் போகலாமேன்னு....''

ஜகதா கதவைத் திறந்து வீரப்பனை பூஜை அறைக்கு அழைத்துச் சென்றாள். எங்கெங்கு எந்தெந்தப் படத்தை மாட்ட வேண்டும் என்று—விளக்கிச் சொல்லிவிட்டு ஹாலில் போய் உட்கார்ந்து கொண்டாள்.

கைப்பையிலிருந்து சுத்தியலையும் மற்றக் கருவிகளையும் எடுத்துக் கொண்டிருக்கும் போதே வீரப்பனின் கண்கள் சோபாவில் சாய்ந்து உட்கார்ந்திருந்த ஜகதாவைத் திருட்டுத்தனமாக நோட்டம் விட்டன. வைரக் கம்மல்கள், இரட்டை வடச் சங்கிலி, நாலு ஜோடி வளையல்கள் — மூன்று கடை வைப்பதற்குப் போதுமான மூலதனம் வெட்டியாக இந்த அம்மாளின் மேனியில் புரண்டுகொண்டிருக்கிறது!

''அம்மா! அம்மா! ரொம்பத் தாகமா இருக்கும்மா. கொஞ்சம் தண்ணி குடுக்க றீங்களா?''

''இதோ கொண்டு வரேன்!'' என்று கூறிய ஜகதா எழுந்து உள்ளே சென்றதும் அவன் சுத்தியலைக் கையில் உறுதியாகப் பிடித்துக்கொண்டு கதவுக்குப் பின்னால் மறைவாக நின்று கொண்டான்.

31–3–1980ம் நாள் அளவில் இந்தியா ஒவ்வொரு நாட்டிலும் வாங்கியிருந்த கடன் விவரம் இதோ:

		கோடியில்
சர்வதேச அபிவிருத்தி ஸ்தாபனம்	ரூ.	3524.52
அமெரிக்கா	ரூ.	2633.29
மேற்கு ஜெர்மனி	ரூ.	1363.78
பிரிட்டன்	ரூ.	881.70
ஜப்பான்	ரூ.	820.42
ஈரான்	ரூ.	788.46
ஹாலந்து	ரூ.	425.68
கனடா	ரூ.	376.86
பிரான்ஸ்	ரூ.	329.78
உலக சீரமைப்பு அபிவிருத்தி	ரூ.	301.00
ரஷ்யா	ரூ.	186.21
இராக்	ரூ.	116.22
யூகோஸ்லாவியா	ரூ.	100.00
பெல்ஜியம்	ரூ.	72.08
ஐக்கிய அரபு அமீர்	ரூ.	58.10
குவையத்	ரூ.	45.54
சௌதி அரேபியா	ரூ.	44.25
பெட்ரோல் ஏற்றுமதி நாடுகள் ஸ்தாபனம்	ரூ.	29.71
செக்கோஸ்லாவாகியா	ரூ.	29.08
ஆஸ்திரியா	ரூ.	27.65
டென்மார்க்	ரூ.	24.95
இத்தாலி	ரூ.	24.43
ஐரோப்பிய பொருளாதார சமுதாயம்	ரூ.	22.69
சுவிட்ஜர்லாந்து	ரூ.	21.71
அபுதாபி	ரூ.	12.31
ஹங்கேரி	ரூ.	10.51
போலந்து	ரூ.	7.48
மொத்தம்	ரூ.	12278.41

இதைப் படிக்கும் நீங்கள் ஒரு கடனாளி என்பதை மறக்காதீர்கள். எவ்வளவு கடனாளி என்பதை நீங்களே முடிவு செய்துகொள்ளுங்கள்.

கமுதி திராவிடமணி

தனபாக்கியத்துக்கு வீட்டில் இருக்கவே பிடிக்கவில்லை. மிச்சம் மீந்தது எது இருந்ததோ சாப்பிட்டுவிட்டுக் குழந்தைகள் விளையாடப் போய்விட்டார்கள். ஒன்றும் செய்யாமல் உட்கார்ந்திருப்பது தனபாக்கியத்துக்குக் கட்டிப் போட்டாற் போலிருந்தது. வழக்கம்போல் வேலைக்குப் போயிருந்தால், சுறுசுறுப்பாக நேரம் போக வழியுண்டு. வீட்டைப் பூட்டிச் சாவியைப் பக்கத்துக் குடிசை ஆயாவிடம் கொடுத்துவிட்டுப் புறப்பட்டாள் தனபாக்கியம்.

தண்ணீர் கொண்டு வருவதற்காகச் சமையலறைக்குச் சென்ற ஜகதாவுக்குத் திடீரென்று தலை சுற்றுவது போலிருந்தது. பித்தக் கிறுகிறுப்பாக இருக்குமோ என்று நினைத்தாள். ஆனால் மார்பில் பளிச்சென்று ஆயிரம் ஈட்டிகளைப் பாய்ச்சினாற்போல் ஏன் இந்தப் பொறுக்க முடியாத வலி! எப்படியோ தன்னைச் சமாளித்துக்கொண்டவாறு ஒருசொம்பு நிறையத் தண்ணீர் எடுத்துக்கொண்டு பூஜை அறையை நோக்கி வந்தாள்.

''இந்தாப்பா தண்ணி'' என்று கூறிக் கொண்டே பூஜை அறைக்குள் நுழைந்த அவள் இரண்டடி முன்னே சென்றிருக்க மாட்டாள். மறுபடியும் நெஞ்சில் பொறுக்க முடியாத வலி! நிற்க முடியாமல் கால்கள் தடுமாறின. கண்களை இருட்டிக் கொண்டு வந்தது. செம்பு கையிலிருந்து நழுவத் தடாலென்று தரையில் சாய்ந்து விட்டாள்.

சுத்தியலும் கையுமாக மறைந்து நின்றிருந்த வீரப்பன், தான் செய்ய நினைத்த வேலை இவ்விதம் தற்செயலாகவே நிகழ்ந்து விடுமென்று சிறிதும் எதிர்பார்க்கவில்லை. முன்னே விரைந்து சென்ற அவன், தரையில் மண்டியிட்டு, அவளுக்குச் சுவாசம் இருக்கிறதா என்று மூக்கருகே விரலைக் கொண்டு போய்ப் பார்த்தான். மூச்சு நின்றுபோயிருந்தது. நாடியைப் பிடித்துப் பார்த்தான். துடிப்பே இல்லை. கைதுவண்டு கீழேவிழுந்தது. மாரடைப்பால் சாவு! கொலைப் பழிதன்னைச் சேராது என்ற போலி நிம்மதியுடன் அவன் செயல்பட ஆரம்பித்தான்.

அவனது கரங்கள் வேகமாக இயங்கின. தங்க நகைகளை ஒன்றுவிடாமல் கழற்றி எடுத்துக்கொண்டான். கண நேரத்துக்குப் பின் வைரக் கம்மல்களையும் கழற்றி எடுத்துக் கொண்டான், எல்லாவற்றையும் மேல் துண்

டில் போட்டுச்சுருட்டி கைப்பையில் திணித்து, சுத்தியல் முதலியவற்றை மேலாக வைத்துக் கொண்டு அவன் அங்கிருந்து புறப்படத் தயாரானபோது...

''அம்மா! அம்மா!'' — வெளியே இருந்து தனபாக்கியம் அழைக்கும் குரல்.

வீரப்பன் சட்டென்று பாய்ந்து ஹாலில் இருந்த குளிர் பதனப் பெட்டிக்குப் பின்னுல் போய்ப் பதுங்கிக்கொண்டான்.

''அம்மா, வாசக் கதவைத் திறந்தாப்பல விட்டுட்டு உள்ளே என்ன செய்துக்கிட்டிருக்கீங்க?'' என்று கேட்டுக் கொண்டே தனபாக்கியம் ஹாலுக்கு வந்து நின்று ஒரு கணம் சுற்று முற்றும் பார்த்தாள்.

பார்வை பூஜை அறைப் பக்கம் சென்றது.

தரையில் மல்லாந்து விழுந்து கிடந்த ஏஜமானி அம்மாளின் உருவத்தைக் கண்டதும் அவள், ''அம்மா!'' என்ற அலறலுடன் அருகே ஓடினுள்.

எஜமானி அம்மாளின் உயிரற்ற உடல் நகைகளை யெல்லாம் இழந்த வெறுமைத் தோற்றத்துடன் காட்சியளித்ததைக் கண்டு அவளது நெஞ்சம் ஓலமிட்டது. கூச்சலிட்டு ஆட்களைக் கூட்டுவதற்காக அவள் வெளியே ஓடியபோது... வாயில் நடையில் விடப்பட்டிருந்த் செருப்பு.... இது....

கூச்சலிடுவதற்கு ஆயத்தமா யிருந்த குரல் கப்பென்று உள்ளடங்கிப் போயிற்று. பதற்றம், பரபரப்பெல்லாம் எங்கோ மறைந்தன. உடல் முழுவதும் பீதியால் வியர்த்தது. கண நேரம் கூட அங்கே இருந்தால் ஆபத்து என்றுஉணர்ந்தாள். அடிமேல் அடி எடுத்து வைத்துக் கதவருகே வந்தாள். கதவை லேசாகத் திறந்து வெளியே யாருமில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டதும் செருப்பு இரண்டையும் எடுத்துப் புடவைத் தலைப்பில் மறைத்துக் கொண்டு சட்டென்று வெளிக்கிளம்பி வேகமாக வீதியில் நடந்தாள்.

இப்போது அவள் செய்ய வேண்டுவது என்ன? தன் கணவன்தான் அந்தப் பாதகத்தைச் செய்தவன் என்பதில் அவளுக்குச் சந்தேகமே இல்லை. அவன் விட்டுச் சென்றிருந்த செருப்பே அதற்குச் சாட்சி!

தன் கணவன்தான் அந்தக் கொலையையும் திருட்டையும் செய்தான் என்று ஊரறியச் சொல்வதற்கும் அவள் மனம் துணியவில்லை. தானே தன் கணவன் தூக்கில் தொங்குவதற்குக் காரணமாக இருக்க முடியுமா?

உடம்பில் ஜீவனே அற்றுப் போனது போன்ற சோர்வுடன் வீடு திரும்பிய அவள், அங்கமெல்லாம் ஓய்ந்து துவள, அப்படியே தரையில் படுத்து விட்டாள். எல்லையில்லாத அசதி அவளை ஆட்கொண்டது. உறக்கம் அவளது உணர்வுகளை மறக்கச் செய்தது.

அவள் மீண்டும் கண் விழித்தபோது அந்தப் பயங்கர நிகழ்ச்சி பற்றிய நினைவெல்லாம் மறுபடியும் அவளது மனத்தில் வந்து மோதின. 'எப்படிப்பட்ட உத்தமி அந்த அம்மாள்! அவளது உயிரைப் பறித்த பாதகன் யாரென்று தெரிந்தும் மனதறிந்து மூடி மறைத்தேனே! என் மனச்சாட்சி என்னை மன்னிக்குமா? கூடாது. விளைவு என்ன ஆனுலும் சரி, எனக்குத் தெரிந்த உண்மையை ஊரறியச் சொல்லியே தீரவேண்டும்.'



ஆசிரியர்: ''பானிபட்டைப் பற்றிக்கேட்டா உங்க பையன் படாபட்டைப் பற்றிச் சொல்றுன், சரியான சினிமா பைத்தியம் போலிருக்கே?

நண்பர்: அதெல்லாம் ஒண்ணுமில்லே. நீங்க சந்தோஷப் படுவீங்கன்னு அப்படி சொல்லியிருப்பான்! —அ. தெ.

இந்தத் தெளிவு பிறந்ததும் அவள் பரபரப்புடன் வெளியே வந்தாள்.

அதே சமயம் ஒரு போலீஸ் வேன் அவள் குடிசையருகே வந்து நின்றது. என்ன? அவள் தகவல் கொடுப்பதற்குத் தேவையில்லாமல் குற்றவாளியைக் கண்டுபிடித்துவிட்டார்களா?

ஆனுல் இதென்ன! வேனுக்குள்ளிருந்து உயிரற்ற ஓர் உடலை அல்லவா இறக்குகிறுர்கள்! அது...

''ஐயோ! உங்களுக்கு எப்படி இந்தக் கதி நேர்ந்தது?'' என்று அலறியவாறு அருகே ஓடினுள் அவள்.

அந்த உடல் கருகினுற்போல் நீலம்பாரித்திருந்தது. 'தெய்வமே! உன் கோபமே இவரை இப்படிச் சுட்டெரித்து விட்டதா? தலை சுற்றுகிறதே! நினைவே தப்பிவிடும்போல் இருக்கிறதே!'

போலீஸ் அதிகாரி கடுத்தமான குரலில் கூறுவது காதில் விழுகிறது. — ''உன் எஜமானியைக் கொலை செய்யத் திட்டமிட்டு, அவங்க நகைகளைச் சூறையாடிய குற்றவாளி உன் புருஷன். தப்பியோடும் சமயத்தில், யாரோ உள்ளே வருவதை அறிந்து ஃப்ரிஜ்ஜுக்குப் பின்னுல் ஒளிந்து கொண்டிருக்கிருன். ஃப்ரிஜ்ஜின் பழுதாகியிருந்த எர்த் வயரில் கால் மாட்டிக் கொண்டு மின் தாக்குதலுக்குப் பலியாகி விட்டான்...''

அதற்கு மேல் அவர் பேசிய வார்த்தைகளை ஏற்காமல் புலனியக்கங்கள் ஒடுங்கிப்போக, நினைவிழந்து தரையில் சாய்ந்தாள் தனபாக்கியம். அவளது வாய் மட்டும் 'தெய்வ கோபம்... தெய்வ கோபம்' என்று முனகிக் கொண்டிருந்தது.

இந்த முறை கதவு 'கிறீச்' சிட்டதும் அரை நம்பிக்கையோடுதான் வாசல் பக்கம் பார்த்தாள் ஜானகி. ஆனால் அவள் நம்பிக்கை பொய்க்கவில்லை. வந்தது அவள் கணவர்தான்! பின்னே என்ன? ஒரு மணி நேரமாய் சலவைத் தொழிலாளி, போஸ்ட் உமன், பக்கத்து வீட்டு மாமி இப்படியாக அவள் எத்தனை முறைதான் ஏமாந்து போவாள்!

''உஸ்... அப்பாடா...'' பிரளயமாய்ப் பெருகும் வியர்வையைத் துடைத்துக்கொண்டார்.

ஆவலைக் கண்களில் தேக்கியபடி ''இந்த மோரைச் சாப்பிடுங்கோ'' என்று சாமர்த்தியமாக மோர் டம்ளரை நீட்டினாள் ஜானகி.

அவளை நிமிர்ந்து பார்த்தார். மோரை வாங்கினார். மளமளவென்று குடித்துவிட்டு டம்ளரை நீட்டினார்.

''உட்கார் ஜானகி... அந்த மாமி குணம் அன்னிக்கே தெரிஞ்சதுதானே! வைரத்-தோட்டிலேயே குறியாக இருக்கிறாள். நீ சொன்ன மாதிரி 'மாசாமாசம் ஐந்நூறு ரூபாய் சம்பளம் வாங்கறவதானே! ஒரு வருஷம் அவ சம்பாதிக்கலேன்னு நினைச்சுண்டு சேர்த்து வைச்சா வைரத் தோடு ஆறது' என்றேன்.'' கொஞ்சம் பெருமூச்சு விட்டுக் கொண்டார்.

ஜானகி மௌனமாக இருந்தாள். ஊடே பேசுவது அவருக்குப் பிடிக்காது. அவரே தொடர்வார்....

''பெண்ணைப் பெறுகிறதை விடப் புண்ணுக்குச் சுமக்கிறது எவ்வளவோ மேல்!... 'எப்படியாவது முடிச்சுடுங்கோ ஏடாகூடம் பண்ணிடாதீங்கோ'ன்னியே... அவ என்ன கேட்டா தெரியுமா?''

ஜானகி பொறுமையுடன் அவர் முகத்தையே பார்த்தபடி இருந்தாள்.

'''பாங்கிலே வேலை பார்க்கிற மாப்பிளே வேணும்னு ஆசைப்பட்டா மட்டும் போறுது! ஒரு வருஷத்திலே வேற நல்ல இடம் அமையாமப் போயிட்டா? இப்பவே வயசு இருபத்தஞ்சாச்சு... பொண்ணும், புடலங்காயும் முத்தினாக் கழிச்சுடுவா... ஒரு வருஷம் இதோ ஓடிடும். பல்லைக் கடிச்சுண்டு இருப்போம். ஜெயந்திக்கு மாப்பிள்ளையைப் பிடிச்சிருக்கு... குழந்தை மனசுதானே முக்கியம்!''

ஜெயந்தியிடம் இருந்த ஒரே ஒரு மாற்றம். கழுத்திலிருக்கும் மஞ்சள் கயிறு. அதே மாதிரி திருவல்லிக்கேணி வெங்கடாசலம் செட்டித் தெருவிலிருந்து வந்து வேலை பார்த்துக் கொண்டிருந்தாள். இன்னும் மாமியார் கடன் ஒன்பது மாதம் பாக்கி.

கனுவுக்குப் போய் மஞ்சள்தீற்றிக்கொண்டு வந்தாள். 'இந்தத் தடவை நோன்பு இராத்திரி ஒரு மணிக்கு வந்ததே' என்று அலுத்துக்கொண்டு மாமியார் காரடையான் நோன்பு நோற்றதும் சிரமத்தைப் பார்க்காமல் ஆட்டோவில் கொண்டு விட்டு விட்டாள்.

குமாரை நினைத்தபோதுதான் ஜெயந்திக்குச் சிரிப்பாய் வந்தது. 'இதென்ன கோழைத்தனம்! அம்மா முந்தானையில் ஒளிந்து கொண்டு... பேசாமல் வைரத்தோட்டையே கல்யாணம் பண்ணிண்டிருக்கலாம்! பழைய தலைதீபாவளி மாப்பிள்ளை மாதிரி திருட்டுப் பூனை பார்வையோடு எத்தனை தரம் தான் தண்ணீர் குடித்திருப்பார்!

மேஜையில் பைல்கள் குவிந்திருந்தன. இன்றைக்கு ஹேமா லீவு. இரண்டு பேருக்கும் கிட்டத்தட்ட ஒரே நேரத்தில் கலியாணம்.... மசக்கை தலை தூக்க முடியலையாம்... நேற்றே சொன்னாள், இன்று லீவு போடப் போவதாக!

''கிணிங், கிணிங்...'' போன் கூப்பிட்டது. ''ஹலோ'' – ஜெயந்தி நினைவுகளை உலுப்பிக் கொண்டு பேசினாள்.

''புரையோடிய புண்கள்''

இன்ஸ்டால்மெண்டிலே வைரத் தோடா? ஏதோ பொண்ணு சம்பாதிக்கிறான்னுதான் இருபது பவுனுக்கு ஒத்துண்டேன். முப்பது பவுன் நகையும், வைரத் தோடுமா வந்த பொண்களைக் கழிச்சான்'னு அடுக்கறா.''

''கடைசியிலே என்னதான் சொன்னா?''

'''வைரத் தோடு வர்றவரை பொண்ணு உங்க வீட்டிலேயே இருக்கட்டும். அதுக்குப் பின்னாலேதான் சாந்தி முகூர்த்தம். ஒரு வருஷமும் சம்பளம் 'டாண்ணு' ஒண்ணந் தேதி இங்கே வந்துடணும். இல்லேன்னா வைரத் தோடு வர்றதுக்குள்ளே பொண்ணு வயத்தைத் தள்ளிண்டு நிப்பா'ங்கறா.''

''இவ்வளவுதானே?'' ஜானகியை ஆச்சரியத்தோடு பார்த்தார் ஜகந்நாதன். ''என்ன இவ்வளவு சுலபமாச் சொல்லிட்டே?''

இது அவளுக்கேதான்! அந்தக் குரல்... அவளுக்கு மெய் சிலிர்த்தது.

பாரதி சிலை அருகே அன்று மாலை அவள் காத்திருக்க வேண்டுமாம். ஏதோ முக்கியமான விஷயமாம்!

போனை வைத்து விட்டான் குமார். எதற்காக இந்தச் சந்திப்பு?

குமார் ரொம்ப டிரிம்மாக இருந்தான். ஜெயந்திதான் களைத்திருந்தாள். அவன் சொல்லச் சொல்லக் களைப்பு மேலும் கூடியதுதான் மிச்சம்!

''என்ன ஜெய்... பேசாம இருக்கே? உனக்கு ஆசையே இல்லையா?''

ஜெயந்தி தீவிரமாய்ச் சிந்தித்தாள். ''ஆசை வேறு, நடப்பு வேறு... நாம அக்கினி

சாட்சியாய்த் தாலி கட்டிண்ட கணவன் — மனைவி. திருட்டுத்தனமாய்...தேவைதானு?''

ஜெயந்தியின் மறுப்பு குமாரின் முகத்தில் இறுக்கத்தை ஏற்படுத்தியது.

''வைரத்தோடு வந்து நீ வாழ வரும் போதுஅம்மாவுக்கு மருமகளாக இருக்கலாமே தவிர, என் மனைவிங்கறது வெறும் பட்ட மாகத்தான் இருக்கும்.''

பிளாக் மெயிலா? பயமுறுத்தலா?

''சாந்தி முகூர்த்தம்கிறது நாமா நிர்ண யிக்கிறதுதானே? தேவ முகூர்த்தமா? அது ஆசைப்பட்டபோது நடக்காம...? தவிக் கிற போதுதான் தண்ணீர் வேணும்... அப்புறம் குடம் குடமாக் குளிச்சாக் கூட முதல் வறட்சி மறந்துடுமா?'' — குமார் பேசிக்கொண்டே போனுன்.

ஜானகி வாசலுக்கும்உள்ளுக்குமாக் நூறு தடவையாவது அலைந்திருப்பாள். ஜெயந்தி எப்போதும் இவ்வளவு நேரமாக்கியதில்லை.

''ஏண்டி லேட்?'' பயந்து கொண்டேதான் கேட்டாள் ஜானகி.

''எல்லா விசாரணையும் வாசல்லேயே தானு? கொஞ்சம் பொறுமையா இரும்மா, நாளைக்கு லீவு போட்டிருக்கேன். குழந்தை களும் அப்பாவும் வெளியே போன பிறகு... இது விவரமாய்ச் சொல்ல வேண்டியது...''



ஜானகிக்கு 'என்னவாகியிருக்கும்' என்று ஆவல் மண்டையைக் குடைந்தது.

“ராத்திரியெல்லாம் புழுவாத் துடிச்சிண்டிருந்தேன். பூ, இவ்வளவுதானா?''

“என்னம்மா, இவ்வளவு லேசா சொல்லிட்டே?''

“மாப்பிள்ளை சொன்ன மாதிரி என்னிக்கிருந்தாலும் அவர் சொத்து. ஒரே ஒரு குறை... அவரும் உன்கூட வந்திருந்தா ஆரத்தி கரைச்சிருப்பேன். என்னையும் அவங்கம்மா மாதிரி நினைச்சிட்டேளே... நான் பொண்ணைப் பெத்தவடீ...''

ஜானகியின் முகத்தில் அலாதி நிம்மதி. ஜெயந்திக்கு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை.


“ஒரு விஷயம் சொல்றேன் கேட்டுக்கோ... எனக்குச் சாந்திமுகூர்த்தம் ஆகிறப்போ நீ வயத்திலே ரெண்டு மாசம்.''

ஓ, தாய்க்கிட்டது தலை மகளுக்கா? மேலே தொங்குகிறது பாம்பு என்கிறாள் அவள். இல்லை பழுதை என்கிறாளே அம்மா! போதாக்குறைக்கு மாப்பிள்ளையை அட்ஜஸ்ட் செய்து கொள்ளும்படி அறிவுரை வேறே!

பழத்தைச் சுவைத்த மந்தி மரத்தை மறந்துவிடுமா? நாளைக்கு வருகிறேன் என்று குமார் போன் பண்ணப் பகலில் ஜெயந்தி அரைநாள் லீவு போட்டுவிட்டு, பெர்மிஷன் எழுதிவிட்டு வீட்டில் இருக்க ஜானகியே கோயிலுக்குப் போறேன் என்ற பெயரில் வீட்டை ஒழித்துக் கொடுக்க... குமாருக்குக் கொண்டாட்ட மாயிற்று.

“என்ன ஜெய்... இப்படி!... பேசாம ஒரு லேடி டாக்டரைப் பார்த்துடு... படிக்காத பெண்ணுட்டம் இதைப் பெரிசுபடுத்தலாமா? அம்மா இதை ஒத்துக்கவே மாட்டா. தா, தைன்னு குதிப்பா.. அவ பழங்கால மனுஷி... தேவையில்லாத பிரச்னை...''

“இதோ பாருங்கோ... இது நமக்கு முதல் குழந்தை. இதை அழிக்க எனக்கு மனசு வரல்லே. நீங்க ஆண். சுலபமா சொல்லிட்டேள்! உங்களுக்குச் சொல்லத் தைரியம் இல்லேன்னா உங்கம்மாகிட்டே நான்சொல்றேன். நான் விபசாரம் பண்ணியா கருவைச் சுமந்திண்டிருக்கேன்? ஊரெல்லாம் தூஷிக்கிறதை விட...''



“அதிகப் பிரசங்கி'' — குமார் எரிந்து விழுந்தான். கோபத்தில் அவன் முகம்தான் எத்தனை விகாரமாக மாறுகிறது!

'மாப்பிள்ளை சொல்றதுதான் சரி'—ஜானகியும் நச்சரித்தாள். குமார் அதற்குப் பிறகு ஜெயந்தியை நேரில் சந்திக்கவே இல்லை. ஆனால் தினம் போனில் 'டாக்டரைப் பார்த்தாயா?' என்று அக்கறைபோடு விசாரித்தான். இந்த அழகில் சொல்லவே அருவருக்கும் மிரட்டல்கள் வேறு! குமாரோடு மீதிக் காலத்தைக் கழிக்க வேண்டும் என்ற நினைப்பே அவளுக்கு வெறுப்பாயிருந்தது.

என்ன ஆண்மகன் இவர்! முதன் முதல் தந்தையாகப் போகிறோம் என்றுகர்வத்தோடு ஏற்றுக்கொள்வதற்குப் பதில், “இது என் குழந்தையே இல்லை என்று சொல்லிவிடுவேன்' என்று சொல்ல வெட்கமாக இல்லை!

வேறு வழியில்லை என்றபோது அருவருப்போடுதான் லேடி டாக்டரைப் போய்ப் பார்த்தாள்.

'என்னம்மா இது... செய்துகொள்ளவேண்டும் என்று முடிவெடுக்கும் பட்சத்தில் முன்னாலேயே வரக்கூடாதா? இது 'முதல்' என்கிறாய். ரொம்பக் கஷ்டப்படுவாய். இருந்துவிட்டுப் போகட்டுமே'என்றாள்லேடிடாக்டர்.

அவளுக்கென்ன தெரியும் இவள் பிடுங்கல்!

கடைசியில் ஜானகியும் வற்புறுத்தக் கையெழுத்து வாங்கிக்கொண்டுதான் செய்தாள். மாலையில் வீடு திரும்பிவிட்டார்கள். ஜெயந்திக்கு எல்லாம் வெறுமையாக இருந்தது. இரண்டு மாதமாக அவளை மயக்கமென்றும், வாந்தி யென்றும் படுத்தி வைத்த கரு இப்போது வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டது என்று நினைத்தபோது எல்லாமே சூன்யமாக இருந்தது.

மறுநாள் ஜானகி தடுத்தும் கேளாமல் பச்சைத் தண்ணீரில்தான் குளித்தாள். அதுவோ, இல்லை, மன ஏக்கங்களோ, உடல் பலவீனமோ ஜன்னி கண்டு விட்டது.

கண்டபடி பிதற்றினாள். டாக்டர் வந்து பார்த்தார். மாத்திரை களும் ஊசியுமாக வைத்தியம் நடந்தது.

ஜகந்நாதனுக்கு விஷயம் தெரிந்ததும் ஜானகியை அவர் பார்த்த பார்வை அவள் ஆயுளுக்கும் போதும்! மாமியார் வீட்டுக்குச் செய்தி போயிற்று. எல்லாரும் ஓடிவந்தனர்.

ஜெயந்தியை ஆஸ்பத்திரியில் அட்மிட் பண்ணக் குமார்தான் உதவினான். திரும்பி உடலைக் கொண்டு வந்து கர்மாக்களைச் செய்ததும் அவன்தான்! ஒரு வைரத் தோடு வைரமான அவள் வாழ்வையே அறுத்துவிட்டது. இனிமேல் மாமியாரிடம் “என் பெண் வைரத்தோட்டுக்காகத் தவணை கட்டிய சுங்கப் பணத்தைத் திருப்பித் தாருங்கள்'' என்று கேட்க முடியும்?

'அவளுக்குக் கொடுப்பினை இல்லை' என்று மாமியார் முந்தானையில் கண்களை ஒற்றிக்கொண்டு மண மேடையில் அமர்ந்திருக்கும் குமாருக்கு அட்சதை போடுகிறாள். அடுத்த மருமகள் அவளுக்குக் கிடைத்து விட்டாள்!

ஆனால் வைரத் தோட்டுக்காக வாழ்வையே பணயம் வைத்த ஜெயந்திகளின் பிரச்னை என்று தீரும்? தீர்த்து வைப்பவர் யார்?

பஸ்ஸின் புகை, மூக்கைத் திணற அடிக்க, புழுதி அரித்த கண்களைத் துடைத்துக் கொண்டே திருவாளர் முனுசாமியைப் பார்த்தார் டெப்டி இன்ஸ்பெக்டர்.

பார்வையின் அர்த்தத்தைப் புரிந்து கொண்ட முனுசாமி, ''போவலாமுங்களா சார்?'' என்றார் அடக்கத்தோடு. மனதுக்குள் முனுசாமிக்கு அவர் தம் கிராமத்தை இன்ஸ்பெக்ஷன் செய்ய வராமலிருந்தால் நன்றாயிருக்குமே என்ற நப்பாசை!

''எப்படி?'' என்று கேட்ட டெப்டிக்குத் தாமதிக்காமல் பதில் சொன்னார், முனுசாமி: ''நம்ம சைக்கிள்லேதான்!''

அரட்டவாடிக் கூட்டு ரோடு. மார்ச்சு மாத வெய்யில். புரசப்பட்டு ஓராசிரியர் பள்ளி இன்ஸ்பெக்ஷனுக்காக பஸ்ஸில் வந்து இறங்கிய டெப்டியை வரவேற்க வந்திருந்தவர் ஓராசிரியர் முனுசாமி.

காலை வெய்யிலே பாம்பு போல் சீறி ஏறிக் கொண்டிருந்தது. கூட்டு ரோடிலிருந்து அரட்டவாடி நாலு மைல். அங்கிருந்து புரசப்பட்டு இரண்டு மைல். பஸ் வசதியோ, சாலை ஒழுங்கோ இல்லை.

டெப்டி, சைக்கிளையே பார்த்துக்கொண்டு நின்றார்.

பழைய சைக்கிள். மெருகு வழுக்கையான மணி இருந்தது. ஆனால் அடிக்க உதவும் நாக்கின்முக்கால் பகுதி உடைந்து போய் இருந்தது. முன் பிரேக்கின் இணைப்புக் கம்பி, முடமாகித் தொங்கிக் கொண்டிருந்தது. பின் பிரேக்கின்கட்டை, இடுக்குக்குச் சமமாகத்தேய்ந்துபோய், முன்சக்கர பட்டன்கள் மழமழவென வாழைப் பழம் போல்... அதில் இரண்டு இடங்களில் பெரிய பேட்சுகள்,, ஒன்று நீட்ட வட்டத்தில், இன்னொன்று செவ்வக வடிவில். பின் சக்கரம் பரவாயில்லை. ஒரே ஒரு இடத்தில் ம்ட்டும் இரை எடுத்த பாம்பு வயிறு... உள்ளே ஒரு துண்டு டயர் இருந்தது.



''ஏன்'யா... இந்த வண்டி தாங்குமா?'' டெப்டி சந்தேகப்பட்டார். முனுசாமி உடனே இன்சல்ட் ஆகிவிட்டார்.

''என்னுங்க சார், இப்டிக் கேட்டுட்டீங்களே! பழைய இங்கிலீஷ் ராலி சார்... இதுல எனக்குப் பத்து வருஷ சர்வீஸ்... சும்மா ஒக்காருங்க சார்!''

முனுசாமி பவ்வியமாகச் சைக்கிள் கேரியரைத் துடைத்தார். டெப்டியின் கைப் பையை வாங்கி ஹேண்ட்பாரில் மாட்டிவிட்டு லாகவமாக ஏறி உட்கார்ந்தார். ''ஏறுங்க சார்!''

டெப்டி 'கடவுளே!' என ஏற முயலும் போது ஓர் எச்சரிக்கை: ''சார்! பாத்து ஏறுங்க... கேரியர் போல்ட்டு கொஞ்சம் லூசு... வெயிட்டை எல்லாம் முன்னியே போட்டு ஒக்காரணும்...''

''சரி...சரி!''

டெப்டிக்கு ஏக எரிச்சல். இப்படி எல்லாம் போய் இன்ஸ்பெக்ஷன் செய்ய வேண்டி இருக்கே! பத்திரமாக ஏறி உட்கார்ந்து விட்ட திருப்தியில் கண்களைச் சுழல விட்டார். மழைப் பசை காணாத கொல்லை மேடு... அங்கங்கே காய்ந்து நொடிந்து கிடந்த துவரைச்சருகுகள்... அறுவடையான சோளத்தின் கருகிய தாளடிகள். மண்ணையே மேய்வன போன்ற சில எலும்பு மாடுகள்... தலையைக் குனிந்து குனிந்து ஒன்றும் பெறுமல் நிமிர்ந்து ஓடிக் கொண்டிருந்த செம்மறி ஆடுகள்... கையில் துரட்டோடு நடந்த ஓர் அரை நிர்வாணச் சிறுமி....

...ன்ஸ்பெக்ஷன்!

...ஷிபூர் ரஹீம்

...)/= பெற்ற ...வது பரிசுக் கதை

...ர் கல்கி ...னவுச் ...கதைப் ...ட்டி '81



''தடக்...தடக்...தடக்...''

டெப்டிக்கு ரயில் பயண நினைவு வந்தது. போர்க்கின் வழியே ஊதல் டயர் பிரவேசிக்கும்போதும், 'பேச்' போட்ட பகுதி பூமாதேவியை அணுகும்போதும் வரும் அதிர்ச்சி. தண்டவாள இணைப்புக்களில், ரயில் ஏற்படுத்தும் அதிர்ச்சியைப் போல!·

'சே....! மனுஷன் பொணம் மாதிரி இருக்கானே!' வேர்வையைத் துடைத்துக் கொண்டார் முனுசாமி. நல்ல வேளையாகப் பள்ளிக் கூடத்தை ஜாக்கிரதையாக நேற்றே பெருக்கி விட்டிருந்தார். போனவுடன் பூட்டை இழுத்துத் திறக்க வேண்டும். மணி அடிக்க வேண்டும். அட்டெண்டன்ஸ் ரெஜிஸ்டரைத் தூசி தட்டி வைக்க வேண்டும். மூக்குறிஞ்சிப்பையன்களை ஒவ்வொரு வீடாய்ப் போய்க் கூப்பிட வேண்டும்..... சுள்ளி பொறுக்க ஒருத்தன்... நண்டு பிடிக்க ஒருத்தன்... மாடு மேய்க்க ஒருத்தன்... இப்படிப் போய்விட்டவர்கள் போக மீதி எத்தனை பேர் சிக்குவானோ.... நாமதான் சொல்லி இருக்கோமே... மதியம் உப்புமாவு போடறதா... அதனாலே வந்துடுவாங்க. இருந்தாலும்...

முனுசாமியை ஏதோ ஒன்று பயமுறுத்தியது. அந்த நினைவு வந்த உடனே குப்பென வியர்த்து விட்டார். உடம்பில் ஒரு நடுக்கம். ஹேண்டில் கட்டு மீறித் திரும்ப, முன் சக்கரம் மணலில் வாட்டமாகப் போய்ப் புதைந்தது.

விழிப்பாக இருந்ததால் டெப்டி கீழே குதித்துவிட்டார். நீண்ட காலை ஊன்றிச் சமாளித்து நின்ற முனுசாமி அசடு வழியச் சிரித்தார்.

''என்னையா அது?'' — எரிந்து விழுந்தார் டெப்டி.

''மணல் சார்!'' அடக்கத்தோடு கூறி முனுசாமி, இறங்கி சைக்கிளை நிமிர்த்தினர்.

''ஏன் ஓரமாய்ப் போனீர்?'' அதிகாரத் தோரணையில் அதட்டினர் டெப்டி.

''நடு ரோட்டு ஜல்லிக் கல்லு சார். கொட்டக் கொட்டையா... டயுள்சுக்குக் கொஞ்சம் காத்து அதிகமா அடிச்சுட்டேன்.... டயர் நடு ரோட்டுலே தாங்காது சார்!''

டயரின் ஒட்டக முதுகுகள் டெப்டியைப் பயமுறுத்தின. முதுகில் வேர்வை அரிப்பு. முகத்தையும் கண்ணுடியையும் ஈரக் கைக் குட்டையால் துடைத்துக் கொண்டார். முன்பைவிட அதிகமாக அழுது வடிந்தது கண்ணுடி.

''இன்னும் எத்தனை மைலுயா?''

''இன்னும் மூணும் ரெண்டும் அஞ்சு மைல் சார்!'' டெப்டியின் பலவீனம் முனுசாமிக்கு இப்போது மெல்லப் புரிய ஆரம்பித்தது. ''இப்ப ஒரு மைலுதான் சார் வந்திருக்கோம்!''

''போய்டலாம்... ஏறுங்க சார்....!'' கொஞ்சம் வேகமாகவே மிதித்தார் முனுசாமி.

ஷூ போட்ட காலோடு கோபமாக ஓடி லபக்கென ஏறினர் டெப்டி.

தடார்....

என்ன நடந்தது? குதிகாலால் பிரேக் போட்டுத் திரும்பினர் முனுசாமி.


''யோவ்... யோவ்....!'' டெப்டி அலறும் குரல். நடு ரோட்டில் இரண்டு கால்களை நீட்டிக்கொண்டு, இரண்டு கைகளைப் பின்னால் ஊன்றிய நிலையில் கிடந்தார் டெப்டி. ஸ்டேண்ட் இல்லாத சைக்கிளைக் கீழே படுக்கப் போட்டு விட்டு டெப்டியின் உதவிக்கு ஓடினர் முனுசாமி.

''என்ன சார்? அடிகிடி பட்டுதா?''

அருள்வாக்கு

மதமாற்றமும் மேம்பாலமும்!

ரயிலடியில் பிரயாணிகள் வந்து இறங்கியதும் ஜட்காக்காரன், ரிக்ஷாக்காரன், டாக்ஸிக்காரன் என்று பலபேர் வந்து சூழ்ந்து கொள்கிறார்கள். எவனுடைய வண்டியில் ஏறிக்கொண்டாலும் போக வேண்டிய இடத்துக்குப் போய்ச் சேரலாம். வண்டிக்காரர்கள் கிராக்கி பிடிப்பதற்காகப் போட்டி போடுவதைத் தவறு என்று சொல்வதற்கில்லை. அது அவர்கள் பிழைப்பு. ஆனால் கடவுள் என்கிற ஒரு லட்சியத்துக்கு அழைத்துச் செல்வதற்காக வெவ்வேறு மதஸ்தர்கள் போட்டி போட்டுக் கொண்டு மத மாற்றத்தில் முனைவது அர்த்தமற்ற காரியம்.



நதியின் மேல் பாலம் போட்டிருக்கிறது. அதில் பல வளைவுகள் இருக்கின்றன. எல்லா வளைவுகளும் ஒரே அளவாகக் கட்டப்பட்டவை தாம். ஆனால் ஒவ்வொரு வளைவுக்கும் கிட்டத்தில் இருப்பவனுக்கு அந்த வளைவே பெரிதாகவும் மற்றவை சின்னதாகவும் தெரியும். இப்படியே அந்தந்த மதஸ்தர்களுக்கும் தங்கள் மதமே பெரிதாகத் தெரிவதால், பிறரை அதற்கு அழைக்கிறார்கள். ஆனால் எல்லா வளைவுகளும் ஒரே அளவுதான். யாரும் தாங்கள் பிறந்த மதத்தை விட்டு விலக வேண்டியதில்லை.

மதங்களுக்கிடையே கோட்பாடுகளிலும் அநுஷ்டானங்களிலும் சில வித்தியாசங்கள் இருப்பதில் தவறில்லை. எல்லா மதங்களையும் ஒரேபோல் ஆக்க வேண்டிய அவசியமில்லை. ஒரே மாதிரி ஆக்காமல் எல்லா மதஸ்தர்களும் மனத்தில் ஒற்றுமையோடு இருப்பது தான் அவசியம். யூனிஃபார்மிடி அவசியமில்லை. யூனிடி இருப்பதே அவசியம்.

—ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்

''ஒண்ணுமில்லேய்யா!'' சிவந்துபோன உள்ளங் கைகளைப் பார்த்துக் கொண்டேபேசினார் டெப்டி.

''கேரியர் போல்ட்டு லூசு... பாத்து ஏறுங்கன்னு அப்பவே சொன்னேனே சார்!'' மிகுந்த பரிவோடு டெப்டியின் உடையில் பிடித்திருந்த தூசுகளைத் தட்டி விட்டார் முனுசாமி. வானத்தைப் பார்த்து வெள்ளிச் சிரிப்பு வீசிக் கொண்டிருந்த கண்ணாடியை எடுத்துத் துடைத்தார். ''நல்ல வேளை... கண்ணாடி ஒடையலே!''

கண்ணாடியை வாங்கி அணிந்துகொண்ட டெப்டி மறுபடியும் உள்ளங் கைகளைப் பார்த்துக்கொண்டார்.

''வாங்க சார்!'' முனுசாமி மீண்டும் சைக்கிளுக்கு அழைத்தார்.

''வேண்டாம்யா...''

''பின்னே எப்படி சார்?''

''சைக்கிளைத் தாய்யா. நான் ஓட்டறேன். நீ பின்னாலே ஒக்காரு.''

''இது தகாது சார்!'' பய பக்தியோடு கூறினார் முனுசாமி. ''நீங்க ஒக்காருங்க சார். நானு பாத்து ஓட்டறேன்...''

''குடுய்யா!'' — வெடுக்கெனப் பிடுங்கிக் கொண்ட டெப்டி ஏற ஆயத்தமாகும் போது, ''கொஞ்சம் இருங்க சார்!'' எனத் தடுத்தமுனுசாமி,கீழேயே பார்த்துக்கொண்டு நடந்தார். ரண்டு வாஷர்கள்.. ஒரு நட்டு.. ஒரு போல்டு...பொறுக்கி எடுத்துக் கொண்டு சைக்கிள் அருகே போனார். பழைய பாம்பன் பாலம் போல 45 டிகிரி கோணத்தில் இருந்த கேரியரைத் தட்டி அடக்கினார். போல்டு வாஷர் நெட்டு ஆகியவை போட்டுத் திருகினார். நெட்டு இறுகாது எனத் தெரியும். இருந்தாலும் சுழன்று கொண்டே இருந்த அதைத் தனக்குத் திருப்தி ஏற்படும்வரை திருகிவிட்டு, ''போலாம் சார்'' என்றார்.

சைக்கிள் ஒரு பக்கமாகவே இழுத்தது. ''என்னையா ஒரே பக்கமா...'' ஆச்சரியத்தோடு கேட்டார் டெப்டி.

''அது அப்டித்தான் சார்... பேலன்ஸ் பண்ணி ஓட்டணும்...!''

''என்ன சைக்கிள்யா இது!'' டெப்டி சலித்துக் கொண்டார்.

''இங்கிலீஷ் ராலி சார்! இதுல எனக்குப் பத்து வருஷ சர்வீஸ்... வரப்பு மேலே கூட இதை ஓட்டுவேன்!''

''இதையா?'' டெப்டி சிரிக்க முயன்றார். இருமல் வந்தது. வழிந்து கொட்டிய வேர்வையைத் துடைக்க யோசித்தார். ஒரு கையை எடுத்தால், சைக்கிள் எங்கே பள்ளத்துக்கு ஓடுமோ எனப் பயந்தார்.

''என்னையா ரோடு!ஒரேகுழிப் பள்ளமா!''

''இது பரவாயில்லே சார்... அடுத்த மூணு மைலு இன்னும் மோசமா இருக்கும்.''

முனுசாமிக்கு வயிற்றைக் கரைத்தது.மனுஷன் சாமர்த்தியசாலியா இருக்காரே.. இன்னிக்கு இன்ஸ்பெக்ஷன் நடந்துடுமா? நெஞ்ச ஆழத்தில் ஒரு உறுத்தலான கனம்.

இப்போது சைக்கிள் மேட்டில் முக்கிக் கொண்டிருந்தது. டெபுடிக்கு மூச்சு இரைத்தது. நெற்றி வியர்வை கண்ணில் இறங்கி, கன்னத்தின் வழியே வாய்க்கு வந்து கரித்தது.

:பாரெக்ஸ்

கல்கி

குழந்தை பராமரிப்புப் போட்டி



முடிவு

நடுவர்கள்:

1. டாக்டர் லக்ஷ்மி திரிபுரசுந்தரி
2. திரு ஃபெர்னாண்டோ, ஃபாரக்ஸ் நிறுவனம்
3. ஆசிரியர், கல்கி

''என் குழந்தையின் முதலாண்டில் ஏற்பட்ட இனிய அனுபவங்கள்'' என்ற தலைப்பில் கட்டுரை எழுதிப் பரிசுபெறும் தாய்மார்கள்;

முதல் பரிசு ரூ 500
ஸ்ரீமதி வைஜயந்தி கிருஷ்ணன்
எல் 1. பி. சர்வமங்களாகாலனி
அசோக்நகர், சென்னை — 83

இரண்டாம் பரிசு ரூ 300
ஸ்ரீமதி சபியா ராஜா
w/o ஆர். என். ராஜாசாயபு
584, பூந்தமல்லிஹைரோடு
சென்னை — 29

இரண்டு மூன்றாம் பரிசுகள் தலா ரூ 200

1 ஸ்ரீமதி கீதா கண்ணன்
325, லாயிட்ஸ் ரோடு, சென்னை-14
2 எம். சுமதி
22 பி. 38 வது கிராஸ்ரோடு, 8 வது பிளாக், ஜெயநகர், பெங்களூர்-41

நான்காம் பரிசு தலா ரூ 100 பெறுவோர்:

1. எம். ஷமீம் பேகம், ஆலன்கொம்பு
2. குந்தவி ராமச்சந்திரன், சென்னை-86
3. லக்ஷ்மி சங்கரன், பம்பாய்-22
4. டாக்டர் ராதிகா பாலகிருஷ்ணன், சென்னை-14
5. எஸ். ரமா சுப்பிரமணியன், தர்மபுரி
6. ராஜேசுவரி நீலகண்டன், நியூயார்க்
7. கே. எஸ். சுந்தரவல்லி, முத்தரச நல்லூர்
8. அல்லி சோமசுந்தரம், திருநெல்வேலி-7

முதல் பரிசு பெற்ற கட்டுரை கல்கி செப்டம்பர் 6ந் தேதி இதழில் பிரசுரமாகும். இரண்டாம் பரிசுபெற்ற கட்டுரை செப்டம்பர் 13ந் தேதி இதழில் இடம் பெறும்.

மற்ற பரிசு பெறும் கட்டுரைகளிலிருந்து ரசமான பகுதிகள் செப்டம்பர் 20ந் தேதி கல்கி இதழில் பிரசுரமாகும்.

பங்கேற்ற அனைவருக்கும் ஆறுதல் பரிசுகள் (புத்தகம்) அனுப்பி வைக்கப்படும்.

''கஷ்டமா இருக்கா சார்?''

''இல்லேய்யா...'' மீண்டும் இருமினர் டெப்டி.

''இந்த மாதிரி இன்னும் இரண்டு மேடு தான் சார் இருக்கு!''

முனுசாமி எதிர்பார்த்தபடி பதில் ஒண் ணும் வரவில்லை. டெப்டி விடாக்கண்டனாய் மிதித்துக் கொண்டிருந்தார். திடீரென முனு சாமிக்கு ஒரு யோசனை. கீழே குதித்தவர், பின்னிருந்து சைக்கிளைத் தள்ள ஆரம்பித்து விட்டார்.

''யோவ்... என்னய்யா இது!''

''பரவாயில்லே சார்... நீங்க கஷ்டப் பட்றது எப்படியோ இருக்கு....!''

மேடு வரை தள்ளிக் கொண்டு வந்த முனு சாமி, இறக்கம் வந்ததும் பலத்தை யெல் லாம் போட்டு ஒரு தள்ளுத் தள்ளிவிட்டு ஏறி உட்கார்ந்தார்.

''சார் அந்த ஓடைக்கரை வரையிலும் இனிமே ஒரே எறக்கந்தான் சார்...''

சர்ரென்ற வேகம். திடீரென உயர்ந்த இதயத் துடிப்பைப் போல் அந்தத் தடக்... தடம்! காதோரம் காற்றுச் சீறியது. டெப்டி யின் உடம்பெல்லாம் அதிர்ந்தது. ஹேண்டில் பாரோடு அவர்கை அலைக்கழிய ஆரம்பித்தது.

நிலைமையை ஊகித்துக் கொண்ட முனு சாமி சரேலெனக் கீழே குதித்து விடுகிறார். சைக்கிள் பறக்கிறது.

''யோவ்....! பிரேக்....! பிரேக்....!''

டெப்டியின் அலறலுக்குப் பின்னல் ஓடிக் கொண்டே பதில் கத்துகிறார் முனுசாமி. ''குதிகால்! குதிகால்!''

''டமால்!'' அடுத்துச் சில நொடிகளில் இன்னொரு ''டமால்!''


ஓடைக் கரை ஓரம் இருந்த பெரிய சிமெண்ட் பைப்பில் மோதிச் சாய்ந்தது, சைக்கிள்,

ஓடைப் பள்ளத்தில் போய் விழுந்தார் டெப்டி.

சில நொடிகள் என்ன நடந்ததென்றே புலப்படவில்லை. மீண்டும் உணர்வு வந்த போது உலகமே நின்று நின்று சுற்றுவது போன்ற பிரமை.

மனைவி : நாம மாசா மாசம் கொஞ்சம் பணம் மிச்சம் பிடிக் கலாம்னு எதை நிறுத்தறது?

கணவன் : அடுத்த வீட்டுக் காரி என்ன வாங்கறுள்னு பார்க் கறதை நிறுத்து. —பிரியா பாலு



பொய் நொண்டலோடு வந்த முனுசாமி டெப்டியைத் தூக்கி நிறுத்துகிறார். காலை ஊன்றி ஊன்றி மெல்ல ரோட்டு ஓரம் வந்து நின்றார் டெப்டி.

''இப்ப என்ன சார் பண்றது... ரெண்டு வீலும் பர்ஸ்ட் ஆயிடுச்சி!''

டெப்டிக்கு ஆத்திரம் தலைக்கு ஏறியது.

''ஒம்ம சைக்கிளை அந்தப் பள்ளத்தில் போட்டுப் பொதச்சிட்டு நடவும்.''

அடப் பாவி!... இந்த மனுஷனுக்கு இன் னுமா இன்ஸ்பெக்ஷன் நினைப்பு?

''சார்... நடந்தா சார் வருவீங்க...?''

பரிவோடு கேட்ட முனுசாமியை எரித்து விடுவது போலப் பார்த்தார் டெப்டி.

தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு விதியே எனச் சைக்கிளைத் தள்ளிக்கொண்டு நடந்தார். காற்றில்லாத டியூபுகள் அடிக்கடி வெளியே வந்து சிரித்து முனுசாமியின் வயிற் றெரிச்சலைக் கொட்டிக் கொண்டன.

இனித் தப்ப வழி இல்லை.

வெந்து கரிக்கும் வெய்யிலில் அந்த ஓட் டைச் சைக்கிளின் முனகலைத் தவிர வேறு சத்தமே கேட்கவில்லை.

கொஞ்சம் ஆத்திரம் அடங்கின டெப்டி நடந்து கொண்டே கேட்டார்: ''இன்னும் ஒங்க சுடுகாட்டுக்கு எத்தனை மைலுய்யா?''

''அதோ... அந்த மோட்டுலேந்து சரிய்யா மூணு மைலு சார்!''.

டெப்டிக்கு இப்போது உள்ளுக்குள் விண் ணென்றது. இருப்பினும் வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

தூரத்தில் ஏதோ உறுமல் ஓசை... என்ன அது பஸ்ஸா? பத்தரை மணிக்குத்தானே செங்கம் பஸ்? ஒருவேளை ரிப்பேராகி லேட்டா கிளம்பி இருக்குமோ?

ஆர்ன் சத்தம் கேட்கிறது.

''என்னய்யா பஸ் வராப்பலே இருக்கு?''

''ஆமா சார்... பத்தரை மணிக்கே போயி விடுவான் கார்த்திகேயன் பஸ்... இன்னிக்கு லேட்டு போல இருக்கு.. இத உட்டா அடுத்து ஒரே ஒரு பஸ்ஸுதான்... ரெண்டே முக்கா லுக்கு.... சீக்கிரமாப் போயி இன்ஸ்பெக்ஷன் முடிச்சித் திரும்பின... ரெண்டே முக்கா கெடைச்சாலும் கெடைக்கும்... இப்ப மணி பன்னெண்டு...''

மளமளவென இயந்திர கதியில் ஒப்பு வித்தார் முனுசாமி.

ஹேண்டில்பாரிலிருந்த பையை வெடுக் கெனப் பறித்த டெப்டி, ரோடின் குறுக்காக ஓடிக் கையைக் காட்டினர். பஸ் நகர்ந்து கொண்டிருக்கும்போதே தாவி ஏறினர்.

''சார்...இன்ஸ்பெக்ஷன் சார்...'' பஸ் ஸின் பின்னல் ஓடினர் முனுசாமி.

''ரெக்கார்டெல்லாம் நாளிக்கி வீட்டுக்கு எடுத்தா!''

பஸ்ஸோடு தேய்ந்த குரலில் புளகாங் கிதம் அடைந்து நின்றார் முனுசாமி, நடு ரோட்டில்!

''கார்த்திகேயா... என்னைக் காப்பாத்தி னீப்பா!....''

இப்போது....?

ஓர் ஆரம்பப் பள்ளிக்கூடத்தின் ரெகார் டுகள் ஓ.கே. செய்யப்பட்டு விட்டன!

காதலகிடி தங்கமே கல்யாணப் பரிசாக....

வி. உஷா

வாழை கட்டிய தூண்களோடு விளையாடும் பட்டுப் பாவாடைக் குழந்தைகள்.

பன்னீர், சந்தனம், ரோஜாக்கள் நிறைந்த ரிஸப்ஷன் டேபிளில் கல்யாணத்துக்காகக் காத்திருக்கும் அடுத்த ஸெட் பெண்கள்.

லௌட் ஸ்பீக்கரில் ஒலிபரப்பாகும் 'ஒவ்வொரு துளியிலும் உன் முகம் தெரிகிற'தைக் கேட்டு ஜாடையுடன் ஸைட் அடிக்கும் இளவட்டங்கள்.

பட்டுப் புடவைகளைப் பற்றி, பேசும் கணவனின் பாக்கெட்டைப் பற்றிக் கவலைப்படாத பெண்கள்...

திருமணச் சடங்குகளை அவசரமாய் முடித்துவிட்டு அடுத்த கல்யாணத்துக்கு ஓடக் காத்திருக்கும் புரோகிதர்கள்.

லட்சிய தீபமாய் எரியும் ஹோம குண்டம்.

கண்களில் மையுடன் பார்வையில் மகிழ்வுடன் மணமகன் மனோஜ்.

நெற்றிச் சுட்டி, ஜிமிக்கி, சூரிய சந்திரர்கள் புல்லாக்கு, ராக்கொடி, அரக்குப் பட்டு, இவைகளுடன் சம்பிரதாய மணமகள் தருணா.

ஆனால் அவள் கண்களில்—

சந்தோஷத்தின் சாயல் இல்லை. மானின் மருட்சி இருந்தது.

மயக்கும் புன்னகை இல்லை. பயத்தின் பரிச்சயம் இருந்தது.

நகையாக நாணச் சிரிப்பில்லை. நடுக்கமான நாடி இருந்தது

''தருணா! இப்படி தலையைக் குனிஞ்சுகிட்டே இருந்தா அப்புறம் ஃபோட்டோல உன் நெத்திச்சுட்டியும் ராக்கொடியும்தான் விழும்.... பாரு, உன் முகத்தைப் பார்க்க முடியாம மாப்பிள்ளை இப்படியும் அப்படியும் நெளிஞ்சு கஷ்டப்படறார்.''

குபீரென்று கடலலையாய் எழுந்த சிரிப்பில் மெல்ல தருணா தலை நிமிர்கையில்—

அவனைப் பார்த்துவிட்டாள்.

லேசாய்க் கலைந்த தலையும், கசங்கிய ஷர்ட்டும், ஒல்லியும் இல்லாத பருமனும் இல்லாத இரண்டுங்கெட்டான் ஆகிருதியும்—

அவனேதான். அவனேதான்.

மணி.



அவன் ஏன் இங்கே வந்திருக்கிறான், கையில் பெரிய லெதர் பையும், முகத்தில் ஒரு வஞ்சகப் பார்வையுமாக....?

அவள் எழுதிய காதல் கடிதங்கள் அந்தப் பையில் இருக்குமோ? அவற்றைக் கல்யாணப் பரிசாய் மனோஜிடம் கொடுத்து வாழ்க்கை உதயத்தையே அஸ்த மனம் செய்துவிடப் போகிறானோ?

அவள் பயந்து நடுங்கிப் போனாள்.

தெய்வமே. இதென்ன சோதனை?

வாழ்வில் ஒரு நாளே வரும் இந்த மாலை சூடும் மணநாளை அனுபவிக்க முடியாமல் என்னை ஏன் வேதனைப்படுத்துகிறாய்?

'இந்தாங்கோ... இதைக் கெட்டியாப் பிடிச்சுக்குங்கோ... எங்கே, பொண்ணோட நாத்தனாரை அவ பின்னாடி ரெடியா நிக்கச் சொல்லுங்கோ... எங்கே மந்திரம் சொல்லுங்கோ....'

தருணா, மிஸஸ் தருணா மனோஜ் ஆனாள்.

"எக்ஸ்க்யூஸ் மீ... இந்த ஹம்பிள் ப்ரஸண்ட் என்னோடது....தயவு பண்ணி ஏத்துக்கணும் மிஸஸ் மனோஜ்.''

மணி தன் மர்மப் புன்னகை வெற்றிப் புன்னகையாய்ப் பளபளக்க அந்தத் தோல் பையை அவளிடம் நீட்டினான்.

''தாங்க்யூ''வற்றிஉலர்ந்துபோன குரலில்.

அவன் அங்கிருந்து போனதும் ரிஸப்ஷன் ஸோஃபாவில் அவளை அமர்த்திக்கொண்டான் மனோஜ். அந்த லெதர் பையை அவளிடமிருந்து வாங்கினான். திறந்தான்.

துடிதுடிக்கும் நெஞ்சுடன் அதைப் பார்த்தாள்.

கட்டுக் கட்டாய்க் கடிதங்கள். கடிதங்களேதான்.

''ஸீ தருணா.. மொதல்லயே உண்மையைச் சொல்லிட்டாத்தான் நம்ப ஃப்யூச்சர்ல எந்த ப்ராப்ளம் வந்தாலும் மிஸ் அண்டர்ஸ்டாண்டிங்வராது...ஸோ...சொல்லிடறேன்.''

திடுக்கிட்டபடி ஏறிட்டாள்.

''இந்த மீனாவை நான் லவ் பண்ணது உண்மைதான். பக்கம் பக்கமா நெறைய காதல் கடிதம் எழுதினதும் நிஜம்தான்... ஆனா அவளோட காதல் வெறும் பணத்துக்காகவும் பொருளுக்காகவும் மட்டுமே ஏற்பட்டதுன்னு என்னிக்குத் தெரிஞ்சுதோ அன்னிக்கே அவளைச் சுத்தமா மறந்துட்டேன். அதுல அவளுக்கும் அவ அண்ணனுக்கும் ரொம்பக் கோபம்... என்க்குக் கல்யாணம்னு தெரிஞ்சவுடனே நான் அவன் தங்கைக்கு எழுதின லவ் லெட்டர்ஸை உனக்கு ப்ரஸன்டேஷனாக் கொடுத்து நமக்குள்ள ஒரு பிளவை ஏற்படுத்தணும்னுதான் வந்தான்... கொடுத்தான். இதுதான் உண்மை. என்ன சொல்றே தருணா?''

'அவ்வளவுதானே?' என்பது போல் அவனைப் பார்த்துச் சிரித்தாள் முதன் முதலாக.



மறுபடியும் நம் தமிழ்த் திரை நாயகன் தனியொருவனாய்ப் புறப்பட்டு, ஆவேசத்துடன் போராடி சமூக விரோத சக்திகளை அழிக்கிறான். சாக்லெட், பால், தண்ணீர் போன்ற கன்ஸ்யூமர் அயிட்டங்களில் கணிசமாய் விஷம் கலந்து பின் அவதியுறும் மக்களுக்கு உடனடியாக மாற்று மருந்தையும் சப்ளை செய்து கொள்ளையடிக்கும் (ஜெய்) பரசுராம்; கூட 'சம்ச்சா' போட சயின்டிஸ்ட் மித்ரா (அட நம்பியார், வாரே வா!)வும், டி. எஸ். பி.யும் (வேற யார், மேஜர்தான்) இவர்களை எதிர்த்துப் போராட இடைவேளை வரைகாத்திருக்கும் நாயகன், டாக்டர் விஜய்.

மோகனாவின் கண்ணைப் பறிக்கும் செட் அமைப்புக்கள் இன்னும் நினைவில் இருக்கிறது. அதிரடிச் சண்டைக் காட்சிகளில் ''யாருக்கய்யா வரும், இத்தனை வேகமும், சுறுசுறுப்பும்?'' என்று சவால் விடுகிறார் ரஜனி. மனிதர் ரொம்ப ஸ்மார்ட். இவரிடம் வலிய வந்து காதலை யாசிக்கும் மாதவி கண் அழகைக் காட்டியே காலம் தள்ளப் பார்க்கிறார்.

வித்தியாசமான கோணங்களின் மூலம் சண்டைக் காட்சிகளைக் கூட ரசிக்கவைக்கிறார் ஜெயனன். சி.வி. ராஜேந்திரனின் புதுமை முயற்சி, ஓட்டலில் இருந்து புறப்பட்டு ஊர் வலம் போகும் படுக்கையில் வரும் பாடல் காட்சியில் தெரிகிறது. அவுட் ஆப் டேட் 'விகேஆர். + தேங்காய்' உபயத்தில் ஒரு ட்ராக் காமெடி அல்லது அபத்தம் என்ற பெயரில் ஓடி ஏற்கனவே மெல்லஊறும் படத்தை அங்கங்கே நசுக்குகிறது. படத்தில் வரும் பல ஒட்டை உடைசல்களில் ஒன்று—டிஎஸ்பி திடீர் ஞானோதயம் பெற்றுத் தம்மையே சுட்டுக்கொள்வது.

இதுநாள்வரை பெண் என்ற அதிசயத்தின் மீது நமக்கிருந்து வரும் சுவாரசியமான ஈர்ப்பைச் சாகடிக்கிறார் ஜெயமாலினி.

ஆக மொத்தம். மி——யா——வ்!

''சிந்து-ஜீவா'

சினிமா விமர்சனம்



இமயா களையெடுக்கிறாள்

இனியவன்

கடைசி நாற்றைக் கழனியில் ஊன்றிய இமயா, எஞ்சிய முடிச்சை வரப்பில் போட்டு விட்டு நிமிர முனைந்தாள். இடுப்பு இற்று விடும்போல் வலித்தது.

''ஆளுக்கு ஒரு 'மெனை' இருக்குது... அதுக்குள்ளே இமயா கரையேறிட்டாளே!... நாந்தான் கெழவி... உங்களுக்கெல்லாம்கூட வாடி காரம் செத்துப்போச்சு?'' என்று, அவசரம் அவசரமாக நடவு போட்டபடி ஏனைய பெண்களை இளக்காரமாய்ப் பார்த்தாள், பரிவாதினி.

''எப்பவுமே இமயா பசப்புக்காரி... புருஷன் வேற காயலாக் கிடக்கிறானு? உடம்பிலே இன்னும் துரிதம் கூடிடுச்சி!'' என்றவாறு புகையிலையைக் கிள்ளி வாயில் திணித்தாள் அங்கம்மா.

பண்ணை ஆராய்ச்சி முத்துசாமி, ''அதுவும், அவ அங்கொண்ணும இங்கொண்ணுமா 'ஜாரி' அடிக்கல்லே! எவ்வளவு சேர நட்டிருக்கா பாருங்க! நீங்களும் இருக்கீங்களே, சொரணை கெட்ட ஜென்மங்க'' என்றவாறு முடிச்சவிழ்த்தான்.

சேற்றுக் கால்களையும் கைகளையும் வாய்க்கால் தண்ணீரில் சுத்தப்படுத்திக்கொண்ட இமயா கூலியை வாங்கிக் கொண்டு விரைந்தாள்.

தோப்பில் இறங்கிக் குறுக்காக நடக்கையில், ஓடைப் பக்கம் — யார் வரவுக்காகவோ காத்திருந்தாள் கனகமஞ்சம்.

அவளுடைய ஒப்பனையும், ஒய்யாரமும், கிராமத்துக்குப் பொருந்தாமல் அன்னியமாய்த் தெரிந்தன.

ஓடிப் போய் வழிமறித்து இமயாவின் தோள்களைப் பற்றியபடி இரகசியம்பேசினாள்!

இமயா அருவருப்போடு கனகமஞ்சத்திடமிருந்து விடுபட்டாள்.

''இதோ பாருக்கா... இனிமே இப்படிப் பேசினே, எனக்குக் கெட்ட கோபம் வரும்! அப்பிடித் தேவடியாத்தனம் பண்ணி நான் ஒண்ணும் என் கணவனைக் காப்பாத்த வேண்டியதில்லே!''

''ஆத்திரப்படாதேடி இமயா... உன் நன்மைக்குத்தாண்டி சொன்னேன்... அந்த மனுஷன் பொசுக்குன்னு போயிட்டா கிஷ்டனையும், மாதங்கியையும் எப்பிடி வளர்ப்பியாம்?....''

இமயா மனமும் மேனியும் அதிர ஓடினாள். ஆனால், அவள் வீட்டிலோ....?

வேம்பு போய்விட்டான் - இமயாவின் வாழ்வைக் கரும்பாக்கியவன் கனவாகிவிட்டான்! கிஷ்டன் என்றும், மாதங்கி என்றும் வாகு வாகாய் இரண்டு கண்களைத் தந்துவிட்டு மறைந்து விட்டான்.

''தங்க ரயிலேறி... காசி நதி போயி றங்கி... மாமா... நெருஞ்சிக் காட்டினிலே என்னை நிக்க வச்சிப் போயிட்டியே!.....'' என்று வெட்புற அழுதாள் இமயா.

ஏழு வயதுப் பையனையும்ஐந்து வயதுப்பெண்ணை



யும் இன்னும் கொஞ்சம் கேவலைத்து வேடிக்கை—பார்த்தது அவன் வியாதி.

தன் சக்திக்கு மீறி அவள்எடுத்துக்கொண்ட முயற்சிகள் — பட்ட பாடுகள் — எல்லாம் வீணென்று தெரிந்தபோது....

என்னவோ — அவள் வாயில் நுழையாத பெயரில், அவளுடைய பூவையும் பொட்டையும் அழிக்க வந்த,

அவனுடைய அகால மரணத்தை வெல்ல முடியாத வியாதி...

கிஷ்டனையும், மாதங்கியையும் கட்டிக் கொண்டு புலம்பினாள், இமயா.

எல்லாம் முடிந்து விட்டன. இனியும் முட்டிக் கால்களைக் கட்டிக் கொண்டு குமுறுவதில் அர்த்தமில்லை... முகட்டுவளையை வெறித்தபடி பெருமூச்சு விடுவதில் போனது வந்துவிடப் போவதில்லை.

குடிசையைப் பூட்டிக் கொண்டு நடந்தாள்....

எதிர்ப்பட்ட கனகமஞ்சம், ''ஆனாலும் நீ உன் புருஷனை அநியாயமாக் கொன்னுட்டேடி'' என்று பேசலானாள்.

''ஆமாம்... அவரு இருந்தா, தாசித்தனம் பண்றதுக்கு இடைஞ்சல்னு நான்தான் கொன்னுட்டேன்!'' என்று ஆத்திரத்தோடு கத்தினாள் இமயா.

''பதறாமல் நான் சொல்றதைக் கேளுடி.. ஆமிடியான் இருக்கிறப்ப நடத்தை பிசகியிருந்தா, சமுதாயம் ஏசும்தான்! நான் ஒத்துக்கறேன்... ஆனா இப்ப — 'பாவம், அவ என்ன செய்வா'ன்னு அனுதாபப்படும்!.. குழந்தைங்க நன்மைக்காவது நீ கைநிறைய சம்பாரிக்கணும்!'' என்று அவளை இழுத்து நிறுத்தி உபதேசம் செய்தாள் கனகமஞ்சம்.

''தூ!...''என்று காறி உமிழ்ந்தாள்இமயா.

''அரை வயிறோ, கால் வயிறோ போட்டு பிள்ளைகளைக் கௌரவமானவங்களா வளர்க்க என்னால் முடியும்! அது அவங்களுக்கு போதும்!'' இமயா காளி மாதிரி நடந்தாள்.

கூலிப் பெண்கள் எல்லாம் வரப்பு இறங்கிக் கொண்டிருந்தார்கள்...

இவளும் இறங்கிக் களையெடுக்கலானாள்.

கல்லைக் கப்பலேற்றுகிறார்கள்



கல்லை ஏற்றுமதி செய்து சம்பாதிக்கிறார்கள்.

ஆம். வெறும் கல்தான்!

பல்லாவரத்திலும், திருநீர்மலையிலும் சில இடங்களை அரசிடமிருந்து ஏலத்துக்கு எடுத்துப் பிறகு, வேட்டு வைத்துக் கற்களைப் பெயர்த்து எடுக்கிறார்கள்.

இருபது வருடமாக இந்தத் தொழிலில் ஊறிப்போன திரு மணியன் திருநெல்வேலியைச் சேர்ந்தவர்.

''வெளி நாடுகளில் இதை எதற்கு இறக்குமதி செய்கிறார்கள்?''

'' 'ப்ளாக் க்ரானைட்' என்று சொல்லப்படும் கற்களை ஜப்பானில் அலங்காரத்துக்கும் நினைவுச் சின்னத்துக்கும்பயன்படுத்துகிறார்கள். இப்போது இந்தோனேஷியாவிலிருந்தே வரவழைத்து விடுகிறார்கள். அது அருகில் உள்ளது. விலையும் சகாயம்.''


இருந்தாலும் போன வருஷம் நல்ல சந்தர்ப்பம் ஒன்று வாய்த்ததாம். மாலத்தீவில்இந்திய விமான நிலைய விஸ்தரிப்புக்கு இங்கிருந்தே கற்க சேகரித்துக் கொண்டு போனார்களாம்!

புளூ கிரானைட் கருங்கல் சாலை வேலைக்கு தான் நிறையப் பயன்படும். சென்ற ஆண் அதிக அளவு தேவை இருந்தது. இந் ஆண்டு அவ்வளவு தேவை இருக்காது ஏன்? ''மழை அவ்வளவாக இல்லாததா சாலைகள் நிறையச் சேதம் அடையவில்லை!''

எதிர்கால வாய்ப்பு?

''சற்று அதிக லாபம் இருப்பதால் நிறை பேர் இதில் நுழைந்து விட்டார்கள். எனவே முன் அளவு சந்தர்ப்பம் இல்லை. திண் வனம் பக்கத்தில் குன்ன என்ற இடத்தில் த கரகக் கற்கள் (Pure blac கிடைக்கின்றன. ஆ அங்கு தனிப்பட்டவருக் உரிமை கிடையா 'தமிழ் நாடு மினரல் லிமிடெட்' என்ற அரசாங் நிறுவனத்துக்கு மட்டு தான் உரிமை உண்டு! என்று சொல்கிற மணியன். பேட்டி: தமயந்

✖ மணியன்



தொழில்

குடும்பக் கதை

தனக்கென்று வரும்போது...

—நிவேதா

'பளார்'

மைதிலியின் கன்னத்தில் வேகமாய் விழுந்தது நாராயணனின் கை. தடுமாறினாள் அவள்.

பாதிச் சாப்பாட்டில் கையை உதறினான். கோபத்துடன் எழுந்து கொண்டான்.

''சாதத்தில் இவ்வளவு கற்களா? பார்த்துப் பொறுக்கி எடுத்துவிட்டுச் சமைத்திருக்கக் கூடாது? அதைவிட உனக்கு வேற என்ன வேலை?'' துர்வாசனாய்க் காட்சியளித்தான் நாராயணன்.

மைதிலி வார்த்தைகளைக் கொட்டிவிட்டாள், கணவனின் திட்டுக்களைப் பொறுத்துக் கொள்ள இயலாமல்.

''இன்னிக்குக் கொஞ்சம் லேட்டாத்தான் எழுந்தேன். உடம்பெல்லாம் ஒரே அசதி. அரிசியிலே கல் பொறுக்க முடியலை. தினமும் தான் கண்ணிலே விளக்கெண்ணெய் ஊத்திக்கிட்டுப் பார்க்கிறேனே? ஒரு நாள் கல் பொறுக்க முடியாமல் போனால் 'அட்ஜஸ்ட்' செய்துக்கிட்டுப் போகணும்.''

''அம்மா மெதுவா எழுந்து கல்லோடும் மண்ணோடும் சமைப்பாங்க. அதையெல்லாம், சம்பாதித்துக் கொண்டு வந்து கொட்டற நான் தலைவிதியேன்னு சாப்பிட்டுவிட்டுப் போகணும், இல்லே?'' எரிமலையானான் நாராயணன்.

''ஆயிரம் வேலைகளுக்கிடையே சில சமயம் இது மாதிரி நேர்ந்து விடுவது சகஜம். மத்த நாட்களிலே நல்லா சமைக்கலை? அப்போ ஒரு வார்த்தை பாராட்டிச்சொன்னதுண்டா? என் சமையல் பிடிக்கலைன்னா தாராளமாக ஓட்டல்லே சாப்பிட்டுக்கலாம். ஆட்சேபணை ஒன்றும் இல்லை.'' ஏதோ உணர்ச்சியில் பேசிவிட்டாள் மைதிலி. ஆத்திரத்தில் அறைந்துவிட்டான் நாராயணன்.

கோபத்துடன் ஆபீஸுக்குக் கிளம்பினான்.

ஆபீஸில் நுழைந்த நாராயணனுக்கு எரிச்சலாக இருந்தது. ஃபேன், லைட் இல்லை. பவர்கட்!

தன் சீட்டில் அமர்ந்து கொள்வதற்குள் பியூன் வந்து மானேஜர் அழைப்பதாகச் சொல்லவே, 'காலையில் வந்தவுடனேயே என்ன ரோதனை இது?' என்றபடி சென்றான் நாராயணன்.

''மிஸ்டர்! நேற்று நீங்க போட்டுக் கொடுத்த ஸ்டேட்மெண்ட்லே ஏகத் தப்புக்கள். அடித்தல் — திருத்தல் வேறே. ஒரு சின்ன விஷயத்தைக் கூட உங்களாலே ஒழுங்காச் செய்ய முடியலையே?'' மேனேஜர் கேட்டார்.

''சார்! எப்படியோ தவறு நடந்துவிட்டது. ஆயிரம் வேலைகளுக்கு மத்தியிலே இப்படி நேரத்தான் செய்யும். மற்ற நாட்களிலே சரியாச் செய்யலையா? அப்போவெல்லாம் ஒரு வார்த்தை பாராட்டிச் சொல்லியிருக்கீங்களா? இப்போ இவ்வளவு சொல்றீங்களே?'' என்றான் நாராயணன்.

''இங்க பாருங்க மிஸ்டர், நீங்க செய்யற ஒவ்வொரு வேலைக்கும் பாராட்டிக்கிட்டு இருக்க முடியாது. தப்பை மட்டும்தான் இங்கே கண்டு பிடிப்போம். இந்த ஸ்டேட்மெண்டை ஒழுங்காப் போட்டு எடுத்துக்கிட்டு வாங்க'' ஸ்டேட்மெண்டை நாராயணனை நோக்கி வீசி எறிந்தார்.

சே! — முணுமுணுத்தபடி தன் சீட்டுக்குச் சென்றான் நாராயணன்.


இரவு.

'படக்.'

நாராயணன் சாதத்தை மெல்லும்போது கடைவாயில் கல் அடிபட்டது.

''காலைல வடித்த சாதம்தான். அதான் அப்படியே கல்லு.... நாளைக்கு ஒழுங்கா சமைக்கிறேன்...''

''பரவாயில்லை. ஆயிரம் வேலைகளுக்கு இடையே சமையல் செய்திருப்பே. இது மாதிரிச் சின்னத் தவறு ஏற்படுவது சகஜம்தான். அட்ஜஸ்ட் செய்துகிட்டுத்தான் போகணும். நாளைக்குப் பார்த்துச் சமை'' என்ற நாராயணன் சாப்பிட ஆரம்பித்தான் அமைதியாக.



கடற்கரை. மணல் இல்லை. பட்டாணி சுண்டல் இல்லை.

வாசந்தி காத்திருந்தாள். அவள் பார்வை அந்த போர்டில் நிலைத்தது. 'கடற்கரை—சந்திப்பு' என்ற பீச் ஸ்டேஷன் பலகை. ரயில்வே ஸ்டேஷனில் மணலாவது, சுண்டலாவது!

அவள் மனத்தில் குழப்பம். அப்பாவுக்கு இப்படி ஒரு சோதனையா! சே, இன்கம் டாக்ஸ் ரெய்டு நடத்தி... பாவம் அப்பா.

'ஹாய் வாசந்தி' என்ற குரல் கேட்டு நிமிர்ந்தாள். மகேஷ். மாடர்ன் இளைஞன். அழுக்கு ஜீன்ஸ்: அடங்காத தலைமயிர்; விருது வாங்கத் தகுதியான கிருதா. ரஜனி மீசை (தில்லு முல்லு ரஜனியல்ல!) ஒ.எஸி. ஸ்கூட்டர் சவாரியில் வந்துவிட்டான்!

''என்ன முனகிண்டு நிற்கிறே?''

''இல்லே காதலர்கள் பீச்சிலே, பார்க்லே சந்திப்பாங்க... நாம இப்படி ஸ்டேஷனில்..''

''பெண்ணே... ஸ்டேஷன்லே சந்திப்பது ரொம்ப நல்லது. வெயிட் பண்றது ரயிலுக்கா காதலுக்கா என்றே தெரியாது. பைதபை... போர்டிலே பாரேன் 'கடற்கரை சந்திப்புன்'னு தானே போட்டிருக்கு!''

''போதும்... 'பிளேடு மழை பொழிகிறது, ஒவ்வொரு துண்டிலும் உன் குரல் கேட்கிறது'ன்னு பாடலாம் போல இருக்கு!'' என்று உதட்டைச் சுழித்தாள் வாசந்தி.

ஹோட்டலில் குடும்ப அறைக்குள் காதலர்கள் நுழைந்தார்கள். சற்றே இருட்டான இடம். குளுகுளு வசதி.

''மகேஷ்... நேற்று பெரிய கலாட்டா வீட்லே. வருமான அதிகாரிகள் வந்து... ரெய்டு....'' மெலிதாகப் பேசினாள்.

''அட கஷ்டமே! வருமானம் இருக்கோ இல்லையோ, இப்படி நடந்தால் மானமே போகுமே! மூணு வாரம் முன்னாடியே உன் அப்பா 'பேரர்' பாண்ட்ஸோ, பேத்தி பாவாடையோ வாங்கல்லியா?''

''ச்சீய்.. எப்பவும் தமாஷ்தானா மகேஷ்? நான் உங்க கூடப் பேசப்போவதில்லே.'' பொய்க் கோபம் காட்டினாள்.

சர்வரிடம் ''ரெண்டு பாசந்தி, மெது பக்கோடா — மெதுவாக் கொண்டா... ரெண்டு கிரேப் ஜூஸ்....'' என்றான்.

''ஏய்... பாசந்தி... சே... வாசந்தி.. என்னாச்சு? எவன் டிப்ஸ் கொடுத்தான்?''

''எதுக்கு? யாருக்கு? சர்வருக்கா?''

''இல்லே... வருமான வரி அதிகாரிக்கு?'' என்று சொன்ன மகேஷ் வாசந்தியைப் பார்த்துத் திடுக்கிட்டான்.

ஒரு கரப்பான் பூச்சி சட்னி ஆற்றில் குளித்து, எழுந்து, சாம்பார் குளத்தில் ஸ்நானம் செய்து கொண்டிருந்தது. எதிர்பாராமல் பறந்து வந்து, வாசந்தியின் முதுகில் ரவிக்கையில் சமர்த்தாக அமர்ந்தது. பட்டென்று அதைத் தட்டிவிட்டான் மகேஷ்.

வாசந்தி சகஜ நிலைக்கு வந்தாள். அப்போது எதிரேயிருந்த மூதாட்டி, ''அட! கரப்பு உன்கிட்ட வருதே.. பணம் நிறைய இருக்கு போல..'' என்றபடி மீதியிருந்த மோரை உறிஞ்சிக் குடித்தாள்.

வாசந்தியின் மூளையில் மின்னலடித்தது. அந்த மூதாட்டியை அதிக வாத்சல்யத்துடன் பார்த்தாள். புத்தனுக்குப் போதி மரம். வாசந்திக்கு மூதாட்டியின் பொன் மொழி!

''மகேஷ்! இப்ப எனக்குப் புரிஞ்சு போச்சு! வீட்லே தண்டச் சோறு சாப்பிடற அத்தை பிள்ளை செல்லப்பன்தான் இன்கம் டாக்ஸ் ஆபீஸுக்குத் தகவல் சொல்லி யிருப்பான்!'' என்றாள் விழிகள் மின்ன.

''அது எப்படி?''

''எங்க வீட்லேயும் நிறையக் கரப்பான் பூச்சி பறக்கும். அம்மா அடிக்கடி சொல்வாங்க... கரப்பு இருந்தால் பணம்—லட்சுமி பூச்சின்னு இந்த செல்லப்பன் — இனிமேல் அவன் எட்டப்பன் — கரப்பு, பணம்னு கேட்டுட்டு முடிச்சுப் போட்டு என் மேலே உள்ள கோபத்தை இப்படி தீர்த்துண்டான் போல இருக்கு! நல்லவேளை .. ரெய்டு செய்ய வந்த ஆபீஸர் கடைசிலே 'ஐ'ம் சாரி வரதாச்சாரின்னு' சொல்லிட்டுப் போயிட்டார். போறச்சே என்னையும் அன்பா பார்த்துட்டுப் போனார்!''

மகேஷுக்கு இப்பொழுதுதான் புரிந்தது. தன் மாமா — வருமான வரி ஆபீஸர் — நேற்று இரவு கல்யாணப் பேச்சை ஏன் ஆரம்பித்தார் என்று! 'ரெய்டு'க்குப் போன இடத்தில் மருமானுக்கு ஜோடி பார்த்துட்டாரா?

''வாசந்தி! காதலின் நிறங் கறுப்பு'' என்று ஆரம்பித்து விளக்க ஆரம்பித்தான்.

''ஆ ரம்பமா... அறுப்பு....'' என்று சுணங்கினாள் அவள்!



—பாமா கோபாலன்—


நகைச்சுவைக் கதை



வேலைக்குப் போகும் பெண்
நடிப்பு: டணல் தங்கவேலு
கதை: சாருகேசி, தமயந்தி
சித்திரம்: செல்லம்
போட்டோ: உத்ரா
5
என்னடா டல்லடிச்சுப் போய் உக்காந்திருக்கே? ஜமுனு ஞாபகமா?
அப்பா, பண்ணிக்கிட்டா ஜமுனு ஒருத்திய தான் நான் கல்யா ணம் பண்ணிப்பே
என்னடா ஒளர்றே?
நான் அவளக் கட்டிக்க லேன்னு வேற யாருக்கா வது அவளக் கல்யாணம் பண்ணி வச்சுடுவாங் கப்பா!
வேணும்னு ஒண்ணு செய்யி. கட்டிக்கணும் அவ்வளவு தானே? ஓடிப்போய் அவளச் சேத்துக் கட்டிக்கிட்டு ஓடியாந்திடு. கல்யாணத்த அப்புறம் பாத்துக்கலாம்.
உங்களுக்கு எல்லா விளையாட்டா இருக் தப்பா. ஒதவி பண் றேன்னு சத்தியம் பண்ணிப்பிட்டு இப் ஒரேயடியா ஒதர் றாங்களே!
ஒதர்றதுக்கு நீ என்னடா மூட்டப்பூச்சியா கம்பிளிப் பூச்சியா?... இன்னொரு வழி சொல் லட்டுமா?
கேட்டுக்கறேன், சொல்லுங்க!
ஜமுனுவை கிளீனு மறந்துடு. அவ கல்யாணம் பண் ணிக்கிட்டு எங்கியாவது சௌக்யமா இருக்கட்டும்!
அவ சௌக்யத்த விட, எ அசௌக்யமில்ல முக்யமா போச்சு ஒங்களுக்கு! ஜமுனுவையே கல்யாண பண்ணி வைக்கிறேன்னு சொன்னீங்க இல்லே எங்கே உங்க உதவி



ார்ரா இவன்! நிதிமந்திரிய அரிக்கற மாதிரி உதவி உதவின்னு உயிர வாங்கருன்! வேற, வேலக்கிப் போற பொண்ணே கெடைக்கலியா ஒனக்கு?
அய்யோ, அப்பா! இந்த ஆளுக்குப் பாருங்க, மூக்குக்குக் கீழே ரெண்டு கொடுவாள்!
அப்போது கொடுவாள் மீசையுடன் ஒரு முரடன் திடீரென்று உள்ளே பாய்ந்து வந்தான்
நீதானேய்யா காசி? நீதானேப்பா பன்னீரு?
அவன்தான் காசி, நான்தான் பன்னீருன்னுத்தான் ஒனக்கு என்ன வித்யாசமா தெரியப் போவுது?
யோவ், எங்கிட்டயா விளையாடறே? தொலச்சுப்புடுவேன் தொலச்சு!
நீதானே எங்க ஜம்னுப் பொண்ண லவ் பண்றே?
ஆமாம்பா, தெரியாத்தனமா லவ் பண்ணிப் புட்டேன்!
யோவ் கஞ்சிலிங்கம்! பெயன் எங்க ஜம்னுவைக் கூட்டிக்கிட்டு ஓட்டல்னும் பார்க்குன்னும் அலையறான். அவள உட்டுட்டு வேற பாருக்கானும் ஒம் பையனக் கட்டி வச்சே, ஒன்னக் கட்டி வச்சு உரிச்சுருவேன்.
உரிச்சுப்புட்டு அப்டியே உட்ருவியா? வைத்யம் கித்யம் பாக்க மாட்டியா?
டே பன்னீரு, ஒங்க அப்பாவுக்குப் புரியும் படியாச் சொல்லிடு. நான்தான் ஜம்னுவோட மாமன்! அவள ஏமாத்தினே, நீயும் தொலஞ்சே!
ஐயா பேரு என்னன்னு சொல்லலியே?
எம் பேரா? காடுவெட்டி, ஆடுவெட்டி, அசைஞ்சா வெட்டி, முறைச்சா வெட்டி தூத்துக்குடி முத்து! கியாபகம் இருக்கட்டும், வர்ரேன்!
இதென்னப்பா, கெணறு வெட்டாமயே பூதமா வந்திட்டாரே இவன்.......
மீசாவக் காட்டி பயமுறுத்துவாங்க, கேள்விப்பட்டிருக்கேன். மீசையக் காட்டி இல்லே பயமுறுத்துறான் இவன்!
தொடரும்



நாடகம்

யார் செலவில்

சௌந்தர்யன்

[நடுத்தர வீடு; எழுபதைத் தாண்டியவர் இன்றோ நாளையோ என்று கூடத்துக் கட்டிலில் இழுத்துக்கொண்டு கிடக்கிறார். செல்லப்பா, தியாகு, மூர்த்தி அந்தப் பெரியவரின் அருமைப் பிள்ளைகள்.]

செல்ல: நான் அப்பாவுக்கு மூத்தவனாய்ப் பிறந்தேனே தவிர, எனக்குன்னு இது வரைக்கும் எதுவுமே செஞ்சதில்லைஅப்பா. ஏதோ படிக்க வச்சார்... அப்புறம் நானா முயற்சி பண்ணி முன்னுக்கு வந்தேன். அப்பாவுக்கு எந்தத் தொந்தரவும் கொடுக்காம ஒதுங்கி வாழ்ந்தேன்...

தியாகு (குறுக்கிட்டு): இதை யெல்லாம் இப்ப யாரு கேட்டா... அப்பா இப்பவோ இன்னும் கொஞ்ச நேரத்துலயோ போய்ச் சேரப் போறது நிச்சயம்னு டாக்டர் சொல்லியாச்சு. அவருடைய கடைசிச் செலவுகளுக்குப் பணம் வேணும்.... நீ எவ்வளவு தரப்போறே?

செல்ல: மூத்தவன் கரத்தினாலே கொள்ளி வச்சுடறேன்...

தியாகு: ம்... அம்மா அப்பாவை நான் வச்சிண்டதுக்கு இப்படியெல்லாம் பழியா? சாப்பாட்டுக்குன்னு நூறு ரூபாய் தந்திட்டு மத்ததெல்லாம் அவரே செலவு பண்ணிடுவார்...

மூர்த்தி: அடப் பாவி.... பணம் வாங்கிட்டுத்தான் அம்மா அப்பாவுக்கு நீ சோறு போட்டியா?

தியாகு: அதுகூட உங்க ரெண்டு பேருக்கும் வக்கில்லையே...பெண்டாட்டிக்குப் பயந்தவர்களாச்சே?

செல்ல: சரி...சரி... நீங்க ரெண்டு பேரும் என்னைவிட நிறையச் சம்பாதிக்கிறீங்க... ஆளுக்குக் கொஞ்சமாப் போட்டு எல்லாக் காரியத்தையும் பண்ணுங்க. அம்மாவுக்கு இப்படி ஆகும்போது நானே எல்லாச் செலவையும் பார்த்துக்கறேன்...

மூர்த்தி: சே...சே... என்ன பேச்சு இது... ம்... இந்தக் கிழமாவது ஒவ்வொருத்தராட்டம் சொத்துக் கித்து வச்சிருந்தா இப்படிச் சாவுச் செலவை நாம ஏலம் போட வேண்டாம்... அண்ணா... என்னால முடிஞ்சது முந்நூறு ரூபா தந்திடறேன். தியாகு நீ எவ்வளவுடா...

தியாகு: நானும் முந்நூறு ரூபா தந்திடறேன்...

செல்ல: சரி... நான் கொள்ளி வைக்கிறேன். நூறு ரூபா தந்திடறேன். ஆனா, அப்புறம் வருஷ திவசத்துக்கெல்லாம் நீங்கதான் பணம் கொடுக்கணும்...

[இப்பொழுது கிழவர் பயங்கரமாய் இருமுகிறார். மூவரும் அவர் அறைக்குள் செல்ல... கிழவர் தலை சாய்கிறது. கிழவி அழாமல் நிதானத்தோடு ஒரு கடிதத்தை அவர்களிடம் தருகிறாள். அதில்....]

செல்ல (படிக்கிறான்): நான் இறந்துவிட்டால் என் காரியங்களுக்குப் பணம் இல்லாமல் என் பையன்கள் அவதிப்படக்கூடாது என்று பென்ஷன் பணத்தில் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்த்து ரூ. 2000 என் பெட்டியில் வைத்திருக்கிறேன், எடுத்துக்கொள்ளவும். —**திரை**


"காம்ப்ளான்® ஒண்ணுதான் சரி என் குடும்பத்துக்கு ...திட்டமிட்ட பரிபூரண உணவு."



"பல வேளைகள்
சாப்பிடத் தவறி விடும்
என் கணவருக்கு"



"சாப்பிடும்போது
சண்டித்தனம் செய்யும்
என் மகனுக்கு"



"நோயுடல் தேறிவரும்
என் தாயாருக்கு"

காம்ப்ளான்® ஒன்றுதான் எவருக்கும் தேவைப்படும் 23 மூலாதார ஊட்டச் சத்துக்களால் முழுமை பெற்றது.



"அசதியினால்
சரிவர
சாப்பிட
முடியாத
எனக்கு"

காம்ப்ளான் ஒன்றுதான் திட்டமிட்ட விஞ்ஞானக் கலவையாக உடலுக்கு அன்றாடம் தேவைப்படும் 23 மூலாதார ஊட்டச் சத்துக்களை அளிக்கிறது: புரதங்கள், கார்பொஹைட்ரேட், கொழுப்புச் சத்து, வைட்டமின்கள், உலோக தாதுக்கள். எனவேதான், டாக்டர்கள் பெரும்பாலும் சிபாரிசு செய்யும் ஆரோக்கிய பானமாக விளங்குகிறது காம்ப்ளான்.

கிடைப்பவை நால்வகை: இன்சுவை ரகங்களாக — சாக்கலேட் காம்ப்ளான், ஏலக்காய்-குங்குமப்பூ காம்ப்ளான், ஸ்ட்ராபெர்ரி காம்ப்ளான், தவிர சாதா காம்ப்ளான்.

திட்டமிட்ட பரிபூரண உணவு
காம்ப்ளான்®

லின்டாஸ்-GLC. 10-2015 TM

புதிய வாசல்கள்



முத்து தங்க.ஐயப்பன்

வெளியே சட-சட-வென்று தொடங்கிய மழை, கொஞ்ச நேரத்தில் பெரிய மழையாய் பிடித்துக் கொண்டது. சாரல் உள்ளே தெறித்தது. எழுந்து ஜன்னல் கதவுகளை ஒவ்வொன்றாய்ச் சாத்தினேன். வாசல் பக்க ஜன்னலைச் சாத்தும்போது முன் வராந்தாவில் யாரோ மழைக்கு ஒதுங்கி நின்றது நிழலாடியது.

முன் விளக்கைப் போட்டு வாசல் கதவைத் திறந்ததும் அப்படியே விக்கித்துவிட்டேன். மீனு! அவளும் என்னைப் பார்த்ததில் அதிர்ந்தது தெளிவாய்த் தெரிந்தது.

சமாளித்துக் கொண்டு, ''வா, மீனு! வாசல்லே ஏன் நிக்கறே? உள்ளே வா!'' என்றேன்.

கொஞ்சம் தயங்கி, ''திடீர்னு மழை பிடிச்சுக்கிட்டது. இது உங்க வீடுன்னு தெரியாது....'' என்று மெல்லக் கூறிக்கொண்டே உள்ளே வந்தாள். 'உங்க வீடு!' மனம் வலித்தது.

''உக்காரு மீனு!'' என்று சோபாவைக் காட்டினேன். உட்கார்ந்தாள். மின் விசிறியைச் சுழல விட்டேன். என் வீட்டுக்குள்ளேயே என் முன்னாள் மனைவியை உபசரிப்பது எனக்கு விசித்திரமாகப் பட்டது. வேதனையாகவும் இருந்தது. டர்க்கி டவலை எடுத்து நீட்டினேன்.

''நல்லா நனைஞ்சுட்டே போலிருக்கே... துவட்டிக்கோ,... வேறே புடவை கொண்டு வர்றேன்.''

''இல்லே...வேணும்...''அவள் மறுத்துக் கொண்டிருக்கும்போதே உள்ளே வந்து பீரோவைத் திறந்தேன். கீழ்த் தட்டில் சேலைகள் அடுக்கியிருந்தன. பார்க்கும் போதே கண் கனத்தது. மீனுவின் சேலைகள். அவளுக்குப் பிடித்த வயலெட் பூக்கள் போட்ட க்ரே கலர் பாலியெஸ்டர் சேலையை எடுத்தேன். அதிலேயே அதற்குப் பொருத்தமான சோளியும் இருந்தது.

''அந்த ரூம்லே போய் டிரஸ் மாத்திக்க மீனு.''

''வேணாங்க. ஃபேன் காத்திலே சேலை ஈரம் சீக்கிரம் காய்ஞ்சிடும்...''

''பரவாயில்லே''என்று கூறிய நான் சிறிது தயங்கி, ''ப்ளீஸ்!'' என்றேன்.

மீனு சட்டென்று என்னைப் பார்த்தாள். மெல்லிய வியப்பு அவள் பார்வையில் தெரிந்தது. புடவையை வாங்கிக்கொண்டு உள் அறையை நோக்கி நடந்தாள்.

அவள் நடக்க நடக்க நீண்ட கருங்குழல் இப்படியும் அப்படியும் ஆடியது என்னைச் சாட்டையால் அடிப்பது போலிருந்தது. இறுக்கமான, கட்டான அந்த முதுகும், சிறு இடுப்பும், அசைவுகளும் என்னை ஏழையாக்கின. வேண்டாம். இப்படிப் பார்க்கக் கூடாது. இந்த மீனு வேறு எவளோ ஒருத்தி. இன்னொருவன் மனைவி... இப்படிப் பார்க்கக் கூடாது. அவளுக்கு நான் செய்த கொடுமைகள் போதாதா?

சோர்வுடன் சோபாவில் விழுந்தேன். இரண்டு கைகளையும் உயர்த்தித் தலைக்கு முட்டுக் கொடுத்துச் சோபாவில் சாய்ந்தேன். மேலே மின் விசிறி சுழன்று கொண்டிருந்தது. என் நினைவில் பழைய நிகழ்ச்சிகள் சுழன்றன.

மீனு என்ற மீனுகுமாரியைப் பெண் பார்த்தபோது அந்த இளமையும், அழகும் அந்தக் குடும்பத்தின் படிப்பும், பண்புமே என்னை வசீகரித்தன. நான்கு அண்ணன்களுக்குப்பின்னே பிறந்த ஒரே பெண். செல்லம் அதிகம். எம். ஏ. படித்திருந்தாள். மாமனார் ஆடிட்டர். மாமியாரும் பி.ஏ.

பேச்சு வார்த்தை நடந்து நிச்சயதார்த்தமெல்லாம் முடியும்வரை எல்லாமே நன்றாகத்தான் இருந்தது. அதன் பிறகு யார் என்ன சொல்லிக் கொடுத்தார்களோ என் அம்மாவுக்கு வரதட்சிணைப் பேய் பிடித்துக் கொண்டது. ஹூம்... அம்மாவைச் சொல்லி என்ன பயன்? அசிஸ்டெண்ட் இன்ஜினிராய் இருந்த எனக்கே அறிவுக் கோளாறு ஆகி விட்டதே!

அம்மா இளம் வயதிலேயே விதவையாகி, நாலு வீட்டில் பத்துப் பாத்திரம் தேய்த்து மாவரைத்து யார் யாரையோ கெஞ்சிக் காலைப் பிடித்து என்னை என்ஜினியராக்கியவள்.

அவன்: சம்பளப் பணத்தை அப்படியே தூக்கி பெண்டாட்டியிடம் கொடுத்துடறவனுகளைப் பற்றி என்ன நினைக்கிறே நீ?

இவன்: முழு முட்டாள்கள்... என்னை மாதிரி செலவுக்கு ஒரு ரூபாய் எடுத்துக் கொண்டு விட வேண்டாமா?

உ.ராஜாஜி

காலமெல்லாம் வறுமையிலும், சிறுமையிலும் அடிபட்டு, நசுங்கிப் போயிருந்த அம்மாவுக்குப் படிப்பும், நாகரிகமுமாய் அவர்கள் மரியாதை காட்டியபோது அவளின் அடிமனத்தில் எங்கோ பதுங்கியிருந்த தாழ்வு மனப்பான்மை பொத்துக் கொண்டு கிளம்பி விட்டது. யார் யாரோ கூனிகளும், சகுனிகளும் போட்ட தூபம் வேறு அவளைத் தூண்டிவிட அவள் வரதட்சிணைப் பேய்க்கு முருங்கையாகி விட்டாள்.

நிச்சயதார்த்தத்தின்போது பேசி ஒப்புக் கொண்ட தொகைக்கு மேலே ஐயாயிரம் தந்துவிட வேண்டும் என்று அம்மா கண்டிப்புடன் பேச ஆரம்பித்தபோதே மாமனார் நிதானித்தார். இருந்தாலும் பிள்ளைகளின் தூண்டுதலினால் உடனே அதைத் தூக்கிக் கொடுத்து விட்டார். அதுதான் தப்பாகி விட்டது.

ஏதோ ஒரு மௌனமான குரூரமான போருக்கு அம்மா ஆயத்தமாகிவிட்டாள். அவ்வப்போது எனக்கும் உபதேசிக்க ஆரம்பித்துவிட்டாள். திருமணமான முதல் நான்கைந்து மாதங்களுக்கு அம்மாவின் பேச்சு எனக்கு ஸில்லியாகத் தெரிந்தது. ஆனால் அம்மாவின் ஸில்லித்தனத்தை மீனா உடனுக்குடன் கண்டித்து வாதாடியபோது நான் தடம் புரண்டேன். படுக்கை மயக்கங்களை உதறுவதாக நினைத்துக் கொண்டு, எனக்காக வாழ்க்கைப் பாலைவனத்தைத் தனியாகக் கடந்து வந்த அம்மாவின் பக்கம் சேர்ந்து கொண்டேன். மீனாவின் சுய சிந்தனையும், சுதந்திரமான வாதங்களும் என்னுடைய 'ஆண்பிள்ளைத்தனத்துக்கு' விடுக்கப்பட்ட சவாலாக உள்ளுக்குள் ரோஷப் பட்டுக்கொண்டு, தர்க்க ரீதியாக அவளை மடக்க முடியாமல் கோழைத்தனமாக வரதட்சணைப் போர்வையைப்போர்த்திக்கொண்டேன்.

ஒரு தடவை மீனா, அம்மாவை எதிர்த்து வாதாடிக் கொண்டிருக்கும்போது பளீரென்று அவளை அறைந்து விட்டேன். அதுதான் முதல் தடவை. அவள் விக்கித்து நின்று விட்டாள். அதையே ஒரு வெற்றியாக எடுத்துக் கொண்டு அடிக்கடி அவளை அடித்து இம்சிக்க ஆரம்பித்தேன். அம்மாவுக்கு அதில் ஒரு திருப்தி இருப்பது தெரிந்ததும் எனக்கும் அதில் ஒரு மிருக சுகம் தெரிந்தது. மீனாவுடைய 'அகம்பாவத்தை' ஒடுக்க வேண்டும் என்பதற்காகவே அவளை அடிப்பதும், இரண்டாயிரம், மூவாயிரம் வாங்கி வா என்று அவளைப் பிறந்த வீட்டுக்குத் துரத்துவதுமாக இருந்தேன்.

ஓ...! இப்போது நினைக்கும்போதே என் அங்கமெல்லாம் கூசுகிறது.

அம்மா கான்சர் வந்து இறந்த பிறகுகூட இந்தக் கொடுமையைத் தொடர்ந்தேனே!



''ஆமாம்... யாரோட குழந்தையையோ எலெக்டிரிக் ரயிலிலிருந்து காப்பாத்தறதுக்காகத் தன் கையைப் பலியாக்கிக் கொண்டார். அது தெரிஞ்சுதான் அவரைக் கல்யாணம் பண்ணிக்கிட்டேன். நான் நினைச்ச மாதிரியே கல்யாணத்துக்கப்புறமும் அவர் மனுஷனுகவே இருக்கார்....''

எனக்குச் சுருக்கென்றது. ஆனுல் வலிக்கவில்லே.

''மீனு... உனக்குக் குழந்தைகள் ஏதாவது...?''

''ஒரு பையன். அவனுக்கு ஃபேரக்ஸ் வாங்கத்தான் இப்படி வந்தேன். பக்கத்துத் தெருவில்தான் எங்க வீடு.. ஒரு நாள் எங்க வீட்டுக்கு வாங்களேன்!''

மீனுவின் நேர்கொண்ட பார்வையை என்னுல் சந்திக்க முடியவில்லே.

''வர்றேன் மீனு... அப்புறம்... நாம டைவர்ஸ் பண்ணிக்கிட்ட பிறகுநகைகளையும் பணத்தையும் நானும் அனுப்பி வைக்கல்லே. நீங்களும் ஒருத்தரும் அதைக் கேக்கலே...''

''அதுக்கென்ன இப்போ?''

''அதையெல்லாம் அப்பப்போ ஒவ்வொண்ணு எடுத்துப் பார்த்துக்கறேன். எந்த நகைக்காக நான் எப்படியெல்லாம் மிருகமா நடந்துக்கிட்டேன்னு அடிக்கடி நினைச்சுப் பார்த்துக்கிடுவேன். என்னைத் குத்திக் காட்டறதுக்காகவே அதெல்லாம் என்கிட்டயே இருக்கட்டும்...''

''......''

''மீனு... இப்பச் சொல்றது தப்புத்தான். இருந்தாலும் மனசு தாங்கலே. நான் திருந்தற வரைக்கும் நீ கொஞ்சம் பொறுத்திருக்கக் கூடாதா?''

மீனு என்னை இரக்கத்தோடு பார்த்தாள். தயங்காமல் பேசினுள். ''நீங்க பேசின பேச்சும், அடிச்ச அடியும் என் சம்பந்தப் பட்டதா மட்டும் இருந்தா ஆயுசுக்கும் பொறுத்திருப்பேன்.... ஆனு நீங்க அடிச்சது என்னை இல்லே. என் பெற்றேர்களை... என் சகோதரர்களை...! ஏன்? பொதுவாகவே பெண் வர்க்கத்தை. ஒண்ணு ரெண்டா... ஊருக்கு ஊர் இந்தக் கொடுமை நடந்துக்கிட்டுத்தான் இருக்கு. நான் எத்தனையோ தடவை சாகணும்னு நினைச்சதுண்டு... ஆனு உங்களை மாதிரி கணவனுக்கு உத்தமியா இருந்து செத்துப் போறதை விட உத்தமமான ஒருத்தருக்கு மனைவியா இரண்டாவது தடவை வாழறது தப்பில்லேன்னு நானு யோசிச்சு முடிவெடுத்துக்கிட்டேன்...''

''ஹூம்... நஷ்டம் எனக்குத்தான்கிறதைக் காலம் கடந்து உணர்றேன்... மீனு! நீ நம்பினுலும் நம்பா விட்டாலும் நீயும், உன் குடும்பமும் நல்லா இருக்கணும்னு அப்பப்பக் கடவுளை நான் வேண்டிக்கறேன்!''

''தேங்க்யூ மிஸ்டர் ஜெகன்... நான் உங்களை அப்படிக் கூப்பிடலாமில்லே?''

''ஷூர்! உனக்கு நல்ல கணவனு இருக்கற வாய்ப்பை இழந்துட்டாலும் நல்ல நண்பனு இருக்கிற வாய்ப்பை ஆரோக்கியமாப் பயன்படுத்திக்குவேன்... நீ என்னை ஜெகன்னு கூப்பிடறதே நீ எனக்குத் தர்ற பெரிய கௌரவம் தெரியுமா?''

> கோபாலகிருஷ்ண அடிகா, தர்மவீர் பாரதி, அக்தர் - உல் - இமாம் போன்ற கவிஞர்கள் பல்வேறு மொழிகளில் நெருக்கடி நிலைமையின் போது எதிர்த்து எழுதிய சுமார் 2000 பாடல்களை மொழி பெயர்த்துப் புத்தகமாக பாஸ்டன் சர்வகலாசாலையைச்சேர்ந்த புரொபசர் ஜான் ஆலிவர் பெர்ரி இந்திய - அமெரிக்க நிறுவனமொன்றின் சார்பில் அடுத்த ஆண்டு ஜூன் மாதத்தில் வெளியிடப் போகிறுர்.
>
> - டெக்கான் ஹெரால்டிலிருந்து
>
> - அ. குமார்

''சில பலவீனங்கள்னுலே அசம்பாவிதம் நடந்துட்டதுன்னுலும், உங்களோட பல உயர்ந்த குணங்களை என்னுல மறக்க முடியாது... இந்த நாலு வருஷத்துலே உங்க கிட்டே சில மாறுதல்களைப் பார்க்கிறேன்.... நீங்க தனியா இருக்கீங்கன்னுநினைக்கிறேன்.''

நான் தலையைக் குனிந்து கொண்டேன்.

''நீங்க ஏன் இன்னொரு கல்யாணம் பண்ணிக்கக் கூடாது?''

''நீ பார்த்து எந்தப் பெண்ணைக் கட்டிக்கச் சொன்னுலும் தயார்...''

''எனக்காக ஒண்ணும் நீங்க கட்டிக்க வேணும்.''

''நோ நோ... என்னைப் பத்தி உனக்கும், உன்னைப் பத்தி எனக்கும் நல்லாத் தெரியும் இல்லையா? என் மனசுக்கு ஒரு அமைதி இனி இருக்கும்னு அது உன் மூலமாத்தான் வர வேணும்... நிச்சயமா! நான் செய்த கொடுமைகளுக்கெல்லாம் பிராயச்சித்தமா நீ சொல்ற பெண்ணேட நல்லா வாழ்ந்து காட்டறேன்...''

''எங்க பக்கத்து வீட்டிலே ஒரு நல்ல பெண்... ரதி மாதிரி இருப்பா... போன வருஷம் எக்ஸிபிஷன் போனப்போ திடீர்னு பவர் கட் ஆகி அந்தக் குழப்பத்திலே சில காலிப் பசங்க இவளைத் தூக்கிக்கிட்டுப் போய் ஸ்பாயில் பண்ணிட்டாங்க.. ரொம்பவும் ஏழைக் குடும்பம்... அவ ரெண்டு மூணு தடவை தற்கொலை முயற்சி பண்ணினு. நான்தான் அவளைச் சமாதானப்படுத்தி மனசைத் தேத்தி வச்சிருக்கேன்... நீங்க அவளைக் கல்யாணம் பண்ணனும்னு கட்டாயம் இல்லே... எங்க பெண் வர்க்கத்துக்கு உங்களை மாதிரி ஆம்பிளைங்க இனியாவது ஒரு நல்ல....''

''மீனு... கண்டிப்பா அந்தப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிறேன்...''

''அப்படின்னு இந்த வருஷத்துக்குள்ளே கல்யாணம் நடந்தாகணும்...''

''ஏன்?''

''பயப்படாதீங்க... பாரதி நூற்றுண்டு வருதே... பெண்கள் விடுதலைக்காகப் பாடுபட்ட அந்தப் புதுயுகக் கவிஞனேட நூற்றுண்டிலே உங்க புது வாழ்க்கையும் தொடங்கட்டுமே...!''

மீனுவுடன் சேர்ந்து நானும் சிரித்தேன். பல ஆண்டுகளுக்குப் பிறகு நிம்மதியான சுகமான, ஆரோக்கியமான சிரிப்பு.


படித்துறையில் கூட்டம் அதிகமாய் இல்லை. இருந்தஐந்தாறு பேர்களிலும் தெரிந்த முகமாய் எதுவும் இல்லை. மகாலிங்கத்துக்குக் கொஞ்சம் ஆறுதலாய் இருந்தது. எதிர் வண்ணார் துறையில் யாரோ இரண்டு பேர் திமிறிக் கொண்டிருந்த காளை மாட்டைப் பிடித்து நிறுத்தி வைக்கோலால் தேய்த்துக் கொண்டிருந்தார்கள். சற்றுத் தள்ளியிருந்த பெண்கள் படித்துறையில் இரண்டொரு தாவணி போட்ட பெண்கள் சிரித்துப் பேசிக் கொண்டே கல்லில் துணியை மோதிக் கொண்டிருந்தார்கள்.

மகாலிங்கம் ஒவ்வொரு படியாய் எண்ணி எண்ணிக் காலை வைத்து இறங்கினார். தண்ணீர் மட்டம் கொஞ்சம் அதிகமாயிருந்தது. கொஞ்சம் கலங்கியிருந்தது. அவர் மனசைப் போல.

காலைத் தண்ணீரில் வைத்துவிட்டு, சட்டென்று பின்னுக்கு இழுத்துக் கொண்டார். தண்மை சுரீரென்று மூளையைத் தாக்கிற்று. குனிந்து உட்கார்ந்து கைகளால் தண்ணீரைக் கொஞ்சம் அளைந்துவிட்டுப் பிற்பாடு காலிரண்டையும் உள்ளே விட்டார்.

''அம்மா...'' என்று முனகினார். கஷ்டம் கவலை என்றால் மகாலிங்கத்துக்கு அம்மா ஞாபகம்தான் வரும். அம்மா ஆகாயத்தில் அந்தரத்தில் நின்றுஅருள் பாலிக்கிறவகையில் கைகாட்டுகிற மாதிரி தோன்றும். இப்போதும் அப்படித்தான் தோன்றிற்று, ஆனால் மனத்தின் பாரம் மட்டும் இறங்க மாட்டேன் என்று அடம் பிடித்தது. சட்டென்று மூக்கைப் பிடித்துக் கொண்டு ஒரு முறை முக்குளித்தார்.

இன்னொரு தடவை முக்குளித்தார். படித்துறையில் யாரோ 'தப தப'வென்று இறங்கி வருகிற சப்தம் கேட்டது. தண்ணீரை இப்படியும் அப்படியும் கைகளால் அளைகிற சப்தம் கேட்டது.



மகாலிங்கத்துக்குக் கொஞ்சம் அசூயையாய் இருந்தது. மூச்சு முட்டியதில் அதற்கு மேல் உள்ளுக்குள் இருக்க முடியவில்லை. சடக்கென்று வெளியே தலையை நீட்டி மணலில் கால்களை ஊன்றிக் கொண்டார்.

''அடேடேடே... மாலியா! எப்ப வந்தாப்ல மெட்ராஸ்லேர்ந்து?'' மகாலிங்கம் திடுக்கிட்டுத் திரும்பினார்.

''வெத்து மணியா? வாங்கோ வாங்கோ'' என்றார், முகத்தில் அகலமாகச் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு.

பிச்சுமணிக்கு ஊரின் வடக்குக் கோடியில் இரண்டு ஏக்கராவுக்குக் கொடிக்கால் தோட்டம் இருந்தது. நாலு பையன்கள், அத்தனையும் ஊர் விடலைகளாய் இருந்தவை. அவர் கீழ் கைகட்டிச் சேவகம் புரிந்து கொண்டிருந்தன. பிச்சுமணி வாயில் ஆலங் குச்சியோடு போய் நிற்கும் நேரத்திலிருந்தே பையன்கள் பறந்து பறந்து வேலை செய்வார்கள். வெற்றிலையைக் கூடையில் அடுக்கி அன்றாடம் மதராஸுக்கும், மதுரைக்குமாய் அனுப்புவார்கள். கொடிக்கால் ஓஹோ என்று கூடை கூடையாய் வாரிக் கொட்ட ஆரம்பித்த நேரத்தில் 'பிச்சுமணி'க்கு முன்னால் 'வெற்றிலை' சேர்ந்து கொண்டது. ஒரு பரிச்சயத்துக்காக அப்படி யாரோ கூப்பிட ஆரம்பித்து பின்னால் சோம்பேறித்தனத்தில் 'வெற்றிலை பிச்சுமணி', 'வெத்து மணி' ஆகிவிட்டது.

''நேத்துப் பொழுது சாய்ஞ்சப்பறம் வந்தேன்'' என்றார் மகாலிங்கம், 'வெத்து மணி' என்று கூப்பிட்டதற்கு லஜ்ஜைப்பட்டுக் கொண்டு.

''கடேசி வண்டியா?''


''ஆமா.''

''அதான் தெரியாமப் போச்சு. நான் சாயரட்சை மன்னார்குடிக்குப் போய்ட்டேன். வெத்திலை வெவகாரம்தான்.''

''சௌக்யம்தானே?''

''ஜோரா இருக்கேன்... ஈஸ்வரன் புண்ணியத்தில... க்ஷேமம் விசாரிக்கிற முகத்தைப் பாத்தா க்ஷேமமா இருக்கிற மாதிரி தோணலியே...''

மகாலிங்கத்துக்கு திக்கென்றது. எமகாதகன். அதுதான் வியாபாரத்தில்இப்



படிக் கொழிக்க முடிகிறது. எதிராளி முகத்தைப் படித்துப் பார்த்து அதற்கு ஏற்ற மாதிரி நைச்சியமாகவோ, அதட்டலாகவோ பேசிப் பேசி வியாபாரம் செய்து பழக்கம் தானே!

''என்ன விசேஷம்? திடீர்னு வந்திருக்காப்லே?''

பிச்சுமணி படித்துறைக் கல்லில் ஈர வேட்டியை மோதிக் கொண்டே கேட்டார்.

''உங்க கிட்டச் சொல்றதுக்கு என்ன? கிருஷ்ணன் கோயில் தெரு வீட்டை வித்துக் காசாக்கிக்கிட்டுப் போகலாம்னுதான் வந்தேன்.''

''நெஜம்மாவா...?''

''ம்...'' என்று முனகினுர் மகாலிங்கம்.

''பிதுரார்ஜிதச் சொத்து... உசிர் போனாலும் விக்க மாட்டேன்னு மூச்சுக்கு மூச்சு சொல்லிட்டிருந்ததெல்லாம்?''

''கெட்ட நேரம். பரமேஸ்வரனுக்குக் கான்ஸராம். ராஜ வைத்தியம் செய்தாகணும். அதுக்கு... அடையாறு ஆஸ்பத்திரில சேர்த்திருக்கு....''

பிச்சுமணிக்கு வாயடைத்துப் போயிற்று. சின்ன வயசில் பரமேச்சுவும், மாலியும் போட்டி போட்டுக் கொண்டு இதே ஆற்றை அப்படியும் இப்படியுமாய் நீந்திக் கடந்தது நினைவில் படமாய் ஓடிற்று. ராம, லக்ஷ்மணன் என்று அவர்கள் காதுபடச் சொல்லிச் சொல்லி பரமேச்சுவுக்கு ஜுரம் வந்த நாளில் ஊர் திருஷ்டி என்று ஊரைக் கரித்துக் கொட்டிக் கொண்டே வண்டிகட்டிக்கொண்டு அவர்கள் அம்மா பக்கத்து டவுனுக்குப் பதறிப் பதறிப் போனது ஞாபகத்துக்கு வந்தது. பின்னலேயே மாமி, கூட வந்த ஊர்ப் பையன்களைப் பார்த்து 'தூ' வென்று துப்பிவிட்டு 'போங்கடா... எல்லாரும்.... உங்க கூட டூ' என்று சொல்லிவிட்டு விம்மிக் கொண்டே ஓடினது... அந்தப் பரமேச்சுவுக்கா?

''அண்ணவுக்கா இப்படி? பொய் சொல்லலியே மாலி..?''

''உங்களுக்கே நம்பிக்கைப்படலேயே..''

''ப்ச்ச்ச்... எப்போ சேர்த்தது?''

''மிந்தாநாள்தான். டாக்டர் பாட்டுக்கு கன்னுப் பின்னுன்னு திட்டறுன். இவ்வளவு நாள் தூங்கினியான்னு கேக்கருன். எப்படித் தெரியும் இது கான்ஸர்னுட்டு? தொண்டை வலிக்கிறதுன்னுன்.... சரி ஜலதோஷம் வரப் போறதுன்னு நெனைச்சோம்... புலி வந்திருக்கு...''

''சாப்பிடக் கொள்ள முடியறதோ?''

''இல்லியே...அதான் வேதனை. அண்ணு நாக்கை நல்லா வளர்த்துட்டான். ருஜி ருஜியா சாப்டாகணும் அவனுக்கு. இப்ப ட்யூப் வழியா நேரா நரம்புலேயே ஆகாரத்தைக் கொண்டு போய்ச் சேர்த்தாறது!''

''அழாதேயுங்காணும்... அடடா... என்னது? எல்லாம் மேலே இருக்கிறவன் செய்கிற லீலே.''

''அட போங்க வெத்துமணி... ஆண்டவனுவது, புடலங்காயாவது... மூனு பொண்ணுங்களைப் பெத்து வச்சிருக்கேன். குதிர், குதிராய் வளர்ந்து போய் நிக்கறுங்க.. எங்க போறது பணத்துக்கு... இந்தச் சமயத்தில இவனுக்கு வேற இப்படி? அவன் படற கஷ்டம் பார்க்கச் சகிக்கலே...''

குலுங்கக் குலுங்க அழும் மகாலிங்கத்தைப் பார்க்கப் பிச்சுமணிக்குக் கஷ்டமாய் இருந்தது.

''வீட்டை என்ன விலைக்கு வந்தா தள்ளிடலாம்னு உத்தேசம்?''

''இன்னி நெலைமைக்கு நாப்பது ரூபாய்க்கு வெளியப் போனப் போறும்னு இருக்கு... எப்படியாவது பரமேச்சு பொழைக்கணும்.''

''சரி... முடிஞ்சுது வேலைன்னு நெனைச்சுக்கும். ராத்திரி வண்டிக்கு நீர் மெட்ராஸுக்குப் போயிடலாம்... அப்புறம் ஒரு சின்ன விஷயம்''

''சொல்லுங்க வெத்து... பிச்சுமணி...''

''மெட்ராஸ்ல நீர் இருக்கிற எடத்துக்குப் பக்கத்திலே ஏதாவது ஈஸ்வரன் கோயில் இருக்கா?''

''ம்...'' என்று அசுவாரஸ்யமாய்ப் பதில் அளித்தார் மகாலிங்கம்.


''ஒரு மண்டலம் விடாமப் பிரதட்சணம் பண்ணும்.... அவன் கிட்டக்க ஒண்ணும் கேட்க வேண்டாம். என்ன தரணும்னு அவனுக்கே தெரியும். செஞ்சுடுவான்... எங்கப்பன் ஈசுவரனை நல்லாப் புரிஞ்சுண்டிருக்கிறவன் நான்... சொல்றதைச் செய்யணும் செய்வீரா?''

''செய்யறேன். கண்டிப்பா செய்யறேன். எப்படியோ நல்ல வழி பொறந்தாச் சரி.''

''அப்பா வந்தாச்சு...'' என்று கூவிக் கொண்டே ஹரி உள்ளே ஓடினுன்.

''விசேஷம் ஏதாவது உண்டா?'' — கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தார் பிச்சுமணி.

தாலி கட்டவேண்டிய சமயத்தில் அதிகப்படியான வரதட்சணை கொடுத்தால்தான் தாலி கட்டுவேன் என்று மணமகன் அடம் பிடிக்க, ஆத்திரமடைந்த பெண்ணின் தகப்பனர் மணமகனையும் அவன் நண்பர்களையும் ஒருஅறையில் தள்ளி எட்டுமணி நேரம் சாப்பாடு, தண்ணீர் இல்லாமல் பூட்டிவிட்டார்! பின்னர், நடந்த குழப்பத்திற்காகவும், திருமணம்



செய்து கொள்ளாததற்காகவும் நஷ்டஈடாக 25,000 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று ஒப்பந்தத்தில் கையெழுத்து வாங்கிக் கொண்டு, மணமகனையும் அவன் நண்பர்களையும் நிர்வாணமாக்கி ஊரைவிட்டே துரத்தியடித்தார். சமீபத்தில் ஜபல்பூரில் நடந்த சம்பவம் இது!

- மிஸ்டரி இதழிலிருந்து
அ. குமார்

''மாலி வந்திருந்தார் பத்து நா மின்னடி. எங்கேன்னுர். க்ஷேத்ராடனம் போயிருக்கார், ரெண்டு மாஸம் ஆறது... வந்துடுவார் இன்னும் பத்து நாள்லன்னேன். இன்னிக்குக் காலமே மறுபடியும் வந்துட்டார். வந்துட்டாரான்னு கேட்டார். வர்ற நேரம் தான்னேன்.... வந்தா நேரே வீட்டுக்கு வரச்சொல்லி இருக்கார்.'' என்றுள் அபயம் கை கால் கழுவத் தண்ணீர் மொண்டு கொண்டே.

''ஏதாவது சொன்னுரா? பரமேச்சுக்கு எப்படி இருக்காம்?

''ஒண்ணுமே சொல்லலே...நிக்கவேயில்லே. வந்தார், போயிட்டார்.''

''சரி, நான் அப்படியே போய்ப் பார்த்துட்டு வந்துடறேன்'' என்று சொல்லிவிட்டு வாசலில் இறங்கினுர் பிச்சுமணி.

ஆற்றுக்குப் போகும் வழியில் மயானத்துக்குப் பாதை இடது பக்கம் பிரிந்த இடத்தில் வேப்ப மரத்து நிழலில் வளர்ந்திருந்த சுமை தாங்கி மேல் குப்புறப் படுத்திருந்த உருவம் பிச்சுமணி பார்வையில் விழுந்து அவர் புருவத்தை மேலேற வைத்தது. கண்டிப்பாய் அது மகாலிங்கம்தான்!

''மாலி!'' கூப்பிட்டுவிட்டுத் தோளில் தட்டினுர் பிச்சுமணி.

திடுமென விழித்து வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தார் மகாலிங்கம். அகல மாய்க் கண்களை விரித்தார்.

''என்ன மாலி இந்த எடத்துல?''

''உம்மைச் செருப்பால அடிக்கணும்யா.''

பிச்சுமணி அதிர்ந்து போனுர்.

''என்ன மாலி என்ன ஆச்சு உமக்கு?''

மகாலிங்கம் குலுங்கிக் குலுங்கி அழத் தொடங்கினுர்.

''மன்னிச்சுடுங்க பிச்சுமணி... எனக்கிருந்த வேகத்தில் உளறிப்புட்டேன்.''

''பரவாயில்லே. மனுஷன்னு கோபம் வர நேரத்தில் அப்படித்தான் மாறுவான்... முன்னேபின்னே யோசிக்க மாட்டான்.என்னை எதுக்காகச் செருப்பாலே அடிக்கணும்னீர்?''

''உங்க ஈசுவரன் என்னை ஏமாத்திட்டான் பிச்சுமணி. பரமேச்சு போய்ட்டான் பிச்சுமணி... ஒரேயடியாப் போயிட்டான். ஈஸ்வரனை ஒரு மண்டலம் சுத்தி வரச் சொன்னீங்களே... எல்லாம் சரியாப் போயிடும்னீங்களே... உங்க ஈசுவரன் எங்கண்ணனைக் காப்பாத்தலேயே பிச்சுமணி... காப்பாத்தலேயே... எனக்கு அண்ணன் பொழச்சு வரது தானே முக்கியமா இருந்தது....''

''வீட்டை வித்து வாங்கிட்டுப் போனபணமெல்லாம் செலவாயிடுச்சா மாலி?'' பிச்சுமணி பொறுமையாகக் கேட்டார்.

''காவாசிப் பணம் செலவாயிருக்கும்...'' என்று செத்த குரலில் பதில் சொன்னுர் மகாலிங்கம்.

''இப்பப் புரிஞ்சுதா?''

''எது பிச்சுமணி?''

''ரிஷிகேஷ்ல லக்ஷ்மண் ஜுலான்னு தொங்கு பாலம். திருவிழாக் கூட்டம் மாதிரி வழிய வழியக் கும்பல் போகும் வரும். பாலமே ஆடும். அறுந்து போய் விழுந்து ஆத்தோட போயிடுவோமோன்னு பயமா இருக்கும். விழ மாட்டோம்.''


மகாலிங்கம் பிச்சுமணியை வெறித்துப் பார்த்தார்.

''அது மாதிரிதான் இதுவும்.''

''புதிர் போடாதீங்க பிச்சுமணி. தலையைப் பிச்சுக்கிற மாதிரி இருக்கு.''

''கான்ஸருக்கு ஏது வைத்தியம்? இருந்த எல்லாப் பணத்தையும் செலவழிச்சு, பத்தாமக் கடன் வாங்கி வைத்தியம் பண்ணியிருந்தா மாத்திரம் பரமேச்சு பொழைச்சிருப்பாரோ? அதுக்கு வைத்தியம் பார்க்கறதுங்கறது சும்மா ஒரு உளாக்காட்டிக்குத்தான். பரமேச்சு இன்னும் கொஞ்சம் ஜாஸ்தி அவதிப்பட்டிருப்பான். உன்னையும் கஷ்டப்படுத்திட்டுப் போயிருப்பான். இப்ப உமக்கும் விடுதலை... அவனுக்கும் விடுதலை. பொண்களைக் கரையேத்தற வழியைப் பாரும். ஒரு மண்டலம் அவனைச் சுத்தினதோட பலன் காணும் இது... மனசைத் துடைச்சுக்கும் வாரும் வீட்டுக்குப் போகலாம்.. கலகலன்னு சிரிச்சிட்டே காவிரி என்னமாய் ஜொலிக்கிரு பாரும். கங்கையிலே போய் முழுகிப் பார்த்தும் கூட முழுத் திருப்தி வரலேங்காணும் எனக்கு.''

சொல்லிவிட்டு பிச்சுமணி காலை எட்டி எடுத்து வைத்தார். மகாலிங்கத்துக்கு ஏதோ புரிகிற மாதிரி இருந்தது. ஒன்றுமே புரியாத மாதிரியும் இருந்தது!



கர்ச்சிப் நீளம் 8 கெஜம்!

''நைஜீரியன் ரியல் மெட்ராஸ் ஹாண்ட் கர்ச்சிப்'' என்ற ஒருவகை சேலை சேலத்தில் தயாரிக்கப்படுகிறது. இது 36 அங்குலம் அகலம், 8 கெஜம் நீளம் உள்ளது. தயாரிப்புச் செலவு ரூ. 200லிருந்து ரூ. 500 வரை ஆகிறது. ஆண்களும் நெய்கிருர்கள்; பெண்களும் நெய்கிருர்கள். நாளொன்றுக்கு ரூ. 20லிருந்து ரூ. 40 வரை இவர்களுக்குக் கூலியாகக் கிடைக்கிறது. நைஜீரியாவில் இந்தச் சேலை ரூ. 4000 வரை விலை போகிறது!

- மா. ரா. சிவ அரசி

ரண்டு தொடர்கதை, ரே முற்றும்

சாருப்ரபா சுந்தர்

ஐ'ம் அருண் — (நிகோடின் உதடுகள் நிறையப்பெண்களை நிர்வாணமாய்ப் பார்த்து விட்ட கண்கள். அமிதாப் உயரம். உடையில் வண்டி அழுக்கு.)

அவள் சிகரெட்டின் புகையைச் சாவகாசமாய் வெளியேற்றிவிட்டு அருணின் கைபற்றிக் குலுக்கினாள்.

கை மிருதுவாயிருந்தது. மார்பு தெரிந்ததைப் பற்றிக் கவலைப்பட்டதாய் முகம் சொல்லவில்லை. வாசனையாய் செண்ட் போட்டுக் கொண்டு ஜீன்ஸில் கிறிஸ்டி என்று பெயர் வைத்திருந்தாள். சிலுவை அணியாத கழுத்து.

பிராந்தி அல்லது விஸ்கி?

கேட்ட அருணிடம் 'இரண்டும்' என்று கண் சிமிட்டிச் சிரித்தாள்.

'அருண் உன் மீசையை எனக்குரொம்பவும் பிடிச்சிருக்கு. ஐ லவ் இட்!'

அருணின் உச்சந் தலையில் ஒரு கூடை ஐஸ் குளிர்ச்சி.

'தாங்க் யூ மை டியர்'.

கிடார் கொஞ்சலாய் அழைத்ததும் மன்னிப்புக் கேட்டுவிட்டு நடனமாய்ப் போய்விட்டாள்.

• • •

ஜீரோ வாட் பல்ப் எரிந்து கொண்டிருந்தது.

ஒரு பணக்காரத்தனமான காட்டேஜின் இரவுப் படுக்கை அறை. அருண் ப்ரியாவை அணைத்துக் கொண்டிருந்தான். அவள் அதிலிருந்து மீளத் திமிறினாள்.

'விடு. நான்தான் அலுத்துப் போய்விட்டேனே. போய் உன் புதுக் காதலி கிறிஸ்டியை அணைத்துக்கொள்.'

அருண் சத்தம் போட்டுச் சிரித்தான்.

'என் இனிய முட்டாள் அன்பே. இன்னுமா என்னைப் புரிந்து கொள்ளவில்லை? எத்தனை பெரிய திட்டத்தோடு அவளை நெருங்க ஆரம்பித்திருக்கிறேன். புரிந்தால் இப்படிப் பேசுவாயா?'

'என்னை நம்பச் சொல்கிறாயா? இருந்தாலும் சொல் உன் திட்டத்தை!'

'கிறிஸ்டி இருபது லட்சம் சொத்துக்கு ஒரே வாரிசு. கார்டியனாக ஒரேயொரு கிழ தாத்தா. அவளைக் கல்யாணம் செய்வித்ததும் கிழவன் பொறுப்பு காலாவதியாகி விடுகிறது. அவளை மணந்து கொண்டு தேன் நிலவு பயணத்தின்போது போலீஸ் அந்தக் கிழவன் மீது சந்தேகப்படுகிற மாதிரி கொன்றுவிடுவேன். அப்புறம் சொத்து அத்தனையும் நமக்குத்தான்!'

'கேட்பதற்கு அருமையாய் இருக்கிறது. ஆனால் ஒரு அன்னக்காவடியைக் கல்யாணம் செய்துக்க கிறிஸ்டி என்ன அத்தனை முட்டாளா?'

'அங்கேதான் என் புத்தி வேலை செய்கிறது நான் ஒரு பெரிய பணக்காரன் என்று ரீல் விட்டிருக்கிறேன்.'

'கல்யாணத்துக்கு அப்புறம் அவளைக் கொல்வதற்குப் பதில் சேர்ந்து வாழ நீ முடிவெடுத்து விட்டால்?'

'எனக்கு எச்சில் பழம் பிடிக்காது. கிறிஸ்டி இந்த ப்ரியாவுக்குக் கால் தூசு!'

'இத்தனை விவரம் உனக்கு எப்படித் தெரியும்?'

'ஆள் வைத்து அந்தக் கிழவனிடம் விசாரித்துத்



தெரிந்து கொண்டேன். எத்தனை நாள் தான் சின்னச் சின்ன ஏமாற்று வேலைகள் செய்து வாழ்வது? போர் அடித்து விட்டது. இந்தத் திட்டம் மாத்திரம் ஒழுங்காய் வெற்றி பெற்றுவிட்டால் போதும். வாழ்நாள் முழுக்கக் கவலையில்லை. இதற்கு உன் உதவியும் அதிகமாய்த் தேவை. செய்வாயா ப்ரியா?'

'நிச்சயமாய்.'

அவள் அவன் தோளில் சரிந்தாள்.

• • •

டிரைவ் இன்னில் கூட்டம் அதிகமில்லை.

'என்னை நிஜமாகவே காதலிக்கிறாயா அருண்?' — கிறிஸ்டி.

'இந்த வெயிட்டரின் வெள்ளைச் சீருடை சத்தியமாய்' — அருண்.

'என் பணத்துக்கு ஆசைப்பட்டு என்னை நீ காதலிக்கவில்லையே?'

'உன்னைவிட எனக்கு பாங்கில் பணம் அதிகமாக இருக்கிறது.'

'எனக்குக் கல்யாணம் செய்துகொண்டு குழந்தை பெத்துக்க ஆசை வந்திட்டது அருண். நல்ல கணவனாக நீ கிடைக்கப் பெற்றாய். கல்யாணத்துக்கு அப்புறம் என் சுதந்திரத்துக்குத் தடையாய் இருக்க மாட்டாயே?'

'நிச்சயம் மாட்டேன். உன் பேச்சுதான் எனக்கு வேத வாக்கு.'

'குட். நாளை மறுநாள் கல்யாணப் பெண்ணாகச் சந்திக்கிறேன். வெகு சிக்கனமாய்க் கல்யாணத்தைச் செய்து கொள்வோம். ரிஜிஸ்டர் ஆபீஸில்....'

அருண் நிறையக் கனவுகளோடு தலையாட்டினான்.

• • •

அடுத்த இரண்டு நாள் கழித்து பேப்பரில் இப்படிச் செய்தி வந்தது.

'அருண்—கிறிஸ்டி என்கிற புது மணத் தம்பதியர் ஊட்டியில் கொலை. இது தொடர்பாக ப்ரியா-ஜான் என்கிற இருவர் கைது.'

என்ன வாசகரே, குழப்பமா யிருக்கிறதா? கீழ்வரும் உரையாடலைத் தாமதமாய் எழுதினதற்குத் தயவுசெய்து மன்னியுங்கள்.

'ஜான்! நம்ப வலையில் மீன் சிக்கிவிட்டது. எனக்கும் அந்தப் பணக்கார ஏமாளி அருணுக்கும் கல்யாணத்துக்கு நாள் குறித்தாயிற்று. அன்றே நாங்கள் ஊட்டி போகிறோம். நீயும் பின்தொடர்ந்து ஊட்டிக்கு வா. அருணின் பழைய காதலி ஒருத்தி இருக்கிறாள். பெயர் ப்ரியா. அவள் மீது போலீசின் பார்வை திரும்பும் விதத்தில் அருணைத் தீர்த்துக்கட்டிவிடு. கொஞ்ச நாளில் கேட்பதற்கு வேறு ஆளில்லாத அவன் சொத்து அத்தனையும் நமக்குத்தான்!'

கிறிஸ்டி சொன்னதைக் கேட்டு ஜான், ஹையா என்று குதித்தான்.

'ஜான் ஊருக்குத்தான் நீ என் தாத்தா. இப்போ வேஷத்தைக் கலைத்து ஜானாகிவிடு. முகத்தில் தாடி குத்துகிறது....'

பெண் மனம் பேசுகிறது!

படம் முழுவதும் ரொம்பப் புதுமையான (!)காட்சிகள். உதாரணத்துக்கு ஒன்று. வடிவுக்கரசி பக்கத்தில் மாயமாக மற்றொரு வடிவுக்கரசி தோன்றுகிறார். சம்பாஷணை இந்த ரீதியில் செல்கிறது.

''ஆ! யார் நீ?''

''என்னைத் தெரியவில்லையா?''

''இல்லையே!''

''நான்தான் உன் மனச்சாட்சி! ஹாஹா!

''ஆ! அப்படியா! ஐயோ!''

(ஆச்சரியக் குறிகள் ஸ்டாக் குறைவதால் இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.)

கதையைப் பற்றிப் பேசாதிருத்தல் உத்தமம். ஓரிரு ரீல்கள் தவிர படம் முழுவதும் சப்பாணி பாணி கிறுக்கனாக சுதாகர். தாவணியில் தோன்றும் சச்சுவைக்கூட சகிக்கலாம். அரை டிராயரில் வலம் வரும் ஆறரையடி சுதாகரை....? சுமலதா வடிவுக்கரசி, ஜெய் கணேஷ, அசோகன், ராஜாபகதூர் என்று நிறையப்பேர் திரையில் தோன்றி எதையும் நேராகப் பேசாமல் சகட்டுமேனிக்கு ''கடலிலே மூழ்கினா முத்துக் கிடைக்கும், ஆனா சாக்கடையிலே முழுகினா என்ன கிடைக்கும்?''என்ற பாணியில் தத்துவவசனங்களால் சம்பாஷிக்கிறார்கள். சுருளியின் மறைவினால் தடம் மாறிச் சப்பென்று முடியும் காமெடி டிராக். கொக்குத் தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிப்பதைப் பார்க்க முடியாதவர்கள், இதில் சுதாகரைக் குணப்படுத்தும் யுக்தியைக் கண்டு மகிழலாம். தங்கள் பழைய மெட்டுக்களையே காப்பியடித்துக் காலம் தள்ளும் சங்கர் கணேஷின் ரீரிக்கார்டிங்கும் காதைப் பிளக்கிறது. கச்சா முச்சாவென்று எடிட்டிங்கும், காமராவும், விரசக் காட்சிகளில் மட்டும் கவனம் காட்டும் ஏ. ஜகந்நாதனின் டைரக்ஷனும் சோதிக்கின்றன.

பெண் மனம் பேசுகிறதாம்!

பேத்துகிறது என்று வைத்திருக்கலாம்.

—சிந்து – ஜீவா



வட்கப்படற மாதிரி அப்
டி ஒண்ணும் நீ பருத்துட
யே! பணவீக்கத்தையே
மந்துக்கிட்டு நிக்கிற
ந்தியனுக்கு இது ஒரு
ாரமா?



இப்படி ஊட்டி விடறதுன்னு சம பந்தி போஜனத்துக்கு நான் எப் பவும் தயார்!



து வேணும்னு ரப்பர் பாம்பா இருக் ம்; ஆனா, நியூட்ரான் குண்டை வைச்சுக் விளையாட்டறுரே, ரேகன், விபரீதத் த்தானே!



சவானே அம்போன்னு விட்டுட்ட இ. காங்கிரஸ் மாதிரி என்னை விட் டுட்டுப் போயிட்டாரே, நியாயமா? நீயே சொல்லு!



ஐய்யய்ய என் னமோ புதிய தலை நகர்னு சொன் னுங்களேன்னு நடையா நடந்து வந்து பார்த்தா..., பூ! இவ்வளோதானா?

கருத்து:
குட்டிகிருஷ்ணன்
படங்கள் உதவி:
சலன்


மரக்கிளைகளினூடே தெரிந்த வானின் பகுதியை வெறித்து நோக்கிக் கொண்டிருந்தாள் நீலா. ஊன்றியிருந்த கையின் அழுத்தம் குறையவே, காகிதம் காற்றில் படபடத்தது. சிந்தனையிலிருந்து விடுபட்ட அவள் தொடர்ந்து எழுதத் தொடங்கினாள்.

'இதைப் படிக்கும்போது உங்களுக்கு ஆத்திரம் பொத்துக் கொண்டு வரும்... எனக்கு அக்கறையில்லை—'

—கீழே ஹாலில் காலிங் பெல் ஒலித்தது. எழுதியவற்றைச் சரேலென்று டிராயருக்குள் தள்ளிவிட்டு எழுந்தாள். விசுவிசுவென்று படிகளில் இறங்கினாள். மாஜிக் ஐ வழியாக போஸ்ட்மேனின் கச்சலான உருவம் தெரிந்தது. புக் போஸ்டில் வந்திருந்த அந்த வாரத்திய 'பொன்னி' இதழை வாங்கிக் கொண்டு கதவைத் தாளிட்டாள். மேஜை

நடுவே ஓர் உலகம்

அக்ஷயன்



மீது அதை வைத்துவிட்டு, மீண்டும் மாடிக்கு வந்தாள்.

....'நீங்கள் மணக்கவிருந்த பெண் வஞ்சித்து விட்டாள். அந்த ஏமாற்றத்தில் சித்திரவதை செய்தீர்கள் என் அன்னையை! ஆத்திரத்தைக் கொட்ட உங்களுக்குக் கிடைத்த பாத்திரம் அவள்! தான் அனுபவித்த வேதனை என் உருவில் வெளி வந்ததால் எனக்காக வாழ முற்பட்டாள். வாழ விட்டீர்களா அவளை? அம்மாவும் பிள்ளையும் சேர்ந்து கொண்டு நோகடித்தே சாகடித்து விட்டீர்களே அவ்வுத்தமியை... என்ன, ஆத்திரம் பீறிக் கொண்டு வருகிறதா? வாழ் நாளெல்லாம் தனக்குள் புழுங்கிய என் அன்னை படுத்த படுக்கையாகக் கிடந்த போது ரகசியமாக என்னிடம் கூறியவை தாம் இச்செய்திகள்... இவ்வுலகம் சுமத்திய பளுவை இங்கேயே இறக்கி விட்டுப் போகத் துடித்தாள் போலும்!

'இரண்டாம் தாரம் இரண்டாம் தரமாக அமைந்தாலும் ஓரளவு தன்னைத் தானே தேற்றிக் கொள்ளலாம்; கீழ்த்தரமாக அமைந்து விட்டால் கட்டிக் கொண்ட பாவத்தை அனுபவித்துத்தானே தீர வேண்டும்!... யார் செய்த புண்ணியமோ, தங்களுக்கு அந்தத் தொல்லை இல்லை. நான் செய்த பாவம் நன்றாக அனுபவித்து விட்டேன்! தங்களது இளம் மனைவி பற்றி மரியாதைக் குறைவாக எழுதியிருப்பதைப் படித்துவிட்டுத் தாங்கள் துள்ளிக் குதிப்பதற்கு முன் ஒரு வார்த்தை— தந்தைக்கு மகள் எழுதும் கடிதமாக இதை நான் கருதவில்லை.... நிற்க,'

கீழே யாரோ கதவை மெல்லத் தட்டினார்கள். இறங்கிச் சென்றவள் மின் விளக்கைப் போட்டுப் பார்த்தாள். கரண்ட் இருந்தது. பின் ஏன் காலிங் பெல் ஒலிக்கவில்லை?... மாஜிக் ஐ வழியாகப் பார்த்தாள். எவரும் நிற்கவுமில்லை....சற்றுத் தயங்கினாள். கதவு மீண்டும் தட்டப்பட்டது. தாழ்ப்பாளை நீக்கி, ஒருக்களித்தபடி நோக்கினாள். சசி நின்றிருந்தான். அடுத்த போர்ஷனில் குடியிருக்கும் பையன்.

''நீலாக்கா, கோவமா இருக்கியா?'' — சிரமப்பட்டுத் தெளிந்த அந்தப் புன்முறுவலிலும் ஒரு தீவிரத்தைக் கண்டுவிட்ட— 'மாஜிக் ஐயில் சிக்காத' — அந்தப் பொடியன் கேட்டான்.

''....இல்லேடா கண்ணு...என்னவேணும் உனக்கு?''

''அம்மா பொன்னிப் புச்சகம்கேட்டாங்க'' தான் அணிந்திருந்த புதிய ஸ்லிப்பர்களை ஒருமுறை பார்த்துக் கொண்டான் அவன்.

உறையிலிருந்து புத்தகத்தை உருவி அவனது பிஞ்சுக் கையில் வைத்தாள். சட்டென்று கண்கள் பனித்தன.

சசி போய்விட்டான். மண் தரையில் பாதச் சுவடுகள் திட்டுத் திட்டாகத் தெரிந்தன.

''மென்மையான உணர்வுகளைப் பெற்றிராவிடினும், மற்றவரின் அத்தகைய உணர்வுகளை மதிக்கும் தன்மையாவது இருக்கவேண்டும். ஏதோ உபதேசம் செய்வதாக எண்ண வேண்டாம். தங்களிடம் மருந்துக்குக்கூட இல்லாத நற்பண்புகளை அலச எனக்கு நேரமும் இல்லை.

''நான் பட்ட கஷ்டம் நீ படக்கூடாது நீலு... இதுதான் என் பிரார்த்தனை' என்று உயிர் பிரியும்வரை புலம்பிக் கொண்டேயிருந்தாள் என்னைப் பெற்றவள். முதன் முதலில் என்னை ஈர்த்தது சுதாகரின் இனிய சுபாவமே அன்றி உடற்கட்டு அல்ல என்பதுடன், அவரை மணந்தால் என் அன்னையின் ஆத்மா சாந்தியடையுமென்று நான் உறுதியாக நம்பியிருந்ததையும் குறிப்பிட விரும்புகிறேன்.

''வெளியே ஓரிரு முறை சந்திக்க நேரிட்ட போதும், 'கல்லூரி நாட்களில் சரி; இப்போது அகஸ்மாத்தாக நாம் எதிர்ப்பட்டுப் பேசுவதுகூட வீண் வதந்திக்கு இடமளிக்கும். கூடிய விரைவில் நான் உன் தந்தையைச் சந்திக்கவருகிறேன்' என்றார்...ஹி ஈஸ் எ ஜெண்டில்மேன்!''

நீலாவுக்கு அழுகை பொத்துக் கொண்டு வந்தது. நடராஜர் படம் போட்ட காலண்டர் லேசாகக் காற்றில் அசைந்தது. விறு விறுவென்று தொடர்ந்து எழுதினாள் அவள்.

''பள்ளிப் பருவத்திலேயே பெற்றோரை இழந்துவிட்ட அவர், யார் யார் வீட்டிலோ தங்கிப் படித்தார். கஷ்டப்பட்டு முன்னேறி எம். ஏ.யில் முதல் வகுப்பில் தேறினார். கடவுள் கிருபையால் நல்ல வேலையில் இருக்கிறார்....

''அன்று மாலை சாரு வீட்டுக்குப் போய் விட்டுத் திரும்பும்போது எதிர்பாராத வகையில் சுதாகரைச் சந்தித்தேன். வியப்புடன், 'ஏது இந்தப் பக்கம்' என்று கேட்டேன்.

'ஆபீஸர் ஒருவர் இந்தத் தெருவில் இருக்கிறார்... பார்க்க வந்தேன்' என்று அவர் கூறிக் கொண்டிருக்கும்போதே அப்பகுதியில் எங்களுக்கு மிக அருகே இருந்த டீக்கடையிலிருந்து பெருங் கூச்சல் எழுந்தது. ஏதோ கலாட்டா. அது முற்றிவிடவே எனக்கு ஒரே பயமாகப் போய்விட்டது.

''கவலைப்படாதே... உன் தெரு வரை துணை வருகிறேன்'' என்று அவர் சொல்ல, இருவரும் நடக்க ஆரம்பித்தோம். நம் தெரு முனை வந்ததும், விடை பெற்றுக் கொண்டார்.



'நன்றாக இருக்கிறது... இவ்வளவு தூரம் வந்துவிட்டு வீட்டுக்கு வராமல் போவதா?' என்று அழைத்தேன். 'இல்லை... நண்பர் ஒருவரை லாட்ஜில் என் அறைக்கு வரச் சொல்லியிருக்கிறேன். இப்போது உன் வீட்டுக்கு வந்தால் உடனே திரும்பவும் முடியாது. ஸாரி... இன்னொரு நாள் வருகிறேன்...வரவேண்டுமே!' என்று கூறிவிட்டுப் போய்விட்டார். அச்சமயம்தான் தெரு முனையில் எங்களைப் பார்த்து விட்டிருக்கிறாள், தங்களின் இரண்டாந்தாரம்!'

''மறுநாள் காலைவீடே அதிர்ந்தது. என்னை நீங்கள் பேச விட்டால்தானே? பொறுமையுடன் நின்றேன். தங்கள் இரைச்சல் சற்று ஓய்ந்தபோது, 'தயவு செய்து கத்த வேண்டாம், நீங்கள் பேசுவது எனக்கு மட்டும் கேட்டால் போதுமே' என்றேன். குரலை இன்னும் உயர்த்தி, 'தெரியட்டுமே... நாலு பேருக்குந்தான். உன் லட்சணம்' என்றீர்கள். அதன் விளைவுதான் அணு அணுவாகச் செத்துக் கொண்டிருக்கிறேன்.


''என் லட்சணத்தை உங்களது இரண்டாந்தாரத்தின் இரண்டும் கெட்டான் குழந்தைகள் கேட்டுக் கேட்டு மகிழ்ந்தன. சசியின் அம்மா போர்டிகோவரை வந்து கூடுமானவரை கிரகித்துக் கொண்டாள். அதுமட்டுமா, காரைத் துடைக்கத் தண்ணீர் மொள்ள வந்த உங்கள் டிரைவர், பாத்ரூம் பக்கமாக ஒதுங்கி நின்று ஒட்டுக் கேட்டான்.

''இவ்வளவு பெரிய வீட்டில் எனக்குள்ள மரியாதையையும் தரப்பட்டிருந்த ஸ்தானத்தையும் புரிந்து கொண்டு விட்டான். கூனிக் குறுகிக் கொண்டு இதை எழுதுகிறேன். பருவக் கிளர்ச்சியால் உடலின் பத்துக்கு ஏங்கித் தவிப்பதாக என்னை எடை போட்டுவிட்ட அவன், நீங்கள் யாரும் இல்லாத சமயம் பெட்ரோல் டின்னை வைக்க உள்ளே வந்தான். வழக்கம் போல் அதை வாங்கிக் கொண்ட என்னிடம் தகாத முறையில் நடந்து கொண்டான். அதிர்ச்சியடைந்த நான் மேஜையிலிருந்த ரூல் தடியினால் ஒரு போடு போட்டேன். அதுநாள்வரை என்னை ஏறிட்டுப் பாராத அந்தப் பயல், நான் கொடுத்த அடியைச் சாகும்வரையில் மறக்க மாட்டான்! உண்மையில் தங்களது காட்டுமிராண்டித்தனத்துக்குக் கிடைத்த அடிஅது என்பதைத் தாங்களும் மறக்கவேண்டாம்....

''எப்படியானால் என்ன? கொஞ்ச நஞ்சமிருந்த மன அமைதியையும் இழந்துவிட்டேன். நான். இவ்வளவு கேவலமாக

''வேலைக்காரி வேலையை விட்டு விலகிட்டாளா ஏன்?''

''டி. வி. செட்டை விற்றுட்டோம், அதான்'' —கீழை அ. கதிர்வேல்




என்னை நோக்கும் மிருகங்களின் மத்தியில் நான் ஏன் வாழ வேண்டும்? உலகிலுள்ள அத்தனை பேரும் இவ்வீட்டுக்குள் மூலைக்கு மூலை ஒளிந்து கொண்டு என்னைக் கற்பழிக்கக் காத்திருப்பது போன்ற ஓர் உணர்வு என்னை வாட்டி வதைக்கிறது. பைத்தியமாகத் திரியும் அவல நிலையை அடைவதற்குள் இங்கிருந்து நான் வெளியேறிவிட வேண்டும்.

''ஆம்.. ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன். இக்கடிதம் தங்கள் கையில் கிடைக்கும்போது —பயப்பட வேண்டாம் — நான் உயிரோடுதான் இருப்பேன்; இவ்வீட்டில் இருக்க மாட்டேன். வீட்டைப் பூட்டி விட்டுத்தான் செல்கிறேன்; கவலை வேண்டாம். டூப்ளிகேட் சாவிதான் உங்களிடம் இருக்கிறதே!

''சுதாகரை இழுத்துக் கொண்டு ஓடிவிட்டதாகக் கற்பனை செய்ய வேண்டாம். தங்களின் இரண்டாம் தாரம் வீணாக அலட்டிக் கொள்ளப் போகிறார்கள்!...என்னைத் தேடும் கஷ்டத்துக்கு உங்களை உள்ளாக்கப் போவதில்லை. தென்னிந்திய டவுன் ஒன்றில் பெண்களுக்கான டியூட்டோரியல் காலேஜில் எனக்கு லெக்சரர் வேலை கிடைத்திருக்கிறது. ஸ்தாபகர் உட்பட அனைவரும் பெண்களே! நாங்கள் பாதுகாப்பாக வாழத் தனி அறை தந்திருக்கிறார்கள். எப்போதோ அப்ளை செய்தது. இப்போது — தக்க சமயத்தில் உதவியிருக்கிறது. என் ஒருத்திக்கு இந்தச் சம்பளம் அதிகம்தான். குறைந்த பட்சத் தேவைக்குப் போக மீதியைத் தங்களுக்கு அனுப்பி விடுகிறேன். எனது இருப்பிடத்தை அறிய அதிக வாய்ப்பு இருப்பதால் மற்றுமொரு வேண்டுகோள் — தயை செய்து என்னைச் சந்திக்க முயல வேண்டாம். தங்களைக் கண்டால் உணர்ச்சி வசப்பட்டு ஏதேனும் செய்து கொண்டாலும் செய்து கொண்டு விடுவேன். தற்கொலையை வெறுப்பவள் நான். எனவே இச்சிறு வேண்டுகோளைப் புறக்கணிக்காதீர்!

''உங்கள் டிரைவர் திருடனுக்குத் தேள் கொட்டிய நிலையில் இருக்கிறான். வீணாக விஷயத்தைக் கிளறி இன்னும் குழப்பங்களை உருவாக்க வேண்டாம். அத்துடன் விட்டுவிடுங்கள் அதை! என் கல்யாண விஷயமாக வருபவர்களிடம், 'ஜாதகப்படி திருமணமானவுடனே விதவையாகிவிடுவாள் அவள்... கொடிய தோஷம் இருக்கிறது. வேலை பார்க்கும் யோகம் மட்டும் இருப்பதால் உறவினருடன் தங்கி, சொந்த ஊரில் ஒரு வேலையில் இருக்கிறாள்' என்று நாசூக்காகச் சொல்லிவிடலாம். தயவு செய்து கல்யாண விஷயத்தை மறந்துவிடுங்கள். என் மன அமைதியை உத்தேசித்து இதை எழுதுகிறேன். —நீலாயதாட்சி.''

தஞ்சாவூரில் தனக்கென்று தரப்பட்டிருந்த அறையில் அமர்ந்தபடி சுதாகருக்கு எப்படி எழுத ஆரம்பிப்பது என்று குழம்பிக் கொண்டிருந்தாள் நீலா. அதே சமயம், அவசர வேலை நிமித்தம் பெங்களூர் வந்திருந்த சுதாகர், விபத்தொன்றில் கோர மரணமடைய, தகவலை யாருக்குத் தெரிவிப்பது என்று தவித்துக் கொண்டிருந்தனர் போலீஸார்!



வேறு வழியில்லாமல் கலர்ப் படக் கட்சிக்குத் தாவிவிட்ட கே.எஸ்.ஜி. படம். கதை வசனம் டைரக்ஷன் தயாரிப்பு எல்லாம் மேற்சொன்னவரே. துள்ளித் திரியும் கதாநாயகிக்கு (ராதிகா) கேன்ஸர் என்றும், இன்னும் மூன்று மாதத்தில் இறப்பாள் என்றும் சுறுசுறுப்பில்லா டாக்டர் உணர்ச்சியில்லாமல் பேசி நாள் குறிக்கிறார். பெண் சாவதற்குள் அவளை மணக் கோலத்தில் பார்க்க ஆசைப்படுகிறார் சினிமாத்தந்தை (மேஜர்).

ஊட்டியில் 'உனக்கு நானும் எனக்கு நீயும்' என்று போட்டி போட்டுக் காதலிக்கிறது ஒரு ஜோடி. கதாநாயகி ஓய்வுக்காக ஊட்டி வர — சந்தர்ப்பச் சூழ்நிலைகள் காதலனை ஒப்புக்கு கேன்ஸர் நாயகியை மணக்கச் செய்கின்றன. அப்பா உயிரை விட்டு ஆத்ம சாந்தி அடைகிறார். பிறகு நாயகன் நாயகியை விட்டு விட்டுக் காதலியை (அருணா) மணக்கிறான். அவளைக் கவனிக்காமல் இவளின் கேன்ஸரைக் குணப்படுத்த ஊண் உறக்கமின்றி பைக்கில் மேட்டுப்பாளையம் போய் வேப்பிலை கொணர்ந்து கஷாயம் காய்ச்சித் தருகிறான்...தருகிறான். இதற்குள் புரிந்துகொண்ட மேக்கப்மேன் தாடி செய்து ஒட்டிவிடுகிறார்.

காதல் மனைவிக்கு ஒரு குழந்தை பிறந்து, நாயகிக்கு கேன்ஸரே இல்லையென்று ஜப்பான் ரிட்டர்ன் டாக்டர் பூர்ணம் போட்டு உடைக்கிறார். எல்லாம் சுபமாய் முடிய இரண்டு மனைவிகளை எப்படிச் சமாளிப்பது என்று பார்த்த கதாசிரியர் அருணாவை பார்க்கில் பாடச் சொல்லி பூநாகம் கடித்து நீலம் பாரித்து இறக்கச் சொல்கிறார். நாயகி கையில் குழந்தை மட்டும் தரப்படுகிறது. நாம் இருக்கையை விட்டு எழுந்திருக்கிறோம்.

இடைவேளை வரை கண்மண் தெரியாமல் ஓடும் படம் பிறகு மூச்சுவாங்கி முடிவில் தடுமாறுகிறது. மகா சுறுசுறுப்பு அருணா. ஓட்டம் துள்ளல். கேமரா இவரைக் குளோசப்பில் பார்க்காமல் இருப்பது நலம். காதலனை விளையாட்டாகக்கூட பிற பெண்களுடன் பேசவிடாத கேரக்டர் இவருக்கு. நாயகன் (புதுமுகம்) ராதிகாவை மணக்கச் சம்மதித்து அம்மாவிடம் கண் சாடை காட்ட அவர் அருணாவைப் பார்க்க — அவள் கோபித்து வெளியேறி — எல்லாரும் திகைக்க — பிறகு "சம்மதிக்காத நீயும் ஒரு ஆணா" என்று எதிர்பாரா அதிர்ச்சி தருவது சத்தான இடம்.

எல்லோரும் ஸ்பீக்கர் வைத்துக் கொண்டு கத்துகிறார்கள். காதுக்குப் பஞ்சு வேண்டும். டைரக்டர் பல வித முடிச்சுக்களைக் கதையில் போட்டு, குறைகளைப் பற்றி யோசிக்க டைம் தராமல் சாமர்த்தியமாய்க் கொண்டு போகிறார். இருந்தாலும் பழைய சமாசாரம். இருந்தாலென்ன உணர்ச்சிக் காவியம். குடும்பச் சித்திரம்.

கதைக்கு	ரூ. 0—15
பூர்ணத்துக்கு	ரூ. 0—15
ராதிகாவுக்கு	ரூ. 0—10
டைரக்டருக்கு	ரூ. 0—15
ஆக மொத்தம்	ரூ. 0—55
கொடுப்பது (தரை டிக்கட்)	ரூ. 1—00
கிடைப்பது	ரூ. 0—55
தண்டம்	ரூ. 0—45

-நளினிசாஸ்திரி



சாமிபணம்

வி.பார்த்திபன்



'ஷேவ் லேஸை' முடிந்துவிட்டு நிமிர்ந்தான் சுந்தரம். அவன் முகத்தில் அவசரமும், படபடப்பும் கொடி பின்னிக் கிடந்தன. தாயாரைத் தேடி விழிகளைச் சுழற்றினன்.

பூஜை அறையிலிருந்து 'கணகண'வென்று எழுந்த மணிச் சத்தம் அவள் இருக்கும் இடத்தைச் சொன்னது.

உற்சாகத்துடன் பூஜை அறையை நோக்கி நடந்தான்.

அறைக் கதவு மூடியிருந்தது. இடது காலால் உதைத்துத் திறந்தான். கையில் பற்றியிருந்த கற்பூரத் தட்டைக் கீழே வைக்காமல் திடுக்கிட்டுத் திரும்பினாள் விஜயம்.

''இட் ஈஸ் கெட்டிங் லேட்... நான் கேட்டது எங்கே?''

மென்னகையுடன் கற்பூரத் தட்டைக் கீழே வைத்தாள். தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டாள். வணங்கினாள்.

''எதையடா கேட்கிறாய்?'' — அவன் பக்கம் திரும்பினாள்.

''என்னம்மா... இப்பத்தான் நிதானமா கேட்கிறே? இருநூறு ரூபாய் வேணும்னு சொன்னேனே?''

''இல்லேன்னு நீ கேட்டப்பவே நானும் சொல்லிட்டேனே?''

''எனக்கு நிச்சயமா வேணும். வேறே வழியே இல்லே!'' — உறுதியாகச் சொன்னான் அவன்.

''டேய், நீ கேட்டப்ப எல்லாம் கொடுத்துக்கிட்டுத்தானே இருந்தேன். திடீர்னு நேத்து நீ கேட்டே. என் கிட்டப் பணம் இல்லே. அப்பாவும் 'டூர்' போயிருக்காங்க. என்ன செய்யச் சொல்றே?'' — விஜயத்தின் குரல் பரிதாபமாக ஒலித்தது.

''உன் கிட்டப் பணமே இல்லே! அப்படித்தானே?''

''ஆமாம்!''

''அதோ, அதிலே இருக்கிறது பணமில்லையா?''

சுந்தரம் சுட்டிக் காட்டிய இடத்தைப் பார்த்ததும் அவளுக்குப் பகீரென்றது.

'ஏழுமலையான் உண்டியலில் பிரார்த்தனைக்குச் சேர்த்திருக்கும் பணம் என்னுடையதா?'—

''சுந்தரம்....! அது சாமி உண்டியல். திருப்பதியானுக்குச் சேர வேண்டிய பணம்!''

எகத்தாளமாகச் சிரித்தான் சுந்தரம்.

''பிரமாதம் அம்மா! வர வர நீ ரொம்ப மோசமாயிட்டே. சாமி கிட்ட இருக்கிற அளவு பாசமோ பந்தமோ பெத்த பிள்ளை கிட்டே உனக்கு இல்லே!'' என்று சொல்லிக் கொண்டே உள்ளே அடி எடுத்து வைத்தான் அவன்.

விஜயம் பதறினாள். ''டேய்...டேய்...! சாமி அறைக்குள்ளே செருப்புக் காலோட வரியேடா? இது அடுக்குமா? நீ படிச்ச படிப்பு இப்படியாடா சொல்லியிருக்கு?''

''நான் படிச்ச படிப்பும் அடைஞ்சிருக்கிற பகுத்தறிவும்தான் உன்னைப் பரிதாபப் பொருளாக எனக்குக் காட்டுது. நீ சொன்னபடியே பார்த்தாலும் அந்தச் சாமியே எனக்கு உதவி பண்ணத் தீர்மானிச்சிருக்கு. நான் நேத்தே உண்டியலைக் கணக்குப் பண்ணிட்டேன். கரெக்டா இருநூறு ரூபாயும் சில்லறையும்தான் அதிலே இருக்கு. உன் ஆண்டவனே எனக்காக 'சேவிங்ஸ் அக்கௌண்ட்' வச்சிருக்கான்.''

நிதானமாக உண்டியலை எடுத்துத் திறந்து அதிலிருந்த பணத்தை எடுத்துத் தாயின் முகத்துக்கு எதிரே ஆட்டிக் காட்டிவிட்டு நடந்தான் சுந்தரம்.

விக்கித்து அமர்ந்து விட்டாள் விஜயம்.

கையைக் கூப்பி கண் கலங்கினாள்.

'ஆண்டவா! நல்லவனையும் பொல்லாதவனையும் அணைத்துக் காப்பவன் நீ. இது உன் பணம். அவன் எடுத்துச் சென்று விட்டான். இது அடுக்காது. ஆனால் அவனை இந்தக் குற்றத்துக்காகத் தண்டித்துவிடாதே. வட்டியுடன் உன் காணிக்கையைச் சேர்த்து விடுகிறேன். உன்னுடைய பணத்தை அவன் திருடிக் கொண்டு — ஆமாம், திருடிக் கொண்டுதான் போய்விட்டான். ஏழுமலையானே அவன் நல்லவிதமாக வீடு திரும்ப வேண்டும். அதுவரையில் நான் தண்ணீர் கூடக் குடிக்க மாட்டேன்'—

நினைத்து நினைத்துப் புலம்பினாள் அவள்.

அவளைப் பார்த்துக் கொண்டே இருந்த ஏழுமலையான் — படத்தில் அசையாமல் இருந்தபடியே — வேறுவிதமாகக் கணக்குத் தீர்த்துக்கொள்ள முடிவெடுத்து விட்டது அவளுக்குத் தெரியாது.

'தண்டனை கொடுத்து விடாதே! ஏழுமலையானே, என் பிள்ளையை நல்லபடி திருப்பிக்கொண்டு வந்துவிடு!' உள்ளார்ந்த பிரார்த்தனையில் மூழ்கியவளாக, சோபாவில் கிடந்தாள் விஜயம்.

யாரோ உள்ளேவந்தது போல் ஓர் உணர்வு. வேலைக்காரி போன பின்னர் கதவைத் தாளிட மறந்துவிட்டது அப்போதுதான் அவளுக்கு நினைவுக்கு வந்தது.

மனைவி: 'நீ ரதியாட்டம் இருக்கே'ன்னு என்னைப் பார்த்துச் சொல்றப்பல்லாம் ஏன் கண்ணாடியைக் கழட்டிடறீங்க?

கணவன்: மனசாட்சி உறுத்துமேன்னுதான்!

— எஸ். பாலகிருஷ்ணன்



தனக்குத் தானே கண்டித்துக் கொண்டு அவசரத்துடன் எழுந்தாள்.

இடது கையில் சோப்புப் பெட்டியும், தோளில் துண்டுமாக சுந்தரம் குளியலறைக்குப் போய்க் கொண்டிருந்தான். அவன் முகத்தின் கடுகடுப்பையும், கருமையையும் பார்த்து விஜயம் திகைத்து விட்டாள்.

'கடவுளே... என்ன நடந்தது என்று தெரியவில்லை. இருந்தாலும் எனக்காக என் பிள்ளையை வீடு சேர்த்தாயே... நன்றியப்பா'—

இதயபூர்வமாகச் சொல்லிக் கொண்டு பிள்ளைக்குக் காப்பி கலந்து வருவதற்காக உள்ளே சென்றாள் அவள்.

அறைக் கதவில் சுந்தரத்தின் சட்டை கிடந்தது. அவனுடைய ஆத்திரமும், வெறுப்பும் அது வீசப்பட்டிருந்த அலங்கோலத்தில் தெரிந்தது.

'என்ன ஆயிற்று இவனுக்கு?' — சிந்தனையுடன் அதை எடுத்தாள். சட்டையை எடுக்கும்போது அதன் பையிலிருந்து ஒரு காகிதம் கீழே விழுந்தது. அதைக் குனிந்து எடுத்தாள். பிரித்துப் பார்த்தாள். திடுக்கிட்டுப் போனாள்.

கோர்ட்டில் அபராதம் கட்டியதற்கான ரசீது!

'என்னவோ செய்திருக்கிறான்' என்ற வேதனையோடு சேர்ந்தாற் போலவே ஒரு சமாதானம் எழுந்தது. 'அன்று உண்டியலை உடைத்ததை விடவும்பெரிதாக ஒரு தப்பு உண்டா?'

காகிதத்தை மீண்டும் சட்டைப் பையில் வைக்கப் போனவள் ஏதோ தோன்றவே பிரித்துப் பார்த்தாள்.

அபராதத் தொகை இருநூற்று இருபது.

அதிர்ச்சியும், அதிசயமும் ஊடுருவப் பார்த்தபடி நின்றவளின் உடலில் மின்சாரம் பாய்ந்தாற்போல் இருந்தது.

கண்ணீர் ஊற்றாகப் பெருக, கை கூப்பினாள்.

''உன் பணமப்பா... இது உன் பணம்!''

விஜயத்தின் கையிலிருந்த ரசீது நழுவியது.

பணம் பெற்றுக் கொண்ட கோர்ட் கிளார்க்கின் கையெழுத்து சத்ய தரிசனம் போல் பளிச்சென்று மின்னியது. 'வேங்கடேசன்!'


உங்கள் அழகுக்கு
அழகூட்டும் குங்குமம்
புதிய சுமங்கலி டீலக்ஸ் குங்குமம்
இன்று தன் இயற்கை எழிலை எந்த மங்கையும் மேலும் பொலிவுறச் செய்யலாம். உங்கள் ஒப்பனைக்கு மேலும் மெருகூட்டுவது சுமங்கலி குங்குமம்.
கொஞ்சம்கூட வெளியே சிந்தாத சிறந்த பாக்கிங்கில் வரும் குங்குமம் அது ஒன்றே. ஆகவே அது உங்கள் கைப்பையிலோ அல்லது டிரஸ்ஸிங் டேபிள் மேலோ வைத்துக்கொள்ள உகந்தது. சுமங்கலி உங்களுக்குப் பிடித்தமான பலவித வண்ணங்களில் கவர்ச்சியான ஜாடிகளிலும், பௌடர் உருவிலும் மற்றும் டீலக்ஸ் பர்ஸ் பாக்கிங்குகளிலும் கிடைக்கிறது.
SUMANGALI
சுமங்கலி
டீலக்ஸ் குங்குமம்
சுமங்கலி
ஒரு கேசவர்த்தினி தயாரிப்பு
OBM 4952/TM

அன்றென்னவோ ராஜம்மாளுக்குக்காலையில் படுக்கையை விட்டு எழவே மனம் வரவில்லை. உடலெல்லாம் மூட்டுக்கு மூட்டு ஆயிரமாயிரம் குண்டூசியைக் குத்துவது போல் வலியெடுத்தது. தொண்டைக்குள் யாரோ நெருஞ்சி முட்களைப் பரப்பியிருந்தார்கள். முதல் நாள் கோயிலுக்குப் போய் விட்டு வரும் வழியில் இலேசான மழைத் தூறலில் நனைந்ததால் ஜலதோஷம் பிடித்துக்கொண்டிருந்தது.

ஆனால் உடலை விட அவளுக்கு மனம்தான் மிகவும் சோர்ந்து போயிருந்தது. ஏற்கனவே அவளுக்குத் தன் பிள்ளைக்குப் பெண் எடுத்த இடத்தைப் பற்றி அவ்வளவாகத் திருப்தியிருக்கவில்லை. அவள் பிள்ளைக்கு என்ன குறை? ராஜாவாட்டம் மூக்கும் முழியுமாக இல்லையா? கைநிறையச் சம்பாதிப்பதில்தான் குறைச்சலா?

அவள் சம்பந்தி அதிர்ஷ்டக்காரர். இத்தனை சுளுவில் அவருக்கு ஓர் இன்ஜினியர் மாப்பிள்ளை எங்கே கிடைப்பான்? அவள் பிள்ளை விசு வரதட்சிணை வாங்க வேண்டாம் என்று பிடிவாதமாகக் கூறிவிட்டான் என்றாலும் அவர் அதற்கு மாற்றாகச் சீர் வகையறாக்களாகவாவது செய்து நிரப்பியிருக்கலாம் இல்லையா? அதுவுமில்லை. வெறும் பத்துப் பவுன் நகை. ஏதோ பெயரளவுக்கு எவர்சில்வர் பாத்திரங்கள். திருமணமும் அதிக ஆடம்பரமின்றித்தான் நடந்தது.



நாலுசுவர்களுக்குள் நம் சாம்ராஜ்யம்

அசுவதி

''இந்த விலைவாசியில் அவர்களும்தான் என்ன செய்வார்கள் அம்மா? இன்னும் அந்த மனிதர் மூன்று பெண்களைத் திரு மணம் செய்வித்தாகணுமோ இல்லையோ?'' என்று அவள்பிள்ளை விசு வேறு மாமனுருக்குப் பரிந்து பேசியது அவளுக்கு எரிச்சலைக் கொடுத்தது.

தலையணையில் ஒருக்களித்துப் புரண்டபடி காதைக் கூர்மையாக்கிக் கொண்டாள் ராஜம்மாள். மோகனு குளித்து முடித்து ஈரத் தலைமயிரை நுனி முடிச்சிட்டபடி சமையலறைக்குள் நுழைவது தெரிந்தது. நல்ல சுறுசுறுப்பான பெண்தான் என்று ராஜம்மாளின் உள் மனம் அவளையும் மீறி நினைத்தது.

''அம்மாவுக்கு உடம்பு சரியில்லை போலிருக்கிறது. ராத்திரி யெல்லாம் சன்னமாக இருமிக் கொண்டிருந்தார்கள்'' என்று மோகனு விசுவிடம் காப்பியைக் கொடுத்த படி கூறுவது கேட்டது.

''ஓ! அப்படியா? நான் அயர்ந்து தூங்கி விட்டதால் தெரியவில்லை... இப்பவே அம்மாவைப் போய் விசாரிக்கிறேன்.''

''ஷ்... எழுப்பிவிடாதீர்கள். இப்பொழுது தான் கண்ணயர்ந்திருக்கிறுர்கள். விழித்ததும் டாக்டரிடம் கூட்டிப் போகலாம்.''

மகனும் மருமகளும் தன்மீதுமாறி மாறிச் சொரியும் பாச மழையை நினைத்து ஒரு விஞடி ராஜம்மாளுக்குப் புல்லரித்தது. ஆனுல் மறு கணம் அவளுக்குள் ஒரு குரல் விழித்துக் கொண்டது. ''மகனுக்கு உன்மீது பாசம் இருப்பதென்னவோ நியாயம். சிறு வயதில் தந்தையை இழந்த அவனை வளர்த்து ஆளாக்க நீ பட்டிருக்கும் சிரமங்கள் அவனுக்குத் தெரியாததல்லவே! ஆனுல், மருமகள்? அவளுக்கு உன்னிடம் பாசம் தோன்ற என்ன நியாயம் இருக்கிறது? அவள் உன்னிடம் அக்கறை வழிவது போல் நடந்து கொண்டால் அது பசப்பு—வெறும் வேடம். அவனைக் கைக்குள் போட்டுக் கொள்ளப் பார்க்கிறுள். இவளை நம்பாதே!''

''என்னம்மா, உனக்கு உடம்பு சரியில்லையா? நான் இதோ போய் டாக்டரைக் கூட்டி வரேன்.''

''த்சு... எனக்கென்ன, வெறும் ஜல தோஷம்தான். சுக்குக் கஷாயம் இரண்டு வேளை குடித்தால் சரியாகிவிடும்.''

''அப்போ கஷாயம் போடட்டுமா அம்மா'' என்று குறுக்கிட்டாள் மோகனு.

''நீ ஒண்ணும் போட வேணும். எல்லாம் நானே போட்டுக்கிறேன்'' என்ற மாமியாரின் நிஷ்டூரமான பதிலைக் கேட்டு, முகம் வாடச் சமையலறையை நோக்கி மெல்லத் திரும்பினுள் மோகனு.

''ஆமா, இந்தக் கரிசனத்துக்கொண்ணும் குறைச்சல் இல்லே. பிறந்த வீட்டிலிருந்து ஒழுங்காகச் சீர் கொண்டு வரத் துப்பில்லே. கேக்கறவங்க முன்னுடி நானல்லவா நாக்கைப் பிடிங்கிக்க வேண்டியிருக்கு!'' மருமகள் காதில் விழ வேண்டும் என்றே சற்று உரக்க முணு முணுத்தாள். மோகனுவின் மோகன வதனம் வெயிலில் இட்ட அல்லிப் பூவாயிற்று. 'அம்மாவுக்கு 'மூட்'சரியில்லை' என்று ஒரு பெருமூச்சுடன் விசு வாசற்புறம் சென்றுன்.

ஆமாம் ராஜம்மாளுக்கு 'மூட்' சரியில்லை தான். அதற்குக் காரணம் இருந்தது. அவளது ஒன்றுவிட்ட அக்கா காமாட்சி சில நாட்கள் முன் வந்திருந்தாள்.

''உன் பிள்ளை கல்யாணத்துக்கு வர முடியலே ராஜம். கோவிச்சுக்காதே. எனக்கு ஃப்ளூவந்திட்டது.... ஆமா, விசு வரதட்சிணையே வேண்டாம்னுட்டானுமே! சீர் என்னென்ன செஞ்சிருக்கா, காட்டு பார்க்கலாம்.''

காமாட்சியின் ஒரே மகன் பாஸ்கரனுக்கு அதற்குச் சில மாதங்களுக்கு முன்னுல்தான் திருமணமாகியது.

''என்ன பாத்திரம் கொடுத்திருக்காங்க, உன் நாட்டுப் பெண்ணுக்கு! ஒண்ணும் உருப்படியாவே இல்லையே!...எங்க வனிதாவுக்குக் கொடுத்திருக்கிற எவர்சில்வர் பாத்திரங்களை நீ பார்க்கணும்! வீடு கொள்ளலே. நாற்பது பவுனுக்கு நகை போட்டிருக்காளாக்கும்...''

ராஜம்மா மனம் கூசிக் குன்ற, ஏதோ தப்புச் செய்தவள் போல் பேச நாவெழாது அமர்ந்திருந்தாள்.

''என்னவோடியம்மா, நான் சொல்றேனேன்னு கோவிச்சுக்காதே.. நீ கண்ணைத் திறந்திண்டே கிணற்றில் விழுந்துட்டே!''

வாஸ்தவம்தான். அவள் விசுவுக்கு என்ன குறை? காமாட்சியின் மகன் வெறும் டிப்ளொமாப் படித்து சூப்பர்வைசராக இருப்பவன். அவள் மகனே பொறியியல் டிகிரி வாங்கினவன். இந்தச் சின்ன வயதிலேயே, உதவி எஞ்சீனிராகப் பதவி வகிப்பவன். இன்னும் கூடக் காத்திருந்தால் அவனுக்குக் கண்டிப்பா பெரிய இடத்துப் பெண்ணுக வாய்த்திருக்கலாம்.

இந்தஎண்ணம் தோன்றியதிலிருந்து அவளுக்கு மோகனு மீது இனந்தெரியாத வெறுப்புத்தான் வந்தது. தன் பிள்ளையை மயக்க வந்த மோகினிப் பிசாசாகவே கருதினுள்.

''நான் என்ன செஞ்சாலும் உங்கம்மாவுக்குப் பிடிக்கல்லே. நானும் எவ்வளவோ முயற்சி பண்ணியாச்சு...எனக்குக் கொடுத்து வச்சது அவ்வளவுதான்.'' இரவில் படுக்கை அறையில் கணவனின் மார்பில் சாய்ந்தபடி மோகனு விம்மினுள்.

எச்சரிக்கை

கருத்தடை மாத்திரைகளைக் கருத்தின்றி விழுங்குவோருக்கு எச்சரிக்கை! ரத்தம், இருதயம், நரம்புகள் தொடர்பான நோய்களை இந்த மாத்திரைகள் உருவாக்கலாம்.

'சில காலம் சாப்பிட்ட பின் நிறுத்தி விடலாம்; வேறுவித கருத்தடை முறைகளைக் கையாளலாம்' என்று நினைத்தாலும் பிரயோஜனமில்லை. ஏற்கெனவே சாப்பிட்டதன் விளைவுகளைப் பிற்காலத்தில் அனுபவிக்க நேரலாம்!

அதிகமான ஆபத்து ஹார்ட் அட்டாக். அடுத்தாற்போல், ரத்தம் உறைதல்; பாரிசவாயு.

-நியூஸ்வீக்

''ஷ்... என்ன இது அசடாட்டம்!.... அம்மாவுக்கு ஒரே நாட்டுப் பெண். நிறைய சீர் செனத்தியோட வரலே என்கிற குறை இருக்கிறது. எனக்கும் தெரியாமல் இல்லே. ஆனால், அந்தக் குறை காலப் போக்கில் தேய்ஞ்சு மறைஞ்சிடும். அட்ஜெஸ்ட்பண்ணிக் கிட்டு இருக்கணும். என்னை வளர்த்து ஆளாக்கிய அவளை எதிர்த்துப் பேச முடியாது!''

''என்ன இது, நான் அப்படிச் சொன்னேனா? என்ன இருந்தாலும் உங்க கிட்ட அவங்களுக்குத்தானே முதல் உரிமை...''

''போகட்டும். இப்போ அதைப் பத்தி என்ன? இந்த நான்கு சுவர்களுக்குள் நம் சாம்ராஜ்யமே தனி. இங்கு நீதான் ராணி'' என்றபடி செல்லமாக அவள் கன்னத்தைக் கிள்ளினான். ''இன்னும் என்ன யோசனை என் ராணிக்கு?''

''அதுக்கில்லே... வந்து... நீங்க இனிமேல் அம்மா எதிரே என்னை எதற்கும் புகழாதீங்க, என்ன?''

''ஆகட்டும். அரசியின் உத்தரவு.''

''என்னிடம் ரொம்ப அக்கறை காட்டி நடந்துக்காதீங்க. வேண்டுமென்றே குற்றம் கண்டு பிடியுங்க!''

மறுநாள் வாசு அலுவலகத்துக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தான்.

''சே, என்ன இது, ஷர்ட்டில் பட்டன் கூட ஒழுங்கா இருக்கா இல்லையான்னு கவனிக்க முடியாம, அப்படி என்ன வேலை செஞ்சு கிழிக்கிறே? உத்தியோகத்துக்குப் போறது தட்டுக்கெட்டுப் போறதோ?'' விசு அங்கு வந்த மனைவி மீது சட்டையைக் கோபமாக வீசி எறிந்தான். மோகனா வந்த சிரிப்பை அடக்கிக்கொண்டு ரொம்பக் கலவரப்படுவதுபோல் முகத்தை வைத்துக் கொண்டு சட்டையை எடுத்துக் கொண்டு அகன்றாள்.

நாளொரு குறையும் பொழுதொரு குற்றமுமாக விசு மோகனாவிடம் கண்ட போது ராஜம்மாளுக்குச் சற்று மனத்தை என்னவோ செய்தது. திருமணமான சில மாதமாகத் தேனும் பாலுமாக இணைந்திருந்த அந்த இளம் சிட்டுக்களிடையே திடீரென்று ஏன் இப்படி யொரு மனத் தாங்கல்! கடவுளே, அந்தக் குழந்தைகள் வாழ்க்கை குதூகலமாக அமையட்டும் என்று தாயுள்ளம் பிள்ளையாரப்பனை வேண்டிக்கொண்டது.

அவளுக்கும் ஒரு மாறுதல் தேவையாக இருந்தது. அதனால், இந்த மனக் குழப்பத்துக்கு ஒரு வழியேனும் பிறக்கலாம்.

சொல்லி வைத்தாற்போல் காமாட்சியிடமிருந்து அவளுக்கு லட்ச தீபம் பார்க்க வரும்படி அழைப்பு வந்தது. ஒரு வாரம் அவளுடன் தங்கி வருவதாகக் கூறிவிட்டு, திருவனந்தபுரத்துக்குப் புறப்பட்டு விட்டாள். விசு அவளை வண்டி ஏற்றி விட்டான்.

இரவு எட்டுமணியாகிவிட்டது. காமாட்சியின் மருமகள் இன்னும் அலுவலகத்திலிருந்து வரவில்லை,



சிவராத்திரி!

என்னுடைய 25வது வயதில் ஒரு அழகிய பெண் குழந்தைக்குத் தாயானேன்.

ஆனால் பிரசவத்திற்குப் பிறகு அன்றிரவு அவள் என்னைப் படுத்தியபாடு! அப்பப்பா! விடாமல் கத்தித் தீர்த்து விட்டாள். குளுகோஸ் தண்ணீரை மட்டும் சிறிதுசிறிதாக வாயில் விட்டோம். அப்படியும் அழுகை நிற்கவில்லை, பாவம் எனது அம்மா! அன்று அவளுக்குச் சிவராத்திரி!

அதற்கு அடுத்த நாளும் அப்படியே. தூங்கும் நேரம் போக மிச்ச நேரமெல்லாம் ஒரே கத்தல் தான். பிறகு பசியினால் மிகவும் கதறுகிறதே என்று பாலைக் கலக்கிக்கொடுக்க, வந்தது வினை! பிறகு தாய்ப்பாலைக் குடிக்கவே மறுத்துவிட்டாள். அவ்வளவுதான் வீட்டில் ஒரே ஆர்ப்பாட்டம். ஆளுக்கு ஆள் எனக்கு அட்வைஸ் எப்படி குழந்தைக்குப் பால் கொடுப்பது என்று. நான் டாக்டர்தானா என்று எனக்கே சந்தேகம் வந்து விட்டது.

-ராதிகா பாலகிருஷ்ணன்

''இவ்வளவு நேரம் எந்த பாங்க் வேலை செய்கிறது?''

''அதில்லே. அவள் முக்கால்வாசி நாள் அவம்மா வீட்டுக்குப் போயிட்டுத்தான் வருவாள். சில நாளில் அங்கேயே தங்கிடுவா. ஊருக்குள் பிறந்தகமோன்னோ?... இன்னிக்கு வருவாளோ மாட்டாளோ.''

''அப்ப இரவு சமையல் பூரா நீதான் செய்யணும்னு சொல்லு... நீ ஒண்ணும் சொல்லவில்லையா?''

''அவ, அவா வீட்டிலே செல்லப் பெண். நான் ஏதாவதுசொன்னா மாமியார் படுத்தறா என்று கண்ணைக் கசக்குவா. நமக்கெதுக்குப் பொல்லாப்பு?... ஏற்கனவே அவள் அம்மாவுக்கு அவர்கள் அந்தஸ்துக்கு நாங்கள் போறாது என்ற குறை.''

''அப்ப அவுங்க அந்தஸ்துக்குத் தகுந்தபடி மாப்பிள்ளை பார்த்திருக்கலாமே?''

'''ஷ்! வனிதா வந்துட்டா... அவ காதிலே விழுந்து வைக்கப் போகிறது!''

ஆம். கேட்கீரீச்சிட, கணவன் பின்தொடர வனிதாதான் வந்து கொண்டிருந்தாள்.... ஊறுகாய் ஜாடிக்கு உயிர் கொடுத்தாற் போன்ற உடல் அமைப்பு. கழுத்து என்ற ஒரு உறுப்பை வைக்கக் கடவுள் மறந்திருக்க வேண்டும். மோட்டு நெற்றி. உருண்டை விழிகள். செல்வச் செழிப்பு தேவையற்ற இடங்களிலெல்லாம் சதையாகத் தொங்கியது. பாதி முதுகுகூட இறங்காத கோரத் தலைமயிர். நிறம் கூட மிக மிகச்சுமார்தான். ஒரு வினாடி ராஜம்மாளின் கண் முன் மோகனா வந்து போனாள்.

ராஜம்மாளைக் காமாட்சி அறிமுகம் செய்ததும், ஏதோ ஒரு பெயருக்கு இரண்டு வார்த்தை பேசிவிட்டு, கணவனுடன் மாடிக்குச் சென்று விட்டாள். அப்புறம் சாப்பாட்டு நேரத்தில்தான் இறங்கி வந்தாள்.

இதுவே மோகனுவாக இருந்தால், ''நமஸ்காரம் பண்ணுகிறேன் மாமி'' என்று எத்தனை பணிவாக வணங்குவான்!... ஆனால், வனிதா மாடர்ன் கேர்ல் ஆச்சே! அதையெல்லாம் எதிர்பார்க்கலாமா?

வனிதா எட்டு மணிக்கு மேல் எழுந்து வந்து பல் தேய்த்து முடித்ததும், மாமியார் தயாராகக் கொடுத்த காப்பியை அருந்தி, தம்ளரைமுற்றத்தில் போட்டுவிட்டு, குளிக்கச் சென்றாள். அப்புறம் அலுவலகம் செல்லும் வரை அவளது அலங்காரத்துக்குப் பொழுது சரியாக இருந்தது.

'ஹூம்! காமாட்சிக்கு நல்ல தலைவிதி' என்று பெருமூச்சு விட்டாள் ராஜம்.

''ஏன் காமாட்சி, சமையலுக்கு ஓர் ஆளைப் போட்டுக்கக் கூடாது? ரெண்டு பேரும்தான் சம்பாதிக்கிறாளே! நீ இப்படி மாடாக உழைச்சுத்தான் ஆகணுமா?''

''போட்டுக்கலாம்தான். ஆனா, நாம் செய்கிற மாதிரி ஆகுமா? பாஸ்கரனுக்கு யார் செய்தாலும் என் கைச் சமையல் மாதிரி ருசிக்காது... யாருக்காக உழைக்கிறேன்?... என் குழந்தைகளுக்காகத்தானே?''

'இதென்ன கண்மூடித்தனமான பாசம்!- அடி பைத்தியக்காரி! அவர்கள் பணத் திமிரில் உன்னை வேலைக்காரியா நடத்துவதை நீ தெரிந்து கொள்ளவில்லையேடீ!' என்று ராஜம்மாளின் மனம் அரற்றியது.

இரண்டு நாள் சென்றது. மூன்றாம் நாள் நடுப் பகல் வாசலில் ஒரு படகுக் கார் வந்து நின்றது. பாஸ்கரனின் மாமனார்தான் வந்திருந்தார். காமாட்சி அவசர அவசரமாக ஆப்பிள் நறுக்கி வைத்து ஓவல் கரைத்து வைத்து அவரை உபசரித்தாள்.

அவர் அமுத்தலாக அதை ஏற்றுக் கொண்டு சுற்றி வளைக்காமல் விஷயத்துக்கு வந்தார். ''சங்குமுகம் கடற்கரைப் பகுதியில் ஒரு வசதியான பங்களா மலிவான விலைக்கு வந்துள்ளது. வனிதாவுக்கு அவள் சேமிப்பு நிதியில் முப்பதாயிரம் கடன் வாங்கலாம். பாக்கிக்கு மாப்பிள்ளை அவர் ஆபீசில் கடன் வாங்கலாமென்றிருக்கிறார். போதும் போதாதற்கு நானும் உதவுவேன்... எதற்குச் சொல்கிறேனென்றால், அந்த வீடு வனிதாவுக்கு ஆபீசுக்குப் பக்கமாக இருக்கிறது. அதோடு அவர்கள் சிறிசுகள். தனிக்குடித்தன ஆசை இருக்கத்தானே செய்யும்... என்ன நான் சொல்வது?''

''பேஷாகத் தனிக் குடித்தனம் போகட்டும். நானா வேண்டாமென்கிறேன்? எனக்கு உடம்பில்தென்பிருக்கிறவரைஉழக்குஅரிசியை வடித்துக்கொள்ளமுடியாது என்பதில்லையே?''

''நீங்கள் தப்பாக நினைக்கக் கூடாது.''

''இதில் தப்பாக நினைக்க என்ன இருக்கிறது?''

அவர் போய்விட்டார்.

''காமு, அழறியா என்ன? உடம்பை என்ன செய்யறதும்மா?''

திடீரென்று காமாட்சி ராஜத்தைக் கட்டிக் கொண்டு கேவிக் கேவி அழுதாள்.

''என்னைப் பெற்ற தாயாக மதிச்சு என் மகன், தான் தனிக் குடித்தனம் போகப் போவதை என்னிடம் நேரில் சொல்லியிருந்தானானால், நான் எத்தனையோ பெருமைப்பட்டிருப்பேன். நானே ஆசீர்வாதம் பண்ணி அவர்களைக் குடித்தனம் வைத்திருப்பேனே... கோழை மாதிரி நான் பெற்ற மகன் மாமனார் முதுகுக்குப் பின்னால் மறைய, மூன்றாம் மனிதரான அவர்வந்து எனக்கு விஷயத்தைத் தெரிவிக்கும்படி ஆகிவிட்டதே!... அதுதான் எனக்கு ஆறவேயில்லை!''

ஆறுதுதான்! பாவம், காமாட்சி. அந்தத் தாயின் கண்ணீர் என்றுமே வற்றாது என்று நினைத்தபோது, ராஜம்மாளின் விழிகளும் சூல் கொண்ட மேகமாயின.

''நீ பாக்யசாலி ராஜம்! என்னைப் போல் புத்தி கெட்டதனமாக பணப் பகட்டில் மயங்கிப் பெற்ற மகனையே இழந்துவிட்டு நிற்கலை நீ!''

மறுநாள் ராஜம்மாள் ஊருக்குப்புறப்பட்டு விட்டாள்.

''அம்மா, நீ இல்லாமல் வீடு வீடாகவே இல்லையம்மா... நல்ல காலம், நீ வந்துட்டே. இல்லாவிட்டால் நானே அழைக்க வரணுமென்றிருந்தேன்... இவளைப் பார். நேற்றெல்லாம் தலை சுற்றலும் வாந்தியுமாக ஒரேயடியாகக் கலவரப்படுத்தி விட்டாள். எனக்கு என்ன செய்யணுமென்றே தெரியவில்லை.''


''அடி, என் ராசாத்தி எனக்குப் பேரனைத் தரப்போறியாடீ?'' என்று மோகனுவைப் பாசம் பொங்க அணைத்துக்கொண்டு உச்சி முகர்ந்தாள்.

பேரன் பிறக்கப் போகும் மகிழ்ச்சிதான், அம்மாவுக்கு மருமகளிடமுள்ள மனத்தாங்கலை விரட்டி விட்டது என்றே மோகனுவும் விசுவும் நம்பினார்கள். காமாட்சி வீட்டுப் பயணம் அந்தத் திருப்பத்தைத் தந்தது என்பது அவர்களுக்குத் தெரிந்திருக்க வழியில்லையே!

குழந்தை கொடுத்த அதிர்ஷ்டம்!

அன்று! பம்பாய் ஜிம்கானாவில் திரு கிருபானந்த வாரியார் அவர்களுடைய கதையின் கடைசி நாள்! கதை முடிந்த உடன்'எல்லோரும் ஒரு ரூபாய் நோட்டில் தங்கள் பெயர் விலாசம் எழுதித் தட்டில் போடுங்கள்! சீட்டுக் குலுக்கப் போகிறோம்' என்றதும் குழந்தை தினேஷ் பெயரை எழுதி ஒரு ரூபாயைத் தட்டில் போட்டான் அவனுடைய தந்தை! சீட்டுக் குலுக்கலில் அவனுக்கு முதல் பரிசு விழுந்தது என்று தெரிந்தபோது எங்களுக்கு ஏற்பட்ட ஆனந்தம், பேரானந்தம். திரு கிருபானந்த வாரியார் கையால் எனக்கு ஒரு புடவையும், எங்கள் இருவருக்கு நாசிக், பஞ்சவடி, சீரடிக்கு இலவசமாக ஒரு பயணமும் கிடைத்தன!

- லஷ்மி சங்கரன்



வருவான் ராஜகுமாரன்!

கல்கி

ராண்டார் கை

எழுதும் மர்மத் தொடர்

அக்டோபர் 4ல் ஆரம்பம்





போட்டிக் கதை-3

அவர் அமைதியாகப் படுத்திருக்கிறார்.

கண்ணிமைகள் விரிந்து, பார்வை மட்டும் புறச் சூழல்களை வலம் வந்து கொண்டிருக்கிறது.

எல்லாமே பார்த்த முகங்கள், பழகிய முகங்கள். பழக்கத்தில் முதிர்ந்தவை. உறவில் கனிந்தவை. முளைவிட்டுக் கிளைவிட்டுப் படர்ந்திருந்தவை.

இவ்வளவு பேர்களா வந்திருக்கிறார்கள்!

தம் முடிவு அவருக்குத் தெரிந்திருக்கிறது. அறுபது வயதில் தாம் பெற்ற ஞானம் நினைவுக்கு வருகிறது.

உலகத்தின் எரிமலைக் குழம்பும், காட்டாற்றுப் பகுதியும், உப்புக் கடலும், பாறைப் படிவங்களும் நிரம்பிய பகுதியைப் பற்றியே படித்துத் தன் உணர்வுகளில் அவற்றின் சாயல்களைப் படியவைத்து அதன் விளைவாக ஓர் ஒதுக்கத்தைத் தமக்குத் தாமே ஏற்படுத்திக் கொண்டவர். தாம் வாழ்ந்து வந்த வாழ்க்கையில் இதுவரை பார்க்காததை, அதன் மறைபொருளை, தத்துவத்தைப் படிக்கஆரம்பித்ததே அறுபது வயதில்தான்.

அப்படிப் படிக்க ஆரம்பித்துத் துளிர்விட்ட ஞானம் துரித கதியில் முற்றி அதன் சூடு தாங்காமல் துவண்டு இரண்டே ஆண்டுகளில் கொஞ்சம் கொஞ்சமாகச் சரிந்து இப்போது நாட்களை எண்ணிக் கொண்டிருக்கிறார்.

''அப்பா! வாயைத் திறங்க....'' — அவருடைய இரண்டாவது பெண் காயத்ரி. கணவனோடு வடக்கே வெகு தொலைவில் இருந்தாள்.

'உங்க எல்லோருடைய அன்பும் பாசமும் சாதிக்க முடியாததையா இந்த மருந்து சாதிக்கப் போகிறது? இது என்னோட கடைசி அத்தியாயம்மா....'

என்னென்னவோ சொல்லத் தோன்றுகிறது. முடியவில்லையே!

சேலைத் தலைப்பால் ஒற்றி யெடுத்த காயத்ரி பொங்கி வரும் துயரத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள வழி தெரியாமல் தடுமாறியபடி எழுந்திருக்கிறாள். அந்தத் துயரத்தை வெளிப்படுத்த ஒரு தனி இடத்தைத் தேடிப் போகிறாள்.

அப்போது அவருக்கு வயது இருபத்தைந்து. ஆண்மையும், கம்பீரமும், அறிவாற்றலும் மிக்க ஓர் இளைஞனாக அவர் திகழ்ந்த நேரம். எல்லைக்கு அப்பால் மனத்தை நீள விட்டு எந்தத் தளையிலும் சிக்காமல் அவர் அவராகவே இருந்த நேரம்.

ஒரு நிறுவனத்தில் பொறுப்பான வேலையில் சேர்ந்திருந்தார். மணமங்கலம் சிறக்க அவருக்கு ஒரு பொறுப்பான மனைவியும் வந்து சேர்ந்திருந்தாள்.

இரவு மணி இரண்டு.

கட்டில் விளிம்பில் தலையைச் சாய்த்தபடி தரையில் அமர்ந்திருந்த காயத்ரி எழுந்தாள். அவருக்கு மருந்து கொடுக்க வேண்டும்.

அவளுக்கும்தான் தூக்கம் ஏது?

பெற்ற ஐந்து செல்வங்களில் இந்த இரண்டாவது பெண் காயத்ரிமீதுதானே தாம் அதிகப்படி அன்பைப் பொழிந்தோம்? அன்று தாம் அதிகப்படியாகக் காட்டிய அன்பும், பாசமும்தான் இன்று தனக்கே திரும்புகிறது போலும்!

முதல் பெண்ணுக்கு மணம் முடித்து அந்தக் கல்யாணத் திருக்காட்சி கண்களை விட்டு அகலுமுன், 'எனக்கு எப்போப்பா கல்யாணம்?...' என்று கேட்கிற மாதிரி வளர்ந்து நின்றாள் காயத்ரி.

அது வளர்ந்தவள் தவறா? பெற்றவர்கள் தவறா?

எல்லாரும் அயர்ந்து உறங்கிக் கொண்டிருக்கிறார்கள். காயத்ரியும்கூடத்தான். அவளுக்கு மட்டும் களைப்பில்லையா? இல்லையில்லை. அது ஆழ்ந்த உறக்கமாக இருக்காது. தன் உடல் உழைப்புக்கு, கண் விழிப்புக்கு மாற்றாகச் சிறிது சிரம பரிகாரம். அவ்வளவுதான்.

திடுமென்று உடலில் ஏதோ ஒரு நரம்பைச் சுண்டி இழுக்கிறது. நெஞ்சில் கலியுகத்தின் அந்திம காலப் பாதிப்பாய் வலி. 'அம்மா...!' என்று வாய் விட்டுப் புலம்பவும் இயலாமல் ஒரு ஜீவமரணப் போராட்டம்.

காயத்ரி விழித்துக் கொள்கிறாள்.

''என்னப்பா செய்யறது?....''

'என்னோட வலி உனக்கு எப்படியம்மா தெரிஞ்சது?....'

''அப்பா! கண் கலங்காதீங்க. இன்னும் ஒரு வாரத்திலே எல்லாம் சரியாப் போயிடும்னு டாக்டர் சொல்லியிருக்கார்...''

அவருக்காகப் பொய் சொல்கிறாள்.

'காயத்ரி! ஒரு தரம் இப்படித்தான் காய்ச்சல்லே படுத்திண்டிருந்தேன். அந்த ஒரு வாரமும் உன் அம்மா தூங்கவேயில்லே.' இப்படிக் கண் விழிச்சா உன் உடம்புக்கு ஆகுமா?'ன்னு கேட்டேன். 'நீங்க எழுந்து உட்கார்ந்தாத்தான் இந்தச் சரீரம் தலையைச் சாய்க்கும். உடம்புல பலம் இருக்கோ இல்லையோ, மாங்கல்ய பலம் எனக்கு நிறைய இருக்கு. அது போதும்னு சொன்னா. உன்

னைப் பார்க்கறப்போ உன் அம்மாவோட ஞாபகம்தான் வரது. பெத்த தகப்பன் பிள்ளைகளுக்குத் தன் சொத்தை உயில் எழுதி வச்சிட்டுப் போவான். உன் அம்மா போகும் போது தன்னுடை பொறுப்புக்களை யெல்லாம் உனக்கு எழுதி வச்சிட்டுப் போயிட்டாப் போலிருக்கு.....!'

இவ்வளவையும் பார்வையாலேயே அவர் சொல்லச் சொல்லக் காயத்ரிக்குத் துக்கம் குமுறிக்கொண்டு வருகிறது.

காயத்ரிக்குத் திருமணம்.

நல்ல இடத்துச் சம்பந்தம். பணத்தைக் கொட்டிக் கொட்டிச் செய்தார். இஷ்ட மித்ர பந்துக்கள் கல்யாண மண்டபம் பூராவும் நிறைந்திருந்தார்கள். நாதஸ்வரம், கச்சேரி, நாவிற்கும், மனத்துக்கும் நிறைவான விருந்து. காயத்ரியின் மீது பன்னீர்த் துளிகளாகப் பட்டுத் தெறித்த இதயபூர்வமான நல் வாழ்த்துக்கள்.

''பிறந்த பிறப்பிலேயிருந்து உங்ககூட இருந்துட்டு இப்போ ரொம்ப ரொம்பத் தொலைவுக்குப் போகப்போறதை நினைச்சா.''

அம்மாவின் தோளில் தொற்றிக்கொண்டு அப்பாவின் கைகளைப் பற்றிக் கொண்டு, அந்தச் செல்லக் குழந்தை சின்னக் குழந்தையாய்க் குமுறி குமுறி அழுதது.

நாற்பது வயதில் நாய்க் குணம் என்பார்கள். அது அவருக்கு ஐம்பதாவது வயதில் வந்தது!

காயத்ரியின் திருமணத்தையொட்டி அவர் வெளியில் கொஞ்சம் தொகை கடனாகப் பெற்றிருந்தார். திருமணத்துக்குப் பின் பல்வேறு குடும்பச் சூழ்நிலைகளின் பலமுனைத் தாக்குதல்கள். வாக்களித்தபடி கொடுக்க இயலாமல் நெருக்கடி.

அப்படிப் பணம் கடனாகக் கொடுத்தவர்களில் ஒருவர் தாமோதரன்.

வாசலில் ஆட்டோ வந்து நிற்கிறது.

கணேசனும், அவர் மனைவி சரளாவும் இறங்குகிறார்கள்.

''அப்பாவுக்கு எப்படி இருக்கு?'' என்று பதற்றத்துடன் கேட்டுக் கொண்டே உள்ளே நுழைகிறான்.

''அண்ணா... அப்பாவோட மனசுலதான் ஏதோ உளைச்சல், டாக்டர் கூடச் சொல்றார். எதுவோ அவரைப் பாதிச்சிருக்காம்...''

''அது என்னன்னு எப்படியம்மா தெரிஞ்சுக்கறது?''

''அதுதான் எனக்கும் புரியலே, அண்ணா''

ஒருமுறை பணத்துக்காகத் தாமோதரன் சற்று வலியுறுத்திப் பேசியபோது, இயலாமையின் தீர்க்கமான முத்திரையாய் வார்த்தைகள் கொழுத்துப்போய் வெளிவந்தன.

''ஆமாம், பணம் கொடுக்க முடியாது தான். கோர்ட்ல போய்ப் பார்த்துக்க...''

''சுந்தரம்! நான் கோர்ட்ல போய்ப் பார்க்க வேண்டாம். மனச் சாட்சின்னு ஒண்ணு இருக்கு. அது உரிய நேரத்தில் உனக்கு உன்னைப் புரிய வைக்கும்...''

இவ்வளவுதான் சொன்னார் தாமோதரன்.

தான் இரண்டாவது முறை மரணத்துக்குள்ளாகப் போவதாக நினைக்கிறார் அவர்.

தாமோதரனை வஞ்சித்தபோதே அந்தப் பழைய சுந்தரம், மனசு சுத்தமாக இருந்த சுந்தரம் இறந்து போயாயிற்று. இது போலி தான்.

இந்தப் போலியும் முடிவு கண்டு வெந்து சாம்பராவதற்குள் ஒரு முறை, ஒரே ஒரு முறை அந்தத் தாமோதரனைப் பார்த்துவிட வேண்டும். 'என்னை மன்னித்துவிடு' என்று கேட்க வேண்டும்.

''அம்மா!.....'' என்று முனகுகிறார்.

வியப்பின் நிழலில் சற்று நேரம் நின்றவள், அவரது முகத்தருகே குனிகிறாள். ''என்னப்பா?....''



நெஞ்சிலே துணிவிருந்தால்


காதலர் இருவர் தொடும்போதோ, பார்வை படும்போதோ பின்னணியில் 'தனன தனன' என்று கோரஸ் ஒலிக்கும் '324வது' தமிழ்ப் படமான இதில்:

அற்புதமான தெங்குமரஹாட்டா வெளிப் புறப் படப் பிடிப்பும், அழகான சேலைகளில் அதைவிட அழகான ஸ்வப்னவும், இனி வரப் போகும் பதினைந்து படங்களிலாவது கோபக் கார இளைஞனைக் கண்ணை உருட்டப்போகும் விஜய்காந்தும், பாக்யராஜின் உருப்படியான ஒரே கண்டுபிடிப்பான சங்கிலி முருகனும், ''வாங்கடா, வாங்கடா'' என்ற கருத்து மிக்க பாட்டும் மோனோ கலரில் சின்னப் பெண் காட்டுக்குள் கூவியபடியே ஓடுவதை ''பூமிகா''விலிருந்து சாமர்த்தியமாய்த் தழு விய டைரக்டர் எஸ். ஏ. சந்திரசேகரனும் ஒருபுறமிருக்க

சடுகுடு, குளியல் என்ற போர்வைகளில் நடக்கும் விரசக் காட்சிகளும், ரொம்ப வீக்கான பழிவாங்கும் கதையும், தொடர் பற்ற காட்சியமைப்புகளும், அலுப்பூட்டும் இசை அமைப்பும் (வேறு யார், நம்ம சங்கர் கணேஷ்தான்) சலிப்பூட்டும் ஸ்லோமோஷன் காட்சிகளும், ஜிகினா உடை கனவு சீனும், காமெடி என்ற பெயரில் நடக்கும் கூத்து களும், சண்டைக் காட்சிகளில் விழுவதற் காகவே அடுக்கி வைக்கப்பட்ட டின்களும், ஆ...ஊ... என்றால் அரிவாளைத் தூக்கிக் கொண்டு அலையும் கதாபாத்திரங்களும், புரி யாத முடிவுக்குக் கட்டியம் கூறும் வளவளா டைட்டில் கார்டும் மறுபுறமிருக்க,

நெஞ்சிலே துணிவிருந்தால்
மட்டும் போதாது.
பொறுமையும்
சகிப்புணர்ச்சியும் அவசியம் தேவை
படம் பார்க்கும் நமக்கு.

—சிந்து – ஜீவா



''தாமோதரனை....''

அவ்வளவுதான்.

உதடுகள் மட்டும் துடித்துக் கொண் டிருக்கின்றன. வார்த்தைகள் வெளிவரவில்லை.

போன மாதம்.

கணேசன் அந்தத் தாமோதரனை பெங்க ளூரில் பார்த்தான்.

''அப்பா சௌக்கியமா இருக்காரா? தம்பி தங்கைகளெல்லாம் நல்லா இருக்காங்களா?'' என்று மனப்பூர்வமாக விசாரித்தார். தாம் வடக்கே யாத்திரைக்குக் கிளம்பிக் கொண் டிருப்பதாகச் சொன்னார். 'திரும்பி வரு கையில் கட்டாயம் அப்பாவைப் பார்க்க வருகிறேன்' என்றார்.

விரோதம் பாராட்டாத மனம் பாலாய்ச் சொற்களைக் கறந்தது.

''**ஏ**துக்கும் நீ பெங்களூருக்கு டிரங்கால் போட்டுப் பாரேன். அப்பாவுக்கு ஏனோ அவரைப் பார்க்கணும் போலிருக்கு...''

''கட்டாயம் முயற்சி செஞ்சு பார்க்கிறேன் காயத்ரி. போன்ல கிடைச்சார்னா உடனே புறப்பட்டு வரச் சொல்றேன்...''

அரை மணிக்கெல்லாம் திரும்பி வருகிறான் கணேசன்.

''உடனே புறப்படறேன்னு சொன்னார். நேற்றுத்தான் திரும்பி வந்தாராம்...''

காயத்ரியின் மனசு நிறைகிறது.

இப்போது எல்லாரும் வந்திருக்கிறார்கள். அவரது முக முழிக்காக வந்திருக்கிறார்கள். பழையதை மறந்து அவர் மேல் அனுதாபம் கொண்டு வந்திருக்கிறார்கள்.

சிந்தனை அவரை ஒரு பழவங்காட்டு நீலியாய்ப் பற்றிக் கொண்டு அவரை ஆட்டு வித்துக் கொண்டிருக்கிறது.

இடைப்பட்ட பத்து வருட காலத்தில் தான் வெகுவாக மாறிப் போய்விட்டதை நினைத்து வெட்கமும், வேதனையும் சிற்றாறு களாக இறங்கிக் கலந்து மீண்டும் கிளை பிரிந்து அவரைச் சித்திரவதை செய்துகொண் டிருக்கின்றன.

தான் சாகப் போகிறோம் என்ற வருத்தம் துளிக்கூட இல்லை. பயம் துளிக்கூட இல்லை.

''**அ**ப்பா! உங்கசிநேகிதர் வந்திருக்கார்!''

காயத்ரி காதருகே கிசுகிசுக்கிறாள்.

மலர்ந்த கண்களில் நியான் விளக்கின் நீலம் பளிச்சிடுகிறது.

தாமோதரன் உள்ளே வருகிறார்.

''சுந்தரம்!....''

கட்டிலில் அவர் பக்கத்தில் உட்கார்ந் தவர் கையிலிருந்த பையைக் கீழே வைத்து விட்டு அவருடைய கைகளைப் பற்றிக்கொள் கிறார். பத்து வருட வருத்தமாய்ச் சொற்கள் பாகாய்த் தளர்ந்து வருகின்றன.

அவருக்குப் பேச முடியவில்லை.

'உன்னைப் பார்க்கணும்னு நினைச்சேன். வந்திட்டே...'

திருப்தியின் நிழல் மட்டும் நீண்டுவிரிகிறது.

தாமோதரன் பையிலிருந்து ஒரு சிறு செம்பை எடுக்கிறார். ''இந்தாம்மா, கங்கை ஜலம். இவருக்குக் கொடு...''

காயத்ரி அதைப் பெற்றுக் கொண்டு சிறிதளவு சுந்தரத்தின்வாயில் ஊற்றுகிறாள்.

''சுந்தரம்!... ஒண்ணும் கவலைப் படாதே. இன்னும் ரெண்டு மூணு நாளைலே எழுந்து உட்கார்ந்திடுவே பாரு....''

அது வேடிக்கை இல்லை.

இதோ!

கட்டிலில்உட்கார்ந்தபடி காயத்ரி கரைத்து எடுத்து வந்த ஆகாரத்தை விழுங்கிக்கொண்டிருக்கிறார் சுந்தரம்.

அவரை எழுந்திருக்க வைத்தது எது?யார்?

தாமோதரனா? அவர் கொண்டு தந்த கங்கை ஜலமா? பின் வேறு எது?

பதினைந்து நாட்களுக்குப் பிறகு—

கணேசன் ஊருக்குப் புறப்படுகிறான்.

''அப்பா! உடம்பை ஜாக்கிரதையாப் பார்த்துக்குங்க...''

''வேளா வேளைக்கு அவருக்கு வேண்டியதைக் கொடுங்க. அப்பாவே கேட்கட்டும்னு இருக்காதீங்க....''

வேண்டுகோளும், உத்தரவுமாக மாறிமாறி வருகின்றன.

''தாமோதரனைப் பார்த்தியானா சொல்லுடா. அவகாசம் கிடைச்சா இந்தப் பக்கம் வந்துட்டுப் போகச் சொல்லு...''

''சரிப்பா....''

டாக்டர் கைவிட்ட பின், சுற்றம், நட்பு எல்லாம் உதட்டைப் பிதுக்கிய பின், எல்லாருமே அவருக்குக் கெடு எத்தனை நாட்கள் தள்ளிப் போகிறது என்று பார்த்துக்கொண்டிருக்கையில் குஷியாக எழுந்து உட்கார்ந்திருந்த சுந்தரம், தாமோதரனுடன் தாம் பழகிய நாட்களைப் பற்றிய இனிய கனவுகளில் மூழ்கிப் போகிறார்.

மூன்றாம் நாள் கணேசனிடமிருந்து கடிதம் வருகிறது.

சுந்தரத்தைப் பார்த்துவிட்டு ஊருக்குத் திரும்பிய தாமோதரன் மறுநாளே மாரடைப்பால் காலமாகி விட்டாராம்!

'தாமோதரன்! நீ என்னைப் பார்க்க மட்டும் வரலை. வெறும் கங்கை ஜலத்தைக் கொடுத்திட்டுப் போகமட்டும் வரலே.அந்தக் கங்கை ஜலத்திலே உன் உயிரையே கலந்து கொடுத்திருக்கே, இப்போ என் உடம்புல தங்கியிருக்கிறது உன் உயிர்....'

மலர்ச்சியும், உற்சாகமும் மண்டிக்கிடந்த அவரது மனத்தை வெறுமையின் இருள் கொஞ்சம் கொஞ்சமாகத் தன் விஷ நாக்கால் தீண்டத் தொடங்குகிறது....

வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு...

ஒவ்வொரு வாரமும் உங்களில் ஒருவருக்கு உதவக் காத்திருக்கிறோம்.

மூன்று விதங்களில்—

(1) உங்கள் தகுதிகள், திறமைகள், வயது, ஆரோக்கியம், விலாசம், எதிர்பார்ப்பு, லட்சியம் முதலிய விவரங்களை மிகச் சுருக்கமாக எழுதிப் புகைப்படத்துடன் அனுப்பினால் பிரசுரிக்கிறோம்.

(2) இத்துடன் தாங்கள் தேர்ச்சி பெற்றுள்ள துறை பற்றி ஒரு சிறு கட்டுரை எல்லோருக்கும் படிக்க சுவாரஸ்யமாக அமையும்படி எழுதி அனுப்பினால் பிரசுரிக்கிறோம்.

இந்த இரண்டையும் படித்துப் பார்க்கும் கல்கி வாசகர்களில் யாரேனும் உங்களைப் பயன்படுத்திக் கொள்ளவோ கூட்டுச் சேர்ந்து தொழில் — வியாபாரம் தொடங்கவோ விரும்பினால் உங்களுடன் தொடர்பு கொள்ள முன் வரலாம் அல்லவா?

(3) பிரசுரமாகும் மேற்படி கட்டுரைக்கு ரூ. 100 சன்மானம் வழங்குகிறோம். ஏதோ சில நாட்களை ஓட்டவாவது இத்தொகை உங்களுக்கு உதவுமல்லவா?

பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கட்டுரைகள், புகைப் படங்கள் முதலானவற்றைத் திருப்பி அனுப்ப இயலாது. கடிதப் போக்குவரத்து கிடையாது. ஆறு மாதங்களுக்கே இத்திட்டம் அமலாகும். பயன் அறிந்து பின்னர் நீடிக்கப்படலாம். உறையின்மேல் ''நான் பயின்ற துறை'' என்று குறிப்பிடவும்.



திட்டமிட்டபடியே

அன்னம்

அந்தப் பெரியவரும் அவர் மனைவியும் பஸ்ஸை எதிர்பார்த்தபடி உள்ளூர் முனிசிபல் சேர்மன் மறைந்துபோன தன் தாயாரின் ஞாபகார்த்தமாகக் கட்டியிருந்த அந்தப் 'பஸ்-ஷெல்டரில்' அமர்ந்திருந்த சமயம்— ஜக்கு அவர்களிடம் பேச்சுக் கொடுத்தான்.

ஜக்கு பார்ப்பதற்குக் கல்லூரி மாணவன் போல் தெரிந்தாலும் வயது முப்பதுக்கு மேல் ஆகிறது. எவரையும் சுலபத்தில் வசியம் செய்யும் புன்சிரிப்பு அவன் முகத்தில் தவழும்.

''ஐயா எங்கே போறீங்க?'' என்று கேட்டான் உரிமையுடன்.

''கும்பகோணம்தான் தம்பி... இப்போ பஸ் வரும்.''

''வரும் வரும்... சோழன் வருவான்... அதிலேயே போங்க... நிக்காமப் போகும்.''

''தம்பி... ரொம்பக் கூட்டமா யிருக்கு. கொஞ்சம் டிக்கட் எடுத்துத் தந்தீங்கன்னு உபயோகமா யிருக்கும்... மாப்பிள்ளை 'காம்ப்' போயிருக்காரு. இல்லாட்டி அவரே வந்திருப்பாரு...''

''உங்க மாப்பிள்ளையா?... இந்த ஊரா? யாரு?... போஸ்டல் இன்ஸ்பெக்டரா?''

''இல்லே தம்பி... இன்கம்டாக்ஸ் இன்ஸ்பெக்டர் வீடு. மகாலிங்கம்னு பேரு... சன்னிதித் தெருவிலே...''

''ஆமாம், ஆமாம்... இரண்டாவது வீடு.. பச்சைக் கிராதி கூடப் போட்டிருக்கும்'' என்று கூடப் பாடினான் ஜக்கு.

''இல்லீங்க தம்பி... நீங்கள் சொல்வது கமர்ஷியல் டாக்ஸ் ஆபீஸர் வீடு. இது முப்பத்தேழாவது நம்பர். கீழ் போர்ஷனில் ஒரு டாக்டரம்மா கூடக் குடியிருக்காங்க... இவுங்க மேலே குடித்தனம்.''

''இப்போ புரியுது... நம்ம மகாலிங்கம்... நாங்ககூட மாலின்னுதான் கூப்பிடுவோம். தங்கச்சி கூட இப்போ...''

''ஆமாம். தர்முவுக்கு இது நாலாவது மாதம்... உங்க சிநேகிதர் சொல்லலியா?... வெட்கமா யிருந்திருக்கும்.''

''ஊரிலிருந்து வரட்டும் நான் பார்த்துக் கொள்கிறேன். இப்படி ஒரு நல்ல சமாச்சாரத்தைக்கூட என்னிடம் சொல்லாமல்... ராஸ்கல்...'' எனச் செல்லமாகத் திட்டினான் ஜக்கு.

சோழன் வந்தான். ''நீங்கள் போய் பஸ்ஸில் உட்காருங்கள்... நான் டிக்கெட் எடுத்து வருகிறேன்'' என்று போனான் ஜக்கு. கா... டணத்தைக் கூடப் பிறகுதான் — பெரியவ... வற்புறுத்தியதின் பேரில் — அரை மனத்துட... பெற்றுக் கொண்டான்.

பிரயாணத்தின்போது அவன் சேகரித்... விஷயங்கள் பல. பெரியவர் பெயர் நீலமேக... அவர் மிஸஸ் காமாட்சி. அவருக்குக் கும்... கோணத்தில் நெல் வியாபாரம். ரெட்டிராய... குளக்கரையில் சொந்த வீடு.

இவை போதும் ஜக்குவுக்கு.

அடுத்த வாரம் மகாலிங்கத்தின் வீட்டை... கண்காணித்தான் ஜக்கு.

மகாலிங்கமும் தர்முவும்தான் வீட்டில்... தர்முவின் உடலில் இருந்த நகைகள் இருப... பவுனுக்கு மேல் தேறும். வீட்டில் இருக்கு... போதுதான் நகைகளை அணிந்து கொ... கிறாள். வெளியில் ஓர் ஒற்றைச் சங்கி... மட்டுமே!

பத்து நாட்களுக்குப் பிறகு — ஓர் இரவு.

மகாலிங்கம் இரவு எட்டு மணிக்கு வீ... திரும்பி விட்டார். ஒன்பது மணிக்கு... காக்கி உடை அணிந்திருந்த ஜக்கு ''ஸா... டெலிகிராம்'' என்க் கதவைத் தட்டினான்.

மகாலிங்கம் தந்தியை வாங்கினார். ஜக்... நீட்டிய பேப்பரில் கையெழுத்திட்டுத் திரு... பிக் கொடுத்தார். ஜக்கு தெருமுனையில் கா... திருந்தான்.

அவன் எதிர்பார்த்தபடியே மகாலிங்கமு... தர்முவும் கதவைப் பூட்டிவிட்டு அவசர... அவசரமாய் பஸ் நிலையத்தை நோக்கி... போனார்கள். கும்பகோணத்துக்குக் கடை... பஸ் ஒன்பது மணிக்கு. தந்தியில் அடிக்... பட்டிருந்த தபாலாபீஸ் முத்திரை போ... என்று மகாலிங்கம் நிச்சயம் சந்தேகித்திரு... முடியாது. அத்தனை சுத்தம்.

அவன் கொடுத்திருந்த தந்தியின் வாசக... ''அம்மா ஸீரியஸ்... உடன் புறப்பட்... வருக... நீலமேகம்.''

ஊரடங்கியது. ஜக்கு தன்னுடைய கறுப்... கண்ணாடியை அணிந்து கொண்டான். சா... கொத்துடனும், சாக்குப் பையுடனும் மா... ஏறினான்.

வெளிப் பூட்டு மிகச் சுலபத்தில் திறந்... கொண்டது. அவன் விளக்கைப் போட்... கொண்டான். யார் இருக்கிறார்கள், சந்தே... பட? தைரியமாக அலமாரியைத் திறந்தா...

நினைத்தபடியே அலமாரியில் கோத்ரெஜ் பீரோவின் சாவி கிடைத்தது.

பதற்றப்படாமல், மெதுவாக நகைகள், புடவைகள், வெள்ளிப் பாத்திரங்கள் எல்லாவற்றையும் பையில் அடக்கிக்கொண்டு, பீரோவைப் பூட்டிச் சாவியை இருந்த இடத்தில் வைத்தான்.

திரும்பி வருபவர்கள் — பாவம் உடனே அதிர்ச்சி யடைய வேண்டாமே!

விளக்குகளை அணைத்த பின்னர் — வாயிற் கதவைப் பழையபடியே பூட்டிய பிறகு— அவன் நிதானமாகக் கீழே இறங்கிய போது — ஒரு அரை வட்டமாகப் போலீஸ்காரர்கள் எதிர்நோக்கி நின்றுகொண்டிருந்தார்கள் — மகாலிங்கமும் தர்முவும் உட்படத்தான்.

ஜக்கு எந்தவித எதிர்ப்பும் காட்டாமல் சரணடைந்தான்.

''வெல்டன் மகாலிங்கம்... நீங்கள் மட்டும் சந்தேகப்படாமல் இருந்திருந்தால்...''

''என் மனைவிக்கு அம்மா கிடையாது ஸார்!... காமாட்சி அம்மாள் சின்னம்மா முறை... நீலமேகம்தான் பேச்சுக்குப் பேச்சு மகள்ன்னு சொல்லுவாங்க...''

தந்தி போலி என்று எப்படிக் கண்டு பிடித்தார்கள்? மகாலிங்கம் சொல்லிக் கொண்டிருந்தார்:

''இன்னிக்குப் பகல்தான் அவுங்க ரெண்டு பேரையும் மதுரைக்குப் பஸ் ஏற்றிவிட்டு வந்தேன். கும்பகோணத்திலிருந்து எப்படி தந்தி வரும்?''

ஜக்கு தீர்மானம் செய்து கொண்டான். இனித் திருடுவது இல்லை என்று அல்ல — இன்னும் கொஞ்சம் எச்சரிக்கையாக இருந்திருக்க வேண்டும் என்று!



உங்களை வரவேற்கிறது கனரா வங்கி! உகந்த பல திட்டங்களைக் காணீர் அங்கே!!



குடும்பத்தில் குழந்தைகளின் கல்வி, வேலை, திருமணம் முதலிய பல அன்றாடப் பிரச்சினைகள் உங்களுக்கு உண்டு மற்றும், வீடு வாசல் என்ற ஆசைகளும் இருக்கும். 'இடுக்கண் களையும் நட்பு' போல உங்களுடைய இத்தேவைகளை பூர்த்தி செய்ய, அணுகுவீர் **கனரா வங்கியை.**

குழந்தைகளின் உயர் கல்விக்கு உத்திரவாதம் அளிப்பது எங்கள் **'வித்யா நிதித்'** திட்டம்; நடுத்தர வர்க்கத்தினர் எளிதில் சேமிக்க, எங்கள் ரெகரிங் டெபாசிட்; உங்கள் சேமிப்பின் வட்டியில் ஓய்வு காலத்தை நிம்மதியாய்க் கழிக்க உதவுவது எங்கள் **நிரந்தராத் திட்டம்**.....

இப்படி வகைவகையாய் உங்களுக்காகவே ஏற்படுத்தப் பட்டுள்ள எங்கள் பல்வேறு திட்டங்கள்; காமதேனு; வைப்பு நிதித்திட்டம்; சேவிங்ஸ் பாங்க் முதலியன.

உங்கள் வீட்டிற்கு அருகாமையில் எங்கள் கிளை ஒன்று உண்டு. அங்கு எங்கள் கிளை மேலாளரைச் சந்தித்து இன்றே உங்களுக்குத் தகுந்த சேமிப்புக் கணக்கில் சேருங்கள்.

இச் சின்னத்தின் மூலம் எங்கள் நட்புக் கரங்களை நீட்டி வரவேற்கிறோம்

கனரா பாங்க்

(தேசீயமாக்கப்பட்ட பாங்க்)
நாடெங்கிலும் 1,300 க்கும் மேற்பட்ட கிளைகள் உள்ளன.

SERVING TO GROW GROWING TO SERVE
CANARA BANK

maa (S) CB 14 Tam c 81

அருணா உயர்ந்து விட்டாள்!

எம்.கே.சங்கரன்



அருணா வேலைக்குப் புறப்பட்டு வந்தாள்.

''போயிட்டு வரேம்மா!''

''இந்த வேலையிலாவது நெலைச்சிருப்பியா?''

தாயை விரக்தியுடன் பார்த்தாள்.

''குடும்பக் கஷ்டத்தை உணர்ந்துண்டேம்மா. நிச்சயமா இந்த வேலையில் நெலைச்சிருப்பேன்.''

தெருவில் இறங்கி வேகமாக நடந்தாள்.

நல்ல சம்பளம் கிடைத்த இரண்டு வேலைகளை இழந்தாச்சு. அப்புறம் வேலை தேடி அலைஞ்ச அலைச்சல்... தண்ணீரைக் குடித்துத் தாயும் மகளும் ஒருவரை யொருவர் பார்த்து அழுதது... தம்பி பசி மயக்கத்தால் சுருண்டு விழுந்தது... போதும் இந்த அனுபவம். அனுசரிச்சு நடந்திருந்தால் இந்தக் கஷ்டம் வந்திருக்காது.

ராணி டெக்ஸ்டைல்ஸ் நகரில் பெரிய வர்த்தக நிலையம். ஐம்பது சிப்பந்திகள்! அருணாவுக்கு அங்கு சேல்ஸ் வேலை. முன் பார்த்த வேலைகளை விடச் சம்பளம் குறைவுதான். ஓரளவு பசியையாவது நிவர்த்திக்கிறது.

இந்த வேலையை இழக்கவே கூடாது. இரண்டு மாதங்கள் எந்தப் பிரச்னையும் இல்லை. கொஞ்ச நாட்களாகத்தான் ராமானுஜத்தின் நடவடிக்கைகள்....

ராமானுஜம் ராணி டெக்ஸ்டைல்ஸுக்குப் பிரதான ஏஜெண்ட். முதலாளி கடைக்கு வருவதில்லை. சின்ன ஜவுளிக் கடையாய் ஆரம்பித்த காலத்திலிருந்தே வேலை பார்ப்பவர் ராமானுஜம். முதலாளியின் முழு நம்பிக்கைக்கும் பாத்திரமானவர். கடைக்கு முதலாளி மாதிரி. சரக்குக் கொள்முதலிலிருந்து சிப்பந்திகளைச் சேர்ப்பது நீக்குவது வரை அதிகாரம் பெற்றவர். தப்பு வழிக்கெல்லாம் போகாத பெரிய மனுஷன்தான். அருணா வந்ததிலிருந்து அவரை அறியாது ஏற்பட்ட சபலம்... அருணாவின் தலையில் விதிச்ச விதி அவளை வேலைக்குச் சேர்த்துக் கொண்டவர்கள் நல்லவர்களாக இருந்தாலும் அவள் அழகு அவர்கள் மனசைக் கெடுத்துவிடுகிறது.

''அருணா உன்னை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. இந்த மாசத்திலிருந்து உனக்குச் சம்பளம் கூடுதலாப் போட்டிருக்கிறேன்.''

''தேங்க்ஸ்.''

''தேங்க்ஸ் மட்டும்தானா?''

வேறென்ன வேண்டும் என்பது போல் அருணா ஒரு பார்வையை வீசினாள்.

மெதுவாக அவள் கரங்களை ஸ்பரிசித்தார்.

''யாராவது வந்துவிடப் போகிறார்கள்!'' கிசுகிசுத்தாள் அருணா.

ராமானுஜம் உருகிப் போனார்.

கட்டுப்பாடாக மரியாதையோடு வாழ்ந்தவர். தனிமையில் எங்கு எப்படிச் சந்திப்பது என்ற துணிவு ஏற்படாமையால் நாட்கள் தள்ளிக் கொண்டிருந்தன.

வீட்டிலிருந்து புறப்படத் தாமதமாகி விட்டது. ஒரு மணி நேரம் தாமதம். ராமானுஜத்தின் அபிமானம் கிடைத்த தைரியம் அவள் மனசில் பயமில்லை.

கடைக்குள் காலடி வைத்ததும் கல்லாவில் கம்பீரமாக வீற்றிருந்த புதிய மனிதரைக் கண்டதும் மிரண்டாள் அருணா.

''நம்ம கடை முதலாளி.'' — உடன் வேலை செய்பவர்கள் சொல்லத் தெரிந்தது.

நெஞ்சில் பயம் பிடித்துக் கொண்டது. நடுக்கத்துடன் முதலாளியின் எதிரில் சென்றாள். ''எக்ஸ்கியூஸ் மீ. இன்றைக்கு ஒரு நாள் லேட்டாயிடுத்து...''

''பரவாயில்லை. நீதான் புதுசா வேலைக்குச் சேர்ந்த பெண்ணா? உன்னைப் பத்தி ராமானுஜம் சொல்லி யிருக்கார். அக்கவுண்ட்ஸ் எல்லாம் மெயிண்டைன் பண்றியாம். புத்திசாலிப் பொண்ணு என்றெல்லாம் என்னிடம் சொன்னார். போய் வேலையைப் பார்.''

தப்பித்தோம் பிழைத்தோம் என்று தன் இடத்துக்குப் போனாள். முதலாளி முதல்

தடவையாக வந்தபோது லேட்டாகி வந்தது அவள் மனசை உறுத்திக் கொண்டிருந்தது.

ராமானுஜம் எங்கே?

அவர் மனைவி நீண்ட நாள் சீக்காளி. திடீரென மயங்கி விழுந்து விட்டாள். நாகர்கோவில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்ல நேரிட்டது. அவளை நன்ருகக் குணப்படுத்தி விட்டு வந்தால் போதும் என்று முதலாளி அனுமதி அளித்து விட்டார். அவர் வர இரண்டு மூன்று மாதங்கள் ஆகலாம். கடையைக் கவனிக்க முதலாளியே வருகிருர்.

அருணுவிடம் இயல்பாய் இருக்கும் ஈர்ப்புத் தன்மை முதலாளி கல்யாண சுந்தரத்தையும் விட்டு வைக்கவில்லை. அவள் இளமையின் செழிப்பைக் கள்ளத்தனமாக ரசித்து எடை போட ஆரம்பித்தார்.

''அருணு, வருகிற ஒவ்வொருவனும் கண் கொத்திப் பாம்பு மாதிரி உன்னையே பார்க்கிறது எனக்குச் சகிக்கல்லே. சேல்சுக்கு நீ நிக்க வேண்டாம். அக்கவுண்ட்சுக்கு வந்துடு.''

தம் அருகில் உள்ள ஆசனத்தில் அவளை அமர்த்திக் கொண்டார். தினமும் அருணுவின் முக தரிசனம் காணுமல் இருக்க அவரால் இயலவில்லை.

கல்யாணசுந்தரத்தின் மனைவி சிவகாமிக்கு முரண்



டுக் குணம். மகள் ராணி பிடிவாதக்காரி. வீட்டில் அவருக்கு நிம்மதி இருப்பதில்லை. அவர் மனம் புதிய சுகத்தில் நாட்டம் கொண்டது.

ராமானுஜம் மூன்று மாதங்கள் மனைவிக்கு அரும்பாடுபட்டு அவளைப் பிழைக்க வைத்து ஊர் வந்து சேர்ந்தார். கடைக்கு வந்ததும் அவர் கண்கள் அருணாவைத் தேடின.

அருணா எங்கே?

அவரே எதிர்பார்க்காத சேதி. அவர் நெஞ்சை வெடி வைத்துத் தாக்கும் செய்தி.

அருணா இப்பொழுது சேல்ஸ் பெண் அல்ல. முதலாளி கல்யாணசுந்தரத்தின் நிரந்தர நாயகி. அவள் பெயருக்குப் பெரிய வீடு, கவலை இல்லாம வாழ நிலபுலன்கள் எல்லாம் வாங்கிக் கொடுத்திருந்தார். ராமானுஜத்துக்கு எட்டாத உயரத்துக்குப் போய் விட்டாள் அருணா. ஏமாற்றத்தைத் தாங்கிக் கொள்ள அவர் மிகவும் சிரமப்பட்டார்.

கல்யாணசுந்தரம் அருணாவே உலகம் என்று அவள் வீட்டையே தஞ்சமடைந்தார். மனைவியும் மகளும் அவரை மதிக்கவில்லை. கல்யாணசுந்தரம் அருணாவின் வீடே கதி என்று கிடப்பதற்கு அவர்கள் அலட்சியமே காரணமாயிற்று. வீட்டுக்கே போவதில்லை.

அருணாவுக்கு ஆண் குழந்தை பிறந்தது. குழந்தையின் பிறந்த தின விழாவை ஊரைக் கூட்டி நடத்தினார். அருணா அவர் மனைவி என்ற ஸ்தானத்துக்கு உயர்ந்தாள்.

ராமானுஜத்தின் மனைவி போய்ச் சேர்ந்தாள். பருவமடைந்த ஒரே மகள்தான். வீடு வாசல், வயல் என்று அவருக்கு ஓரளவு வசதிகள் உண்டு. மறு கல்யாணம் செய்வதா வேண்டாமா என்ற குழப்பத்தில் இருந்தார்.

போன் மணி ஒலித்தது. ராமானுஜம் ரிசீவரை எடுத்தார்.

''ஹலோ!! அருணா பேசறேன்.'' — அவள் குரலில் பதற்றமும், வேகமும் ஒலித்தது. ''முதலாளிக்குத் திடீர்னு ஹார்ட் அட்டாக் வந்திருச்சு. நம்ம டாக்டராலே முடியல. பெரிய ஆஸ்பத்திரியில சேர்த்திருக்கேன். அவங்க வீட்டுக்குத் தகவல் கொடுத்திடுங்க'' அருணா அழுது கொண்டே சொன்னாள்.

ராமானுஜம் உடனே முதலாளி வீட்டுக்குப் போன் பண்ணிச் சொன்னார். சிவகாமி சர்ச்சையில் ஈடுபட்டாள். 'அவள்' சொல்லிப் போறதா என்ற சுய கௌரவம். நாலு பேர் நல்ல வார்த்தை சொல்ல, மகளை அழைத்துக் கொண்டு ஆஸ்பத்திரிக்குச் செல்வதற்குள் கல்யாண சுந்தரம் அபாய கட்டத்தைக் கடந்த சமன நிலைக்கு வந்து விட்டார். தாயும் மகளும் வந்த சமயம் அருணா கல்யாணசுந்தரத்தை மார் போடு சாத்திய வண்ணம் மருந்து கொடுத்துக்கொண்டிருந்தாள். அதைப் பார்க்கச் சகிக்காத சிவகாமியும் ராணியும் எட்டத்தில் நின்று கறுவியவாறு திரும்பி விட்டனர்.

ராமானுஜம் முதலாளியைப் பார்க்க வந்திருந்தார். ஐந்து வருடங்களுக்குப் பின் அருணாவைப் பார்த்ததும் அவர் நெஞ்சிலிருந்து ஏக்கப் பெருமூச்சு வெளிப்பட்டது. அன்று போல் இன்றும் அவள் இளமை மாறாமல் இருந்தது. அருணா அவரை எதிர் நோக்கக் கூசித் தலையைக் கவிழ்த்துக் கொண்டாள்.

''அருணா, கொஞ்சம் வெளியே போய் இரு. நான் இவரிடம் சில விஷயங்கள் பேசணும்'' என்றார் கல்யாணசுந்தரம்.

''ராமானுஜம், நான் பிழைக்கப் போறதில்லை. அருணா இளவயசுப் பெண். எனக்கு வாரிசு தந்திருக்கிறாள். அவளுக்குப் பாதகமில்லாமல் சொத்து அவளுக்கும் சேரணும். ஒரு உயில் எழுதிக் கொண்டு வாரும்.''

ராமானுஜம் மூளை வேலை செய்தது. உறங்கிக் கிடந்த உணர்ச்சிகள் அணை உடைத்துக் கிளம்பின. இதுவரை அவர் முதலாளிக்குத் துரோகம் செய்ததில்லை. தனக்குக் கிடைத்த இன்பத்தை முதலாளி தட்டிப் பறித்த ஆத்திரம் நீறு பூத்த நெருப்பாய் இதயத்தில் பதுங்கிக் கிடந்தது. இந்தச் சந்தர்ப்பத்தை விட்டு விட்டால், இழந்துபோன ஆசையை நிறைவேற்ற முடியாது.

புத்திசாலித்தனமாகக் காரியத்தை முடித்தார். உயிலோடு வந்து சாதுரியமாக வாசித்துக் காட்டினார். கல்யாணசுந்தரம் நம்பிக்கையோடு கையெழுத்திட்டுக் கொடுத்தார். அன்றே கல்யாணசுந்தரத்தின் உயிர் பிரிந்தது.

அவர் மறைந்த செய்தி கேட்டவுடனேயே சிவகாமியும்ராணியும் ஆஸ்பத்திரிக்கு வந்து விட்டனர். அவரது உடம்பை உரிமை கோரி வீட்டுக்கு எடுத்துச் சென்றனர். மூன்று நாட்கள் இரவு பகலாகப் பாடுபட்டு அவரைக் கவனித்த அருணா அலட்சியப் படுத்தப்பட்டு ஆஸ்பத்திரியிலேயே நின்றாள்.

ராமானுஜம் பிரேதத்தை அனுப்பிவிட்டு விக்கித்து நின்ற அருணாவிடம் வந்தார். ''அருணா, முதலாளி வீட்டுக்கு நீ வந்தால் உனக்கு மரியாதை கிடைக்காது. உன்னை மயானத்துக்கு நான் அழைத்துச் செல்கிறேன்'' என்றார்.

ராமானுஜம் அருணாவை டாக்சியில் சுடுகாட்டுக்கு அழைத்துக் கொண்டு சென்றார். அனைவரும் அதிசயத்துடன் பார்த்தார்கள்.

பதினோராம் நாள் விசேடம். சிவகாமி வீட்டில் உறவினர் சூழ நடந்த அதே வேளை

''மாதம் ஒரு புத்தகம் போடலாமா என்று பார்க்கிறேன். போட்டால் வித்திடுமா?''

''ஒரு புத்தகம் போட்டால் வித்துடும் நூறு, ஆயிரம்னு போட்டால்தான் விக்கிறது கஷ்டம்!''

-பெ. கலாசாமி



யில் அருணா தன் வீட்டில் தனக்கு வேண்டியவர்களை அழைத்துச் சிறப்பாக நடத்தினாள். ராமானுஜம் அருணா நடத்திய விசேடத்தில் முழுமையாகக் கலந்து கொண்டது சிவகாமியைச் சிந்திக்க வைத்தது.

''அம்மா, நம்ம ஏஜண்டுக்கு அருணா மேல் ஏற்கனவே மயக்கம் உண்டு. முதலாளியை மயக்கிய மாதிரி அருணா இவரையும் வலைக்குள் போட ஆரம்பிச்சிருக்கா. நீங்க ஜாக்கிரதையா இருக்கணும்.''

கடை ஊழியர்கள் சிவகாமியிடம் ரகசியமாக எச்சரித்தனர்.

சிவகாமி ராமானுஜத்தை வரவழைத்துக் கடை வரவு செலவுகளை ஒப்படைக்கும்படி கட்டளை இட்டாள்.

''அம்மா, சொல்ல எனக்கு ரொம்ப வருத்தமா இருக்கு. உங்களுக்கு வீடு, நில புலன்களை முதலாளி முந்தியே எழுதித் தந்திட்டார். நீங்க முதலாளியை அனுசரிக்காமப் போயிட்டீங்க. அஞ்சு வருஷம் அருணாவோட குடித்தனம் நடத்திட்டார். ஆண் வாரிசு வேறே வந்து தொலைச்சுட்டுது. அந்த அபிமானத்தில் கடையை அருணாவுக்கு உயில் எழுதி வச்சுட்டார்.''

''நீங்க மனம் வச்சா உயிலை இல்லாமல் பண்ணி விடலாமே?''

''முதலாளி எம் மேலே நம்பிக்கை வச்சுச் செஞ்சதுக்கு வஞ்சனை பண்றதா? முடியாது.''

''கடையை எப்படிக் கைப்பத்தணும் என்பதை நாங்க பார்த்துக்கொள்கிறோம்.''

சிவகாமி போட்ட கூச்சலை ராமானுஜம் இந்தக் காதில் வாங்கி மறு காதில் விட்டு விட்டுப் போய்விட்டார்.

அவர் சிந்தனை கொடி கட்டிப் பறந்தது. 'ராணி டெக்ஸ்டைல்ஸ்' — இந்த ராணியை எடுத்துவிட்டு அருணா டெக்ஸ்டைல்ஸ்னு மாத்தணும். இனி கடை அருணாவுக்குத்தானே?

தமக்கு உடைமையாகப் போகும் அருணாவின் நினைவில் முகிழ்த்தவாறு அவள் வீட்டுக்குச் சென்றார். அருணா வெண்ணிற ஆடையோடு நிற்பதைக் கண்டதும் அவர் முகம் சுழித்தது.

''அருணா, எல்லா விசேஷமும் முடிஞ்சாச்சு. இனி வெள்ளைச் சேலை எதற்கு? முன்போல் மாடர்னா கலர் புடவை உடுத்திக்கிட்டு அழகா இருக்கணும்'' என்றார்.


''நீங்க எந்த அர்த்தத்தில் சொல்றீங்க?''

''புதுசா உனக்குச் சொல்லணுமா? உன் மேல் எனக்கு இருக்கிற ஆசையை மறுபடியும் சொல்லணும் என்கிறாயா? என்ன புருஷன்? தாலி கட்டியவரா?''

''என் மனசாட்சிதான் தாலி.''

''உன்னோடு வாதாட நான் வரவில்லை. முதலாளி சின்ன வசதிதான் உனக்கு ஏற்படுத்தச் சொன்னார். நான்தான் கடை உரிமை முழுவதும் உன் பேருக்குத் தந்திரமாக எழுதி வாங்கிட்டேன். கடைன்னா சாதாரணமா நினைக்காதே. நீயும் உன் பிள்ளையும் பிள்ளைக்குப் பிள்ளையும் கூட ஆயுள்வரை ராஜபோகம் நடத்தலாம். லட்சம் லட்சமாக வருமானம். நீ மறுத்தே உயிலைக் கிழிச்சுத் தூர எறிஞ்சிடுவேன். கடை ஆட்டமாட்டிக்கா சிவகாமி குடும்பத்துக்குப் போய்ச் சேர்ந்துடும். நீ நடுத் தெருவில் நிற்க வேண்டியதுதான்.''

''அந்த நிலைக்கு அவர் எங்களை விட்டுவிடவில்லை. ஏற்கெனவே அவர் தந்தது எங்கள் வாழ்வுக்குப் போதும். லட்சக் கணக்கா வருமானம் கிடைக்கிறது என்கிறதுக்காக எனக்கு ஏற்பட்டிருக்கும் மரியாதையை இழக்க நான் தயாராக இல்லை. நீங்கள் போகலாம்.''



மானேஜர்: ''ஃபைல் பார்க்கும்போது அடிக்கடி தலையைத் தடவாதே!''

அவன்: ''ஏன் ஸார்..?''

மானேஜர்: ''ஃபைலில் இருக்கிற ஒவ்வொரு பேப்பரிலும் கறுப்புக் கறுப்பா ஹேர் டை ஒட்டிக்கிறதை நீ கவனிக்கலையா?''

உ. ராஜாஜி

ராணி டெக்ஸ்டைல்ஸ் கைவிட்டுப் போய் விடக் கூடாது என்பதில் சிவகாமி தீவிரமாக இருந்தாள். ராணியை ராமானுஜத்துக்குக் கல்யாணம் செய்து கொடுத்து விட்டால்?

''ராணி, நம்ம கடை லட்சம் லட்சமா வருமானம் தரக் கூடிய ஸ்தாபனம். அது அருணா கிட்டப் போயிட்டா அவள்ரொம்ப உயரத்துக்குப் போயிடுவா. நாம் மதிப்பில்லாமல் ஏழை எளியவங்களைப் போல சாதாரணமாய்ப் போயிடுவோம்.'' தாய் போட்ட தூபத்தில் ராணி மசிந்து விட்டாள்.

சுவாமி தரிசனத்தை முடித்துக் கொண்டு அருணா கோவிலிலிருந்து தன் குழந்தையோடு வந்து கொண்டிருந்தாள். கோவில் வாசலில் காரிலிருந்து ராமானுஜம் ராணியுடன் இறங்குவதைப் பார்த்தாள். ராணிக்குக் கணவனாக நிற்கிற பெருமையில் அருணாவை அலட்சியப் பார்வை...

ஒரு கடைக்காக அவசரக் கோலத்தில் பொருந்தாத மணம் செய்து கொண்ட அந்தச் சின்னப் பெண்ணைப் பார்க்க அவளுக்கு அனுதாபம் ஏற்பட்டது. தன் மரியாதைக்காகப் பணச் சுரங்கமான பெரிய ஸ்தாபனத்தை உதறி விட்டதன் மூலம் அவளைவிட உயர்ந்துவிட்ட மனநிறைவில் சலனமில்லாமல் அவர்களைக் கடந்துகொண்டிருந்தாள் அருணா.

இம்மாத ரத்தினம்

செப்டம்பர் மாதத்தில் பிறந்தவர்-களுக்குரியது நீலக்கல் என்று சொல்வார்கள். இது, பலவகை-யான நீல வண்ணங்களில் இருக்கும். ரத்தினங்களின் கடினத்தன்மையை மோஸ் அள-வில் மதிப்பிடுவார்கள். இதன் கடினத்தன்மை 9. நீலக்கல், அமைதியைக் குறிக்கும். உண்மை, நீதி, விசுவாசம் ஆகிய வற்றையும் குறிக்கும்.







குறுக்கு வழி

'ஜெரா'

மெல்லிய இரவு விளக்கு எரிந்து கொண்டிருந்த அந்த ஆடம்பரமான படுக்கையறையில் அவன் பொறுமை யின்றி அலைந்து கொண்டிருந்தான். எந்த நிலையிலும் ஒளிந்து கொள்ளத் தயாராய் இருப்பவன் போல் ஏதோ ஓர் எச்சரிக்கை உணர்வு அவன் முகத்தில் தெரிந்தது. அவன் யாரை எதிர் பார்த்து நெடுநேரமாக அந்த அறைக்குள் பதுங்கி யிருக்கிறானே அந்த நபர் இன்னும் வந்தபாடில்லை. ஏதாவது மீட்டிங்காய் இருக்கும். இல்லை ஏதாவது தேவையில்லாத திறப்பு விழாவாய் இருக்கும்... அவன் ஏதோ வாய் விட்டு முனகிச் சலித்துக்கொண்டவனாக நிதானமாக எதிரே இருந்த ஃபோம் மெத்தையில் அமர்ந்தான். கை எட்டும் தூரத்தில் இருந்த டெலிபோன், தண்ணீர் கூஜா, தூக்க மாத்திரைப் பாட்டில், நீர் நிரம்பிய டம்ளர், இவைகளை நோட்டமிட்டபடி கொஞ்ச நேரம் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். திடீரென்று யாரோ வரும் சப்தம் கேட்கவே விருட்டென்று எழுந்து அருகிலிருந்த பீரோவுக்குப் பின்னால் பதுங்கினான். சற்று நேரத்தில் அந்த அறைக்குள் நுழையும் ஐம்பது வயது மதிக்கத் தக்க பெரிய மனிதரைப் பார்த்ததும் அவன் பற்கள் நறநறத்தன. கைகள் அவன் கட்டுப்பாட்டையும் மீறி பாக்கெட்டிலிருந்த பிச்சுவாவைப் பற்றிக் கொண்டன. கதவை உட்புறமாகத் தாழிட்டுவிட்டு, விளக்கைப் போட்ட அந்தப் பெரிய மனிதர், சட்டையைக் கழற்றி மாட்டிவிட்டு, ஸ்வாமி படத்தைப் பார்த்துக் கரம் கூப்பி, கண்மூடி, கனை நேரம் தியானித்தார். அவர் கண் திறக்கும் போது, அவன் நீட்டிய பிச்சுவாவுடன் எதிரில் நிற்கவே பயத்தால் குரல் வராமல் தடுமாறித் தவித்தார். அவன் பாய்ந்து சென்று அவர் கரத்தில் பிச்சுவாவை நெருடவிட்டுக் கரகரப்பான குரலில் எச்சரித்தான்.

''சத்தம் போடாதே! மீறினா அதுவே உன் கடைசிச் சத்தமா இருக்கும்.'' முகத்தில் பலநாள் ரோம வளர்ச்சியோடு பரிதாபமாகத் தோற்றமளித்த அவனைப் பார்த்ததும் பெரிய மனிதரின் கண்களில் இரக்கம் வழிந்தது. தைரியத்தை வரவழைத்துக் கொண்டு மெல்ல அவனைவிட்டு விலகினார்... பரிவோடு அவனைப் பார்த்தார்.

''யாருப்பா நீ?''

''நீதானே அரசியல் தலைவன் அன்பரசு?''

''ஆ....ஆமா.''

''பாவம் உனக்கு அற்பாயுசு.''

''நீ என்ன சொல்றே?''

''தெரியலே?'' — அவன் இடிஇடியெனச் சிரித்தான். பிறகு சட்டென்று சிரிப்பை நிறுத்திவிட்டு சீரியஸாக அன்பரசுவை ஒரு முறை பார்வையால் அளந்தான். ''உன்னை மேலே அனுப்ப டிக்கட் ரிசர்வ் பண்ணியாச்சு எதிலே போறே — பாசஞ்சரா, எக்ஸ்பிரஸா — எப்படி வசதி?''

''நீ யார்னு....?''

''என் பேரு சுபாஷ்'' — அவன் தன் பெயரைச் சொன்னதும் அன்பரசு இகழ்ச்சியாகப் புன்னகைத்தார்.

மங்கையர் மலர்

அக்டோபர் 81

★மூங்கிற்காட்டுக் குழலோசை

குறுநாவல்:

உஷா சுப்பிரமணியம்

''ம்.... ஒரு தலைவனோட பேரு...''

''வேண்டாம்— தலைவனோட தலையெழுத்தெல்லாம் இப்பத்தலை கீழா இருக்கு. என்னைச் சாதாரண மனுஷன்னே சொல்லு.''

''உன்னைப் பார்த்தா புத்திசாலியா தெரியுது.''

''ம்— கையிலே கத்தி வச்சிருக்கேனில்லே! உன் கண்ணுக்கு அப்படித்தான் தெரியும்.''

''சுபாஷ் — இதோ பாருப்பா — நீ யாரு— எதுக்காக என்னைத் தொந்தரவு பண்றே? நான் தெரிஞ்சுக்கலாமா?''

சுபாஷ் ஆக்ரோஷமாக உறுமினான்..... ''எனக்குத் தேவை உன் உயிர்.''

ஒரு கணம் மார்புத் துடிப்பு நின்றுவிட மரமாகிப்போன அன்பரசு அடுத்த கணமே தன்னைச் சமாளித்துக் கொண்டு மெத்தையில் அமர்ந்தார்.

''ஸோ, நீ இப்ப என்னைக் கொலை பண்ணணும் இல்லையா?''

''யெஸ்.''

''சரி, முதல்லே அப்படி உட்கார் — அட பரவாயில்லை உட்காருப்பா — பாவம் ரொம்ப சோர்ந்து போயிருக்கே — ஏதாவது பழம் சாப்பிடறயா?''

''பழக்கமில்லே.''

''கொலைசெஞ்சு மட்டும்பழக்கமிருக்கோ?''

''கத்துக்கணும்.''

''ஓ! அப்ரண்டீஸா? அப்போ உனக்குச் சம்பளம் கிடைக்காது — ஸ்டைஃபண்ட் தான் — எவ்வளவு குடுத்தாங்க?''

''அஞ்சாயிரம்.''

''அடேயப்பா — அனுபவமில்லாதவனுக்கு அஞ்சாயிரமா?''

''அனுபவம் தேவையில்லே — அன்பரசுவை அழிச்சுட்டாப் போதும்னு சொன்னாங்க.''

''அப்போ நீ இந்த பால், பழம், இதையெல்லாம் ஒருகை பார்த்துத்தான் ஆகணும். ஏன்னா — என் இதயமிருக்கே அது ஏழைகளோட வாழ்த்துக்களை வாங்கி வாங்கி வைரம் பாய்ஞ்சிருக்கு! வலுவா குத்தலேன்னா என் வாழ்க்கை முடியாது.''

''என் கத்திக்குத் தாகம் தணியறவரைக்கும் நான் கை நனைக்க மாட்டேன்.''

''என் வாழ்க்கையிலே எத்தனையோ ஏழைகளுக்குச் சோறு போட்டிருக்கேன். இப்ப உன் வயிறு காலியா இருக்கிறதை நான் அனுமதிக்கலாமா?''

''ம்— இந்தக் கனிவான உபசரிப்பு வெளியில் கிடைச்சிருந்தா நான் கத்தியைத் தூக்கி இருக்க மாட்டேன்.''

''உன் கதையைச் சொல்றியா?''

''இல்லே— என் கனவைச் சொல்றேன்.''

''புரியலே?''

''உனக்கு மட்டுமில்லே... உன்னைப் போல் பணத்துக்குப் பல்லைக் காட்டற பரதேசிகளுக்கு ஏழைகளோட பசியைப் பற்றிப் புரியாது.''

''விசித்திரமா இருக்குப்பா — என் உயிரை விலை பேசிப் பணத்தை வாங்கிட்டு என் மேலேயே பழி போடறியே...''

''பேசாதே — நான் பணத்தை வாங்கினது உன்னைப் போல் பங்களாவிலே வாழறதுக்காக இல்லே. வாழ முடியாத பத்துப் பேருக்கு வழி காட்டறதுக்காக.''

''உயரத்திலே இருந்தாத்தான்பா கீழே கிடக்கிறவங்க கஷ்டத்தை எல்லாம் கரெக்டாக் கண்டு பிடிக்க முடியும். நாங்க பங்களாவிலே இருந்தாலும் எங்க பார்வை என்னிக்குமே ஏழைகள் மேலேதான்.''

சுபாஷ் திடீரென ஆவேசம் வந்தவன் போல மேஜை மேல் ஓங்கிக் குத்தினான். கடந்த காலத்தின் கரைக்க முடியாத சோகச் சுமைகள் இதயத்தை அழுத்த ஏக்கப் பெருமூச்சு விட்டான்.

''உங்க மாதிரி அரசியல்வாதிங்க பார்வை பட்டதுனாலதான் செழிப்பா இருந்த எத்தனையோ குடும்பங்கள் சிதைஞ்சு போச்சு.''

அன்பரசு ஆதரவாக அவன் தோளில் தட்டிக் கொடுத்தார். ''அவசரப்பட்டு யாரோ செய்துவிட்ட கொடுமைக்காக இந்த அப்பாவி அன்பரசுவைத் தண்டிக்கலாமா?''

சுபாஷ் கோபத்தால் பாதாதி கேசமும் நடுங்கக் கூறினான்: ''அவசரப்பட்டவங்க உன் அரசியலைச் சேர்ந்தவங்கதானே — சொந்தத் தொழில் தொடங்கலாம்னு எங்க சொத்தை அழிச்சாங்க — நல்ல வேலை வாங்கித் தர்ரதாச் சொல்லி என் பணத்தைப் பாழாக்கினாங்க— தங்கைன்னு சொல்லிக்கிட்டே எங்கக்காவைத் தாரமாக்கத் துடிச்சாங்க — தடுக்க வந்த எங்க மச்சானை....'' அதற்கு மேல் வார்த்தைகள் வரவிடாமல் துயரம் அவன் தொண்டையை அடைக்க ஒரேயடியாகத் துவண்டு தடுமாறினான். அன்பரசு அவனைச் சமீபித்து அவன் தோள்களைப் பற்றி அருகிலிருந்த நாற்காலியில் அமரச் செய்தார்.

''பரிதாபமாத்தான் இருக்கு. ஆனா கொடுமை செஞ்சவங்களைத் தேடிப் பிடிச்சுக் கொல்றதை விட்டுட்டு ஒரு பாவமும் அறியாத என்னைப் போய்....'' சுபாஷ் மெதுவாக எழுந்து அன்பரசுவை உற்றுப் பார்த்தான். வெறி வழியும் கண்களால் அவரை விழுங்கி ஜீரணித்தான். அருவெறுப்பான பொருள் ஒன்றைப் பார்ப்பது போல அவரைப் பார்த்து உதட்டை அஷ்டகோணலாக்கி உறுமினான். ''யோவ் சும்மா சொல்லக் கூடாதுய்யா. அன்பரசுன்னு

பேரு வச்சுக்கிட்டு ஊரை ஏமாத்தி அயோக்கித் தனம் பண்ணிக்கிட்டு இருக்கே! இல்லேன்னு ஐயாயிரம் ரூபாயைக்குடுத்து உன்னை அழிக்கிற அளவுக்கு எதிரிங்க இருப்பாங்களா?''

''அயோக்கியனுக்குத்தான் எதிரிங்க இருப்பாங்கன்னு இல்லே. ஆண்டவனுக்கே கூட எதிரிங்க இருக்காங்க — ஏன்? ஏசுநாதருக்கு எதிரிங்க இல்லையா?''

''போதும். நீ இவ்வளவு பேசினதே அதிகம். எங்க குடும்பத்தை அழிச்சிட்டு அடையாளம் தெரியாம ஓடிப்போனவங்களைத் தேடிப்போறதை விட அடையாளம் தெரிஞ்ச உன்னையே அழிக்கிறதுன்னு முடிவு பண்ணிட்டேன். தற்கொலைக்குத் தயாரா இருந்த என்னை உன் எதிரிங்க கொலை செய்யத் தூண்டினதும் சம்மதிச்சுட்டேன். சம்பளத்தை வாங்கி அதை விடுதிக்கு அன்பளிப்பாக் குடுத்திட்டேன். உன் எதிரிகளுக்கும் நிம்மதி எனக்கும் நிம்மதி!''

னுடைய உடல் வியர்வையின் உற்பத்திஸ்தலமாயிற்று.

''சுபாஷ் ஏம்ப்பா நடுங்கறே? பயப்படாதே. நான் உன்னைக் கொல்ல மாட்டேன்.'' — சற்று யோசித்த அன்பரசு ரிவால்வரை மேஜை மேல் வைத்துவிட்டு அவனை ஏறிட்டுப் பார்த்தார். ''அடுத்தவங்க சாவு எனக்கு அல்வாத் துண்டு இல்லே!... கமான் வா, ரிவால்வரை எடுத்துக்கோ.'' சுபாஷுக்கும் ரிவால்வருக்கும் இடையே இருக்கும் சில அடிகள் தூரத்தில் ஓரடியை அவன் கால்கள் விழுங்கின. ''பயப்படாதே, வா. கூழாங் கற்களையே பார்த்த உன் கண்களுக்கு வைரத்தை அடையாளம் தெரியலே.'' மற்றும் ஓரடி காலடியில் மறைகிறது. ''அஞ்சு விரலும் ஒண்ணா இருக்குமா? கட்டை விரல் உன் கண்ணுலே பட்டதுக்காக நீ சுண்டு விரலைத் துண்டாக்க முடிவு பண்ணிட்டே— வா'' — மீண்டும் ஓரடி மாண்டு போகிறது. ''எவனோ சொன்னதுக்காகஏழை

கணவன்: விருந்தாளிகளைக் கிளப்பறதுக்கு நாம் உன் பாட்டிக்கு சீரியஸ்னு பொய்த் தந்தி கொடுக்கச் சொன்னது பெரிய தப்பாப் போச்சு!''

மனைவி: ''ஏன்?''

கணவன்: ''மூச்சு இருக்கும் போதே போய்ப் பாருங்கன்னு சொல்லி அவங்க நம்மைக் கிளப்பறுங்க!''

-அ. தெ.



சுபாஷின் வார்த்தைகளைக் கேட்டதும் அன்பரசு கொஞ்ச நேரம் மௌன விரதம் மேற்கொண்டார். விழிகளை உயர்த்தி ''அறியாச் சிறுவனே!'' என்பது போல அனுதாபத்தோடு அவனைப் பார்த்தார். ''ரொம்பச் சந்தோஷம்பா — உனக்கு நிம்மதி வரும்னா நான் நிச்சயமாச் சாகத்தான் வேணும்— யெஸ்... நான் சாகத்தான் வேணும்...''— சோகம் ததும்பச் சொல்லிவிட்டு விரக்தியில் நனைத்த சிரிப்பை உதிர்த்தார். மெல்லப் படுக்கையில் அமர்ந்தவர் திடீரெனப் பாய்ந்து தலையணைக்குக் கீழிருக்கும் ரிவால்வரை எடுத்து சுபாஷின் நெஞ்சுக்குக் குறி வைத்தார். ''ஹாண்ட்ஸ் அப்! அசையாதே! இதிலே ஆறு குண்டும் அப்படியே இருக்கு. வேஸ்ட் பண்ண மாட்டேன்.''

சுபாஷ் கால்கள் நடுங்கக் கத்தியைக் கீழே போட்டுவிட்டுக் கைகளை மேலே உயர்த்தினான். உதடுகள் எதையோ சொல்லத் துடிக்க, விழிகள் ஊமை ஜாலங்கள் புரிய, அவகளுக்காக வாழற என்னையே கொல்லப் போறே வா''. சுபாஷின் கை ரிவால்வரை எடுத்தது. ''ஏம்பா யோசிக்கிறே — சுடு!

''சந்தோஷமா என்னைச் சாகடி - நான் செத்த பின்னாலாவது நாலு பேர் கிட்டே நல்லா விசாரிச்சு என்னை நல்லவன்னு புரிஞ்சுக்கோ. உனக்கு நல்லதே நடக்கட்டும்—காட் ப்ளஸ் யூ''. அன்பரசு நிம்மதியாக நெஞ்சை நிமிர்த்திக் கண்களை மூடி அமர்ந்தார். சுபாஷ் அவரையே பார்த்து நெஞ்சைப் படபடப்பாக்கிக் கொண்டான். தவித்தான்— தடுமாறினான் — குறி பார்த்தான்—யோசித்தான் — துப்பாக்கி நழுவ, கொஞ்சம் கொஞ்சமாக விம்மியபடி அன்பரசுவின் காலடியில் விழுந்தான். அன்பரசு திடுக்கிட்டுக் கண் விழித்து அவனைப் பார்த்துத் தம் விழிகளை விரித்தார். அன்போடு தூக்கி நிறுத்தி அவன் கண்களைத் துடைத்தார். ''ஐயா! என்னை மன்னிச்சுடுங்க — அழிக்க வந்தவன் கையிலேயே ஆயுதத்தைக் குடுக்கிற நீங்க

தெய்வம்..எந்தப்பொறுக்கியோ உங்களை...'' அன்பரசு மார்பில் அறைந்து கொண்டு அழும் சுபாஷைத் தம் மார்போடு சேர்த்துத் தழுவிக் கொண்டு தடவிக் கொடுத்தார். ''அழாதே சுபாஷ். சோதனைகள்தாம்பா மனுஷனைச் சுட்ட தங்கமா ஜொலிக்க வைக்குது— நான் துரோகியில்லேப்பா. சாதாரணத் தொண்டன். கண்ணைத் துடைச்சுக்கோ''— அவனை ஒரு வழியாகத் தேற்றி, கையில் கணிசமான அளவு பணம் கொடுத்து, அவன் வெளியே போவதற்கு அனுமதி கொடுத்தார் அன்பரசு. சுபாஷ் வெளியேற அறை மூலையிலிருந்த ஜன்னலை அணுகினான். ''சுபாஷ்! திரும்பவும் ஏம்பா குறுக்கு



கணவன்: ''1999ல் விலை ரொம்ப அதிகமாக இருக்கும்னு இப்பவே வாங்கியாந்துட்டேன் இந்த ஈஸிசேரை!''

மனைவி: ''ஏன் எப்பவும் ரிட்டையராகப் போகிற வருஷத்தையே நினைச்சு மனசைப் போட்டுக் குழப்பிக்கிட்டிருக்கீங்க..?!''

—உ. ராஜாஜி

வழிக்கே போறே? நேர் வழியிலே போப்பா— அப்பத்தான் நேர்மையைப் பார்க்கலாம்.'' அன்பரசுவின் அறவுரையால் மனம் நெகிழ்ந்து போய் மறுபடியும் கும்பிடு போட்டுவிட்டு அறைக் கதவைத் திறந்து கொண்டு வெளியேறினான் சுபாஷ். சற்று நேரம் நிதானித்த அன்பரசு திடீரென ஆவேசம் வந்தவராக எதிரிலிருக்கும் மோடாவை எட்டி உதைத்தார். கோபத்தால் கண்கள் சிவக்க, துடிக்கும் உதடுகளைக் கடித்துக் கொண்டு டெலிபோனை டயல் செய்தார். ''ஹலோ — யாரு — பி.ஏ.வா? ஏய்யா நீயெல்லாம் ஓசிச் சம்பளம் வாங்கவா வர்றே? பங்களா மெயின் கேட்ல இருக்கிற வாட்ச்மேன் எல்லாம் பாரா பாக்கறாங்களா— இல்லே பராக்குப் பாக்கறாங்களா? யாரோ ஒரு கேடிப் பய ஏன் அறைக்குள்ளேயே ஒளிஞ்சிருந்து என்னைக் கொல்லப் பார்த்தான்... என் தந்திரத்தாலேயும், டம்மி தோட்டா ரிவால்வராலேயும் அவனைச் சமாளிச்சு மெயின் கேட் வழியா அனுப்பி யிருக்கேன். அவனுக்கு நாம செய்யற பித்தலாட்டமெல்லாம் தெரிஞ்சிருக்கு. கேட்டைத் தாண்டறவரைக்கும் விட்டுட்டு, அப்புறமா அவனை வளைச்சு சதிகாரங்க யாருன்னு தெரிஞ்சுக்கிட்டு ஆளைத் தீர்த்துடுங்க.என்ன புரியுதா.'' பேசிக்கொண்டே நிமிர்ந்த அன்பரசு அறை வாசலில் கைகளைக் கட்டியபடி நின்றுகொண்டிருந்த சுபாஷைப் பார்த்துத் தடுமாறியபடி ரிஸீவரை வைத்தார்... ''நீ.... சுபாஷ்... நீ....'' குரல் நடுங்கக் குழறினார். சுபாஷ் இறுகிய முகத்தோடு அடிமேல் அடி வைத்து நெருங்க, அன்பரசு பயத்தால் உலர்ந்து போன நாக்கை நனைப்பதற்காக எதிரே இருந்த டம்ளரில் இருக்கும் நீரை எடுத்து மடமடவென்று குடித்தார். சுபாஷ் கூஜாவில் இருக்கும் தண்ணீரை அன்பரசு நீட்டிய காலி டம்ளரில் நிரப்பினான். சற்று யோசித்து அன்பரசு அதையும் குடித்துவிட்டு டம்ளரை மேஜை மேல் வைத்தார்.

''பயப்படாதே அன்பரசு... நான் உன்னைக் கொல்ல மாட்டேன். ஆனா நீ சாகப் போறே....''

''சு...சுபாஷ்... நீ என்ன சொல்றே!''

''நீ இப்பக் குடிச்சியே — அந்த ஒரு டம்ளர் தண்ணியிலே இருபத்தஞ்சு தூக்க மாத்திரைகளைக் கரைச்சு வச்சிருந்தேன். நீ இங்க வர்ரதுக்கு முன்னாலே நான்தான் அதைத் தயாரிச்சு வச்சிருந்தேன் —.உன்னைக் கொன்னுட்டு நான் தற்கொலை பண்ணிக்கிறதுக்காகத்தான் அப்படிச் செஞ்சு வச்சிருந்தேன். உன்னுடைய அட்வைஸ் என்னை மாத்திடுச்சு. நீ நல்லவன்னு நம்பி இதைக் குடிக்க வேணாம்னு சொல்லத்தான் திரும்பி வந்தேன். அதுக்குள்ளே அவசரப்பட்டுட்டே.''

''சுபாஷ்!'' மரண பயத்தால் முகம் வெளுக்க ஓலமிட்ட அன்பரசு ''டாக்டர்... டாக்டருக்கு போன்....'' என்று முனகினார்.

''உஸ்... சத்தம் போடாதே! தைரியத்தோட சாகறதுதான் தலைவனுக்கு அழகு... குட் பை... நல்லாத் தூங்கு....ம் என்னை நேர் வழியிலே போகச் சொல்லிட்டு நீயே அதிலே நெருப்பையும் வச்சிட்டே— அதனாலே திரும்பவும் குறுக்கு வழியிலேயே போறேன் — குட் பை. ஸ்வீட் ட்ரீம்ஸ்.''

சுபாஷ் தான் முதலில் உள்ளே நுழைந்த ஜன்னல் வழியே வெளியேறி சன்ஷேடில் குதித்து ஜன்னலை மூடிவிட்டு நழுவினான். அன்பரசு தவித்து, தடுமாறி தலைசாயக் கீழே விழுந்தார். பங்களாவின் பின்புற வழியாக மதில் சுவரைத் தாண்டி சுபாஷ் மறையும் போது அங்கே மெயின் கேட்டில் பி.ஏ. பத்து வாட்ச்மேன்களோடு யாராவது வருகிறார்களா என்று கண்களில் விளக்கெண்ணெயை விட்டபடி பேயாய்த் தேடிக் கொண்டிருந்தார்!


உங்கள் கேசம் அடர்த்தியின்றி
சக்தியின்றி இருக்கிறதா? உங்கள்
கேசத்தைப் பக்குவப்படுத்தி அழகையும்
ஆரோக்கியத்தையும் அளிக்கிறது...
Halo
செழுமையான புரதப்போஷாக்கு நிறைந்த
ஹேலோ எக் ஷாம்பூ
ஊட்டம் குறைந்த நிலையில் உங்கள் கேசம் அடர்த்தியின்றியும், சக்தியின்றியும், ஆரோக்கியமின்றியும் காணப்படுகிறது.
பட்டுப்போன்ற, பொன் நிறமுள்ள வழவழப்பான ஹேலோ எக் ஷாம்பூ செழுமையான புரத ஊட்டம் நிறைந்த உத்தியின் மூலம் உங்கள் கேசத்தை சீராகப் படியவைத்து அதற்குத் தேவையான எல்லா ஊட்டங்களையும் அளிக்கிறது. உங்கள் கேசம் அழகாக ஆரோக்கியமாக, அடர்த்தியாகத் திகழ்கிறது.
ஹேலோ எக் ஷாம்பூவின் செழுமையான நுரைவளம் உங்கள் கேசத்தில் புகுந்து அதை பொலிவுடனும் தூய்மையான பளபளப்புடனும் திகழச் செய்கிறது.
ஹேலோ எக் ஷாம்பூ...
அழகிய அடர்த்தியான ஆரோக்கியமான கேசத்திற்கு
HES. G. 6. TM

இங்கு மனக்கதவுகளுக்குப் பூட்டு இல்லை

போட்டிக்கதை 4

மது சிவ பாலா

இக்கதை ஆசிரியர் திருமதி கார்த்திகை பாலன் அறிமுக எழுத்தாளர். சேலத்தில் பிறந்து வளர்ந்த இவர் சேலம் ஜெயராணி பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் எஸ். எஸ். எல். சி. தேறியவர். இவரது பொழுது போக்கு, பத்திரிகைகளுக்குக் கதைகள் எழுதுவதுதான்! பழம் எழுத்தாளர் பூவை ஆறுமுகம், தாம் 'கார்த்திகை பாலன்' என்ற புனைபெயரில் எழுதி வருவதாக இவருக்குத் தெரிவிக்கவே, இந்த அறிமுக எழுத்தாளர் பெருந்தன்மையுடன் தமது பெயரை **'மது சிவ்பாலா'** என்று மாற்றிக் கொள்ள முன்வந்தார்!

படபடக்கும் இதயத்துடன் வேதா கேட்டைத் திறந்து கொண்டு அத்தையுடன் உள்ளே நுழைந்தாள்.

''யாரது?'' கம்பீரமான குரலும், அதைத் தொடர்ந்து சிவப்பாக ஒல்லியான ஆனால் உறுதியான தேகக் கட்டுடன் ஒரு மனிதர் வீட்டின் பக்கவாட்டில் இருந்து வந்தார்.

''நான்....நான்....'' வேதாவுக்கு நாக்கு உள்ளிழுத்துக் கொண்டது போல் இருந்தது.

''நான் ஜெயராமனோட பெண். இவர் என் அத்தை. அப்பா இருபத்திரண்டு நாளுக்கு முன்னே போயிட்டார். சாகிறப்போ என்னைக் கூப்பிட்டு இந்தக் கடிதாசைக் கொடுத்து உங்ககிட்டே போகும்படி சொன்னார்!'' எப்படியோ சொல்லி முடித்தாள் வேதா.

அவள் நீட்டிய கடிதத்தை வாங்கிக் கொண்டு, ''சரி வா உள்ளே!'' என்றபடியே அவர் உள்ளே நடந்தார். வாசல் குறட்டில் ஏறி முன் முற்றத்தைத் தாண்டிக் கூடத்தில் பிரவேசித்தாள்.

''ஜெகி... ஜெகி....'' குரல் கொடுத்தார். தொடர்ந்துவட்ட வடிவமாகச்செக்கச் சிவந்த குங்குமம் பளபளக்க ஓர் அம்மாள் வெளிப்பட்டாள்.

''வாங்கோ... வாம்மா கொழந்தே...'' வெகுநாள் பழக்கப்பட்ட மாதிரி இயல்பாய்க் கூப்பிட்டாள். வேதாவுக்கு அந்த அம்மாளைப் பார்க்கப் பார்க்க அப்படியே கரைந்து அவளுடைய காலில் விழுந்துவிட மாட்டோமா என்றிருந்தது.

''என்ன ஜெகி அப்படியே நின்னுட்டே? அவாளை அழைச்சிண்டு போயி ஸ்நானம் செய்யச் சொல்லி டிபன் காப்பி எல்லாம் கொடேன்.'' வாசுதேவ சர்மா சிரித்துக் கொண்டே அம்மாளைப் பார்த்தார்.

கடிதத்தைப் பிரித்தபடியே ஈஸிச் சேரில் சாய்ந்தார்.

குளித்துவிட்டு ஸ்வாமி படத்தின் பக்கத்தில் நின்று கொண்டிருந்த வேதாவுக்கு அப்பாவின் முகமும் வார்த்தைகளும்தான் அடிக்கடி தோன்றின.

''வேதா, நான் எவ்வளவோ சம்பாதிச்சேன். ஆனா இப்ப உன்னை நிர்க்கதியாத் தான் விட்டுட்டுப் போறேன். தலைகாணிஅடியிலே நாகலாபுரம் வாசுதேவனுக்கு ஒரு கடிதாசு வெச்சிருக்கேன். அதை எடுத்துண்டு அவங்கிட்டப் போ. எப்படியும் அவன் உன்னை நிர்க்கதியா விடமாட்டான். ஏன்னா சினேகிதக்காரா மாதிரி நடிக்



அறிமுக எழுத்தாளர்

கிறவாளைவிட விரோதிக்காரன் எவ்வளவோ மேல். ஆமாம்மா. அவனுக்கு நான் விரோதிம்மா. நான் துரோகி. அதை நான் என் வாயாலே சொல்லலே! நெல்லு மிஷின் கஜபதியோட மச்சினன் சீமாச்சுவை நீ என்னிக்காவது பார்த்தாயானா என்னைப் பத்தி விஷயத்தை யெல்லாம் அவன்கிட்டேஇருந்து தெரிஞ்சுக்கோ.''

அப்பா பேசி முடித்த சுருக்கிலேயே மூச்சை முடித்துக் கொண்டார். காரியம் எல்லாம் முடிந்த பிறகு ஒரு நாள் ஆற்றங்கரைப் படித்துறையில் சீமாச்சுவைச் சந்தித்து விஷயம் தெரிந்து கொண்டாள் வேதா.


சற்றேறக் குறைய அப்பாவின் வயதை யொத்த சீமாச்சு மாமாவை அவளுக்கு எப்போதுமே பிடிக்கும். அவர் பொய் சொல்ல மாட்டார் என்ற நம்பிக்கை அவளுக்கு உண்டு.

''சின்ன வயசிலிருந்தே நான், உங்கப்பா, குருக்கள் வீட்டு வாசுதேவன் மூணு பேரும் நெருங்கிய நண்பர்கள். மூணு பேரும் சேர்ந்து தான் இருப்போம். வளர்ந்ததும் எனக்கு வெளி உலக நடப்பெல்லாம் பிடிக்காததாலே பெருமாள் சேவைக்கு வந்துவிட்டேன். ஜெயராமும், வாசுதேவும் சேர்ந்து பக்கத்து டவுனில் மளிகைக் கடை வைத்தார்கள். அப்பவே அவர்கள் இரண்டு பேர் வீட்டிலேயும் தட்டிக் கேட்க ஆள் கிடையாது.

''மளிகைக் கடை கொஞ்ச நாள் நன்றாகத் தான் நடந்தது. ஜெயராம் வாசுவுக்குப் பொய்க் கணக்குக் காட்ட ஆரம்பிச்சான். வாசுவுக்கு ரொம்ப மனசு ஒடிஞ்சு போயிடுத்து. எங்கிட்ட வந்து வருத்தப்பட்டான். திடீர்னு ஒரு நாள் வாசுவோட அம்மாவுக்கு உடம்பு சரியில்லாமல் போய்விட்டது. செலவுக்குப் பணம் வேணும்னு ஜெயராம் கிட்டே கேட்டான் வாசு.

''ஜெயராம் ரெண்டாயிரம் ரூபா வாசுகிட்டே கொடுத்தான். ஆனால் அந்தப் பணம் வாசுவோட அம்மா காரியத்துக்குத்தான் பயன்பட்டது. காரியமெல்லாம் முடிஞ்சப்புறம் வாசு ஜெயராமனோட வீட்டுக்கு வந்தான். கடைக்கு மறு நாளில் இருந்து தானும் வந்துவிடுவதாக வாசு சொன்ன பொழுது உங்கப்பா ஒரு பெரிய வெடிகுண்டைத் தூக்கிப் போட்டான்.

'வாசு! உன்னோட கணக்கெல்லாம் தீர்ந்தாச்சு. கடையிலே உனக்கென்ன இனிமே வேலை'ன்னு கேட்டான். வாசு அப்படியே துடிச்சுப் போயிட்டான். இருந்த ஒரே வீட்டைப் பன்னிரண்டாயிரத்துக்கு அடகு வெச்சுக் கடை வைக்க அவன் கொடுத்த போது அதை ரெண்டு கையாலேயும் வாங்கிண்ட உங்கப்பா இப்படி ரெண்டாயிரத்தோடு கணக்கை முடிச்சுடுவான்னு வாசு நினைக்கவே இல்லை. கடை நஷ்டத்தில் இருப்பதால் வாசு பங்கு அவ்வளவுதான்னு சொல்



விட்டான் ஜெபராமன். போதாக் குறைக்கு வாசுவோட வீடு ஏலத்தில் வந்தபோது அதை வாசுவின் கண் முன்னுலேயே தன தாக்கிக் கொண்டான் ஜெயராமன்.

''வாசுவுக்கு நன்ருகப் புரிந்தது, ஜெய ராம் தனக்குத் துரோகம் செய்யருன்னு! மொத்தத்தில் உங்கப்பா வாசுவை ஏமாத் திச் சம்பா திச்சதெல்லாம் கண்டபடி தீர்த் துக் கட்டினுன். அவனுக்குத்துணை அவனுடை அக்கா வீட்டுக்காரர்தான். அவரும் அளவுக்கு மீறிய குடியிலே குடல் வெந்து போனுர். அப்புறம்தான் உங்கப்பன் ஓய்ந்தான்! அதுக் குள்ள அவன் சேர்த்த பணமும் அழிஞ்சு போயிட்டதும் எல்லாம் விதி வசம்! சரி, உங்கப்பா சொன்ன பிரகாரமே நீ வாசு தேவன் கிட்டப் போ. இறைவன் விட்ட வழி!'' என்று கோயிலுக்குள் போனுர் சீமாச்சு.

''வேதா!''—பலமான குரல் வேதாவின் சிந்தனையைக் கலைத்தது.

''என்ன சார்... மாமா....'' தடுமாறி ஞள் வேதா.

''மாமான்னே கூப்பிடேம்மா...'' வாசு தேவன் கனிவாகச் சிரித்தார்.

தயக்கத்துடன் அவரெதிரே கீழே மண்டி யிட்டு உட்கார்ந்தாள் வேதா.

''வாஸ்தவமாகவே அவனுலே நான் பட்ட கஷ்டங்கள் எவ்வளவோ. அவன் எனக்குப் பண்ணின சினேகத் துரோகத்துக்கு மன் னிப்பே கிடையாது. ஆனுல் அவன் பண் ணின பாவத்துக்கு நீ என்ன பண்ணுவே? அவன் எனக்கு என்னதான் துரோ கம் பண்ணி இருந்தாலும் என் மேலே நம் பிக்கை வெச்சு உன்னை அனுப்பிச்சிருக் கானே... அதுக்கோசரமாவது உன்னை நான் கண் கலங்காமே என் குடும்பத்து மனுஷி மாதிரி பார்த்துக்கணும்'' — சிரித்தார் வாசு தேவன். ஒரு கணம் அப்பாவின் அல்ப மான துரோகத்தையும் சின்ன புத்தியையும் நினைத்துத் தனக்குள் குன்றிப் போனுள் வேதா.

ஈஸிச்சேரை விட்டு எழுந்த வாசுதேவன் ''வேதா, வா அம்மா உனக்கு என் வீட்டில் உள்ள இன்னெரு ஜீவனை அறிமுகம் செய் விக்கவேணும்'' என்று புன்முறுவலுடன் சொன்னவாறே கூடத்தில் வலப்புறத்தில் சற்றே காற்ருேட்டமான ஒரு பெரிய அறையி னுள் நுழைந்தார்.

அவர் பின்னுலேயே வந்த வேதா அறை வாசற்படியில் தயங்கி நின்ருள். ஜன்னல் அருகில் சக்கர நாற்காலியில் வாசுதேவனைப் போன்றே கம்பீரத்துடன் இளநகையுடன் அவளையே பார்த்துக் கொண்டிருக்கும் இவர் யார்?

''வேதா! இவன்தான் என் பிள்ளை மதன கோபால்'' என்றுஅறிமுகப்படுத்திச் சென்ருர் வாசு.

வேதா அவனுடன் பேசிய அந்த அரை மணி நேரத்தில் அவன் மீது பரிதாபமும் மதிப்பும் மரியாதையும் இவைகளை விட ஏதோ ஒரு பாச உணர்வும் அவள் மனத்தில் வலம் வந்தது.

சன்னல் பக்கத்தில் நின்றபடி குளிர்ச்சி யான காற்றை அனுபவித்துக் கொண் டிருந்தாள் வேதா. கீழே பாயில் படுத்துக் கொண்டிருந்த அத்தை மெதுவாக எழுந்து அருகில் வந்தாள்.

''டீ, வேதா, சொல்றேன்னு நீ கோவிச் சுண்டாலும் சரி, நீ பண்றது துளிக்கூட சரிப்படலே. இங்க வந்த இந்தப் பதினைந்து இருபது நாளிலே முக்கால்வாசி நீ அந்த நொண்டிப் பயலோட பேசிண்டே இருக்கே. அப்படி என்னடி ஒரு வயசுப் பொண்ணுக்கு அவன் கூட இளிச்சு இளிச்சுப் பேச வேண்டி இருக்கு? எப்படியாவது அந்த நொண்டிப் பையனை—உனக்குக் கல்யாணம் பண்ணி வெச்சிடணும். இதுதான் அவா நோக்கம்.''

மேலே பேசப் போன அத்தையைக் கையமர்த்தித் தடுத்தாள் வேதா. ''அத்தை! அப்படி வாசுதேவ மாமா முடிவு எடுத் தாலும் அதிலே ஒண்ணும் தப்பு இருக்கிறதா எனக்குத் தோணலே.''

''எப்படியோ போடி அம்மா. நொண்டி முடத்தைக் கட்டிக்கிறதுக்குன்னே உன்னை மாதிரி நாலு பேர் கைகட்டி நிக்கிறதுன்னு இருக்கச்சே வாசுதேவன் மாதிரி கிடைச் சது சந்தர்ப்பம்னு காத்திருக்கிறவாளும் நாலு பேர் இருக்கத்தானே செய்வா?'' முணு முணுத்துக் கொண்டபடியே அத்தை போய்ப் படுத்துக் கொண்டாள்.

அன்று வெள்ளிக் கிழமை. எண்ணெய் தேய்த்துக் குளித்துவிட்டுப் புறக்கடைப்

நீ உதவினுய் - அவன் உனக்குதவினுன் இது-நியாயம்;
உன்னிடமிருந்து எதையோ எதிர்நோக்கி அவன் உனக்குதவினுல்
அது தன்னலம்;
நீ அவனுக்குப் பணம் கொடுக்கிருய்; அவன் உனக்குதவுகிருன் -
இது வியாபாரம்;
நீ அவனுக்குத் தீங்கிழைத்திருந்தாலும் அவன் உனக்குதவுகிருன் -
அது மன்னிப்பு;
நீ ஒரு ஏழை - அவன் உனக்குதவுகிருன்-இதுதான் நட்பு!
- எம். கே. நாராயணன்



பக்கம் கன்றுக்குட்டியைத் தடவியபடியே ஏதோ யோசனையில் இருந்தாள் வேதா.

''வேதா... வேதா... உன்னை மாமா கூப்பிடுறார் பார்... இந்தா இந்தக் காப்பியைக் கொண்டு போய் அப்படியே மாமா கிட்டக் கொடுத்துடு''என்று சொல்லியபடியே காப்பி டபராவைக் கையில் கொடுத்தாள் ஜெகதா மாமி.

காப்பியைக் கையில் வாங்கிக்கொண்ட வாசுதேவன் ''வா அம்மா வேதா உங்கிட்ட முக்கியமான விஷயம் பேசணும். இப்படி உட்கார்.'' என்று சொன்னதும் ரேழியில் தன்பாட்டுக்கு உட்கார்ந்து மோட்டு வளையைப் பார்த்துக் கொண்டிருந்த அத்தை கூடத்துத் தூணோரமாய்க் காதைத் தீட்டிய படியே வந்து நின்றாள்.

''அம்மா வேதா, நீ இன்னும் சின்னப் பொண்ணு இல்லே. உனக்கும் வயசாயிண்டே போறது. உனக்கும் காலா காலத்தில் செய்து முடிக்க வேண்டிய பெரிய கடமை ஒண்ணைச் சீக்கிரமே செஞ்சிடலாம்னு இருக்கேன். நீ இஷ்டப்பட்டால்தான் எதையும் செய்வேன்!'' என்றபடியே பேச்சை நிறுத்திவிட்டு அவளைக் கூர்ந்து பார்த்தார் வாசுதேவன்.

'கடன்காரன்... கிடுக்கிப் பிடி போட்டுட்டானே!' என்று அத்தை மனத்துக்குள் புலம்பினாள்.


''வேதா! இந்த வயசிலே என்னாலே ஓடி ஆடித் தேட முடியாது! அதனாலேதான் பகவானும் பார்த்து ஒரு நல்ல மாப்பிள்ளையை அனுப்பி இருக்கான். நீ சரின்னு சொன்னியானால் ஒடனே கோவில்ல வெச்சு எளிமையா நல்லபடியா முடிச்சிடலாம். மாப்பிள்ளை யார் தெரியுமோ?'' என்று கேலியாகக் கேட்டார் வாசுதேவன்.

“எனக்குத் தெரியாமே மஞ்சள் காமாலைக்குக் கண்ட மருந்துகளைச் சாப்பிட்டீங்களா?”

“ஆமா டாக்டர்..... என்ன ஆச்சு?”

“டெக்னிக்கலர் காமாலை ஆயிடுச்சு!”

- முத்துதங்க ஐயப்பன்



வாய்வரை வந்துவிட்ட, 'ஓரளவு யூகிச்சு வச்சிருக்கேன்' என்ற சொல்லை விழுங்கிவிட்டு மௌனமாய் அவரைப் பார்த்தாள் வேதா.

''என் ஒண்ணுவிட்ட தங்கை பையன், பக்கத்துக் கிராமத்திலே ஸ்கூல் ஹெட் மாஸ்டராய் இருக்கான். நல்ல இலட்சியவாதி. உனக்கு — உன் அடக்கமான குணத்துக்கு ஏத்த ஜோடி. ஏதோ ஆண்டவன் கிருபையாலே கொஞ்சம் சொத்தும் இருக்கு. பையன் தங்கமானவன். ஒரு கெட்ட பழக்கம் இல்லே. அதோடு நான் சொன்னால் எதையும் கேட்பான். நான்தான் அவனை வளர்த்து ஆளாக்கினேன். என்னம்மா சொல்றே?''

''மாமா!'' என்று தழுதழுத்த குரலில் அவரை ஏறிட்டுப் பார்த்தாள் வேதா.

''அம்மா வேதா! நான் ஒன்னைவிட வயசில் பெரியவன் அம்மா. நீ இங்க வந்து உட்காரும்போதே உன் மனசில் என்ன நினைச்சேன்னு எனக்குத் தெரியும். ஒன்னையும் உன் அத்தையையும் இந்த வீட்டிலே நான் சேர்த்துண்டதுக்குப் பிரதியா எங்க மதனகோபாலை உனக்குக் கல்யாணம் பண்ணி வைச்சுடுவேன்னுதானேம்மா நீ நினைச்சே?''

''மாமா... வந்து....'' என்று தயக்கத்துடன் ஆரம்பித்தவளைத் தடுத்து, ''அது எப்படி அம்மா! தங்க ஊசி அப்படின்னு அதை எடுத்துக் குத்திக்க முடியுமோ? நீ என்னதான் என் சிநேகிதன் பொண் ஆனாலும்என் வீட்டுக்கு வந்திட்டப்புறம்எனக்கும் பொண் மாதிரிதானே! என் பெண்ணைக் கொண்டு போய்க் கால் ஊனமான ஒருத்தனுக்குக் குடுப்பேனா? நீயும் என் தங்கை பையன் வேணுகோபாலனை ஒரு தரம் பார். அப்புறம் பிடிச்சால் சொல். முடிச்சிடலாம். அவனுக்குக் கண்டிப்பா ஒன்னைப் பிடிக்கும். ஒன் மாதிரி தங்கக் கட்டி கிடைக்க அவன் கொடுத்து வைச்சிருக்கணுமே!'' என்றார்.

லேசான வெட்கத்தில் கன்னம் சிவக்க மௌனமாய்த் தோட்டத்துப் பக்கம் போய் நின்றாள் வேதா. 'ஓ! — இந்த வீட்டில் உள்ள மனிதர்களுக்கு எத்தனை நல்ல இதயம்! இவர்கள் மனக் கதவுகளுக்குப் பூட்டே இல்லை. திறந்த அந்த மனங்களில் எத்தனை நல்ல எண்ணங்கள்!'

'கிரீச்' என்ற சக்கர நாற்காலியின் ஓசை கேட்டது. வெண் பற்கள் பளிச்சிட நகைத்தபடியே சக்கர நாற்காலியை உருட்டிக் கொண்டே வந்த மதனகோபால், ''என்ன வேதா! வேணு சாயந்திரம்தான் வருவான். அதுக்கேன் இப்பவே புடிச்சு வாசற்புறம் வந்து நிக்கறே? பூமணி கிராமம் பக்கம்தான். இங்கே எங்க வீட்டிலே ஒரு கிளி இருக்குன்னு தெரிஞ்சா உடனே பறந்து வந்தாலும் வந்திடுவான்!'' என்று கிண்டல் செய்தான்.

''போ கோபால்... இப்படிக் கிண்டல் செஞ்சா...'' என்று செல்லமாகச் சிணுங்கிய வேதாவை அணைத்தவாறே உள்ளே அழைத்துச் சென்றாள் ஜெகதா மாமி.

அத்தை ஆனந்தக் கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள்.

எல்லாவற்றுக்கும் மேலாகத் தான் வாழ்க்கையில் வருத்தப்பட்டபோதும், மற்றவர்களைச் சிரிக்க வைக்கத் தெரியும்.

அதனால்தான் ஓரிடத்தில் சண்முகசுந்தரமே அவள் கையைப் பிடித்துக் கொண்டு, 'நீ சகல கலா வல்லி அம்மா!' என்று புகழ்வான்!

''அப்படி ஒரு பாத்திரம் எனக்குக் கிடைச்சதை என் வாழ்க்கையிலே பெரிய பேருக நான் நினைக்கிறேன். என்னால என்னிக்கும் மறக்க முடியாத, நினைச்சு நினைச்சு சந்தோஷப்படற பாத்திரம் அதுதான்''

என்று நெகிழ்ந்து கூறுகிறார் இவர்.

இப்படித் திரைப்பட உலக சிரிப்பு நடிகைகளுள் முதலிடம் பெற்றிருக்கும் மனோரமாவுக்கும் ஏகக் குறைகள்.

''நான் இருபது வருஷமா இந்த பீல்டுலே இருக்கேன். ஆனா போன வருஷம்தான் வந்த ஹீரோயினுக்கு முதலிடம். டைட்டில்லே தனியாவும் போடுவாங்க. ஆனா என் பேர் இருபதுல ஒண்ணுதான் வரும். எங்களுக்குன்னு பெரிய மரியாதை என்ன இருக்கு?

இதனாலதான் பொதுவா யாருமே காமெடிக்கு வர்றதில்லே. காமடி ரோல்னா பின் வாங்கிடறாங்க.

எப்படியோ, இதை எதையும் நான் கண்டுக்கறதும் இல்லே; கண்டிக்கிறதும் இல்லே. இதே மெட்ராஸ்ல சாதாரண வாழ்க்கையை நடத்தினவ நான். இன்னைக்கு வீடும், காருமா இருக்கேன். பழசை மறக்கலே. மறக்கவும் முடியலே.

பழசை மறந்து திடீர்னு வரும் பணத்துல ஆட்டம் போட்டு அதிகாரம் பண்ற வங்கள்லாம், எவ்வளவு சீக்கிரமா வந்தாங்களோ அவ்வளவு சீக்கிரமா போயிடறாங்க. கொஞ்சம் நிதானமா யோசிக்கிறவங்க வாழ்க்கையும் இங்க நிலைக்கத்தான் செய்யுது.

இதுல எதிலேயுமே நான் கலந்துக்காம இவங்களை யெல்லாம் நான் பார்க்கறேன். அவ்வளவுதான். 'அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும்' பாங்க. இங்க மட்டும் அப்படியில்லே. அந்த நிமிஷமே கொன்னுடுவாங்க – அவங்க செல்வாக்கை!

அதனாலதான் காலத்தை அனுசரிச்சு, மனுஷங்களை நல்லவங்க, கெட்டவங்க அறிஞ்சு எல்லோருக்கும் நல்லவளா இருக்கேன். யாருக்கும் நான் துரோகம் பண்ணலே. 'ஐயோ, இவளா!'ன்னு நினைக்கிற மாதிரி நடந்துக்கலே.

அதனாலதான் இன்னைக்கும் இந்த பீல்டுலே இருக்கேன். இனியும் இருப்பேன். ஏன்னா, என்னால நடிக்காம ஒரு நாள் கூட இருக்க முடியாது! அதோடயே கலந்துட்டேன். அதனால்தான்.''

இவருடைய வாரிசு யார் தமிழ்ப் பட உலகில்? இன்னும் தெரியவில்லை. இவர் வெற்றியின் ரகசியத்தை யார் கற்றுக்கொள்ளப் போகிறார்கள்?

— மஞ்சுளா ரமேஷ்

நான் நடித்த நாடகங்களில் 'விடை கொடுத்தாயே' நாடகம் என்னால் மறக்க முடியாதது. பேரறிஞர் அண்ணா அவர்கள் நேரம் கிடைக்கும் போதெல்லாம் அந்த நாடகத்தை வந்து பார்த்துக் கொண்டிருந்தார்.

ஒரு நாள் என்னால் அந்த நாடகத்தில் நடிக்க முடியாமல் போய் விட்டது. அன்றைக்கு அண்ணா வந்திருந்தாராம். நாடகம் முடிந்தவுடன் சொர்ணத்தைக் கூப்பிட்டிருக்கிறார் —

''கதையால நாடகம் நல்லா இருக்கும்; வசனத்தாலே நாடகம் நல்லா இருக்கும். ஆனா ஒரு நடிகை இருந்ததாலே இவ்வளவு நல்லா இருந்ததும், இன்னிக்கு சோபிக்காம போனதையும் இப்பத்தான் பார்க்கிறேன். அந்த மனோரமாங்கிற பொண்ணு இன்னிக்கு நடிக்கலே போலிருக்கே. இனிமே அது நடிக்கலேன்னா நாடகத்தையே நடத்தாதீங்க'' என்றாராம்!

எப்பேர்ப்பட்ட பாராட்டுரை! நான் நடிகையா வாழ்க்கையைத் தொடருவதற்கு இது போன்ற பாராட்டுரைகள் தான் உரமா இருக்கு. - மனோரமா



சதாசிவப் பிரம்மேந்திரர்

ஸ்ரீ வேணுகோபாலன்

('மானஸ ஸஞ்சரரே' பாடியவர்)

அந்த இளைஞன் வீட்டுக்குத் திரும்பும் போது வெகுவாகக் களைத்திருந்தான். பசி வயிற்றைக் கிள்ளியது. உடனேச் சாப்பிட வேண்டும் என்று ஆவலோடு வந்தான்.

வீட்டுப் படிகளில் ஏறியதும் உள்ளே பல மனிதர்கள் வந்திருப்பது தெரிந்தது. அவனது அம்மா எதிரே வந்தாள்.

''அம்மா! பசிக்கிறது, சாதம் போடு!'' என்றான்.

''இரு!'' என்றாள் அம்மா. ''உன் ஆத்துக்காரி ருதுவாகியிருக்கிறாள். அதைச் சொல்ல அவாத்து மனுஷாள் வந்திருக்கா. உள்ளே விருந்து தயார் ஆயிண்டிருக்கு!''

நின்றான்.

வெறும் கால் மட்டும் நிற்கவில்லை. மனம் கூட நின்றது.

'சம்சாரத்தில் முதல் படி வைக்கவில்லை. இப்போதே 'இரு' என்று கட்டளை வந்து விட்டதே! இன்னும் எத்தனை முறை எத்தனை காலம் இருக்க வேண்டுமோ!' என்ற எண்ணம் அவனுக்கு உதித்தது.

பேசாமல் திரும்பினான். படிகளை விட்டுக் கீழே இறங்கினான். ''பிச்சு! பிச்சு!'' என்று அம்மா கூப்பிடுவதையும் பொருட்படுத்தாது போய்க்கொண்டே இருந்தான்.

பிச்சுவின் உண்மைப் பெயர் சிவராம-கிருஷ்ணன். அவனுடைய தந்தை பெயர் மோக்ஷம் சோமசுந்தர அவதானி. தாயார் பார்வதி அம்மாள்.

தஞ்சைஅரசர் ஷாஹாஜி கொடுத்த மான்யத்தில் தந்தை ஜீவித்து வந்தார். வெகு காலம் அவருக்குக் குழந்தை பிறக்கவில்லை. பல நோன்பு விரதங்களுக்குப் பிறகு கடைசியாக சிவராம கிருஷ்ணன் பிறந்தான். காலம் கடந்து பிறக்கும் குழந்தைக்கு ஒருவிதப் பிரார்த்தனையாக பிச்சு, குப்பு என்று அந்த நாளில் பெயர் இடுவது உண்டு. சிவராமகிருஷ்ணனை பிச்சு குப்பு ஐயர் என்று அந்த நாளில் அழைத்தார்கள்.

பையன் உரிய வயதில் பூணூல் போட்டுக் கொண்டு, கல்வி கற்பதில் இறங்கினான்.

குருகுலத்தில் வசித்தபோது பிற்காலத்தில் பிரசித்தி பெற்ற பெரியவர்கள் அவனுக்கு வகுப்புத் தோழர்களாக இருந்தார்கள்.

மகாபாஷ்யம் கோபாலகிருஷ்ண சாஸ்திரி ராமபத்ர தீட்சிதர், ஸ்ரீதர வெங்கடேச கவி (ஸ்ரீதர அய்யர்வாள்) அவர்களில் சிலர்.

குருகுலத்தில் கற்கும்போது சிவராம கிருஷ்ணனின் மனம் தத்துவ விசாரத்தில் அதிகம் ஈடுபட்டது. கடவுள் மீது பக்தியும் சம்சார வாழ்க்கையில் வெறுப்பும் தோன்ற ஆரம்பித்தன. எல்லா சாஸ்திரங்களையும் முறையாகக் கற்ற பின் துறவறத்தில் அதிகமாக நாட்டம் விழுந்தது.


அந்நாளின் முறைப்படி இளம் வயதிலேயே அவனுக்குத் திருமணம் செய்து விட்டார்கள்.

மனைவி பெரியவள் ஆகாததால் முறையான இல்லற வாழ்க்கை ஏற்படவில்லை.

இப்போது அவள் ருதுவாகிவிட்டாள். என்று கேள்விப்பட்டது! இனி சம்சாரத்தில் இறங்கி ஆயுள் வரை மூழ்க வேண்டியது தான் என்று தெரிந்துவிட்டது.

அவன் மனம் அதற்கு ஒப்பவில்லை.


துறவு பூண வேண்டும் என்று நினைத்



தான். அந்தக் சணமே வீட்டை விட்டு அகன்று விட்டான்.

அன்றிலிருந்து அலைந்து திரிந்த அந்த இளைஞனுக்கு பரமசிவேந்திரர் என்ற குரு கிடைத்தார். மகா ஞானி. அனுபூதி பெற்றவர். அவர் அந்த இளைஞனைத் தமது சீடனாக ஏற்றுக் கொண்டு அவனை ஆத்ம வித்தைகளில் திருப்பி விட்டார்.

யோகங்களிலும், அத்வைத தத்துவங்களிலும் அவன் மனதைத் திருப்பி, சீக்கிரத்தில் அவனுக்கு சித்திகள் ஏற்படும்படி செய்தார்.



பரிபூரண ஞானியாகவும் யோகியாகவும் பக்தராகவும் விளங்கிய அந்த இளைய துறவியை எல்லோரும் சதாசிவ பிரம்மேந்திரர் என்று அழைக்க ஆரம்பித்தார்கள். அவர் பெயரும் கீர்த்தியும் எங்கும் பரவலாயிற்று.

குருவின் கட்டளைப்படி பிரம்ம சூத்திரத்துக்கும் யோக சூத்திரத்துக்கும் விருத்தியுரை எழுதினர்.

கவி இயற்றுவதிலும் புலமை பெற்றதால் தோத்திரங்களையும், சங்கீதத்தில் தேர்ச்சி இருந்ததால் கீர்த்தனைகளையும் எழுதினர்.

மானஸ ஸஞ்சரரே, ப்ரூஹி முகுந்தேதி, பஜரே கோபாலம், காயதி வனமாலீ போன்ற உள்ளம் உருக்கும் அரிய பாடல்கள் அவர் இயற்றியவை.

தத்துவ விசாரணைகளில் வெகு கூர்மையாக இருந்ததால் பிரம்மேந்திரர் தம்மிடம் வருபவரிடம் சில நுட்ப விஷயங்களில் பெரிய தர்க்கங்களைச் செய்து அவர்களை வாயடைத்து விடுவார்.

இவரது தர்க்கிக்கும்பழக்கமுறை குருவரை எட்டியது.

அவர் ஒரு நாள் பிரம்மேநதிரரை அழைத்து ''சதாசிவா! நீ எப்போ சும்மா இருக்கப் போகிருய்?'' என்று கேட்டார்.

''இப்போதிலிருந்தே!'' என்று கூறினர்.

அந்தக் கணத்திலிருந்து அவர் வாழ்க்கை முழுவதும் மௌனியாகி விட்டார்.

குருவிடம் விடைபெற்றுஅவர் காடுகளிலும் மலைகளிலும் அலைய ஆரம்பித்தார். பிரம்மம் ஒன்றிலேயே மனத்தைச் செலுத்தி உடை, உணவு எதிலும் அக்கறை கொள்ளாமல் ஜடம் போல் திரிந்தார். கடவுளோடு ஐக்ய பாவத்தில் எப்போதும் மூழ்கியிருக்க, இந்த உலக சிந்தனை அவரை அறவே விட்டு ஓடிவிட்டது.

இந்நிலையில் இவர் வாழ்க்கையில் நடந்த சித்துக்கள் பிரசித்தி பெற்றவை.

ஒருமுறை ஆற்று மணலில் அவர் உட்கார்ந்து தியானம் பண்ணிக் கொண்டிருக்க, ஆற்று வெள்ளம் இவரை அடித்துக்கொண்டு போயிற்று. வெகு தூரத்தில் இவரைக் கொண்டுபோய் மணலுக்குள் புதைத்து

விட்டது. பல மாதங்களுக்குப் பிறகு, சிலர் மண்ணைத் தோண்டும்போது இவரது தேகம் இருப்பதைப் பார்த்து அதிசயிக்க,

இவரும் எதுவும் நடவாதது போல எழுந்து நடந்து போகத் தொடங்கினர்.

திரியும் காலத்தில் அவர் ஒரு முஸ்லிம் குறுமன்னரின் அந்தப்புரத்தின் அருகில் போய் விட,

மன்னர் வெகுண்டு இவர் முதுகில் கசையடி கொடுத்தார்.

இரத்தம் ஆறுகப் பெருகியும், இவர் எதையும் பொருட்படுத்தாது போவதைப் பார்த்த மன்னர்,

இவரை ஒரு மகான் என்று நினைத்து எழுந்துபோய் அவர் முன்னால் வணங்கி நின்றான்.


பிரம்மேந்திரர் தமது சைகையால் அவருக்கு, ''முதலில் நினைத்தபடி எதையும் செய்யாதே, அதன் பிறகு நீ என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம்'' என்று உணர்த்தினர்.



யோசனை

சிறு குழந்தைகள் சில சமயம் பாலைக் கக்கிவிடும். இப்படி அடிக்கடி நேர்ந்தால் மூன்றே மூன்று சொட்டு இன்சிச் சாறுடன் தேனைக் கலந்து கொடுங்கள். கக்குவது நின்றுவிடும்.

கடுமையான சீத பேதிக்கு ரோஜாவின் மொட்டுக்கள் நல்ல மருந்தாகும். அதைத் துவையலாகச் செய்து சாப்பிட்டால் 'சட்'டென்று நிற்கும். —பப்பு



ஒரு சமயம் இரவில் ஒரு களத்துத் தானியக் குவிப்பு அருகில் இவர் படுத்துக் கிடக்க,

காவல்காரன் இவர் ஒரு திருடன் என்று நினைத்து அடிக்கக் கையை ஓங்கினன்.

தூக்கிய கை அப்படியே நின்று விட்டது. பிரம்மேந்திரர் மறு நாள் காலையில் எழுந்து போகும்வரை கை பழைய நிலையை அடையவில்லை.

ஒரு சமயம் சில குழந்தைகள் இவரைச் சூழ்ந்துகொண்டு சீண்ட ஆரம்பித்தன. கேலிக்காக ஒரு பையன், ''சுவாமி! மதுரையில் இப்போது திருவிழா நடக்கிறது. நாங்கள் ரிஷப வாகன ஊர்வலத்தைப் பார்க்கணும்'' என்று கூறினன்.

பிரம்மேந்திரர் அவர்களது கண்களை மூடி வைக்க,

அடுத்த கணமே அவர்கள் மதுரையை அடைந்து அந்த ஊர்வலத்தைப் பார்ப்பது போல் அனுபவம் ஏற்பட்டது.

பின்னர் கண் திறந்த பிள்ளைகள் அதிசயப் பட்டு, தங்கள் வீடுகளுக்குச் சென்று தாங்கள் மதுரை போய் வந்த அனுபவத்தை அற்புதத்தோடு விவரித்தார்கள்.

எங்கும் அலைந்து திரிந்து போகிற இடங்களில் எல்லாம் அருளையும் ஆசியையும் வழங்கிக்கொண்டு கடைசியில் அவர் நேரூரை அடைந்தபோது தமது தேகத்துக்கு முடிவு நெருங்குகிறது என்பதை அறிந்தார்.

அவரை நாடி வந்த ஜனங்களிடம் ஒரு வில்வ மரத்தடியைக் காண்பித்து, தமது சமாதி கட்டுவதற்காக ஒருகுழியைப் பறிக்கச் சொன்னர்.

குறிப்பிட்ட நாளில் ஆயிரக் கணக்கான மக்கள் சூழ நின்று பார்த்திருக்க,

பிரம்மேந்திரர் அந்தக் குழிக்குள் இறங்கி அமர்ந்து கொண்டார்.

தாம் சமாதி ஆனபிறகு, காசியிலிருந்து ஒரு அந்தணர் ஒரு லிங்கத்தை தமது சமாதியில் கொண்டு வைத்து பூஜை பண்ணுவார். என்று சூழ இருந்தவர்களிடம் குறிப்பால் உணர்த்தினர்.

பிறகு சமாதியை மூடும்படி சைகை காட்டினர்.

சமாதி மூடப்பட்டது.

பிரம்மேந்திரர் இவ்விதம் ஜீவன் முக்தி அடைந்த தினம் வைசாக சுத்த தசமி (கி.பி. 1750).

இன்று அந்த ஜீவன் முக்தி சமாதி ஒரு புனித யாத்திரை ஸ்தலமாக இருந்து வருகிறது.

தாயுமானவர் இவரைச் சந்தித்தார் என்றும், புதுக்கோட்டை அரசர் விஜயரகுநாத தொண்டைமான் (1730–1769) இவரை அணுகி அருள் பெற்றார் என்றும் செய்திகள் உண்டு.

பிரம்மேந்திரர் எழுதிய சில முக்கிய நூல்கள் 'யோக சூத்திர விருத்தி', 'ப்ரம்ம சூத்ர விருத்தி', 'பிரம்ம தத்வ பிரகாசிகை', 'சித்தாந்த கல்ப வல்லி'.


''எங்கள் வீட்டு சமையல் எப்போதும் சுவை யுடனும் நல்ல மணத்துடனும் இருக்கக் காரணம்''


V.V.D
COCONUT OIL
V.V.D
COCONUT OIL

உஷா சுப்ரமணியம்

சோலைவழிப் பாதையிலே



துக்கமும், வருத்தமும், மனசு குமுறல்களும் மதனுக்குப் புதிதல்ல. ஆனாலும் ஒவ்வொரு முறையும் சுமதியின் கடிதங்களைப் படிக்கும்போதும் ஏற்படும் வேதனை தாங்கக் கூடியதாக இல்லை.

சுமதியை சதீஷுக்கு மணமுடித்தவுடன் சங்கிலியாகத் தொடர்ந்த தங்கள் கஷ்டங்கள் முடிந்துவிட்டன என்று அவன் நம்பியிருக்கப் போய்.... இப்படி மறுபடியும் மறுபடியும் தொடர்வது... கடவுளே இதுதான் விதி என்பதா?

நடு இருட்டில், பயங்கர ஓலத்தில், தடம் புரண்டு விழுந்த ரயில் பெட்டியில் பெற்றோர் இருவரும் நசுக்குண்டு துடித்துச் செத்தபோது மூன்று வயதுத் தங்கையைக் கையில் பற்றியவாறு செயலறியாது அழுதவாறு வேடிக்கை பார்த்த காட்சி இன்னும் மனத்தில் அழியாமல், இரவுக் கனவாக அவ்வப்போது பயமுறுத்துகிறது. எட்டு வயதுப் பேரனையும், மூன்று வயதுப் பேத்தியையும் அன்புடன் அரவணைத்த பாட்டியும், தாத்தாவும் காயம் ஆறு முன்னரே ஓராண்டுக்குள் அடுத்தடுத்து மறைந்ததும் எப்படித்தான் நடந்ததோ?

ரயில்வே தந்த தொகைக்கு ஆசைப்பட்டுக் கூட அனாதைக் குழந்தைகளை யாரும் வளர்க்க முன்வராத நிலையில், மாமா வீட்டில், பலவந்தமாகத் திணிக்கப்பட்டு, வாழ்வா அது? தெரு நாயை விட அதிகமாகக் கல்லடி பட்டு காத்துக்கொள்ளக்கூட வழியின்றிக் கன்றிச் சிவந்து... மாமா ஊர் வாய்க்குப் பயந்து கொண்டு செய்த ஒரே காரியம் அவர்களைப் பள்ளிக்கு அனுப்பியதுதான்.

பள்ளிக்குச் செல்லு முன் குடம் குடமாகத் தண்ணீர் இழுத்து, மாமா, மாமி, அவர்கள் குழந்தைகள் துணி அனைத்தும் அலசி உலர்த்தி சமைத்து, தினம் அரைப் படி மாவாட்டி, சாயம் போன பாவாடையும் சட்டையுமாக இருக்கும் தங்கையிடம் மதனால் இரக்கத்தை வெளிப்படையாகக் காட்டக்கூட முடியாது. தனக்குக் கடை கண்ணிக்குப் போகும் வேலை இல்லாதபோது தங்கைக்குத் துணி பிழிந்து உலர்த்துவான். மாவாட்டித்தருவான். பாடம் எழுதித் தருவான். ''சுமதிக் குட்டி, கொஞ்ச நாள்தான் பொறுத்துக்கோ.. நான் வேலைக் குப் போயி... அப்புறம் எல்லாமே மாறிடும் பார்...''

அவன் சொன்ன வாக்கைக் காப்பாற்றி னன். மாமா அவனைக் கல்லூரிக்கு அனுப்ப மறுத்தவுடன், ஹோட்டலில் எடுபிடி ஆளா வேலை செய்தவாறே மாலைக் கல்லூரியில் பி. காம் படித்து சுமதியையும், கல்லூரிக்கு அனுப்பி, ஹோட்டல் வேலையிலிருந்து கடைக் கணக்கனாக உயர்ந்து, மருந்துக் கடை 'ரெப்ர ஸன்டேட்டிவ்' ஆகி, படிப் படியாக இன்று முப்பது வயதில் ஒரு நல்ல மருந்துக் கம் பெனியில் ஸேல்ஸ் ஆபீஸராகப் பத ஏற்றம் பெற்றுள்ளான்.

மேடிகல் ரெப்ரஸன்டேட்டிவ் ஆக நிரந்த வேலை கிடைத்தவுடன் எறும்பாகப் பண சேர்த்துத் தங்கைக்குக் கல்யாணம் செய் வேண்டும் என்ற எண்ணத்தை சிரமப்பட மல் சுலபமாக்கிவிட்டது சக ஊழிய சதீஷின் நட்பு.

அழகு, அறிவு, நிதானம், கண்ணியப அடக்கம்...ஆயிரத்தில் ஒருவனுக்குக்கூட இ தனை பண்புகள் சேர்ந்து அமைவது கடின

''உன்னிடமிருந்து நான் கத்துக் கொள் வேண்டியது நிறைய இருக்கு சதீஷ்'' என்

மதன் உருகும்போது சதீஷ் சிரிப்பான். ''வாழ்வில் உனக்கு இருக்கிறஅனுபவங்களுக்கு நீயே நூறு பேருக்குப் பாடம் சொல்லித் தரலாம்'' என்று...

நாள் கணக்கில் வைத்தால் புளிப்பேறிப் பின் கசப்பாகும் காடியைப் போலில்லாமல் நட்பு நயமேறும் திராட்சை ரசமாக, பழக்கத்தில் சதீஷின் பாங்குகள் இன்னும் அழகோடு, மெருகோடு பளிச்சிட—

வியந்து நின்றுனே தவிர, சதீஷிடம் தனக்கு உறவு கொண்டாடத் தகுதி இருக்கென்று மதன் நினைக்கக்கூட இல்லை.

ஒரு நாள்—

சாதாரணமாகத்தான் கேட்டான் சதீஷ். ''ஸோ, மாமா வீட்டிலிருந்து பிரிந்து தனிக் குடித்தனம் போட்டாகி விட்டது. 'ஃப்யூச்சர் ப்ளான்' என்ன?''

''எதிர்காலத் திட்டத்தில் முதலிடம் சுமதி கலியாணம்தான். எவ்வளவுதான் தேவைகளைக் குறைத்துக் கொண்டு சேர்த்தாலும் பத்தாயிரம் ரூபாய் எந்தக் காலத்தில் சேருவது? கடன் வாங்கிக் கல்யாணத்தை முடித்து விட வேண்டியதுதான். அவளும் பி.ஏ. முடித்துவிட்டாள்.''

''இஃப் யூ டோன்ட் மைன்ட், சுமதியை நான் கல்யாணம் செஞ்சுக்கறேன் மதன்.''

திடுதிப்பென்று மிகச் சாதாரணமாய் இதைக் கூறியதும் மதன் திடுக்கிட்டான்.

''விளையாடறியா சதீஷ்? பெரிய குடும்பத்து நீ எங்கே, பிச்சாண்டிகளான நாங்கள் எங்கே? உங்க அப்பா, அம்மா கேட்டாலே சிரிக்க மாட்டாங்களா? நீதான் சுமதியைப் பார்த்திருக்கியே... உன் அழகுக்கு முன்னால் அவ எடுபடுவாளா?''

மதன் படபடவெனப் பொரிந்து தள்ள, நிதானமாகக் கேட்டுக் கொண்டிருந்தான், சதீஷ். ''மதன், நம்ம நட்பை நான் ரொம்பவும் மதிக்கிறேன். அது தொடரணும்னு விரும்பறேன். வாழ்க்கையில் பணம் வந்து போகிற விவகாரம். நிரந்தரமானதல்ல. சுமதி அழகாக இல்லை என்று உனக்கு யார் சொன்னது? அழகு பார்க்கிறவர் பார்வையைப் பொருத்தது. குணமில்லாத, உலக அழகியை மணந்து கொண்டாலும் சேர்ந்து வாழும்போது, குணத்தின் குறையில் முகம் கூடக் குரூரமாகத்தான் தோன்றத் துவங்கும். சுமதியின் குணம், உன் பண்பு, உங்கள் அனுபவங்கள் முன் ஏதாவது சின்னக் குறை இருந்தால்கூட நிறைவாகத்தான் தெரியும். உனக்கும் சுமதிக்கும் சம்மதமென்றால் நான் அப்பா, அம்மாவுடன் பேசுகிறேன்.''

மதனே, சுமதியோ எதிர்பாராத வகையில் ஒரே மாதத்தில் 'சிம்பிளாக'த் திருமணம் முடிந்தது. சென்னையில் இருக்கும்வரை மதன் பார்த்துப் பார்த்துப் பூரித்த குடும்பம் அது. ஒவ்வொரு நிமிடமும் 'என் கனவு நனவாகி,



சுமதிக்கு அருமையான வாழ்வு அமைத்துக் கொடுத்து விட்டேன்' என மதனை இறுமாப்புறச் செய்த ஆனந்த வாழ்க்கையாகச் சுமதியின் வாழ்க்கை அமைந்தது.

பம்பாய்க்கு மாற்றலாகி மதன் கிளம்பிய போது, வருத்தத்தைக்கூட உள்ளடக்கிக் கொண்டு, ''எனக்கு அருமையான கணவனைத் தேர்ந்தெடுத்து விட்டாய். உன் கடமை முடிந்து விட்டது. இனி என் பொறுப்புத் துவங்கி விட்டது'' என்று சிரித்து வழியனுப்பிய சுமதி—

''இந்த மாற்றம் வெறும் 'சேஞ்ச்' மட்டுமில்லை மதன்... நீ வேகமாக ஏறத் துவங்கி விட்ட வாழ்க்கை ஏணியில் முதல் படியும் கூட... விஷ் யூ ஆல் த பெஸ்ட்'' — சதீஷின் அந்த நெருக்கமான குரலில் அழுத்தமான கைகுலுக்கலில் இருந்த அன்பு — தோழமை— ''டோன்ட் ஒர்ரி அபவுட் சுமதி... நான் அவளைக் கவனித்துக் கொள்கிறேன்'' என்ற வாக்கு—

இரண்டுக்கும் நடுவே முரண்பாடுகள் தோன்ற ஆரம்பித்தது எப்போது?

மதன் பம்பாய் சென்ற ஒரு மாதத்துக்குள்... யெஸ்... முதலில் இலைமறைவு காயாக — ''அண்ணா... உன்னிடம் சொல்லாமல் இருக்கவும் முடியவில்லை. ஆப்டர் ஆல்... உலகத்தில் அன்றிலிருந்து இன்று வரை எனக்கிருக்கும் ஒரே உறவு நீதானே..''

முதலில் சில கடிதங்களை மதன் ''இக்னோர்' செய்தான். சதீஷுக்குக் கடிதம் எழுதும்போது வழக்கம் போலவே சுமதிக்கும் ஒன்று எழுதி வைத்தான். புது மணத் தம்பதியர் மாறுபட்ட சூழ்நிலையிலிருந்து வந்த இருவர் அட்ஜஸ்ட் செய்துகொள்ளும் போது தோன்றும் சின்னச் சிக்கல்கள்... சுமதி பெரிது படுத்துகிறாள் என்று திடமாக நம்பினான். சதீஷை, அவன் குணத்தைத் தெரியாதா?

கடந்த ஆறு மாதங்களாக, சுமதியின் கடிதங்கள் ஓலங்களாக, அலறல்களாகவே மாறிவிட்டன. அண்ணா, பம்ப் அடித்து அடித்து என் கைகளே புண்ணாகி விட்டன. ஆயிரம் ரூபாய் சம்பாதிப்பவர் பத்து ரூபாய் வேலைக்காரி கூடப் போட மறுக்கிறார்.'

'நான் எது செய்தாலும் குறைதான். என்னை வேலைக்காரியிலும் கேவலமாக நடத்துகிறார். அண்ணா, என்னைக் காப்பாற்றேன். எனக்காக ஒரு சொட்டுக் கண்ணீராவது வடி. உன் அருமைத் தங்கையின் வாழ்வு இப்படி ஆகிவிட்டதே என்று வருத்தப்படு. உன்னைத் தவிர எனக்கு வேறு யார் இருக்கிறார்கள்?'

ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்து கொண்டு தங்கையின் வாழ்க்கையை எப்படிச் செப்பனிடுவது? ஒரு முறை நேரில் சென்று வரலாம் என்றாலும் ஓராண்டுக்கு லீவில்லை. ஒரே குழப்பம். சதீஷின் கடிதங்களிலோ எந்தக் குறையும் தெரியவில்லையே? சுமதியின் நிர்வாகத் திறன் பற்றி, அடக்கம் பற்றி, அறிவு பற்றி மிகவும் பெருமையாக அல்லவா எழுதுகிறான்? சுமதியிடம் வெறுப்புத் தோன்றியிருந்தால், அந்தக் கசப்பு சிறிதாவது கடிதத்தில் வெளிப்படாதா?

சுமதி கட்டாயம் பொய் சொல்லக் கூடியவள் இல்லை. அதுவும் கணவனைப் பற்றி. வாழ்வில் அடிபட்டு, அனுபவப்பட்டவளே தாள முடியாமல் அண்ணனிடம் கதறி அழும் அளவுக்கு சதீஷ் அவளைக் கொடுமைப்படுத்துகிறானா?

உறக்கம் இல்லாமல் தவித்தான் மதன். சதீஷிடம் நேரிடையாக எழுதி விளக்கம் கேட்கலாம் என்றால் 'அண்ணா, நான் உனக்கு ரகசியமாகக் கடிதம் எழுதுவது அவருக்குத் தெரிந்தால், என்னைக் கொலையே செய்து விடுவார்' என்ற சுமதியின் கெஞ்சல் தடுத்தது.

அப்பா! இந்தத் துன்பத்துக்கும் முடிவு வேண்டும் என்பது போல் மதனுக்கு விடுமுறை கிடைத்தது. தான் வருவதைப் பற்றி சுமதிக்கோ, சதீஷுக்கோ எழுதவில்லை. முன் கூட்டி வருவது தெரிந்தால், நாடகமாடக் கூடும்.

சதீஷ் லுங்கியும் பனியனுமாக வாசலில் பேப்பர் படித்தவாறு உட்கார்ந்திருந்தான்.

''மை காட் மதன்! ஒரு லெட்டர் போட மாட்டே? ஸ்டேஷனுக்கு வந்திருக்க மாட்டேன்?'' இந்த வெளிப்படையான மகிழ்ச்சியில் எந்தக் கபடமும் தெரியக் காணோம். ''பம்பாயில் போய் ஜாலியாக இருப்பாய் என்று பார்த்தால் ஆள் அரை உடம்பாகியிருக்கிறாயே?''

தோளை அணைத்தது, பெட்டியை உரிமையாகப் பற்றி எடுத்துச் சென்றது எல்லாம் பழைய சதீஷ்தான். ''காப்பி கலக்கட்டுமா? இன்னும் சுமதி எழுந்திருக்கவில்லை. ஒன் வீக்காஷீ ஈஸ் நாட் வெல்.''


''என்னது... சுமதிக்கு என்ன உடம்பு?'' பதட்டம் ரொம்ப வெளிப்படையாகத் தெரிந்தது.

''நத்திங் மச்...''

யோசனை

''மஞ்சள் முள்ளங்கியை வேகவைக்கும்போது ஓர் சிட்டிகை சர்க்கரையை சேர்த்து வேகவைக்க வேண்டும்! இப்படிச் செய்தால், மஞ்சள் முள்ளங்கி மிகுந்த வாசனையுடன் இருக்கும்!''

-பிரியவதன்



'சதீஷ், நடிக்காதே' உள் மனம் அறை கூவியது.... ''நத்திங்கா... சுமதி அப்படியெல்லாம் ஏழு மணி வரை தூங்க மாட்டாளே?''

''அட, உன் தங்கையைக் குறைகூறவில்லைப்பா... நான்தான் எழுந்திருக்கக் கூடாதுன்னு ஆர்டர் போட்டேன். ஒரே மார்னிங் ஸிக்னஸ்....''

வார்த்தையின் அர்த்தம் புரிந்து மகிழ்ச்சி உடம்பையும், மனத்தையும் லேசாக்கிய போது கூடவே ஒரு பயம். சுமதியின் துன்பத்தில் இன்னொரு கூட்டலா?

''சுமதி, சுமதி... யார் வந்திருக்கா பார்'' உள்ளே குரல் எழுப்பிவிட்டுச் சமையலறை சென்ற சதீஷ் இரண்டு டம்ளரில் காப்பி கலந்து வந்தான். அவன் செயலில் எந்த ஆர்ட்டிபிஷியாலிடியும் காணோம். இது எங்கள் வீடு, எங்கள் சமையல் அறை என்பது போன்ற ஒரு சாதாரண பகிர்வுணர்வு தான் தெரிந்தது. 'எத்தனை ஆண்களால் மனைவியைப் பரிவாக உறங்கச் சொல்லிவிட்டு இப்படிக் காப்பி போட்டுத் தான் குடித்துப் பிறருக்கும் தர முடியும்? திஸ் ஈஸ் மை ப்ரண்ட் சதீஷ்....' நிமிட நேரம் இருமாப்புற்ற மதனின் மனம், 'நோ, இது என் தங்கையை இம்சிக்கும் ராட்சதனின் கபட வேடம். இதைப் பிய்க்காமல் போகமாட்டேன்' என்று சூளுரைத்தது.


சுமதி ஓராண்டுப் பிரிவுக்குப் பின் தங்கையைப் பார்த்த இன்பத்தில் அப்படியே நெகிழ்ந்து நின்றான். உடம்பு சற்றே பூசினாற் போல், முகம் வெளிறி, இந்த வாட்டம் தாய்மையால் மட்டும்தானா ஏற்பட்டது?

''கங்க்ராட்ஸ்... ஏன் எழுதவில்லை?''

சுமதி வெட்கிச் சிவந்தாள். சதீஷ் சாவதானமாகக் காப்பி டம்ளரை எடுத்துச் சென்று அலம்பி வைத்து விட்டு வந்தான். ''சுமதி, நீ காப்பி சாப்பிடாதே... எலுமிச்சம் பழ ஜூஸ் பிழிந்து வைத்திருக்கிறேன். டேக் இட்... மதன், நான் குளிக்கக் கிளம்புகிறேன். ஆபீசுக்கு டயமாச்சு. ஈவினிங் சீக்கிரமே வந்து விடுகிறேன். வீ வில் கோ அவுட் ஃபார் டின்னர். சுமதி, நீ இப்போ அண்ணனுக்கு விருந்து சமைக்கிறேன்னு அலட்டிக் கொள்ளாதே. மதன் விருந்தாளி இல்லை. வீட்டு மெம்பர்தான்.'' சதீஷ் டவலை எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

சுமதியிடம் தனியாக விடப்பட்ட மதன் எப்படிப் பேச்சைத் துவங்குவது என்று தயங்கினான். கடைசியில் முடிவெடுத்தான், அவளாக ஆரம்பிக்கும்வரை தானாக எதுவும் கேட்பதில்லை என்று.

சுமதி சோர்ந்துசோர்ந்துபோனாலும் பழைய சுமதியாகத்தான் இருந்தாள். மதனுக்குப் பிடித்த உணவாகச் சமைத்தாள். ''உடம்பைக் கவனித்துக் கொள்ளாமல் இளைத்துத் துரும்பாகி விட்டாயே, எண்ணெய் தேய்த்துக்கொள்'' என்று எண்ணெயும் சீயக்காயையும் பலவந்தமாகக் கையில் திணித்தாள்.



யோசனை

புது அரிசியை எப்படி ஜாக்கிரதையாக வடித்தாலும் குழைந்துவிடும். சாதம் கொதிக்கும்போது ஒரு கரண்டி எண்ணெயை ஊற்றிக் கிளறினால் அரிசிப் பருக்கை ஒன்றோடு ஒன்று ஒட்டாமல் இருக்கும். குமாரி வி. ராஜேஸ்வரி

பிள்ளை தேடி வந்த பெண்களின் பெற்றோர்களைப் பற்றிப் பேசிச் சிரித்தாள். கேரம் விளையாடினாள். நாலு மணியிலிருந்தே அவசர அவசரமாக முகம் அலம்பிப் பொட்டிட்டு, புதுப் புடவை கட்டிக் கணவனுக்காக வாசலில் எட்டி எட்டிப் பார்க்கலானாள். இந்த ஆர்வமும், கண் மினு மினுப்பும், பூரிப்பும் கொடுமைப்படுத்தும் கணவனுக்கா?

மாலையில் மூவருமாகப் பீச்சுக்குச் சென்றுவிட்டு ஹோட்டலில் உணவருந்தி, ''ஒன் மினிட் மதன்....'' பீச்சுக் கும்பலில் மறைந்து திரும்பும்போது கையில் மாங்காய்த் துண்டமும், மிளகாய்ப் பொடியுமாக வரும் சதீஷ், ''ம்...ம்... நான் கேட்டேனாக்கும்'' என்று கொஞ்சிச் சிணுங்கும் சுமதி, ஹோட்டலில், ''சுமதி நீ அதிக எண்ணெய் இல்லாத 'டிஷ்'ஷாக ஆர்டர் பண்ணு. வயிற்றைப் புரட்டப் போகிறது'' என்ற கரிசனம், இருட்டில் திரும்பும்போது, மனைவி கையை இதமாகப் பற்றி அடக்கிக் கொள்ளும் கம்பீரம், இரவு நெடுநேரம் அறைக்குள் அலையாக எழும்பிய நாணச் சிரிப்பு, வளைச் சத்தம்...

மதனின் குழப்பம்தான் அதிகரித்தது.

ஒரு வாரம் வெகு வேகமாக, மகிழ்ச்சியாக ஓடியது. அண்ணன் வாங்கித் தந்த புடவையைக் கட்டிக் கொண்டு நெகிழ்ந்தாள் சுமதி.

''இந்தப் பெண்களுக்குக் கணவன் எவ்வளவு வாங்கித் தந்தாலும் பிறந்தகத்துச் சீர்தான் உசத்தி'' என்று அவளை நிமிண்டினான் சதீஷ். மதனுடன் டெலிவரி பற்றி சீரியஸ்ஸாகப் பேசினான். ''லுக், ஐ காண்ட் ஸெண்ட் ஹர்டு பாம்பே. நான் இங்கேயே வைச்சுக்கறேன். எங்கம்மா ரொம்ப ஓல்ட். உதவிக்கு வந்தும் பயனில்லை. நீ இப்போது லீவில் கொஞ்சம் 'ஸேவ்' பண்ணி அந்த டயத்தில் பதினைந்து நாள் வந்திருந்தா

யானுல் நாம் இருவருமாகச் சமாளித்துவிடலாம்...'' இவ்வளவு நியாயமாகப் பேசுபவனு அப்படி யெல்லாம்....

மறுநாள் மதன் கிளம்ப வேண்டும். சதீஷும் மதனும் ஸ்டேஷனில் 'ரிஸர்வேஷன்' கன்பர்ம் செய்து கொண்டு ஸ்கூட்டரில் திரும்பிக் கொண்டிருந்தார்கள். ''பீச்சில் கொஞ்ச நேரம் உட்காரலாமா?'' கேட்டது சதீஷ்தான்.

முதலில் பொதுவாக ஆபீஸ் விஷயங்களைப் பற்றி, மதனின் திருமணத்தைப் பற்றி எனப் பேசி, பின் தயங்கி, எப்படி எங்கே ஆரம்பிப்பது என்று புரியாமல், ''நடுவில் வேலைக்காரி இல்லை போலிருக்கே, இப்ப வந்திருக்கிறவ புதிதா?'' என்ருன்.

கூந்தல் வளர...

நெல்லி முள்ளி 100 கிராம்
வேப்பங் கொட்டை 100 கிராம்.
கடுக்காய் 100 கிராம்.
கஸ்தூரி மஞ்சள் 100 கிராம்
கரிசிலாங்கண்ணி இலைகள் 2 கப்.

செய்முறை: மேற்கூறிய பொருட்களை பொடி செய்து கொள்ளவும். கடுக்காயின் மீது இருக்கும் ஓட்டை நீக்கிவிட்டு, இடித்துப் பொடி செய்து கொள்ளவும். பிறகு கரிசிலாங்கண்ணி இலைகளை நன்ருக இடித்து சாறு பிழிந்து அந்தச் சாற்றில் தயார்செய்து வைத்திருக்கும் பொடியைக் கலந்து நன்ருய்ப் பிசைந்து நெல்லிக்காய் அளவு உருட்டி வைத்துக் கொள்ளவும். இவற்றை வெய்யிலில் உலர்த்தி பிறகு ஒரு டப்பாவில் போட்டு வைக்கவும். வாரம் இரண்டு முறை இதை உபயோகிக்கவும்.

உபயோகிக்கும் முறை: ஒரு உருண்டையைத் தட்டி நன்ருகப் பொடி செய்யவும். அதை ஒரு கிண்ணத்தில் போட்டு அத்துடன் சிறிதளவு பாலையும் தண்ணீரையும் கலந்து அடுப்பில் வைத்துக் காய்ச்ச வேண்டும். அவ்வப்பொழுது கிளறிவிட்டு பொங்கி வந்ததும் இறக்கி, சூடு ஆறினதும் மயிர்க் கால்களில் படும்படி நன்ருகத் தேய்க்க வேண்டும். அரை மணி நேரம் ஊறின பிறகு இளஞ் சூடான வெந்நீரில் குளிக்கவும். அன்று பகலில் உறங்கக் கூடாது. இவ்வாறு தொடர்ந்து செய்தால் கூந்தல் 'கருகரு'வென்ருகிவிடும்.

—உமா இராமசந்திரன்



''ஓ... சுமதி எழுதியிருந்தாளா? ஆமாம். ஒரு மாதம் ப்ராப்ளமாகி விட்டது. பழகிய வேலைக்காரி சொல்லாமல் கொள்ளாமல் நின்றுவிட்டாள். இந்த வீட்டில் தண்ணி அடிப்பது வேறு கஷ்டம். நானும் காலையில் ட்ரம் நிறையத் தண்ணி அடித்துத் துணி தோய்த்து ஹெல்ப் செய்தும் சுமதி சிரமப்பட்டு விட்டாள். அதுதான் அவள் டெலிவரி டைமில் ஒரு புல் டைம் ஆயா ஏற்பாடு பண்ணணும் எனப் பார்க்கிறேன்.''

மறுபடியும் பேச்சு திசை மாறியது. மதனின் அரிப்பு அடங்கவில்லை. கடைசியாகக் கொஞ்சம் தயக்கத்துடனே கேட்டான். ''ஆர் யூ ஹேப்பி வித் சுமதி?''

சதீஷ் அவனை விசித்திரமாகப் பார்த்தான். ''அப்கோர்ஸ்... உனக்கு இந்த மாதிரிச் சந்தேகமெல்லாம் ஏன் வரது?''

மதன் மௌனமானுன்.

''வாட் ஈஸ் பாதரிங் யூ?''

''சதீஷ்... எனக்கு ரொம்பவும் குழப்பமாயிருக்கு.'' மதன் மிகவும் பாதுகாப்புடன் அதிகம் விவரிக்காமல், சுமதி சிலகடிதங்களில் மன வருத்தப்பட்டு எழுதியிருப்பதாகச் சொன்னுன்.

சதீஷ் பதில் பேசாமல் கேட்டுக் கொண்டிருந்தான். பிறகு சிந்தனையில் ஆழ்ந்தான். ''மதன், எனக்கு இந்த விஷயம் தெரியாது. ஆனுலும் நீ அந்தக் கடிதங்களைப் பற்றி மறந்துவிடு. அது அவ்வளவு சீரியஸ் இல்லை. சுமதி சந்தோஷமாக இருக்கிருள் என்று நான் காரண்டி தருகிறேன்.''

மதன் எதிர்பாராத வண்ணம் கோபமும், ஆத்திரமும் தலைதூக்கியது. ''எது சீரியஸ் இல்லை? என் சிஸ்டர், நான் உயிருக்குயிராய் அன்பைக் கொடுத்து வளர்த்த தங்கை மனக் கஷ்டப்பட்டுப் புழுவாகத் துடிக்கிருள்... நான் கடிதங்களைப் பற்றி மறப்பதா?''

''காம் டௌன் மதன். சுமதி என் மனைவியான பிறகு ஆப்டர் ஷி பிகேம் பார்ட் ஆப் மி. குறை, நிறை எது இருந்தாலும் அதை அணைத்துச் செல்ல வேண்டியது என்பொறுப்பு என்று நான் முழுதாக நம்பியதால், என்னதான் நீ அவளுடைய அண்ணனுலும் அது உன் சம்பந்தப்படாதது என நினைத்தேன். ஆனல் நீயாக இப்படிக் கேட்கும்போது நான் சொல்லித்தான் ஆக வேண்டும் என்று நினைக்கிறேன்.''

''என்ன சொல்லப் போறே, எல்லாக் குற்றத்தையும் அவள் தலையில் சுமத்தப் போறே... ஏனென்ருல் அவளைத் தாங்க அப்பா அம்மா இல்லை: எங்கோ ஆயிரம் மைலுக்கப்பால் வசதியில்லாத ஒரு அண்ணன்தான்...''

''மதன், சுமதியைவிடவும் நீ உணர்ச்சி வசப்பட்டுப் பேசுகிருய். நான் சொல்வதை நிதானமாகக் கேட்டால் புரிஞ்சுப்பே. சுமதி வாழ்வில் ரொம்பக் கஷ்டப்பட்டவள். சந்தோஷமாக இருக்க வேண்டிய இளவயதிலே, சிறகொடித்த பறவையாக நொண்

டியவ. இப்போ சிறகு முளைத்தும் பறக்கப் பயப்படறு. சிறகே ஏதோ ஒரு சுமை மாதிரிக் குற்ற உணர்வுலே கஷ்டப்படறு...''

''விளக்கமாகச் சோல்லு...''

''இள வயதிலே மனம் தளராமல் கஷ்டத்தை மனப் பக்குவத்தோட 'துன்பம் தான் வாழ்க்கை' என்ற உறுதியோட ஏத்துட்டா. அதனுல் இப்போ சந்தோஷமா இருக்கிற ஒவ்வொரு நிமிஷமும், ஏதோ குற்றம் செய்துட்டாப்பல தோணுது. அதைக் குறைக்க இப்பவும் தான் கஷ்டப்படறுப்பல கற்பனை செய்துக்கறு. தானே தன்னைக் கஷ்டப்படுத்திக்கவும் செய்கிருள்.

அதுவுமல்லாமல், அண்ணன், தங்கை உறவு துன்பத்தில் சாய்மானமாகவும், ஆதரவாகவும் மட்டுமே இருந்ததால், இன்பத்தைப் பகிர்ந்து கொள்ள முடியாமல், இன்னமும் சின்னப் பெண்ணைப் போல் தன் கஷ்டங்களை உன் தோளில் ஏற்றி உறவைப் பலப்படுத்துகிருள். ஷி ஈஸ் ஸப்பரிங் ப்ரம் பர்ஸிக்யூஷன் காம்ப்ளெக்ஸ்... தன்னை எல்லோரும் துன்பப்படுத்துகிறுர்கள் என்ற மனப் பிராந்தி. இது அவள் தவறில்லை. அவள் அனுபவங்கள் ஏற்றிய பாரம்.

சில சமயங்களில் அவள் கை புண்ணுகும் வரை தண்ணி அடிக்கும்போது, தோய்த்த துணிகளையே திரும்பத் திரும்பத் தோய்க்கும் போது, இல்லாத உடல் வலியைக் கற்பனை செய்து கஷ்டப்படும்போது... அவளை விடக் கஷ்டப்படுவது நான்தான்.

இன்பத்திலிருந்து துன்பத்துக்குத் திடீர் என வருவது எவ்வளவு கஷ்டமோ அவ்வளவு கஷ்டம் துன்பத்திலிருந்து இன்பத்தை ஏற்கிறதும்னு இப்பத்தான் புரியுது.

சுமதி ஈஸ் ஸப்பரிங்... ஷி வான்ட்ஸ் யூ ஆல்ஸோ டு ஸஃபர். அவள் உன்னிடம் இரக்கத்தை எதிர்பார்க்கிறு. நீ இரக்கத்தை வெளிப்படுத்தினுயானுல் அவள் மனச் சுமைகள் இன்னும்தான் பெருகும்.''

''சதீஷ்.... ஐ ஆம் ஸோ ஸாரி, நா உன்னைத் தப்பாப் புரிஞ்சுண்டுட்டேன்.''

''பரவாயில்லை. குழந்தைக்குப் பிறகு அவ படிப்படியா மாறுவா என நான் எதிர்பார்க்கிறேன். இல்லாவிட்டால், ஒரு ஸைக்கிரியாட்ரிஸ்ட்டைக் கன்ஸல்ட் செய்யலாம். மதன், ஒண்ணு ஞாபகம் வச்சுக்கோ. சுமதியோட 'பர்ஸனுலிடியில்' இது ஒரு சின்ன மூலைதான். மற்ற இடமெல்லாம் காற்ருேட்டமான, அன்பான, விசாலமான இடங்கள். அதன் அருமைஎனக்குத்தெரியும். வீ ஆர் ஹேப்பி.''

''சதீஷ்....!'' இந்த ஆண்மையில், நட்பின் விகசிப்பில் நெக்குருகித் தழதழத்தான் மதன். அவன் கண்கள் பனித்தன.

''மதன், சுமதியைப்பற்றிக் கவலைப்படாம பம்பாய்க்குப் போ. பாலைவனத்து வறட்சியைப் பார்த்துச் சோலையில் சென்றுல்கூட வறட்சிதான் கானலாக அவளைப் பயமுறுத்துகிறது. சோலையில் கண்ணை மூடிக் கொண்டால்கூட குளிர்ச்சி தானுக உடம்புக்குப் புரிய ஆரம்பிக்கும். இதுக்காக உன் திருமணத்தைத் தள்ளிப் போடாதே. நௌ சீயர் அப்....''

ஸ்டேஷனில் சதீஷுடன் கை குலுக்கிய போது மதனின் மனச் சோலையில் ஒரு மெல்லிய இதமான தென்றல் தவழ்ந்தது.

இம்மாத இல்லத்தரசி போட்டி

பொருள் : சோளம்

முடிவு தேதி : 15-9-81

சமையல் கூபன்

இத்துடன் . . . . என்ற தலைப்பில் சமையல் குறிப்புகளை அனுப்பியுள்ளேன். இச்சமையல் குறிப்பு இதுவரை எந்தப் பத்திரிகையிலும், எந்தப் புத்தகத்திலும் வெளியானதல்ல என்று உறுதி கூறுகிறேம்.

கையொப்பம்

ஆபத்தின் வடிவம்

லக்ஷ்மி

அதிர்ஷ்டம் எந்த உருவிலும் யார் மூலமும் வந்து நிற்கும். சில சமயங்களில் கூரையைப் பிய்த்துக் கொண்டு உள்ளே கொட்டும் என்பார்கள். அதைப் போலத்தான் ஆபத்தும் எந்த நேரத்திலும், எங்கேயும், எந்த உருவத்திலும் வந்து சந்திக்கும். வைத்தியக் கல்லூரியில் மாணவியாக இருந்தபோது என் தோழியின் அனுபவத்திலிருந்து நான் அறிந்து கொண்ட உண்மை இது.

இரண்டாவது உலக யுத்தம் மும்முரமாக நடந்து கொண்டிருந்த சமயம் அது. இருட்டடிப்பு, சைரனின் அபாய அறிவிப்பு ஒலி, குண்டு வீச்சு ஏற்பட்டால் ஒளிந்துகொள்ள தோண்டி விட்டிருந்த டிரஞ்சுக்கள் என்று பழக்கப்பட்டு வாழத் தெரிந்து கொண்டிருந்த ஹாஸ்டல் மாணவிகள் நாங்கள் அப்போது.

என் தோழி... அவளது உண்மைப் பெயர் வேறு. (கட்டுரைக்காக கமலா என்று அழைக்கிறேன்) நான் தங்கியிருந்த அதே பிளாக்கில் வேறு ஒரு அறையில் வசித்துக்கொண்டிருந்தாள். பார்க்க மிகவும் அழகாக இருப்பாள். படிப்பில் கெட்டிக்காரி. சிரிக்கச் சிரிக்கப் பேசும் சாமர்த்தியக்காரி. எல்லாவற்றையும்விட அபார துணிச்சல்காரி.

வகுப்பில் சக மாணவர்கள் ஏதாவது கேலி செய்தால் மாணவிகள் பலர் நடுங்கிப் போய் விடுவார்கள். சில பெண்கள் அழுதுவிடுவார்கள். ஆனால் கமலா? "போடா பசங்களா" என்கிற பாவனையில் அசட்டையாக அவர்களைத் தூசி போல மதிக்கத் தெரிந்த துணிவுடையவள். அந்த ஒரு குணத்துக்காக எனக்கு அவளை ரொம்பவும் பிடிக்கும். ஓய்வு நேரத்தில் ஹாஸ்டல் வராந்தாவில் பிரம்பு நாற்காலிகளை இழுத்துப் போட்டுக்கொண்டு அரசியலிலிருந்து அரிசியின் விலை வரை இருவரும் அலசிப் பேசுவோம். சிரித்து மகிழ்வோம். எனக்குப் பிடித்த புத்தகங்களை அவளும் விரும்பிப் படிப்பாள். எனக்குப் பிடித்த பாடல், வண்ணங்கள் அவளுக்கும் பிடிக்கும் என்ற காரணத்தினால் ஏற்பட்ட தோழமை. இருவரும் மனம் விட்டுப் பேசிக் கொள்வோம். கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வோம்.

எங்கள் ஹாஸ்டல் வார்டன் மிகவும் கண்டிப்பான பெண்மணி. மாலை ஏழுமணிக்குள் வெளியே செல்லும் பெண்கள் திரும்பி ஹாஸ்டலுக்குள் வந்துவிட வேண்டும். பஸ், அல்லது டிராம் தாமதம் என்ற காரணத்துக்குப் பத்து நிமிஷம் சலுகை தரப்படும். அதற்கு மீறித் தாமதமாக வெளியே கடைகளில் சுற்றிக் கொண்டு இருந்துவிட்டு ஹாஸ்டலுக்குத் திரும்பினால் உள்ளே அனுமதிக்கப் படமாட்டார்கள். கேட்டுகளை மூடி உள் பக்கம் பூட்டி விட்டுக் காவலாளி தனது தங்குமிடத்துக்குப் போய் உட்கார்ந்து விடுவான். மாதமொரு முறை கூட்டமாக சினிமாவுக்குப் போய்விட்டு லேட் பாஸ் என்ற அனுமதியுடன் பெண்கள் பத்து மணிஅளவில் இரவில்திரும்பலாம். ஆனால்கூட்டமாகப் போகவேண்டும், கூட்டமாகத் திரும்பவேண்டும். யார், யார் என்று பெயர், போகும் இடம் எல்லாவற்றையும் "விசிட்டிங்" என்ற நோட்டுப் புத்தகத்தில் எழுதிக் கையெழுத்திட்டு விட்டுப் போக வேண்டும். எல்லோரும் திரும்பிவிட்டனரா என்று வார்டன் குறித்த நேரத்திற்கு வந்து பார்வையிடுவது வழக்கம்.

யுத்த காலமாக இருந்ததால் வார்டன் இன்னொரு நிபந்தனையும் விதித்திருந்தார். திடீரென்று குண்டு வீச்சுக்கள் போன்ற விமானத் தாக்குதல் ஏற்பட்டால் வெளியே சென்ற மாணவிகள் எங்கு இருக்கிறார்கள் என்ற விவரம் தெரிய வேண்டியது அவரது பொறுப்பாயிற்றே? அதனால் விடுமுறை நாட்களில் பகல் பொழுது கடைக்குப் போனால்கூட அந்த நோட்டுப் புத்தகத்தில் எழுதும்படி மாணவிகளை நிர்ப்பந்தித்தார்.

இந்தக் கட்டுப்பாடுகள் என் தோழிக்குப் பிடிக்கவில்லை. ஹாஸ்டல் உணவும் நாளாவட்டத்தில் பிடிக்காது போயிற்று. ஊரிலிருந்து தனதுதாயைவரவழைத்துக்கொண்டு ஒரு சிறு வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டு கல்லூரிப் படிப்புக்குத் தயாராகி விட்டிருந்த தம்பி, தங்கைகள் எல்லோரையும் சென்னையிலேயே படிக்கவைத்துக் கொண்டு செலவைக் கட்டுப்படுத்தித் தன் குடும்பத்துடன் வாழ மிகவும் ஆசைப்பட்டாள். தந்தை தமது வேலையை விட்டு வர முடியாததால் தாய் வந்து குழந்தைகளுக்காகச் சென்னையில் வீடு எடுத்து அவர்களுக்குச் சமைத்துப் போட்டு குடும்பம் நடத்த ஒப்புக்கொண்டார். இதனால் ஓய்வு நேரங்களில் கமலா தன் குடும்பத்துடன் வசிக்க வீடு தேடும் முயற்சியில் மும்முரமாக ஈடுபட்டுவிட்டாள். "வாடகைக்கு வீட்டின் ஒரு பகுதி உள்ளது" என்று எந்த விளம்பரத்தைப் பத்திரிகைகளில் கண்டுவிட்டாலும் போதும். மறு நாள் மாலை அவள் யாரையும் துணைக்குக் கூப்பிடாமல் தானே வீட்டைப் பார்த்து வர வெளியே கிளம்பி விடுவாள்.

"நான் துணைக்கு வரட்டுமா?" என்று கேட்டால் அசட்டையாகச் சிரிப்பாள்.

'பட்டப் பகலில் என்ன பயம்?' என்று என்னிடம் சொல்லிவிட்டுத் துணிவாக ஒரு

வீட்டைப் பார்க்க அவள் ஒரு ஞாயிற்றுக் கிழமை, பகல் உணவுக்குப் பின் கிளம்பினுள். நிலையத்தில் வந்து நின்ற பஸ்ஸில் கூட்டத்துக்குள் புகுந்து எப்படியோ ஏறிவிட்டாள். நெருக்கி அடித்துக் கொண்டு ஆசனத்தில் அமர்ந்தபோதுதான் பார்த்தாள். அவள் அருகே அழகானதொரு பெண்மணி — காதிலும் மூக்கிலும் வைரங்கள் மின்ன — இடையில் காஞ்சீபுரப் பட்டுச் சேலையில் நெற்றியை நிறைத்த குங்குமமும் முகத்தை நிறைத்த பணக்காரக் களையுமாக அருகில் வந்து உட்கார்ந்ததை உணர்ந்தாள். கம்மென்று அந்த அம்மாள் புடவையிலிருந்து தாழம்பூ மணம் காற்ருேடு கலந்து முகத்தில் வீசிய போது சுகமாகத்தான் இருந்தது. அதை விட அந்தம்மாளின் புன்னகையில் தோழமை பளிச்சிட்டது. மனதுக்கு உற்சாகமாக இருந்தது.

கமலாவும் பதிலுக்கு முறுவலித்தாள். மெல்லப் பேச்சு ஆரம்பமாகியது.

''அடே! நானும் அந்தப் பகுதிக்குத்தான் போகிறேன்.'' அந்தம்மாள் சொன்னபோது கமலா மகிழ்ந்து போனுள்.

பஸ் பயணத்தின்போது பேச்சு வளர்ந்து ஒருசில நிமிடங்களில் கமலா தான் போகுமிடம் — எதற்காகப் போகிருள் என்ற அனைத்தையும் அந்தம்மாளிடம் விவரமாகக் கூறிவிட்டாள்.

''அப்படியா? வீடு தேடிக் கொண்டா போகிருய்? என்ன ஆச்சரியம்? என் வீட்டின் முன் பகுதியை வாடகைக்கு விட இன்று காலைதான் உத்தேசித்து ஏற்பாடு பண்ணினேன். வைத்தியக் கல்லூரி மாணவி என்கிருய்...நாளைக்கு நீ டாக்டரானுல் அதே இடத்தில் உன் வைத்தியத் தொழிலைக்கூட துவங்கலாம். எனக்கு உதவியாக இருப்பாய். ஒரு தலைவலி, கால் வலி என்ருல்.. ஒரு டாக்டர் அருகில் இருப்பது நல்ல தாச்சே?''

அந்தம்மாள் சிரித்தாள். கமலா மயங்கிப் போனுள்.

''உனக்கு மறுப்பு இல்லேன்னு நான் இறங்கும் இடத்திலேயே நீயும் இறங்கி என்னோட வீட்டுக்கு வா... வாடகைக்கு விடப்போகிற பகுதியைக் காட்டறேன். பிடிச்சா எடுத்துக்கோ...''

கமலா போக வேண்டிய இடத்தை மறந்தாள். அந்தம்மாளுடன் நகரத்தில் பஸ் நின்ற ஒரு நிலையத்திலேயே இறங்கிக் கூட நடந்தாள். சாலையிலிருந்து பிரிந்த ஒரு சிறு சந்துக்குள் அந்தம்மாள் முன்னுல் நடக்க, கமலா பின்தொடர்ந்தாள். அந்தச் சந்தின் முனையில் இரண்டு ரிக்ஷாக்கள் இருந்தன. மண்டை வெடித்த வெய்யிலில் வாடகைக்கு ஆள் கிடைக்காது... ரிக்ஷாக்காரரிருவரும் வண்டிக்குள் சுருண்டபடி நிழலோரத்தில் வண்டியை நிறுத்திக் கொண்டிருந்தனர்.

''என்னம்மா வண்டி வேணுமா? இந்தப் பக்கம்கூடப் பார்க்காமப் போறீங்களே?''— கேலியான குரலில் ரிக்ஷாக்காரன் ஒருத்தன் அந்தம்மாளைக் கூவி அழைத்தான்.

'புதுக் கிராக்கி பிடிச்சிருக்காங்க... அதனுலதான் வேகமாப் போருங்க...' மற்றவன் சிரித்தான்.

கமலா திடுக்கிட்டுப் போனுள். இந்தச் சங்கேதமொழிக்கு என்ன அர்த்தம்?



அப்பொழுதுதான் கவனித்தாள் — ஒரு தெருவின் பின் பக்கமான அழுக்குப் பிடித்த தொரு சந்து அது. அதற்குள் அந்தம்மாள் அவளே அழைத்துக் கொண்டு வேகமாக நடக்கிருள். ஏன்... இந்தப் பக்கம் போகிருள்? பகீர் என்ற உணர்வு. சுற்று முற்றும் பார்த்தாள். தொலே தூரம் வரை ஆள் நடமாட்டமே இல்லே. பட்டப் பகலில் கூட அங்கு ஒரு கொலே நடந்தால் யாரும்சட்டென்று எட்டிப் பார்க்க மாட்டார்கள். அப்படிப்பட்டதொரு தனிமையான சந்து.

''அதோ தெரிகிறதே... பச்சை நிறக் கதவு... அது எங்க வீட்டுக் கொல்லேக் கதவு. இந்த வழியாகவே வீட்டுக்குள்ளே போயிடுவோம். முதல்லே தாகத்துக்கு ஏதாவது சாப்பிடு. பிறகு பேசுவோம். நல்ல அழகான பொண்ணு. புத்திசாலியா நடந்துக் கிட்டாநீ சட்டுனு முன்னுக்கு வந்துடுவே...'' பற்கள் மின்ன அந்தம்மாள் சிரித்தாள்.

கமலாவுக்கு நிலேமை பளிச்சென்று புரிந்து விட்டது. அந்தம்மாள் வசிக்க அவளுக்கு வீடு காட்ட அழைத்து வரவில்லே. வேறு வகை வியாபாரம் செய்யவல்லவாகூட்டிக்கொண்டு போகிருள்?

''கதவைச்சீக்கிரம்திற!..''கத்திக்கொண்டு அந்தம்மாள் கதவைத் தட்டியபோது..... ''யாரது!''உள்ளே யிருந்து கேட்ட ஆணின் முரட்டுக் குரல்... கமலாவின் இரத்தத்தை உறையச் செய்து விட்டது.

எச்சிலே முழுங்கிக் கொண்டாள்..'' அட... என் கையிலிருந்த பேஞ அதோ கீழே விழுந்து விட்டது. எடுத்துட்டு வரேன். நீங்க உள்ளே போங்க..'' புன்முறுவலித்து விட்டு மூச்சைப் பிடித்துக்கொண்டு அந்தச் சந்தின் முனேயை நோக்கி ஓடிஞள்... ஓடிஞள்... மார்பு வெடித்து விடும்போல பயத்துடன் ஓடிஞள்.

''என்னம்மா ஏன் இப்படி ஓடியாரே? விசயத்தைப் புரிஞ்சிட்டியா? அது ஒரு பெரிய கசமாலமாச்சே!'' ரிக்ஷாக்காரன் அனுதாபத்துடன் கேட்டபோது அவளுக்கு அழுகையே வந்து விட்டது.

''சீக்கிரம் என்னே பஸ் நிலேயத்துக்கு ஓட்டிட்டுப் போ. கேட்ட கூலி தரேன்'' என்ருள் பதட்டமாக.

தலே தப்பியது தம்பிரான் புண்ணியம் என்ற நிலேயில் அவள் ஹாஸ்டலுக்கு வந்து படுக்கையில் விழுந்தவளுக்கு பயத்தில் காய்ச்சல் கூட வந்துவிட்டது! இரண்டு நாள் கல்லூரிக்குப் போக முடியாமல் ஹாஸ்டலிலேயே தங்கியிருந்தாள். தன் உறவினராக இருந்த ஒரு காவல் துறை அதிகாரியிடம் ஒரு நாள் இந்த அனுபவத்தைச் சொன்ன போது அவள் மேலும் அதிர்ந்து போஞள்.

அந்தக் குறிப்பிட்ட பெண்மணி நகரத்தில் காவல்துறை அதிகாரிகளின் கண்ணில் விழாமல் சாமர்த்தியமாக விபசாரத்திலே பெண்களே ஈடுபடுத்தும் ஒரு பெருத்த வஞ்சகியாம். கையும் களவுமாகப் பிடிக்கக் காவல் துறை காத்திருந்தும் அவள் சாமர்த்தியமாகத் தப்பிவிடுகிருள். குடும்பப் பெண் போன்ற தோற்றத்திலே அவள் இளம் பெண்களுடன் பேசி மயக்கி அவர்களேத் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்று விபசாரத்தில் ஈடுபடுத்தும் கிராதகி — ஒரு முறை அவள் வலேயில் சிக்கிய எந்தப் பெண்ணும் மீண்டதில்லே. பம்பாய், கல்கத்தா, டெல்லி என்று எங்கேயோ மாயமாகிவிடுவார்கள்.'' ''நல்ல வேளே... உன் உள்ளுணர்வின் எச்சரிப்பால் ஒரு பெரும் ஆபத்திலிருந்து தப்பிஞய்...'' என்ருர் அந்த அதிகாரி.

ஆபத்து இப்படி அழகான ஒரு பெண் மணியாகக் கூட வருமா?

கமலா சொன்னதைக் கேட்டு நாங்கள் அனேவரும் நடுங்கிப் போய் விட்டோம்... முன் பின் தெரியாத பெண்மணியாக இருந்தாலும் பேச்சுக்கூட வைத்துக் கொள்ளக் கூடாது... எப்போதும் யாரிடமும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று கமலாவின் அனுபவம் எங்களுக்கு ஒரு பாடமாக அமைந்தது.

யோசனே

முருங்கைக் காய் சல்லிசாகக் கிடைக்கும் காலங்களில் முருங்கைக் காயை வாங்கி, அதை இரண்டாகப் பிளந்து அதில் உள்ள சதைப் பற்றுப் பாகத்தைச் சுரண்டி வெயிலில் காயவைத்து எடுத்துக் கொள்ளவும். குழம்பு செய்யும்போது மிளகாய் வற்றல், கடலேப் பருப்பு, கொத்துமல்லி, விதை வெந்தயம் இவற்றுடன் முருங்கைக் காய் வற்றலேயும் வறுத்து இடித்துப் பொடி செய்து போட்டால் குழம்பு மிக ருசியாக இருக்கும். தேங்காய் இல்லாதபோது இப்படிச் செய்தால் தேங்காய் இல்லாத குறை தெரியாது. சத்தும் கிடைக்கும்.

—பத்மா



வேலைக்குச் செல்லும் பெண்ணே!

-நித்யா மூர்த்தி

அன்புள்ள வனிதா!

எனது தோழி நளினிக்குக் குழந்தை பிறந்து ஆறு மாதமாகிறது. குழந்தையைப் போய்ப் பார்த்து வருவோம் என்று சென்ற வாரம் போயிருந்தேன்.

வீட்டினுள் நுழைந்தவுடனே, சூழ்நிலை சரியில்லை என்று விளங்கி விட்டது. நளினி வேலைக்குப் போகும் பெண். அதனால் மாலை நேரத்தில் வீட்டில் இருப்பாள் என்று நினைத்துச் சென்ற எனக்கு அவள் ஆபீசிலிருந்து வீடு திரும்பவில்லை என்றதும் ஏமாற்றமாகப் போயிற்று.

அவளது மாமியாருக்கு அதைவிட ஏமாற்றம், கோபம். "ஆமா! குழந்தை ஒன்று வீட்ல இருக்கேன்னு ஒருத்திக்கு பொறுப்பு வேணுமா? சொல்றேன்னு தப்பா நினைச்சுக்கிடாதே. பிச்சை எடுத்துப் பிழைக்கலாம், பிள்ளையைப் பார்த்துக்கிட்டுப் பிழைக்க முடியுமா? ஆபீஸிலே புது மானேஜர் வந்திருக்கானும். வேலை ஜாஸ்தியாம்!'' கடுகடுத்தாள்.

என் முகத்தில் அசடு தட்டிற்று. "அவன் சம்பளம் பத்தாதுன்னு இவளை வேலைக்கு அனுப்பினேம். இதுதான் சாக்குன்னு இப்படியா, ஆபீஸே கதின்னு ஒருத்தி கிடப்பா'' சாடினுள் மாமியார்.

இதற்குள் தூங்கிய குழந்தை விழித்துக் கொண்டு அழ ஆரம்பித்து விட்டது. குழந்தையை அந்தம்மாள் என்னிடம் ஒப்படைத்துவிட்டு, பாலைக் கலக்கி புட்டியில் ஊற்றி எடுத்து வர உள்ளே திரும்பிய சமயம், வாயிலில் ஆட்டோவின் ஒலி கேட்டது.

"அப்பாடா! வந்தாயிட்டுது. இனி எம்பாடு நிம்மதி'' மாமியார் பெருமூச்சு விட்டாள்.

நளினி அவசரமாக உள்ளே வந்தாள். தோள் பையை அவசரமாக அப்படியே விட்டெறிந்து விட்டு, கால் செருப்பை வராந்தாவிலே விட்டபடி ஓடிவந்த காட்சி, 'கன்றின் குரலைக் கேட்டு கனிந்து வரும் பசு'வை நினைப்பூட்டியது எனக்கு.

"வா! வா! இன்னைக்கு ஆபீஸ்லே ஃபைல் வேலை நிறைய. என்ன செய்யலாம்? குழந்தையையே நினைச்சுக்கிட்டு ரொம்பத் தவிச்சுப் போனேன்.'' ஒரு தாயின் அங்கலாய்ப்புடன், அவள் குழந்தையை என்னிடமிருந்து வாங்கிக்கொண்டாள்.

பிறகு, நெடு நேரம் கழித்து, வீடு திரும்பியும், என் மனத்தில் நளினியின் முகத்தில் பிரதிபலித்த அந்தக் குற்ற உணர்வு நெஞ்சுக்குள் நெருடிக் கொண்டே இருந்தது.

எனக்குத் தெரிந்த ஒரு பெண்மணி, மூன்று குழந்தைக்குத் தாய். கல்லூரியில் பேராசிரியராக இருக்கிறவர். வீட்டில் குழந்தைகளைக் கவனிக்க வேலைக்காரியை உதவிக்கு வைத்துக்கொண்டு சமாளிக்கிறவர்.

ஒரு முறை அவர் வேதனைப்பட்டார். "என்ன செய்றதுன்னே புரியலே. என் குழந்தைங்களை உங்களை யெல்லாம் போல வீட்லே இருந்து கண்ணும் கருத்துமாகப் பார்த்துக்கொள்ள முடியலையேன்னு மனசு சதா உறுத்திக்கிட்டே இருக்குது.''

ஏன் இத்தகைய குற்ற உணர்வு? குழந்தை பராமரிப்பு என்பது ஒரு தாயின் கடமை. அத்துடன், குழந்தை, தாயின் அண்மையைப் பெரிதும் விரும்புகிறது என்பதும், குழந்தையின் பாச உணர்வுக்கு தாய்தான் அடிகோலுகிறவள் என்பதும் நாம் அறிந்த ஒன்றுதான். அதனாலேயே 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'' என்று சொல்லி வைத்தார்கள்.



இருப்பினும், பொருளாதார, கால தேச நிலையில் நாம் சற்று சிந்திக்க வேண்டிய பிரச்னைகளில் இது ஒன்று. அதிலும், வேலைக்குச் செல்லும் பெண்ணான உனக்கு, இந்தப் பிரச்னைக்குக் கட்டாயமாகத் தீர்வு காண வேண்டியது அவசியமாகிறது.

கதைகளிலும், திரைப் படங்களிலும், ஏன் உலக வழக்கிலும் வேலைக்குச் செல்லும் பெற்கள்ால் குழந்தைகளைச் சரிவரக் கவனிக்க முடிவதில்லை என்று பெரிய பிரசாரமே நடந்து வருகிறது. வீட்டிலேயே சதா இருக்கும் சில சோம்பேறிப் பெண்மணிகளாலும் குழந்கைளைக் கவனிக்க முடிவதில்லை என்ற உண்மை பலருக்குத் தெரிவதில்லை.

ஆரம்ப காலத்தில் குழந்தையோடு ஒரு சில மாதங்கள் இருந்துவிட்ட தாய்... அவள் வேலைக்குச் செல்லும்போது "குழந்தை என்ன செய்யுதோ, அதைக் கவனிக்காம இப்படி வந்து ஆபீசில் உட்கார்ந்துக்கிட்டு இருக்கேனே" என எண்ணக் கூடும்.

அது சரி, சதா, குழந்தையை அரவணைத்துக்கொண்டே இருந்து விட்டால், மாதம் முதல் தேதி பிறந்ததும் வீட்டு வாயிலில் வரிசையாக வந்து நிற்கும் மளிகை, பால், காரன் க்யூ வரிசையைச்சமாளிப்பது எப்படி?

பணம்தான் வாழ்க்கை என்பது அல்ல இங்கே வாதம். வாழ்வதற்குப் பணமும் வேண்டும். அதற்காக ஒருசில தியாகங்களைச் செய்வதன் மூலம், வாழ்க்கைப் பிரச்னைகளை சமாளிப்பதன் மூலம், உன்னால் குற்ற உணர்வைக் களைந்து விடலாம் என்பதை மறவாதே.

வேலைக்குச் செல்லும் பெண்ணுக்கு இந்தக் காலத்தில் இரு மடங்கு பிரச்னைகளைச் சமாளிக்க நேருகிறது. வீடு, ஆபீஸ்... குழந்தைகள் வேறு. எனவே ஓய்வு நேரங்களில் குழந்தைகளுடன் அதிகமாக இருக்கப் பழகிக்கொள்.

தகப்பனுக்கும் குழந்தைகள் பராமரிப்பில் பங்கு உண்டு என்பதையும் மறவாதே. தகப்பனும், தாயுமாக, குழந்தைகளிடம் நெருங்கும்போது, "எங்கம்மா என்னை விட்டுட்டு, ஆபீஸ் போயிட்டா" என்றோ,

"எங்கப்பா, அம்மாவுக்கு பணம்தான் வேணும். நாங்கள் வேணாம்" என்றோ, குழந்தைகளிடமிருந்து பழிச் சொல்லை பிற்காலத்தில் ஏற்க நேரிடாது.

என் தோழி ஒருத்தி, குழந்தையிடம், அதற்குத் தேவையான பொம்மையோ,சொக்காயோ வாங்கித் தந்துவிட்டு, "அம்மாவுக்கு அடுத்த மாசம் சம்பளம் வந்ததும் இன்னும் பெரிய பொம்மை வாங்கித் தரேன்" என்று கொஞ்சுவதைப் பார்த்துவிட்டு, சிரித்தேன்.

"இதென்ன லஞ்சமா?"

"லஞ்சமில்லே. பாசம். குழந்தையோட பிற்கால நல்வாழ்வுக்காகத்தானே நாங்க பாடுபடறோம்னு, அப்பத்தான் எங்கள் மகன் விளங்கிக்கொள்வான்."

வருங்காலத்தில் வளமான பூக்கள் மலர பெற்றோரின் ஒவ்வொரு முயற்சியையும்,குழந்தைகள் உணரும்படி நடக்க வேண்டியது தானே!

வனிதா! முதலில், "குழந்தையைச் சரிவர பராமரிக்க முடியாதுன்னு, வேலையை விட்டு விடலாமான்னு இருக்குது." என்ற குற்ற உணர்வு ஒவ்வொரு தாய்க்கும் தோன்றுவது இயற்கையே.

வேலையைவிடுவது எளிது,வசதி இருந்தால்; இல்லாவிட்டால்? பிரச்னைகளை சமாளிக்க கற்றுக்கொள். குற்ற உணர்வை முதலில் மனத்திலிருந்து துடைத்து எறி. நீ ஒரு தாய். உன் குழந்தையை உன்னைவிட நேசிப்பவர் யார்? அதனால், கூடுமான வரை, குழந்தையோடு ஓய்வு நேரத்தில் கூடவே இருக்கிறோம் என்று மகிழ்ச்சியோடு வேலைக்குச் செல்.

இவர்கள்

சந்திரா நாராயணன்




மூன்று வயதில் 'போலியோ'வால் பாதிக்கப்பட்டு அந்தக் காலில் ஆறு மேஜர் ஆபரேஷன்களைத் தாங்கிக் கொண்டு வாழ்வில் தளராது வெற்றிகளைக் குவித்து வருபவர் சந்திரா நாராயணன்.

எம்.ஏ. எகனமிக்ஸ் பாஸ் செய்தது மட்டுமல்லாமல், சைக்கிள், கார் ஓட்டக் கற்றுக்கொண்டதல்லாமல். நீச்சலும் தெரிந்து கொண்டாராம்.

"என் வாழ்க்கையில் இதை நான் பெரிய குறையாகக் கருதவில்லை. என்னைவிட வாழ்க்கையில் துன்பங்களை அனுபவித்தவர்கள் இருப்பார்கள். என் துன்பமே பெரிதென்று நான் நினைக்கவில்லை."

என்று கூறும் இவருடைய மன உறுதி பாராட்டத் தக்கது. —பி. இ. ரமணன்



சரிநிகர் சமானம்

பிரதிபா ராஜகோபாலன்

பனி விலகாத விடியல்.

தேனீச்வரர் கோயில் கோபுரம் மகுடமாய்த் தெரிந்தது. விமலா ஈரத் தரையில் கோலங்களாய் இழைத்துக் கொண்டிருந்தாள். வேப்பமரத்துப் பறவைகளின் கரையல்கள் ஓர் இசைக் குழுவினரின் முன் ஒத்திகையை நினைவூட்டின. தூரத்து ஆற்றங்கரைத் தோப்புகள் லேசான இருள் பூசியிருந்தன. வீதியில் போர்வை போர்த்திக் கொண்டு சில குடியானவர்கள் கடை வீதிப் பக்கம் போய்க்கொண்டிருந்தார்கள்.

கோலம் முடிகையில் இடுப்புக்கூட லேசாக வலித்தது. கொஞ்சம் விலகி சரியாக வந்திருக்கிறதா என்றுபார்த்ததில் அதன்நேர்த்தி வலியை மறக்கச் செய்தது. மனசு சூரிய காந்தியாய் விரிந்து பரந்து பொல்லென்று மலர்ச்சி கொண்டது.

கோலக் கிண்ணத்தை உள் அறையில், மாடப் பிறையில் வைத்துவிட்டுச் சமையலறையில் நுழைந்தாள். அம்மா காப்பி ஆற்றிக் கொண்டிருந்தாள்.

''இன்னிக்குத் தைப்பூசம். கொழந்தைகளுக்குச் சீக்கிரமாக குளிச்சு உடு. கோயிலுக்குப் போயிட்டு அப்புறமா வேலைக்குப் போ'' என்றாள் அம்மா.

சமையலறை ஜன்னலில் பனியின் ஆதிக்கம் அழுத்தமாய்த் தெரிந்தது. பக்கத்து வீட்டு வேலி தெரியவில்லை. ஏன், அவள் வீட்டுக் கொய்யா மரமும், மல்லிகைப் பந்தலும் தெரியவில்லை.

''கொழந்தைகளை அப்பா கூட அனுப்பிறலாம். நா சாயந்திரம் போய்க்கறேன்'' என்று சொல்லிக் காப்பியை வாங்கிக் கொண்டாள். காப்பியின் சூடு இதமாக இருந்தது.

''அப்பா டவுனுக்குப் போருர். இப்பக் குளிச்சிட்டிருக்கிருர், பாக்கலியா?''

''இல்லியே... என்னவாம் திடீர்னு டவுனுக்கு?''

''வக்கீலைப் பார்க்கணும்ணுர்.''

''என்ன வக்கீலையா? எதுக்கு... அவர் முதலாளி போகச் சொன்னுரா?''

''இல்லேல்லே...''

''பின்னே?''

''உன்னுேட காரியமா.''

''என்னம்மா, காத்தால.... புரியருப்ல சொல்லு'' — அவளுக்கு லேசாக எரிச்சல் பற்றிக்கொள்ள ஆரம்பித்தது.

''புரியருப்ல என்ன... உங்க ஆத்துக்காரர் இப்பிடியே இருந்தா என்ன அர்த்தம்? உன்னக் கூட்டிக்கணும். இல்லேன்னு உனக்குக் குடுக்கறதைக் குடுத்துட்டு டைவர்ஸ் பண்ணிக்கணும். இப்பிடி ரெண்டுங் கெட்டானு இருந்தா எல்லாம் பழகி மரத்துப் போகும். பெரியவளுக்கு வயசு பத்து முடிஞ்சு பதினெண்ணு தொடங்கப் போறது. இன்னும் ஏழெட்டு வருஷமானு மாப்பிள்ளைதேடணும். உன்னுேட கல்யாணத்துக்கு அடமானம் வச்ச வீடே இன்னும் முழுசாத் திருப்பலே....''

லேசாகப் பற்றியிருந்த எரிச்சல் இன்னும் மூண்டுகொண்டது.

''தைப்பூசம்னு சொன்னே... இல்லைன்னு இந்த நேரத்திலேயே அக்னிய வார்த்தாப்ல ஆக்ரோஷம் வர்றது. அதக் காட்ட முடியலே. என்னுேட ஆத்துக்காரர் என்னைக் கூட்டிக்கவும் வேணும். கூட்டிட்டாலும் நான் போறதாவும் இல்லேன்னு முடிவு பண்ணி அஞ்சு வருஷமாச்சு. இப்ப என்ன அவர்கூடப் பேச்சு? எந்தக் கேஸ் போட வக்கீல் வேணும்? அவர் கிட்ட ஒரு பைசாகூட வாங்கிக்கணும்னு எனக்கு ஒண்ணும் தலையெழுத்தில்லே... நான் வேலைக்குப்போறேன். என் கொழந்தைகளைக் காப்பாத்திக்கிறேன்.''

அம்மா, ஸ்டவ் திரியைக் கொஞ்சம் கீழே இறக்கி விட்டு விட்டு நிதானமாய்ப் பார்த்தாள்.

''விமலா, உனக்கு இன்னும் நிதானம் வரலேடி. நீயும் உன் ஆத்துக்காரரும் ராசியாகி ஒண்ணு இருந்தாத்தானே எனக்கும் அப்பாவுக்கும் மனசு சாந்தமா இருக்கும்? எங்களுக்கு என்ன நெறையக் கொழந்தைகளா... நீ ஒண்ணே ஒண்ணு. உன்னுேட வாழ்க்கை இப்படித் தூண்டாத வெளக்காட்டம் இருந்தா யாருக்கென்ன லாபம்? அப்பான்னு, பொலம்பாத நாளில்லே. இதுல சட்டம் என்ன சொல்லுதுன்னு கேக்கத்தான் வக்கீலாண்ட போருர். உங்க ஆத்துக்காரர் உன்னை ஏத்துக்கலேன்னுலும் கொழந்தைகளுக்கும் உனக்கும் ஜீவனும்சம் தரணும் இல்லே... அவர் பாட்டுல இப்படி இருந்தா எங்களுக்குப் பின்னுல யார் கதி? யார் உன்னை வெச்சு ரட்சிக்கப் போரு? கொழந்தைகள் அவருக்குச் சொந்தமில்லையா? லட்சம் லட்சமா சம்பாதிக்கிருர். ஓலகமெல்லாம் கொடி கட்டிப் பறக்கருர். ஊர்ல திரும்பின பக்கமெல்லாம் அவர் நடிச்ச சினிமாதான் போஸ்டர் போஸ்டரா ஒட்டிக் கிடக்கு. எனக்கு வெளியே தலை காட்ட முடியலே. என்ன பட்டம்மா, உங்க மாப்பிள்ளை நடிச்ச சினிமா நம்ம அலங்கார்ல ஓடுது.. .வர்றேளான்னு ஒவ்வொருத்தியும் கேக்கறச்சே மனசெல்லாம் ரத்தமாப் பொங்கி வழியுது. 'உனக்கு என்ன படிப்பில்லையா? அழகில்லையா? குணமில்லையா? இங்கிதம் இல்லையா? என்ன இல்லே? இந்தப் பாவி மனுஷனுக்கு புத்தி ஏன் இப்படிப் போகணும்... கொழந்தைங்க பேர்ல ஆளுக்கு ஒரு லட்சம் தரட்டுமே... என்ன கெட்டுப் போறது....?''


''அம்மா'' என்ருள் நிதானமாய் விமலா. ''நீ நெனைக்கிற மாதிரி நா இல்லே. ரத்தத்தில வெட்கம் மானம் ரோஷம்னு ரொம்ப ஓடிட்டிருக்கு. யாரும் எனக்கோ என் கொழந்தைகளுக்கோ ஒரு பைசா தர வேண்டாம். என்னுேட அன்பை, உறவை, மனசைப் புரிஞ்சுக்காத மனுஷனு அவர் மாறினதுக்கப்புறம் அவரோட பணம் என் கால் தூசுக்குச் சமம். குளிச்சதுக்கப்புறம் அப்பாவை என் ரூமுக்கு அனுப்பு. நா சொல்கிறேன். நல்ல நாளு இன்னிக்கு. என் இருதயத்த ரத்தக் களறியாக்காதே'' என்று சொல்லிவிட்டுத் தன் அறைக்குள் போனுள்.

குழந்தைகள் மூன்றும் தூங்கிக் கொண்டிருந்தன. வெள்ளை மனசாய் கபடமற்ற முகமாய் உதடு பிரிந்த சிரிப்பாய் அவை விடியற்காலக் கனவில் மூழ்கி யிருந்தன. அவளுக்குத் துக்கம் மெல்ல வேர் விட்டுப் பின் கண்ணீர்க் கோடுகளாய் வெளிப்பட்டது.

யோசனை

சத்துக்குறைவு காரணமாக உடல் மெலிந்திருக்கிறீர்களா? இரவு படுக்கைக்குச் செல்லுமுன் பொட்டுக்கடலையும் சிறிது சர்க்கரையும் கலந்து தினசரி சாப்பிடுங்கள். உடல் பலம் ஏற்படும் இளைத்த உடல் பருக்கும்.

எஸ். எஸ். மணியம்



பதின்மூன்று வருடங்களுக்கு முன் கல்யாணமானது. பி. யு. சி. படித்து முடித்ததும் யதேச்சையாக இந்த மாப்பிள்ளையைப் பற்றி தகவல் கிடைத்தது. அப்பா போய்ப் பார்த்தார். சென்னையில் தனியார் நிறுவனம் ஒன்றில் விளம்பரத் துறை அதிகாரியாக இருந்தார். படித்திருக்கிறார், அழகாக இருக்கிறார், நல்ல குணங்கள் உடையவராகத் தென்படுகிறார் என்று போய்விட்டு வந்த அப்பா சொன்னார்.

கல்யாணத்தைப் பற்றிச் சரியான மதிப்பீடு இல்லாத பருவம் அது. கிராமத்து வாழ்க்கையில் வயசில் மனசுக்கு உட்பட்ட கனவுகள் கூட முழுசாகத் தோன்ற ஆரம்பிக்கவில்லை. படிப்பும், தோழிகளின் கூட்டுறவும், தோப்புகளின் நிழல் கூட்டங்களும், தேனீச்வரரின் தரிசனமும், நீளமான பிராகாரங்களின் கம்பீரமும் உள் மண்டபத்தில் நடக்கும் உபந்யாசங்களும் மனசில் நிறைய இடம் பிடித்திருந்தன.

''விமலா, அவர் உன்னைவிடக் கொஞ்சம் நிறம். ஒசரமா, கம்பீரமா இருக்கார். மெட்ராஸ்லே ரெண்டு மூணு சபா டிராமாவிலே கூட ஆக்ட் பண்ணியிருக்காராம். போட்டோவெல்லாம் பார்த்தேன். அடுத்த வாரம் வர்ரோம்னு சொன்னு. வரட்டும், நீயும் பாரு. புடிச்சிருந்தாப் பண்ணிக்கலாம். டைமைக் கடத்திட்டு இருக்கக் கூடாது. ஊர் வரவரக் கெட்டுப் போய்ட்டு இருக்கு. சாயந்திரமானு குடிக்காத ஆள் கெடையாது. நீ ஒரே பொண்ணு. நல்லவராப் பார்த்துப் பண்ணித் தந்துட்டா மனசோட பாரம் கொறையும்'' என்றார் அப்பா, அவளை அருகில் அமர்த்தி.

நடிக்கிறார் என்ற வார்த்தையின் பிரயோகம் அவளை அழுத்தமாய்த் தாக்கியது. தான் பார்த்திருந்த சினிமாக்களையும், திரை நாயகர்களையும் மனசில் கொண்டு வந்தாள். அதன் கவர்ச்சி, புகழ், பெரும் செல்வம் என்று எல்லா விஷயங்களும் அவளைக் காந்தமாய் இழுத்தன.

அடுத்த வாரம் மாப்பிள்ளை வீட்டிலிருந்து வந்தார்கள். அவளைப் பார்த்தார்கள். அவளைப் பிடித்து விட்டது. அவளுக்கும் பிடித்து விட்டது. ஒரு கதாநாயகனுக்கு உரிய அத்தனை லட்சணங்களும் அவனுக்கு இருப்பதாக உணர்ந்தாள்.

பத்து நாளில் கல்யாணம்.

தேனீச்வரர் சந்நிதியில் அவருடைய முழு கிருபையில் நடந்தது. சென்னை போனாள். வாழ்க்கை கனவு மயமாய் இருந்தது. முதல் பெண் சுஜாதா பிறந்தாள். அப்புறம், தாரிணி. வாழ்க்கை மென்மையாய், சௌகரியமாய், சந்தோஷமாய், ஒவ்வொரு வினாடியும் தனக்காக நகர்வதாக நினைப்பது போல் பெருமிதத்துடன் நகர்ந்தது.

இதற்குள் அவள் கணவன் சந்தானம், நாடக உலகில் குறிப்பிட்ட இடத்தைப் பிடித்துக் கொண்டான். சிறப்பான நடிப்பில் முதவிடம் கிடைத்தது. சினிமாவுக்கு ஏன்போகலை ஏன் போகலை என்று அவனைத் துளைத்தெடுத்தார்கள். வாய்ப்புக்காக அவன் காத்திருந்தான்.


வீட்டில் வசதி பெருகியது. கடைசியாக பிரபு பிறந்தான். வாழ்வே மிதப்பாய் சந்தோஷமே படகாய் நிம்மதியே ஊஞ்சலாய் இருந்த நேரத்தில்தான், பிரபல டைரக்டர் ஒருவர் படத்தில் சந்தானம் கதாநாயகனாய் நடிக்க ஒப்பந்தமானான். இரண்டே மாதத்தில் படம் வெளியானது. அவனுடைய அதிர்ஷ்டமோ, அவளுடைய துரதிர்ஷ்டமோ படம் நல்ல வசூலுடன் ஓடியது. இன்றையத் தலைமுறையின் சிறந்த கதா நாயகன் என்று பத்திரிகைகளும் பாராட்டின. அதுவும் அதில் கதாநாயகியாய் நடித்த சரண்யாவுக்கு ஏற்ற நாயகன் இனி சந்தானம் என்கிற சரத்குமார்தான் என்று அழுத்தமாய் எழுதின.

மளமளவெனச் சந்தானத்துக்குப் புதிய படங்கள் ஒப்பந்தமாயின. நாயகி சரண்யாதான். அதிகாலையில் போனால் அர்த்த ராத்திரியில் வருவான். கொஞ்ச நாளில் அவனிடம் மது வாடை அடிக்க ஆரம்பித்தது. இன்னும் மீறி ஒரு நாள், இரண்டாவது படம் வெளியான அன்று சரண்யாவுடன் வீட்டுக்கு வந்தான். விமலாவைக் கூப்பிட்டான்.

''விமல், இனி சரண்யாதான் என்னோட ஒய்ப். அண்டர்ஸ்டாண்ட்?'' என்று வார்த்தைகளைக்குழறிச் சொன்னபோது விமலாவின் இதயத்தில் எரிமலை வெடித்தது.

2

வெய்யில் பத்து மணிக்கே ஆக்ரோஷமாய்த் தீண்டியது. குடையைப் பிரித்துத்



யோசனை

''கோதுமை மாவில் கொஞ்சம் வேர்க்கடலை மாவைக்கலந்து பூரியோ, சப்பாத்தியோ செய்து சாப்பிட்டால் உடலுக்கு மிகவும் நல்லது! இதனால் உடல் வலிமை அதிகமாகும்! கடுமையாக உழைப்பவர்களுக்குக் கூடக் களைப்பு ஏற்படாது!''

பி. விஜயா

தெருவோரம் நடந்து சந்நிதித் தெரு வரும்போது நீலாமணி வந்து சேர்ந்து கொண்டாள்.

''என்னங்க விமலா, இன்னிக்கு பத்மாவும் வரலே, நீயும் லீவாமே...?''

''நேத்து சொல்லலியே?''

''இண்ணைக்கு அலங்கார்ல உங்க வீட்டுக்காரர் படம் நூறுவது நாள் இல்லே? மேடைலேயே அவரும் மத்த ஸ்டார்ஸும் பேசறுங்களாம். இப்பப் போனுத்தான் மத்தியான ஆட்டத்துக்கு எடம் கிடைக்குமாம். வர்ற வழியிலே பார்த்தேனே... ஆம்பளைங்க கூட்டம் எப்படி அலேமோதுதுன்னு... பத்துப் பன்னிரண்டு அடிக்கு அப்படியே அச்சா அவர் மாதிரியே பேனர். மாலே போட்டு ஊதுபத்தி கொளுத்தி....''

விமலா கடைகளில் தொங்கிக் கொண்டிருந்த பத்திரிகைகளையும் அதன் போஸ்டர்களையும் பார்த்தவாறு நடந்து வந்தாள். மனசில் நீலமணியின் வார்த்தைகள் நெருடலாக முரண்பட்டன.

''நீலா, உங்களுக்கே எல்லாம் தெரியும். இதப் போயி எங்கிட்டச் சொன்னு? நான் ஒதுக்குவேன்னு தெரியாதா? ஒரு கனவு மாதிரி அதையெல்லாம் நெனேச்சு மறந்துட்டு வர்றேன். மெட்ராஸையும் அந்த வாழ்க்கையையும் விட்டு விலகிக் கொழந்தைகளோடு இந்த ஊருக்குத் திரும்ப வந்து வருஷம் அஞ்சாகுது. நான் போனப்போ இருந்த சந்தோஷம் என்ன? திரும்பறப்போ இருந்த நெஞ்சழுத்தம் என்ன? பொண்ணுப் பொறந்ததுல சந்தோஷத்தைக் காட்டிலும் சங்கடமும், சலனமும், சலிப்பும்தான் அதிகமாயிருக்கு. ரிடையரான அப்பா பாக்கு மண்டிலே கணக்கு எழுதறுர். வர்ற பென்ஷன் தாங்கல. நான் சம்பாதிக்க வேண்டிய கட்டாயம் வந்தாச்சு. நூத்தி அம்பது கொறச்சலா இருந்தாலும் நேரத்துக்கு ஏத்த ஒதவி. அதுல தன்மானம், துணிச்சல், நெஞ்சழுத்தம், எல்லார் முன்னுலேயும் நிமிர்ந்து நிக்கணும்னு வெறி எல்லாமே சாம்பல் பூத்த நெருப்புத் துண்டமா உள்ள அடங்கி இருக்கு. இதுக்கு மூல காரணமா இருக்கறவருக்குப் பூமாலே போட்டா என்ன, சாம்பிராணி, ஊதுவத்தி வெச்சு நமஸ்காரம் பண்ணினு எனக்கு என்ன?''

எதிர் வெய்யிலில் கண்கள் கூசின. தெருவோரக் கடைகளில் படுதாக்கள் தொங்கின. பொன்னுத்தா பூக்கடையில் மல்லிகையும், சண்பகமும் கொட்டிக் கிடந்து வருகிற போகிற ஆட்களைக் காந்தமா இழுத்து நிற்க வைத்து வாங்க வைத்தன.

''இருங்க... ஒரு முழம் பூ வாங்கிட்டு வந்திடறேன்'' என்ற நீலமணி கடை முன் நின்றுள். சில்லறையைக் கொடுத்துச் சுற்றிக் கொடுத்த வாழை இலையில் வாங்கிய பூவில் நாலு இணுக்குக் கிள்ளி, ''இந்தாங்க வெச்சுக்குங்க...'' என்று நீட்டினுள்.

''இப்பல்லா பூவே வெச்சுக்கறதில்ல நீலா'' என்றுள் விமலா, இயல்பாக.

நீலமணி இதை எதிர்பார்க்காததினுல் ஒரு விநாடி மௌனம் சாதித்து விட்டுப் பூவைத் தன் தலையில் வைத்துக் கொண்டாள்.

போன வருஷம் சுவாமி பல்லக்கு உற்சவ தினத்தில் கோயில் நிரம்பி வழிந்தது. அன்றைக்குப் பார்த்துப் பிரபல நாதஸ்வர வித்வான் ஒருவரின் கச்சேரி. எதிர் மண்டபம், சேர்ந்தாற்போல இருந்த வாகன மண்டபம், பொன்னம்பலக் கோனுர் உபய மண்டபம் எல்லாம் கூட்டம். எல்லார் பார்வையையும் நீந்தித் தாண்டி வருகையில் ஒருத்தி இன்னெருத்தியிடம் சொல்லிக் கொண்டிருந்தாள்.

''புருஷன் ஊர்ல இருக்கிற சினிமாக்காரியை எல்லாம் கட்டிப் புடிச்சிட்டுக் காதல் பண்ணிட்டு இருக்கான். இவ இங்க போன மச்சான் திரும்பி வந்தாப் போல வந்



திருக்கா. ரோஷமுள்ளவன்ளு பொண்டாட்டியைப் பொறந்த ஊட்ல உட்டு வச்சிருப்பாளு? இவ என்னத்தைச் செஞ்சு தொலைச்சாளோ'.. போடின்னு வண்டியில ஏற்றி உட்டுட்டான். 'இவ என்னடான்ளு, பட்டுப் புடவையும் மல்லிகைப் பூவுமா சாமி தரிசனம் பண்ண வந்துட்டா...''

பளாரென நெஞ்சில் ரத்தம் சிதறப் புறங்கையால் அடித்தாற் போலிருந்தது.

அவள் சொன்னது சரியா தப்பான்னு கூட மனசு பகுத்தறியவில்லை. புருஷன் தன்னை வைத்திருக்கிற மாதிரி வைத்திருந்தால் இந்த அவச் சொற்கள் தன்னைப் புழுதி வாரித் தூற்றியிருக்குமா என்றுதான் நாடி நரம்பெல்லாம் கொந்தளித்தது.

தனக்கு நல்வாழ்வு கிடைத்திருக்கிறது என்று என்றைக்குப் பிரத்யட்சமாக உணர்கிறோமோ அன்றைக்குத்தான் இந்தப் பட்டுப் புடவையும் பூச்சூடலும் என்று உறுதிப் படுத்திக் கொண்டாள்.

கடை வீதி தாண்டி, ஸ்கூல் தாண்டி, குடியானவர் தெரு தாண்டி, மரங்கள் அடர்ந்த மெயின் ரோடு தாண்டி, மண் பாதைக்கு வரும்போதுமணிபத்தேமுக்கால் ஆகிவிட்டது. இன்னும் மூன்றுநிமிடத்தில் ஜின்னிங் பாக்டரி வந்துவிடும். உள்ளே நுழைந்தால் ஒரு மணிவரைவேலை நிமிர வைக்காது.

வருகிற, போகிற மூட்டைகளைக் கணக்கு வைத்துக் கொண்டு வேலைக்கு வந்தவர்களை 'பிரஸண்ட்' எடுத்து. தபால்களுக்குப் பதில் எழுதி, வர்ற ஆர்டர்களுக்குப் பதில் சொல்லி, வாரக் கூலிக்குக் கணக்குப் போட்டு,... அவளுக்குப் போதும் போதும் என்றாகிவிடும்.

மத்தியானம் டிபன்தான். அப்பா தன் சைக்கிளில் கொண்டு வந்து கொடுத்து விடுவார். அப்புறம் அஞ்சு வரைக்கும் இதே வேலைதான். எல்லோரும் போன பின்னால், அரை மணி கழித்துப் புறப்படுவான்.

ஒரு ஆபீஸில், மானேஜர் நிர்வகிக்கிற நிர்வாகம் அவளுடையதுதான். இதற்குச் சம்பளம் நூத்தி ஐம்பதுதான். ஒரு தரம் முதலாளியைக் கேட்டு விட்டாள்.

''இது கொறச்சல்னு என் மனசுக்குத் தெரியும்மா. இந்த ஊர்ல கோயில்ல பூக்கட்டறதுக்கும், பிரசாதம் வாங்கித் தின்றதுக்குமா தென்னந் தோப்புல திருட்டுக் கள்ளு எறக்கறதுக்கும், வயல்ல பண்ணையா



ளாப் போறதுக்கும் பொறந்த பயல்களை உட்டுட்டு, இந்தப் பொம்பளைங்களுக்கு உருப் படியா வேலை தர்றதுக்குன்னே இந்த ஜின்னிங் பாக்டரியை ஆரம்பிச்சேன். உனக்கு முன்னால குஞ்சான் இருந்தான். அவனுக்குப் பொம்பளைங்கன்னு வேட்டி இடுப்புல நிக்காது. போடா நாயின்னு அனுப்பிச்சிட்டேன். அவன் போனதுக்கப்புறம்தான் பாக்டரிக்கு வந்த பணத்துல நெறைய முழுங்கிட்டான்னு தெரிஞ்சுது. இப்பத்தான் அது சரியாகுதுன்னு உனக்கே தெரியும். லாபம் வரட்டும்... உனக்கு வேணுங்கிறத எடுத்துட்டு மீதியை எனக்குக் குடும்மா.... போதுமா... எனக்கென்ன புள்ளையா குட்டியா... நீமட்டும் தைரியமா இரு. மனசுல இருந்தாத்தான் வாழ்க்கைலயும் வரும்...'' என்றார் முதலாளி.

கேட்டைத் தாண்டி உள்ளே போகப் போக ஆபீஸ் பையன் அருணாசலம் ஓடி வந்தான்.

''அக்கா உங்களத் தேடி ஒருத்தர் வந்திருக்கார். மெட்ராஸாம்.''

ஒரு விநாடி நெஞ்சு திக்கென்றது.

யாரது?

அதுவும் மெட்ராஸில் இருந்து?

நீலவேணி குடோனுக்குள்போய்விட்டாள். குடையை மடக்கிக் கொண்டு, வெயிலில் போனதின் விளைவாய் உள்ளே இருட்டாய்த் தெரியும் என்பதால், பார்வையைக் கூர்மையாக்கிக் கொண்டு உள்ளே நுழைந்தாள். சுவர்க் கடிகாரத்துக்கு நேர் கீழே நாற்காலியில், முகத்தை அன்றைய தினசரி ஒன்றால் மறைத்து உட்கார்ந்திருக்கும் மனிதரை யார் என்று அறியத் துடிக்கும் ஆவல் இன்னும் அதிகரித்தது.

வெளேரென்ற பாதங்களும், அதற்கு முரண்பாடென அணிந்த டார்க் கலர் பாண்டும், விலையுயர்ந்த பாலியஸ்டர் ஸ்லாக்கும், வலது கையில் டிஜிடில் வாட்சும் நீள நீளமாய்க் கைவிரல்களும், மனசுக்குள் இன்னும் குறுகிய அலைகளாய் எழுந்தெழுந்து மோதிக் கொண்டன.

அவளுடைய செருப்புச் சத்தத்தை உணர்ந்ததும், தினசரியைத் தாழ்த்தி அவளை அடையாளம் கண்டு கொண்ட அந்த நொடியில், இருவரும் முகம் உணர்ந்து கொண்டனர்.

மாணிக்கம் அல்லவா?

சென்னையில் எதிர்ப் பங்களாவில் இருந்த பூரணியின் அண்ணன் மாணிக்கம். அப்போது காலேஜில் படித்துக் கொண்டிருந்ததாக ஞாபகம்.

''ரொம்ப ஆச்சரியமா இருக்குங்க...'' என்றாள் விமலா முகத்தை ஒரு பூவாய் மலர்த்திக் கொண்டு.

''எனக்கும்தான்'' என்றார் மாணிக்கம்.

''எதுக்குங்க?''

''என்னை அடையாளம் தெரிஞ்சுட்டதுக்கு!''

''சரியாய்ப்போச்சு... மெட்ராஸ்ல ஒருத்தர் எனக்கு எதிராச் செயல்பட்டா, மீதி அத்தனை பேரையும் மறந்துட முடியுமா?''

''அத்தனை லட்சம் பேரில்தான் நான் ஒருத்தனா?''

''ஸாரி.... ஒரு இதுக்குச் சொன்னேன். எப்ப வந்தீங்க.... இங்க நா இருப்பேன்னு எப்படிக் கண்டு புடிச்சீங்க?''

''மொதல்ல என்னைப் பத்திச் சொல்லிடறேன். பூரணியோட அண்ணன்னு தெரிஞ்சிருப்பீங்க... அப்ப எம். எஸ்.ஸி. படிச்சிட்டிருந்தேன். அப்புறம் புனாவில பிலிம் இன்ஸ்டிடியூட்ல படிச்சு இப்ப சில படங்களை டைரக்ட் பண்ணிட்டிருக்கேன். என்னோட படம் இந்த ஊர்ல ஓடுது. இன்னைக்கு ஆர்டிஸ்டுங்க ஸ்டேஜ் அப்பியரன்ஸ் ஆறாங்க. கூட வந்தேன். இந்த ஊருக்கு வந்திட்டு உங்களப் பார்க்காமப் போறதுன்னா, என்னோட மனச நானே இறுக மூடிக்கறதுன்னு அர்த்தம். வீட்டுக்குப் போனேன். உங்கம்மா இந்த இடத்தைச் சொன்னாங்க. நான் கார்ல வந்தேன்....''

மாணிக்கம் கண் அசங்காமல், உதடு அதிகம் பிரியாமல் முகத்தின் பாவம் மாறாமல் ஒரு செயற்கைத் தன்மையுடன் பேசினான். முந்திப் பார்த்ததுக்கு இப்போது நிறைய வித்தியாசத்துடன் முகத்தில் பிரகாசம் விளங்க, அதே சமயம் விவேகமான முதிர்ச்சியுடன் இருந்தான்.

''மத்தியானம் தியேட்டருக்கு வர்றீங்களா?''

''நோ...அங்கெல்லாம் வரப் புடிக்காது.''


''சினிமாக்காரன்னால கசப்பா இருக்கு?''

''ஒருத்தருக்காக அந்த உலகை நான் எதுக்கு வெறுக்கணும்? அவர் வர்றார்னு சொன்னாங்க....'' என்று சந்தானத்தைக் குறித்துக் கேட்டாள்.

''பின்னே அவர்வராமயா...?அவர்தானே ஹீரோ....''

''ம்'' என்றாள் சுவாரஸ்யம் இல்லாமல்,

● கடுக்காயைக் கொட்டையை எடுத்து விட்டு, அடுப்பில் சற்று சுட்டுவிட்டு வாயில் அடக்கிக்கொண்டு சிறிது கடித்து அந்நீரை விழுங்கினால் இருமல் சட்டென்று நிற்கும்.
—கே. ஜெயலக்ஷ்மி



''உண்மையைச் சொன்னு அவர்தான் உங்களைக் கூட்டி வரச் சொன்னுர். உங்களைப் பார்க்கணும்னு ரொம்ப அழுத்தமாச் சொல்லிட்டார்.''

''என்னது, நிஜமாவா? நிதானம் இல்லாத போது சொல்லியிருப்பார். அப்படி எல்லாம் நான் வர்றவ இல்லே... போன்னு பொறப்பட்டு வர்றதுக்கும், வான்னு வரத் துடிக்கறதுக்கும் நான் அவருக்கு வேலைக்காரி இல்லே. ரெண்டு துருவமாப் பிரிஞ்சது பிரிஞ்சதுதான்.''

''அப்படி வேலி கட்டினுப்பல, வெட்டி எறிஞ்சாப்ல பேசக் கூடாதுங்க, விமலா''

''சாரி, என்னை மன்னிச்சுடுங்க மாணிக்கம், நாம பேசிக்கிறதுக்குப் பல விஷயங்கள் ரொம்ப இருக்கு. பூரணி சௌக்கியமா, மறுபடியும் கொழந்தை ஏதாவது இருக்கா?''

மாணிக்கம் தன் இருக்கையிலேயே நெளிந்தான்.

3

கூடத்தின் தூணேரம் உட்கார்ந்து அந்த வாரம் வந்திருந்த பாடங்களைப் படித்துக் கொண்டிருந்தாள். இன்னும் இரண்டு மாசத்தில் பரிட்சை வருகிறது. பாஸாணுல் பி. காம் பட்டம் வாங்கிடலாம். கணவனை விட்டு வந்த பின்னுல் இந்தக் காரியம்தான் முழுதாக உருப்படியாக நடக்கிறது. பெரிய பெண் தூங்கிவிட்டாள். இரண்டாவது பெண் பாட்டியுடன் சமையலறையில் எதை எதையோ துலக்கிக்கொண்டிருந்தாள். சின்னவன் தாத்தாவுடன் இருந்தான். ரேடியோவில் எம். எல். வி. பாடுவதைக் கேட்டுக்கொண்டிருந்தார் அவர்.

மனசு படிப்பில் அழுந்திஞலும் இருந்தாற் போல தடம்புரண்டு எதிலோ வெறிக்க ஆரம்பிக்கிறது. போன வாரம் சந்தானம் வந்த அன்றைக்கு அவள் உறுதியாய்ப் பேசிவிட்டாள்.

மாணிக்கம் நிறையச் சமாதானம் சொன்னுன். மத்தியானம் சாப்பாடு கொண்டு வராமல் அப்பா வந்தார்.

''விமலா, உன் ஆத்துக்காரர் வீட்டுக்கு வந்திருக்கிருர். உன்னைப் பார்க்கணும்னு புடிவாதமா உட்கார்ந்திருக்கார்.''

''என்னப்பா, நான் வந்து அவர் கிட்ட என்ன பேசப் போறேன்? நீங்களே எதையாவது சொல்லி அனுப்பிடறதுதானே?''

''என்னம்மா பைத்தியக்காரியா இருக்கே. நம்மோட பொண்ணு வாழ்க்கை இப்பிடிச் சீர்கெட்டுக் கெடக்கேன்னு பொலம்பாத நாளு இல்லே. வேண்டிக்காத தெய்வம் இல்லே. தெய்வமே பார்த்து அவர நம்ம வீட்டுக்கு அனுப்பி வைச்சிருக்கு. என் ஆத்துக்காரியைப் பார்க்கணும்னு புடிவாதமா அழுத்தமா, உரிமையாச் சொல்லிண்டு உட்கார்ந்திருக்கார். முந்தி இருந்த மாதிரியா இருக்கார்? பென்ஸ் கார், தங்கச் செயின் வாட்ச், மொகமும் உடம்பும் தங்கமா மினுமினுக்குது. கழுத்திலேயே சுண்டு விரல் பருமனுக்குச் சங்கிலி போட்டிருக்கார். மனுஷன்னு இருந்தா சபலம் இருக்கத்தான் செய்யும். எல்லோரும் நேர் கோட்டிலேயே போய்ட்டு இருக்க முடியுமா? தவர்றது சகஜம்தான். திருந்தறதும் சகஜம்தான். அவரே வந்திருக்கார். ரெண்டு பேரும் பேசுங்க... சண்டை போடுங்க... இதுல நான் என்ன செய்ய முடியும்? எனக்கு என்ன வேணும்னு உன்னோட வாழ்க்கை பழையபடி ஒரு சீருக்கு நெலைக்கு வரணும். நீ கொஞ்சம் விட்டுக் குடுத்து தயவு செஞ்சு வீட்டுக்கு வா... ரெண்டு பேரும் பேசுங்க....''

மாணிக்கத்தின் காரிலேயே மூன்று பேரும் வீடு திரும்பினுர்கள். தெருவையே அடைத்தாற் போல சாம்பல் நிற பென்ஸ் கார் நின்றிருந்தது. ஊர் ஜனங்கள் முழுதும் கூடி இருந்தார்கள். எல்லோர் முகத்திலும் தெய்வ தரிசனத்தின் ஆவல் படர்ந்திருந்தது.

அவளைப் பார்த்ததும், 'வந்தாச்சு வந்தாச்சு' என்று ஒரே குரலில் அழுத்தமாய்க் கூவினுர்கள். அவளுக்கு அவமானமாய் இருந்தது. முகத்தைத் தாழ்த்திக்கொண்டு உள்ளே போனுள்.

கூடத்தில் அதே தூணேரம் சந்தானம் நாற்காலியில் உட்கார்ந்திருந்தான். சந்தன நிறச் சட்டை, முன்பிருந்ததுக்கு நன்றாகச் சிவந்திருந்தான். டேபிள் மின்விசிறி பக்கத்தில் வேகமாகச் சுழன்று கொண்டிருந்தது. அவனுடன் வந்திருந்தவர்கள் வெளியே



யோசனை

சாதாரணமாக வெறும் கோதுமையை மெஷினில் அரைப்பதற்குப் பதிலாக, பத்து கிலோ கோதுமைக்கு ஒரு கிலோ கொண்டைக் கடலை வீதம் சேர்த்து மாவு அரைத்து சப்பாத்தி, பூரி, பரோட்டா என்று எந்தச் சிற்றுண்டியையும் செய்து பாருங்கள், மிகவும் மிருதுவாகவும், ருசியாகவும் இருப்பதை அறிவீர்கள். சிற்றுண்டிகள் ஆறிய பிறகும், கடினத்தன்மை பெருமல், மிருதுவாக இருப்பது குறிப்பிடத் தக்கது. அதோடு உடல் நலத்துக்கும் ஏற்றதொன்று.

—பாத்திமுத்து

வந்து கூட்டத்தைச் சமாளித்துக் கொண்டிருந்தார்கள்.

என்ன பேசுவது என்று தெரியாமல் ஒரு விஞடி விழித்தாள். தன்னைத் தேடி வந்திருக்கிருர் என்ற உண்மை உணர்த்தியதும், ''வாங்க, வந்து நேரமாச்சா?'' என்று மனசில் ஒட்டாமல் கேட்டாள்.

''கொஞ்ச நேரமாச்சு. உன்னைப் பார்க்கணும்னுதான் வந்திருக்கேன் விமலா.''

''......''

''கொழந்தைகளை அழைச்சிட்டு வர உங்கம்மாவை அனுப்பிச்சிருக்கேன்...''

''.....''

''உன் கிட்டப் பேசணும். இங்கிருந்தா மனசு விட்டுப் பேச முடியாது. வெளியே கூட்டத்தப் பார்த்தியா? டவுன்ல ஹோட்டல் ஸ்வர்ணவுல ரூம் போட்டிருக்கு. அங்க போய்ப் பேசலாம். நான் மறுபடியும் ராத்திரி எட்டரை மணிக்கு அங்க திரும்பணும். ஸ்டேஜ்ல அப்பியர் ஆகணும். அப்ப உன்னக் கொண்டு வந்து விடறேன்....''

''சொந்த விஷயத்தை வீட்ல பேச முடியாத அளவுக்கு ரொம்ப வளர்ந்துட்டீங்க.... பேரும் புகழும் செல்வமும் செல்வாக்கும் வளர்ந்திருக்கு. ஆஞ சொந்தப் பொண்டாட்டிக்குத் துரோகம் பண்ணினது நேத்து வரைக்கும் தெரியாம இருந்திருக்கீங்க... ஏதோ இந்தப் பக்கம் வரவேண்டியிருக்குன்னு இருந்ததஞல வந்திருக்கீங்க...''

''அப்படி இல்லே விமலா. டைம் இல்லாமயே இருந்தேன். அதுவும் இல்லாமல் உன்னைப் பாக்கறதுக்கு மனசுக்குள்ளே பயந்துட்டே இருந்தேன். மாணிக்கம்தான் தைரியம் சொன்ஞர். என் பக்கம் எத்தனே தப்பு இருந்தாலும் மன்னிச்சுடு. நாளைக்கே மெட்ராஸ் போயிடலாம். லட்ச லட்சமாச் சம்பாதிக்கிறேன். ஜின்னிங் பாக்டரிலே வெறும் நூத்தம்பது ரூபாய்க்கு வேலைக்குப் போகிறேன்னு கேட்டதும் என் மனசு நொறுங்கிப் போச்சு விமலா.''

''இதக் கேக்கறதுக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு. உங்க பேச்சை நம்பி நாளைக்கே நானும் கொழந்தைகளும் வர்ரேம்.''

''ரொம்ப சந்தோஷம் விமலா.''

''அவசரப்படாதீங்க.... அவ அந்த சரண்யாவை என்ன செய்யப் போறீங்க?''

சந்தானம் சட்டென முகம் மாறிஞன்.

''அவளுக்குத் தனி பங்களா இருக்கு. உன்னேடவா இருப்பா? இல்லே நீதான் அவளோட இருப்பியா?''

விமலா ரத்தம் சூடேற உணர்ச்சி பொங்க சந்தானத்தைப் பார்த்தாள்.

''நா இங்க வந்து நூத்தைம்பது ரூபாய்க்கு இன்ஞெருத்தர் கிட்ட உழைச்சு என் வயத்தைக் கழுவறேன்னு வருத்தப்பட்டீங்களே, அந்த வேதனைக்குக் காரணமே, அந்தச் சரண்யாதானே? இந்த செகண்ட் கூட அவளை விட உங்களுக்கு மனசு இல்லே. அவ இருக்கும்போது இனி நான் எதுக்கு?''

''விமலா, கொஞ்சம் பொறுமையாப்பேசு. இப்ப என்னைப் பத்தி இருக்கிற இமேஜே வேறே... நான் வளர்ந்த ஆர்டிஸ்ட். என்ன பேஸ்ட் யூஸ் பண்றேன், என்ன சிகரெட் குடிக்கிறேன், என்ன சென்ட் தடவறேன்னு கூடப் பத்திரிகையில எழுதருங்க. என்ஞேட அந்தரங்கம் ஒவ்வொருத்தருக்கும் தெரிய வேண்டிய கட்டாயத்துக்கு நான் வந்திருக்கேன். சரண்யா என்ஞேட இருந்தாலும் அவ என்ஞேட மனைவி இல்லையே! இதஞல என் இமேஜ் பாதிக்கப்படுது விமல். இப்ப பல எடங்களுக்கு பல பார்ட்டிகளுக்குப் போக வேண்டியிருக்கு. என் காது படவே அவளை என் கீப்பர்தான்னு சொல்லிக்கருங்க. 'வாட் எபவுட் யுவர் வைஃப்?' —ஒரு பார்ட்டில ஒருத்தர் கேட்டார். நான் என்ன பதில் சொல்றது? ஸோ, நீ வந்துடு. என் மனசு உனக்குத் தெரியும். எனக்குன்னு சில பலவீனங்கள் இருக்கு.. இந்த நிலைமைல என்ஞல இத விடமுடியல. போகப் போக விட்டுடுடுவேன்னு எதிர்பார்க்கலாம். என் வார்த்தையை நம்பியும், எனக்கு ஒரு மரியாதையைத் தேடித் தரவும் நீ கண்டிப்பா வரணும் விமல்....''

சந்தானத்தின் குரலில் நெகிழ்ச்சி இருந்தது. மனசிலிருந்து அதன் ஆத்மாவில் இருந்து நேரடியாகப் பேசுகிருன் என்று உணர்ந்ததும்,



கடுக்காய், தானிக்காய், மாசிக்காய், ஜாதிக்காய், அதிமதுரம், சுக்கு, சித்தரத்தை இவைகளை ஒரு துணியில் முடிந்து குக்கரில் வேகவிட்டு காயவைத்துக் கொண்டு சிறு குழந்தைகளுக்கு எண்ணெய் ஸ்நானம் செய்த பின் எல்லாவற்றிலும் கொஞ்சம் கொஞ்சம் இழைத்துத் தாய்ப் பாலிலோ, பசும் பாலிலோ கலந்து இரண்டு சொட்டுத் தேனுடன் கொடுக்க மிகவும் நல்லது.

—கே. ஜெயலக்ஷ்மி

அவள் நிதானமாய், சலனமில்லாமல் நேருக்கு நேர் பார்த்துச் சொன்னாள்.

''இதோ பாருங்க... உங்களுக்குன்னு ஒரு இமேஜ்இருக்கறுப்ல எனக்கும் இமேஜ்இருக்கு. தன்மானம் இருக்கு. எவளோ ஒருத்தி தனி பங்களாவில் இருப்பாளாம். பேருக்கு நான் பொண்டாட்டியாம். மீதி எல்லாத்துக்கும் அவளாம். சுத்தமா அவளைக் கைகழுவிவிட்டு வாங்க... எந்த நிமிஷத்திலும் வரத் தயாரா இருக்கேன். உங்களால கொழந்தைக கெட்டுப் போகக் கூடாது. அதுகளை ஒழுங்கா வளர்த்து நல்ல இடத்திலே கட்டித் தரணும். எனக்குப் பெரிய பொறுப்பு இருக்கு. நான் வெட்கங் கெட்ட தனமா நீங்க இழுக்கற இழுப்புக்கு நடந்துட்டா அதுகளும் அந்த நெலைக்குத்தான் வந்து நிக்கும். இத்தனை வருஷம் கழிச்சாவது என்னை வந்து பார்த்ததுக்கு ரொம்பச் சந்தோஷம். ஆனா உங்க மனநிலையும் திடமும் மாறாத வரை நான் வர்றுப்ல இல்லை. நீங்க பொறப்படலாம். எங்கப்பாவும் அம்மாவும் எனக்குப் பால் ஊத்தறப்பவே தன்மானத்தைக் கலந்துதான் ஊத்தியிருக்காங்க...''

சந்தானம் முகம் சிவக்க அவமரியாதையை உணர்ந்தவனாய் எழுந்து கொண்டான். எதையோ சொல்பவன் போல் உதடுகள் துடித்தன.

''எதையும் நான் கேட்கத் தயாரில்லே. இதனால எத்தனை கஷ்டமும் வேதனையும் வந்தாலும் நான் பணியறுப்ல இல்ல. எனக்குன்னு இருக்கிற பிடிவாதமும் உறுதியும் சரியானதுதான்னு இப்பக்கூட இந்த வினாடி கூட நினைக்கிறேன்....''

சந்தானம் எழுந்து இந்தக் கூடம் தாண்டி இந்த வாசல்படி தாண்டிப் போன பின்னால் தான் உணர்ச்சிகள் வடிந்து நிலைகொள்ள ஆரம்பித்தன.

4

ஞாயிற்றுக் கிழமை. சந்தானம் வந்து போய்ச் சில வாரங்கள் ஆகிவிட்டன. அந்த வரவின் சுவடுகூட மனசில் மறையத் தொடங்கி யிருந்தது. பாடங்களில் மனசு ஒட்டிக் கொண்டது. அப்பா மட்டும்தான் முகத்தில் வேதனையைத் தேக்கி வைத்திருந்தார். அம்மா கூடக் கொஞ்சம் தைரியமாய் இருந்தாள். குழந்தைகள் இரண்டு மூன்று நாட்கள் தம் அப்பாவைப் பற்றிய தமக்குத் தெரிந்த சினிமாத் தகவல்களைப் பரிமாறிக் கொண்டன.

விமலா அதைக் கண்டு கொள்ளவில்லை. குழந்தைகள் தாமாகவே அதை மறந்து-கொண்டிருந்தன. பெரிய பெண் சுஜாதா மட்டும் சினிமாப் பத்திரிகை ஒன்றின் நடுப் பக்கத்தில் வந்த அப்பாவின் கலர்ப் போட்டோவைக் கொண்டு வந்து கூடத்தின் கிழக்குப்புறச் சுவரில் ஒட்டி வைத்துக்கொண்டாள்.



உருளைக் கிழங்கை ப்ரிஜ்ஜில் வைக்காதீர்கள். அதன் வாசனை மற்ற பதார்த்தங்களுக்கும் பரவிவிடும். தவிர ஐந்து டிகிரி சென்டிகிரேடுக்குக் குறைந்த உஷ்ண நிலையில் இருந்தால் கிழங்குகள் தித்திக்க ஆரம்பித்துவிடும்.

—ப்ரியா

அப்பாவின் பழைய முகமும் பழகிய உணர்ச்சியும் பழைய அன்பும் இன்னும் புதிதாக இருந்தன. புதிய வீட்டைப் பற்றியும் சுற்றியுள்ள மனிதர்களைப் பற்றியும் அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொள்வாள். அவளைக் கண்டிப்பதில் அர்த்தமில்லை என்று உணர்ந்ததும் விமலா அவள் போக்கில் விட்டுவிட்டாள்.

அன்றைக்கு மத்தியானம் வெய்யில் வெளியில் படையெடுத்திருந்தது. தெருவில் நடமாட்டம் இல்லை. மரத்தில் இலைகூட அசங்கவில்லை. அரை மணிக்கு முன்னால் கோலப் பொடீடீடீ என்று யாரோ கூவிக்கொண்டு போனது மனசில் தடக்கென்று உறைத்தது. இந்த உடம்பு உருகும் வெய்யிலில் கோலப் பொடி விற்கிறவள் தன் கோலப் பொடியை காட்டிலும் தன் வயிற்றையும் மனதையும் முக்கியமாய் நினைக்கிறாள் என்று புரிந்தது. அவளுக்குக் கூட ஒரு வைராக்கியம், தன்னம்பிக்கை, மனோ திடம் இருக்கிறது என்று உணர்கையில் அந்தக் குணங்கள் தன்னுள்ளும் பாய்வது போல பிரமை கொண்டாள்.

அப்பா வெளியே போயிருந்தார்.

பழைய சிநேகிதராம். பெல்லாரி சிறையில் ஒன்றாக இருந்தார்களாம். திடும் என்று காரில் வந்து இறங்கி, வீட்டையே சந்தோஷமயமாக்கிவிட்டார். அப்பா வயசுதான் இருக்கும். ஆனால் சிவப்பாய், பளபளப்பாய் இருந்தார். உடையின் வெண்மையில் மதிக்கத் தக்கவராய் இருந்தார்.

''சிவா, நீதான் ஒண்ணும் வேண்டாம் வேண்டாம்னு மறுத்துட்டே. நான் மூணு மொறை எம். எல். ஏ. ஆனேன். பின்னால ராஜ்ய சபை எம். பி. ஆனேன். வெளிதேசமெல்லாம் ஈரோப் ஸ்டேட்ஸ்ன்னு போய்ட்டு வந்தேன். ரெண்டு மூணு கமிட்டில மெம்பரா இருந்தேன். ரெண்டு பசங்க, மூணு பொண்ணு. ஒருத்தன் ஐ. எப். எஸ். படிச்சு இப்ப எக்ஸ்டர்னல் மினிஸ்ட்ரிலே இருக்கான்.

அடுத்த மாசம் நியூஸிலாந்தோ நெதர்லாந்தோ அதாம்பா வைரம்எல்லாம் பட்டை தீட்டறாங்களே ஆம்ஸ்டர்டாம்.. அப்படீன்னு அது நெதர்லாண்டுதான்... அங்கே போஸ்டிங் வருதுன்னு லெட்டர் போட்டிருக்கான். ரெண்டாவது பையன் யு. என். ஓ.வுல இண்டர் ரீஜனல் மானிடரி பண்ட்ஸ்ல இருக்கான். பொண்ணுகள் எல்லாத்துக்கும் கல்யாணமாகி செட்டில் ஆகிட்டாங்க. தியாகிங்க முறைல அப்பவே நெலம் கிடைச்சுது. அமராவதியொட்ட வாய்க்கால் ஒண்ணு இப்ப வந்து நம்ம நெலத்தோட ஒட்டிப் போகுது. அதனால வயலாகி நல்ல வெளைச்சல். வசதியாயும் நிம்மதியாயும் இருக்கேன். நம்ம பாத்துக் கடைசியா இருபத்தைஞ்சு வருஷம் இருக்குமா... இந்த டவுன்ல ரெண்டாவது மருமகளோட அண்ணன் ஆர். எம். ஓவா இருக்காரு. பார்க்கலாம்னு வந்தேன். இந்த ஊரில் கோபுரத்தைப் பார்த்ததும் உன்னோட ஞாபகம் ஊற ஆரம்பிச்சிருச்சு...'' என்று நீளமாய்ப் பேசினார்.

அப்பா மௌனமாய், புன்சிரிப்பாய் எல்லா வார்த்தைகளுக்கும் அங்கீகாரம் தருபவராய் இருந்தார்.

வந்தவர் விமலாவைப் பற்றி அழுத்தமாக சிநேக பாவமாய் ரொம்ப அக்கறையோடு விசாரித்தார். உண்மை உணர்ந்ததும் மனசுவிக்க ரெண்டு நிமிஷம் அமைதியாகிவிட்டார்.

''எங்கிட்ட ஒரு வார்த்தை வந்து சொல்லப்படாது? நமக்குள்ள என்ன அன்னியோன்யம். ரெண்டு பேர் கையையும் ஒரே வெலங்கில பூட்டி ஒரு மாசம் வெச்சிருந்தானே? நாம பரிமாறிக்காத உணர்ச்சியா, சிநேகமா.... சரி, இப்பத்தான் என்ன, நல்ல வேலை ஒண்ணு வாங்கித் தரேன். நம்ம ரெண்டாவது மாப்பிள்ளையோட அப்பா இன்கம்டாக்ஸ் கமிஷனரா இருக்காரு... அவர் நெனச்சா எந்தக் கம்பெனிலேயும் வேலை வாங்கித் தருவாரு...கவலைப்படாதே''

அப்போதுகூட அப்பா எந்த வார்த்தையைக் கொண்டும் தன் உள் காயத்தைப் பிரதிபலிக்கவில்லை.

இரண்டு மணி நேரம் பேசிவிட்டு, அப்பாவையும் அந்த ஆர். எம். ஓ.விடம் கூட்டிக் கொண்டு போய்விட்டார். இன்னும் அப்பா வரவில்லை. அம்மா கூடத்துத் தரையின் சில்லிப்பில் உறங்கிப் போனாள். குழந்தைகள் பக்கத்து வீட்டில் காரம் விளையாடிக்கொண்டிருந்தன.

சந்தானம் இப்போது வெறுப்புக்கு ஆளாகி இருந்தாலும் கல்யாணமான புதுசில் சரியாய்ச் சொன்னால் சினிமாத் துறையில் நுழைகிற வரையில் அன்புடையவனாகவே இருந்தான்.

கர்சீப் வாங்குவதாக இருந்தாலும் கூட அவளைக் கேட்டு, அபிப்பிராயம் அறிந்து, பிடித்த நிறம் தேடித்தான் வாங்குவான். ஆனால் அவனே சொன்னது போல், லட்சலட்சமாய்ச் சம்பாதித்தும், அவனுடைய மனைவி வெறும் நூத்தைம்பது ரூபாய்க்கு வேலைக்குப்போக வேண்டிய விதி இருக்கையில் யாரும், எப்படியும், எந்த வினாடியும் மாறலாம் அல்லவா?

எத்தனை உள்ளார்ந்த அன்பும் நேசமும் இருந்தபோதும், எவளோஒருத்தி சில பலவீன நிமிடங்களில் அனுசரணையாக, இங்கிதமாக நடந்து கொண்டதால், எதிர்கால திரைப்பட வாழ்வுக்குச் சரியாக இணையாக இருப்பாள் என்ற எதிர்பார்ப்பினால், மனைவியை பளிச்சென்று ஒரு காகிதத்தைச் சரக்கென்று கிழித்துக் குப்பைக் கூடையில் போட்டு ஒதுக்குவது போல் மனசிலிருந்து புறக்கணித்த பின் அந்த மனிதனை எந்தப் பார்வையில் பார்ப்பது?

இதே முறையில், தான், தன் கணவன் இடத்திலிருந்து செய்திருந்தால் தன்னைப் பற்றி எத்தனை விதமான அபாண்டமான விமரிசனங்கள் வந்திருக்கும்? கிழித்த நாராய் தன்னை, தன் வாழ்வை ஆக்கி யிருக்க மாட்டார்களா?

இத்தனை தூரம் வந்த பின்னால் அவனிடம் திரும்பவும் போய் வாழ்வது தன் பெண்மைக்குப் பங்கமான விஷயம் என்று உறுதியாகத் தீர்மானம் செய்து கொண்டாள்.

வாழ்வு என்பது வாழும் முறைகளில்தான் அர்த்தம் தொனிக்கக் காத்திருக்கிறது. அவனிடம் சரணடைவது, அவனுடைய ஒழுக்க மீறுதல்களை, மனைவியைப் போற்றத் தெரியாத பண்பற்ற தன்மையைத் தானேவலிந்து அங்கீகரிப்பது போலத்தான் என உணருகையில் இன்னும் தன்னம்பிக்கை வலிவடைந்தது.

வாசல் கதவு திறக்கும் சப்தம் கேட்டு அம்மா எழப் பார்த்தாள்.

''நீ படும்மா, நா பார்க்கறேன். அப்பாவாக இருக்கும்.''

கை(கண்ட) வைத்தியம்

பெரியவர்களாகட்டும், சிறு குழந்தைகளாகட்டும், நெஞ்சில் கபம் கட்டிக்கொண்டு கஷ்டப்பட்டால் அரிசித் திப்பிலியை வெறும் வாணலியில் தணல் ஆகும்வரை வறுத்துக் கொண்டு அது ஆறினதும் தேனில் குழைத்து மூன்று வேளை கொடுத்தால் கபக்கட்டு அறுந்து வெளிவந்துவிடும்.

—கே. ஜெயலக்ஷ்மி



விமலா எழுந்து போவதற்குள் அப்பா உள்ளே வந்து விட்டார்.

''என்னம்மா தூங்கிட்டிருந்தியா?''

''இல்லேப்பா.''

''கொழந்தைக எங்க?''

''பத்மா வீட்ல.''

''அம்மா?''

''இருக்காப்பா.''

''.....''

''ஏம்ப்பா, மொகமெல்லாம் ஒருமாதிரியா இருக்கு? ஒடம்பெல்லாம் வேர்த்து வெள்ளமா நனைஞ்சிருக்கு?''

இந்த வார்த்தைகளைத் தொடர்ந்து அம்மா எழுந்து கொண்டாள்.

அப்பா சட்டையைக் கழற்றிக் கையில் வைத்துக் கொண்டு தூணில் சாய்ந்தார்.

''என்னம்மா, மாப்பிள்ளை இப்பிடிப் பண்ணியிருக்கார்?''

''என்னப்பா பண்ணி யிருக்கார்?''

''அவர் கூப்பிட்டதுக்கு நீ வரலேன்னு சொன்னதும், உங்க ஜின்னிங் பாக்டர் ஓனர் கிட்டயும், எங்க மொதலாளி கிட்டயும் என்ன சொன்னுரோ தெரியலே, நம்மரெண்டு பேரையும் நாளேலேர்ந்து வேலேக்கு வரவேண்டாம்னு ரெண்டு பேரும் சொல்லிட்டாங்க. வழிலே வந்தவனைக் கூப்பிட்டு அவங்க அவங்க வீட்லேருந்து சொல்ரு... மொதல்ல ஒன்னைப் பார்க்கணும்னுதான் வேர்த்து விறுவிறுத்து ஓடியாந்தேன்.''

விமலா இதன் எதிரொலியாக எதிர் வினையாக எதையும் நினைக்காமல் மனதுக்குள் தேனீச்வரரைத் தியானித்தாள்.

அம்மா எழுந்த வேகத்திலேயே கண்கள் இருள உட்கார்ந்து கொண்டாள்.

5

நதியின் வேகத்தோடு தழை தாம்புகள் மிதந்து போவது போல் வேதனையின் நிழலோடு, அதன் கனத்தோடு அழுத்தத்தோடேயே பி. காம் தேர்வு எழுதிவிட்டாள்.

அப்பா கூடத் தைரியமாக இருந்தார்.

அம்மாதான் பெரிய தாக்குதலுக்கு உள்ளானது போல் மனசு உடைந்து விரக்தி அடைந்து விட்டாள். குரல் சன்னமாகி விட்டது. வார்த்தைகள் குறைந்து விட்டன. சாயந்திரம் விளக்கு வைக்கும் நேரத்தில் கோவிலுக்குள் புகுந்தால் நெடுங் கதவுகள் அடைக்கும்வரை இருந்து விட்டு கால்கள் தயங்க வீடு வருவாள்.

''தெனமும் இந்நேரமா என்னம்மா சுவாமி கிட்டப் பேசிட்டு இருப்பே?'' என்று விமலா கொஞ்சம் சிரிப்புத் தொக்கக் கேட்பாள்.

''ஸ்வாமிகிட்டப் பேசறதுக்கு காலம் நேரம்னு டைம் டேபிள் போட்டா வச்சிருக்கு?'' என்று அம்மாவும் அதே சிரிப்புத் தொனிக்கச் சொல்லிவிட்டுப் போவாள்.

அவள் வேதனை அவளுக்கு. அதற்காக மனம் உருகி மனம் உருகி உடம்பைக் கெடுத்துக்கொள்ளக் கூடாது என்பதுதான் விமலாவின் வேதனை.

உலகத்தில் நம்மைவிட எத்தனையோ பேர் இதைவிட நிறைய வேதனைகளையும்கொடுமைகளையும் அடைந்திருக்கிறார்கள். அதெல்லாம் நமக்கே தெரியும்போது ஸ்வாமிக்கா தெரியாது.

எல்லாம் நம் மனசைக் கொண்டு சகிப்புத் தன்மையுடன் ஜெயிச்சுக் காட்ட வேண்டும் என்று குழந்தைகளிடம் கூடச் சொல்லுவாள்.

பரிட்சை எழுதிய முதல் வாரத்தில் அப்பாவின் சிநேகிதர் மீண்டும் வந்தார்.

''போன தரம் பார்த்ததுக்கு ரொம்ப மாறி இருக்கே. மொகமே கறுத்து ஒடம்பே உள்ளே போயிருக்கு.... என்னம்மா விமலா, அப்பாவுக்குஉடம்புக்குச்சரியில்லேயா?...நாம



தான் போனமே ஆர். எம். ஓ. கிட்ட? போயிருக்க வேண்டியதுதானே சிவா...'' என்று வேகமாய்ப் பேசினர்.

அப்பா சாவகாசமாய்த் தன் மாப்பிள்ளை செய்த சதிகளை விவரித்தார். அப்போதுகூட, அவர் வேதனையோ, தூஷணையோ அல்லாமல் அந்த விஷயத்தை ஒரு கதையை விவரிப்பது போலத்தான் சொன்னர்.

சினேகிதருக்குத்தான் முகமெல்லாம் சிவந்து, கழுத்து நரம்புகள் புடைத்துக் கொண்டன.

''என்னப்பா சுத்த இவனு இருக்கான்! சினிமாவிலே ரொம்ப நல்லவனு பொம்பளை களைத் தெய்வமாக் கும்பிடணும்னு சொல் ருன். இங்க வந்து போன பின்னுல மெட் ராஸ்ல இவன் நடிச்ச படம் எதுன்னு தேடிக் கிட்டுப் போய்ப் பார்த்தேன்.... ஏம்மா, விமலா நீ பர்மிஷன் குடு. உன் வீட்டுக்காரனை உன் கால்ல விழ வைக்கிறேன்.... இன்கம் டாக்ஸ்னு சொல்லி அவன் பங்களாவ நம்ம ரெண்டாவது சம்பந்தியை விட்டு ரெய்டு பண்ணச் சொல்றேன். பங்களாவைத் தலை கீழாத் தோண்டிப் பார்த்துடுவாங்க...தரை கிரை யெல்லாம் பேத்துத் தள்ளிடுவாங்க. எப்படியும் பிளாக்லே வெச்சிருப்பான். ரெண்டு ஜென்மத்துக்கு எழ முடியாதபடி பண்ணிடுவாங்க. அப்புறம் சினிமாவாவது, சரண்யாவாவது...''

''அவர் எக்கேடும் கெட்டுப் போகட்டும் ஸார். எல்லாருக்கும் ஸ்வாமி இருக்கார். எனக்கு உங்க சம்பந்தியை விட்டு நல்ல வேலை யாப் பாத்துக் குடுங்க. நான் பொழைச்சுக்கு வேன். கொழந்தைங்கபெரிசாயிட்டு வருது... பெரிய பொண்ணு... இப்பவே இருக்கிற நெலையைப் புரிஞ்சுக்கிட்டு, 'எனக்கு காலே ஜில படிக்க சான்ஸ் வராது'ன்னு தன்னோட சினேகிதிங்க கிட்டச் சொல்லியிருக்கா. என் னோட மனசும் எதிர் காலமும் கனவுகளும் நிர்மூலமாப் போனது போகட்டும். கொழந் தைங்களாவது கொஞ்சம் சந்தோஷமாஇருக் கட்டும்...'' என்று விமலா சொல்லச் சொல்ல அம்மாவின் கண்கள் குளமாகி விட்டன. அப்பா முகத்தை யதேச்சையாக எங்கோ பார்ப்பது போலத் திருப்பிக் கொண்டார்.

''சரிம்மா, நிச்சயம் வாங்கித் தர்றேன். அதே சமயம் இன்னொண்ணையும் சொல்லிட றேன். நான் உனக்கு அப்பா மாதிரிதான். பெரியப்பான்னு வெச்சுக்க. எந்தக் கஷ்டம் வந்தாலும் மனசைத் தளர விடாதே. ஆரம்ப காலத்துல நான் ஒரு கவளச் சோறு கூட இல்லாமல் கஷ்டப்பட்டு இருக்கேன். வந்தே மாதரம்னு எங்காவது கோஷம் கேட்டா ஓடிப்போய், நின்னுக்குவேன். மகாத்மா காந்தியப் பாத்தே தீரணும்கிற வெறில வார்தாவுக்குக் கூட டிக்கட் வாங்காம பல ரயில் மாறிப் போய் பார்த்திருக்கேன். எம் பேரே அந்தக் காலத்தில வார்தா வாகீசன் தான். எப்பப் போலீஸ் வரும், எந்த ஜெயிலுக்குக் கொண்டு போய் எந்த எலும் பைக் கழட்டிக் கையில குடுப்பான்னு தெரி யாது. அத்தனை போலீஸ் வட்டம் என்னைச் சுத்தி. இருந்தும் காத்து மாதிரி சொதந்திர மாத்தான் இந்தியாவையே சுத்திட்டு இருந் தேன். என்ன ஆயிடும்? ஒரு தடவைதானே உசிரு போகும்? போங்கடான்னு எல்லாத் தையும் ஒதறிட்டுப் போயிட்டு இருந்தேன். அதுக்குப் பலன்தானே என்னமோ அந்த மகாத்மா இந்தப் பிச்சை போட்டிருக்கார். சௌகரியமா இருக்கேன். நீ படிச்ச பொண். வெவரம் உள்ளவ. வாழ்க்கையைப் புரிஞ்சு வச்சிருக்கே. கொழந்தைங்க எதிர் காலத் தப் பத்திக் கவலைப்படாதே. நீச்சல் பழ கோணும்னு தண்ணில எறங்காம முடியாது. தைரியமாக் குதி. ஆட்டோமாடிக்கா எல்லாம் நடக்கும். அடுத்த வாரம் வர்றேன். நல்ல சேதியோட வர்றேன். ரெண்டு நாள்ல ஒரு ஆயிரம் ரூபாய்க்கு மணியார்டர் அனுப்ப றேன். பெரியப்பா கிட்ட வாங்கிக்கிறது தப் பில்லைன்னு நெனைச்சுத் தயங்காம வாங்கிக்க. என்னப்பா, சிவா, நீ ஏதாவது ஆட்சேபணை பண்ணிடாதே. நம்ம அந்தக் காலத்தில தேசத்தையே காப்பாத்திடணும்னு போரா டின ஆளுங்க. இப்ப அப்படி முடியாட்டி யும் ஒரு குடும்பத்தையாவது காப்பாத்தற பெருமையையாவது குடு. உம் பொண்ணு உனக்கு மட்டுமில்ல பொண்ணு. எனக்கும் தான், புரிஞ்சுதா....''


அப்பா மௌனமாய்த் தலையாட்டினர்.

வாகீசன் போன மூன்ருவது நாள் ஆயிரம் ரூபாய் வந்து சேர்ந்தது. அவருடைய வார்த் தைகளில் எல்லோருக்கும் நம்பிக்கை சுடர் விட்டது.

சரியாய் அடுத்த வாரம் அவரிடமிருந்து கடிதமும் வந்தது.

● நாவரண்டு எவ்வளவு நீர் குடித்தாலும் தாகம் தீராதிருக்கும் சமயம், சாதா சோடாவை வாங்கி அதை உடைத்து உப்பைப் போட்டுக் குடிக்க தாகம் அடங்கிப் போய்விடும். உப்பை நைசாக அரைத்து தொண்டைக்குழியின் மீது பற்றுப் போட்டுக் கொண்டால், தொண்டை வலி, சுட்டினுல் வரும் இருமல் போன்றவை நீங்கிவிடும்.

—ஜெயலக்ஷ்மி.



6

கடிதம் வந்த மறு நாளே அப்பாவும் அவளும் சென்னை வந்தார்கள். வாகீசன் சொல்லியிருந்தபடி அவருடைய சம்பந்தி மிகப் பிரபலமான ஓர் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தில் ஜூனியர் அக்கௌண்டண்ட் வேலை வாங்கித் தந்தார்.

''இதோ பாரும்மா, இங்கே வேலை கெடைக்கிறது ரொம்ப அபூர்வம். எம். டி. எனக்கு ரொம்ப வேண்டியவர். என் பேரக் காப்பாத்தணும். எழுநூத்து ஐம்பது ரூபா சம்பளம். நீ பி. காம் பாஸ் பண்ணிடுவேங்கற உறுதியிலேதான் இந்தப் போஸ்ட்டைக் குடுத்திருக்காங்க. பாஸ் பண்ணியதுக்கப்புறம் போஸ்டல்ல எம்.காம் படி. அக்கவுண்ட்ஸ்ல மத்த படிப்பு ஏதாவது இருந்தாலும் படி. நல்லபடியா முன்னுக்கு வரலாம். ஆறேழு வருஷத்திலே ஆபீசராக சான்ஸ் இருக்கு. நம்ம வீட்ல தங்கறதுனா நான் சந்தோஷப்படுவேன். இல்லே, உன் சௌகரியத்தச் சொல்லு. அதுக்கு ஏத்தாற்போல ஏற்பாடு பண்ணித் தர்றேன்'' என்று அன்பின் அழுத்தம் தொனிக்க அவர் பேசினார்.

விமலாவின் கண்கள் பனிக்கத் தொடங்கின.

''சார், நானும் எங்கப்பாவும் இங்கேயே தனி வீடு பார்த்துக்கலாம்னு நினைக்கிறோம். கொஞ்ச நாள் என்னோட அவர் இருக்கணும். ஊர்ல அம்மா கொழந்தைகளைப் பாத்துக்குவா...''

''ஓ.கே.... ஒண்ணு செய்வோம். டி. நகர்ல உங்க ஆபீஸோட கெஸ்ட் அவுஸ் இருக்கு. அதுலியே சின்னதா அவுட் ஹவுஸாட்டம் குட்டி பங்களா இருக்கு. அதுல ரெண்டு பேரும் தங்கிக்கலாம். நான் உங்க எம். டி. கிட்டச் சொல்லி கன்வின்ஸ் பண்ணிக்கிறேன். கெஸ்ட் ஹவுஸை நிர்வாகம் பண்றதுக்குச் சரியான ஆள் ஒருத்தர் வேணு முன்னுகூடச் சொல்லி இருந்தார். முந்தி இருந்தவன் அதை மிஸ்யூஸ் பண்ணிட்டான். இருநூறு ரூபா சம்பளம் தருவாங்க. அப்பா அதப் பார்த்துக்கட்டுமே...? என்னம்மா சொல்றே?''

தேக்கி வைத்த கண்ணீர் இதயத்திலிருந்து பீறிட்டு அணை உடைந்த வெள்ளமாய் கரை புரண்டு ஓடியது.

''எல்லாத்துக்கும் ஸ்வாமி இருக்கார்னு சொல்லிண்டிருப்பேன். ஸ்வாமியே உங்க உருவுல வந்து நிக்கறீர். நீங்க சொல்ற வார்த்தையை ஏத்துக்கறோம்.''

''இதுல என்னம்மா இருக்கு? மனசுக்குத் தகுந்தாப்போலத்தான் காரியங்கள் நடக்கும். அழாதே... எனக்கும் உன்னோட வயசுல ஒரு பொண்ணிருக்கு. அதுக்கு இந்த மாதிரி நிலைமை வந்தா என்னோட சகல விதமான செல்வாக்கையும் உபயோகப்படுத்த மாட்டேனா? மொதல்ல மொகத்தைக் கழுவி விட்டு வா.... சார், நீங்க இந்தப் பணத்தை வாங்கிக்கிங்க. சம்பந்தி வாகீசன்தான் குடுக்கச் சொன்னார். புதுக் குடித்தனத்துக்கு வேண்டிய சாமான்களும் பண்டங்களும் வாங்கிக்கணுமில்லே... நம் வீட்ல பாத்திரங்கள் இருக்கு எடுத்துக்கட்டும்... என்ன ஜனகம், விமலாவை உள்ளே அழைச்சுட்டுப் போ.'' என்று மனைவிக்கு அங்கிருந்தபடி உரத்த குரலில் சொன்னார்.


இன்னும் போகாதிருந்த விமலா அடக்க முடியாதகண்ணீருடன், ''அப்பா, பணத்தைத் வாங்கிக்கிங்க.... ஆனா, சார், தப்பா எடுத்துக்கக் கூடாது. இப்ப இல்லாட்டியும் எப்பவாவது ஒரு நாள் இதைத் திருப்பித் தருவேன். அப்ப, மாட்டேன்னு சொல்லாம வாங்கிக்கணும்...'' என்று சொல்லச் சொல்ல வார்த்தை மங்கி விட்டது.

''அப்போதைக்குப் பார்த்துக்கலாம்.''

இரண்டாவது நாள் ஆபீஸ் போனாள். நிறுவனத்தின் விருந்தினர் விடுதியின் அவுட் ஹவுஸில் அவள் தங்கிக்கொள்ள அனுமதி கிடைத்தது. அலுவலகம் அண்ணா சாலையில் ஒரு ஆறு மாடிக் கட்டிடத்தில் ஐந்தாவது மாடி முழுவதும் நிறைந்திருந்தது. ஏர் கண்டிஷன் வசதி. எல்லோரும் மிக நாகரிகமாக, சுத்தமாக, வார்த்தைகளை அவசியம் உணர்ந்து பேசுபவர்களாக இருந்தார்கள். எல்லாரும் பட்டதாரிகள். எம். டி.யே தனிக் கவனம் எடுத்து வேலைக்கு சேர்த்துக் கொண்ட உண்மையை எல்லோரும் உணர்ந்திருந்தார்கள். அதனால் நிறைய மரியாதையும், கொஞ்சம் பயமும் வைத்துப் பழகினார்கள்.

அம்மாவுக்கும் குழந்தைகளுக்கும் தன் சந்தோஷத்தைப் பக்கம் பக்கமாய் எழுதினாள். அடுத்த மாதம் ஊருக்கு வரும்போது தேனீச்வரருக்குப் பாலாபிஷேகம் செய்யப் போவதாய் வேண்டிக் கொண்டாள்.

அப்பா மனசு தேறி, சாயந்திரம் அவள் திரும்பி வரும்போது பேசுவதற்கு நிறைய விஷயங்கள் வைத்திருந்தார்.



● கால் பெருவிரலின் இடுக்கில் மண் புகுந்துகொண்டு வலி உயிரை வாங்கிவிடும் அதற்குத் தீக்குச்சியின் தலையை நல்லெண்ணெயில் தோய்த்து எரியும் விளக்கில் காட்டி அதிலிருந்து சொட்டும் எண்ணெய் சுரீரென்று கால் விரல் இடுக்கில் விழுமாறு செய்ய வேண்டும். இதற்குச் சுடர் அடிப்பது என்று சொல்வார்கள். நிச்சயமாக வலி போய் விடும்.

—ஜெயா

''நம்ம ஊர்ல காத்தோட குளுமையே வேறே. ஆத்தங் கரையும் தென்னந் தோப்பும் தேனீச்வரர் கோயிலும் கோபுரமும் இந்த அறுபது வருஷமா கண்ணில நின்னுது. நின்னு மனசுகூட ஊர்னு இதெல்லாம் ஒரு அவசியமா இருக்கணுமேன்னு நெனைக்க ஆரம்பிக்குது. ஆனா இங்கே அது இல்லே. அந்த ஜனங்களும் இல்லை. ஒட்டாத மனசு. ஒட்டாத வார்த்தை. ஒட்டாத மொகம். எதிலியும் சேர்த்தி இல்ல...'' என்று அப்பா தன் தாளாமையைச் சொன்னார்.

''என்னப்பா பண்றது. ஒலகம் மாறிட்டு வருது. கட்டின பொண்டாட்டியை விட்டுட்டு எவளோ வந்தான்னு அவளைத் தலைக்கு வச்சுட்டு இருக்கற ஆளுக நிறைஞ்ச ஒலகம். அதக் கண்டிக்கவோ, சட்டையைப் புடிச்சுக் கேக்கவோ என்கூட ரெண்டு அண்ணன் தம்பி பொறந்திருந்தா அவரு இப்பிடி நடந்துக்குவாரா? இந்த லட்சணத்துல, இருக்கிற வேலைக்கும் வேட்டு வெச்சாச்சு. அதும் பாருங்க... இவரு சொன்னாருன்னு நம்ம மொதலாளிகளும் கேட்டுட்டு நடந்தாங்களே முதுகெலும்பு இல்லாம... இப்பிடி ஒலகம் இருக்கிறப்போ எல்லாரும் ஒட்டாமத்தான் நடந்துக்குவாங்க. முன்னெச்சரிக்கையா இருக்கணும்னு நெனைக்கிறது தப்புல்ல. தினமும் பீச்சுக்குத்தான் போய்ட்டு வாங்களேன்... சமுத்திரக் காத்து நல்லதுதானே...''

''சாயந்திரம் பஸ்லதான் பாக்கறேனே கூட்டத்தை? என்னால போய்த் திரும்பறது கஷ்டம்மா. பக்கத்துல கிரஸண்ட் பார்க்னு ஒண்ணு இருக்கு. வெடியக் காத்தால ரொம்பப் பேர் அங்க வாக் போறாங்க... ஓடறாங்க. அதுவும் யார்னு கேக்கறே... தமிழ், தெலுங்கு சினிமா பீல்ட்ல இருக்கிற முக்கியமான ஆளுக எல்லாம் தினசரி வர்றாங்களாம்... டைரக்டர், பாட்டு எழுதறவங்க, காமிரா மேன் நடிகர்கள்னு ரொம்பப் பேராம்...''

''இவர் ஒரு சமயம் வர்றாரோ என்னமோ?''

''தெரியலம்மா.''

''ஆனா அப்பிடி யெல்லாம் வர மாட்டார். போயஸ் கார்டன்ல வீடு. போனா வெடியக் காத்தால எலியட்ஸ் பீச்சுக்குப் போவார்.''

''ஆ, மறந்துட்டேனே, விமலா?''

''என்னப்பா?''

''இந்த வெள்ளிக்கிழமை கெஸ்ட் ஹவுஸ்ல ஏதோ சினிமாப் படத்துக்கு ஷூட்டிங் எடுக்கறாங்களாம். மவுண்ட் ரோட் ஆபீஸ் லேர்ந்து மத்தியானம் போன் வந்தது.''

''என்ன படமாம்?''

''பேர் தெரியலே. ஆனா டைரக்டர் பேரு மாணிக்கம்னு சொன்னாங்க. நம்ம வீட்டுக்கு வந்தாரே அந்த மாணிக்கமா?''

''ஆமாம்பா.''

ஓரளவு சௌகரியத்தின் ஆரம்பத்துக்கு வந்திருக்கும் நிலையில், வெள்ளிக் கிழமை காத்திருந்து மாணிக்கத்தைச் சந்தித்தால் என்ன என்ற எண்ணம் மனசில் கிளர்ந்தது.

''அன்னைக்கு ஷூட்டிங் பார்க்கப் போறேன்பா'' என்றாள் விமலா.

7

வெள்ளிக் கிழமை தலைக்குக் குளித்துவிட்டு சாப்பிட்டுவிட்டு, அழுக்குத் துணிகளைத் துவைத்துவிட்டு, அந்த வாரம் வந்திருந்த பத்திரிகை ஒன்றைப் படிக்கக் கையில் எடுத்த போது, கூர்க்கா அகலமான கேட்களில் ஒன்றைத் திறந்து ஸ்கூட்டரில் வந்தவரிடம் என்னவோ பேசினான். ஸ்கூட்டர்காரர் அப்படியே திருப்பிக் கொண்டு போன அரை மணி நேரத்தில் நாலைந்து கார்கள், சினிமா யூனிட் ஒன்றின் பெரிய வேன் ஒன்றுமாக வந்தன.


கெஸ்ட் ஹவுஸில் அப்போது ஜெய்ப்பூரில் இருந்து வந்திருந்த கம்பெனி ஆட்கள் மூன்று பேர் மட்டும் தங்கி யிருந்தார்கள். அவர்களும் விடியலிலேயே எழுந்து மகாபலிபுரம் போயிருந்தார்கள்.

சினிமாக்காரர்கள் வந்து இடம் பார்த்து எந்தக் கோணம், எப்படி வெளிச்சம் என்றெல்லாம் தீர்மானித்துத்தானே ஷூட்டிங் நடத்துவார்கள் என்று அவளுக்குத் தெரிந்த விவரங்களை நினைத்துக் கொண்டு, தன் அறைக்கு மீண்டும் திரும்பி, அந்தப் பத்திரிகையிலேயே ஆழ்ந்து போனாள்.

அதில் சந்தானத்தைப் பற்றிச் சில விவரங்களைக் குறித்திருந்தார்கள். அடுத்த மாதம் நடிகை சரண்யாவுடன் அமெரிக்கா போகிறானாம். அங்கேயும் ஷூட்டிங்காம். வருவதற்கு ஒரு மாதமாகுமாம். ஏற்கனவே அவனுக்கு விமலா என்ற முதல் மனைவி உண்டு என்ற செய்தியையும் அதில் வெளியிட்டிருந்தது.

யாரோ கதவில் பொருத்தப்பட்டிருந்த அழைப்பு மணியை அழுத்துவது தெரிந்தது. மணியின் ஒலி கிர்ரென்று அறை முழுவதும் பரவியது. எழுந்து கதவைத் திறந்து நிழலில் முகம் கறுத்து நின்றிருக்கும் மாணிக்கத்தைப் பார்த்தாள்.

● மருதாணி இட்டு மறுநாள் கைகழுவியவுடன் ஒரு துளி தேங்காய் எண்ணெயை எடுத்து இரு கைகளிலும் நன்றாகத் தேய்த்து விட்டால் சிகப்பு நிறம் நேரமாக ஆகக்கூடி மிக அழகாகக் காட்சி அளிக்கும். —ப்ரியா



''ஹலோ மிஸ்டர், மாணிக்கம்'' என்று தன்னுடைய அந்நியத் தன்மையை மாணிக்கம் உணரட்டும் என்ற வகையில் சொன்னதும் மாணிக்கம் அந்தக் காலே நேரத்தில் தன் கண்களின் ஒத்துழைப்பை நம்பவில்லே.

''நீங்கள் மிஸஸ் விமலா தானு? ரொம்ப ஆச்சரியமா இருக்குங்க... ஏதோ அதிசயம் பூமியிலே நடந்திட்டு இருக்கு. ஆனு, நம்ம பார்வைக்கு வரதில்லே...'' என்றவன், ''எக்ஸ்கியூஸ் மி, போன் செய்யணும். கெஸ்ட் ஹவுஸ் போன் பூட்டி இருக்கு. சாவி இந்த வீட்ல இருக்கிற பெரியவர் கிட்ட இருக்கும்னு கூர்க்கா சொன்னுன். பெரியவர்ங்கிறது யார்? உங்கப்பாவா? எனக்கு ஒண்ணும் புரியலீங்க விமலா...'' என்ற அவன் முகமும் வார்த்தைகளும் ஆச்சரியத்தில் மூழ்கி விடுவன போல் இருந்தன.

''அப்புறம் சொல்றேனே... சாவிதானே? தர்றேன்... லோகல் கால் தானே?''

''ஆமாமா...''

அவள் கொடுத்த சாவியை வாங்கிப்போனவன் பத்து நிமிஷத்தில் திரும்ப வந்தான்.

''இந்த ஷூட்டிங்ல ஒரு நடிகை நடிக்கணும். 'போங்க, பின்னுல வர்றேன்'னு நடிகை சொன்னவங்க, ஒரு மணி நேரமா வர்ருங்க...போன்பண்ணிஞ, அவுங்க அம்மா 'என்னுேட மக ஹைதராபாத் பொறப்பட்டுட்டா'ன்னு சர்வ சாதாரணமா சொல்ருங்க.என்ன பண்றதுன்னு புரியலே. அவ இல்லாமல் நடக்காது. ரொம்ப எடத்துல கண்டினியூட்டி போயிடும். போனவ எப்ப வருவான்னு தெரியாது. ஹீரோயின் கூட வந்தாச்சு. இன்னைக்கு ஹீரோயினே விட்டா அடுத்த வாரம்தான். அந்த அம்மா கால்ஷீட் முடிஞ்சுது. மேற்கொண்டு வாங்கறதுன்னு இந்த வருஷத்தில கெடைக்காது.'' என்று மாணிக்கம் சொல்ல, அவனைத் தொடர்ந்து ''டைரக்டர் சார்,ஹீரோயின் ஷூட் பண்ண ஏன் டிலேன்னு கொடையருங்க...'' என்று சொல்லிக் கொண்டு வந்த ஆள், விமலாவைப் பார்த்து ஒரு விஞடி திகைத்து நின்றுவிட்டு முகம் மலர்ந்தான்.

''சார், இவங்களைக் கவனிச்சீங்களா?''

''என்ன, சுமந்திரன்?''

''வனஜா ஜாடை மொகத்துல அப்படியே ஒட்டியிருக்கு. லாங் ஷாட்ல காட்டிஞ ரெண்டு பேருக்கும் வித்தியாசம் தெரியாது. மேடம், நான் இந்தப் படத்தோட காமிராமேன். வனஜா ஹைதராபாத்துக்குப் போய் விட்டா. அவளுக்கு இது கடைசி கால்ஷீட். இது முடிஞ்சுட்டா படம் முடிஞ்ச மாதிரிதான். ப்ளீஸ், எங்களுக்காக ஒத்துக்கங்களேன்....?''

விமலாவுக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது.

''டோன்ட் பி ஸில்லி.''

''மேக்கப் ஒண்ணும் வேண்டாம். நாங்க தர்ற பொடவையைக்கட்டிட்டு, ஹீரோயினே 'வாங்க வசந்தான்னு' ஒரே வாக்கியத்தைப் பேசிட்டு இந்த கெஸ்ட் ஹவுஸைச் சுத்திக் காண்பிக்கணும். அந்த வார்த்தையை நீங்க சொல்லோணும்னு கூட அவசியமில்லே. டப்பிங்லே இன்னெரு ஆர்ட்டிஸ்டை வச்சுப் பேச வைக்கிறேம்.''

''இந்தப் படத்தோட ஹீரோ யார், மாணிக்கம்?'' என்று கேட்டாள். அவள் கண்களில் மின்னல் போல் ஆர்வம் கிளர்ந்து மறைந்தது.

மாணிக்கம், காமிராமேனே ஓரக் கண்ணுல் பார்த்துவிட்டுத் தயங்கிச் சொன்னுர்.

''மிஸ்டர் சந்தானம்தான்.''

''படத்தோட ரிலீஸ் டேட் எப்போ?''

''அவர் ஸ்டேட்ஸ் போருர். அதுக்கு முன்னுலே படத்தை ரிலீஸ் பண்ணிடனும்கிருர். இது சின்ன விஷயம்தான். ஆனு படத்துக்கு முக்கிய திருப்பத்தைக் குடுக்குது. இல்லேன்னு படத்தைத் திரும்பவும் மாத்தி எடுக்கணும்னு பலபேரோட கால்ஷீட்டை வாங்கணும். அது ரொம்பக் கஷ்டம். நீங்க ஒத்துழைச்சா நல்லா இருக்கும், ரொம்ப உதவியாய் இருக்கும்.''

மாணிக்கம் குரல் ரொம்பவும் தழைந்திருந்தது.

''சினிமாதான் என்னுேட வாழ்க்கையை மாத்தி அனுதைக் கோலத்துக்குக் கொண்டு வந்தது. சொந்த ஊர்ல நூத்தைம்பது ரூபாய் சம்பளத்துக்கு வயித்துக்காகப் பாடுபட வைச்சது. கோயிலுக்கும் ரெண்டு மூணு பிரண்ட்ஸ் வீட்டுக்கும் மட்டும் போய்ப் பழக்கமான என்னே, எதிர்கால பயத்தோட மூணு கொழந்தைகளே வைச்சுக்கிட்டு அந்த ஊர்ல பல தெருக்களே கடக்க வச்சது. எம்புருஷன் பெரிய சினிமா ஸ்டார்னு பெரிய பேரு. அவரு பென்ஸ்லேயும் ஸ்காட்ச்லேயும், டன்ஹில் சிகரெட்டிலேயும் மிதந்திட்டிருக்காரு. இந்த லட்சணத்துல நானும் அப்பாவும் செஞ்சிக்கிட்டிருந்த வேலேலேயும் மண்ணேப் போட்டார். இப்ப, நானே ஒரு



● செருப்பு மற்றும் பூட்ஸ்களுக்குப் போடும் பாலிஷ் இறுகிவிட்டதா? தூக்கி எறிந்து விடாதீர்கள். நன்ருக பொடி செய்து டர்பன்டைன் தைலத்தை சிறிது விட்டுக் கலந்து கொள்ளவும். புதிய பாலிஷ் ரெடி.

ஆ. பானுமதி

செகண்டோ, ஒரு நிமிஷமோ ஒரு மணி நேரமோ சினிமாவுல நடிச்சா எப்பேர்ப்பட்ட முரண்பாடா இருக்கும்?''

''முரண்பாடுங்கிற வார்த்தையைக் காட்டிலும் எதிர்பார்க்காத சந்தர்ப்பம்னு வெச்சுக்கலாமுங்க விமலா.''

''ஒருவேளை இந்த சான்ஸே, சினிமாவுல நீங்க நொழைஞ்சு பெரிய ஸ்டாரா ஆகறதுக்குத் திறவுகோலா இருக்கலாமில்லே?''

''அப்ப உங்க ஹீரோ எனக்கு எதிரா பல சதிகளைச் செஞ்சு மறுபடியும் என்னை நடுத்தெருவுக்குக் கொண்டு வர மாட்டார்னு என்ன நிச்சயம்? இப்பத்தான் அதிர்ஷ்டவசமா ஒரு பாதுகாப்பான வருமானம் கெடைக்க ஆரம்பிச்சிருக்கு. இதையும் இழந்துட்டு நிக்கணுமா?''

''அப்படி ஒண்ணும் நடக்காது மேடம். இதுக்குச் சம்மதிங்க. பின்னால வர்றதப் பத்தி யோசிக்கலாம்'' என்றார் காமிராமேன்.

''அதுக்கு என்ன பணம் தருவீங்க?''

''வனஜாவுக்கு மொத்தமே ஆயிரம் ரூபாய்தான் தர்றோம். நீங்க சில ஷாட்ஸ்லதான் வர்றீங்க. என்ன பணம் தர்றது, நூறு ரூபாய் தரலாம்...''

என்று மாணிக்கம் சொன்னதும் விமலாவுக்கு எரிச்சல் வந்தது.

''நான் நடிக்கலேன்னா ஆயிரக் கணக்கா நஷ்டமாகும்னு சொன்னீங்க. அந்த நஷ்டத்தைப் போக்கற எனக்கு நூறு ரூபாயா? ரெண்டாயிரம் ரூபா இப்பக் கேஷா குடுப்பீங்களா? நீங்க சொன்னபடி நடிக்கிறேன்.''

மாணிக்கம் அசந்து விட்டார்.

சில விநாடிகள் நகர்ந்தன.

''ஓகே, விமலா, அரை மணிலே பணத்தைத் தர்றேன்'' என்றவர் புரொடக்ஷன் மானேஜரைக் கூப்பிட்டார்.

புலவும் ஏப்பமும்

வீட்டிலோ, வேறு விருந்திலோ அருமையான புலவு பரிமாறுகிறார்கள். மணமும் சுவையும் உங்களை ஒரு கை பார்க்கச் சொல்கிறது. நன்றாக சாப்பிட்ட பின் ஏப்பம் வந்தவாறு இருக்கும். இதனை தவிர்க்க வேண்டுமானால் 'புலவு' சாப்பிட்ட பின் மிதமான வெந்நீரை ஒரு குவளை அருந்துங்கள், ஏப்பம் வராது.

-இராணி அரசு



8

அந்த ஷூட்டிங் முடிந்து மூன்றாவது வாரம் ஒரு பிரபல பத்திரிகையில் நடிகர் சரத்குமாரின் மனைவி நடிக்கிறார் என்ற செய்தியைப் பெரிதாகப் போட்டு, அது சம்பந்தமான அவளுடைய ஸ்டில் போட்டோ ஒன்றையும் பெரிதாகப் போட்டிருந்தார்கள்.

குப்பென்று முகம், கழுத்து, உள்ளங்கை என்று வியர்த்து விறுவிறுத்தது.

''என்னம்மா, அன்னைக்கு விளையாட்டா செஞ்ச காரியம் இப்படி விஸ்வரூபம் எடுத்திருக்கே?'' என்று அப்பா கேட்டதும், இன்னும் மனசில் படபடப்பு அதிகமாகிவிட்டது.

''எனக்கு ஒண்ணும் பேச வர்லேப்பா'' என்றாள் நாக்குத் தடுமாற.

''இதனால எடைஞ்சல்தான் வரும்.''

''பாக்கலாம்ப்பா, அதுக்கெல்லாம் பயந்து எங்க ஒளியறது....''

''ஊர்ல அம்மாவுக்குத் தெரிஞ்சா என்ன சொல்லப் போறாளோ? மாப்பிள்ளை வேற என்ன செய்யப் போறாரோ?''

''இதோட எதிரொலி என்னாகறதுன்னு பாப்பம்.''

மறுநாள் ஆபீஸ் போகும்போது சிலர், அவளை உற்றுப் பார்ப்பது தெரிந்தது. பஸ்ஸில் சில பெண்கள் திரும்பத் திரும்பப் எதையோ பேசிக் கொண்டார்கள். அலுவலகத்தில் சக ஊழியர்கள், சரத்குமாரின் மனைவி என்று தெரிந்ததும் தங்களது பிரமிப்பையும் சந்தோஷத்தையும் தெரிவித்துக் கொண்டனர்.

சாயந்திரம் வீடு திரும்புகையில்,

கெஸ்ட் ஹவுஸ் முன் ஒரு வெள்ளை டயோட்டா ரதம் போல் நின்றிருந்தது. உள்ளே அப்பாவுடன் பேசும் இன்னொருவர் குரலொலி கேட்டது. அவள் உள்ளே போனதும் பெருந்தன்மை மிக்கவராய்த் தோன்றிய மனிதர் எழுந்து வணங்கினார்.

''நான் புரொட்யூஸர் மோகனசுந்தரம். இதுவரை பதினைஞ்சு படம் எடுத்திருக்கேன். என்னோட அடுத்த படத்திலே உங்களை 'புக்' செய்யலாம்னு வந்திருக்கேன். உங்க விருப்பத்தைத் தெரிவிக்கணும்.''

அவள் அப்பாவின் முகத்தைப் பார்த்தாள்.

''அப்பாகூட உங்க விருப்பம்தான் முக்கியம்னு சொல்றார்.''

''அன்னைக்கு ஒரு மனநிலைல அந்தச் செஞ்சேன். ஆனா, இப்படி இது பிரும்மாண்டமா வளரும்னு நெனைக்கலே சார்.''

''சின்ன விதைதான் பெரிய மரமாகும். பெரிய பயணத்துக்குக்கூட முதல் காலடிதான் ஆரம்பம். சின்ன ஊற்றுதான் கங்கையா காவிரியா மாறது. வாழ்க்கை எந்த நிலைல உயரணும்னும், இறங்கணும்னும் கடவுள் ஏற்பாடு வச்சிருப்பார். அத நாம மாத்த முடியாது. இதுல உங்களுக்குச் சிரமம் இல்லே. இப்பல்லாம் அழகு, உடம்பு

பெர்ஸனலிட்டி எதுவும் பார்க்கறதில்ல. நீங்க நிஜ வாழ்க்கையில எப்படி இருக்கீங்களோ அப்படிப் பேசி நடந்துக்கணும்னு ரசிகர்கள் எதிர்பார்க்கறாங்க. நீங்க சில பிரேம்ல இருக்கிறீங்கன்னு தெரிஞ்ச பின்னால அந்தப் படத்துக்குத் திடீர்னு கிராக்கி வந்திருக்கு. சில ஏரியா விக்காம இருந்திருக்கு. ஆனா இப்ப நீ நான்னு போட்டி போட்டு வாங்க வந்திருக்காங்க. சினிமா உலகம் ஒரு மாயா பஜார். திடீர்னு எது வேணும்னாலும் நடக்கும். உங்க மேலே ஆயிரம் வாட்ஸ் பல்ப்பைப் போட்டு வெளிச்சம் உண்டாக்கவும் ஆள் இருக்கு. இல்லேன்னா கபக்னு போர்வையால முகத்தை மூடி இருட்டடிச்சு வாழ்க்கையையே அஸ்தமிக்க வைக்கவும் ஆள் இருக்கு. சான்ஸ் வர்றப்ப, நாம யூஸ் பண்ணிக்கணும். அதுதான் புத்திசாலித்தனம். பணம் வாழ்க்கை பூராவும் கெடைச்சுக்கிட்டு இருக்காது. கதவைத் தட்டும்போதுதானே திறக்கணும்?''

''நீங்க சொல்றதுல உண்மை இருக்கு. ஆனா என்னோட பயம் வேறே'' என்று தயங்கினாள்.

''பணம் சம்பந்தமாகவா?''

''அதில்லே சார்.''

''பின்னே?''

''மிஸ்டர் சந்தானம் — அதுதான் சரத்குமார். எனக்கு ஏதாவது இடைஞ்சல் பண்ணுவாரோன்னு பயமாய் இருக்கு.''

அவர் கடகடவென்று சிரித்தார்.

''நீங்க வெளிச்சத்துக்கு வந்திட்டீங்கன்னா ஒரு பயலும் ஒண்ணும் செய்ய முடியாது. பயப்படுவான். ஊர் பேர் தெரியாதவங்களை மிரட்டலாம். ஆனா உங்க கிட்ட அவர் வர மாட்டார். வேணும்னா, ஏதாவது பத்திரிகைல உங்க பேட்டி ஒண்ணைப் போட்டு உங்க பயத்தையும் குறிப்பிடும்படியா எழுத வச்சிடுவோம். அவர் உங்களைப் பார்க்கக் கூடப் பயப்படுவார். ஏதாவது உங்களுக்கு ஆச்சுன்னாக் கூட அவரைத்தான் புடிச்சுக்குவாங்க....இன்னும் சரியாச் சொன்னா, அவருக்குக் கதாநாயகியா நடிக்க வேண்டி வரும். எதையும் யாரும் எப்போதும் நிர்ணயிக்க முடியாது.''

விமலா மௌனமாய் யோசித்தாள்.

''எனக்கு என்ன பணம் தருவீங்க சார்?',

''ரொம்பக் கெட்டிக்காரப் பொண்ணும்மா. ஆரம்பத்திலேயே பிஸினஸ் லைக்கா பேசறீங்க. எனக்கு இப்படிப் பேசினாத்தான் புடிக்கும். ஒரு லட்சம் தர்றேன். படம் வெற்றின்னா இன்னொரு ஐம்பதினாயிரம் தர்றேன். நீங்க சம்மதிச்சா நாளைக்கே ஒரு லட்சம் தர்றேன். ஆனா, ஒரு கண்டிஷன். என்னோட படம் முடியற வரைக்கும் மத்த படத்தில நடிக்கக் கூடாது.''

''உங்க படம் முடிய வருஷக் கணக்கா ஆனா?''



யானை கும்பலாகப் போகும்போது அவைகளுக்குத் தலைமை தாங்குவது பெண் யானைதான். —ப்ரியா பாலு

''அதிகபட்சம் போனா மூணு மாசம்தான் எல்லா விஷயத்துக்கும் அக்ரிமெண்ட் போட்டுக்கலாம்.''

''ரொம்ப நன்றி சார். ஆனா இந்த விஷயமா நான் சிலரைக் கலந்தாலோசிக்கணும். அடுத்த வாரம் வாங்க. முடியும் அல்லது முடியாதுங்கறதத் தீர்மானமாச் சொல்லிடறேன்.''

மோகனசுந்தரம் சந்தோஷமாக விடைபெற்றுக் கொண்டார்.

'முதல்ல ஊருக்குப் போகணும். அம்மாவிடமும் குழந்தைகளிடமும்சொல்லி அவர்கள் கருத்தைத் தெரிஞ்சுக்கணும். அப்புறம் ஊரில் அப்பாவின் சில நண்பர்கள், வாகீசன், இங்கே அவருடைய சம்பந்தி, இந்த நிறுவனத்தின் எம். டி....'

மறுநாள் அப்பாவுடன் புறப்பட்டாள். மூன்று நாள் அம்மா முதல் வாகீசன் வரை பார்த்தார்கள்.

எல்லோரும் வருகிற வாய்ப்பையும் பணத்தையும் விட்டு விடக் கூடாது என்றுதான் சொன்னார்கள். அம்மா ரொம்ப நேரம் வாதாடிவிட்டுச் சம்மதித்தாள். குழந்தைகள் சந்தோஷப்பட்டார்கள். அப்பாவின் நண்பர்கள் கஷ்டம் விடிந்தது என்றார்கள்.

வாகீசன் உணர்ச்சி பொங்கப் பேசினார்.

''நீ நடிம்மா... உன்னோட புருஷனுக்கு முன்னால நிமிர்ந்து நிக்கணும். போடா, பரதேசிப் பயலே... என்கிட்ட லட்சங்களும் அபரிமிதமான சௌகரியங்களும் இருக்குடான்னு நடந்துக்கணும். நீதின்னா ரெண்டு பேருக்கும் ஒரே நீதி. நீ நடி. அமோகமாப் பேரும் புகழும் வாங்கிக் கோடீஸ்வரி ஆயிடுவே. அப்பாவையும் அம்மாவையும் நல்லாக் கவனிச்சுக்க.'' என்றார்.

விமலாவுக்கு மனசுக்குள் தைரியம் ஒளியாய்க் கடல் போல் பிரவாகித்து ஆர்ப்பரித்து அலையடித்தது.

9

மோகனசுந்தரம் தன் வாக்குப்படி ஒரு லட்சம் ரூபாய் கொடுத்தார். ஒவ்வொரு

விஷயத்துக்கும் கவனமீாய்ப் பேசிப் புரிய வைத்து ஒப்பந்தம் எழுதிக் கொண்டார்.

''அடுத்த வெள்ளிக் கிழமை முதல் ஷூட்டிங் ஆரம்பம். அதுக்கு முன்னுல பத்திரிகையாளர் முன்னுல ஒரு அறிமுகம் செய்து வைக்கிறேன். ஹோட்டல் சோழாவுல ஒரு பார்ட்டி வெச்சுக்கலாம். ரொம்ப இயல்பாய் நடந்துக்குங்க. மனசில ஒளி உண்டானுல் வாக்கில் ஒளி உண்டாகும்கிற மாதிரி, மனசில தைரியமா இருங்க. மத்தத நான் பார்த்துக்கறேன். என்னே எல்லோரும் ஸ்டார் மேக்கர்னு சொல்லுவாங்க. உங்களே ரொம்ப உச்ச நிலேக்குக்கொண்டு வரணும்னு உங்களேப் பார்த்த நிமிஷத்திலேயே உறுதியா நினேச்சுட்டேன். பூஜை அன்னேக்கு, பல பெரிய புள்ளிங்க வர்ருங்க. எல்லார் கிட்டயும் ஒரே மாதிரியா மரியாதையா அடக்கமா நடந்துக்குங்க. ஏன்னு, இந்த லேன்ல மட்டும் எதிர் காலத்தில யார் எப்படி இருப்பான்னு சொல்ல முடியாது. லேட்பாய் எல்லாம் புரட்யூஸர் ஆகியிருக்கான். புரட்யூஸர் எல்லாம் டிரைவர் ஆகியிருக்கான். காஸ்ட்யூம் அஸிஸ்டண்டா இருந்த பொண்ணுங்க எல்லாம் கதாநாயகியா நூத்துக்கு மேலே படத்துல நடிச்சிருக்கு...''


''சார், அவர் அண்ணேக்கு வருவாரா?''

''கூப்பிட்டிருக்கேன். வருவார். ஆனு அவரைப் பத்தி ஒண்ணும் கவலேப்படாதேம்மா. நான் மனசு வெச்சா ஒரே மாசத்துல பிளாட்பாரத்துக்குக் கொண்டு வந்திடுவேன்...''

''அதெல்லாம் வேண்டாம் சார். எனக்கு நல்லது செய்யுங்க. வேண்டான்னு சொல்லல. அதனுல அவருக்கு ஒண்ணும் கெடுதல் வரக்கூடாது. என்னேட வழியிலே நான் போய்க்கிறேன். அவரோட வழியில அவர் போகட்டும். இப்ப இல்லாட்டியும் என்னிக்கோ ஒரு நாள் அவரோட மனச்சாட்சியே அவரக் கேள்வி கேட்கும். அப்ப பதில் சொல்லிக்கட்டும்...''

''சரிம்மா... உன்னேட மனசுப்படி நல்லதே நடக்கட்டும்.''

● கத்தி துருப்பிடித்திருந்தால் அதில் ஒரு வெங்காயத்தை வையுங்கள். சிறிது நேரத்துக்குப் பிறகு சுத்தம் செய்தால் துரு விட்டு விடும். —ஆ. பானுமதி



அவர் போனவுடன் வருகின்ற நிகழ்ச்களே நினேத்து லேசாக நடுக்கம் வந்தது குழந்தைகளின் ஞாபகம் வந்தது. அப்புறம் அம்மா ஞாபகம் கிளர்ந்தது. அதற்கப்புறம் ஊரும் கோபுரமும் தேனீச்வரரும் ஞாபகத்துக்கு வர, எதிர்காலத்தின் எல்லா சுமைகளேயும் விளேவுகளேயும் ஸ்வாமி மே சுமத்திவிட்டுச் சாப்பிட உட்கார்ந்தாள்.

ஆபீசில் ஒரு மாசம் லீவு கொடுத்திருதார்கள். அப்புறம் வேண்டுமானுல் கூட எடுத்துக்கொள்ளலாம் என்று தைரியப்படுத்தினுர்கள். தனக்காகக் கதவு திறந்திருக்கிறது என்று நினேக்க நினேக்க மனசு பொங்கி நரம்புகள் சிலிர்க்க முதுகுத்தண்டு சில்லிட ஒரு பிரமிப்புக்குள் ஆழ்ந்து போனுள்.

தட்டில் உணவு ஆறிக் கொண்டிருந்தது. அவள் பிரமையைக் கலேப்பதென முடிவு செய்தாற்போல காரின் ஹாரன் ஒலி அழுத்தமாக ஒலித்தது. அதைத் தொடர்ந்து கூர்க்கா கேட்டைத் திறக்க மாணிக்கம் உள்ளே வந்தார்.

அவர் மண்டையில் கட்டுப் போடப்பட்டிருந்தது. வலது கன்னம் வீங்கி யிருந்தது. இருந்தும் அதன் பாதிப்பைக் காட்டாத முகத்துடன் உள்ளே வந்தார்.

''வாங்க மாணிக்கம். எங்காவது அடி பட்டுட்டீங்களா?''

''சொல்றேன். அதுக்கு முன்னுலே என்னேட வாழ்த்துக்கள். மோகனசுந்தரத்தோட படத்துல புக் ஆகியிருக்கீங்கன்னு இப்பத்தான் போன்ல சொன்னுர். ஒரே சந்தோஷமாய் இருந்தது. உங்க வாழ்க்கைல புதுசா ஒரு ஜன்னல் திறந்திருக்கு. நிறைய வெளிச்சமும் ஆரோக்கியமான காற்றும் கண்ணுக்கு இதமான காட்சிகளும் அதன் வழியா அடையட்டும்னு வாழ்த்தறேன். நான் போட்ட ஒரு சின்னப் பொறி இப்ப ஒரு பிழம்பா, ஒளித் தொகுப்பா வந்திருக்குனு தெரியறப்ப, கடவுளுக்குத்தான் நன்றி சொல்லணும்னு மனசும் கைகளும் கைகூப்புது...''

விமலா இந்த வார்த்தைகளில் மெய்மறந்தாள். கண்கள் அங்கிருந்தாலும் பார்வையும் மனசும் தேனீச்வரரின் சந்நிதியில் நிலேத்தன.

''மொதல்ல நான் உட்காரட்டுமா?'' என்று மாணிக்கம் மெல்லிய சிரிப்போடு கேட்டதும், அவள் கலேந்து, 'இதென்ன கேள்வி?' என்பது போலப் பார்த்து அதே சிரிப்போடு தலேயசைத்தாள்.

''உங்க படம் எல்லா ஏரியாவும் வித்திருக்குன்னு மிஸ்டர் மோகனசுந்தரம் சொன்னுரே....'' என்று அவள் விசாரிக்க விசாரிக்க மாணிக்கம் பலமாய்ச் சிரித்தார்.

''இந்தக் கேள்விக்கும், எங்காவது அடி பட்டுட்டீங்களான்னு கேட்டதுக்கும் நிறைய சம்பந்தம் இருக்குங்க விமலா.''

''புரியலேயே?''

''என்னோட படத்துல வனஜாவுக்குப் பதிலா சில ஷாட்ஸ்லே நீங்க இருக்கிறதை பத்திரிகைல போட்டிருந்தாங்கல்ல... அது சரத்குமார் கண்ணில பட்டிருக்கு. நேத்து ராத்திரி என்னைக் கூப்பிட்டார். 'விமலா நடிச்ச எந்த பிரேமும் படத்திலே இருக்கக் கூடாது. என்ன செய்வீங்களோ ஏது செய் வீங்களோ தெரியாது. இல்லேன்னு படத்தை ரிலீஸ் பண்ண விடமாட்டேன்'னு வற்புறுத் தினர். ஆனா, படத்தோட டைரக்டர் நானா இருந்தாலும் முதலாளி இல்லையே? அதனால 'புரட்யூஸரைக் கேட்டுச் சொல்றேன் சார்'னு சொன்னேன். ஆனா அவர் கேக்கலே. கைல ஸ்காட்ச். மனசுல உங்க மேலே இருக்கிற ஆத்திரம். அறிவை அடமானம் வெச்சவர் மாதிரி கண்டதெல்லாம் பேசினர். ஏற் கெனவே நமக்குள்ள கனெக்ஷன் இருக்காம். அதுதான் உங்களை நடிக்க வச்சேனாம். எனக்கு மெல்ல ஆத்திரம் கிளம்ப ஆரம்பிச்சது. ரெண்டு பேரும் விட்டுத் தராமல் பேசிட் டோம். ஒரு கட்டத்திலே அவர் ஆத்திரம் தாளாமக் கையிலிருந்த பாட்டிலை என் மேலே வீசிட்டார். தலைல பட்டுத்தான் இந்தக் காயம். நானும் விடலே. ரெண்டு பேரும் சினிமாவுக்கு எடுக்கருப்பல கட்டிப் புரண்டு சண்டை போட்டோம். அதுல அவருக்கு ரெண்டு மூணு எடத்துல காயம். எனக்குக் கன்னத்தில அடிபட்டிருக்கு...

''நான் புரொட்யூஸர் வீட்டுக்கு வந்து விஷயத்தைச் சொன்னேன். அவர் புரட் யூஸர் கில்டுக்குப் போன் பண்ணி சினிமா சம்பந்தமான மத்த அசோஸியேஷன், எல் லாப் பத்திரிகைகள்னு போன் பண்ணி ஏக அமர்க்களம் பண்ணிட்டார். டைரக்டர்ஸ் அசோசியேஷன்ல, இனிமே சரத்குமார் நடிக் கிற எந்தப் படத்தையும் டைரக்ட் பண்ணக் கூடாதுன்னு தீர்மானம் போட்டிருக்கோம். இப்ப வளர்ந்திட்டிருக்கிற படத்தையும் டைரக்ட் பண்ண மாட்டோம். இதுக்கெல் லாம் காரணம்னு யார் பேர் அடிபடறது தெரியுமா? உங்க பேருதான். அதுவும் நடிக் கறீங்கன்னு தெரிஞ்சதுக்கப்புறம் இனிமே பட உலகத்தோட பார்வை உங்க மேலேதான் கவியும். அதே சமயம் சரத்குமார் கிட்ட ஜாக்கிரதையா இருக்கணும்.''

விமலா கேட்டுக் கொண்டிருந்தாள். நெஞ் சின் படபடப்பு மெல்ல எழுந்து ஆர்பரித்து அதே வேகத்தில் அடங்கி ஓய்ந்தது.

''மாணிக்கம், இதுல என்னோட அனுதாபம் உங்களுக்குத்தான். என்னோட நன்றியும் உங் களுக்குத்தான். நான் துணிஞ்சிட்டேன். சினிமா சம்பந்தமான எல்லா ஆலோசனை களையும் இனிமே நீங்கதான் சொல்லணும்.''

''ஓ...கே.''

அந்தச் சமயம் மூன்று கார்கள் உள்ளே நுழைந்தன. மூன்றிலிருந்தும் ஏழெட்டுப் பேர் இறங்கினர்கள்.

''இவங்க எல்லாமே புரட்யூஸர்ஸ்தான். மெல்ல நிதானமா யோசிச்சுப் பதில் சொல் லுங்க.'' என்றார் மாணிக்கம்.

''சரிங்க.''

10

மழை ஓய்ந்து பூமியெல்லாம் ஈரமாகி, மண் வாசனை நிறைந்து பொங்கிப் புதுப் புதுச் செடிகளும், சின்னச் சின்னப் பூக்களும், புல் விரிப்பும் மெல்ல மெல்ல முளைத்து, கிளர்ந்து காற்றில் தலையாட்டுவது போல விமலாவின் வாழ்வில் புதிய சம்பவங்களும் புதிய செழிப்பும் புதிய தெம்பும் புதிய தைரியமும் மலர்ந்து வசந்தமாக்கின.

மோகனசுந்தரம் ஒரே மாதத்தில் விம லாவை வைத்துப் படம் எடுத்து முடித்து ரிலீஸ் செய்து விட்டார்.

''புதிய காற்று'' என்ற படம், அவளுக்கும் புதிய காற்றாக அமைந்தது. அந்தப் படத்தில் வந்த பணத்தில் ஊரில் வீட்டின் மேல் இருந்த கடனை அடைத்தாள். மீதிப்பணத்தில் இரு பெண்களுக்கும் சமமாய்ப் பிரித்து பாங் கில் இருபது வருஷத்துக்கு டிபாஸிட் செய்து விட்டாள். எதிர்காலத்துக்கு ஒரு பர்து காப்பைச் செய்துவிட்ட சந்தோஷம் மனசின் பரிமணங்களைப் பாதித்தது.

சரத்குமார் அந்த தகராறு நடந்த மறு வாரத்தில் சரண்யாவுடன் அமெரிக்கா போய் விட்டான்.

மாணிக்கத்தின் ஆலோசனையின் பேரில் விமலா நான்கு படங்களுக்கு மட்டும் ஒப்புக் கொண்டாள்.

ரொம்ப இயல்பாக நடிக்கிறாள் என்று பல பத்திரிகைகள் எழுதின. சரத்குமாரே, தன் மனைவிக்கு வாய்ப்பு வாங்கித் தருகிறார் என்றுகூடச் சில பத்திரிகைகள் எழுதின. மாணிக்கத்தைத்தான் அவள் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறாள் என்றும் கூட எழுதினார்கள்.

அவள் இதனால் எல்லாம் வேதனைப்பட வில்லை,



● சுண்ணாம்பு நீரில் புளிப்பு அதிகமுள்ள மாங்காய்த் துண்டங்களைப் போட்டு வைத் தால் புளிப்புப் போய்விடும்.

பாலு

மிகப் பிரபலமான சினிமா நடிகனுல் கைவிடப்பட்ட மனைவியாய், மூன்று குழந்தைகளையும் அனுதையாய் அழைத்துப் போனவளாய், அப்பாவின் சொற்ப வருமானத்தில் என்ன செய்வது என்று கண்ணீர் விட்டவளாய், ஏன் திரும்பினுள் என்று ஊரார் கேள்விகளுக்குப் பதில் சொல்ல இயலாதவளாய், பின் நூற்றைம்பது ரூபாய் சம்பளத்துக்கு வயிற்றைக் கழுவப் போனவளாய், அந்தக் கஷ்டத்திலும் பி. காம் படித்தவளாய், குழந்தைகளின் எதிர்காலத்தை நினைத்து உருகியவளாய், எல்லாம் மீறி, இருக்கிற வேலையும் போய், இருட்டான நிகழ் காலத்தை எண்ணி வெம்பி வேதனை உற்றவளாய்த் தவித்தபோது இந்தப் பத்திரிகைகள் உண்மையை எழுதாமல், இப்போது தம் யூகங்களையும் எதிர்பார்த்தல்களையும் வியாபாரத்துக்கு உகந்த விஷயங்களை எழுதுகிறபோது எதற்குத் துணுக்குற வேண்டும்?

நேரம் கிடைக்கும்போதெல்லாம் மற்ற சினிமாக்களைப் பார்த்தாள். காரில் போகிறபோது, பேசுகிறபோது, பார்வையை அழுத்தமாக வைத்துக் கொண்டு மற்ற மனிதர்களைக் கவனித்தாள். என்ன பேசுகிருர்கள், எப்படிப் பேசுகிருர்கள், எப்படி உச்சரிக்கிருர்கள், எப்படி முகபாவம் மாறுகிறது என்றெல்லாம் ஊன்றிப் பார்த்து மனசுக்குள் சேகரம்செய்து கொண்டாள்.

எந்தப் பாத்திரத்துக்கும் கிட்டத்தட்ட அதன் சாயலாய், இருக்கிற நிஜ மனிதர் ஒருவரை மனத்தில் வைத்துக் கொண்டு, அதையே நினைத்து நினைத்து ஊறவைத்து அதாகப் பாவித்து நடிக்கத் தொடங்கினுள்.

பிறவி நடிகை என்று டைரக்டர்கள் புகழ்ந்தார்கள். காமிராவின் வழியாகப் பார்த்தால், கண், புருவம், நெற்றி என்று எல்லாமே பேசுகின்றன என்று காமிரா மேன்கள் போற்றினுர்கள். 'உங்களை வெச்சுப் படம் எடுக்கறேன்னு சொன்னதும், பூஜை அன்னைக்கே எல்லா ஏரியாக்களும் வித்தாச்சு' என்று படாதிபதிகள் பூரித்தார்கள்.

இரண்டாவது படம் 'கதவுகள் திறக்கும்' முடிந்து மூன்ருவது படத்தின் இரண்டாவது ஷெட்யூலில் நடித்துக் கொண்டிருந்திருந்தாள். மோகனசுந்தரம், லாபம் வந்தது என்று சொல்லிக் கார் வாங்கிக் கொடுத்தார். போயஸ் கார்டன் பகுதியில் பங்களா ஒன்றில் வாடகைக்கு வைத்தார். ஊரிலிருந்து குழந்தைகள் வந்து படிக்கத் தொடங்கினர். அம்மாவும் வந்துவிட்டாள். அப்பாவுக்குப் புதிய சக்தி வந்து விட்டது. புது ரத்தம் பாய்ந்தவர் போல் சுறுசுறுப்பாகச் செயல்பட்டார்.

சரத்குமார் வந்துவிட்டார் என்று பத்திரிகைத் தகவல் கூறியது. எதிர்பார்த்தவாறு ஒருசிலர் மட்டும் விமான நிலையத்தில் வரவேற்ருர்கள். மாணிக்கம் இயக்கிய படம் ஒன்று திரைப்பட விழாவில் தேர்ந்தெடுக்கப்பட்டது. டில்லிக்குப் போகும்போது விமலாவையும் அழைத்தான்.

''வெளி நாட்டுப் படங்கள் நிறைய வருது. அதுவும் அந்தந்த நாடுகளில் சிறந்த படங்கள்னு போட்டிக்கு அனுப்பப்படற படங்கள். இன்றைய சினிமா எப்படி இருக்குன்னு நம்மைப் போலவங்க கட்டாயம் தெரிஞ்சு வச்சுக்கணும். குரஸோவா ஃபாப்ரி, பொக்மஸ், வாஜ்டா, பிரான்ஸிஸ் கப்போலா, தாமஸ் அலின்'னு பெரிய பெரிய டைரக்டர்களோட படங்கள் வருது. எல்லாத்தையும் பாக்கணும். அதுவும் இல்லாம, இந்தியாவில் உள்ள பெரிய டைரக்டர்கள், ஆர்ட்டிஸ்ட்கள் எல்லாம் வர்ருங்க. அவங்களையும் சந்திச்சு, இந்தச் சினிமா உலகம் எதை நோக்கிப் போய்க்கிட்டிருக்கின்னும், போகணும்னும் தெரிஞ்சுக்கணும் இல்லையா?''

''போலாங்க... ஆனு கால்ஷீட் தகராறு மட்டும் வராம இருக்கணுமே?''

''சினிமா உலகமே அங்க இருக்கறப்ப, இங்க எவன் சினிமா எடுக்கருன்? அப்படி இருந்தாலும் சரிப்படுத்திக்கலாம்.''

மூன்ருவது நாள் அப்பாவுடனும் மாணிக்கத்துடனும் புறப்பட்டாள். உடன் மோகனசுந்தரம் சேர்ந்து கொண்டார்.


''இதோ பாருங்க விமலா, நீங்க எங்களுக்கு ட்ரீட் ஒண்ணும் தராம ஏமாத்திக்கிட்டு இருக்கீங்க...'' என்ருர் மோகனசுந்தரம் விமானத்தில்.

அவ்வளவு பெரியவர் கேட்டதும் விமலாவுக்கு ஒன்றும் புரியவில்லை.

''என்ன டிரீட் சார்? போன வாரம் ஹோட்டல் சோழாவுலேயும் முந்தின வாரம் தாஜ்லேயும் பிரஸ் ரிப்போர்ட்டர்ஸ் எல்லாத்தையும் கூப்பிட்டு வச்சமே! இப்ப ஏதாவது பாக்கி இருக்குங்களா மாணிக்கம் சார்?'' என்று வெகுளித்தனமாய்க் கேட்டதும் மோகனசுந்தரம் சிரித்து விட்டார்.

● நன்னரி வேரை நன்ருக இடித்துக் கொண்டு இரண்டு ஸ்பூன் பொடி போட்டு ஒரு டம்ளர் ஜலம் விட்டு அடுப்பில் அரை டம்ளராகச் சுண்டக் காய்ச்சி அதில் வினிகர் ஒருஸ்பூனைக் கலந்து பொறுக்கக்கூடிய சூட்டில் வலிக்கும் பல்லில் படும்படியாக வாயில் விட்டுக் கொப்பளிக்க ஒரே வேளையில் பல் வலி குறையும்.

—கே. ஜெயலக்ஷ்மி



''என்னம்மா, மறந்து போச்சா?''

''எதுன்னு புரியலையே சார்?''

''பி.காம் பாஸ் பண்ணினதுக்கு.''

அவள் குபீரென்று சிரித்துவிட்டாள்.

''யார் சொன்னு சார்?''

''யார் சொன்னு என்னம்மா?''

''அப்பா, நீங்கதான் சொல்லியிருக்கணும்'' என்றவள், ''டில்லியிலேயே வச்சுக்கலாம். என்னைப் பெரிய இடத்திலே ஏத்தி வச்சுச் சாதனை செய்ய வச்சிருக்கீங்க. அதைவிடவா இந்த விஷயம்?''

''எனக்குச் சாதாரண ஒருத்தரை பெரிய ஸ்டாரா ஆக்கறதுக்குத் திறமை இருக்கு. ஆனு, நான் ஏழாவது வரைக்கும்தான் படிச்சவன். பள்ளிக்கூட வாத்தியார் மண்டையை ஒடைச்சிட்டு மன்னுர்குடியிலேர்ந்து திருட்டு ரயில் ஏறி வந்தவன். எனக்குப் படிப்புன்னு அப்படிக் கசப்பு. நீ என்னடான்னு, கல்யாணத்துக்கப்புறம், புருஷன் கைவிட்ட பின்னுலே கஷ்டத்தோடு கஷ்டமா தபால்லேயே படிச்சுப் பாஸ் பண்ணியிருக்கேன்னு எவ்வளவு சாமர்த்தியம் வேணும்? எனக்கு இல்லையே?... அதனுல, மொதல்லே நான் உனக்கு விருந்து வைக்கிறேன்... அப்புறம் நீ வை.'' என்று மனம் நெகிழ்ந்து சொன்னுர்.


டெல்லி விமான நிலையத்தில், இறங்கி, ஆர்வமாய்ப் பார்வையைச் சுழற்றிக் கொண்டிருந்தவள், சரத்குமாரும், சரண்யாவும், லவுஞ்சில் உட்கார்ந்திருப்பதைக் கண்டு மனம் துணுக்குற்றுள்.

11

ஆக்ரோஷ் போன்ற படங்களைப் பார்த்த பின் மனசு மெல்ல அதிர்ந்து விட்டது.

தொடு வானத்தையே தொட்டவர்கள் போல சினிமா உலகின் பெரிய தூண்கள் அளவிட முடியாத சாதனை புரிந்திருக்க, தான் இப்போதுதான் சில அடிகள் வைத்திருக்கிறோம் என்று உணர்ந்துகொள்கையில் இந்த சுவடுகளின் கனத்தோடு எப்போது அந்தத் தொடு வானத்தைத் தொடுவோம் என்று நினைத்து நினைத்து மனசு கனம் கொள்ளத் தொடங்கியது.

பகல் முழுதும் சினிமாக்கள், சந்திப்புகள் சில விருந்துகள், பிரமுகர்களுடன் புகைப் படம் எடுத்துக்கொள்ளுதல் என்று நாலைந்து நாட்கள் கழிந்து விட்டன. இன்றுதான் கொஞ்ச நேரம் கிடைத்தது. சாயந்திரம் டெல்லியின் நாகரிகத்தையும் ஜனங்களையும் பார்த்துச் சிலிர்த்துக் கொண்டாள். கனுட் பிளேஸில் குழந்தைகளுக்குச் சில ரெடிமேட் ஆடைகளை எடுத்துக் கொண்டு, பிரபல ஓட்டல் ஒன்றில் பிரபல இந்தித் தயாரிப்பாளர் வைத்த விருந்தில் கலந்துகொண்டு தன் அறைக்குத் திரும்பிக் குளித்துவிட்டுப் படுக்கையில் சாய்ந்து பத்திரிகை ஒன்றைப் புரட்டிக் கொண்டிருக்கையில் கதவு தட்டப் பட்ட ஒலி கேட்டது.



வெஜிடபிள் இட்லி

தகுந்த முறையில் இட்லி செய்தால் அஜீர்ணம் உண்டாகாது.

முதலில் உளுந்தைத் தண்ணீரில் நான்கு மணி நேரம் ஊற வைக்க வேண்டும். பிறகு ஒரு கூடையில் வடிய வைக்க வேண்டும். பன்னிரண்டு மணி நேரத்தில் அந்த வடிய வைத்த உளுந்தில் முளை காணும். இந்த உளுந்தை மெத்தென்று கல்லுரலில் இட்டு அரைக்க வேண்டும். எப்போதும் இட்லிக்கு அரைப்பது போல் அரிசியை ஊறவைத்து அரைத்து அத்துடன் இந்த உளுத்த மாவையும் கலந்து வைத்துக் கொண்டு மறுநாள் இட்லி செய்யும்போது சரிசமமாக நறுக்கிய முட்டைக்கோஸ், பீர்க்கங்காய், முளைக்கீரை பூசணித் துருவல் இது போன்ற ஏதாவது ஒன்றைக் கலந்து பிறகு ஆவியில் வைத்து வைகவைத்தால் இட்லி மிகவும் ருசியாக இருக்கும். இப்படிச் செய்து உண்பதால் மலச்சிக்கல் ஏற்படாது. பாதி அளவு காய்கறிகள் சேர்ந்து இருப்பதால் உடம்புக்கு பாரம் தோன்றுமல் எளிதில் ஜீரணம் ஆகும். முளை கண்ட உளுத்த மாவைச் சேர்த்த இட்லி உடலுக்கு நல்லது.

—வசந்தா கோவிந்தன்

புடவையைச் சரிசெய்து கொண்டு எழுந்தாள்.

அப்பாவும் மோகனசுந்தரமும் மூன்றுவது மாடியில் தங்கி யிருக்கிறுர்கள். மாணிக்கம் இன்னொரு அறையில்.

அவர்களில் யாராவது ஒருவராக இருக்கக் கூடும் என்றுதான் முதலில் நினைத்தாள். ஆனுல் கதவை முரட்டுத்தனமாய்த் தட்டும் வித்தியாசத்தில் அன்னியராகத்தான் இருக்க முடியும் என்று யூகித்து நிதானமாகக் கதவைத் திறந்தாள்.

எதிரே அவள் கணவன்.

அவளைத் தள்ளிக்கொண்டு உள்ளே வந்து கதவைப் பூட்டிக் கொண்டான்.

''ஆச்சரியமாக இருக்கா?'' என்று கேட்டுவிட்டு, கட்டிலின் மீது நிதானமாய் உட்கார்ந்தான்.

எதிர்பாராத வரவாய் இருந்தாலும், இப்போதாவது தன் கணவன், தன்னைத் தேடிக்

கொண்டு வந்ததில் ரொம்பச் சந்தோஷப் பட்டாள்.

''சௌக்கியமாய் இருக்கீங்களா?'' என்று மெல்லிய குரலில் கேட்டாள்.

''இதுக்குப் பதில் சொல்ல இப்ப வர்லே'' என்று பளிச்சென்று அவன் பதில் சொன்னதும் மனசுக்குள் யாரோ சாட்டையால் அடித்தது போலிருந்தது. அதனால் மௌனமானாள். ஏதோ விபரீதமான எண்ணத்துடன் வந்திருக்கிறான் என்று உணர்ந்து எதிரே இருந்த போனை நெருங்கினாள். அப்பாவைக் கூப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

''போனைத் தொடாதே.''


''ஏனாம், எங்க அப்பாவைக் கூப்பிடணும்.''

''இங்க யாரும் அவசியம் இல்லே.''

''எனக்கு அவசியம்னு தோணுது.''

''ஸ்....டயல் செய்யாதேன்னு சொன்னாக் கேக்கணும். மீறினா சுட்டுடுவேன். இதோ

காப்பிக் கொட்டையை வறுக்கும்போது சிறிது அஸ்காவைச் சேர்த்து வறுத்தால் காப்பி நுரையுடன் மணமாக இருக்கும்.
—ஜெயா



பார், ரிவால்வர்... என்னோட கௌரவத்தையும் மானத்தையும் கெடுக்கறதுக்குன்னே நீயும் உங்கப்பாவும் திட்டம்போட்டு சினிமாவுல புகுந்திருக்கீங்க. உதவிக்கு அந்தப் பயல் மாணிக்கம். இல்லையா?'' என்று கேட்டுவிட்டு, ரிவால்வரைத் தன் பாண்ட் பாக்கெட்டிலிருந்து எடுத்து முன்னால் வைத்துக் கொண்டான்.

விமலா துணிந்து விட்டாள்.

இன்றைக்கு ஏதோ விபரீதம் நடக்கப் போகிறது. குழந்தைகளுக்குப் போதிய பணம் இருக்கிறது. பிழைத்துக் கொள்வார்கள். எத்தனையோ வேதனைப் பட்டாயிற்று. இனி என்ன? உயிர்தானே போகும்...'

''ஆமா, நீங்க என்னோட புருஷனாத்தானே வந்திருக்கீங்க?''

''புருஷனா? உனக்கா? உன்னைத் தீர்த்துக் கட்டறதுன்னு முடிவு பண்ணிட்டு வந்திருக்கேன்.''

''எதுக்குத் தீர்த்துக் கட்டணும்?''

''நீ யாரைக் கேட்டு சினிமாவுல நடிக்க ஆரம்பிச்சே?''

''யாரைக் கேக்கணும்?''

''என்னைத்தான். நான் உன் புருஷன் இல்லையா?''

''புருஷன்தான். வாஸ்தவம். கேட்டுத்தான் அந்தக் காரியத்தைச் செஞ்சிருக்கணும். ஆனா, ஒரு புருஷனுக்கு வேண்டிய தன்மை உங்ககிட்ட இல்லாதப்போ நான் எப்படிக் கேக்கறது?''

''தன்மையைப் பத்தி இப்பப் பேச்சு வர்லே. என்னோட பர்மிஷனை நீ கேக்கணுமா வேண்டாமா?''

''பர்மிஷன் கேக்கணும்னு எதிர்பார்க்கறவங்க, தன்னோட பெண்டாட்டிய கொழந்தைகளை எப்படி நடத்தி இருக்கணும்? கண்ணுக்குள் வச்சுல்ல காப்பாத்தி இருக்கணும்? கட்டின சேலையோடவும், கழுத்தில தாலியோடவும் பொறந்த வீட்டுக்கு அனாதை போல அனுப்பிச்சு வச்சுட்டு எவளோ ஒருத்தி கெடச்சான்னு கூத்தடிச்சீங்களே, அப்ப எங்கே போச்சு இந்தக் கரிசனம்?''

''இந்த வசனம் எல்லாம் வேண்டாம். இந்த செகண்டோட சினிமா சம்பந்தமான எல்லாக் கனெக்‌ஷனையும் அறுத்துட்டு ஊர் போய்ச் சேரு. இல்லேன்னா உன்னை இப்பவே சுட்டுப் பொசுக்கறதுன்னு முடிவு செஞ்சு தான் வந்திருக்கேன். உன்னாலதான் என் தொழில் பாதிச்சு, எங்க போனாலும் எதிர்ப்பு கௌம்புது. 'எங்க சார், உங்க சம்சாரம் வந்து உங்களையே முழுங்கிடுவாங்க போல இருக்கு'ன்னு எங்க திரும்பினாலும் சொல்றாங்க. காது கொடுத்துக் கேக்க முடியலே. என்னோட வாழ்க்கையையே முடிவு கட்டறதுன்னு நீயும் அந்த மாணிக்கம்பயலும் முடிவு பண்ணியிருக்கீங்க. மாசா மாசம் ஆயிரம் ரூபா அனுப்பறேன். சத்தம் இல்லாம ஊருக்குப் போ. உன்னாலதான், எனக்கும் பாதிப்புன்னா, சரண்யாவுக்குச் சுத்தமா இருக்கற சான்சும் போச்சு... அவள்னா உன்னைக் கண்ட துண்டமாக் கடிச்சு முழுங்கிடறேன்னு துடிக்கறா....''

விமலா பக்கத்திலிருந்த தண்ணீர் கூஜாவிலிருந்து தண்ணீரை குடித்துவிட்டு நிதானமாகச் சொன்னாள்.

''இதோ பாருங்க, நீங்க எப்படி என்னை உணர்ந்தாலும் நீங்க எம் புருஷர்தான். அந்தப் பயத்தோடதான் இந்த சினிமா பீல்டில எனக்கு நேர்ற ஒவ்வொரு சபலத்தையும் ஜீரணம் பண்ணி என் காரியத்தை மட்டும் பார்த்துக்கறேன். நீங்க சொன்னாப்பல, பழைய கதையையும், யார் தப்பு செய்தா, எப்படி நடந்துட்டீங்கன்னு பேசறதும் இந்தக் கட்டத்துல அனாவசியம். நீங்க பெரிய ஸ்டார். நான் இப்போத்தான் இதில நுழைஞ்சு சில அடிகள் வச்சிருக்கேன். உங்களது நீண்ட பாதை. எனக்கு உங்களாலே வேதனை உண்டான பின்னால, என் சம்பந்த

மான மனநிலே உங்களுக்கு மாறினப்ப, நான் என்னேயே புடம் போட்டுப் பார்த்துட்டேன். அந்தச்சரண்யா மேலே உங்களுக்குக் காதல், நெருக்கம், பாசம், பிரியம்ஞ நான் குறுக்கே நிக்கலே. நூத்தி ஐம்பது ரூபாய் சம்பளம் வாங்கிட்டு இருந்திருந்தாலும் நான் குறுக்கே வந்திருக்க மாட்டேன். அந்த வருமானத்தையும் கெடுத்திட்டு வந்தீங்களே மகராஜன், அதுக்கப்புறமும் நான் உங்க மேலே எப்படி நம்பிக்கை வைக்கிறது? ஒரு சந்தர்ப்பத்தில கிடைச்ச சின்ன சான்ஸ்! இப்ப ஊத்தா ஊறி ஆத்துத் தண்ணியாட்டம் பெருகிட்டு வருது. ஓரளவுக்குத் தெரிஞ்ச் நடிகை ஆய்ட்டேன்.

''ஒரு செகண்ட் யோசியுங்க. உங்க இடத்துல நான் இருந்து, கட்டின புருஷனே விட்டுட்டு யாரோ ஒரு நடிகன் கூடப் போயிருந்தா நீங்க சும்மா விட்டிருப்பீங்களா? ஊரும் ஒலகமும்தான் சும்மா இருந்திருக்குமா? எத்தனே அபவாதம் வந்திருக்கும், நீங்கன்னு ரொம்ப இயல்பா அவளேப் புடிச்சிட்டு, ஊருக்குப் போடீன்னு என்னே அனுப்பி வச்சீங்க. நான் மனசு வச்சிருந்தா, உங்க கூத்தைச் சகிச்சிட்டு நீங்க தர்ற பிச்சைக் காசுல என்னேயும் கொழந்தைகளேயும் காப்பாத்தி இருக்கலாம். இல்லேன்ஞ எம் புருஷன் இப்படி என்னேப் பண்ணிட்டார்னு ஊரெல்லாம் தமுக்கட்டிச்சிருக்கலாம். நான் ரெண்டும் செய்யலே. அப்பவும் செய்யலே, இப்பவும் செய்யலே. எனக்கும் தன்மானம் இருக்கு. என் கால்ல நிப்பேன். உங்க மிரட்டலுக்கு பயப்படறதா இல்லே. நீங்க சுட்டாக்கூடத் தைரியமா ஏத்துக்கறேன். சரியான ஒரு ஆம்புளேயா, புருஷஞ, தகப்பஞ நடந்துக்க முடியாத உங்களே இப்ப ஒரு மனுஷஞக்கூட ஏத்துக்க முடியலே. மனுஷத் தன்மை கூட இல்லாத ஒரு ஆள் மிரட்டிஞ பயந்து சொன்னபடி கேக்கறதை என் மனசும் விரும்பலே.

''வேணும்ஞ சுடுங்க. சந்தோஷமாய்ப் போறேன்.

''இல்லே, உங்க பாதையில பேசாமப் போங்க. சினிமாவுல வருமானம் இல்லேங்கிற காலம் வந்தா என்கிட்ட அப்ப வாங்க. ஒரு ராஜாவாட்டம் வச்சுக் காப்பாத்தறேன். ஆஞ எந்தக் காரணத்தை முன்னிட்டும் சினிமாவுல இருந்து விலகறதா இல்லே. சினிமாதான் என் வாழ்க்கையைக் குலேச்சதுன்ஞ, அதுலே இப்ப எனக்கு செழிப்பையும் நம்பிக்கையையும் என் வேதனேக்கு வடிகாலாவும் இருக்கு.

''ஒரு ஆம்பிளேக்கு, புருஷனுக்கு, தகப்பனுக்கு வேண்டிய எல்லாவித நல்ல குணங்களேயும் என் ஸ்வாமி குடுத்திருக்கிருர். அந்தத் துணேயிலேயே நிறைய நடிப்பேன். லட்சக் கணக்காச் சம்பாதிப்பேன். இதிலிருந்து நீங்களும் உங்க சரண்யாவும் மாத்த முடியாது. இப்ப என்னேச் சுடறதஞல வீஞ நீங்க ஜெயிலுக்குத்தான் போகணும். அது விவேகம் இல்லே. உங்க பாதையிலே போய்க்குங்க. நான் கேக்கலே. குறுக்கிடலே. கெடுக்கலே. எப்பவாவது என்னேப் பெண்டாட்டின்னு மதிச்சு வரணும்னு தோணிச்சிஞ தயக்கமில்லாம வாங்க. சந்தோஷமா வரவேற்பேன். முன்ஞல சொன்ஞப்பல ஒரு மகாராஜா மாதிரி வெச்சுக் காப்பாத்தறேன். நீங்கதான் புருஷஞ நடந்துக்கலே. ஆஞ இந்த செகண்ட் அல்ல, என் உசிர் போற கடைசி செகண்ட் வரைக்கும் உங்க பொண்டாட்டியாவே நடந்துக்குவேன். இது நிச்சயம். உறுதி.''

சந்தானம் பிரமை பிடித்தவஞய், விமலாவின் உறுதியை, உணர்ச்சியை, மன உரத்தை அதன் ஆத்மாவையே உணர்ந்தவஞய் வார்த்தையற்று, செயலற்று, இயக்கமே அற்று, மௌனத் தாக்குதல் வந்தவஞய் நெடு நேரம் உறைந்து அமிழ்ந்து போஞன்.

எதிரே இருந்த போன் மணி கிணு கிணுத்தது.

விமலா பேசிஞள்.


''எங்கப்பா தன்ஞேட ரூமுக்குக் கூப்பிடருர்.'' என்ருள் சந்தானத்தைப் பார்த்து.

''ஓ.கே. நீ போ. நீ சொன்னதை உணர்ந்துட்டேன். புருஷனும் பொண்டாட்டியும் சரி நிகர் சமானம்னு ஆனப்ப, உன்னே அடக்கறது நியாயமில்லே. என் போக்குல போய்க்கறேன். காலம் மீதியைப் பாத்துக்கட்டும்.''

அவன் எழுந்து கதவைத் திறந்துகொண்டு லிப்டில் இறங்கிப் போய்விட்டான். சில நிமிடத்தில் அதே லிப்டில் அப்பாவும் மாணிக்கமும் மேலே வந்தார்கள்.

''ஏம்மா, இன்னுமா நீ தூங்கலே?''

''இனிமேத்தான் நிம்மதியாத் தூங்கணும்ப்பா'' என்ருள் நிதானமாய்.



எறும்புகளுக்கு போரக்ஸ் மிகவும் எதிரி. எறும்பு, மற்றும் கரப்பான் பூச்சிகள் உள்ள இடங்களில் போரக்ஸ் பவுடரைத் தூவி விடுங்கள். எறும்புகளின் வாடையே இருக்காது.

—ஆ. பானுமதி



அட்டைப்படக் கட்டுரை

பிரான்சுக்குத் தனியாக...



"பிரான்ஸுக்குப் போறியா?" - என் குருநாதர் அடையாறு லட்சுமணன் கேட்டபோது எனக்கு மகிழ்ச்சியால் கால் தரையில் பாவவேயில்லை. "சும்மா இல்லை; நீ அங்கே போய் ஒரு ஆறு மாசம் பரத நாட்டியம் சொல்லிக் கொடுக்கணும்" என்று அவர் முடித்தபோது என் சந்தோஷத்தை அளவிடவே முடியவில்லை.

'தனியாகப் போவாயோடி?' என்று என் அம்மாவும் அப்பாவும் சந்தேகத்துடன் கேட்டாலும், என் கலைத் திறமையில், என் மன உறுதியில் நம்பிக்கை கொண்டு அனுமதி தந்தார்கள்.

பிரான்ஸிலிருந்து சென்னையில் பரத நாட்டியம் கற்றுக்கொள்ள வந்த ஒரு பெண்மணியின் அழைப்புக்கு நான் சம்மதித்தபோது குருவின் ஆசியும் பெற்ரோரின் ஆசியும் இருந்ததே, வேறென்ன வேண்டும்?

பிரான்ஸுக்குத் தனியே பயணமானேன்— அங்குள்ள 'மண்டபா' என்ற கலைக் கூடத்தில் பரத நாட்டிய ஆசிரியையாகப் பணியாற்றினேன்.

ஆம்ஸ்டர்டாமில் நடு ராத்திரியில் விமானம் தாமதமாகி விட்டது. குறித்த நேரத்